SRI VENKATESVARA ORIENTAL SERIES No. 4.

EDITOR :—P. V. RÀMANUJASWAMI, M.A.

திருக்குறள்

பொருட்பால்

(அறத்துப்பால் தறைப்பதுதியுடன்)

காலிங்கருரை :

பரிப்பெருமாளுரை

பதிப்பாசிரியர் :

வித்வான்

T. P. பழனியப்ப பிள்ளை, B.O.L.

தமிழ் ஆராய்ச்சியாளர்



திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகம்

திருப்பதி

1948

PRINTED AT
TIRUMALAI-TIRUPATI DEVASTHANAMS PRESS
TIRUPATI

FOREWORD

BY

SRI S. SATCHIDANANDAM PILLAI, B.A., L.T.
(Retired Dt. Educational Officer, Madras.)
Member, Advisory Council of the Sri Venkatesvara
Oriental Institute.

திருக்குறள் உலகப் பெரு நூல்களுள் ஒன்று; தமிழ் நூல் களுள் தலையாயது. கி. பி. பதினொன்காவது நூற்றாண்டு முடியு முன்னமே இவ்வொரு நூலுக்குப் பத்துரைகள் வரையப் பெற்றிருந் தன. பின்னளிற் செய்யுளுருவ உரைகளும் சில தோன்றின. திருக்குறள் தோன்றிய பின்பு எழுந்த தமிழிலக்கியங்களில் அதனை ஓரளவேனும் தழுவாத நூலொன்று மிலதென்றே கூறலாம். அது நூற்றுப் பத்துக்கு மேற்பட்ட பாஷைகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அதன் தன்னைத் தனிப் பெருமையை உணர்த்துதற்கு இச்சான்றுகளே சாலும்.

இப்பொதுமறையின் பண்டை யுரைகள் பத்தில் பரிமேலழக ருரை யொன்று தான் இந்நூற்றாண்டில் அனைவர்க்கும் கிடைத்துப் பயிலப் பெற்று வந்தது. பின்னர் மணக்குடவர் உரை அகப்பட் டது. இது போது காலிங்கர் பரிப்பெருமாள் என்னும் மற்று மிருவர் உரைகள் கண்டு பிடிக்கப் பட்டன. இலக்கியத் துறையில் பன்முகப் புதுவிழிப்பும், திருக்குறட் பயிற்சியில் பொங்கு போர்வமும் தற் காலத் தமிழகத்திற் காண்கின்றன. மறைந்து கிடந்த உரைகள் இரண்டு இச்சமயத்தில் வெளிப் போந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி யாகும்.

வடவேங்கடத்தில் அறிவுப் பெருக்க நிலையமாய் ஒளிர்கின்ற திருவேங்கடேசுவார் கீழைக்கலை யாராய்ச்சிக் கழகம் (Sri Venkateswara Oriental Institute, Tirupati) வடமொழியிலும் தெலுங்கிலும் பல அரிய நூல்களை முதன் முறையாக அச்சு வாகனத் தேற்றி உலவச் செய்து புகழ் பெற்றுள்ளது. அம்முறையில், 1945-ம் ஆண்டில் தமிழ் நூல் முதல் வெளியீடாக, மேற் குறித்த பண்டை உரையாசிரியர்கள் இருவர் உரையுடன் திருக்குறளிற் காமத்துப்பால் வெளி வந்தது. இது போழ்து வெளியாகும் இந்நூலில், அறத்துப் பாலின் இறுதி யேழதிகாரங்கட்கு 31-ம் அதிகாரத்தில் முதலிருந்து பாக்கள் தீங்கலாகக் காலிங்கர் இயற்றிய உரைகளும் பொருட்பாலுக்கு அவரும் பரிப்பெருமாளும் இயற்றிய உரைகளும் அடங்கியுள்ளன. " அறத்துப்பால் முழுதுக்கும் உள்ள பரிப்பெருமாள் உரை

11

தனியே வெளிவருதல் முறையாதலின் பின்னர் பதிப்பு எய்தும் " என்று - இந்நூலின் பதிப்பாசிரியர் வாக்களித்திருப்பது அறிஞரால் வரவேற்கப்படும்.

காளிங்கர் உரைக்கு ஓர் ஓரு எட்டுச் சுவடியும், பரிப்பெருமாள் உரைக்கு ஒரு கடிதக் கையெழுத்துச் சுவடியுமே மூலமாக இருந்தன என்று பதிப்பாசிரியர் திரு. வித்துவான். T. P. பழனியப்ப பிள்ளை B.O.L. அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, ஒப்பு நோக்குதற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் கிடைத்தில. கிடைத்தவற்றுள்ளும் ஒன்று ஆங்காங்குச் சிதில மானது. இந்த நிலைமையில் அரிதிற் கிடைத்த மூலங்களை துணுகி ஆய்ந்து அச்சேற்றிய இப் பதிப்பாசிரியர் தம் அழுத்தமான புலமைக்கும், உலையா முயற்சிக்கும், ஆராய்ச்சிக்கும் தமிழுலகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. முன்னமே இவர்கள் மாணிக்க வாசகர் கால வாராய்ச்சிக்குத் துணை செய்ய வல்ல அரிய புதுக் குறிப்புக்களை வெளியிட்டிருப்பதும் இங்கு எனது நினைவிற்கு வருகின்றது.

மேற் சுட்டிய பண்டை உரையாசிரியர்களின் உரைத்திறம் பற்றியும், காலம் பற்றியும் அறியக் கூடிய குறிப்புக்கள் பலவற்றைப் பிள்ளையவர்கள் எழுதியுள்ள ஆராய்ச்சி முகவுரைகளிற் கண்டு களிக்கலாம். பின் வந்த முன்னுரையில், திருவள்ளுவர் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சி யொன்று இடையே சிறிது நிகழ்கின்றது. அது மற்றோர் தமிழ்ப் பேரறிஞர் கூற்றை மறுக்கும் வகையில் அமைந்துள்ளது. இப்பகுதி விவாதத்திற் கிடந் தருவது. எதிர்க் கூற்றாளர் காரணங்களனைத்தையும் விரிந்த அளவில் தனியே ஆய்ந்து மறுத்த பின்னரே முடிவு செய்தற் குரியது. இதனுள் யானிப்போது புக விருப்பு கின்றேனில்லை.

இது வரை கிடைக்கா திருந்த இரண்டுரைகளைத் தக்க புலவரைக் கொண்டு ஆராய்வித்து அச்சிற் கிடைக்குமாறு செய்த கழகத்திற்கும், அதன் தலைவராகிய திரு. P. V. இராமாநுஜஸ்வாமி M.A. அவர்கட்கும் தமிழகத்தின் நன்றி என்றும் உரியதாகும். திருக்குறளாராய்ச்சி மேன் மேலும் வளர்தற்குப் பெருந் துணை செய்ய வல்ல இப் பண்டை யுரைகளைக் கண்டெடுத்த பதிப்பாசிரியாவர்கட்கு எனது மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவர்களது சீரிய அறிவுத் தொண்டு மேலும் ஓங்கி வளர்வதாக.

சபாபதி நிலையம்,
175A, லாயிட்ஸ் ரோட்
இராயப்பேட்டை, சென்னை.
18—3—1948

ச. சச்சிதானந்தம் பிள்ளை.

முகவுரை.

"வட சொற்கும் தென் சொற்கும் வாம்பு ஆகி, கான்மறையும் மற்றை நூலும் இடை சொற்ற பொருட்கு எல்லாம் எல்லையது ஆகி, நல்லறத்துக்கு ஈறு ஆகி, வேறு புடை சுற்றும் துணை இன்றிப் புகழ் பொதிந்த மெய்யே போலப் பூத்து நின்ற" திருவேங்கடத்து எம்பெருமான் திருவருளாலே இக் கல்லாண்டின் தொடக்கத்தில் நம் தமிழகத்துத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச்செய்த பெருந் திருநூல் ஆகிய திருக்குறளின் இரண்டாம்பகுதி ஆகும் பொருட்பால் பழம்பெருமை வாய்ந்த உரையாசிரியர் காலிங்கர், பரிப்பெருமாள் இருவர் உரைகளுடன் அச்சாகித் தமிழறிவு சான்ற நன்மக்கள் கையெய்த வெளிப்படுகின்றது. 1945-ம் ஆண்டில் திருவேங்கடேசுவரன் கீழைக் கலையாராய்ச்சிக் கழகத்தின் முதல் தமிழ் நூல் வெளியீடு ஆகத் திருக்குறள்-காமத்துப்பால்—இவ்விருவர் உரைச் சுவடி பதிப்பு எய்திய போது அது மட்டும் அப்பழைய உரைகளுடன் வெளியாதற்கும் ஏனைய முதல் இரண்டு பகுதிகளும் வெளியா காமைக்கும் ஏது, பெரிதும் செல்லரிப்புண்ட அரிய ஓரே ஏட்டுச் சுவடியைப் பார்த்துக் கையெழுத்துப் பிரதி செய்து போற்றியதும், அதனுள் பெரிதும் சிதைவு எய்தாத காமத்துப்பால் பகுதியை முன்னர் வெளியிட்டுத் தமிழகத்தில் உலவச் செய்து பழந்தமிழ்ச் செல்வத்தை உலையாது நிலை பெறுவிப்பதுவுமே ஆகும் என்று எளியேன் அறிவித்துள்ளேன். பலவிடத்துச் சிதைவு உளதேனும் முழுதும் உள்ள பொருட்பாலினை அவ்விருவ ருரைகளுடன் வெளியிட்டு அவ்வாறே நிலைபெறச் செய்வதும் தமிழ்ப் பணியின் தொடர்பான கடப்பாடு என எண்ணி இப்போது பொருட்பாலின் உரைகளிரண்டும் பதிப்பித்துள்ளேன். அச்சாகும்போது வேறு ஏட்டுச் சுவடி பெற முயன்றும் அஃது எங்கும் கிடையாமை தெளிய அறிந்த பின்பு குறைப் பகுதியாய அறத்துப்பால் காலிங்கர் உரையினை மட்டும் எஞ்ச இட்டுவைப்பது முறை அன்று என எண்ணி உள்ளவரை தமிழறிஞர் படித்து மகிழும் பொருட்டு அதனையும் பின்பு அச்சிட்டு முதற்கண் வைத்துள்ளேன். அது 31-வது அதிகாரம் ஆகிய வெகுளாமையில் 6-வது பாடல் ஆகிய "நகையு முவகையும்" என்ற குறள் தொடங்கி 38-வது "ஊழ்" முடிய உள்ளது ஆகும். அறத்துப்பால் முழுதுக்கும் உள்ள பரிப்பெருமாள் உரை தனியே வெளி வருதல் முறையாதலின் பின்னர் பதிப்பு எய்தும்.

முன் காமத்துப்பால் பதிப்பினுட்போல இப்பதிப்பினுள்ளும் காலிங்கர் உரைச் சுவடியில் கண்ட குறட்பாக்களின் மூல பாடத்தினையே முதன்மையாகக் கொண்டுள்ளமையால் ஒவ்வொரு குறட் பாவின் தலைப்பினும் காலிங்கர் என் குறிப்பும் பரிப்பெருமாள் என் குறிப்பும் வேறு வேறு தெரிதரு முறைமைக்காக இடப்பால் தலைப் பில் கா. 1. எனவும், வலப்பால் தலைப்பில் ப. 1. எனவும் தடித்த எழுத்து எண்முறைகளும் கொடுத்துள்ளன. குறட்பாவின் மூல பாடத்துக்குப் பின்பு முதற்கண் காலிங்கர் உரையெனக் குறியீடு செய்து அவருரையினைப் பெய்தும், அதன் பின்னர் பரிப்பெருமாள் உரையெனக் குறியீடு இட்டு அவருரையினைப் பெய்தும் அச்சிட்டுள் ளது. குறட்பாவின் மூலபாடத்தில் பரிப்பெருமாள் உரையின் வேறு பாடம் கண்ட இடங்களில் அஃது உணருமாறு அவருரைத் தொடக் கத்தில் பாடாந்தாங்கள் குறித்துள்ளன. எனவே அவருரையில் முற் பட்ட குறட்பாவின் சுட்டுள்ள இடங்களில் அவ்வக்குறட்பாவின் வலப்பால் தலைப்பில் உள்ள பரிப்பெருமாள் எண் முறைமைப்படி நோக்கிக் கொள்ளுதல் வேண்டும் என அறிக. காலிங்கர் உரையில் சிதைவுற்ற இடங்களை அறியும்படி அங்கங்கு நிறைப்புள்ளிகள் இட் டுள்ளது கண்டு கொள்ளுக. (பரிப்பெருமாள் உரையினும் ஓரோர் இடங்களில் இச்சிதைவு காணப்படும். இவ்விருவருரைக்கும் ஓரோர் ஏட்டுச் சுவடியே ஆதாரம் ஆதலின், குறைபாடுகளைப் பிற பிரதிகள் கொண்டு நிறைவுறுத்தற்கு வழியில்லை யாயது. என் கருத்துப் படியாக ஒரெழுத்தேனும் கூட்டவும் குறைக்கவும் பெற வில்லை என்று அறிக. உரைகளிற் கண்ட சில அருகிய வழக்கிற்கு அடிக் குறிப்பு மட்டும் கொடுத்துள்ளேன் 'கில்' என்னும் ஆற்றல் உணர்த்தும் இடை நிலை பயிலும் வினைச்சொற்கள் ஆகிய செய்கிற் பான், உய்க்கிற்பின் என்பன ஏட்டில் செய்கற்டான், உய்க்கற்பின் என இருந்தவற்றைப் பிழை எனக் காட்டிப் பதித்துள்ளமை ஒன்றே மாற்றம் ஆகும்.

முன்பு பதிப்பித்த காமத்துப்பால் சுவடியின் முன்னுரையில் இவ்வுரைகளின் காலம் பற்றியும் இயல்பு பற்றியும் சில குறிப்புகள் கொடுத்தேன். இப்பதிப்பிலும் அவை பற்றிய குறிப்புகள் தொடர்ந்து வருதற்கு இடனுண்மையின் சிறிது எழுதுகின்றேன். பரிமேலழகர் தமது உரையில் மறுத்த பகுதி இவர்கள் உரையில் காணப்படுதலின் இவர்க ளுரைகள் காலத்தின் முற்பட்டன என்பதற்கு அகச்சான்றாக இப்பொருட்பாலின் கண்ணும் சில குறிப்புகள் காண்கின்றோம். நாணுடைமை என்ற அதிகாரத்தில் வரும் "ஊனைக் குறித்த வுயிரெல்லாம்" என்ற குறளுக்கு உரை விரித்தபின் இறுதியில் "ஊனைக் குறித்த வென்று பாடமோதுவாரு முளர்" என்றார் பரிமேலழகர். இவர் சுட்டிய பாடத்தினையே

காலிங்கரும் பரிப்பெருமாளும் கொண்டு அத்தொடர்க்கு எற்பப் பொருள் கூறியுள்ளார்கள். மற்றும் "கருமத்தா ணுணுத ணுணு" என்ற குறளுரையில் மறுக்கு முகத்தான் "பொது மகளிர் நாணு டொக்கு மென்றுரைப்பாரு முளர்" என்று அவர் எழுதியது பரிப் பெருமாளுரையின் மறுப்பே யாகு மென்பதனை அவருரை நோக்கிக் கண்டு கொள்க. இவற்றால் இவருரைகளின் பழமை வலியுறுதல் காண்க.

இனி, காலிங்கருரையிற் கண்ட குறட்பாக்களின் மூல பாடங்கள் பழமையாதலோடு சிறப்புடையவாதலும் புலப்பாடு பெறும். "வெருவந்த செய்யாமை" அதிகாரத்தில் "கடிதோச்சி மெல்ல வெறிக" என்ற பாடமே பரிமேலழகர் கொண்டது. காலிங்கர் கண்ட பாடம் "கடிதோக்கி மெல்ல வெறிக". என்பது ஆகும். எறிதல், வீசுதல் என்னும் பொருளதாகிய 'ஓச்சுதல்' என்பதினும், உயர்த்தல், ஓங்குவித்தல் என்ற பொருளதாகிய 'ஓக்குதல்' என்பது பொருட் சிறப்புடைய தாதலோடு பின் வரும் சீராகிய 'நெடுதரக்கம்' என்பதனொடு ஒருஉ வெதுகைத் தொடைச் சிறப்புடையதாய்ப் பாடற்கு ஓசையய மூட்டுதல் தேர்ந்து கொள்ளுக. 'உழவு' என்ற அதிகாரத்தில் 'பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்' என்று பாடங் கொண்டுள்ளார் பரிமேலழகர். காலிங்கர் கண்ட பாடம் "பல குடை நீழலுந் தங்கொடைக்கீழ்க் காண்பர்" என்பது. உழுதுண்டுலகூட்டும் வேளாண் மாந்தர்க்கு இலக்கண வகையால் தமக்கெனக் குடையின்மை கண்ட பரிமேலழகர் "தங்குடை" என்பதற்குத் "தமது வேந்தன் குடை" என ஆகுபெயர்ப் பொருள் கண்டு பொருத்தினர். ஆயின் காலிங்கர் வள்ளுவனார் தெள்ளிய வாய்மொழி "தங்கொடை" என்றே கொண்டு இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவினை வினைக்கும் பழனிறலோர் கொடைத் திறனைக் குறித்ததாகக் கூறினர். மற்றும் பரிமேலழகர் 'இலமென் றசைஇ யிருப்பாரை' என்ற குறளுரை விளக்கத்தில் "இரப்பாரை என்று பாடமோதுவாரு முளர்" என்றெழுதியது இக் காலிங்கருரைப் பாடங் கண்டென்றே நோக்கிக் கொள்ளுக. இவ் வாறுகக் காலிங்கர் கண்ட பாடங்களின் திறனை ஆய்ந்து கொள்ளுமாறு அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இனி, காலிங்கர் வாலாற்றுச் செய்திகளை நாம் அறிந்து கோடற்கு வாயில் இல்லை யெனினும் அவருரைக் குறிப்பினின்று அவர் சமயச் சார்பு இஃதென அறிந்து கொள்ளுதல் கூடும்.

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்ற குறளுரையில் 'நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்ற தொடர்க்கு "உம்பருலகினுட் சிறப்புடைய உத்தர குருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந்திருக்க வேண்டுமவர்" என்றெழுதியுள்ளார். இது "நாக நீணகரொடு நாகநாடதனெடு போகம்" "உத்தரகுரு வினை யொப்ப" எனச் சிலப்பதிகாரமும் "நாகமா நகர்" எனச் சிந்தாமணியும் போகந் துய்க்கும் பூமி எனச் சுட்டும் சைனநூற் கருத்து ஆகலின் காலிங்கர் சைனர் போலும். மற்றும் "எண்பதத் தானெய்தல்" என்ற குறட்பாவுரையில் அத் தொடர்க்குப் "போகச் சிறப்பினுள் எண்ணத் தக்க சுவர்க்க பதத்தின்கண் சென்றெய்துதல்" என்று பொருள் தந்ததும் காண்க. அறத்துப்பாலில் "வாழ்" என்னும் அதிகாரத்தில் பரிமேலழகர்

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது"

என்று குறட்பாடங் கொண்டு "வகுத்தான்-தெய்வம்" என்று பொருள் கூறிப் பின்னர் விசேடவுரையில் "ஒருயிர் செய்த வினையின் பயன பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின் வகுத்தா னென்றார்" என்று விளக்கிக் காட்டினர் என்பது அறிஞர் அனைவரும் நன்கு தெரிந்ததே. ஈண்டு, காலிங்கர் அவ்வாறு பாடங் கொள்ளாது

"வகுத்தார் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது"

என்று பாடங்கொண்டு "முன்னஞ் செய்தார் செய்த வினை வகை யாற் றுய்த்தலல்லது மற்றுக் கோடி பொருளீட்டினுர்க்கு மது கொண்டு துய்த்த லரிது" என்றுரை வரைந்தார். இக்கோட்பாடு சைனர்க் குரியது என்றறியப்படுகின்றது. பழவினையானது தன்னைச் செய்தானைத் தானே நாடி அடைய வல்லது என்பது அவர் மேற் கோளாற் கூணலாம். பழவினை தானே செய்தானை நாடி யடைதற் குச் சைன நூலாகிய நாலடியார் ஒப்புமை காட்டி விளக்குதலை ஈண்டு ஓர்ந்தணர்தல் வேண்டும். பழவினை யதிகாரத்துள்

"பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலை — தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

என்றுள்ள வெண்பா பெருநிரை மந்தையுள்ளும் இளங்கன்று ஒன்று தன்னை யீன்ற தாயாகிய ஆனினைத் தானே நாடிச் சென்று பிறவற்றை யினையாது அதனையே யடையும்-அது போலப் பழவினையும் பல்லுயிர் பரந்துள்ள உலகின்கண் தன்னைச் செய்த உயிர்க் கிழவனைத் தானே நாடிச் சென்றணைந்து அவற்குப் பயனூட்டும் என்று கர்மங்கள் ஆஸ்ரவ முறையால் அடையும் நெறியைக் கூறுவது கண்டுகொள்

ளுக. இக்கோட்பாடு உயிர்கள் தன்னுணர்வின் இருவினையிற் போக்கு வரவு புரிய முதல்வன் நடத்துவன் என்ற சைவக் கொள்கைக்கும், ஸ்ரீமந் நாராயணன் சர்வ நியந்தா வாதலின் உயிர்கள் நியாம்மியமாக நிலைபெற நடத்துவனென்று கூறும் ஸ்ரீ வைணவக் கொள்கைக்கும் வேறுக உள்ளதெனவும் நோக்கிக் கொள்க. பரிமேலழகர் 'வழுத்தான்' என்று பாடங் கொண்டுரைத்த வுரை இச்சைவ வைணவக் கொள்கைகட்டு இணங்கு மன்றிச் சைனநூற் கருத்துக் கொவ்வாதா மெனவு மறிக. இதனனும் காலிங்கர் சைன ராதல் தெள்ளிது. 63 வது அதிகாரம் நன்றியில் செல்வத்துள் "மருளானு மாணப் பிறப்பு" என்பதற்கு "இதனுண் நரக யோனியும் திருக்கும் பிறவும் ஆகிய கடையான பிறப்பு உளது ஆம்" என்றுரைத்தமையும் இவர் சைன ரென்பதனைத் தெரிவிக்கும்.

காலிங்கர் கண்ட குறட்பாப் பாடங்கள் ஓரோ விடங்களிற் சிறப்பின வாதல் போன்று அவருரையும் சிறந்து நிற்பது காணலாம்.

51-வது உட்பகை அதிகாரத்தின்கண் வரும்,

"உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்".

என்பதற்குப் பரிமேலழகர் கூறிய பொருள் அவர்க்கு முற்பட்டோராகிய பரிப்பெருமாளுங் கண்ட உரையே யாம். மணக்குடவர் உரையும் வேறுபட்டிலது. இம்மூவருஞ் 'மட்பகை' என்பதற்குக் "குயவன் வினைகலத்தை யறுக்குங் கருவி" எனறு பொருள் கண்டனர். இம்மூவரினும் வேறுகக் காண்கிங்கள் "மண்பகை என்றது நீர் வெள்ளம்" என்று பொருள் கூறி விளக்கு முகத்தான் "தனக்குத் தளர்ச்சி வந்த இடத்தே கரைபடக் கட்டிய மண்ணுறுதிக்குத் தளர்ச்சி வந்த இடத்து மற்று அதனை முழுவது முரித்து எறியும் வெள்ளம் போல் இதவும் (உட்பகை) தன் குடிமுழுதும் குலைத்து எறிந்து விடும்" என்றுரைத்தார். மட்பகை என்னுந் தொடர் மொழி மண் வினைஞராகிய குயவர் கையாளுங் கருவிகளாகிய சுழலுருளி, கொட்டுக் கோல், அச்சுச் சட்டம், ஊசி, ஓலை முதலியவற்றுள் எதற்கும் பெயராக வழக்குப் பெற்றுள தன்று. மண்ணைப் பகுக்குங் காரணத்தாற் போந்த தெனின் அவ்வினை செய்யும் மண் வெட்டி, குந்தாலி முதலியவற்றுக்கும் பெயராதல் செல்லாது ஊசி ஒன்றற்கே பெயரா யமைதலும் பொருந்தாதெனக் காண்க. மற்று, திணிந்த மண்ணினை இயல்பாகக் கரைக்குந் தன்மை யுடைத்தாகிய நீர் அம் மண்ணிற்குப் பகையாதலோடு, இறுகச் செறித்த கரைகளை வெள்ளப் பெருக்கால் முரித்தெடுத் தெறிந்து செல்லுதல் கண் கூடாதலால் மண்பகை எனற தொடர்க்கு நீர்வெள்ளம் என்பது பொருட் பேறுடைத்தாவது காண்க. அன்றியும் 'ஊசி' வினைத்

பாண்டத்தை வனையா மண்ணிற் பகுக்குங்கால் உலவிடத்துப் பயனு வதின்றுய் நிலையிடத்துப் பயலுவது. நீர் வெள்ளம் உலவிட னுடைய கரையை முற்றி மோதி யுடைத்தல் எளிதாதலின் உலவிடத்துச் செயலுடையது. ஆகவே உலவிடத்துச் செயலுடைமை உட்பகைக் கும் மட்பகைக்கும் பொருந்தவ தாயின் நீர் வெள்ளத்துக்குப் பெரி தும் பொருந்து மன்றிக் குயவ னுசிக்குப் பொருந்தாமை அறிந்து கொள்க. இது போல "நிழனீரு மின்னை" "ஊணுடை" முத லிய குறட்பா வுரைகளினும் காலிங்கர் பொருட்கூற்று சிறந்து காட்டுதல் காண்க.

காலிங்க ருரையின் வேறு சில குறிப்புங் காண்பாம்.

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னெருவந்த மொல்லைக் கெடும்"

என்பதில் பரிமேலழகர் 'ஒருவந்தம் என்பதற்கு' ஒருதலை யாக என்று பொருளெழுதிப் பின்னர் விளக்குகின்றுழி "ஒருவந்தம், ஒருதலை, எகாந்தம் என்பன ஒரு பொருட் கிளவி" என்றுரைத்தார். 'ஒருவந்தம்' என்ற இச்சொல்லே பயின்ற பிறிதொரு குறட்பாவில் (593 ஆக்க மிழந்தேம்) இதற்கு 'நிலைபெற்ற' என்று வேறு பொருள் கூறினர். இவர்க்கு மாறுகக் காலிங்கர் இவ்வருகிய சொல் லுக்குப் பெருஞ்செல்வம் என்று அவ்விரிடத்தும் ஒப்ப ஒரே பொருள் கூறினர். இதன் சிறப்பு அறிஞர் தோக்கிக் கொள்ளக் கடவர்.

பரிமேலழகர் 'ஒருவந்தம்' என்பதற்கு உரைத்த விசேடம் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராயிருந்த பேராசிரியர் இராவ் சாஹிப் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A , B.L. அண்மையில் தாம் பதிப்பித்த திர்கடுகம்-சிறுபஞ்சமூலச் சுவடியின் முன்னுரை 15-ம் பக்கத்தில் எழுதியதனை இயைபு பற்றி ஈண்டைக்கு அறிந்து கொள்ள வேண்டும். அது வருமாறு " .....தனிமொழியே யன்றி ஆதிபகவன் என்ற இருமொழித் தொடரும் வள்ளுவரால் கையாளப்பட்டுள்ளது. இதுபோன்ற வடமொழி வழக்கும் சங்க இலக்கியங்களில் காணுமாறில்லை. ஒருவந்தம் (563, 593) என்ற சொல் வள்ளுவரில் இரண்டு இடங்களில் உள்ளது. இச்சொல்லில் ஒரு என்பது தமிழ்; அந்தம் என்பது வடசொல். இவ்விரண்டும் இயைந்து ஒரு சொன்னீர்மைப் பட்டு வடமொழியிலுள்ள ஏகாந்தம் என்பதற்குரிய கலவைச் சொல்லாக Hybrid தமிழில் ஆளப்பட்டுள்ளது. இக் கலவை ஆட்சியும் சங்க நூல்களில் காணப்படாததொன்றும். இங்குக் காட்டியன வெல்லாம் வடசொற்களை எடுத்தாளுதலில் வள்ளுவர் விரிந்த மனப்பான்மை யுடையவர் என்பதை நன்கு தெரிவிக்கின்றன. இம்மனப்பான்மையும் சங்க

காலத்தின்றிப் பிற்காலத்துத் தோன்றியதே யாம். இவற்றாலும் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர் வள்ளுவரென்பது நன்கு உணரக் கிடக்கின்றது .... எனவே சுமார் கி. பி. 450-ல் திருக்குறள் தோன்றியதெனக் கொள்ளுவோ மாயின் அது உண்மையொடு பட்டதாகவே இருக்கலாமெனத் தோன்றுகிறது" என்றெழுதினர்கள்.

மற்று இவர்கள் அம் முன்னுரையின் 11-ம் பக்கத்தில் சங்கச் செய்யுட்கள் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டி லியற்றப் பட்டன வென்று முடிவுரைத்திட்டார்கள். அதன்படி எட்டுத் தொகையுள் முதல் நூலாகிய நற்றிணையும் இறுதி நூல் ஆகிய புற நானூறும் அக்காலத்தன வென்பது ஐயப்பாடின்றி நிலைபெறுகின் றது. ஆயின் இத்தொகை நூல்கள் திருக்குறட் பாக்களை எடுத் தாண்டும் அந்நூலினைத் தெளிவாய்ச் சுட்டியும் சென்றன வாயின் அத்தொகை நூல்களின் காலத்துக்குத் திருக்குறள் முற்பட்ட தென்று உடன்படல் வேண்டு மன்றே! அவை திருக்குறளை யாண்ட இடங்களைச் சுட்டுகின்றேன்: காண்மின்!

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி
னஞ்சு முண்பர் நனிநா கரிக
ரஞ்சி லோதியென் றோழி தோட்டுயி
னெஞ்சி னின்புறா யாயினு மதுநீ
யென்க ணோடி யளிமதி —நற்றிணை. ௩௫௫.

இந்நற்றிணைப் பாடற் பகுதியில் தலைவனைத் தோழி அருகடுத்து வரைவு கடாவுவாளாய் நின்று நீதிநெறி மொழியு முறையில் தன் பாற் கண்ணோடிச் செய்தல் வேண்டுமெனத் தமிழ்ப் போற நூற் கட்டளையை எடுத்துக் கூறியது காண்மின். ஈண்டு

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்னும் திருக்குறள் நூலின் கண்ணோட்டம் என்ற துள்ள பாடலை எடுத்து அமைத்துள்ளமை நோக்குமின்.

அதிகாரத்

நீயுங் கண்டு நுமரொடு மெண்ணி
யறிவறிந் தளவல் வேண்டு மறுதரற்
கரிய வாழி தோழி! பெரியோர்

நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே—[illegible]ன.௩௨.

ஈண்டு, தோழி தலைவிக்குக் குறை நயப்புரைப்புழி அறநெறி வற்புறுத்துவாளாய் அறநூற் பொருளைச் சுட்டிக் காட்டுதல் காண்மின். இது

viii

கபிலர் பாடியதெனின் அதன் சிறப்பு மிக்க தன்றோ?
திருக்குறளின் நட்பாராய்தல் அதிகாரத்துள்ள

இப்பகுதியில்

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு"

என்ற குறள் எடுத்தாளப்பட்டமை தேர்மின்.

இனி, புறநானூற்றுப் பாட்டொரு சில

காட்டுகின்றேன்.

"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
வறம் பாடிற்றே." —புறம் ஈச.

இதன்கண் திருக்குறள் - அறத்துப்பால் - செய்ந்நன்றி யறிதல் அதி காரத்துள்ள

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற பாடலைச் சுட்டியதன்றி அந்நூல் 'அறநூல்' என்றும், அது வடநூற்கண் உரைவகையான் அறமுரைத்தல் அமைந்தமை போலாது தமிழ்ப் பாடலான் அமைந்த தென்றும் தெளிதருமாறு 'அறம் பாடிற்றே' என்று விளங்கக் கூறித் திருக்குறளைப் போற்று தல் காண்மின்! அகனும் புறனும் பற்றித் தனித் தனிச் செய்யுளே பாடும் வழக்காறும் இயனூல் யாத்தல் வழக்காறுமே நிகழ்ந்த அக் காலத்து அறப்பெரு நூலாகத் தமிழ் மொழிக்கண் திருக்குறள் விளக்கம் பெற்றமை பற்றி யன்றே ஆலத்தூர் கிழார் தம் பெரு முறை யறநூலை அங்ஙனம் பாராட்டிக் கூறுவாராயினர்.

மேலும் புறநானூறு—நூறும் பாட்டிலுள்ள

"அறம்புரிந் தன்ன செங்கோ லுட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல் பெற்றோமே"

என்ற பகுதி திருக்குறள் - செங்கோன்மை யதிகாரத்துள்ள

"வாழ்நெக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோழ்நெக்கி வாழுங் குடி"

முதலிய குறட்பாக்களின் கருத்தமைதி யுடைய தன்றே?
கபிலர் மலையமான் திருமுடிக்காரியை நோக்கி

ix

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்:
வரிசை யறிதலோ வரிதே: பெரிது
மீத லெளிதே: மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே"—புறம். கஉக.

என்ற பொருண்மொழி கிளந்தது திருக்குறளாசிரியர் அரசன் தன் சுற்றந் தழுவலிற் பெரு நோக்குடையா னுதல் வேண்டுமென வற் புறுத்துரைத்த

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்" (528)

என்ற பொய்யாப் பொன் மொழியைப் போற்றி யுரைத்த தன்றே?

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்ற குறளின் சொல்லும் கருத்தும் "நரம்பெழுந்துலறிய" என்று தொடங்கும் புறப்பாட்டின் (278) இறுதி யடியிற் போற்றி யுரைத்த மையும் நோக்குக. கலித்தொகையினும் பல குறட்பாக்கள் ஊட்சி

யுண்டு: காண்க.

பிள்ளையவர்கள் கி. பி. முதலாவது நூற்றாண்டின என்று அறுதியிட்டுரைத்த சங்கச் செய்யுட்கள் மேற்காட்டிய வாற்றால் திருக்குறளின் சொல்லும் பொருளுந் தோன்றி விளங்க எடுத்தாண் டமையால் திருக்குறளும் திருவள்ளுவனும் அக்காலத்துத் திகழ்ந் தமை புலப்பா டன்றே? அவர்கள் இதனை உள்ளங் கொள்ளா தயர்ந்து திருவள்ளுவர் கி. பி. 450 ஆண்டிற்குப் பின்னர் வாழ்ந்தன ரென்பது வியப்பும் நகைப்புந் தருகின்றது. இனி வள்ளுவனைச் சைன முனிவராகிய எலாசாரியா ரென்பாரும் சைனசாரிய பட்டா வளிப் படி அவரைக் கிறிஸ்து பிறந்து வாழ்ந்த முதல் நூற்றாண்டின ரென்றன்றே நிறுவுகின்றனர்? இதனையும் பிள்ளையவர்கள் காற்றிற் பறக்க விட்டுப் பரிமேலழகர் காட்டிய சொல் மாபின் நெறிமே லழக ராய்த் தனிச்சொல் லாராய்ச்சி செய்து மெய்ம்மை காணு தொழிந் தார்கள்.

பரிப்பெருமாள் 'ஒருவந்தம்' என்பதற்கு ஈரிடத்தும் வேறுபா டின்றி 'ஒருதலையாக' என்றே பொருள் கூறினர். பரிமேலழகர் அப்பொருளை ஓரிடத்துக் கொண்டு அச்சொல் வழக்கை யாய்ந்து காண்பாராகித் தமக்கு இயல்பா னமைந்த வடநூற் புலமைப் பற் றால் ஒருவந்தம் என்பது 'ஏகாந்தம்' என்ற வடசொற்றொடர் போன்ற தென்று மயங்கி யெண்ணித் தம் விசேட வுரையுள்

X

அதனைப் பெய்துவிட்டார். வடமொழியிற்றானும் ஏகாந்தம் என் பது தனித்த, அதிகமான என்ற பொருளதன்றி ஒருதலையான, நிலைபெற்ற என்ற பொருளில் வழக்குடையதன்று. தமக்கு முற் பட்ட காலிங்கர் 'பெருஞ் செல்வம்' என்று பொருளெழுதியதனை அறியாமையின் திரிவு பட எழுதினர் போலும். ஒருக்கால் எடெழுது வோர் பிழைபட எண்ணி 'ஏகாந்தம்' என்ற வடசொற்றொடரைப் பரிமேலழகர் விசேடவுரையிற் பிணைத்தனரோ தெரிகின்றிலேன். பரிமேலழகர் விசேடவுரை கொண்டு பிள்ளையவர்கள் 'ஒருவந்தம்' என்பது ஒரு என்ற தமிழ் எண்ணுத் திரிபெயரும் அந்தம் என்ற வடசொல்லும் கலப்புற்றுக் கலவைச் சொற்றொட ராயின வென்று கூறி, வள்ளுவனார் 'ஒருதலை' என்ற பொருளில் அதனை வழங்கினர் என்றார்கள். வள்ளுவனார்க்கு அது கருத்தாயின் தாம் பிறண்டும் 'ஒருதலையா னின்னது காமம்' 'ஒருதலையா வுட்கோட்ட மின்மை,' என்று வழங்கியவாறே, அச்செந்தமிழ்த் தொடர்மொழி 'ஒரு வந்தம்' என்ற கலவைச் சொற்றொடரினும் பொருட்டெளிவுடைத் தாதலின் அதனையே அவ்விரு குறளினும் வழங்கி யிருப்பான்றே? அங்ஙனம் வழங்கு மிடத்து 'ஒருவந்தம்' என்ற சீர் போன்றே 'ஒரு தலையான்' என்பதும் செய்யுளோசை நிறையாமை நின்று அமையு மன்றே? இனி அதனை வழங்காது 'ஒருவந்தம்' என்ற தமிழ்த் தனிமொழியை வழங்கியது, காலிங்கர் கூறியவாறு அது 'பெருந் திரு' என்ற பொருட் பேறுடையதாதல் பற்றியே யாமென நன் குணர்தல் வேண்டும். அச்சொல் வள்ளுவனார் காலத்தே வழக்காற் றின் நிலைத்துப் பின்னர் அருகியது போலும். தமிழாசிரியருட் பிற ரெவரும் பொருந்தப் புணர்க்காத இவ்விருமொழிக் கலவைச் சொற் றொடரை வள்ளுவனார் வழங்கினரென்று காட்டிய பிள்ளையவர்கள சொல்லாராய்ச்சி பெரிதும் வியப்புச் செய்யா நின்றது.

பெரும் பொருட்டிறங்களைத் தமிழ் மொழியாற் கூறித் தமிழகத்து நன்மக்கட்குப் புலம் பெருகச் செய்யும் பெருந் தொண்டிலீடுபட்ட வள்ளற் பெருமானாராகிய வள்ளுவனார் தமிழ் மொழி மாபு பிழைக்க நூல் யாத்தல் செய்யார். அவரியற்றிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களினும் ஓரடுபதின் மிக்க தனி வடசொற்களில்லை. அறநூற் பொருளும், ஆசியற் பொருளும், அளவை நூற்பொருளும், ஆகமப் பொருளும், மருத்து நூற்பொருளும் பிறவும் செறியக் கூறிய அந்நூலின் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் ஒன்றிலேனும், தனி வடசொற்களாகிய தவம், தானம், அமைச்சு, மானம் என்பன வொழிய அவற்றுக்குரிய வடசொற் றொடர்ப்பெயர் ஒன்றேனும் உளதோ? இனி நான் முழுதும் தேடிக் காண்கினும் 'ஆதி பகவன்' என்ற ஒரே வடசொற் றொடரன்றிப் பிற வடசொற் றொடர்களைக் காண்கின்றிலம். 'தானந் தவ

மிரண்டுந் தங்கா' 'தவமுந் தவமுடையார்க் காகும்' என்பன தாமும் பிரி சொற்றொடர் நிலையாய்ச் செவ்வெண், எழுவாய்த் தொடர் நிலை முறையின் வேறுபட நிற்றலின் தொடர்ப்பா டுறுவன வல்லவே! இவ்வொரு வடசொற்றொடர் தான் பிள்ளையவர்கள் காட்சியில் திருவள்ளுவர் வடசொற் றொடர் வழக்கில் தாராள மனப்பான்மை யுடையரெனக் கூறச் செய்தது போலும். புறநானூற்றுப் பாடல்களினும் அமரர், ஆவுதி, கணம், காகம், கவுரியர், பிண்டம், பூதம், மண்டிலம், யூபம், வேதம் முதலிய வடசொற்களும், 'அவிர் சடை முனிவர் (43)' 'இந்திரரமிழ்தம் (182)' என வடசொற் றொடரும், ஒருதிசை, நாற்றிசை, குடதிசை எனக் கலவைச் சொற் றொடரும், பாசி, ஊசி என்ற பாகதங்களும், 'த்ரேதாக்நி' 'சதுர் வேதா' 'பாரலௌகிகை சுவரியம்' என்பவற்றின் மொழி பெயர்ப் பாகும் 'முத்தீ' 'நால்வேதம்' 'செல்லு முலகத்துச் செல்வம்' என்பனவும் வந்துள்ளனவே. அகநானூற்றினும் 'தென்றிசை மாதிரம் (281)' என்ற வட சொற்றொடரும் 'மணிப்ரவாளம்' என்ற வடசொற் றொடரின் மொழிப் பெயர்ப்பாகிய 'மணிமிடை பவளம்' (304) 'மணிமண்டு பவளம்' (374) என்பனவும் வந்துள்ளன வன்றோ? நற்றிணையினும் மண்டிலம், சடை, தவசியர், கம்மியர், பூதம், தெய்வம், சதுக்கம், கணம், யாமம் என்ற வடசொற்க ளுள்ளன. குறிஞ்சிக் கலியில் 'வாரண வாசிப்பதம்' என்றும், பரிபாடலில் 'தவப்படிவம்' (15) பதிவதம் (10) என்றும் வடசொற் றொடர்க ளுள்ளன. இவற்றை முதல் நூற்றாண்டு வழக்கு எனப் பிள்ளையவர்கள் காணாமை என்னோ? வடசொற் றொடர் வழக்குச் சங்கநூல்களில் அருகியது போன்று இவர் நூலினும் அருகிய தாயிற்று. ஆதிபகவன் என்பதனை மட்டும் ஐந்தா நூற்றாண்டு வழக்கென்பது என்னை? ஆதிபகலன் எனப் பாடமும் உளது என்பர் சிலர். இவ் வடசொற்றொடர் வழக்குச் சங்க நாளில் இல்லை யாதலின் வள்ளுவர் அந்நாளில் வாழ வில்லை என்பது பெறப்படுகிறது என்று பிள்ளையவர்கள் காட்டும் எதிர்மறை வழியளவையினும், இவ் வழக்கு அந்நாளில் உண்டாதலின் அவர் அக்காலத்து வாழ்ந்தார் என எளியேன் நிறுவும் உடம்பாட்டு வழியளவை வலிது ஆதலைத் தருக்க நெறி யறியும் புலவர்கள் காணல் வேண்டும். வடசொற் றொடர்களைப் பெரிதும் வழங்கிய சைவ வைணவப் பெரியார்கள்

காலத்தை யடுத்துச் சற்றுமுன் கி. பி. 5-வது நூற்றாண்டில் வள்ளுவனார் வாழ்ந்தார் என்பதற்கு இந்த 'ஒருவந்த'ச் சொல்லாராய்ச்சியை ஏதுவாகக் கொள்ளாது வள்ளுவர், காயனென்ற வடசொற் பெயரால் வழங்கப்படுகிறார்: அறுபான் மும்மைச் சைவ நாயனார்கள் காலத்தை யடுத்தே வாழ்ந்தன சென்பதற்கு இப்பெயர் வழக்குச் சான்றாகு மென்று கூறி விடலாமே! இதுவும் சொல்லாராய்ச்சியன்றே?

xii

இனி, காலிங்க ருரையால் அவர் பெருநூற் பயிற்சியும் ஓளவால் நாம் தெளிந்து கொள்ள இடனுண்டு. கூஉ-வது அதிகாரம் ஆகிய குறிப்பறிதலில் 'பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும்' என்ற பகுதிக்கு உரை கூறி விளக்கு முகத்தால் "மது மறைந்துண்டோர் மகிழ்ச்சி கண்ணிலனே கண்டு கொள்வர் என்பது" என்று விளக்கவுரை கூறினர். அவர் மேற்கோளாகக் காட்டிய 'மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சி' என்னும் தொடர், தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல் இளம்பூரணருரை-சூத்திரம்—ாகூஉ-வது 'காற்றமுந் தோற்றமும்' என்பதனுட் காட்டிய மேற்கோள் செய்யுளாகிய 'எனல் காவலிவளு மல்லள்' என்பதனுள் பயின்றுள்ள தென்பதனை அறிந்து கொள்க. நச்சினர்க்கினியரும் இச்செய்யுளை எடுத்துக் காட்டினர். நிச-வது வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தின் வரும் அ-வது குறள் "இருமனப் பெண்டிரும்" என்பதில் இவ்வுரைகாரர்

"இம்பையே தவஞ்செ யார்கை யிருந்தி யகற்றல் வேண்டி.
நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகன் படைத்து விட்டான்"

என்றொரு செய்யுட் பகுதியை மேற்கோளாகக் காட்டியுள்ளனர். காமத்துப்பாலில் கூஅ-வது நிறையழிதல் என்ற அதிகாரத்தில் அ-வது 'நாணென வொன்றே' என்ற குறளுரையில்

“ பணிந்து மெழுந்தும் பரிவுற மகிழ்ந்து
நோக்கி யூடியு நுணுக நகைத்து
நீக்கிய நாணெடு நிறபேன் ”

என்றே ரிய செய்புட் பகுதியை மேற்கோள் காட்டி நின்றார். இவ்விரு செய்யுட் பகுதியும் செய்யுளடையாலுப். பொருளாலும் அரும்பெரு நூற்பகுதிக ளாதல் வேண்டுமென எளியேன் எண்ணி முறறும் பெறச் சூழ்ந்தே னெயினும் யான் பயின்ற நூல்களில் இதுவு கண்ணெதிர்ப் படவில்லை அரும் பெருநூற் பயிற்சியுடைய பெருந்தகைப் புலவர்கள் தாம் கண்ட இடஞ் சுட்டி யறிவுறுத்து வார்களாயின் அவர்கள் உதவுவதை நன்றியறிவுடன் ஏற்றுப் போற்றி மறு பதிப்பில் வெளியிடு வேன்.

மற்றும் 37-வது அதிகாரம் அரண் என்பதிற் போந்த 4-வது குறள்—“ முனை முகத்த ” என்பதனுள் பொறி வகைகளைக் கட் டுரைச் சுவைபட எழுதிய பகுதியும் இவர் பெருநூற் பயிற்சியைப் புலப்படுத்தும் திருக்குறளுரைகாரருள் பழைய பெரியாரென நாம் மதிக்கத் தக்க இவர் உரையேட்டில் ஒரு சில புதுமைகள் கண்டது முண்டு. தென்றமிழ் நாட்டு முதுமக்கள் பலர் பேச்சிடைப் பெரிதும் மற்று, மறித்து முதலிய இடைச்சொற்களை விரவிப் பேசுவது போன்றே இவர் உரையில் ‘மற்று’ என்ற இடைச்சொல்லைப் பெரி தும் விரவியே பொழிப்புக் கூறியுள்ளார். இவருரை நடையில் வட

சொற் கலப்பு காண்பது அரிதாகவே யுள்ளது. ஏட்டெழுத்தின கண் பல இடங்களில் சொற்றொடர்களின் இடை யிடையே இடம் விட் டெழுதி யிருந்தமை நோக்க மிகப் பழமையான ஓலேடு பார்த்தெழுதி யோர் அதிற் செல்லரிப்பு, முரிவு, தேய்வு முதலிய பழுது கண்டு அதற்கென இடம் விட்டெழுதியவை என்று இவ்வேடு எண்ணச் செய்தது. ஏட்டில் யாண்டும் ஆய்தவெழுத்து இக்காலத்துள்ளது போல எழுதப்பெறுது ஃ என்ற படியாகவே எழுதி யிருந்தது கண்டேன். இழக்கம், நணுமை, கேளிமை முதலிய அருகிய வழக்கா றுள்ள சொற்களும் கண்டேன்.

குறைப் பகுதியாகிய அறத்துப்பாலின் இறுதியில் இவ்வுரை காரர் அப்பாலின் பொருளைத் தொகுத்துரைக்குங்கால் 'புயல் பருவத்து எய்துவதாகிய நீத்தல்' 'இல்லறத்தியல்பு அஞ்சு வர்க்கம்' என்று வழங்கு முறையும் 'வள்ளுவக் கடவுள்' எனப் போற்றும் முறையும் நோக்க இவர் வள்ளுவனைச் சைனரெனக் கருதின ரென்று தோன்றுகின்றது. கல்லறிஞர் நாடியாய்வாராக. காமத்துப் பாலினிறுயிற் கண்ட காலக் குறிப்பினாலே இவ்வுரையேடு உருடு-ஆண்டுகட்கு முன்பு பிறிதோரேடு பார்த்தெழுதியது என்று தெரி கின்றது.

இனி, பரிப்பெருமாள் என்ற பழைய உரைகாரர் குற்றங் கடிதல் என்ற அதிகாரத்தில் வெகுளியாற் கெட்டமைக்குச் சௌமேதயனையும், நகர்ச்சியாற் கெட்டமைக்குச் சச்சந்தனையும், மானத்தாற் கெட்டமைக்குத் துரியோதனனையும், மகிழ்ச்சியாற் கெட்டமைக்கு வாதாவியையும், பொருள் விருப்பாற் கெட்டமைக் குப் புளூரவாவையும், காதலடக்க மின்மையாற் கெட்டமைக்கு வத்த ராயனையும், மதத்தாற் கெட்டமைக்குக் கார்த்தவீரியார்ச்சுனனையும் எடுத்துக் காட்டிய தன்றித் தெரிந்து தெளிதல் அதிகாரத்தில் 'வியாசர் மதம்', 'மகேச்சுரர் மதம்', 'நாரதர் மதம்' 'பாசரர் மதம்' 'கௌடிலியன் மதம்' 'துரோணாசாரியன் மதம்' 'உத்த வாசாரியன் மதம்' 'சுக்கிரன் மதம்' என்று காட்டிய ஒப்புமை யுரை கள் இவர் வடநூற் பயிற்சி மிகுதியுடையாரென்று தெளியக் காட்டு கின்றன. காமத்துப்பாலின் உரையில் வடநூற் கோட்பாடுகளைப் பிணைத்ததுங் காண்க.

"தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியா
சொள்ளிய காமநூ லோர்ந்துரைத்து—வள்ளுவனூர்
பொய்யற்ற மூப்பாற் பொருளுரைத்தான் தென்செழுவைத்
தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து"

என்று காமத்துப்பா லிறுதியிற் காட்டிய இவருரைப் பாயிரப் பாட்டால், இவர் இலக்கணநூல் ஒன்றும் காமநூல் ஒன்றும் இயற்றி

னர் என்பது தெரிகின்றது. அவை இப்பொழுது கிடைப்பன வல்ல.

'விருந்து புறத்ததாத் தானுண்ணல்' 'பலகுடை நீழலும்' என்ற குறளுரைகள் போற்றத் தக்கவா றுள்ளன ஆதலின் இவர் உரைச் சிறப்பும் காண்க. இவர் புறநானூற்று '252'-வது செய்யுளுள் வரும் 'சொல்வகை வேட்டுவன்' என்ற தொடர் மொழியையும், கலித்தொகையில் வரும் 'நெத்தம்' என்பதனையும், சீவக சிந்தாமணியில் வரும் 'அடியொட்டி' என்பதனையும் உரையிற் காட்டிச் செல்லுதலின் சங்க நூல்களினும் பழந்தொடர்நிலைச் செய்யுட்களினும் பயிற்சி யுடையார் என்று காண்க. இங்குக் காட்டிய எல்லாம் பரிமேலழகருரையின் வேறுபட்ட இயல்புகளாம். பிறவும் நல்லறிஞர் நாடி யாய்ந்து பயனை உலகிற்கு நல்குவார்களாக.

நம் தமிழகத்துச் செந்தமிழ்ப் பைம்பயிர் வளர்த்து அறப்பைங் கூழ் விளைத்து இன்பந் துய்த்தற் பயன் எய்துவிக்க நமது கல்வியமைச்சர் தமிழ் மாணவர் உள்ளமாம் கழனியில் திருக்குறள் பயிற்சி வித்திட்டுள்ள இந் நல்லூழி நாளில் இந்நூலுரைகள் விளைவுத் துணையாய்த் தெருப்போ லியைந்துள்ளன என்பது எளியேன் உட்கோள். வித்தும் விளைவும் விளைப்போரும் வாழி.

இது பதிப்பெய்தக் கட்டளை செய்த எம் தேவஸ்தானக் கமிட்டியாருக்கும், முன்னுரை யளித்துதவிய வேடி கமிட்டிக் கல்விச் செயன்மை மந்திரத் துணைவர்-திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T. அவர்கட்கும், உதவிய எம் கழகத் தலைவர் ஸ்ரீ. P. V. ராமானுஜஸ்வாமி அய்யங்கார், M.A. அவர்கட்கும், தேவஸ்தான அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீ. T. R. நரசிம்மாசாரியார் B.A. அவர்களுக்கும் என் நன்றியறிவை யுரைத்திடுகின்றேன். அறிவு ஆற்றல்களில் குறைபாடுடைய எளியேன் இயன்றுங்கு இயற்றிய தமிழ்த் தாயின் திருப்பணியில் குறைகள் இருப்பின் பொறுத்தருளுமாறு தமிழ்ச் செல்வப் பெரியார்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம் தி. பொ. பழனியப்ப பிள்ளை

தலைமைத் தமிழ் ஆராய்ச்சியாளன்.

குறிப்பு :—படிக்கத் தொடங்குமுன் தாலிறுதியிற் காட்டிய பிழைகளைத் திருத்திக் கொள்ளுக.

திருக்குறள் -

அறத்துப்பால்

அறத்துப்பால் அட்டவணை.

அதிகாரம்.

31. வெகுளாமை ...
32. இன்னு செய்யாமை ...
33. கொல்லாமை ...
34. நிலையாமை ...
35. துறவு ...
36. மெய்யுணர்தல் ...
37. அவாவறுத்தல் ...
38. ஊழ் ... ...

... 1
... 2
... 4
... 6
... 9
... 12
... 14
... 19

கடவுள் துணை. திருக்குறள்.

அறத்துப்பால்—காலிங்கர்

உரை—(குறைப்பகுதி.)

31. அதிகாரம்—வெகுளாமை.

.....
.....

.....

.....

.....

.....

6. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

என்பது.—நகை யாகிய முக மலர்ச்சியும் உவகை யாகிய மன மகிழ்ச்சியும் இவை இரண்டினையும் கொன்று விடுவது ஆகிய சினத் தைப் போல வேறு சில (பகையும் உள)வோ? எனவே இதனைப் போல இவ்வுலகத்துப் பெருங் கேடு செய்ய வல்லனவாய் இருப்பன சில பகை யாவுப் இல என்று பொருள் ஆயிற்று என்றவா று. (6)

7. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனுன் வரும்.

எ - து.—யாவர் மாட்டும் ஒருவன் வெகுளியை மறத்தலே காரியம் ஆவது : என்னை எனின் தனக்கு எல்லாத் தீயன ஆகியதும் தோன்றுதல் மற்று அவ்வெகுளியானே வரும் ஆதலால் எ - று. (7)

8. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தெறிந்தான் கைபிழையா தற்று.

எ - து.— இம்மை மறுமை ஆகிய இரண்டினையும் கெடுப்பது ஆகிய சினத்தைப் பொருளாகவே கைக்கொண்டவனது கேடா னது சிறிதுப் தப்பாது என்பது எங்ஙனம் எனில் ஒருவன் தனக்கு நிலத்தை இலக்கு ஆகக் குறித்துக் கொண்டு மற்று அந்நிலத்தின்

கண் கண் புதைத்து எறியின் (உய்த்த)
எ - று.

கை பிழையாது போலும்
(8)

9. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னுஞ் [மென்னு
மேமப் புணையைச் சுடும்.

எ - து.—உலகத்துச் சான்றோரால் கொடியவற்றுள் மிகவும் கொடியது இது என்று சொல்லப்பட்ட அடைந்தாரைக் கொல்லி ஆகிய கொடுந்தீயானது மற்று இத்துறவோர்க்குத் துணை ஆகிய அருளும் பொறையும் ஆசாரமும் முதலிய சேமம் ஆகிய தெப்பத் (9)
தைச் சுட்டு விடும் எ - று.

10. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின்.

எ - து.— இவ்வெகுளியைத் தனது நெஞ்சத்தானும் கருதாது எஞ்ஞான்றும் ஒடுங்கிய உள்ளத்தான் ஆம் ஆயின் மற்று அவன் கருதிய எல்லாம் ஒக்க எய்துவன்: எனவே ஈண்டுத் தன் துணை ஆகக் கீழ்ச் சொல்லிய அருள் முதலியவற்றாலும் குறைபாடின்(றிய) வின்(ப)ம் எய்துவன் என்பது பொருள் எ - று. (10)

இனி அத்துறவோர்க்குச் சினம் இன்மையால் சிறக்கும் செய்தி யாவது ஆற்றலால் பிறர்க்கு இன்னாதனவற்றைச் செய்யாது தம் போல நோக்கித் தவம் ஆற்றுதல் அன்றே: அதனால் அதன் பின் னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

32. இன்னா செய்யாமை.

1.

இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை வேண்டும் பிறன்கட் செயல்.

எ - து.—ஒருவன் தனக்கு இன்னாதன எனத் தான் அறிந்தன வற்றைப் பிறர் மாட்டுச் செய்தலை அடையாமை வேண்டும் எ - று.

துன்னுமை என்பது அடையாமை எ - று. (1)

2. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா பிற்பகற் றாமே வரும்.

எ - து.—ஒருவர் பிறர்க்கு இன்னாதனவற்றை முற்பகற் காலம் தாம் செய்வர் ஆயின், தமக்கு இன்னாதனவும், அச்செய்த அக்கரு மத்தின் பயன் தானே பிற்காலத்துத் தானே வந்து எய்தும்: அதனை ஒருவர்க்கு.....தாது எ - று.

முற்பகல் பிற்பகல் என்பது முற்காலம் பிற்காலம் என்பது. (2)

3.

கறுத்தின்னு செய்தவர்க் கண்ணு மறுத்தின்னு
செய்யாமை மாசற்றூர் கோள்.

எ - து.—ஒருவர் தம் மாட்டுச் சினந்து இன்னுதனவற்றைச் செய்தவர் மாட்டும், தாம் பெயர்த்து அவர்க்கு இன்னுதன செய்யாமை உள்ளழுக்கு அற்ற துறவோரது கோட்பாடு எ - று.

கறுத்து என்பது சினந்து எ - று.

(3)

4.

தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்.

எ - து.—தனது உயிர்க்குச் சில இன்னுதனவற்றைத் தான் அறிந்து ஒழுகுவான் இனி மற்று உலகத்துப் பிறந்து இறந்து இங்ஙனம் வருகின்ற உயிர்கட்குத் தான் இன்னுதன செய்யும் செயல் என்னே கொல்லோ? எ - று.

(4)

5.

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்
நோயின்மை வேண்டு மவர். [செய்யார்

எ - து.—.....ஆதலால் பிறர்க்கு இனிது.....
..... ஒரு நோய் செய்வது இலர்: யார் எனின் தமக்குத் துன்பத்
தின்..... (5)

6. எனைத்தா னு மெஞ்ஞான்றும் யார்க்கு
மனத்தா னு

மாணாசெய் யாமை தலை.

எ - து.—ஒருவன் உலகத்து யாவர்க்கும் எஞ்ஞான்றும் எத்
துணையும் சிறிது ஆயினும் இன்னாதனவற்றைத் தன் மனத்தினாலும்
செய்யாமை எனவே வாக்கினால் உரைத்தல் செய்யாமையும் காயத்
தால் செய்தல் செய்யாமையுமே தலைமைப்பாடு ஆவது எ - று.

மனத்தானும் என்பாரும் உளர். (6)

7. செய்யாமைச் செற்றார்க்கு மின்னை
செய்தபி

னுய்யா விழுமந் தரும்.

எ - து.—தான் பிறர்க்கு ஓர் இன்னமை முன்னம் செய்யா திருக்கத் தன்னை வந்து செறுத்தவர்க்கும் தான் பெயர்த்து இன்ன தனவற்றைச் செய்தான் ஆயின், தனக்கு உய்ந்து கரை ஏறுதற்கு அரிது ஆகிய பெருந்துன்பத்தைத் தரும் எ - று. (7)

8. சிறப்பீனுஞ் செல்வம் பெறினுஞ் பிறர்க்கின்னு செய்யாமை மாசற்றார் கோள்.

எ - து.—மறுமைக்கு முத்தியையும் இம்மைக்குச் செல்வத்தை யும் பெறினும் தன் நெஞ்ச.....ருதுவ தாம் பிறர்க்குச் செய்யாது ஒழிதல் குற்றம் அற்ற உணர்வுடைத் துறவோரது நெஞ் சில் கோட்பாடு எ - று. (8)

9. இன்னுசெய் தாரை யொறுத்த நன்னயஞ் செய்து விடல்.

லவர்நாண

எ - து.—துறவோர்க்கு இன்னுதவற்றைச் செய்தாரை ஒறுத் தல் ஆவது யாதோ எனின் அவர்.....மையின் நிலைமை கண்டு மற்று அவர் தாமே நா.. ....நாம் அவர்க்கு நல்ல ....விடல் எ - று.

நயம் என்பது ஒழுக்கம்.

(9) 10.

அறிவினு ணுகுவ துண்டோ பிறிதினேய்
தன்னேய்போற் போற்றுக் கடை.

எ - து.—துறவு நெறி ஒழுக்கம் உடைய துய்ய அறிவினர் பிறிது உயிர் ..... தொரிடரையும தமதி .....தேர்ந்து குறித்துக் கொள்ளாத இடத்துத் தமது அறிவினுல் ஆகுவது உண்டோ? எனவே அஃது இல்லை எ - று. (10)

இனிப் பிறர்க்கு இன்னுங்கு செய்தலை அஞ்சுவார் கண்ணதே பிற உயிர்க்கு அழிவு செய்யாமையும்: ஆதலால் இதன் பின்னர் கொல்லாமை..... ....மேலை அதிகாரம்.

33. கொல்லாமை.

1.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

எ - து.—இருவினைப் பயனையும் கொண்ட வையத்து அறவினைக் குச் சிறந்த பண்பு யாதோ எனின் யாதானும் ஒன்றினையும் கொல் லாமை ஆதலால் ஒன்றினைக் கொல்லுதல் ஆகின்ற இது பாவம் ஆகிய எல்லாத் தீவினையும் தரும் எ - று. (1)

2.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்
செல்லா துயிருண் ணுங் கூற்று. [நாண்மேற்

எ - து.—கொல்லாமை ஆகின்ற சிறந்த அறத்தினைத் தன்னிடத்து என்றும் கொண்டு இடைவிடாது நடாத்துகின்றான் எவன்? அவனது வாழ்நாள் மேல் தொடாது மற்று உயிர் உண்ணும் கூற்றானது எ - று. (2)

33. கொல்லாமை

5

3.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

எ - து.—அனைத்து அறங்களினும் தனக்கு இனையன.....தெ.....தானே ஆகச் சிறந்தது யாதோ எனின் கொல்லாமை ஆகிய அறம் ஒன்றுமே: அதனால் இக்கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவா.....மொன்றுண்டு. அஃதாவது எஞ்ஞான்றும் பொய்யாமையைத் தப்பாமல் குறிக் கொண்டல் சாலத் தகைமை உடைத்து எ - று. (3)

4. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லோலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

எ - து.—தனக்கு உள்ளது கொண்டு பலர்க்கும் பகுத்து ஊட்டிக் தானும் உண்டு அனைத்து உயிர்களையும் கொலை குறியாது பாதுகாத்த..... .. .. டவரு முனிவர் அனைவரும் சிறந்த நல்லறம் இவை இவை என்று முடித்தவற்றுள் எல்லாவற்றினுஞ் சாலத் தலைமைப் பாடு உடைத்து எ - று.

வேண்டாமையாற் ....கொலை ஆம் என்பது கருத்து. (4)

5.

உயிருடம்பு நீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

எ - து.—பிற உயிரை அவ்வுடம்பினின்றும் அவற்றின் துயர் கருதாது பிரித்திட்டவர் என்று சொல்லுப சான்றோர்: யாதை எனின் பின்பு தாம் உறும் துன்பம் ஆனது உடம்பினின்றும் ஒரு காலும் நீங்காத கொடு நரகத்துள் வாழும் வாழ்க்கையினை உடையார் எ - று.

செயிர் என்பது குற்றம்.

(5) 6. கொலைவினைய ராகிய மாக்கள்
புலைவினையர்

புன்மை தெரிவா ரகத்து.

எ - து.—கொலைத் தொழிலை உடையர் ஆகிய மாக்கள் கடையாயினர் புலையரினும இவரே புலைத்தொழிலை உடையர் என்று சொல்லப்படுவர்: நூல் முறையான நூல்களில் குற்றங்கள் ஆராயும் சான்றோரிடத்து எ - று. (6)

7. நிலையஞ்சி நீத்தாரு லெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

எ - து.—வினைவழி எய்தி வருகின்ற பிறவித் தன்மையை அஞ்சிப் பிறவாமைக்குக் காரணம் ஆகிய தவநெறி இயற்றுவார் எல்லாரினும் மற்று இக்கொலைத் தொழிலை உயிர் அழிவு என்று அஞ்சி மற்று இதனை எஞ்ஞான்றும் கொல்லாமையைக் குறிக் கொள்பவனே பெரிதும் தலைப்பாடு உடையோன் எ - று. (7)

8. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

எ - து.— உலகத்துத் தவநெறி பலவற்றினுஞ் சிறந்த நன்னெறி கள் என்று நூலால் எடுத்துச் சொல்லப்படுவ தியாதோ எனில் யாதும் ஒன்றினையும் கொல்லாமையைக் கருதும் நெறி ஒன்றுமே எ - று.

(8) 9. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

எ - து.—பிறிது ஒன்று வந்து தனது உயிரை விடுவிப்பது ஆயினும் தான் மற்று அதனுடைய பொருட்டு ஆக வெகுண்டு இனிய உயிரின் காரணம் கொலை வினை அஞ்சும் பண்பு இன்று ஆகிய வினையினைச் செய்யற்க எ - று. (9)

10. நன்றாகு மாக்கம் பெரிதெனினு மாந்தர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

எ - து.--- ஒன்றின் கொலையானது எக்காலமும் கேடு இன்றி
இனிது ஆகும் ஆக்கத்தைப் பயக்கும் என்று அறநூல் சொல்லினும் துறவோர்க்கு ஒன்றினைக் கொன்று ஆகுவது ஓர் ஆக்கம் சாலக் கடை எ - று. (10)

இனி மற்று இத்துறவோர்க்குக் கொல்லாமை என்னும் குறிக்கோள் உண்டாயிற்று : உடம்பும் உயிரும் உடன் வாழுநிலை அழிதல் அஞ்சி அன்றே : இதனால் அது காரணம் ஆகக் கொண்டு அனைத்து வகைப்பட்ட உடம்பும் உயிரும் வினைவழி வினைவழிப் பிறந்து வருகின்ற நிலையாமையைத் தேர்தலும் அவரது நிலைக்கு உரித்து ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

34. நிலையாமை.

1. நில்லாத வற்றை நிலையின
வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

எ - து.—இவ்வுலகத்தின்கண் உண்மை நோக்கில் யாவையும் நிலையாவாய் இருக்க அங்ஙனம் நில்லாதனவற்றை நிலையுடையன என்று கருதும் அறியாமையின் இயல்பு உணர்வோர்க்கு எஞ்ஞான்றும் சாலக் கடை எ - று. (1)

2.

நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

எ - து.— யாக்கையின்கண் உயிர் நிலையாமை இயல்பு ஆகலால் தமது நாவினைச் செற்றுக் கொண்டு விக்குளானது மேற்போந்து கழிவதன் முன்னே மேல் நல்வினைக் கண்ணே நெஞ்சு ஒருப்பட்டு மற்று அதனைக் காயத்தினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் மேலாகிய நெறவறத்தின்கண் நின்று ஒழுகப்படும் எ - று. (2)

3. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

எ - து.—கூத்து என்பது ஓர் காரணம் ஆக மக்கள் ஈட்டம் வந்து கூடினாற் போலச் சிறிது நல்வினை என்பது ஓர் காரணம் ஆகப் பொருள் ஈட்டம் வந்து உளது ஆய் மற்றும் அக்கூத்து ஒழிவின் பின்னரே மக்கள் கூட்டம் பிரிந்தாற் போலச் செய்த.....பின்

னரே மற்று அப்பொருள் அழிந்து ஒழிதலும்

அத்தன்மைத்து எ-று.

விளிதல் என்பது ஒழிதல். குழாம் என்பது

கூட்டம். (3)

4.

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ரு லற்குப வாங்கே செயல்.

எ - து.—உலகத்து யாவரும் மதிக்க செல்வம் ஆனது நிலை யாகத் தங்காத இயல்பை உடைத்து. மறறு அச்செல்வத்தைத் தம் கைத்து உளது ஆகப் பெற்ரூல் அதனால் நிலைபேறு உடைய ஆகிய மறுமைக் காரியங்களையும் மற்று அப்பொருள் பெற்றவர் அப் பொழுதே செய்க எ - று.

அற்கா இயல்பிற்று என்றது நிலையாத இயல்பிற்று என்பது. அற்குப என்பது நிலை பெறுவன என்பது. (4)

5.

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

எ - து.—உலகத்தோர்க்கு நாள் என்று கொண்டு வேறே ஒன்று உளது போல் ஒரு நெறி காட்டிச் செல்கின்றது யாதோ எனில், மற்று அது மாக்கினது உருபு வேறுபட்டுக் கழியுமாறு அதனை ஈர்ந்து செல்லும் ஈர்வாள் போல மற்று ஈண்டும் உடம்பொடு நடைபெற்று இயல்கின்ற உயிரினையும் அந்த நிலை வேறுபட்டுக் கழியுமாறு அதனை ஈர்ந்து செல்லும் ஈர்வாள் ஆம்: எவ்விடத்து எனின் இதன் உண்மைப் பாட்டினை உற்று உணர்வாரைப் பெற்ற இடத்து எ - று. (5)

6. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

எ - து.—உடம்புகள் தோறும் குடியிருந்த வருகின்ற உயிர்க்கு மற்று இன்னும் இங்ஙனம் புக்குப் புக்கு ஒழிகின்ற யாக்கையானது நிலை பெறுது ஐயோ தான்! எ - று.

இதனல் என் சொல்லியவாரே எனில் உலகத்து அளவு இறந்த காலம் எல்லாம் அளவு இறந்த யாக்கைகள் தோறும் பிறந்தும் இறந்தும் உழன்று திரிதற்குக் காரணம் ஆகிய பேதைமை நீங்கும் உணர்வு பெறுதற்கு உறுதவம் இயற்றும் ஒருப்பாடே இனித் தங்குவது என்று பொருள் ஆயிற்று எ - று.

புக்கில் என்பது புக்குப் போதுகின்ற இல்லம் என்றது. கச்சி லிருந்து என்பது குடியிருந்து என்றது. (6)

7.

குடம்பைத் தனித்தொழியப் புட்பறந் தற்றே யுடம்போ டுயிரிடை நட்பு.

எ - து.—இவ்வுலகத்துக் குருவி முதலிய பறவையானது தான் வாழும் கூடு தன்னை யின்றித் தனித்து ஆங்கு ஒழியப் பறந்து போகிய அத்தன்மைத்தே : மற்று யாதோ எனின் உடம்போடு உயிரின்கண் உளது ஆகிய உறவுபாடு எ - று.

குடம்பை என்றது புள் இயற்றும் கூடு என்றது. (7) 8. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு.

எ - து.—வாழும் யாக்கையில் காரணங்களின் ஒடுக்கம் போலும் மற்று அவ்வியாக்கையது இறந்து பாடும் : இனி இதன் கொள்கை உள காரணங்கள் புலப்பட்டு இமைத்து விழித்தால் போலும் பிறப்பும் எ - று. (8)

9. ஒருபொழுதும் வாழ்வ தறியார்
கருதுப
கோடியு மல்ல பல.

எ - து.—இமைப்பொழுது அளவில் சாதலும் பிறத்தலும் உயிர் கள் நிலையாமைக்கு இயல்பு எனினும் இவற்றின் இடைப்படு காலம் பெரிது ஆம் எனில் மற்று அது தானும் உடம்பொடு உயிர் வாழும் காலம் ஒரு பொழுதும் ஒரு மாத்திரமும் துணிதல் அறியார்: மற்று இதன் நிலைமை இவ்வாறு ஆயினும் அளவு இறந்த காலம் எல்லாம் இருந்து வாழ்தற்குச் செய்து கொள்ளக் கருதுவன ஒரு கோடியும் அல்ல: பின்னும் பல: எனவே இக்கருத்துக் கொண்டு வாழ்தல் அரிது எ - று. (6)

35. துறவு

9
10.

நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

எ - து.—ஒருவன் நேற்று இருந்தவன் இன்று இல்லை என்றும் இன்று இருந்தவன் இன்று இல்லை என்றும் உரைக்கப்பட்ட நிலையா மையின் பெருமை உடைத்து இவ்வுலகம்: ஆகலால் மற்று இக் காலம் இறப்பதன் முன்னர்ப் பிறப்பு அறுத்தற்கு எய்துவது ஆகிய துறவறம் இயற்றுக என்பது கருத்து ஆயிற்று (10)

மற்று இவ்வுலகத்து உடலும் உயிரும் பொருளும் பிறவும் நிலையாமை தெரிந்த பெரியோர் இங்ஙனம் நின்ற பிறவியை அஞ்சித் துறவு..... .....ன்பங்கருதி .. ..மற்று அதனால் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

35. துறவு.

1. யாதனின் யாதனி னீங்கியா னோதல தனி னதனி னிலன்.

எ - து.—உலகத்து மக்கள் பண்பு உடையான் ஒருவன் இருவினையுள்ளும் தீவினை நீங்கி நூல் நெறி மாபு ஆகிய நல்வினை இயற்றும் அன்றே : மற்று அவை தம்முள்ளும் அரசு, பொருள், மக்கள், அமருலகு என்னும் சிறுசுவை விளைப்பன ஆகிய வினைகள் யாதனொன்றினின்றும் தொடர்பு நீங்கித் துறவின் கண்ணே சென்றால் மற்று அவன் அந்த அந்தப் பயனைப் பற்றித் துயர் உறுதல் அதனின் அதனின் இலன் : எனவே அந்த அந்தப் பயன் விளைத்தற்குக் காரணம் ஆகிய அந்த அந்த வினைகளின் முயற்சி யுடையன் ஆதல் இல்லை யாதலால் அவன் துறவின்கண் முயல்வான் ஆம் என்று பொருள் ஆயிற்று எ - று. (1)

2. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி னீண்டியற் பால பல.

எ - து.—முதல் சொன்ன நிலையாமையைக் குறிக் கொண்டு பிற விக்கு வித்து ஆகிய வினையும் பயனும் என்பனவற்றை நுமக்கு இயன்ற வீடுத்தலே விரும்புவீராயின் அதனையும் முன் கோலி உண்மை யாகத் துறக்க: இங்ஙனம் துறந்ததற்பின் இவ்விடத்து மற்று அத் துறவு அற முயற்சியான் ஈண்டு ஆகற்பாலன பல எ - று. (2)

3. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.
2

எ - து.—மற்று ஆகிய மனை, மக்கள், செல்வம் முதலிய பல பற்றினையும் தமது உள்ளமானது தோய்ந்து கிடக்கின்ற காதலைக் கைக்கொண்டு விடாதிருக்கின்ற அறிவிலோர்க்கு எஞ்ஞான்றும் தம் மைச் செறியப் பற்றிக் கொண்டு விட்டு நீங்கா(திமாவை?) என்ற பிறவி முதலாகிய துயரங்கள் எ - று. (3)

4. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

எ - து.—மற்று இப்பிறவி என்னும் துயரினை அறுத்தலே முயன் றுள்ளோர்க்குக் கீழ்ச் சொன்னவை அனைத்தினும் உள்ள தொடர்ச் சியை, இனி அது அன்றி வேறும் ஒரு தொடர்ச்சிப்பாடு யாது கொல்லோ? எனவே இது அன்றி மற்று யாதும் இல்லை: அஃது யாதோ எனின் தமது உடம்பும் சிவர்க்கு மிகை எ -

(4) 5. அடல்வேண்டு மைந்தின்
புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

எ - து.—இனி இதன் உட்கருவி ஆகிய ஐம்புலன்களையும் துறவு நெறிக்குப் புறவழி ஆகிய ஐம்பொறிகளின் நுகர்ச்சியைப் பாவாமல் தமது உள்ளத்தால் செறுத்தல் வேண்டும்: மற்று அங்ஙனம் செறுத்த பின் அவ்வுள்ளம் தானும் உள் நின்று விரும்புவன ஆகிய வேட்கைகள் எல்லாம் ஒரு தன்மைப் பட விடுதல் வேண்டும்: எனவே அவ்வுள்ளமானது தானும் ஒரு வழிப்பட்டு நிற்க வேண்டும் என்பது பொருள் ஆயிற்று எ - று. (5)

6. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

எ - து.—இங்குச் சொன்ன உடலும் புலன்களும் உள்ளமும் ஆகிய ஒரு தொகைப் பாட்டினை யான் என்று மயங்கும் மயக்கமும் இனி மற்று இதனையும் கீழ்ச்சொன்ன பணை, மக்கள், செல்வம் முதலியவற்றையும் எனது என்று மயங்கும் மயக்கமும் என இவ்விரண்டு மயக்கத்தையும் தேர்ந்து உணர்ந்து செலவு அற விடுக்கும் அவனே வானோர் ஆகிய கடவுளர்க்கு எல்லாம் மேற்பட்ட முழுப் பேரின்பம் ஆகிய முத்தியைப் பெறுவன் எ - று. (6)

7. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

எ - து.—உலகத்துத் துறப்போர் இங்ஙனம் முழுதும் துறந்

தல் கடன் ஆதலால் மற்று இத்துறவிற்குச் சொல்லப்பட்ட யாதா
னும் ஒன்றினோடு மறந்தும் ஒரு பற்றிலாமை யாது? மற்று அதுவே
மாபு ஆகும்: மற்று அது அன்றி இவற்றில் ஒன்றின்கண் மறந்தா

யினும் சிறிது ஓர் பற்று உண்டாயின் பற்றுடைமை பின்னும் பெயர்த்
தும் முன்னம் மயக்கத்திற்கே காரணம் ஆகும் எ - று. (7)

8. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றை யவர்.

எ - து.—..... .....ன் முத்தியின்கண் தலைப்பட்டோர்
ஆவார் யாது ஒன்றின் மாட்டும் யாதும் ஒரு பற்று இல்லாதவாறு
திருந்தத் துறந்தவரே: இனி மற்றையார் எல்லாம் அங்ஙனம் பற்று
அற மாட்டாது அறிவு மயங்கிப் பிறவி ஆகிய பெருவலையுள் பட்டுச்
செல்கின்றார் எ - று. (8)

9. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.

எ - து.—ஒருவர் தமது உள்ளத்தால் பற்று உடையர் ஆக
வேண்டும்: மற்று யாதினை எனின் முன்னம் சொன்ன முறைமை
யின் எப்பற்றும் அற்றோன் யாதோர் இன்பத்தைப் பற்றி நின்றான்.
மற்று அதனைத் தானும் உறுதற்கு மற்று இனி முன்னம் தனது
உள்ளத்தினுல் முயல்வது ஆக வந்து பற்றுன் அன்றே: அதன்
பயன் முற்றும் துணையும் அதனை முறுக நின்று முயலுக: யாதற்கோ
எனின் மற்று இதனுல் வரும் இன்பம் அன்றி மற்று எப்பற்றும் விடு
தற்கே காரணம் எ - று. (9)

10. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

எ - து.—இங்ஙனம் பற்று அற்ற இடத்து மற்று அப்பொழுதே அப்பற்று அறுதி ஆகிய நற்றுறவு தன் பிறப்பு அறுக்கும் : எனவே முத்தியை எய்தும் : மற்றும் ஏனைய எல்லாம் பற்றொடு வருதலால் அத்தந்தப் பொருள் பற்றி நின்ற நெஞ்சொடும் பிறந்தும் இறந்தும் திரிந்து உழல வேண்டுதலால் இந்த நிலையாமையே எப்பொழுதும் காணப்படும் இவனல் எனவே எஞ்ஞான்றும் முத்தி இன்பம் காண மாட்டார் என்பது பொருள் ஆயிற்று எ - று. (10)

இனி இவ்வுலகத்து மக்கள் பிறந்தோரில் சிறந்தோர் ஆகிய சான்றோர் முன்னர்த் தம் குலத்து இயல்பு ஆகிய இல்லறம் இயற்றிப் பின்னர் மற்று அதன் பயன் ஆகிய துறவறம் இயற்றுதற்கு அதனை முனிந்து நீத்துப் போந்து துறவறம் இயற்றிய பின்னர்

மற்று இது துறவறத்தின் பெரும்பயன் ஆகிய முத்தி இன்பத்து மூயன்று அமைதல் இயல்பு ஆகலான் இதன் பின்னரே மெய்யுணர் தல் என்றும் பெயரினை அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

36. மெய்யுணர்தல்.

1. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

எ - து.—ஓசைமுதல் ஆகிய ஐம்புலன்களைத் தனித்தனி அறிந்து வருகின்ற செவி முதல் ஆகிய பொறி ஐந்தும் மற்று ஈண்டு அருந் தவம் இயற்றி அருளகு ஆளும் அமரர்க்கும் அவர் அவா எய்துதல் அரிது ஆதலால், சிறிது காள் அச்சிற்றின்பத்தார் ஆகிய மக்கள் பிறந் தார்க்கு எவ்வாற்றானும் எய்தாது அன்றே: அஃது அன்றி இவர்க்கு அவை நிறைய எய்தியக் கண்ணும் மற்று ஈண்டு ஒழிவன ஆதலான் யாதும் ஒரு பயன் இல்லையே: யார்க்கு எனின் மெய்ப்பொருளை உணரும் உணர்வு இல்லாத விரகு இல்லாளர்க்கு எ - று. (1)

2. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி மாசறு காட்சி யவர்க்கு.

எ - து.—தமது அறியாமையானது நீங்கி மற்று அளவு இறந்த

இன்பமானது பயக்கும்: யார்க்கு எனின் மெய்ப்பொருளை வேறு ஒன்று ஆகவும் வேறு ஒன்றினை மெய்ப்பொருள் ஆகவும் இங்ஙனம் மயங்கி நின்ற மயக்க நீங்கித் தெளிந்த உளளத்துக் குற்றம் அற்ற

நல்லறிவு உடையவர்க்கு எ - று.

இருள் நீங்கி என்பது அறியாமை நீங்கி என்றது. மருள் நீங்கி என்றது மயக்கம் நீங்கி என்றது. மாசறு காட்சி என்பது மாசு என்பது குற்றம். காட்சி என்பது அறிவு. (2)

3. பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு.

எ - து.—உலகத்து மக்களும் தேவரும் பிறவும் ஆகிய பிறப்பு என்பது ஒன்று உளது என்று கருதும் அறியாமை நீங்குமாறு உலகத்தோர் கல்லன ஆகக் கருதி வருகின்ற யாவையினும் தான் சிறந்து மற்றும் தன்னில் சிறந்தது பிறிது ஒன்று இன்மையான் அதுவே சிறப்பு உடைத்து என்று யறை நூல்களும் மற்றும் பிறவும் இவை முழுது உணர்ந்த எவரும எடுத்துச் சொல்லுகின்ற மெய்ப் பொருளினை இப்படிக் காண வல்லது யாது மற்று அதுவே அறிவு ஆவது எ - று.

பேதைமை என்பது அறியாமை.

4.

(3)

பொருளல் லவற்றைப் பொருளென் மருளானு மாணாப் பிறப்பு.

றுணரு

36. மெய்யுணர்தல்

13

எ - து.---கீழ்ச் சொன்னபடியே மெய்ப்பொருளைப் பொய்ப் பொருள் ஆகவும் பொய்ப்பொருளை மெய்ப்பொருள் ஆகவும் மயங்கு கின்ற மயக்கத்திலை வந்து உளது ஆம்: யாதோ எனில் ஒரு வகை யாலும் ஒரு மாட்சிமை இல்லாத பிறவியானது எ - று. (4)

5. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

எ - து.—உயர்ந்தோர் மெய்ப்பொருள் தெரிதற்கு விளங்கிய நூல்களைக் கசடு அறக் கற்று அதனுலே மெய்ப்பொருளைக் கண்டோர் எய்துவர்: யாதினை எனின் மறித்து இவ்வுலகத்து வந்து பிறக்க வேண்டாத நெறியினை: எனவே அதனை எய்துவர் எ - று.(5)

6.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எ - து.—உலகத்து யாதானும் ஒரு பொருள் உண்மை நிகழாது வேறுபாடு உடையது ஆயினும், அப்பொருளை மெய் என்று கருதாது மற்று அப்பொருளை உண்மைப் பொருள் ஆகக் காண வல்லது யாது? மற்று அதுவே ஒருவர்க்கு அறிவானது எ - று. (6)

7. ஓர்த்துள்ள முள்ள துணரி
ளொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

எ - து.—ஒருவனது உள்ளமானது ஒன்றை மற்றொன்றுகக் கருதி மயங்காது கீழ்ச் சொன்னபடியே ஓர்ந்து பார்த்து மற்று இஃது இறந்த தலைமைப்பாடு ஆக உள்ளதனை உள்ளும் ஆயின் பின்பு பெயர்த்து ஆராய வேண்டா பிறவியினை எ - று.

ஒருதலை என்பது இஃது இறந்த தலைப்பாடு.

(7) 8. ஐயத்து ணீங்கித் தெளிந்தார்க்கு

வையத்தின்

வான நணுமை யுடைத்து.

எ - து.—கீழ்ச் சொன்னபடியே உள்ளமானது ஓர்ந்து உணர்ந்த மெய்ப்பொருளை என்றும் இதன் தன்மை என்னை கொல் என்று உள்ள ஐயப்பாட்டினின்று நீங்கி மற்று அதனை அதுவே தெளிந்த பெரியோர்க்கு இவ்வையத்தின் நணுமை போல

ஆகத்
வான்

நணுமை உடைத்து எ - று.

(8) 9.

சார்புணர்ந்து சார்வு கெடவொழுகின்
சார்தரா சார்தரு நோய்.

மற்றழித்துச்

எ - து.—தனக்கு முத்திச் சார்வு ஆம் முதல்வனை அறிந்து பிறப்பிற்குக் காரணம் ஆகிய சார்வு கெடும்படி ஒழுகுவன் ஆயின் மறித்துச் சாரா சார்த்து வரும் பிறவி நோய்கள் எ - று.

சார்வு என்பது உடம்பு. சார்வு கெட என்பது யான் என்றும் எனது என்றும் பற்றி வருகின்ற சார்வு கேடு என்பது. (9)

10. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி ணுமங் கெடக்கெடு நோய்.

எ - து.--- மற்று இங்குச் சொன்ன மெய்யுணர்வினுல் மூக்குணங் களின் விகாரம் விரிவாய் மற்று யாவரையும் மயக்கி வருகின்ற அவா வும், சினமும், மோகமும் என்று சொல்லப்பட்ட இவை மூன்றினது டையரும் உட்படத் தன்கண் இல்லாதவாறு முன்னம். கெடவே இவற்றின் வழி உள ஆக ஒழுகின பிறப்பு என்னும் அனைத்து நோயும் கெடும் எ - று. (10)

இனிக் கீழ்ச்சொல்லிய காமம் முதலிய மூன்றினும் காமம் என் பது ஒன்றனை அவாவுதல் அன்றே: மற்று அஃது எய்தாக்கால் வரும் வெகுளியும், அதனது முதிர்ச்சிக்கண் தனது உள்ளம் மயங்கு மயக்கமும் என்னும் இவை இரண்டும் பிறவும் நிகழ்வது ஒன்றனைக் காமித்தல் என்னும் அவாவினுன் ஆதலால் கீழ்ச்சொன்ன மெய் யுணர்விற்குக் காரணம் ஆகிய விவேகம் என்னும் தெரிந்துணர்வினுன் முன்னம் அனைத்து இடருக்கும் காரணம் ஆகிய அவாவினை அறுக் கவே மற்ற மெய்யுணர்வு என்னுப் பேருணர்வு வந்து வெளிப்படும். ஆதலால் இவ்வுணர்வில்லோர்க்கும் இதனது நிகழ்ச்சிக்கு ஏதுவாக அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

37. அவாவறுத்தல்.

1.

அற்றவ ரென்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றூக வற்ற திலர்.

எ - று.—மற்று ஈண்டு உள்ள பொருள், மாடு, பெண்டிர், புதல்வர், சுற்றம், நட்டோர் முதல் ஆகிய அனைத்தினும் உள்ள அவா அற்றனர் என்று சான்றோரால் சொல்லப்படுபவர் யாரோ எனில், மற்று எப்பற்றுக்கும் காரணம் ஆகிய அவாவினை அற்றவரே ஆசை அற்றவர் ஆவார்: மற்றையார் துறவு மேற்கொண்டு அவா அறுதார் எ - று. (1)

2. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

எ - து.—அவாவினை ஒன்றின்கண் வளராது ஒன்றின்கண் தவிர .....செய்த வினை இறுதிக்கண் கெடும் என்பது கருதி மற்று அதனால் கேடு இல்லாத தேர்ச்சி ஆகிய தெளிவு உணர்வானது பின்பு ஒரு வருத்தம் இன்றித் தான் நினைந்தாங்கு வந்து எய்தும் எ - று.

37. அவாவறுத்தல்

15

ஆற்ற என்பது மிகவும் என்றது.
விசாரம் என்றது.

தவாவினை என்பது கெடாத

(2)

3. வேண்டாமை யன்ன விழுச்செல்வ
மீண்டில்லை
யாண்டு மதுவொப்ப தில்.

எ - து.—அவா என்னப்பட்டது யாது ஒன்றினையும் விரும் பாமை ஆகிய இதனை ஒப்பது ஓர் விழுமிய செல்வம் இவ்விடத்து இல்லை: அதுவேயும் அன்றி மற்றும் எவ்விடத்தும் அதனை ஒப்பது ஒன்றும் இல்லை எ - று. (3)

4. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

எ - து.—ஒருவன் மனத்தூய்மை என்று சொல்லப்படுவது யாதோ எனில், யாது ஒன்றின் மாட்டும் அவாவில்லாமையே. மற்று அவ்வவா ஆனது இல்லாமை தான் யாதினால் வருவது எனில் மெய்ம் மையை விரும்ப வந்து எய்தும் எ - று. (4)

5. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

எ - து.—இவ்வுலகின் கணத்தோடு பொருந்தி அதனை இறந்த பெரியோர்களையும் பொருள் கருதி வஞ்சிப்பதே சூழும் நெஞ்சில் அவா ஆனது: ஆதலால் இதனைப் பெரிதும் அஞ்சத் தகுவது ஒன்று ஆகவே விசாரியும்: எனவே அவாவினை என்றும் அணையற்க என்று பொருள் ஆப் என உணர்க எ - று (5)

6. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

எ - து.—இவ்வுலகத்து நல்வினைப் பயன்களை

அவாவிச் செய்

யும் இடத்து நல்லனவும் மற்று இது ஒழிந்த கொலை, களவு, கள், காமம், குறளை, பொய், வஞ்சனை முதலிய தீயனவும் ஆய் இங்ஙனம் வஞ்சிக்கின்றது எல்லா உயிர்க்கும் எக்காலமும் பிறிது ஒன்றினும் கேடு இல்லாத பிறவியை ஈனும் வித்து: எனவே இதனைக் கருதற்குக் காரணம் மற்று இஃது ஒன்றுமே: பிறிது இல்லை எ - து. (6)

7. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
தவாஅது மேன்மேல் வரும்.

எ - து.—அவாவின் தன்மை இஃது ஆகலால் மற்று இவ்வவா ஒன்றும் தமக்கு இல்லாதார் யாவர்? மற்று அவர்கட்கு இல்லை ஆதும் துன்பமானது: ஆகலால் அஃது உண்டாம் ஆயின் துன்பம் எஞ்ஞான்றும் கெடாதே மேன்மேலும் வந்து எய்தும் எ - று. (7)

8.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

ம - து.—ஒருவர்க்கு யாதானும் ஒன்றினையும் விரும்பும் இடத்துப் பிறவாமையே விரும்பல் ஆவது: இங்ஙனம் பிறவாமையை விரும்பும் இடத்து அவா எவ்வாறும் வருவது இல்லை: ஆதலால் அவாவினை விரும்பாது ஒழியின் பிறவாமை ஆகிய முத்தி தானே விரும்பி வந்து எய்தும் எ - று. (8)

9. இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

எ - து.—வீட்டு இன்பம் ஆகிய முத்தி இடையறாது நிரம்புவது ஆம்: அது யார்க்கோ எனில் எனைத்து வகைப்பட்ட துன்பங்கள் எல்லாவற்றினுள்ளும் மிகக் கொடியது ஆகிய அவா என்னும் பெரிய துன்பத்துள் துன்பம் கெடின் எ - று.

அவா ஆனது தானும் துன்பத்தைச் செய்து எல்லாத் துன்பத்திற்கும் காரணம் ஆதலால் துன்பத்துட்டுன்பம் என்றார். (9)

10. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

எ - து.—ஒன்றினாலும் நிரம்பாத் தன்மையுடைய ஆசையை நீக்க வல்லன் ஆயின் மற்று அப்பொழுதே எஞ்ஞான்றும் இடை பெயராத ஒருபடி பட்ட முத்தியின் இயல்பினைத் தரும் எ - று. (10)

தவத்து நெறியால் பற்று அறுக்க வேண்டி ஒருப்பட்ட தாரந் தோர்க்கும் மற்று அல்லாதார்க்கும் முன் சென்று அமைந்த இரு வினைகள் நீக்க முடியாமை.....தனவே ஆயினும் இது பற்றித் தாம் மேற்கொண்ட நற்குண ..... . களின் வழுவா நிற்கத் தகா .... கின்றது மேலை அதிகாரம்.

38. ஊழ்.

1. ஆகூழாற் றோன்று மசைவின்மை
போகூழாற் றோன்று மடி.

கைப்பொருள்

எ - து.—உலகத்து யாவர்க்கும் பேனின்ற முறைமை ஆகுவது ஓர் - ஆகூழினல் அவர் அவர் நெஞ்சின்கண் தோன்றும் யாது ஒரு வினையில் அதற்கு ஏற்ற மடியின்மை : இனி இவ்வாறு அன்றித் தம் மிடத்து எய்திய பொருளும் நீங்கிப் போகுவது ஓர் போகூழினல் அவர் அவர் நெஞ்சில் தோன்றும் மடியானது எ - று.

அசைவின்மை என்றது மடியின்மை. (1)

2.

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

எ - து.—தமது ஊழினல் வந்து எய்தற்

பாங்கானவை பல பல

நகாவும் வந்து ஊட்டாவாய்க் கழியும் ஊழ் உளது ஆயின்; மற்று இதனல் இங்ஙனம் நறப்பார் ஆவார் மற்றுத் தாம் உறுதல் தன்மைய ஆகிய ஊழ் ஆனவை நகர்வியாது ஒழியும் ஆயின் எ - று.

துப்புரவு என்பது நகர்வு. உறற்பால என்பது..... (2) 3. வகுத்தார் வகுத்த வகையல்லாற் கோடி

தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

எ - து.—அதனல் முன்னம் செய்தார் செய்த வினை வகையால்

துய்த்தல் அல்லது மற்றுக் கோடி பொருள் ஈட்டினர்க்கும் அது கொண்டு துய்த்தல் அரிது: எனவே அங்ஙனம் ஈட்டுதற்கு உரிய தானம் முதலிய நல்வினை முன் செய்து மற்று அது கொண்டு தான் நகர்தற்கு வேண்டும் நல்வினை முன்னம் செய்யாரேல் ஈட்டினரேயானும் குறைவறத் துய்த்தல் அரிது எ - று (3)

4. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த
னுண்மை யறிவே மிகும்.

எ - து.—நன்னெறி பெறுதற்குக் காரணம் ஆகிய ஞானத்தைத் தரும் நுண்ணிய நூல்கள் பலவற்றையும் கற்றாரே ஆயினும், அவ்வளவே தமது ஊழாய் மற்று அதன் பயன் எய்துதற்கு ஓர் ஊழ் முன்னம் இல்லை எனில், பின்னும் தன் உண்மை அறிவே மிகும்: இந்நெறி அறிதல் அன்றிப் பின்னும் தான் அனுபவித்தற்கு அரிய முறைவழி அறிவே மிக்குச் செல்லும்: மற்று இவ்வறிவு எய்தாது என்பது பொருள் ஆயிற்று எ - று. (4)

5. பேதைப் படுக்கு மிழவு ழறிவகற்று

மாகலூ ழுற்றக் கடை.

எ - து.—எய்திய ஆக்கமும் இழத்தற்கு எல்லை ஆகிய இழவுழ் வந்து எய்தும் எனில், மற்று அவ்வுழ் இழத்தற்கு எய்ந்த பேதைமை உளது ஆக்கும்; இனி அவ்வாறு அன்றி ஆகலுழ் வந்துற்ற இடத்தால் எய்ந்த முயற்சிக்கண் இயல்பு ஆவது ஓர் அறிவு இடம் படுத்தும்: எனவே துறவு அறிவும் பிற அறிவும் அவர் அவர் உள்ளத்து நிகழ்வது: அவை அவற்றுக்கு அமைந்த விதியானே என்பது பொருள் எ - று.

. படுக்கும் என்பது உளது ஆக்கும் என்றது. அறிவகற்றும் என்பது இடம் படுத்தும் என்றது. (5)

. 8

6.

நன்ழுங்கா னல்லவாக் காண்பவ ரன்ழுங்கா லல்லற் படுவ தெவன்.

எ - து.—கல்வியி யானே தமக்கு நன்று ஆம் காலத்து அங்ஙனம் நல்லன ஆகக் கண்டு வருகின்றவர், மற்று ஏனை ஊழானே தன்மை அல்ல ஆம் காலத்து அல்லல் உழப்பது என்னை? எனவே

இங்ஙனம் வரும் அல்லலும் அப்பொழுதைக்கு அது ஒன்று வந்து உதவாது என்பது பொருள் எ - று.

அல்லது பிரிது

(6) 7. நல்லவை யெல்லாந்

தீயவாந் தீயவு

நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

எ - து.—முன் ஓர் ஊழினால் வந்திற்ற நல்லவை ஆகிய செல்வம் எல்லாம் கீழ்ச் சுடுமாறுத் தீயன ஆய் அங்ஙனம் செய்வது ஓர் வித்திக்கு : மற்று இனித் தீயன ஆகிய எல்லாம் மேல் சுடுமாறியவாறே நல்லன ஆகிய செல்வம் வந்து உளது ஆம் : மற்று இங்ஙனம் தாம் முன்னம் செய்த செயற்குத் தக்காங்கு எ - று. (7)

8. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

எ - து.—இரண்டு கூறு பட்டு இருக்கும் உலகத்தார் ஊழ் ஆம் இயற்கை : எங்ஙனம் எனில் செல்வம் உண்டாதலும் ஒரு கல்லாழின் கூறு : கல்வியால் தெளிந்த நல்லறிவு உடையர் ஆகலும் மற்று ஒரு கல்வித்திக்கு அமைந்த கூறு : எனவே முன்னமே இல்லறத்..... ஆல் துறவறம் இயற்றிய வழித் தெளிந்த நல்லறிவுடைய ஞானத்தர் ஆகலும் என இங்ஙனம் இரண்டு கூறுபடும் என்பது. (8)

9. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

எ - து.—தாம் செல்வத்தைப் பெரிதும் காதலிப்பினும் தமக்கு உள்ளவர்க்கு ஆகா ஆம்: யாவை எனில் அதற்கு எய்ந்த ஊழ் உடைய அல்லாதன: மற்று இவ்வாறு அன்றி அகத்து இருந்த பொருளையும் புறத்துக் கொண்டு சென்று கொடுப்பினும் போகா: ஒருவாற்றால் புகுந்து எய்தும் மற்று அவ்வினியால் தம் உடையன ஆதற்கு உரிய பொருள எ - று. (9)

10. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

எ - து.—உலகத்து யாவர்க்கும் அவர் அவர் ஊழிற் சிறந்த பெருவலி உடையன யாவை உள! எனவே யாவும் இல்லை எனில்,

தமக்கு விதியினால் வருவது ஒழியத் தம் அவாவினால் வேறு ஒன்று வாக் கருதினும் அஃது இறந்து மற்று அவ்வினியினால் வருவது தானே வந்து முன்னுற்று நிற்கும் ஆதலால் எ - று. (10)

அறத்துப் பால் முற்றும்.

இனி இவ்வாறு முடிந்த அறத்துப் பாலின் பொருள் குறிப்பு ஆவது: தாம் எடுத்துக் கொண்ட தொடர்பின் தொகுதி இனிது முடிதற்கு வணங்கி வாழ்த்திய கடவுள் வாழ்த்தும், கடல் உலகு உய்தற்குக் காரணம் ஆகிய கால மழையும், நிகழ் புயல் பருவத்து எய்துவது ஆகிய நீத்தார் பெருமையும், அது பின் வருதற்கு முன உறுப்பு ஆகிய அறன் வலியுறுத்தலும், ஈங்கு இவை பயிற்றும் இயல் பின் ஒன்றனது இல்லறத்து இயல்பு அஞ்ச வர்க்கமும், முத்தியும் தருதற்கு இயைந்த துறவறத்து இயல்பு விளங்கிய துறவின் விளைப் பயன் ஆகிய மெய்யுணர்வு என்னும் வீட்டின்பமும், அவ்வுணர்வு எய்தற்கு இடையூறு ஆகும் அவாவினை யறுத்தலும், ஒருங்கு அவ் வாறு அறுத்தோர்க்கும் பிறர்க்கும் வந்து ஊட்டும் உறுதிகொள் ஊழும் வள்ளுவக் கடவுள் வகுத்து அமைத்து உரைத்த எள்ளறு சிறப்பின் அறத்துப் பால் முற்றும்.

வெண்பா.

பாலாகும் வேதப் பயனாகும் பாயிரான்
கேலாகே ளில்லறமு நாலிந்தா — மேலாந்
துறவுபதின் மூன்று தொடர்ந்தாழொன் றென்ப
வறிவுநெறி யாய்ந்துடையார் தாம்.

குருபாதம் துணை. அறம் மறவற்க.

இனி மற்று இங்ஙனம் கூறிய அறத்துப் பால் தனக்கும் ஆகல் அறம் ஆவது இல்லறம் அன்றே. மற்று இவ்வில்லறம் இயற்று தற்கே அருத்தி யாது எனில்,

ஆதியி லறனு லாய்ந்தெடுத் துரைத்த
நீதியின் வழாஅ நெடும்பொரு ளாகலி
னருட்பா லினையந்த வறத்துப்பா லதன்பின்
பொருட்பால் வள்ளுவன் புகன்றனன் புவிக்கு.

பிள்ளை பட்டமுடையா பிள்ளை அவர்களுக்குத் திருவள்ளுவரில் அறத்துப் பால் எழுதி முகிந்தது.

நன்றுக. கணபதியே நம. குருபாதம்.
வடிவே துணை.

நன்றுக

திருக்குறள் -
பொருட்பால்

பொருட்பால் அட்டவணை.

அதிகாரம்.

1. இறைமாட்சி ...
2. கல்வி ...
3. கல்லாமை ...
4. கேள்வி ...
5. அறிவுடைமை ...
6. குற்றங்கடிதல் ...
7. பெரியாரைத் துணைக்கோடல்
8. சிற்றினஞ்சேராமை ...
9. தெரிந்து செயல்வகை ...
10. வலியறிதல் ...

11. காலமறிதல் ...
12. இடனறிதல் ..
13. தெரிந்து தெளிதல் ...
14. தெரிந்து வினையாடல் ...
15. சுற்றந்தழால் ...
16. பொச்சாவாமை ...
17. செங்கோன்மை ...
18. கொடுங்கோன்மை ...
19. வெருவந்த செய்யாமை ...
20. கண்ணோட்டம் ...
21. ஒற்றுடல் ...
22. ஊக்கமுடைமை ...
23. மடியின்மை ...
24. ஆள்வினையுடைமை ...
25. இடுக்கணழியாமை ...
26. அமைச்சு ...

		பக்கம்.
27.	சொல்வன்மை ...	1
28.	வினைத்தூய்மை ...	7
29.	வினைத்திட்பம் ...	11
30.	வினை செயல்வகை ...	15
31.	தூது	19
32.	மன்னைச் சேர்ந்தொழுகல்	23
33.	குறிப்பறிதல் ...	27
		31
		35
		39
		43
		47

... 51
.. 56
... 60
... 65
... 69
... 74
... 78
... 82
... 87
... 92
... 96
... 100
... 104
... 108
... 113
... 117
... 121
... 125
... 131
... 135
... 139

அதிகாரம்.

34. அவையறிதல் ...
35. அவையஞ்சாமை ...
36. நாடு ... ...

37. அரண் ... ...
38. பொருள் செயல்வகை ...
39. படைமாட்சி ...
40. படைச்செருக்கு ...
41. நட்பு ... ...
42. நட்பு ஆராய்தல் ...
43. பழமை ...
44. தீநட்பு ... ...
45. கூடா நட்பு ...
46. பேதைமை ...

47. புல்லறிவாண்மை ...
48. இகல் ... ...
49. பகைமாட்சி ...
50. பகைத்திறந் தெரிதல் ...
51. உட்பகை ...
52. பெரியார்ப் பிழையாமை ...
53. பெண்வழிச்சேறல் ...
54. வரைவின் மகளிர் ...
55. கள்ளுண்ணாமை ...
56. சூது ... ...
57. மருந்து ...
58. குடிமை ...
59. மானம்... ...
60. பெருமை ...
61. சான்றாண்மை ...
62. பண்புடைமை ...
63. நன்றியில் செல்வம் ...

64.	நாணுடைமை	...	145
65.	குடி செயல்வகை	...	149
66.	உழவு ...	...	153
67.	நல்குரவு	...	159
68.	இரவு ...	...	162
69.	இரவச்சம்	...	166
70.	கயமை ...	...	170
		...	174
		...	178

... 182
... 186
... 190
... 194
... 198
... 202
... 206
... 210
... 215
... 219
... 223
... 228
... 232
... 236
... 241
... 245
... 250
... 254
... 258
... 262
... 267
... 271
... 275

... 279
... 284
... 288
... 293
... 297

கடவுள் துணை.

திருக்குறள்.

பொருட்பால்.

காலிங்கர் உரை : பரிப்பெருமாள் உரை.

1. இறைமாட்சி.

காலிங்கர் உரைத்தோடக்கம்.

இப்பால் பொருட்.....கெல்லா மலிவுற கடாத்து..... மவ்வரசர் செய்பொருள் முதலாகக்கொ.....மைப்பதன்பொருட்டாக மற்று இவை அனைத்திற்கும் மன்னவர் மாட்சிமை முற்பட வேண்டும் முறைமை நோக்கி, இறைமாட்சி அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

பரிப்பெருமாள் உரைத்தோடக்கம்.

பொருட்பாலாவது பொருளின் பகுதி என்று கொள்ளப்படும். பொருள் என்றது மக்களை உடைத்தாகிய நிலம்; பகுதியாவது அந் நிலத்தை ஆளுதற்குரிய அரசது தன்மையும், அவர் ஆளுதற்குச் செய்யும் திறன்களும், அதற்குத் துணையான அமர்த்தியர் இலக்கண மும், அவர் செய்யும் திறன்களும், அவ்விருவராலும் உண்டாக்கப் பட்ட நாடும், ஆணும், பொருளும், படையும் ஆகிய இவற்றினது திறன்களும், அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றற்கும் துணை யாகிய நட்பினது திறன்களும், அவ்வாறு உண்டாகிய பொருட்கும், பொருளுடையார்க்கும் கேடுவரும் திறன்களும், அந்நிலத்து உண் டான மக்களது இயல்பும், அவர் பொருள் செய்யுமாறும் கூறுதல். இவையெல்லாம் அரசியலும், அமைச்சியலும், பொருளியலும், நட் பியலும், துன்பவியலும், குடியியலும் என அடங்கும். படையியல், ஆணியல் என வகுத்தார் உளரால் எனின், அவையெல்லாம் ஒருவ னால் ஆக்கப்படும் பொருள் ஆகலின், பொருளியல் என அடங்கும். துன்ப வியல் என்றது எற்றுக்கு? அதனையும் நட்பியலுள் அடக்கினர் உளரால் எனின், அவையெல்லாம் நட்கப்படாது என்னும் கருத்தி னால் கூறினார்கள் ஆயினும், அவற்றினிடைக் கிடந்த பேதைமை, புல்லறிவாண்மை என்னும் அதிகாரங்கள் நட்கப்படாததும், நட்கப் படுவதும் அன்றி, ஒருவற்குத் துன்பத்திற்குக் காரணம் ஆம் என்று கூறுதலால், துன்ப வியல் என வேண்டு மென்க. இதனுள் இறை மாட்சி முதலாக இடுக்கண் அழியாமை ஈறாகக் கூறிய அதிகாரங்கள்

இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரித்து ஆகலின் அரசியல் என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை ஈறாகக் கூறிய அதிகாரங்கள் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரித்து ஆகலின் அமைச்சியல் என்றும், நாடு முதலாகப் படைச் செருக்கு ஈறாகக் கூறிய அதிகாரங்கள் ஐந்தும் பொருள் ஆதலின் பொருளியல் என்றும், நட்பு முதலாகக் கூடா நட்பு ஈறாகக் கூறிய அதிகாரங்கள் ஐந்தும் நட்பின் பகுதிய ஆதலின் நட்பியல் என்றும், பேதைமை முதலாக மருந்து ஈறாகக் கூறிய அதிகாரங்கள் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணம் ஆதலின் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமை ஈறாகக் கூறிய அதிகாரங்கள் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியல் என்றும், ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரங்கள் எழுபதும் ஆறு பகுதியாயிற்று.

அவற்றுள் அரசியலாவது அரசர் செய்யும் திறன் கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினரெனில், அது கூறிய அதிகாரம் இருபத்தைந்தினும் முற்பட அரசரான் உண்டாக்க வேண்டும் பொருளும்

அவர்க்கு இன்றியமையா.....

இறைமாட்சியாவது இறைவனது தன்மை கூறுதல். இவ்வதி

காரத்துள் உரைக்கின்ற பொருள் அரசனை நோக்கிற்று ஆகலானும், அரசன் மக்களிற் சிறந்தான் ஆகலானும், இவ்வதிகாரம் முன் கூறப்

பட்டது.

கா. 1.

ப. 1

படைகுடி கூழமைச்சு நட்பர ணரண்

முடையா னரசருள் வேறு.

(காலிங்கர் உரை) என்பது.—படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்னும் இவ்வாறு உறுப்பினையும் உடையான் அரசருள் ஏறு என்றவாறு.

இனி, அரசருள் ஏறு எனவே இவ்வுறுப்பாற் குறைபாடுடையார் அரசர் எனப்படுவார் ஆயினும் சிறப்புடையர் அல்லர் என்பதூஉம், அரசனையும் உறுப்பாகக் கொண்டு இவை ஆறினொடும் கூட்டி இராச்சியம் எல்லாம் ஒன்று ஆக்கி வடநூலார் கூறும் ஆற்றிற் சிறிது வேறுபடுத்து மாசனம் முதலாக நாட்டிற்கு இவ்வாறினையும் உறுப்பாக்கிக் கூறினர் என்பதூஉம் கொள்க. இனி, இங்குச்சொன்ன இறை முதலாகிய எழுவகைப் பொருளுமே இப்பொருட்பால் நடைப் பொருளென அறிக.

(பரிப்பெருமாள் உரை) என்பது.—படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்று சொல்லப்பட்ட ஆறு பொருளையும் உடையவன் அரசருள் ஏறு போல்வான் என்றவாறு.

1. இறைமாட்சி

3

ஈண்டுக் குடி என்றது குடி உள்ள நாடு. உண்டாக வேண்டுவன கூறிற்று.

இஃது அரசனுக்கு
(1)

கா. 2.

ப. 2.

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(கா - உ.) எ - து.—அஞ்சாமை என்பது தறுகண் ஆண்மை. ஈண்டு ஈகை என்பது கீழ்ச்சொன்ன இல்லறத்து இயல்பாகிய கொடைநெறிக்கு அடங்காது தனது பெரும் பொருட்கும் பெருந் தன்மைக்கும் ஏற்குமாறு மற்று அந்தணர் முதலாக இழிகுலத்தார் ஆகிய புலையர் ஈறாக அனைவர்க்கும் வாம்பற வழங்கும் வண்மை என அறிக. அறிவு என்பது மற்று இக்தகுதியும் அல்லதும் தெரிந்து உணரும் உணர்வு என்றவாறு. ஊக்கம் என்பது உள்ளமானது மேம்படக் கருதும் மேற்கோள் என்றவாறு. எஞ்சாமை என்பது ஒழியாமை என்றது; இவை நான்கும் எஞ்ஞான்றும் இடைவிடாது இருத்தலே அரசர்க்கு மாபு எ - று.

*(ப - உ.) எ - து.—அஞ்சாமையும் ஈகையும் அறிவுடைமையும் ஊக்கமுடைமையும் இந்நான்கு குணமும் ஒழியாமை வேந்தனுக்கு இயல்பு எ - று.

இவை நான்கும் இயற்கையாக வேண்டும் என்றது. (2)

கா. 3.

ப. 6.

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த

வகுத்தலும் வல்ல தரசு.

(கா - உ.) எ - து.—அரசு நெறி வழுவாமல் ஆறில் ஒன்றுகிய அறநெறிப் பொருளும், மற்று இங்ஙனம் வரும் வழி அறிந்து உள ஆக்குதலும், இங்ஙனம் கூடிய பொருளைச் சோர்வு படாமல் தமது ஆணையால் பாதுகாத்தலும், மற்று இங்ஙனம் காத்த பொருளை அகத் துளார்க்கும் புறத்துளார்க்கும் வகுக்கும் நெறி வழுவாமல் வகுத்த லும் செய்ய வல்லது யாது? மற்று அதுவே அரசு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் பெறுவழி முயறலும் அதனை அழி யாமல் ஈட்டலும் அதனைச் சோர்வு படாமற் காத்தலும் அதனை வேண்டுவனவற்றுக்கு வகுத்தலும் வல்லவன் அரசன் ஆவான் எ - று.

---

*(கா - உ.)—'காலிங்கர் உரை' என்றும், (ப - உ.)—'பரிப்பெருமாள் உரை' என்றும் படித்துக்கொள்க.

*எ - து.—இதனை 'என்பது' என்றும், எ - று.—இதனை 'என்றவாறு' என்றும் இனி வருமிடங்களிற் படித்துக்கொள்க.

4 திருக்குறள் - பொருட்பால்

வகுத்தலாவது யானை, குதிரை, படைக்குக் கொடுத்து அவை யிற்றை உண்டாக்குதலும், அரண் செய்யவும் படைக்கலன்கள் பண் ணுதல் முதலாயினவற்றுக்கும் கொடுத்தல். இவை எல்லாம் பண் டாரம் ஆதலின் ஒருபொருளைப் பலவாக வகுத்தல் என்றார். இது பண்டாரம் கூட்டுமாறு கூறிற்று. (3)

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று நீங்கா நிலனுள் பவர்க்கு

(கா - உ.) எ - து.—விரையும் கருமம் தாழாது இயற்றுகை யும், அருமறை முதலாதிய அறநீதி முடிவாக இங்ஙனம் தாம் கற்கத் தகும் அவற்றைக் கற்கும் கல்வியும், தாம் செய்யும் கருமத்து மனத் திட்பமும், இம்மூன்றும் ஒழியாது செலுத்தும் அதுவே மண் ஆளும் வேந்தர்க்கு இயல்பு எ - று.

(ப - உ.) எ - து.—மடியின்மையும், கல்வியுடைமையும், ஒரு பொருளை ஆராய்ந்து துணிதலுடைமையும் என்று சொல்லப்பட்ட மூன்றும் நிலன் ஆள்வார் தமக்கு நீங்கா ஆதல் வேண்டும் எ - று.

இது முதலாகச் செயற்கைக் குணம் கூறுகின்றார். உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்கக் காணது உண்மை ஆராய்ந்து துணிதல் ஒருதலையாக நிலன் ஆள்பவர்க்கு வேண்டும் என் பதனையும், அதுதான் கல்வியான் அல்லது ஆராய்தல் அரிது ஆகலா னும், அக்கல்வி மடியின்மையான் அல்லது வாராது ஆகலானும், சிறப்பு நோக்கி முற்பட இம்முறையே கூறினர். (4)

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல
னல்லனேன்

மீக்கூறு மன்ன னிலம்.

(கா - உ.) எ - து.—வேண்டுனர் வேண்டுழிக் காட்சிக்கு எளி யனுமாய், மாபுடைய மக்கட்கு இன்சொலாளனும் ஆவானுகின் மற்று அம்மன்னனேயே இவ்வுலகத்து வாழ்வார் யாவரும் புகழ்ந் துரைபபார எ - று.

(ப - உ.) எ - து.—காண்டற்கு எளியனுமாய்க் கடுஞ்சொல் கூறுதலும் இலனாயின், அம்மன்னவனை உலகத்தார் உயர்த்துக் கூறு வர் எ - று.

இஃது உலகத்தார் மாட்டு ஒழுகும் நிறன் கூறிற்று. (5)

1. இறைமாட்சி

5

ப. 8.

இன்சொலா லீத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலாற் றூன்கண் டனைத்திவ் வுலகு.

(கா - உ.) எ - து.—தன்மாட்டு மாயின் வந்து எய்தும் மக்கள் யாவர்க்கும் கீழ்ச் சொன்ன முறை.....லேயுமன்றி மற்றுத் தன் நெஞ்சிலும் தண்ணளி செய்ய வல்ல அரசர்க்கு இங்ஙனம் சொல்லுகின்ற.....த்திலேதான்.....இவ்வுலகில் வாழ்வார் யாவரும் தன் வசத்து ஒழுகுவர் எ - று.

(ப - உ.) எ - து.—இனிய சொல்லோடே கொடுத்துத் தலையளி செய்ய வல்லவனுக்குத் தன் எவலானே தான் கண்டாற்போல உலகம் தன் வசத்தே கிடக்கும் எ - று.

தலையளியாவது வரிசை கொடுத்தல். அவ்வரிசை பெற்றவர் அரசனுக்கு நல்லர் ஆதலானே, தாம் இருந்த இடம் எல்லாம் அரசன் இருந்தாலைக் கொண்டு இராச காரியத்தைத் தப்பாமல் செய்வாராதலால் தான் கண்டால் ஒக்கும் என்றது. இஃது அமாத்தியர்க்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று. (6)

கா. 7.

ப. 9.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட் கிறையென்று வைக்கப் படும்.

(கா. - உ.) எ - து.—அளித்தலும் செறுத்தலும் ஆகிய செய்தியின் கூறுபாடு அறிந்து மற்று அவரவர்க்குத் தக்காங்குச் செய்யும் முறை வழுவாமல் செய்து, மற்று இங்ஙனம் காத்தலைப் புரியும் மன்னவன் யார்? அவன் உலகத்து மக்கள் யாவர்க்கும் இறையவன் என்று முன் வைத்து எண்ணப்படும் எ - று.

(ப - உ.) எ - து.—குற்றம் செய்தாரை அதற்குச் செய்யும் முறை தப்பாமல் செய்து எல்லா உயிரையும் காத்தல் செய்கின்ற மன்னவன் மக்களுக்கு நாயகன் என்று எண்ணப்படும் எ - று.

[Cf. முறையெனப் படுவது கண்ணோட்டம் கலி. நெய்.]

துயிர்வெளவல்—

(7)

கா. 8.

ப. 8.

அறனிழுக்கா தல்லவை நீக்கி

மறனிழுக்கா

மான முடைய தரசு.

(கா - உ.) எ - து.—அளித்தற்குத் தகுவது ஆகிய அறநெறிப் பொருளே வழுவாது செய்து அதற்குத் தகுவது ஆகிய அறம் அல்லனவற்றையும் கடிந்து மற்று இதற்கு ஏற்ற மறத்தினையும் வழுவாது எனை

அறநெறிப் பொருட்கு ஏற்ற மானத்தை உடையவன் யாவன்? மற்று அவனே அரசன் ஆவான் எ - று.

(ப - உ.) எ - து.—அறத்தினுல் தப்பாமல் ஒழுகி அறன் அல்லாத காமம், வெகுளி, மயக்கம் என்னும் இவை கடிந்து, மறத்திற்

றப்பாத மானத்தினையும் உடையவன் அரசன்

ஆவான் எ - று.

மானமும் கடிய வேண்டுதலின் மறத்திற் றப்பாத மானம் வேண்டும் என்றார். இஃது ஒழுக்கமும் நிலைமையும் வேண்டும் என்றது. (8)

கா. 9.

ப. 7.

கொடையளி செங்கோல் குடியோம்ப னென்கு முடையானும் வேந்தர்க் கொளி.

(கா - உ.) எ - து —அனைவர்க்கும் பொருள் வழங்கும் கை வணக்கமும், அளிக்கத் தகுவார் மாட்டு நிகழும் தண்ணளியும், அவரவர் குற்றமும் குணமும் தெரிந்து நடாத்தும் செங்கோலும், தனது குடைநிழற்கீழ் வாழும் குடிகளைப் பாதுகாக்கும் குறிக்கோளும் என்று சொல்லப்பட்ட இந்நான்கும் உடையவன் யாவன்? மற்று அவனே அரசர்க்கு எல்லாம் அருக்கன் எ - று.

(ப - உ.) எ - து.—கொடுத்தலும், தலையளி செய்தலும், செங்கோன்மையும், குடிகளை ஓம்புதலும் என்று சொல்லுகின்ற நான்கினையும் உடையவன் வேந்தர்க்கு எல்லாம் விளக்கு ஆம் எ - று.

கொடுத்தலாவது தளர்ந்த குடிக்கு பிறையும் எரு முதலியனவும் கொடுத்தல். அளித்தலாவது அவரைக் கொள்ளும் கடமையைத் தளர்ச்சி பார்த்து இட்டுவைத்துப் பின்பு முதல் உண்டானால் கோடல். செங்கோன்மையாவது கொள்ளும் முறைமை ஒழியக் கொள்ளாமை. குடி ஓம்பலாவது - தளர்ந்த குடிக்கு இறையை இழிப்பித்தல். இது குடிக்கு அரசன் செய்யும் நிறன் கூறிற்று. (9)

கா. 10. **ப. 10.**

செவிகைப்பச் சொற்பொறுக்தும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(கா - உ.) எ - து.—நெறி அல்ல செய்வோர் ஆகிய மறமக்களும், கொடுங்கோன்மை செய்வோர் ஆகிய மற மன்னரும், தனது செவிகைப்பச் சொல்லுவன எல்லாம் வரையாது பொறுத்து ஒழுகும் மாபுடை மன்னவன் யாவன்? மற்று அவனது குடைநிழற்கீழ்த் தங்கும் இவ்வுலகு. எனவே இவ்வுலகில் வாழும் உயிரெல்லாம் ஒரு வெம்மையுறாது மற்றவன் தண்ணளி நிழற்கீழ் நிலைபெறும் என்பது பொருள் எ - று.

2. கல்வி 7

இதனால் மற்று அவனது பொறை முனிவரைப்போல் அன்று: மற்று அஃது எங்ஙனமோ எனின், அப்பொழுதைக்கு வரையாது நின்று, அதனை ஓர்ந்து உணர்ந்து பின் செறுப்போரைச் செறுத்தும் பொறுப்போரைப் பொறுத்தும் இங்ஙனம் ஒழுகுதலே ஆ(சி)ரியர் கருத்து என்றவாறு.

(ப - உ.) எ - து.—தன் செவி வெறுக்கும் படியாகப் பிறர் செய்த குற்றங்களைக் கேட்டு வைத்தும் அதனைப் பொறுக்க வல்ல குணமுடைய வேந்தனது குடைநிழற்கீழே இடக்கும் உலகு எ - று.

வேறு ஒரு நிழல் தேடாது என்று ஆயிற்று. இஃது அமாத்தியர் குற்றம் செய்தார் என்று பலரும் சொல்லுங்கால், பலவாற்றானும் பொறுக்க வேண்டும் என்றது. அன்றியும் மந்திரி, புரோகிதர் அடர்த்துச் சொல்லும் சொற்களைப் பொறுக்க வேண்டும் என்பாரும் உளர். (10)

(கா - உ.) இனி மற்று அரசியல் பொருளிற் சிறந்த செல்வமாவது கல்விச் செல்வம் ஆகலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

2. கல்வி.

(ப - உ.) கல்வியாவது கல்வி ஆமாறும் அதனன் ஆகிய பயனும் கூறுதல். இது முதலாகப் பொருள் வரவு இயற்றும் திறன் கூறுகின்றார் ஆதலின், அஃது இயற்றுங்கால் கல்வி மூந்தற வேண்டுமென்று இதனுற் கூறப்பட்டது.

கா. 1. ப. 5.

**ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.**

(கா - உ.) எ - து.—ஒரு பிறப்பின்கண் கல்வழிக்கு உரிய கல்விகளைத் தன் நெஞ்சத்து ஒருப்பாடுடனே தான் கற்ற கல்வியானது, அங்ஙனம் கற்ற இணையிறந்த இறைவற்கு, இம்மைக்கண் உளது ஆம் நீதிப்பொருள் ஆகிய இன்ப உறுதியே அன்றிப் பின்பு நிகழும் மறுமை ஆகிய இனிய சேம உறுதியை உடைத்து எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவற்கு ஒரு பிறப்பிற் கற்ற கல்விதானே எழு பிறப்பின் கண்ணும் காவல் ஆதலை யுடைத்து எ - று.

கற்ற கல்விதான் என்று கூட்டுக. இது நன்னெறிக்கண் உய்க்கும் என்றது.

வாசனை தொடர்ந்து

(1)

கா. 2.

ப. 10.

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றூர்
கடையரே கல்லா தவர்.

(கா - உ.) எ - து.—கற்றார்முன் சென்று கல்லாதார் கற்கும் இடத்துச் செல்வம் உடையார் முன்சென்று வறியவர் எக்கற்று ஓடுங்கி ஒரு பொருளை விரும்புமாப்போல, விரும்பிக் கற்றார் ஆவர். மற்றுக் கடையர் என்பது புலமக்கள் உயர்ந்தோர் முன் ஒன்றினைச் சொல்லக் கூசுமாப்போலக் கல்லாதார் ஆகிய கடுவினையாளரும் கற்றார்முன் சொல்லத் தாமே கூசுவார் எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் உடையார் முன்பு பொருள் இல்லாதார் நிற்குமாறு போலத் தாழ்ந்தும் கற்றாரிடத்தர் ஆவர் கல்லாதவர் எ - று.

இது எல்லாரினும் தலைவனும் என்றது.

(2)

கா. 3.

ப. 3.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(கா - உ.) எ - து.—கண்ணுடையர் என்று எடுத்து எத்திச் சொல்லப்படுவார் கற்றவரே. இனிக் கல்லாதவர் முகத்து இரண்டு புண்ணுடையர் அல்லது, மற்று யாது ஒன்றினையும் பழுது அறக்

காண்பது ஓர் கண்ணுடையர் அல்லர்; மற்று அஃது எப்படியோ எனின், கண் முதலாகிய ஐம்புலன்களும் தத்தம் பொருள்..... கண்ணினுல் அவற்று உண்மைத் தன்மையையும் அளவிறந்த வீடு ஆகிய நுண்பொருளையும் பழுது அறக்காண்பர்; மற்று அஃது இல்லார் புறத்தது ஆகிய முகத்தான்.....புண் கண்ணர் எ - று.

(ப - உ.) எ - து.—கண்ணுடையரென்று சொல்லப்படுவோர் கற்றோர்: கல்லாதார் முகத்திலே இரண்டு புண்ணுடையரென்று சொல்லப்படுவர் எ - று.

அறிவு கல்வியின்கண் ஆதலான் அக்கல்வி இல்லாதார்கண் ணுயிற்று. இது மேற்கூறிய அதனை வலியுறுத்திற்று.

புண்

(3)

கா. 4.

ப. 4.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(கா - உ.) எ - து.—ஒருவன் கல்லுதற்கு முயலும் முயற்சியானது (எவ்வளவைத்து) மற்று அவ்வளவைத்து ஆகி வந்து ஊறு நிற்கும் மணற் கேணியின் நீரானது; அதுபோல உலகத்துப் பண்

புடையோர்க்குத் தாம் கற்கும் கல்வி முயற்சியானது எவ்வளவைத்து மற்று அவ்வளவைத்தாக வந்து ஊறுநிற்கும் அக்கல்வியின் நிகழும் அறிவு எ - று.

(ப - உ.) எ - து.—அகழ்ந்த அளவு மணற்கேணி நீருண்டாம். அதுபோல மாந்தர்க்குக் கற்ற அளவும் அறிவு உண்டாம் எ - று.

இஃது அறிவுண்டா மென்றது,

(4) கா. 5.

ப. 2.

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(கா - உ.) எ - து.—எண்ணென்பது இருமை இன்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது. எழுத்து என்பது தாம் கற்கும் கல்விக்குத் துணையுறுப்பு ஆகிய எழுத்து ஒன்று ஆயிற்று. மற்று இவ்வாறு அன்றிக் கணக்கு நிலை ஆகிய சிற்றெண்ணும் பேரெண்ணும் நிறையெண்ணும் நிலவெண்ணும் பிறவும் ஆகிய முண்குறி எண் என்றும், மற்று இவற்றின் அறிகுறி எழுத்தாய் அடிப்படி வருகின்ற தொகை விரி எழுத்தும் இவை இரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.—எண்ணென்று சொல்லப்படுவனவும் ஒழிந்த எழுத்தென்று சொல்லப்படுவனவும் ஆகிய இவ்விரண்டு பொருளும் ஒருவுகின்கண் வாழும் உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர் அறிவார் எ - று.

மேற்பொதுப்படக் கூறிய கல்வி பலவற்றுள்ளும் இவை இரண்டும் சிறப்புடைத்து என்று கூறிற்று. உயிர் என்றது மக்களை, இவையறிவார் மக்கள் ஆதலின். (5)

கா. 6.

ப. 1.

கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(கா - உ.) எ - து.—முதற்சொன்ன எண்ணும் எழுத்தும் இவை இரண்டும் துணை உறுப்பாகக் கொண்டு தாம் கற்கும் அவற்றை மாசு அறக் கற்று உணர்க. இங்ஙனம் தெளியக் கற்றபின். கல்விக்

குத் தகும் ஒழுக்கத்தின் கண்ணே நிலைநிற்க எ - று.

(ப - உ.) எ - து.—கற்கப்படுவனவற்றை குற்றம் அறக் கற்க. கற்ற பின்பு அக்கல்விக்குத் தக ஒழுகுக எ - று.

கல்வி பல வகைத்து. அவை எல்லாவற்றுள்ளும் கற்கப்படுவனவற்றைக் கற்று அக்கல்வியிற் கூறினது தப்பாமற் செய்க. அது

கல்வியாற் பயன் என்றவாருயிற்று. இது கற்கவும் வேண்டும்: னைக் கடைப்பிடிக்கவும் வேண்டும் என்றது.

அதி
(6)

கா. 7.

ப. 9.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(கா - உ.) எ - து.—தாம் கசடு அறக்கற்று உணர்ந்த கல்வி யானது கொண்டு எவ்வாற்றானும் தாம் இன்புறுவது அல்லது தமக்கு உளதாய கல்வியைக் குறித்து உலகத்தார் யாவரும் தம்து உள்ளத் தால் பெரிதும் இன்புறக் கண்டு பின்னும் மேன்மேலும் அதனையே

வற்புறுத்தல் ஆசைப்படுவர் மாசு அறக் கற்ற

பெரியோர் எ - று.

(ப - உ.) எ - து.—தாம் இன்புறுதற்கு எதுவாகிய கல்வியை உலகம் இன்புறுதல் கண்டால் அதற்கு இன்புறுவர் கற்றறிந்தவர்கள்

எ - று.

அழுக்காறு செய்யாது இன்புறுதல்
கல்வியானே வருமென்றது.

அறமாதலின், அதுவும்

(7) கு.ா. 8.

ப. 8.

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித

லனைத்தே புலவர் தொழில்.

(கா - உ.) எ - து.—தாம் பிறர் ஒருவருடன் கூடுங்காலம் எல்லாம் தம்மை அவர் பெரிதும் உவக்குமாறு அவரிடத்துக் கூடி மற்று யாதானும் ஒருவழி வரையாது பிரிய வேண்டிற்று ஆயினும் மற்று அவர் தம்மை எப்பொழுதும் சிந்திக்குமாறு பிரிதல் அதுவே கல்வியாற் சிறந்த அறிவினை உடையோர் தொழில் எ - று.

(ப - உ.) எ - து.—உவக்குமாறு கூடி அவர் நினைக்குமாறு பிரிதல் போலே, கற்றூர் செய்யும் தொழிலும் ஆம் எ - று.

இன்பம் நுகரினும் வினைசெய்யினும் தமக்கும் பற் பயக்கச் செய்தல் கல்வியான் ஆம் என்றது.

பிறர்க்கும் இன்

(8) கா. 9.

ப. 7.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் கற்று உணர்ந்த பெரியோர்க்கு வேறு யாதானும் ஒருநாடும் யாதானும் ஒருரும் முன்னம் தாம் பயின்ற நிலம்போலத் தமது நாடும் தமது ஊரும் ஆம். அதனால்

3. கல்லாமை. 11

மக்கள் பண்பு உடையரான் ஒருவன் தனது யாக்கை இறந்துபடும் தூணையும் கல்லாது ஒழிகின்ற முறைமையா யிருக்கின்றதோ ஆசு ஆக்கும் யாவர்க்கும் எ - று.

(ப - உ.) எ - து.—யாதோரிடத்துச் செல்லினும் அதுவே தன்து நாடும் ஊரும் போலாம். ஆதலால் ஒருவன் சாந்துணையும் கல்லாது ஒழுகுதல் யாதினைக் கருதியோ எ - று.

இஃது எல்லாராதுங் கைக்கொள்ளப்படுவர் என்றது.

(9) கா. 10.

ப. 6.

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு மாடல்ல மற்றை யவை.

(கா - உ.) எ - து.—உலகத்துச் சிறந்தார் ஒருவர்க்கு எஞ் ஞான்றும் கேடு படாத விழுமிய செல்வம் யாதோ வெனிற் சிறந்த நூல்களைக் கற்கும் கல்வியே : அதனல் மற்றைப் பல செல்வ மெல் லாம் செல்வமென்று சொல்லப்படுவன அல்ல எ - று.

மாடு என்பது பொருள்.

(ப - உ.) எ - து.—ஒருவனுக்குக் கேடில்லாத சிரிய பொருளா வது கல்வி : மற்றவை எல்லாம் பொருள் அல்ல எ - று.

இஃது அழியாத செல்வம் கல்வி என்றது.

(10)

(கா - உ.) கல்வியாற் சிறந்த பெரியோரது பெருந்தன்மை இது வாகலான் மற்று இதன் பின்னரே கல்லாதாரது நிலைமை அறிவிக் கின்றது மேலை அதிகாரம்.

3. கல்லாமை.

(ப - உ.) கல்லாமையாவது கல்லாமையான் உளதாகும் குற்றம் கூறுதல் : மேற் கல்வி வேண்டு மென்றார், அஃது இல்லாதார்க்கு உள தாகும் குற்றம் என்னை என்றார்க்குக் கூறியது ஆகலான் அதன் பிற் கூறப்பட்டது.

கா. 1.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்.

ப. 1.

(கா - உ.) எ - து. —சூதுக் கருவிக்கு நிலையறிந்து இயற்றிய வையினுற் சதுரப்பட்ட பலகை யின்றி, வட்டுக் கொண்டு சூதாடிய தன்மை போலும், இவ்வாறு அனேகத்து வகைப்பட்ட நெறியினுலும் நிறைவுற்ற நூல்கள் யாதானும் ஒன்றினும் தமக்கு ஒரு முயற்சி

யின்றி வறிதே இவ்வாற்றுற் சிறந்த சான்றோருழைச் சென்று தாமும் கல்வி விஞ்தைம் கொள்ளக் கருதுகின்ற கருத்து எ - று.

(ப - உ.) எ - து.—அரங்கு அமைவின்றி வட்டாடிஞற்போலும்: நிரம்பிய நூல்களைக் கற்றலின்றி வார்த்தை சொல்லுதல் எ - று.

அரங்கு - கோட்டம். வட்டாடல் - உண்டை யுருட்டுதல். கோட்டி கொளல் - சொல் சொல்லுதல். *"புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி" என்றாற்போல. இலக்கணம் அறியாதான் வார்த்தை சொல்லிற் றப்பும் என்றது. (1)

கா. 2.
ப. 7.

நுண்மா ணுழைபுல மில்லா
னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

(கா - உ.) எ - து —நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டு எஃகு தலை யுடைத்தாயுள்ள ஞானத்தைத் தருவதாகிய நூலினைக் கற்றிலா தான் எழில்..... புனைந்த பாவையைப்போல உறுப்பு அழகு உண்டு உணர்வு இல்லை எ - று.

நுழைதல் என்பது எஃகுதல் : புலம் என்பது அறிவு.

(ப - உ.) எ - து.—நுண்ணிதாய் மாட்சிமைப்பட ஆராய்ச் சியையுடைய கல்வி இல்லாதான் அழகு மண்ணினுனே நன்றுகச் செய்த பாவையினது அழகை ஒக்கும் எ - று.

அறிவிற்கு மாட்சியாவது பொருளைக் கடிதிற் காண்டலும் மற வாமையும் முதலாயின. இஃது அழகியர் ஆயினும் மதிக்கப்படார் என்றது. (2)

கா. 3.

ப. 4.

கல்லாதா னெட்டம் கழியநன் ருயினுங் கொள்ளா ரறிவுடை யார்.

(கா - உ.) எ - து.—இடம்படு நூல்களை இனிதாகக் கற்றிலா தானது அறிவு மிகவும் நன்ருயினும் அதனை ஓரறிவாகக் கைக்கொள் ளார்: யாரெனிற் கல்வியாற் சிறந்த அறிவுடையோர் எ - று.

ஒட்பம் என்றது ஒள்ளிமை.

(ப - உ.) எ - து.—கல்லாதானது ஒண்மை மிகவும் நன்ரு யிருப்பினும், அதனை ஒண்மையாகக் கொள்ளார் அறிவுடையார் எ - று.

ஒண்மை - சாமர்த்தியம்; அறிவெனினு மமையும். இஃது ஒள் ளிய ராயினும் மதிக்கப்படா ரென்றது. (3)

---

*ரோலடியார் - மேன்மக்கள் - இ.

கா. 4.

ப. 3.

கல்லா தவரு நனிநல்லர் கற்றூர்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(கா - உ.) எ - து.—கசடற நூல்களைக் கற்றிலாதோரும் அறிவுறப் பெரிதும் கல்லர் என்று கொள்ளலாம் : எப்பொழுது எனின் மற்று அக்கசடறக் கற்ற மாசற்றூர் முன் தமது நாவுரை நடையைக் காட்டா திருக்கப்பெறின் எ - று. நனி என்பது மிகுதி.

(ப - உ) எ - து.—கல்லாதவரும் ஓரிடத்து மிகவும் நல்லர் ஆவார்கள், கற்றவர்கள் முன்பு உரையாடா திருக்கக் கூடுமாயின் எ - று.

சொல்லா தொழிய அறிவாரில்லை யாம் என்றவாறுயிற்று. கல்லாதார்க்கு உபாயம் இது என்றது. (4)

கா. 5.

ப. 8.

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

(க்ா - உ.) எ - து.—கல்லாதார் வெறும் பிணம் ஆதலன்றிச் சிறிது உயிரோடு நடைபெறுதலை யுடையரென்று சொல்லிக்கொள்ளும் அளவின்றி மற்று விதந்தது ஒன்று விளைதல் சிறப்பில்லாத களர்த் தரையே ஒப்பவர்க்குக் கல்வியினால் விளையும் மறுமை ஆக்கமுமில்லை எ - று.

(ப - உ.) எ - து.—உளர் என்னும் அளவினை யுடையார் அல்லது பயன் படாத களர் நிலத்தை யொப்பர் கல்லாதவர் எ - று.

இது பிறர்க்குப் பயன் படார் என்றது.

(5) கா. 6.

ப. 9.

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு.

(கா - உ.) எ - து.— கல்வியிற் சிறந்த நல்லறிவாளரிடத்து உள தான வறுமையினும் சால இன்னுதே கல்வியின் விளங்கு நல்லறிவில்லாதார் கைப்பட்ட செல்வமானது: அது கொண்டு தாம் இனிது நுகர்தலும் தம் சுற்றம் ஓம்பலும் நட்டோர்க்குப் பகுத்தலும் வறியவர்க்கு உதவலும் மற்றும் பிற நல்லறம் செய்தலும் என்னும் இவை முதலிய இனிய பயன் கோடலின்றிச் சிறிதே உண்டு வறிது உயிர் வாழும் தன்மையர் ஆகலாற் குற்றங்கள் பலவும் உடையர் எ - று.

(ப - உ.) எ - து.—கல்லார் மாட்டுண்டாகிய வறுமைபோலப் பிறர்க்கு இன்மையைச் செய்யும் கல்லாதார் மாட்டு உண்டாகிய செல்வமும் எ - று.

இது செல்வம் உண்டாயிற் பிறரைத் என்றது.

தன்புறுவிக்கும்
(6)

கா. 7.

ப. 5.

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(கா - உ.) எ - து.—உலகத்துக் கற்றிலா ஒருவன் தன்து செல்வத் தகைமையும் பிறவும் கொண்டு என்ன பயன்? மற்றுக் கற்று வல்ல சான்றோருழைச் சென்று தலைப்பட்டு உரையாடவே அவையனைத்தும் சோர்வு படும் எ - று.

(ப - உ.) எ - து.—கல்லாத ஒருவனது பெருமை கற்றவன் கிட்டி உரையாட மறையும் எ - று.

இது கல்லாதார்க்குப் பெருமை இல்லை என்றது. (7) கா. 8.

ப. 8.

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

(கா - உ.) எ - து.—கற்றிலாதான் மற்று அக்கற்றவர் முன்னர்த் தானும் சில சொல்லுதலைக் காதலித்தல் எத்தன்மைத்தோ எனில், முலையிரண்டும் முன்னமே தனக்கு இல்லாதாள் ஆகிய பேடியானவள் மற்று அம்முலை வனப்புறாஉம் திருவுடையாட்டியது பெண்மை கொண்டு இன்புறுதற்குத் தானும் காதலித்தல் அத்தன்மைத்து எ - று.

(ப - உ.) எ - து.—கல்வி இல்லாதான் சொல்லுதற்கு ஆசைப்படுதல் இரண்டு முலையும் இல்லாதாள் பெண்மைக்குக் காமுற்றாற் போலும் எ - று.

இது தன்னைசையல்லது பிறர்க்குப் பொருந்தாது 'சொன்னலும் விரும்புவா ரில்லை'—

என்றவாறு

(8) கா. 9.

ப. 6.

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங் கற்ரு ரனைத்திலர் பாடு.

4. கேள்வி 15

(கா - உ.) எ - து.—உலகத்துக் கல்லாதார் ஆகிய மக்கள் உயர்குடிப் பிறந்து ஒள்ளியர் ஆயினும், மற்றுக் கீழ்க்குடிப் பிறந்தும் கற்ருரைப் போல்வதோர் பெருந்தன்மை என்றும் இலர் எ - று.

(ப - உ.) எ - து.—உயர்ந்த குலத்திற் பிறந்தாராயினும் கல்வி இல்லாதார் இழிகுலத்துப் பிறந்த கற்ருரோடு ஒத்த பெருமை இலர் எ - று.

இது குலம் உடையராயினும் மதிக்கப்படார் என்றது. (9)

கா. 10.

ப. 10.

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல் கற்ருரோ டேனை யவர்.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்துப் பிறந்த விலங்குச் சாதிக்கும் மக்கட்கும் வேற்றுமை போல, விளங்கிய நூல்களைக் கற்றுணர்ந்த சான்றோரோடும் மற்றைக் கல்லாதாரோடும் வேற்றுமை உடைத்து

எ - று.

(ப - உ.) எ - து.—விலங்குச் சாதியோடும் மக்களோடும் உள்ள வேறுபாடு உடையர் : விளங்கின நூல்களைக் கற்றவர்களோடு கல்லாதவர் எ - று. இது கல்லாதவர் விலங்கு என்றது. (10)

(கா - உ.) இனி இங்ஙனம் கல்லாத மக்களும் மற்று என் செயற்பால தெனின், கற்றுணர்ந்த சான்றோருழைச் சென்று மற்று அவர் உரைக்கும் கல்வி நெறிப்பாட்டைப் பலநாளும் பயிலக் கேட்க ; மற்று இங்ஙனம் கேட்கவே இவரும் இனிய உணர்வினர் ஆவர் என்பதனால் மற்று இதன் பின்னரே அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

4. கேள்வி.

(ப - உ.) கேள்வியாவது கேள்வியினுன் ஆய பயன் கூறுதல். நூல்களைக் கற்க மாட்டாதார் அதனைக் கற்றார் மாட்டுக் கேட்டலும் அறிவுக்குக் காணமாம் என்பதனால் அதன்பிற் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1.

கற்கில னெயினுங் கேட்க வதுவொருவற்
கொற்கத்தி னூற்றூந் துணை.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்துள் ஒருவன் கற்கும் நெறியி னிற் கற்கப் பெற்றிலனாயினும் கற்றுணர்ந்த சான்றோருழைச் சென்று வழிப்பட்டுப் பயிலக்கேட்க.....வாய்பிறந்தோ

னுக்கு நாகினுட் சென்று விழாது மறுமை நெறிச் செல்லுதற்குப் பெரியதொரு துணை என்றவாறு. ஒற்கமென்றது நாகமென் றது.

பா - மீ. " அஃதொருவற்கு ".

(ப - உ.) எ - து.—கற்க மாட்டாதாயினும் கற்றோர் மாட்டே கேட்க; அக்கேள்வி ஒருவன் தளர்ச்சிக்கண் தாங்குவது ஒரு துணை யாம். இது கேள்வி வேண்டுமென்றது. (1)

கா. 2.

ப. 4.

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

(கா - உ). எ - து.—மற்று யாதானும் ஒருவழித் தமது கால் வழுக்குதலுடைய இடத்துத் தமது கையகத்து உற்றதோர் ஊன்று கோல் உதவியது எத்தன்மைத்து..... .....யே கல்வி ஒழுக் கத்தையுடைய சான்றோர் வாய்ப்பிறக்கும் சொற்கள் எ - று.— சொல் என்பது கேள்வி.

(ப - உ.) எ - து.—வழுக்குதல் உண்டாயின இடத்து உதவும் ஊன்று கோல் போலும் ஒழுக்க முடையார் கூறும் சொற்கள் எ - று.

இது கேட்பது ஒழுக்கமுடையார்

மாட்டென்பது கூறிற்று. (2) கா. 3.

ப. 10.

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்

றோட்கப் படாத செவி.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்துப் பயின்று வருகின்ற வழக்குச் சொல்லளவே யாண்டும் எப்பொழுதும் கேட்டு வரினும் மற்று எஞ்ஞான்றும் கேளாத்தகைமைப் பாட்டன : யாவை எனின், சான்றோருழைச் சென்று தாம் கேட்கும் கேள்வியாகின்ற கூரிய கடைக்கோலான் இரண்டாவது துளையிடப்படாத செவிகள் எ - று.

(ப - உ.) எ - து.—ஓசை மாத்திரம் கேட்டனவாயினும் அதுவும் கேளாத செவிபோலும், நல்லோர் கூறும் சொற்களாற் றுளைக்கப்படாத செவி எ - று.

இது கேள்வியில்லாதார் செவிடென்றது.

(3) கா. 4.

ப. 7.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

4. கல்லாமை

(கா - உ.) எ - து.—உலகத்துச் செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வம் யாதெனின், செவிச்செல்வம் ஆகலான், ஒருவன் கேட்பனவற்றுள் தனது செவியினுன் மறுமை ஆக்கம் இனிதுறக் கேட்கும் கேள்வியே தலைச்செல்வம் எ - று.

(ப - உ.) எ - து.—செல்வத்துள் வைத்துச் செல்வமாவது செவியுணர்வுடைமை யாகிய செல்வம்: பயன் படும் இடத்து மற்றுள்ள செல்வம் எல்லாவற்றினும் தலையாம் ஆதலான் எ - று. (1)

கா. 5.

ப. 5.

நுணங்கிய கேள்விய ரல்லார்

வணங்கிய

வாயின ராத லரிது.

(கா - உ.) எ - து.—கல்வியாற் சிறந்த சான்றோர் உரைக்கும் நுண்ணிய வாகிய கேள்வியை யுடையவர் அல்லது மற்று ஏனையோர்

பலரிடத்தும் தாழ்ந்த சொல்லின ராதல் பெரிதும்

அரிது எ - று.

நுணங்கிய என்பது நுண்ணிமை என்பது.

(ப - உ.) எ - து.—நுண்ணிதாகிய கேள்வியுடையர் அல்லாதார் தாழ்ந்த சொற்கூறும் நாவுடைய ராத லில்லை எ - று.

இது கேள்வி யுடைய ராயின் மிகை சொல்லா

மென்றது. (5) கா. 6.

ப. 6.

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்
தீண்டிய கேள்வி யவர். [துணர்ந்

(கா - உ.) எ - து.—இவ்வுலகின்கண் தப்பியும் குறிக்கொண்டும் இருவாற்றானும் பேதைமை நிகழும் சொற்களைச் சொல்லுவது இலர்: மற்று யாரோ எனின், யாம் சான்றோருழைச் சென்று நல்லன கேட்க வேண்டு மென்று கருதிக் கொண்டு பலராலும் கேட்டுத் தொக்க தொகையாக் கேள்வியை உடையவர் எ - று.

(ப - உ.) எ - து.—ஒரு பொருளைத் தப்ப உணர்ந்தாலும் அறியாமை யாயின சொல்லார்: ஆராய்ந்துணர்ந்த நிரம்பிய கேள்வியை உடையார் எ - று.

இது கேட்டறிந்தார் அறியாமை சொல்லார் என்றது. (6) கா. 7.

ப. 9.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

(கா - உ.) எ - து.—சான்றோரால் தம் செவியிற் சொல்லுவதாகிய கேள்விச் சுவையை நுகர்ந்தறியா மாந்தர் ஆகலான், வெறும்

வாயுணவினையே ஓர் உணவாக மதித்திருக்கின்றவர் மாய்ந்தால் வரும் சேதமும், இருந்தால் வரும் இலாபமும் என் உலகோர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.--செவியால் நுகரும் இன்பத்தை அறியாது வாயால் நுகரும் இன்பத்தை அறியும் மக்கள் செத்தால் வரும் தீமை யாது? வாழ்ந்தால் வரும் நன்மை யாது உலகத்தார்க்கு? எ - று.

இது கேள்வி யில்லாதார் பிறர்க்குப் பயன்படா சென்றது. (7)

கா. 8.

ப. 2.

செவிக்குணவில்லாத போழ்து சிறிது

•

வயிற்றுக்கு மீயப் படும்.

(கா - உ.) எ - து.—செவிக்கு அமுத மாகிய கேள்வி யுணர்வா னது சான்றோருரைக் கிடையாத போழ்திற்கண் சிறிதே வயிற்றுக் கும் உணவு அளிக்க அடுக்கும் எ - று.

(ப - உ) எ - து.—செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாத பொழுது வயிற்றுக்குச் சிறிது உணவு கொடுக்கத் தகும் எ - று.

சிறிது உணவு என்றார், பெருக உண்ணின் கேள்வியை விரும் பாது காம நுகர்ச்சியை விருப்பு மாதலான். மேற் கேள்வி வேண்டு மென்றார்: இஃது ஒருகால் கேட்டுவிட அமையுமோ என்று ஐயுற் றார்க்கு, எல்லாக் காலமும் கேட்க வேண்டுமென்று கூறப்பட்டது. (8)

கா. 9.

ப 8.

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னுன்றுரோ டொப்பர் நிலத்து.

(கா - உ.) எ - து.—இவ்வையகத்துத் தம் செவிக்கு அமுத மாகிய கேள்வியினை உடையார் யாரை ஒப்பாரெனின், அவியுணவினர் ஆகிய அமரோடு ஒப்பாகி ஈண்டு மக்களில் இவர்க்கு ஓர் நிகர் இல்லை

எ - று.

(ப - உ.) எ - து.—செவிக்கு உணவுபோன்ற கேள்வி உடையவர்கள் நிலத்தின் கண்ணே இருப்பினும் அவியை உணவாக

உடைய தேவரோடு ஒப்பர் எ - று.

இஃது எல்லாரானும் நன்கு மதிக்கப்

படுவதொன்றது. (9) கா. 10.

ப. 3.

எனைத்தானு நல்லவை கேட்க

வினைத்தானு

மான்ற பெருமை தரும்.

(கா - உ.) எ - து.—எவ்வளவைத்தேனும் சிறிது என்று இகழாது சான்றோருழைச் சென்று நல்லவற்றிலே சிலகேட்டுக் கொள்க.

அது சிறிதே யாயினும் ஒருவர்க்குப் பெரிய உபதேசமாய் முடியும் ஆகலான் அமைந்த பெருமைய ஆகிய முத்தியைக் கொடுக்கும்

எ - று.

(ப - உ.) எ - து.—யாது ஒன்று ஆயினும் கல்ல நூல்களைக் கேட்க: அக்கேள்வி அவ்வளவிற்றே ஆயினும் நிரம்பின பெருமையைத் தரும் எ - று.

இஃது எல்லாக் காலமும் கேட்டில ஆயினும் கேட்கும் காலத்து நல்லது கேட்க வேண்டும் என்றது. (10)

(கா - உ.) இனிமற்று உலகத்து ஆசர்க்கும் பிறர்க்கும் இக்கல்வியும் கேள்வியும் சிறந்த ஞானத்தைப் பயக்கும் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது பேலை அதிகாரம்.

5. அறிவுடைமை.

(ப - உ.) எ - து.—அறிவுடைமையாவது அறிவாவது இன்னது என்பதூஉம் அதனையை பயனும் கூறுதல். இது கல்வியும் கேள்வியும் உடையர் ஆயினும் கேட்ட பொருளை உள்ளவாறு அறிந்து உணர்தல் வேண்டுமாதலின் அதன்பிற் கூறப்பட்டது.

கா. 1. ப. 1.

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவில்லா
ரென்னுடைய ரேனு மிலர்.

(கா - உ.) எ - து.—கற்றும் கேட்டும் கசடு அற்ற அறிவுடையோரை மற்று எல்லாம் உடையரென்று உணரப்படும் ஆகலான் மற்று அங்ஙனம் தெளிந்த அறிவிலாதார் வேறு யாதானும்.....
.....

(ப - உ.) எ - து.—அறிவினை உடையார் யாதொன்றும் இலர் ஆயினும் எல்லாம் உடையர், அறிவில்லாதார் எல்லாப் பொருளும் உடையர் ஆயினும் இலர் எ - று.

ஆதலான் அறிவுடைமை வேண்டு மென்றது.

(1) கா. 2.

ப. 3.

உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங் கூம்பலு மில்ல தறிவு.

(கா - உ.) எ - து..... மலர்தலும் குவிதலும் என்னும் இரண்டும் இல்லது யாது: மற்று அதுவே அறிவாவது எ - று.

தழீஇயது என்பது பெரியவர்

தழுவியென்றது—ஒட்ப.....

(ப - உ.) எ - து.—ஒருவனுக்கு ஒள்ளிமை யாவது உலகத் தோடு பொருந்தினது. அதனை நீர்ப்பூப் போல மலர்தலும் குவிதலும் இன்றி ஒரு தன்மையாகச் செலுத்தல் அறிவாவது எ - று.

இஃது உயர்ந்தாரோடு நட்புப் பண்ணுதலும் அறிவு என்றது.(2)

கா. 3.

ப. 2.

எவ்வ துறைவ துலக முலகத்தோ டவ்வ துறைவ தறிவு.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்து நீதிப்பொருள் உடையர் ஆகிய நற்பெருங் குலத்தோர் எவ்வகையது ஆகிய நயத்தோடு ஒழுகுவது மற்று அவ்வகை.....யென்றும் குறிக்கொண்டு நடப்பதே அறிவாவது எ - று.

உலகம் என்பது உயர்ந்தோர்.

(ப - உ.) எ - து.—யாதொரு வாற்றான் ஒழுகும் உலகம்: அவரோடு சுடத் தானும் அவ்வாற்றான் ஒழுகுதல் அறிவாவது எ - று.

அறிவு என்பது எத்தன்மைத்து என்றார்க்கு முற்பட உயர்ந்தாரோடு பொருந்த ஒழுகுதல் அறிவு என்று கூறப்பட்டது. (3)

கா. 4.

ப. 4.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒருபொருளைக் கீழ்ச்சொன்ன தம்மரபின் உயர்ந்தோர் மாட்டுக் கேட்பினும் கேட்க : மற்று ஏனை இழிந்தோரிடத்துக் கேட்பினும் கேட்க : தாம் கேட்கின்ற பெரும் பொருளின்கண் சிறிதும் குல வேற்றுமை இல்லாமையான் அவர் உரைக்கும் பெரும்பொருளின் உண்மையைத் தெரியக் காண்பதும் மற்று ஏனைய சிறுபொருளை விரும்பாது விடுத்தலுமே அறிவினது இயல்பு எ - று.

(ப - உ.) எ - து.—யாதொரு பொருளை யாவர் சிலர் சொல்லக் கேட்பினும் அப்பொருளினது உண்மையை ஆராய்வதே அறிவாவது எ - று.

யாவர் சிலர் கட்டார் ஆயினும் பகைவர் ஆயினும் இது கேட்ட வாற்றால் தெளியாது ஆராய்ந்து துணிதல் அறிவு என்றது. (4)

5. அறிவுடைமை

21

கா. 5.

ப. 5.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தாம்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(கா - உ.) எ - து.—தாம் சொல்லும் சொல்லின் நுண்ணி மையை மற்று எப்பெற்றியோரும் நெஞ்சினுல் தேர்ந்து உணரும் பொருளாகவும் சொல்லி மற்று அதுவேயும் அன்றி அதனைக் கேட் போர் செவிக்குப் பெரிதும் இனிது ஆகவும் சொல்லிப் பின்னும் தாம் பிறர் வாய்ச்சொற்களில் தீர்ந்த நுண்ணிய பொருளையும் அங் ஙனம் காண வல்லது யாது ? மற்று அதுவே அறிவாவது எ - று.

(ப - உ.) எ - து.—அறிதற்கு அரிய பொருள ஆகிய சொற் களே எளிய பொருள ஆம்படி பிறர் இயையச் சொல்லிப் பிறர் சொல் லும் சொற்களின் நுண்ணியதாய பொருளை அவர் சொல்லுமாற் றுனே காண்பது அறிவாவது எ - று.

இது சொற்பொருள் காண்டல் அறிவு என்றது.

கா. 6.

ப. 8.

அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா ரஃதறி கல்லா தவர்.

(கா - உ.) எ - து.—உலகத்து அறிவுடையோர் என்று சொல் லத் தகுவார் யாரோ எனின், கீழ்ச்சொன்னவழி வேற்றுமைகள் எல்லாவாற்றுலும் தெரிந்து தமக்கு இருமை ஆக்கமும் ஆவதனை அறிந்து ஒழுகுவாரே : ஆதலால் அதனை அங்ஙனம் தெரிந்து அறிய வல்லாதார் யாவர்? மற்று அவரே பெரிதும் அறிவிலாதார் எ - று.

(ப - உ.) எ - து.—அறிவுடையார் ஆவார் பிற்பயக்குமது அறிவார் : அறிவில்லாதார் ஆவார் அதனை அறியாதார் எ - று.

மேற்சொல்லிச் சொல்லாதன எல்லாம் தொகுத்துக் கூறிற்று. இத்துணையும் அறிவு இலக்கணம் கூறப்பட்டது. (6)

கா. 7.

ப. 7.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(கா - உ.) எ - து.—கீழ்ச்சொன்ன இருவகை மாபின் புறத்தன எல்லாம் பெரிதும் அஞ்சத்தகும் அன்றே : மற்று அதனை அஞ்சாமை பேதைமை எனவே அதன்கண் சேறலே அறியாமையாவது. இனி அஞ்சத் தகுவதனைப் பெரிதும் அஞ்சுவது அறிவார் தொழில் என்னவே அதனிற் செல்லாது மாபிற் சேறலே அறிவுடையார்து செய்தி எ - று.

(ப - உ.) எ - து.—அஞ்சத் தகுவதனை அஞ்சாது ஒழிதல் ஒருவற்கு அறிவின்மையாவது. அஞ்சத்தகுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாவது எ - று.

மேல் அஞ்சாமை வேண்டுமென்றார்; ஆயினும் அஞ்சவேண்டுவனவற்றுக்கு அஞ்சுதல் அறிவு என்றார். (7)

கா. 8.

ப. 9.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

(கா - உ.) எ - து.—அரசர்க்கு ஆனை குதிரை தேர் காலாள் என்னும் நாற்பெரும் சிறையும் அரண் அன்று : தமக்கு இங்ஙனம் சிறந்த அறிவு யாது? அதுவே தமக்கு ஓர் இடையூறு வரும்வழி பாதுகாக்கும் படையாவது : அதுவும் அன்றிப் பின்னும் பகைவேந் தர்க்கும் உள்புக்கு அழித்தல் அரிதாய அரண் ஆவதும் அதுவே எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனுக்குக் குற்றம் காக்கும் கருவியா வது : அறிவு பகைவரால் உள்புகுந்து அழிக்கல் ஆகாத அரணும் அதுதானே எ - று.

இது தனக்குள்ள குற்றத்தை மறைக்கும் என்றும், தீமையைக் காக்கும் என்றும் அறிவாற் பயன் கூறிற்று.

பிறரால்

(8) கா. 9.

ப. 10.

எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

(கா - உ.) எ - து.—மேல்வரும் காரியத்தின் கலமும் தீங்கும் சீர் தூக்கி நல்லனவற்றின் வழி இடம் படுத்தித் தீயனவற்றைத் தெறும் வழி நோக்கியும் இங்ஙனம் அவை அவை கருமத்தைப் பெற வந்த இடத்து மயங்குதல் அன்றியே எதிர்தாக் காத்து ஒழுகும் அறிவுடை யார்க்கு எஞ்ஞான்றும் இல்லை, தமது உள்ளம் துணுக்குற வருவது ஓர் இடர் எ - று.

(ப - உ.) எ - து.—துன்பம் வருவதற்கு முன்னே வரும் என்று நினைத்துக் காக்கும் அறிவை உடையார்க்கு நடுங்க வருவது ஒரு துன்பமும் இல்லை எ - று.

முன்னை வினையான்
தாக வாராது என்பது.

வரும் துன்பமும் முற்படக் காக்கின் கடி
(9)

6. குற்றங்கடிதல்

கா. 10.

ப. 6.

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(கா - உ.) எ - து.—.....வேக முடைமை நெஞ்சிற்கு இயல்பு ஆகலான் அங்ஙனம் அஃது ஓடியவழி ஓட விட்டுக் கெடாது மற்று அதனை ஒழித்தல் அவ்வுள்ளத்தை நன்மை.....

(ப - உ.) எ - து.—உள்ளம் சென்ற இடத்தே உடம்பையும் செல்ல விடாது தீமையை நீக்கி நன்மைப் பகுதியிலே செலுத்துவது

அறிவாவது எ - று.

இது காம நுகர்ச்சியின்கண் பழியும் பாவமும் பொருட்கேடும் வாராமல் செலுத்துவது அறிவு என்றது. (10)

(கா - உ.) ஆகலான் மக்கட்கு அறிவுடைமையின் பேருவது இங்ஙனம் குற்றத்தின் ஒருஉவுதலும் குணத்தின் கடத்தலும் அன்றே: அதனான் இதன்பின் அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

6. குற்றங்கடிதல்.

(ப - உ.) எ - து.—குற்றங் கடிதல்லாவது காமக் குரோத லோப மத மானம் உவகை என்னும் ஆறு குற்றமும் கடிந்து ஒழுகுதல் வேண்டும் என்று அதன்பிற் கூறப்பட்டது.

கா. 1.

ப. 2.

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(கா - உ.) எ - து.—செருக்கு முதலாகச் சொன்ன மூன்று குற்றமும் தம.....தாக்கமானது பெரிய மேம்பாட்டுத் தன்மையின் உடைத்து எனவே மற்று ஏனை ஆக்கத்தை ஒன்றுகக் கருதார் உயர்ந்தோர் எ - று.

(ப - உ.) எ - து.—பிறர்மனை நயத்தலும் வெகுளியும் சிறியார் செய்வன செய்து ஒழுகலும் இல்லாதார் ஆக்கம் தலையெடுக்கும் நீர்மையை உடைத்து எ - று.

பிறர்மனை நயத்தல் செருக்கினல் வருதலின் செருக்கு என்றார். சினம் குரோதத்தால் வருதல். சிறியார் செய்வன செய்தலாவது காமநுகர்ச்சியும், சூதும், கள்ளும், வேட்டையும் முதலானவற்றின் மிக்கொழுகுதல். இதனை வடநூலார் இந்திரிய சயமின்மை என்பர். இவை பெரியாரால் கடியப்படுதலின் சிறுமை என்றார். இவை மூன்று குற்றமும் இல்லாதார் ஆக்கம் உடையார் என்றதனாலே இவை உடை

யார்க்குக் கேடு வரும் என்றவாறாயிற்று. பிறர்மனை நயத்தலாற் கெட்டான் இராவணன். வெகுளியாற் கெட்டான் சௌமேதயன். நுகர்ச்சியாற் கெட்டான் சச்சந்தன்.

கா. 2.

ப. 3.

இவறலு மாண்பிறந்த மானமு மாணு வுவகையு மேத மிறைக்கு.

(கா - உ.) எ - து.—பலர்க்கும் உபகரிக்குமதை உபகரியாது உலோபித்தலும் மற்றும் நன்மையின் நீங்கிய நாணக் கேடும் தகாத வற்றைக் காத்தலும் என்னும் இவை மூன்றும் குற்றமே வேந்தர்க்கு

எ - று.

இவறல் என்பது உலோபித்தல். இறத்தல் - கடத்தல்.

(ப - உ) எ - து.—உலோபமும் நன்மையைக் கடந்த மான மும் நன்மையைத் தராத மகிழ்ச்சியும் இம்மூன்றும் குற்றம் ஆம்

அரசாககு எ - று.

பொதுப்படக் கூறுது அரசர்க்கு என்றமையாற் பெரும்பான்மை யும் அரசர்க்கு வேண்டுமென்பது கருத்து. உலோபம் இரண்டு வகைத்து : தனக்கு முறைமை அல்லாத பொருளை விரும்புதலும் உண்டான பொருளை விடாமையும் : அஃது ஆமாறு பின்பே கூறப் படும். மாண்பு இறந்த மானம் ஆவது தொடங்கின வினை நன்மை பயவாது ஆயினும் அதனை விடாதொழிதல். இதனைக் கெட்டான் துரி யோதனன். மாணு வுவகையாவது எளியாரை அடர்க்கையாற் பிறந்ததொரு மகிழ்ச்சியால் வலியார் மாட்டும் சொல்லுதல். இத னைக் கெட்டான் வாதாபி. (2)

கா. 3.

ப. 5.

பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(கா - உ.) எ - து.—எய்திய செல்வம் யாவர்க்கும் ஈயாது இறுகப் பற்றுதலே நெஞ்சினுல் நினைக்கக் கடவது அன்று என்று ஈத லுடையவன் தகுதியாகிய நன்மையை மற்று யாதானும் ஒரு நன்மை யுள்ளும் வைத்து எண்ணப் படுவதற்கு ஓர் இணையில்லை ஆகலான் இவறுதல் பெரிதும் குற்றம் என்று பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—கூடிய பொருளே விடாமையாகிய உலோபம் யாதொன்றனுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று எ - று.

இது தனக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் உலோபம் ஒரு பொருளாக மதிக்கப்படாதென்றது. (3)

6. குற்றங்கடிதல்

25

கா. 4.

ப. 4.

செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

(கா. - உ.) எ - து.—தனக்கு எய்திய பொருள் கொண்டு அதனைற் செய்தற்பாலன ஆகிய நல்வழக்கம் செய்யாது உலோபியவனது செல்வமானது கெடுவுழிப் பின் ஒருகால் இவனுக்கு உய்தற் பகுதியாம் குறியின்றிச் செலவறக் கெட்டு விடும் எ - று.

(ப - உ.) எ - து.—செய்யும் முறைமை செய்யாதே ஈட்டுதற்கு விரும்பினவனும், அவனது செல்வமும் உய்யும் பகுதி இன்றிக் கெடும் எ - று.

கெடும் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக. இது பிறர்பொருளை விரும்பினால் வரும் குற்றம் கூறிற்று. இதனைக் கெட்டான் புலூரவா என்றவாறு.

(4) கா. 5.

ப. 8.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

(கா - உ.) எ - து.—சிறிதேனும் குற்றமானது வந்தெய்துவதன் முன்னமே உற்றுணர்ந்து தம்பால் வாராமல் பரிகரிக்க மாட்டாதது செல்வமானது மற்று எரி முன்னர்ப்பட்ட வைக்கோல் போர் போலக் கெடும் எ - று.

(ப - உ.) எ - து.—துன்பம் வருவதன் முன்னர் அதற்குத் தக்கது அறிந்து காவல் செய்யாத அரசனது செல்வம் எரியின் முன்னர்க் கிடந்த வைத்திரள் போலக் கெடும் எ - று.

முந்துற்றுக் காவல் செய்ய வேண்டுவன செய்யாமையும் குற்ற மென்றது. (5)

கா. 6.
ப. 7.

காதல காத லறியாமை யுய்க்கற்பி னேதில வேதிலார் நூல்.

(கா - உ.) எ - து.—பொன்னும் யானையும் நாடும் மற்றும் பிற வும் ஆகிய பொருள்களில் யாவை சிலவற்றைத் தாம் காதலித்தார், அதைத்தானும் பிறர் ஒருவரும் அறியாதபடி தம் அகத்துள் அடக்கிச் செலுத்த வல்லவர் ஆயின் தாம் விரும்பின பொருள் எய்தும்: இதுவும் அன்றிப் புறத்தனவாகியே போம்: யாவை எனின், மற்றுத் தாம் தாற்பரித்த பொருளைத் தலையழிதற்கு ஏதிலார் எண்ணிய எணணங்கள எ - று.

4

(ப - உ.) எ - து.—காதலிக்கப் பட்டவற்றின் மேற்செல்லுங் காதலைப் பிறர் அறியாமல் செலுத்துவனாயின், பகைவர் இவனைக் கொள்ளுமாறு சிந்திக்கும் சிந்தனை இவன் மாட்டுச் செல்லாது அயலாம் எ - று.

நூல் என்பது அவ்வேதிலாது சித்தம். அதனுலேயே சிந்தித்த லின் நூல் என்றார். இது மேற்கூறிய குற்றமே அன்றி அறம் பொருள் இன்பத்துக்கு மாருகாத பொருள்கள் மேற்செல்லும் ஆசையைப் பிறர் அறியின் அதுவே வாயிலாக வஞ்சிப்பர் ஆதலான் அக்காதலை அடக்காமையும் குற்றமென்று கூறப்பட்டது. வத்த சாயன் யானை பிடிக்கப்போய்ச் சிறைப்பட்டான். (6)

கா. 7. ப. 9.

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாகக் கொள்வர் பழிநாணு வார்.

(கா - உ.) எ - து.—குணப்பயன் அறியும் குணமுடையோர் தினை அளவாகிய சிறிது குற்றம் ஒருகால் வருவதாயினும், அதனைப் பனை அளவாகும் குற்றமாகக் கொள்வர்: குற்றத்துக்கு நாணும் அறிவுடையோர் எ - று.

(ப - உ.) எ - து.—தினை அளவு குற்றம் வந்ததாயினும் இவ வளவிற்று என்று மேற்கூறியவே அன்றி உளதாகும் குற்றமும் கடிய வேண்டுமென்றது எ - று. (7)

கா. 8. ப. 1.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே

யற்றந் தருஉம் பகை.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்து அரசருள்ளார் தமக்கு ஒரு குற்றம் நிகழாமல் கருதிப் பரிகரித்துக் கொள்க: மற்று இதுதானே பொருளாகக் கொண்டு ஒழுகின் மற்று அக்குற்றம் தானே, தமக்கு ஆபத்தைத் தருவதாகிய பகை எ - று.

(ப - உ.) எ - து.—தமக்குப் பொருளாகக் குற்றம் வாராமல் காக்க: அக்குற்றம்தானே இறுதியைத் தரும் பகையாம் ஆதலான் எ - று.

இது குற்றம் கடிய வேண்டு மென்றது.

(8) கா. 9.

ப. 10.

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

7. பெரியாரைத் துணைக்கோடல்

27

(கா - உ.) எ - து.—முன்னம் தனது குற்றமுள்ளன பலவும் தான் அறிந்து நீக்கித் தான் தூயனாய்ப் பின்பு பிறரது குற்றங்களை நோக்கிப் அக்குற்றங்களை ஒழிப்பதாக நினைக்குமாகின் பின்பு என்ன

குற்றம் உளதாகும் அரசர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.—தன் மாட்டுள்ள குற்றத்தை நீக்கிப் பிறர் மாட்டுள்ள குற்றத்தை ஆராய வல்லனையின் அரசனுக்கு என்ன குற்றம உளதாம எ - று.

இது தன் மாட்டுள்ள குற்றத்தை நீக்குதலே மாட்டுள்ள குற்றங்களும் கடிய வேண்டு மென்றது.

அன்றிப் பிறர்

(9) கா. 10.

ப. 6.

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க நன்றி பயவா வினை.

(கா - உ.) எ - து.—வேந்தனைவன் எஞ்ஞான்றும் தன்னைத் தானே, பெருமிதம் கருதற்க. மற்று இதுவும் அன்றித் தனக்கு இருமைக்கும் கன்மை பயவா.....தொழிக எ - று.

(ப - உ.) எ - து.—எல்லா காலும் தன்னைப் பெரியனாக வியவா தொழிக: வியக்தானாயினும் அவ்வியப்பினானே நன்மை பயவாத வினையைச் செய்யாதொழிக எ - று.

செய்யின் கேடுதரும் என்றவாறுயிற்று. இதனுற் கெட்டான் கார்த்த வீரியார்ச்சுனன்.

இதனை மதமென்ப.

(10)

(கா - உ.) இனித்தாமே இங்ஙனம் குற்றம் கடிந்து ஒழுகினும் மற்று அக்குற்றமும் குணமும் தெரிந்துணரும் கற்றுணர்ந்த பெரியோர் இவ்வாறு தமக்குத் துணையாக வேண்டும் என்று உண்டாகலான் மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

7. பெரியாரைத் துணைக்கோடல்.

(ப - உ.) பெரியாரைத் துணைக்கோடலாவது தம்மின் மூதிர்ந்த அறிவுடையாரைத் தமக்குத் துணையாகக் கொள்ளுதல், அரசன் குற்றம் அற்றவனாயினும் தன்னின் மூதிர்ந்த அறிவுடையாரைத் துணையாகக் கொண்டு வினைசெய்ய வேண்டுதலின் அதன்பிற் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1. · அரியவற்று
ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(கா - உ.) எ - து.—கீழ்ச்சொன்ன கல்வியும் கேள்வியும் அறிவுடைமையும் குற்றங் கடிதலும் பிறவும் ஆகிய செயற்கரிய எல்லாவற்றுள்ளும் பெரிதும் அரிது யாது எனின், முழுதும் உணர்ந்த பெரியோரை ஓம்பித் தமக்குத் துணையாகக் கோடல் எ - று.

(ப - உ.) எ - து.—செய்தற்கு அரியன எல்லாவற்றினும் செய்தல் அரிது தம்மின் முதிர்ந்த அறிவுடையாரை விரும்பித் தமக்குச் சுற்றமாகக் கூட்டிக் கொள்ளுதல் எ - று.

பெரியார் என்றது மந்திரி புரோகிதரை: அவரைத் தேடிக் கூட்டுதல் அரிது என்றது. (1)

கா. 2.

ப. 4.

சூழ்வார்கண் ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

(கா - உ.) எ - து.—மறைமுதல் ஆக இராச நீதிக்கு அடுத்த முறை நெறியும் நெறி அல்லதும் பிரித்து ஆராயினும், பெரியோரைத் தனக்கு அவற்றை விளங்கக் காட்டும் கண்ணுகக் கொண்டு ஒழுக வேண்டுதலான் உலகத்து மன்னனுனவன் அங்ஙனம் அவற்றைப் பழுதறத் தேரும் பெரியோரைத் தான் ஆராய்ந்து கைக்கொள்க எ - று.

(ப - உ.) எ - து.—ஆசன் தன்னைச் சூழ்ச்சியாற் கொள்ள நினைப்பதூம் சூழ்ச்சியாற் கொள்ளு வல்லுதல்: காரியம் எண்ண வல்லார் தனக்குக் கண்ணுக ஒழுகலான்னே எ - று.

பகைவர் சூழ்ச்சியால் தேற்றுமையால் அவரைத் தோல்வலி யாற் கோடல் அரிதாம் ஆகலாற் சூழ்வார் கண்ணுக ஒழுக வேண்டும் என்றது. (2)

கா. 3. ப. 3.

அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மைத் திறனறிந்து தேர்ந்து கொளல்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு பெரியோரை இவ்வாசர்க்குத் துணைகொள்ளும் இடத்துப் பல அறநூல்களாலே அறநெறிகளை அறிந்து முதிர்ந்த உணர்வுடைய பெரியோரது நட்பின் திறப்பாட் டினை அறிந்து மற்று இதற்குக் குறைபடாதவாறு தெரிந்து கைக் கொள்க எ - று.

(ப - உ.) எ - து.—அறத்தின் பாடு அறிந்து முதிர்ந்த அறி வுடையாரது கேண்மையை அவரவர் செய்தியாகிய திறன்களை அறிந்து ஆராய்ந்து கொள்க எ - று.

இது புரோகிதரைக் கூட்டுமாறு கூறிற்று. (3)

கா. 4.

ப. 10.

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(கா - உ.) எ - து.—குலத்தானும் குணத்தானும் கல்வியானும் தம்மின் சிறந்த பெரியோரை இவ்வாசார்க்குத் துணையாகக் கொண்டு ஒழுகுதலே வன்மையுள் எல்லாம் தலைப்பாடுடைய வலிதாவது எ - று.

(ப - உ.) எ - து.—தம்மின் மிக்க அறிவை உடையார் தமக்குத் தமராகி ஒழுகுதல் வலியானவை எல்லாவற்றினும் தலையான வலி எ - று.

இவர்கள் உண்டாகவே யாதொரு குதிரை படையினால் உண்டான வலியினும் மிக வலியுடையவனவன் என்றது.

பிரதிபேதம்: "தபோதனர் தம்மோடே கட்பாக ஒழுகுதல் தமக்கு உள்ள வரிசை எல்லாவற்றினும் தலை" என்றவாறு என்றும் உண்டு. (4)

கா. 5.

ப. 6.

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

(கா - உ.) எ - து.—மறந்தும் உணர்ந்தும் தகாதன செய்யு மிடத்து நமக்கு இது இயல்பல்ல என்று கழறி நெருக்கும் பெரி யோரை ஆள்வாரை மற்று யாரேதான் வந்து கெடுக்கும் தகைமைப் பாட்டினை உடையார்? யாரும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—குற்றம் கண்டால் கழறும் தன்மை உடை யாரைத் தமக்குத் தமராகக் கொள்ள வல்லவரைக் கெடுக்கும் தகைமை உடையர் இவ்வுலகத்து யார்? எ - று.

இது கேடில்லை என்றது: இதனையும் தம்மிற் பெரியராக மதித்து வைக்கப்படு மென்று கண்டு கொள்க. * (5)

கா. 6.

ப. 9.
இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்.

(கா - உ.) எ - து.—தனக்குத் தகாதன காரியங்கள் செய்யு மிடத்துக் கழறி நெருங்கும் பெரியோரைத் தனக்கு இல்லாததனால் கல்லாறுதி பெறுத வேந்தன் மற்றுத் தன்னைக் கெடுப்பார் ஈண்டு இல்லை யாயினும் தனது மறவியானும் செல்வச் செருக்கினானும் தானே கெடும் எ - று.

(ப - உ). எ - து.—கழுறுவாரை இல்லாத காவல் இல்லாத அரசன் தன்னைப் பகைவர் வந்து கெடுப்பார் இல்லை யாயினும் கெடும்: தான் வேண்டியவாறு ஒழுகி. எ - று. (6)

கா. 7.

ப. 5.

தக்கா ரினத்தனுய்த் தாளெழுக வல்லானைச்
செற்றூர் செயக்கிடந்த தில்.

(கா - உ.) எ - து.—தமது அறிவு மிகுதியால் தகாதனவற் றுக்கு இடிக்கத் தகும் சான்றோர் இனத்தனுய்க் கொண்டு இங்ஙனம் தான் ஒழுக வல்லவனை வேறு பகைவரால் செய்து முடிப்பக் கிடந்தது யாதும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—தகுதி உடையார்க்கு இனவனுய்த் தானும் அவரோடு ஒக்க ஒழுக வல்லானைப் பகைவர் செய்யக் கிடந்தது ஒரு

நெறி இல்லை எ - று.

தகுதியுடையார்க்கு இனவன் ஆதலாவது, தன்னேடு ஒத்த வரிசை அவர்க்கு உண்டாக்குதலும் தன்னைக் கண்டாற் போல அவரை உலகத்தார் மதிக்கப் பண்ணுதலும். ஒக்க ஒழுகுதலாவது—ஒத்த சூழ்ச்சி உடையனுதல். இவனைப் பகைவரால் வெல்ல ஒண்ணுதென் றது. (7)

கா. 8.

ப. 8.

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் தொடர்கை விடல்.

(கா - உ.) எ - து.—தான் தனியனு யிருந்து அளவிறந்த பல ரோடும் பகை கொள்வதனினும் நூறு மடங்கு குற்றத்தை உடைத்து இங்ஙனம் தெரிந்தணர வல்ல பெரியோரைத் துணையாப் பெற்று வைத்தும் அவாது தொடர்ச்சியைத் தாம் கைவிடுதல் எ - று.

(ப - உ.) எ - து.—பலரோடு பகைகொண்டான் எவ்வளவு துன்பமுறும்: அதனினும் பத்து மடங்கு துன்பமுறும் பெரியாரைத் துணையாகக் கொள்ளா தொழியின் எ - று.

இஃது இடுக்கண் வருமென்றது.

(8)

கா. 9.

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

ப. 7.

(கா - உ.) எ - து.—முன்னம் தமக்கு நெஞ்சுறுதியாகிய முதற் பொருள்.....மற்று அஃது அடியாக.....பொலிந்து வரும்

லாபம் யாதும் இல்லை யென்றூர் : மற்று அதுபோலத் தமது நீதி தளா மல் தாங்கும் தாணுவாகிய சார்வில்லாதார்க்கு நிலைஇல்லை எ - று.

(ப - உ.) எ - து.—முதல் இல்லார்க்கு இலாபம் இல்லை யாயி னுற் போலத் தாங்குதலாகிய சார்பு இல்லாதவர்க்கு நிலைநிற்றல் இல்லை எ - று.

பெரியாரைத் துணையாகக் கொள்ளாதார்க்கு வரும் குற்றம் கூறுகின்றூர் ஆதலின் முற்படப் பொருட்கேடு உண்டாம் என்று கூறினர். (9)

கா. 10.

ப. 2.

உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(கா - உ.) எ - து.—வேந்தானவர் தாம் யாதானும் ஒரு வழி யால் உற்றது ஓர் இடரு.....காக்கும் தன்மையார் ஆகிய பெரி யோரைப் பேணித் துணையாகக் கொள்க எ - று.

(ப - உ.) எ - து.—அரசற்கு உற்ற நோயை விடுவித்துப் பின்பு துன்பம் உறுமல் முன்பே காக்க வல்ல தன்மை உடையாரை விரும்பிக் கொள்க எ - று.

மேற் பெரியா ரென்று பொதுபடக் கூறினர்: யைக் கூட்டுமாறு கூறிற்று.

அவருள் மந்திரி

(10)

(கா - உ.) இனி இங்ஙனம் தமக்கும் பெரியோர்.....துணை யாகக் கொண்டோர்க்கும் மற்று இதுவேயும் அன்றித் தீவினையுளர் ஆகிய சிறியோரைச் சேர்ந்து ஒழுகாமையும் வேண்டுமாகலின் மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

8. சிற்றினஞ்சேராமை.

(ப - உ.) சிற்றினம் சேராமையாவது காமுகரும் சூதாடிகளும் பெண்டிரும் முதலாயினரைச் சேர்ந்து ஒழுகினால் வரும் குற்றமும் சேராமையால் வரும் நன்மையும் கூறுதல். பெரியார் துணையாலும் சிறியார் இனத்தாய் ஒழுகின் அது தீமை பயக்கும் என்று அதன்பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 1.

சிற்றின மஞ்சும் பெருமை

சிறுமைதான்

சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(கா - உ.) எ - து.—தமது நீதி நெறிக்குத் தகாதோர் ஆகிய சிற்றினத்தை மருவுதற்கு அஞ்சுவர் பெரியோர்: இனி மற்று அவ

சோடு ஒரு தன்மையாகிய சிறியோர் தமது இளைஞர் ஆக விசாரித்துக் கைக்கொண்டு விடுவர் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—சிற்றினத்தாரை அஞ்சுவர் பெரியார்: சிறியார் அவர்களைச் சுற்றமாகக் கொண்டுவிடுவர் எ - று.

இது பெருமை வேண்டுவார் கொள்ளார் என்றது.

(1)

கா. 2.

ப. 6.

மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

(கா - உ.) எ - து.—உலகத்துப் பெரியோர் தமது மனம் தூய்மை உடைத்தாகலும் தம் செய்வினை தூய்மையாகலும் என இவை இரண்டும் தாம் இணங்கும் இனத்தின் தூய்மை காரணம் ஆக வரும் எ - று.

(ப - உ.) எ - து.—மனம் நன்று ஆகலும் செய்யும் வினை நன்று ஆகலும் இரண்டும் இனம் நன்று ஆகலைப் பற்றி வரும் எ - று.

இனிச் சோமையால் வரும் நன்மை கூறுவார் இவை இரண்டும் நன்றும் என்று கூறினர். (2)

கா. 3.

ப. 8.

மனநலத்தா ஞகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

(கா - உ.) எ - து.—தத்தம் மனத்தினது தூய்மையினுலே உளதாகும் மறுமை. இனம் ஆன மற்றது தானும் இனத்தினது நன்மையினுலே பெரிதும் சேமத் திட்பம் உடைத்தாம் எ - று.

(ப - உ.) எ - து.—மன நன்மையானே மறுமைப் பயன் நன்றும். இம்மனத்தின் நன்மையும் இன நன்மையாலே தீத்தொழிலிற் செல்லாமைக் காத்தலே உடைத்தாம் எ - று.

இது மறுமைக்குத் துணையாம் என்றது. (3)

பா - ம். ' மனநலத்தி ஞகு மறுமை யதுவும் '.

கா. 4.

ப. 7.

மனத்தூயார்க் கெச்சநன் ருகு
மினத்தூயார்க்

கில்லைநன் ருகா வினை.

(கா - உ.) எ - து.—உலகத்து மனம் தூயோர்க்கு மக்கட் பேறு முதலிய நன்மை உள ஆம்; மற்று அதனுடன் இனம் தூயார்க்கு நன்று ஆகாத காரியம் யாதும் இல்லை; எனவே அவர்க்கு எல்லா நன்மையும் உள எ - று.

எச்சம் என்றது மக்கட்பேறு முதலிய

என்றது.

(ப - உ.) எ - து.—மனம் நல்லார்க்குத் தமக்குப் பின்பு நிற்கும் மக்கள் முதலான பொருள்கள் நல்லவாம்: இனம் நல்லார்க்கு நன்றுகாதது ஒரு வினையும் இல்லை எ - று.

இது மேலதற்குப் பயன் கூறிற்று.

(4)

கா. 5.

ப. 9.

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(கா - உ.) எ - து.—மனம் தூய்மை மிகவும் உடையர் ஆயினும் சால்புடையோர்க்கு மற்று அதனுடனே இனத்தினது நன்மை உளதாதல் தமக்குப் பெரிதும் இம்மை மறுமைக்கு ஏமாப்பு உடைத்து எ - று.

(ப - உ.) எ - து.—மன நன்மை மிகவும் உடையவர் ஆயினும் இனம் நன்மை உடைமை சான்றோர்க்குக் காவல் ஆதலை உடைத்து எ : று.

இனம் நன்று அல்ல ஆயின் பிறரால்
இகழ்ச்சி வாராமல் காக்கும் என்றது.

இகழப்படுவர் ஆதலான்

(5) கா. 6.

ப. 10.

மனநல மன்னுயிர்க் காக்க மினநல

மெல்லாப் புகழுந் தரும்.

(கா - உ.) எ - து.—மனத்தின் தூய்மை உலகத்து மன்னி வருகின்ற உயிர்கட்கு ஆக்கம் ஆகும்: மற்று இனநலம் அதுவேயும் அன்றி எல்லாப் புகழையும் கொடுக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—மனநன்மை நிலைபெற்ற உயிர்க்கு ஆக்கம் ஆம். அதுபோல இனநன்மை எல்லாவற்றானும் வரும் புகழினைத் தரும எ - று.

இஃது எல்லாப் புகழும் தரும் என்றது.

(6) கா. 7.

ப. 3.

மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு மின்னு னெனப்படுஞ் சொல்.

(கா - உ.) எ - து.—தமது மனத்தின் நன்மை எவ்வளவு மற்று அவ்வளவும் உளது ஆம் மக்கட்கு அறிவானது : மற்று இதனுடனே மனத்தின் தூய்மை எவ்வளவு மற்று அவ்வளவும் நன்மைகளை உடை

யர் என்று யாவராலும் எடுத்து உரைக்கப்படும்

புகழ்ச்சியை எ - று. 5

(ப - உ.) எ - து.—மாந்தர்க்கு அறிவு மனத்தினாலே உண்டாம். ஆயினும் தாம் சேர்ந்த இனத்தினாலே இனியர் அல்லர் என்று பிறர் பழிக்கப்படும் சொல் உண்டாம் எ - று.

இது பிறர் பழிக்கப்படுவர் என்றது.

(7) கா. 8.

ப. 5.

மனத்து ளதுபோலக் காட்டி

யொருவர்க்

கினத்துள தாகு மறிவு.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்கு அறிவு உளதாவது மனத்தின் கண் ஒக்கலான் மற்று அம்மனத்து உளதாவது போலத் தோற்றியும், பின்னும் தாம் மருவி வருவது ஓர் இனத்தினதுவே உளதாகும் அறி

வானது எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனுக்கு உண்டாகும் அறிவு முற்பட மனத்து உள்ளது போலத் தோன்றித் தான் சேர்ந்த இனத்தின்

உண்டான அறிவாகும் எ - று.

மேல் மனத்தினனே அறிவு உண்டாம் என்றார். அதன்பின் இனத்தினனே திரியும் என்றார். அது மாறுபட்டாற் போலப்பட்டது நோக்கி இது கூறப்பட்டது. இத்தனையும் சேர்ந்ததனல் வரும் குற்றம் கூறிற்று. (8)

கா. 9. ப. 4.

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க் கினத்தியல்ப தாகு மறிவு.

(கா - உ.) எ - து.—நிலத்தின் நிறம் முதலிய வேறுபாட்டுத் தன்மையால் நீரானது தன் தன்மை வேறுபட்டு மற்று அந்நிலவியல் பினை உடைத்தாம். அதுபோல உலகத்து வாழும் மக்களுக்கும் தத்தம் இனத்தின் தன்மையது ஆகும் தமது அறிவு எ - று.

(ப - உ.) எ - து.—நிலத்தின் இயல்பாலே நீர் நிறம் திரிந்து நிலத்தின் நிறம் ஆகுமாறு போல மாந்தர்க்குத் தமக்கு இயல்பாகிய அறிவும் தாம் சேர்ந்த இனத்திற்கு இயல்பாகிய அறிவு ஆம் எ - று.

நீர் திரிந்து ஆகும் அற்று என்று கூட்டுக. இது தமது அறிவு திரியு மென்றது. (9)

நல்லினத்தி னூங்குந் துணையில்லைத் தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

9. தெரிந்து செயல்வகை 35

(கா - உ.) எ - து.—உலகத்து ஒருவர் இணங்கும் இன வேற்றுமையான் வரும் புகழும் பழியும் இவை ஆகலான் நல்லினத்தின் மேலாயிருப்பது ஒரு துணையும் இல்லை: தீயினத்தின் துன்பம் தரும் பகையும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—நல்லினத்தின் மிக்க துணையா யிருப்பதும் இல்லை. தீயினத்தின் மிக்க அல்லற் படுப்பதுவும் இல்லை எ - று.

இது சோராமைக்குக் காரணம் கூறிற்று.

(10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் பெரியோரைத் துணைக்கோடலும், சிற்றினம் சோராமையும் ஆகிய நன்மைக் கூற்றினது மருவுதல் செய்வழி அவர் நலமும் தீங்கும் தெரிந்து செய்ய வேண்டுதலான் அவ்வகையினை உணர்த்துவான் வேண்டி மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

9. தெரிந்து செயல்வகை.

(ப - உ.) தெரிந்து செயல்வகை யாவது வினை செய்யுங்கால் அதனை எண்ணிச் செய்ய வேண்டும் என்பது கூறுதல். அறிவுடையவனுக்குக் குற்றம் கடிந்து மந்திரி புரோகிதரைத் துணையாகக் கொண்டு சிற்றினம் சேராது ஒழுகும் அரசனும் வினைசெய்யும் காலத்து முன்பே எண்ணிச் செய்ய வேண்டுதலின் அவையிற்றின் பிற்கூறப் பட்டது.

கா. 1.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

ப. 4.

(கா - உ.) எ - து.—யாவரோடும் யாதானும் ஒரு காரியம் செய்யும் இடத்து.....தொன்றுகியும் இங்ஙனம் வேறுபட்டிருக்கும் அதனால் அவற்றை ஆராய்ந்து அழிவது விடுத்தும் ஆகுவது கைக்கொண்டும் செய்யுங்கால் மற்று அது அப்.....டைமையும் தேர்ந்து பின்பு அக்கருமம் செய்க எ - று.

(ப - உ.) எ - து.—வினைசெய்து முடித்தற்கு அழியும் பொருளும் அது செய்து முடித்தால் உளதாகும் அப்பொருளினால் பின்பு உண்டாம் ஆப்பயனும் எண்ணிப் பின்பு வினைசெய்க எ - று.

வழிபயக்கும் ஊதியம் ஆவது முன்பு நன்றாகத் தோற்றிப் பின்பு தீது ஆகாத வினை. இது முதலாக எண்ணுமாறு கூறுகின்றார் ஆகலின் முற்பட இவை மூன்றும் எண்ணுதல் வேண்டு மென்பது கூறிற்று.

கா. 2.

ப. 3.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒன்றினை ஒருவர் செய்யும் காலத்து மற்று அதனைக் கீழ்ச்சொன்னுங்குச் சூழ்ந்து வாய்ப்பது அறிந்து செய்யத் துணிக. மற்று அவ்வாறு செய்யத் துணிந்தபின் செயற்பாட்டுக் நிகழ்ச்சிக் கண்ணே புகுந்து நின்று இதனை எண்ணுவேம் என்று நினைக்கின்றது பெரிதும் குற்றம் எ - று.

(ப - உ.) எ - து.—ஒரு வினையைச் செய்யத் துணிக: துணித்த பின்பு எண்ணுவேம் என்றல் கப்பு ஆம் ஆதலான் எ - று.

காரியம் நின்ற நிலை அறிந்தாலும்
என்றது.
எண்ணுது துணிதல் ஆகாது

(2)

கா. 3.

ப. 10.

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு.

(கா - உ.) எ - து.—உலகத்து வேந்தரானவர் தாம் செய்யும் கருமங்களின் சூறுபாட்டினைச் செலவு அறத் தோராது தொடங்குதல் யாது - ஆமோ என்னின், தம் பகைவர் ஆகின்ற வித்தினைப் படாமல் வினைத்தற் பொருட்டுப் பாத்தி கட்டி மற்று அதனுள் விளையிப்பது ஓர் நெறி எ - று.

(ப - உ.) எ - து.—மேற்சொன்ன வகை எல்லாம் போக்கு அறச் சூழாதே போர் கருதி எழுதல் பகைவர் ஆகிய விதையை வினை நிலத்தின் கண்ணே இடுவது ஒரு நெறி எ - று.

இது பகைவர்க்கு ஆக்கம் உண்டாம் என்றது. (3)

கா. 4.

ப. 8.

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒரு காரியம் செய்யத் தொடங்கும் இடத்து ஆசியல்பிற்கு நீதியல்லது செய்யின் கேடு வரும்: மற்று ஆஃது அன்றி ஆசியல்பிற்கு நீதியாம் அவற்றைச் செய்யாமையானும் கேடுவரும்: மற்று அதனால் தகாதனவற்றைச் செய்யாமையும் தகுவன செய்தலும் என்னும் இரண்டினாலும் கேடு இன்றிப் பெரிதும் ஆக்கம் எய்தும் எ - று.

(ப - உ.) எ - து.—செய்யத் தகாதனவற்றைச் செய்ததனலும் கெடும்: செய்யத் தகுவனவற்றைச் செய்யாமையானும் கெடும்.

இது மேற்கூறுதன எல்லாம் தொகுத்துக் கூறிற்று. (4) கா. 5.

ப. 1.

தெரிந்த வினத்தோடுந் தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொரு ளியாதொன்று மில்.

(கா - உ.) எ - து.—யாதும் ஒரு கருமம் செய்யும் இடத்து அதனைத் தெரிந்து செய்யும் திறமையரேனும் மற்று அதனைக் கல்வியால் தெரிந்த கல்வினத்துடனே உசாவிக்கொண்டு தமது நெஞ்சானும் தெரியத் தேர்ந்து கொண்டு இங்ஙனம் செய்யும் அரசர்க்கு இனிச் செயற்கு அருமையுடைய பொருள் யாது ஒன்றும் இல்லை: மற்று இவர்க்கு யாவையும் செய்தல் எளிது எ - று.

(ப - உ.) எ - து.—அமாத்தியர் பலருள்ளும் ஆராய்ந்து கூட்டிக் கொள்ளப்பட்ட மந்திரிகளாகிய இனத்தோடே கூடச் செய்யும் வினையை ஆராய்ந்து அதனைச் செய்யுமாறு எண்ணிச் செய்ய வல்லவனுக்குப் பெறுதற்கு அரியது ஒரு பொருளும் இல்லை எ - று.

இனம் என்றார் மந்திரிகள் பலர் வேண்டும் என்றற்கு. இதனை எண்ணுதற்கு ஆவாரையும் கூறி எண்ணிச் செய்யவேண்டும் என்பதும் கூறிற்று. (5)

கா. 6. ப. 6.

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு கொள்ளாத கொள்ளா துலகு.

(கா - உ.) எ - து.—அரசாளுவோர் தாம் யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்து.....தன ஆகிய நற்கருமங்களே தம் மனத்தோடு தெரியத் தேர்ந்து செய்ய வேண்டும். மற்று இங்ஙனம் செய்யார் மனத்தொடு கொள்ளாதனவற்றைச் செய்ய விரும்புவாராயின், உயர்ந்தோர் ஆகிய நல்லினத்தோர் கண்ணுற்றுத் தெரியும் இடத்து அதனைச் சிறிதும் கைக்கொள்ளார் எ - று.

எள்ளாத என்பது இகழாமை.

(ப - உ.) எ - து.—மூடியும் ஆயினும் பிறரால் இகழப்படாதவற்றை எண்ணிச் செய்தல் வேண்டும். தமக்குத் தகாத செய்தியை உலகத்தார் கொள்ளார் ஆதலான் எ - று.

இது பிறரால் இகழப்படாதன செய்யவேண்டும்

கா. 7.

ப. 2.

தெளிவில் லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(கா - உ.) எ - து —இங்ஙனம் தாமும் சான்றோரும் தம்முள் கூடியாயினும் தனித்தானும் தெளிந்து சிறந்த கருமஞ் செய்யும் அத்தனை அல்லது மற்றுத் தெளிவில்லதனைச் செய்யத் தொடங்கார். யாதெனின் மற்று அவர் இது செய்தார் என்று பிறர் நகுதல் நமக்கு ஓர் இளிவாம் என்னும் குறைபாட்டை தானுவர் எ - று.

(ப - உ.) எ - து.—ஆராய்ந்து அறிதல் இல்லாத வினையைச் செய்யத் தொடங்கார். இகழ்ச்சியாகிய குற்றப்பாட்டிற்கு அஞ்சும் அவர்கள், எ - று.

ஒருவினை செய்ய நினைக்கும் காலத்து நின்றங்கில அறியவேண்டும் என்றது. (7)

கா. 8.

ப. 1

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் தெரிந்த அறிவினர் தம்வயின் மேல் ஆவதோர் ஆக்கம் கருதித் தமது பழகிய பொருளும் கிதையு மாறு செய்யும் கருமத்தில் ஒருப்படார் எனின் மற்று ஆக்கமும் முதலும் அழிவின்றிச் சிறக்கும் தகுதியை அறியும் அறிவுடையார் எ - று.

(ப - உ.) எ - து.—தனக்கு ஆக்கம் உண்டாக வேண்டி முன்பு உண்டான முதலும் இழக்க வரும் வினையைச் செய்யார் அறிவுடை யார எ - று.

மேற் பிற்பயக்க வேண்டும் வினை செய்ய வேண்டும் என்றார். இது பிற்பயவாத வினை செய்யலாகா தென்றது. (8)

கா. 9.

ப. 7.

நன்றூற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

(கா - உ.) எ - து.—அந்தணர் முதலிய குடிப்பிறந்தோர்க்கும் பிறர்க்கும் அரசரானவர் தாம் பல நன்மைகளைச் செய்யும் இடத்துக் குற்றம் உண்டாம் : மற்று எப்பொழுது எனின், அவை செய்கின்ற இடத்து மற்று அவரவர் மாபு அறிந்து தக்காங்குக் குறிக்கொண்டு நீதியைச் செய்யா இடத்து எ - று.

(ப - உ.) நன்மை செய்யும் இடத்திலும் குற்றம் வரும். ரவர் குணம் அறிந்து செய்யாத இடத்து எ - று.
அவ

இதுவும் ஓர் எண்ணம் கூறிற்று :

(9) கா. 10.

ப. 9.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(கா - உ.) எ - து.—அரசராவார் தமது நீதியால் முயன்று ஈட்டாத நெடும்பொருளைச் சான்றோர் பலரும் கூடி மற்று இது ன்று என்று கொண்டாடினும் சாலக் குற்றப்படும் எ - று.

பொத்துப்படும் என்றது குற்றப்படும் என்றது.

(ப - உ.) எ - து.—மேற்கூறிய நெறியினனே முயலாத பொருள் பலர் நின்று காப்பினும் குற்றப்படும் எ - று.

எண்ணிச் செய்யாதது தப்பும் என்றது.

(10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் தெரிந்து செய்வுழியும் சிறந்த கருமத்தி.....வேட்கை சொல்லுதல் மாபு அன்று என்று சொல்லினும் தத்தம் வலியறிந்து இயற்றுக்கால்.....என்பதனல் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

10. வலியறிதல்.

(ப - உ.) வலி அறிதலாவது தனக்குள்ள வலியும் பிறர்க்குள்ள வலியும் அறிதல். செய்யத் தக்க வினையை எண்ணினலும் அதனைச் செய்து முடிக்குங்கால் வலி அறிந்து செய்ய வேண்டுதலின் அதன்பிற் கூறப்பட்டது.

கா. 1. ப. 1.

வினைவலியுந் தன்வலியு மாற்றுன் வலியுந் துணைவலியுந் தூக்கிச் செயல்.

(கா. - உ.) எ - து.—தான் செய்யும் கருமத்தின் வலியும் தனது வீரப்பாட்டின் வலியும் தனக்கு எதிர் மாற்றுன் வலியும் தனக்கு உதவும் படைத் துணைவலியும் மாற்றுர்க்கு உதவும் படைத் துணை வலியும் மாற்றுர்க்கு உதவும் படைத்துணை வலியும் இவை இரண்டிலையும் சீர்தூக்கிக் கொள்க. எனவே மற்று இவை மாற்றுனிலும் தனக்கு மிக உளவாயின் அவனெடு தான் வினைசெய்வானுக. அல்லது கட்பின்கண் பொருந்துவது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—செய்யும் வினையினது வலியும் தனக்கு உண்டான வலியும் பகைவனது வலியும் தனக்கும் பகைவர்க்கும் துணை ஆயினர் வலியும் எண்ணிப் பின்பு செய்க எ - று.

இது வலி அறியும் இடம் கூறிற்று.

(1) கா. 2.

ப. 2.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(கா - உ.) எ - து.—தமது பொருள் வலியும் துணைவலியும் முதலிய பல வாம்பிணைக் கருதாராய் வறிதே ஒரு கருமத்தை நெஞ்சிற் ..... தானே தாமும் அதன்மேற் சென்று பின்பு அக்கருமம் முடிக்க மாட்டாது இடையிலே தடங்கிய கருமத்தை முரிந்து ஒழிந்தார் இவ்வுலகத்து அனேகர் எ - று.

(ப - உ.) எ - து.—தம்முடைய வலியறியாது மனமிகுதியாலே வினைசெய்யத் தொடங்கி முடிவதன் முன்னே கெட்டார் பலர் எ - று.

வலியறியாதார் கெடுவர் என்றது.

(2) கா. 3.

ப. 3.

ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

(கா - உ.) எ - து.—உலகத்து வேந்தாரேர் தாம் யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்துத் தமக்கு இயல்வது அறிந்து மற்று அக்கருமநிலை விளங்குமாறு செய்யத் துணிந்தபின் அதனைச் சோர விடாது அதன்கண்ணே நிலைநின்று மற்றது முடியுமாறு அங்ஙனம் சென்று முடிப்பார்க்குச் செல்லப்படாதது யாதும் இல்லை எ - று.

ஒல்வது என்பது இயல்பு என்றது.

(ப - உ.) எ - து.—தனக்கு இயலும் திறன் இது என அறிக; அறிந்தபின் அவ்வளவிலே நின்று ஒழுகுவானுயின் அவனுக்கு இயலாதது இல்லை எ - று.

இது வலி அறிந்தாலும் அமைந்து ஒழுகவேண்டும் என்றது. (3) கா. 4.

ப. 8.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை புளபோல வில்லாகித் தோன்று கெடும்.

(கா - உ.) எ - து.—தமது பொருள் முதலியவற்றின் எல்லையைக் குறிக்கொண்டு எய்தற்குத் தக்காங்கு செய்யாதான் ஒழுக்க

மானது முன்னம் சில உள்போலக் காட்டி இல்லையாய் விடும்; மற்று அங்ஙனம் கெடும் இடத்தும் தோற்றம் இல்லவாய்க் கெட்டு விடும் எ - று.

(ப - உ.) எ - து.—தன் வருவாய் அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கைகள் உள்ளன போலத் தோன்றி அதன்பின் இல்லையாகித் தோன்றுது கெடும் எ - று.

தோன்றுக் கெடும் என்பது பின்பும் ஆக்கம் இன்றிப் போகும் என்றது. இது மேற்கூறியவாறு செய்யாதார் கெடுவர் என்றது. (4)

கா. 5.

ப. 10.

உளவரை தூக்காத வொப்புர வாண்மை வளவரை வல்லைக் கெடும்.

(கா - உ.) எ - து.—ஒருவன் தனக்கு உள்ள எல்லையைச் சீர் தூக்காத உபகார நடையும் அதற்கு மூலம் ஆகிய செல்வத்து எல்லை யும் இரண்டும் வளத்தினது பெருமை இன்றி விரையக் கெடும் எ - று.

வல்லைக் கெடும் என்பது விரையக் கெடும் என்றது.

(ப - உ.) எ - து.—தன் அளவை நினையாதே ஒப்புரவு செய்வா னது செல்வத்தின் அளவு விரையக் கெடும் எ - று.

மேல் முதலிற் செலவு குறைய வேண்டும் என்றார். அவ்வாறு செய்யின் ஒப்புரவு செய்யுமாறு என்னை என்றார்க்குக் கூறப்பட்டது. ஒப்புர வாண்மை என்று ஒப்புரவிற்கே போக்குவாரும் உளர். (5)

கா. 6.

ப. 5.

நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

(கா - உ.) எ - து.—நின்றதோர் பசுமாத்தின் இளந்தலைக் கொம்பின் மேலே போய் ஏற்றூர் மற்று அதனை அறிந்து பின்னும் உரம் செய்வாராயின், தமது உயிர்க்கு இறுதியாகி விடும் எ - று.

ஊக்கின் என்பது உரம் செய என்றது.

(ப - உ.) எ - து.—ஒரு மாத்தின் நுனிக்கொம்பில் ஏறினவன் தன் அளவு அறிந்து வைத்துப் பின்னும் மேலே செல்வனாயின் அது தன் உயிர்க்கு இறுதியாகி விடும் எ - று.

இஃது அரசன் தன்னல் செல்லலாம் அளவும் சென்றால் பின்பு மீள வேண்டும் என்றது. இதுவும் ஒரு வலியறிதல். (6)

6

கா. 7.

ப. 6.

பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(கா - உ.) எ - து.—உலகத்தின் நொய்ய ஆக நிகழ்கின்ற பொருள்களின் ஒன்று ஆய பீலியைப் பண்டம் ஆக உள்ளுச் சொரிந்து வைத்த சகடமும் அது கொண்டு நடக்கும் இடத்துத் தனக்கு அச்சு முறிந்து கெடும்: எப்பொழுது எனின், அப்பண்டம் கொண்டு ஓர் ஒழிவு இன்றி நடக்கும் ஊத்து அளவு அறியாது மற்று அதனைச் சால மிகுத்து உள்ளுறச் சொரிந்து செலுத்தின் எ - று.

(ப - உ.) எ - து.—பீலியை அடைந்த சகடமும் அச்சு முறியும் அப்பீலியை மிகவும் நெருங்க இடின் எ - று.

அரண் வலிது என்றார்க்குப் படைமிகின் அரண் நில்லாது என்றற்குக் கூறிற்று; எனவே பகைவர் மேலே நெருங்கிச் செல்லினும் அளவு அறியாது செல்லின் கெடும் இடனும் உண்டாம் என்றது. (7)

கா. 8.

ப. 9.

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

(கா - உ.) எ - து.—பொருள் தமக்கு உளதாகின்ற வழியினது அளவு பெரிதும் சிறிதேயாயினும் அதனன் வருவது ஒரு கேடில்லை: என்னே எனின், மற்று அப்பொருள் தான் வினியோகப்படுதலும் பிறர்க்கு உபகரித்தலும் ஆகப் போகிற வழியால் அதனை விட்டு அக லாத இடத்துத் தனக்கு வலியாகியது சிறிதே பொருள் ஆயினும் அதுவே அமையும் எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் வரும் வழி சிறிது ஆயினும் கேடில்லை யாம்: அது போம் வழி பெருகாது ஆயின் எ - று.

இது முதலுக்குச் செலவு குறைய வேண்டும் என்றது. (8) கா. 9.

ப. 4.

அமைந்தாங் கொழுகா ளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒரு பொருள் மூற்றுப்பெற்றது பாங்கு: மற்று ஆங்கு அதற்கு ஏறக் கடவானுமாய் மற்றுத் தன் மிதி வாம்பினை உணராதானுமாய் வறிதே தன்னைப் பெரிதும் மேலாக ..... மற்று அம்மதிப்புக்குத் தக்காங்கு நடக்க வேண்டினதால் நிரைந்து கெடும் எ - று.

(ப - உ.) எ - று.—அமைவு உடையனைய் ஒழுகுதலும் இன்றித் தன்வலி அளவும் அறியாதே தன்னை மதித்தவன் விரைந்து கெடு வான எ - று.

மேற் கூறியவாறு செய்யாதார் கெடுவர் என்றது. (9) கா. 10.

ப. 7.

ஆற்றி னளவறிந் தீக வதுபொருள் போற்றி வழங்கு நெறி.

(கா - உ.) எ - து.—பொருள் வரலாற்றினது சிறுமை பெருமை அளவு அறிந்து அதற்குத் தக்காங்கு ஆசர்யாவர்க்கும் ஈந்து ஒழுக; மற்று அங்ஙனம் செய்யின், அஃது அப்பொருளினைக் காக்கும் இடம் காத்து வழங்கும் வழி வழங்கும் முறைமையாவது: எனவே யாவரும் தத்தம் பொருள் வரலாற்றுக்குத் தக்காங்குக் காக்குமிடம் காத்தும் ஈயுமிடம் ஈத்தும் சேறலே கடன் எ - று.

(ப - உ.) எ - து.—வருவாய் அளவு அறிந்து கொடுக்க; பொருள் உண்டாக்கும் நெறி அது ஆதலான் எ - று.

இனிப் பொருளினது வலி அறிதல் கூறுகின்றார் முதற்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என்றது.

ஆதலின்,
(10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் பொருள் வலியும் துணைவலியும் முதலாக வலியனைத்தும் தேர்ந்து அறிந்தனையினும், வேந்தன் மற்று அவை செய்யுமிடத்து, அவையவையிற்றுக்கு ஏற்ற காலம் அறியாக்கால் கருமம் சிதையும் ஆகலின், மற்று அதன் பின்னே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

11. காலமறிதல்.

(ப - உ.) காலம் அறிதலாவது வினைசெய்தற்கு ஆம் காலம் அறிதல். வலியறிந்தாலும் வினைசெய்யும் காலம் அறிந்து செய்ய வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 9.

**அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.**

(கா - உ.) எ - து.—வேந்தர்க்குச் செய்தற்கு அரிய கருமங்கள் என்பனவும் சில உளவோ இல்லை. மற்று எப்பொழுது எனின், தாம் தொடங்குவதோர் கருமம் கடைபோவதற்கு எற்கும் உபாயத்துடனே அடுத்த காலத்தைக் குறிக்கொண்டு செய்வாராயின் எ - று.

கருவி என்றது உபாயம் என்றது.

சாதாரங்கம் என்றுமாம்.

(ப - உ.) எ - து.—அருவினை என்று சொல்லப்படுவனவும் உளவோ? முடிக்கலாம் கருவியோடே கூடக் காலத்தை அறிந்து செய்ய வல்லாராயின் எ - று.

இது முடியாத வினையில்லை என்றது.

(1) கா. 2.

ப. 8.

பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

(கா - உ.) எ - து —மற்று இவ்வாறு தாம் தொடங்கும் கருமத்திற்கு ஏற்கும் காலத்தோடு இயைய ஒழுகவே அது தமது செல்வத்தை நீங்காமல் பிணிக்கும் கயிறு ஆம் எ - று.

ஒட்ட என்பது இயைய என்பது. தீராமை என்பது ஒழியாமை என்றது. ஆர்க்கும் என்பது பிணிக்கும் என்றது.

(ப - உ.) எ - து.—காலத்தொடு பொருந்த ஒழுகுதல் செல்வத்தை நீங்காமல் கட்டுவது ஒரு கயிறு ஆம் எ - று.

இனிக் காலம் அறிந்ததனால் பயன் சுறுவர் முற்படச் செல்வம் கெடாது என்றார். (2)

கா. 3.

ப. 7.

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(கா - உ.) எ - து.—தாம் செய்வது ஓர் கருமத்திற்கு எற்கு மாறு கிட்டுதற்கு அரிய பருவமானது வந்து கிட்டிய காலத்துப் பின் சென்று கழியாமல் பருவத்தே செய்தற்கு அரியனவற்றைச் செய்து கொள்க எ - று.

(ப - உ.) எ - து.—பெறுதற்கு அரிய காலம் வந்தால் அப் பொழுதே தன்னல் செய்தற்கு அரியவாகிய வினைகளைச் செய்து முடிக்க எ - று.

இது காலம் வந்தால் என்றது.

அரிது என்று நாணுது செய்ய வேண்டும்

(3)

கா. 4.

ப. 2.

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

(கா - உ.) எ - து.—தாம் செய்யக் கருதிய கருமத்திற்கு அடுத்த காலம் அப்பொழுது இல்லெனில், ஆனு மற்று அது வரும்வழி அது

னைக் குறிக்கொண்டு அமைந்திருப்பர் : யாரோ எனின், வையம் தமது கையகத்து ஆய தெறி தளராமல் ஆளக் கருதும் அரசர் எ - று.

(ப - உ.) எ - து.—வினைசெய்யும் காலம்வரும் அளவும் நினைத்து அசைவு இன்றி இருப்பர் : ஞாலத்தைக் கொள்ளக் கருதுபவர் எ - று.

இது காலம் வாவு பார்த்து இருக்குங்கால் பின்பு செய்யும் வினை புலப்படாமல் இருக்க வேண்டும் என்றது. (4)

கா. 5.

ப. 3.

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர் தாக்கற்குப் பேருந் தகைத்து.

(கா - உ.) எ - து.—ஒரு கருமம் செய்ய நெஞ்சின்கண் மேற் கோள் உடையனகிய வேந்தனைவன், மற்று அதற்கு அடுத்த பருவம் வந்து எய்தும் துணையும் மற்று அதன்கண் முயலாது ஒடுங்கியிருக்கின்ற ஒடுக்கமானது எத்தன்மைத்தோ எனின், மேற்கொண்டு நிற்கின்ற பொரு..... யாவை பொட்டெனத் தலை யொடு தலை முட்டுதற் பொருட்டுச் சிறிது நீங்கிச் செவ்வி பார்த்து நிற்கும் தகைமைத்து எ - று.

(ப - உ.) எ - து.—மனம் மிகுதி உடையவன் காலம் வரவு பார்த்து ஒடுங்குதல் போரைக் கருதின தகர் வலிபெறத் தாக்குதற் பொருட்டுப் பெயர்ந்தாற் போலும் எ - று.

இது காலம் வரும் அளவும் பொறுத்தால் வலிமிகும் என்றது.(5)

கா. 6.

ப. 5.

செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை காணிற் கிழக்காந் தலை.

(கா - உ.) எ - து.—பகைவரைக் கண்ட பொழுது இறுவரை காணுக்கால் சுமக்க, இறுவரை காணின் கீழாக விடவற்று ஆகும் தலை எ - று.

சுமக்க என்கை பொறுத்தல் என்றது.
கீழ்ப்படுத்தல் என்றது.

கிழக்காம் தலை என்றது

(ப - உ.) எ - து.—பகைவரைக் கண்ணினூலே காணின் தலையி னூலே சுமக்க : இறுவரை காணின், தலை கீழாகி விடலாம் எ - று.

பகைவரைக் கண்டு வாளாதே இருப்பது ஆண்மை அல்ல என்று கருதவேண்டா : அவரைக் கண்டால் தலையிலே கொண்டாற் போலத் தாழ்ச்சி செய்து பின்பு அவர் இகழ்ச்சியாலே தலையினின்று விழ விட்டாற் போல வினை செய்யலாம் என்று கூறப்பட்டது. (6)

கா. 7.
ப. 10.

ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

(கா - உ.) எ - து.—வேந்தாரேனும் சில நாள் ஆண்டிருத்தலே அன்றி இவ்வுலகம் முழுவதும் ஒருவர் தாமே ஆளக் கருதினும் கை கூடும்: எங்ஙனமோ எனின், தான் செய்யும் காரியத்துக்கு ஏற்ற பருவத்தைக் குறிக்கொண்டிருந்து மற்றது வந்து எய்திய பொழுது பழுதுபடாமல் பருவத்தின் கண்ணே வினைசெய்யின் எ - று.

(ப.- உ.) எ - து.—உலகம் எல்லாம் பெறுதற்கு நினைந்தாலுயினும் பெறலாம், காலத்தைக் குறித்து இடன் அறிந்து செய்வனையின் எ - று.

இஃது எல்லாப் பொருளும் எய்தும் என்றது. இனி இடன் அறிதல் கூறுகின்றார் ஆதலின் இனி அது பின் கூறப்பட்டது. (7)

கா. 8.
ப. 4.

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

(கா - உ.) எ - து.—தாம் செய்யும் கருமம் வாய்க்கும் பருவம் வருகாலம் தம்மேல் வியர்க்க வினைசெய்ய முயலார், மற்று என் செய்வர் எனின், அக்காலத்தைக் குறிக்கொண்டு நெஞ்சு புழுங்கி நிற்பார்

அறிவுடை அரசர் எ - று.

வேர்ப்பர் என்றது நெஞ்சு புழுங்கி நிற்பர் என்றது. புறம் வோரார் என்றது - உடம்பு வோரார் என்றது.

(ப - உ.) எ - து.—கதமென அவ்விடத்தே உடம்பு வோரார்: கமக்குச் செய்யுங் காலம் வரவு பார்த்து மனம் வேர்ப்பர் ஒள்ளியார் எ - று.

வேர்ப்பு - பொருமையால் வருவது ஒன்று. பகைவர் பொருத வற்றைச் செய்தாலுங் காலம் பார்க்க வேண்டும் என்றது. (8)

கா. 9.

ப 6.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(கா - உ). எ - து.—தாம் கருதிய கருமம் முடிவதற்கு ஒரு பருவம் வாய்க்கும் அளவும் உள் ஒடுங்கி இருக்கும் குருகின் தன்மை போலேயும் முடிவதற்கு ஒரு பருவம் வாய்த்த இடத்து மற்று அக் குருகு எறியும் தன்மை போலவும் காலம் கருதி இருக்க வேண்டும் அரசர்க்கு எ - று.

12. இடனறிதல்

(ப - உ.) எ - து.—காலம் பார்த்து இருக்கும் இடத்துக் கொக்குப்போல ஒடுங்கி இகழ்வின்றி இருக்க: வினை செய்தற்குச் சீர்த்த காலம் வந்த விடத்துக் கொக்குக் குத்துமாறு போலத் தப்பாமல் செய்க எ - று.

இது காலம் வரும் அளவும் இகழ்ச்சியின்றி இகழ்ந்தார் போல இருத்தல் வேண்டும் என்பதூஉம், காலம் வந்தாற் றப்பாமல் விரைந்து செய்ய வேண்டும் என்பதூஉம் கூற்று. (9)

கா. 10. ப. 1.

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(கா - உ.) எ - து.— கூகையாகிய புள்ளினை எறியும் இடத்துத் தனக்கு வாய்த்த காலமாகிய பகற்பொழுதின்கண் சென்று அடர்த்து வெல்லும் காக்கையானது. மற்று அங்ஙனமே வெல்லும் காக்கையை எறியும் இடத்துத், தனக்கு வாய்த்த காலமாகிய இருட்பொழுதின் கண் சென்று அடர்த்து வெல்லும் கூகையானது. இனி இவை போலத் தம்மில் தாம் மாறுபட்டுப் பொரும் மன்னவர்க்கும் தமக்குச் செயமாகிய வாய்ப்புடைக்காலம் அறிந்து அடர்த்தலே இயல்பு எ - று.

(ப - உ.) எ - து.—இராப்பொழுது வெல்லும் கூகையைக் காக்கை பகற்பொழுது வெல்லும். ஆதலான் மாறுபாட்டை வெல்லும் அரசற்குக் காலம் வேண்டும் எ - று.

இது காலம் அறிதல் வேண்டும் என்றது. (10)

(கா - உ.) அரசர் தாம் செய்வினைக்கு அடுத்த காலம் அறிந்தாலும் வினை இயற்றும் இடத்து இதுவும் இயைய வேண்டுதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

12. இடனறிதல்.

(ப - உ.) இடன் அறிதலாவது - வினை செய்யும் இடன் அறிதல். காலம் அறிந்தாலும் இடன் அறிந்து செய்ய வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 2.

சிறுபடையான் செல்லிடஞ் சேரி

னுறுபடையா

னூக்க மழிந்து விடும்.

(கா - உ.) எ - து.— உலகத்து ஒரு வேந்தன் சிறுபடையா ளன் ஆயினும் மற்றை மிகுபடையாட்சி வேந்தனவன் மற்று அவனது செலவு பயின்ற இடத்தைத் தான் மதியாது சென்று கிட்டுமாயின் தனது வலி அழிந்து கெட்டுவிடும் எ - று.

(ப - உ.) எ - து.— சிறுபடை உடையவனுக்கு இயலும் இடத்தே பெரும்படை உடையவன் பொருந்துவன் ஆயின் மனமிகுதி கெட்டு விடும் எ - று.

இஃது இகழ்ந்து செல்லின் வெற்றி இல்லையாம் என்றது.

(1) கா. 2.

ப. 8.

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு
மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

(கா - உ.) எ - து.—மாறுபாட்டோடும் பயின்ற வலியினையுடைய மன்னவாயினும், மற்று அவர்க்குச் தாம் பயின்ற நிலம் ஆகிய அரணினையுடைய நிலத்தைப் பொருந்தியதனால் உளதாம் ஆக்கமானது வென்றி முதலிய நன்மைகளையும் கொடுக்கும் எ - று.

முரண் என்பது மாறுபாடு. மொய்ம்பு என்பது வலி:

(ப - உ.) எ - து.—பகை கொள்ளும் வலியுடையவர்க்கும் ணைச் சேர்ந்தாகின்ற ஆக்கம் பல பயனையும் தரும் எ - று.

அர

இது பகைவரிடம் அறிதலே அன்றித் தமக்கு அறிந்த இடமும் அறிய வேண்டுமென்று அது கூறிற்று. (2)

கா. 3.

ப. 4.

சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

(கா - உ.) எ - து.—மதில் சிறை முதலாகிய நால்வகை வாய்ப்பும் யானை முதலிய படை வாய்ப்பும் இலர் ஆயினும் மற்று அம்மன்னவர் முதலாக மறத்தொழிலாளர் முன் பயின்ற நிலத்துப் பகைவேந்தர்க்குச் சென்று கிட்டுதல் அரிது எ - று.

(ப - உ.) எ - து.—அரண் மிகுதியும் பெருமையும் இலர் ஆயினும், மாந்தர் உறை நிலத்தின் கண் பொருந்துதல் அரிது எ - று.

இது, மாந்தர் உறைவிடத்துச்
வேண்டும் என்றது.

செல்லுங்கால் அறிந்து செல்ல

(3)

கா. 4.

ப. 7.

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து போற்றார்கட் போற்றிச் செயின்.

(கா - உ.) எ - து.—பெரும்படை வேந்தரோடு போர் ஆற்றுத சில படையாளரும் அவரோடு போர் ஆற்றிப் பொருகளத்து அடுவர்; அதுவும் எங்ஙனம் எனின், தமக்குச் சென்று நிலையுள்ள இடத்தை

12. இடனறிதல்

அறிந்து மற்று அப்பகைவரிடத் தற்ருலும் பெரிதும் வினைசெய்ய வல்லாராயின் எ - று.

குறிக்கொண்டு

ஆற்ருரும் என்பது வருபகை வேந்தனோடு போர் ஆற்ருதவரும் எனறது.

(ப - உ.) எ - து.—வலியிலாதாரும் வலியுடையாராய் வெல்வர் பகைவர் மாட்டு வினைசெய்யும் இடம் அறிந்து தம்மைக் காத்து வினை செய்வாராயின் எ - று.

இது வலியிலாதாரும் வெல்வர் என்றது.

(4) கா. 5.

ப. 5.

நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி னீங்கி னதனைப் பிற.

(கா - உ.) எ - து.—நெடிய ஆழமுடைய புனல் தனக்குச் சென்ற நிலம் ஆகலின், மற்று அவ்விடத்து யானை புலி மனித்தர் மற்றும் அனைத்துப் பகையும் வெல்லும் முதலையானது: மற்று அது தான் பயின்ற நிலம் அல்லாத கரைமீது படின், எறும்பும் அதனை அடும் ஆகலான், அரசர் முதலாக அனைவர்க்கும் இடம் அறிதல் பெரிதுமன் எ - று.

(ப - உ.) எ - து.—கெடிய நீரின்கண் பலவற்றையும் முதலே வெல்லும்: அது நீரினின்று நீங்குமாயின் அதனைப் பிற எல்லாம் வெல்லும் எ - று.

இது மேலதற்குக் காரணம் கூறிற்று. இவை ஐந்தும் இடம் அறிய வேண்டும் என்பது கூறிற்று. (5)

கா. 6.

ப. 6.

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு எண்ணவேண்டும்

காரியம் அனைத்

தும் ஒன்று ஒழியாமல் எண்ணிக்கொண்டு, பின் அதனது இடத் தோடு உட்படுத்தி வினைசெய்யின், தம் வீரப்பாடானது வேறு படைத் துணையி.....கு வேண்டா எனவே, தமது இடமும் தறு கண்மையும் எண்ணமுமே சாலும் எதிர்ந்தோரை வெல்லுதற்கு எ - று.

எஞ்சாமை என்பது ஒழியாமை என்றது.

(ப - உ.) எ - து.—தப்பாமல் எண்ணி இடத்தோடு பொருந்த வினைசெய்ய வல்லனாயின், வேறு துணை ஆவானைத் தேட வேண்டு வது இல்லை: அஞ்சாமையே வேண்டுவது எ - று.

இடம் அறிந்தால் துணை இன்றியும் வெல்வர்
என்றது. (6).

கா. 7.

ப. 10.

எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(கா - உ.) எ - து.—போர்வினை செய்தற்கு எண்ணி வந்த பகை வானவர் எண்ணமும் பழுதுபடுவர்: எவ்விடத்து எனின், நமக்கு இடமாவது இது என்று எண்ணிக்கொண்டு வினை செய்வாராயின், மற்று அப்பகைவர்க்கு எண்ணமே உள்ளது: இவர்க்கு எண்ணமும்

இடமும் இரண்டும் உண்டு எ - று.

இடன் அறிந்து துன்னியார் என்றது இது நமக்கு இடம் என்று அறிந்து பொருந்தி வாழ்வார் என்றது. துன்னி என்றது மற்று அவ்விடத்துக் கூடி நின்று என்பது.

(ப - உ.) எ - து.—தன்னைக் கெடுத்தற்கு எண்ணினவர்கள் தங் கள் எண்ணம் இழப்பர்கள்: வினை செய்யும் இடம் அறிந்து கட்டோ ரவர்கள் மனம் பொருந்திச் செய்வாயின் எ - று.

இஃது இடம் அறிந்தாலும், செய்வோர் அமைதியும் வேண்டும் என்றது. இனி அமாத்தியர் இலக்கணம் கூறுகின்றார் ஆகலின் இது பின் கூறப்பட்டது. (7)

கா. 8.

ப. 9.

கடலோடா கால்வ னெடுந்தேர்
கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

(கா - உ.) எ - து.—நிலத்து ஓடுதற்கு உரியன ஆகிய கால் உரு முடைய பெருந்தேரானவை தமக்கு நிலம் அல்லாத கடலுள் ஓடம்மாட்டா: மற்று அக்கடல் மீது ஓடும் கடுஞ்செலவு உடைய நாவாய்களும் தமக்கு இடம் அல்லாத தரைமீது ஓடவும் மாட்டா: எனவே அரசர் முதலாக அனைவர்க்கும் தத்தம் இடம் அறிந்து இயற்றுதலே உறுதி உடைத்து எ - று.

(ப - உ.) எ - து.—கால் வலிய பெடுந்தேர் கடலின்கண் ஓடாது: கடலின்கண் ஓடும் நாவாயும் நிலத்தின்கண் ஓடாது எ - று.

இஃது இடத்திற்கு ஆம் கருவி பண்ணை வேண்டும் என்றது. (8)

கா. 9.

ப. 3.

காலாழ் களரியி னரியடுங் கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு.

(கா - உ.) எ - து.—தன் சினம் தணியாத கறுகண்மை பெரி
தும் உடைத்தாய் மேலவர் எறியவும் கீழவர் குத்தவும் பிறவும் ஆகிய

வேல் அழுந்திய வடு அழுத முகத்தை உடைய
கடுங்களிறுனது

தனது கால் உள்ளழுந்தும களரிடம் புக்குக் கொடுத்துயர் உறு
மிடத்து நரி குறுகி மத்தத்தைக் கவ்விப் பறித்து நகர்ந்து அதனைப்
படுவினை செய்யும்: அதனால் உறுபகை அஞ்சாத் தறுகண் மன்னவ
ராயினும் இடம் அறிய வேண்டும் எ - று.

(ப - உ.) எ - து.—கண்ணஞ்சாத வேல் அழுந்தப்பட்ட முகத்
தினையுடைய களிற்றைக் கால் வீழப்பட்ட களரின்கண் நரி கொல்ல
வற்றும் எ - று.

களர் - போரிற் புறமான கழி. மேலதற்குக்
காரணம் கூறிற்று.(9) கா. 10.

ப. 1.

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(கா - உ.) எ - து.—உலகத்து மன்னர் முதலாக மாந்தர் யாவ
ரும் அவையிற்றுக்கு இயைந்த இடம் கண்டபின் அல்லது போர்த்
தொழில் முதலாய எல்லாத் தொழிலினும் யாதானும் ஒன்று தொடங்
குவது செய்யற்க: மற்றும் இது நமக்கு எளிது எனக்கொண்டு
யாவையும் இகழ்வது செய்யற்க: மற்று அதனால் எவ்வினையும் இடம்
குறிக்கொண்டே இயற்றுக எ - று.

(ப - உ). எ - து.—முடியும் இடம் கண்டால் அல்லது யாதொரு வினையும் தொடங்கா தொழிக: எளிது என்று இகழ்வதும் செய்யா தொழிக எ - று.

இம்மூன்று இடன் அறிதல் வேண்டும் என்பதூஉம், பகைவர் இடம் சிறிது என்று இகழலாகாது என்பதூஉம் கூறிற்று. (10)

(கா - உ.) இனிப் பெரியாரைத் துணைக்கோடல் தொடங்கி

மற்று வலியறிதல், காலமறிதல், இடன் அறிதல் காறும் எஞ்சாமல் தெரிந்து பின் ஒன்றினைத் தேறுதலே கடன் என்பதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

13. தெரிந்து தெளிதல்.

(ப - உ.) தெரிந்து தெளிதலாவது அமாத்தியரை ஆராய்ந்து தெளிதல். காரியம் தப்பாமல் எண்ணி அதற்கு ஆம் காலமும் இடனும் அறிந்தாலும் அது செய்து முடிக்கும் அமாத்தியரையும் எண்ணிக் கொள்ள வேண்டுதலின் அவற்றின் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 9.

அறம்பொரு ளின்ப முயிரெச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும். 52

திருக்குறள் - பொருட்பால்

(கா - உ.) எ - து.—மறை முதலாகிய நூல் யாவற்றினும் சொன்ன அறம் பொருள் இன்பம் வீடு என வகுத்த நால்வகை யாக லின், அவற்றுள் அறமானது பாவம் அனைத்தையும் பற்று அறுப்பது என்றும், இருமை இன்பம் எய்துவிப்பது என்றும், அவற்றுள் பொருளானது பலவகைத் தொழிலினும் பொருள் வருமேனும் தமக்கு அடுத்த தொழிலின் ஆகிய பொருளே குற்றம் அற்ற நற் பொருள் என்றும், மற்று இனி இன்பமாவது நற்பின் நிருந்திய பொற்புடை யாட்டி இல்லறத் துணையும், இயல்புடை மக்களும் இரு தலையானும் இயைந்த இன்பமும், மற்றும் இவற்றுள் உயர்ந்த வீடாவது பேதமையுற்ற பிறப்பு இறப்பு என்னும் வஞ்சப் பெருவலைப் பட்டு மயங்காது நிலைபெற நிற்கும் வீடு இது என்றும், இங்ஙனம் இவை நான்கின் திறம் தெரிந்து, பின் தமக்கு அடுத்தது ஒன்றினைத் தலைத்தேறித் தெளிய அடுக்கும் அரசர்க்கு எ - று.

உயிரெச்சம் என்பது முத்தி என்றது.

பரி. பா - மி. 'உயிரச்சம்'.

(ப - உ.) எ - து.—அறமும் பொருளும் இன்பமும் உயிரச்ச மும் என்னும் நான்கினையும் கூறுபடுத்து ஆராய்ந்து பின்பு தேறப் படும் எ - று.

மேற்கூறிய குற்றமும் குணமும் ஆராய்தலே யன்றி அறத்தை வேண்டியாதல், பொருளை வேண்டியாதல், இன்பத்தை வேண்டி யாதல், அச்சம் உளதாம என்றுதல் அரசன் மாட்டுத் தீமையை நீனே யாமையை ஆராய்ந்து பின்பு அவரைத் தேறப்படும் என்று கூறப் பட்டது (1)

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(கா - உ.) எ - து.--தான் பிறன் ஒருவனைடு மருவுதற்கு முன்னமே அவனது குற்றமும் குணமும் தெரிந்து ஆராயாது வறிதே பிறன் ஒருவனை நமக்கு இவன் துணை என்று நப்புதலைச் செய்தலாவது மற்று அதன்பின் முறையே வேறு ஒன்றானும் தீராத மாபு கேட்டைடக் கொடுக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—பிறனை ஆராயாதே வழிமுறை என்று தெளிந்தவனுக்குத் தீர்தல் இல்லாத துன்பம் உண்டாக்கும் அத்தெளிவு எ - று.

வழிமுறை என்றது தன் வழியின் உள்ளார்க்கு அவன் வழியின் உள்ளார் அமாத்தியராய்ப் போந்த முறைமை. குலத்தின் உள்

ளார்க்கு அமாத்தியர் ஆயினர் வழியின் உள்ளாரைத் தேறலா மென்பது வியாதன் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது. (2)

கா. 3.

ப. 10.

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

(கா - உ.) எ - து.—யாதொரு காரியம் தேர்ந்து செய்யும் இடத்தும் யாரையும் அவரது குணமும் குற்றமும் ஓர்ந்து உணராது தேறுதலைச் செய்யற்க. மற்று அவரைத் தேர்ந்து உணர்ந்த பின்னும் தன்னுடன் பிறந்தார் சுற்றத்தாரேனும் அவர் அவரால் கொள்ளலாகும் கருமம் கொள்க; மற்று ஆகாதன கொள்ளற்க எ - று.

(ப - உ.) எ - து.—யாவரையும் ஆராயாது தெளியாது ஒழிக: ஆராய்ந்த பின் அவரால் தேறப்படும் பொருளைத் தேறுக எ - று.

மேல் நாலு பொருளையும் ஆராய வேண்டு மென்றார்: அங்ஙனிலும் ஓரோர் பொருளில் தேற முடியாதை அவாவர் பொருளிலே தெளிக: எல்லாப் பொருளிலும் தெளிக எ - று. (3)

கா. 4.

ப. 2.

அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுப் பழி.

(கா - உ.) எ - து —உலகத்துச் சிலரொடு நண்பும் நயமும் அற்று ஒழுகுவாரைக் கண்டால் தாமும் அவரைத் தேறுதலைப் பரிகரிக்க: என்னை எனின்..... னிலையர் ஆகலான் பாங்கினால் தம்மொடு பரிவிலர்: மற்று அதுவேயும் அன்றிப் பழி அஞ்சுதலும் இலர் எ - று.

(ப - உ.) எ - து.—ஒழுக்கம் அற்றாரைத் தேறுதல் தவிர்க: அவர் ஓரிடத்தும் பற்று உடையரும் அல்லர்: பழிக்கும் நாணுப் ஆதலான எ - று.

அசனேடு ஒத்த மறைத்த குற்றம் உடையாரைத் தேறலாம்; அவர் தம் குற்றம் மறைக்குமாறு போல அவர் குற்றமும் மறைப்பர் ஆதலான் என்பது மகேச்சுரர் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது. (4)

கா. 5. ப. 6.

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

(கா - உ.) எ - து.—உலகத்துப் பெரியோரது பெருந்தன்மைக்கும் சிறியோரது சிறு தன்மைக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒருவர்

தேறி அறிய வேண்டுங்கால் வேறு ஒன்றும் வேண்டுவது இல்லை: மற்று என்னை எனின் அவர் அவர் செய்யும் செய்தி வேற்றுமை தானே அவரது தகுதி மாற்று அறியும் கருவி ஆகிய உரைகல்லும் நிறை தூக்கிய கட்டளைக் கல்லும் எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனைப் பெரியன் ஆக்குதற்கும் சிறியன் ஆக்குதற்கும் வேறு தேட வேண்டா: அவர் அவர் செய்ய வல்ல கருமம் தானே படிக்கல் லாம்: அதற்குத்தக ஒழுக எ - று.

ஒரு காரியத்தில் முற்பட விட்டு அவன் செய்யவல்ல அளவு கண்டு பின்னைப் பெரியன் ஆக்க அமையும் என்பது நாரதர் மதம். இது குற்றம் சூழுமையால் யாவர்க்கும் உடம்பாடு என்று கொள்ளப் படும். (5)

கா. 6. ப. 3.

காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

(கா - உ.) எ - து.—ஒருவரோடு ஒருவர் வைத்த காதலுடைமையே மூலமாக உலகத்து அறிவது அறியாதாரைத் தெளிதல் யாது: மற்று அது தானே ஒருவர்க்கு அனேக அறிவு கேட்டையும் கொடுக்கும் எ - று.

காதன்மை கந்தா என்பது ஒருவர் மாட்டு ஒருவர் வைத்த காதலுடைமையே மூலமாக எ - று.

(ப - உ.) எ - து.—அன்புடைமையே பற்றுக அறிவுடையார் அல்லாதாரைத் தேறுதல் எல்லா அறியாமையும் தரும் எ - று.

அரசற்கு அன்புடையாரைத் தேறலாம் என்பது பராசரர் மதம். இஃது இவ்வளவிலல் தேறல் ஆகாது என்றது. (6)

கா. 7. ப. 8.

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(கா - உ.) எ - து.—ஒருவரைச் சேர்தாக்கிக் கொள்ளும் இடத்து இவர் மாட்டுக் குணம் எத்துணை உள வென்றும் குற்றம் எத்துணை உள வென்றும் தெரிந்து மற்று அதன் பின்னர் அவற்றுள் மிகுதலுடையனவற்றைத் தெரிந்து, இதின் குணம் மிக்கனவாயின் தெளிந்து கொள்க: அல்லது குணம் மிகுதி இல்லையாயின் தெளிய வேண்டா

எ - று.

(ப - உ.) எ - து.--ஒருவனுக்கு உள்ள குணத்தையும் ஆராய்ந்து குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் மிக்கதனை அறிந்து அவற்றுள்

. 13. தெரிந்து தெளிதல் 55 ஞும்

தலைமையானும் பன்மையானும் மிக்கதனை அறிந்து

கொள்க

எ - று.

இது கௌடிலியர் மதம். கார்யம் பல ஆதலின் அது செய்வாரும் பலர் வேண்டும் ஆதலால் அவரெல்லாரையும் நற்குணத்காகத் தேடுதல் அரிது என்பதனால் இது கூறப்பட்டது. (7)

கா. 8.

அரியகற் றூசற்றூர் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

ப. 1.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்துப் பலாானும் கற்றற்கு அரியன ஆகிய திருந்திய நூல்களை நிரையக் கற்று மற்று அதனானே இருமைக் குற்றமும் நீங்கினூர் மாட்டும் பற்றி ஆாயும் காலத்துக் குற்றம் இல்லாமைச் சான்ரோர் ஆதல் அரிது எனவே கீழ்ச்சொல்லிய ஆங்கே தெரிந்து தெளிக என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ) எ - து —கற்றற்கு அரியனவற்றைக் கற்றுக் குற்றம் அற்ரூர் மாட்டும் ஆாயுங்கால் குற்றமின்மை இல்லை எ - று.

கல்வி யுடையார் உள்ளும் புறம்பும் தூயாரைத் தேறலாம் என்பது துரோணாசாரியர் மதம்: அவ்வளவில் தேறலாகாது என்று இது கூறப்பட்டது. (8)

கா. 9. ப. 5.

தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(கா - உ.) எ - து.—முன்னம் ஒருவனை ஒருகால் தேருளைய் மற்று அவனை விரைந்து தெளிகின்ற தெளிவும், இனி இவ்வாறு அன்றித் தான் தெரிந்து தெளியற்க என்றும் பின்பு ஐயுறுதல் தம் குற்றம் ஆதலான் இங்ஙனம் தெளிந்தான்.....ஐயுறவும் என்றும் இவ் விரண்டும் தன் நெஞ்சுள் ஆரூ அருந்துயரம் தரும் எனவே ஒருவனை முன்னுறத் தெரியாதே..... எஞ்ஞான்றும் செய்யற்க எ - று.

(ப - உ.) எ - து.—ஆாயாது தெளிதலும் தெளிந்த பின்பு ஐயுறுதலும் தீர்தல் இல்லாத துன்பத்தினைத் தரும் எ - று.

முன்பு ஒரு வினை செய்து அறியாதாரைத் தேறலாம். அவர்கள் வறியர் ஆதலான் என்பது உத்தவாசாரியார் மதம். அது குற்றம் என்று இது கூறப்பட்டது. (9)

கா. 10.

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

ப. 7.

(கா - உ.) எ - து.—மற்று இவ்வுலகத்துத் தாமும் அருங்குடிப் பிறந்த ஆசர் ஆகலான் தம்மொடும் அருந்துதற்கு அமைந்தோணி நற்குடிப்பிறந்து மறத்தும் ஒரு குற்றம்வரின் அதனை விரைந்து அறுத்தற்கு அமைந்த மானம் உடையோன் யாவன்? மற்று அவன் கண்ணதே தாம் தெரிந்து தெளியும் தெளிவு எ - று.

ஈண்டுப் பரியும் என்பது அறுக்கும் என்றுயிற்று.

(ப - உ.) எ - து.—உயர் குடிப்பிறந்து காம வெகுளி முதலான குற்றத்தினின்று நீங்கித் தனக்கு வரும் பழியை அறுக்க வல்ல நாணம் உடையான் கண்ணே தெளிதல் எ - று.

இது சுக்கிரர் மதம். இதுவும் படும்.

உடம்பாடு என்று கொள்ளப்

(கா - உ.) இனி மற்று அரசாளுநர் இங்ஙனம் சிலரைத் தெரிந்து தெளிந்த பின் மற்று அவரைக் கொண்டு தம் கருமத்தை ஆளுதல் வேண்டும் என்பதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

14. தெரிந்து வினையாடல்.

(ப - உ.) தெரிந்து வினையாடலாவது வினை செய்வாரும் அவரால் செய்யப்படும் வினையும் பல ஆதலின், அவ்வவரால் செய்யப்படும் வினைகளை அறிந்து அவரை இட்டுச் செய்வித்தல். மேல் வினை செய்வாரை ஆராய்ந்து கூட்ட வேண்டும் என்றார்: அவரால் செய்யப்படும் வினையும் ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதனால் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 3.

நன்மையுந் தீமையு நாடி நயம்புரிந்த தன்மையா ளளப் படும்.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்து வேந்தர் ஒருவனைக் கொண்டு ஒருவனை ஆட்சிசெய்யும் இடத்துக் கீழ்ச்சொல்லிப் போந்த முறைமையானே அவரது நன்மைக் கூறும் தீமைக் கூறும் தெரிந்து மற்று அவற்றுள் நல்லொழுக்கம் மிக்கு வரும் தன்மைக் கண்ணே வினை ஆட்சி செய்ய அடுக்கும் எ - று.

பரி. பா - மி. " நயம்புரிந்த ".

(ப - உ.) எ - து.—நன்மையானவற்றையும் தீமையானவற்றையும் ஆராய்ந்து தீமையை ஒருவி நன்மையின் கண்ணே பொருந்தின தன்மை யுடையவனைச் செய்வானாகப்படும் எ - று.

இது பெரும்பான்மையும் அற ஆராய்ச்சிக்குக் கடவாரை கிற்று.

நோக் 14. தெரிந்து
(1)
வினையாடல் 57.

கா. 2.

ப. 7.

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

(கா - உ.) எ - து.—இக்கருமத்தை இதனால் இவன் பற்றி முடிக்க வல்லான் என்று ஆராய்ந்து தெளிந்த பின் மற்று அக்கருமத்தை அவனிடத்து விடுக என்னவே, இனிச் சிறிதும் அல்லவாம் என்று கருதாது ஆங்கு அமைந்து ஒழுக எ - று.

(ப - உ.) எ - து.—இக்கருமத்தினை இக்கருவியாலே இவன் செய்து முடிக்க வல்லன் என்று ஆராய்ந்த பின் அக்கருமத்தினை அவன்கண் விடுக எ - று.

இது பெரும்பான்மையும் சேனாபதியை

டது.
நோக்கிக் கூறப்பட்
(2)

கா. 3.

ப. 6.

வினைக்குரிமை தாடிய பின்றை யவனை
யதற்குரியனாக்குக செயல்.

(கா - உ.) எ - து.—வேந்தன் ஒருவனைத் தனது கருமத்திற்கு இனி இவனும் உரியன் என்பதோர் உரிமை ஆராய்ந்து அமைந்த பின்பு யாது செய்யத் தகுவது எனின், மற்று அவனை எவ்வாறு பேணி ஆக்கினால் உரிமையாம்; மற்று அவ்வாறு அனைத்தும் ஆக்கிய பின்பு மற்று அதற்கு உரியனாகச் செய்க எ - று.

(ப - உ.) எ - து.—.....யாராய்ந்த பின் அவனை அவ்வினை செய்தற்கு உரியனாகப் பண்ணுக எ - று.

ஒழிந்த காரியங்களில் வினை செய்வாரை ஆக்குமாறு கூறிற்று.(3)

கா. 4.

ப. 2.

செய்வானை நாடி வினைநாடிக்
காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(கா - உ.) எ - து.—கீழ்ச்சொன்ன வகையானே வினை செய்யத் தகுந்த.....து வென்றதனையும் ஆராய்ந்து மற்று அதனை அதற்கு ஏற்ற காலத்துடன் அடுக்குமாறு குறிக்கொண்டு செய்க

அரசர் எ - று.

(ப - உ.) எ - து.—வினை செய்வானையும் ஆராய்ந்து அவ்வினையின்து இயல்பையும் ஆராய்ந்து அது முடியுங் காலத்தோடே பொருந்த அறிந்தபின் அவ்வினையை அவன் செய்வாளாகப்படும் எ - று.

8

பேல் வினையினது இயல்பு கூறினார்: இது பொதுவாகக் கூறிற்று.

செய்விக்குமாறு
(4)

ப. 1.

அறிந்தாற்றிச் செய்கற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(கா - உ.) எ - து.—மற்று இங்குச் சொன்ன முறையே யாம் இவற்கு இது முடிக்குவம் என்று அறிந்து, மற்று அவ்வினை முடியும் அளவும் ஒழுக நடத்தி அங்ஙனம் செய்ய வல்லோற்கு அல்லது வறிதே இவன் நமக்குப் பெரிதும் நட்பிற் சிறந்தான் என்று ஒரு வினையை நீ இது செய்வாயாக என்று ஏவுதற்குத் தகாது; அதனால் இவ்வினைக்கு இவன் தாயன் என்று ஏவும் இத்துணை அல்லது சுற்றமும் தொடர்பும் பிறவும் நோக்கி வினைக்கு ஏவுதல் என்றும் தகாது எ - று.

(ப - உ.) எ - து.—வினைதான் உள்பாடு அறிந்து செய்யும் காலத்து உற்ற அன்பத்தையும் பொறுத்துச் செய்ய வல்லாற்கு அல்லது தமக்குச் சிறந்தான் என்று ஒருவனை ஏவும் பகுதி உடைத்தன்று எ - று.

இது வினையினது இயல்பு கூறிற்று.

(5)

கா. 5.

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

ப. 4.

(கா - உ.) எ - து.—நட்டார் சுற்றத்தார் ஆயினும் ஆக : அன்றிப் பிறரே ஆயினும் ஆக : யாவன் ஒருவன் தன்மாட்டு அன்பும், காரியா காரியங்கள் தேறித் தெளிய வல்ல அறிவும், தமது உயிரும் பொருளும் அவனுழைப் பெரிதும் தேறலாவதோர் தேற்றமும், மற்றும் தெறி யல்லனவற்றின் கண்ணே அவாவின்மையும் என்று இங்ஙனம் சொல் லப்பட்ட நான்கும் குறைவின்றிப் பெரிதும் உடையான் யாவன் மற்று அவன் கண்ணதே யாகத் தெளிந்து வினைசெய்யும் திறம் எ - று.

(ப - உ.) எ - து.—அன்புடைமையும் அறிவுடைமையும் ஒரு பொருளை ஆராய்ந்து துணிவுடைமையும் அவாவின்மையும் என்னும் நான்கு குணத்தினையும் முழுதே உடையவன் கண்ணதே எல்லாப் பொருளின் கண்ணும் தெளிதல் எ - று.

இது பெரும்பான்மையும் காரிய ஆராய்ச்சிக்கு அதிபதியை நோக்கிற்று. (6)

14. தேர்ந்து வினையாடல்

59

கா. 7.

ப. 5.

வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை யாராய்வான் செய்க வினை.

(கா - உ.) எ - து.—பொருள் வருவாயும் பலவாற்றானும் பெருக்கி மற்று அது வளப்படி வருகின்ற பொருள்களையும் சிதறாமல் ஒரு வகைப்படுத்தி இரண்டுக்கும் இடையூறு வந்துற்ற காலத்து மற்று அவ்விடையூறுதலை அழித்து போமாறு சிந்தித்துத் தெளிய வல்லான் யாவன் மற்று அவன் செய்க ஆசர்க்குக் கருமம் எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் வருவதற்கு இடம் ஆனவற்றை முன்பு நின்ற நிலையிற் பெருக்கி அவ்விடங்களில் உண்டாகும் பயனை முன்பு நின்ற நிலையால் உண்டாக்கி அவ்விடத்து உற்ற மிகுதி குறைவுகள் ஆராய வல்லவன் வினை செய்வானாக எ - று.

பொருள் வருவதற்கு இடமாவது நிலம் முதலான இடம். அதனைப் பெருக்குதலாவது காடு கெடுத்து நாடு ஆக்குதல் முதலாயின. வளம் படுத்தலாவது பயிர் ஏற்றுங்கால் வான் பயிர் ஏற்று வித்தலும் பாழான இடங்களிலே குடியேற்றி ஆயம் பொருள் உண்டாக்குதலும். இது பெரும்பாலும்.....செய்வானை சோக்கிற்று. (7)

கா. 8. ப. 10.

எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான் வேறுகு மாந்தர் பலர்.

(கா - உ.) எ - து.—உலகத்து ஆசர் ஒருவரை எனைத்து வகையானும் தெளிந்த இடத்தும், மனனும் கரும வகையிற்றால் வேறுபட்டு நிற்கும் மாந்தர் உலகத்துப் பலர் உளர் ஆகலின், அதனால் தாம் பிறர்க்குச் செய்யும் கருமத்தின்கண் வரும் பொருள் முதலாகிய பேறு கண்ட இடத்துத் தமது நெறியினைத் தோராது புரிய நிற்கும் புல்லிமை யுடையோரும் உளர் ஆகலாற் பெரிதும் தெரிந்து வினை அடைக்க வேண்டும் எ - று.

(ப - உ.) எ - து.—.....

.....

.....எ - று. (8)

கா. 9.

ப. 9.

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

(கா - உ) எ - து.—யாவரையும் கருமத்தின் கண் தெளிதல் அருமைத்தாகலான், தான் தெளிந்தவர் மாட்டும் அவர் தனது வினை

செய்யுமிடத்தும் அதனை இகழாது பெரிதும் ஆராய்ந்து போதுக அரசனனவன்: அது என்னையோ எனின், இங்ஙனம் ஆராயவே மற்று அவ்வினை செய்வேவான் தனது இயல்பினனும் அச்சத்தானும் கெறிகோடான் ஆகலான் கோடாமையாலே அவ்வினைவழி யடிப் பட்டு வருகின்ற உலகம் கோடாது: எனவே உலகத்து மக்கள் அனைவரும அரசன் சூழ்ச்சி அறிந்து அருகெறிக்கண் நிற்பார் எ - று.

(ப - உ.) எ - து.—வினை செய்வான் கோடா தொழிய உலகம் கோடாது செவ்வையிலே நிற்கும் ஆதலால் அவன் தோறும் ஆராய்க மன்னவன் எ - று.

செயலை நாள்

இது வினை செய்வான் செயலை நாள்தோறும் ஆராய வேண்டு மென்றது. முறை செய்வான் என்றதனால் அற ஆராய்ச்சி செய் வாரை நோக்கிற்றே ஆயினும் ஏனை அமாத்தியர்.....செய்தல் தொழிலுடையாராதலால்..... (9)

கா. 10.

ப. 8.

வினைக்கண் வினையுடையான்

கேண்மைவே ருக

நினைப்பானை நீங்குந் திரு.

(கா - உ.) எ - து.—தனது காரியத்தின் கண் சூழ்ச்சி பெரிதும் உடையோன் யாவன் அவனது நட்பினை யாதானும் ஒருவாற்றான் வேறுபடக் கருதும் வேந்தனை நீங்கிப் போம் செல்வம்: ஆகலான் அது நோக்கி அவனொடு பெரிதும் நட்புடையன் ஆதல் அரசற்கு இயல்பு எ - று.

(ப - உ.) எ - து.—வினையிடத்து

வினை செய்ய வல்லவனது நட்பை வேறுக

நினைக்கும் அரசனைத் திருமகள் நீங்குவள் எ - று.

இது வினை செய்ய வல்லாரை அருள் பண்ண வேண்டு மென் பதூஉம், அவருடன் மாறுபட வொழுகிற் பொருள் கேடுவரும் என்ப தூஉம் கூறிற்று. (10)

(கா - உ.) இனி மற்று இவ்வாறு அரசர் தமக்குத் தொழில் செய்யும் மாக்களை ஆணைகடத தகுவதாயினும் மற்று இவரினும் இவர் வினைவழிக் கொணர்ந்து ஈட்டிய தம் பொருள் இனிது துகர் தற்கு உரியர் ஆகிய சுற்றம் தழாக்கால் பொருளினன் ஆகிய பயன் இனிது ஆகலான மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

15. சுற்றந்தழால்.

(ப - உ.) சுற்றம் தழாலாவது அரசன் தனது சுற்றத்தினேடு பொருந்தி ஒழுகுதல். மேல் அமாத்தியர் மாட்டு அரசன் ஒழுகும் நிறன் கூறினார்: இனிச் சுற்றத்தார் மாட்டு அரசன் ஒழுகும் நிறன் கூறுகின்றார் ஆகலின் இதன் பின் கூறப்பட்டது.

15. சுற்றந்தழால்

61

கா. 1.

ப. 2.

கொடுத்தலு மின்சொல்லு மாற்றி னடுக்கிய சுற்றத்தாற் சுற்றப் படும்.

(கா - உ.) எ - து.—பொருள் வழக்கமும் இன்சொல் வழக்கமும் இவர்க்கு நடத்த வல்லவன் ஆயின் மற்று அவன் பெரிதும் பயின்ற சுற்றத்தினாற் சூழப்படும் எ - று.

(ப - உ.) எ - து.—வேண்டும் அளவு கொடுத்தலும் இன்சொல் கூறுதலும் செய்வான் ஆயின் தனக்கு முன்னுகியும் பின்னுகியும் வருகின்ற சுற்றத்தாலே சூழப்படுவான் எ - று.

இஃது ஒழுகும் திறன் கூறிற்று.

(1) கா. 2.

ப. 1.

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல்
செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(கா - உ.) எ - து.—அரசனனவன் தான் பெருஞ் செல்வம் பெற்றதனல் பின்பு பெற்ற பயன் யாதோ எனின் அதனை வழங்கு மாறு வழங்கி அங்ஙனம் சுற்றத்தால் சூழப்படுமாறு செய்து ஒழுகலே அரசர்க்கு இயல்பு எ - று.

(ப - உ.) எ - து.—சுற்றத்தாலே சூழப்பட்டு ஒழுகுவது செல்வத்தைப் பெற்ற அரசனன் உண்டாய பயன் எ - று.

இது சுற்றம் தழீஇ ஒழுக வேண்டும் என்றது.

(2) கா. 3.

ப. 6.

விருப்பறுச் சுற்ற மியையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும்.

(கா - உ.) எ - து.—தம் மாட்டு உள்ளத்தால் விரும்புதலே அருச் சுற்றமானது தம் பொருள் கொண்டு நுகரின் மற்று அது மேன் மேலும் வந்து அரும்பித் தோன்றுதல் அருத செல்வம் பலவற்றையும் கொடுக்கு மெனவே அவர் 'நுகர்தலின் மறுமைப் பயனும் மற்று ஈண்டு அவரால் ஆகும் ஆக்கம் பலவுள ஆகலின் இருமைப் பயனின் விரிவாகிய ஆக்கம் பலவும் தமக்கு எய்தும் எ - று.

(ப - உ.) எ - து.—அன்பு அருச் சுற்றம் ஓரிடத்தே பொருந்தி ஒழுகுமாயின் அது இளப்பு அரு ஆக்கம் ஆகிய பலவற்றையும் தரும் எ - று.

பிள்ளைகளை வேறு வேறு இடத்து நிறுத்த வேண்டும் என்பது சில ஆசாரியர் மதம். அதனை மறுத்து மக்களை ஓரிடத்தே கொண் 62 திருக்குறள்

- பொருட்பால்

டிருக்க வேண்டும் என்பதூஉம் அதனானே குலம் உம் கூறிற்று.

வளரும் என்பதூ

கா. 4.

ப. 5.

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

(கா - உ.) எ - து.—அரசர்க்கு வரம்பாகிய செல்வமானது இவ்வாறு சுற்றம் சூழ்தல் இவை இன்றித் தனித்துடைய அரசர் வாழ்க்கையானது எத்தன்மைத்தோ எனின் மற்று அது உலகில்

குளச் சூழலானது சூழ்ந்து நின்று பாதுகாக்கும்
வந்து நிறைந்த அத்தன்மைத்து எ - று.

கரை இன்றி நீர்

அளவு என்பது தனக்கு வரம்பாகிய செல்வம் என்றது. அளாவுதல் என்பது சுற்றத்தொடு விசாரிக்க என்றது. குளவளா என்றது குளம் சூழல் என்றது. கோடின்றி என்றது கரை இன்றி என்றது.

(ப - உ.) எ - து.—கலக்கப் படுவானோடு கலப்பின்றி ஒழுகுவானது வாழ்க்கை குளமாகிய வளைவு கரை இன்றி நீர் நிறைந்தாற்

போலும் எ - று

இது சுற்றம் தழுவிக் கொள்ளாக் கால் செல்வம் காவல் படாது என்றது. இத்துணையும் சுற்றத்தார் எல்லாரோடும் ஒழுகும் திறன் கூறிற்று. (4)

கா. 5.

ப. 4.

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

(கா - உ.) எ - து.—அரசரானவர் வையம் காவல் பற்றிக் கொண்டு வாழும் காலம் வாழ்தலேயும் அன்றி மற்று அவர் பற்று அற்ற இடத்தும் பழமையை மேற்கொண்டு அவரைக் கைவிடாது நிற்றலும் சுற்றத்தார் மாட்டே உளவாம் எ - று.

(பி - உ.) எ - து.—பொருள அற்ற கண்ணும் பழமையைக் தொண்டோடி விடா தொழிதல் சுற்றத்தார்க் மாட்டே உளவாம் எ - று.

இஃது இல்லாத காலத்தும் விடார் என்றது.

கா. 6. பி. 9.

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

(கா. - உ.) எ - து.—குரவர் முதலிய மூத்தோர் யாவர், மற்று இவர் தாழ் தகாத்ண செய்யின் தகாது என்று அடித்தலும், கல்லாது

இகழின் கல்லென்று கழறலும் செய்தால் மேக்கு இவை உபதேசம் என்றும் கொள்ளாது செய்யின் மற்று அச்சுற்றத்தாரது பொருந்தாமையால் தம்மைக் ங்கவிடுதல் காரணம் இன்றி வரும் எ - று.

தமராகி என்றது தமக்கு உரியராகி என்றது. தற்றுறந்தார் என்பது தன்னைத் துறந்தார் என்பது. கல்லுதலாவது அடித்துச் சொல்லுதல். அமராமை என்பது பொருந்தாமை.

(ப - உ.) எ - து.—முன்பு தமக்குத் தமராகி வைத்துத் தன்னை விட்டுப் போனவர்கள் சுற்றமாதல், தான் அவர் மாட்டு அமராமைக்குக் காரணம் இன்றி ஒழுக வரும் எ - று.

காரணம் இன்றி ஒழுகுதலாவது அவனுடைய சுற்றத்தோடு மேவி ஒழுகுதலும் அதுபோல்வனவும். இது விட்டுப்போன புத்திரனைக் கூட்டிக் கொள்ளுமாறு கூறிற்று. (6)

கா. 7.

ப. 10.

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(கா - உ.) எ - து.—தன் முதுகுரவர் மாட்டினின்று நீங்கி மற்று யாதானும் ஒரு காரணத்தினால் தன் மாட்டு வந்தான் ஒருவனை மற்று அம்மன்னனானவன் யாது செய்யற் பாலதோ எனின், அவன் தன்மையைப் பல படியும் ஆராய்ந்து அமைந்து பின்னையும் கடிதின் தேறாது கசடற விசாரித்துத் தகும் எனின் தம் சுற்றத்தோடு ஒக்கத் தழீஇக் கொள்ளினும் கொள்க: அல்லவெனின் அது செய்யா தொழிக எ - று.

உழைப்பிரிந்து என்பது தன் முதுகுரவர் மாட்டினின்று நீங்கி எ - று.

(ப - உ.) எ - து.—தன்னிடத்தினின்று நீங்கி ஒரு காரணத்தால் வந்தவனை அரசன் இனிமை செய்து வைத்துப் பின்பு காரிய மானபடி எண்ணி அதற்குத் தக்கபடிக் கூட்டிக் கொள்க எ - று.

எண்ணிக் கோடலாவது அவன் வந்த காரணத்தை எண்ணுதலும், ஒருவனாகில் அதற்குத் தக்கவும் பலர் உண்டாகில் அதற்குத் தக்கவும் எண்ணுதலும். இது மீண்டு வந்த இராஜ புத்திரனோடு செய்யும் திறன் கூறிற்று. (7)

கா. 8.

காக்கை கரவா கரைத்துண் ணூ மாக்கமும்
மன்னநீ ராற்கே யுள.

ப. 8.

64 திருக்குறள் -

பொருட்பால்

(கா - உ.) எ - து.—காக்கைகளானவை யாதானும் பலி முத லிய இரை பெற்றால் பலவும் அறியாமல் காத்து ஒழுகாது என்செய் யும் எனின் தம் இனத்தையும் விளித்துக் கொண்டே நுகரும்; அத னால் அரசர்க்குச் சுற்றம் ஆகின்ற ஆக்கமும் அத்தன்மை யார்க்கே உளவாவது எ - று.

(ப - உ.) எ - து.—காக்கை ஓரிரை பெற்றால் அதனை மறை யாது தன் இனமாயின எல்லாவற்றையும் அழைத்து உண்ணும்; அதுபோலச் செல்வம் பெற்றால் அதனைத் தன் சுற்றத்தார் எல்லா ரோடும் நுகர்வார்க்கே ஆக்கம் உளதாவது எ - று.

இது மக்கள் பலர் உண்டானால் எல்லார்க்கும் பகுத்து உண்ணக் கொடுக்க வேண்டும் என்றது. இவை மூன்று பாட்டானும் அன்பு அருத மக்கட்குச் செய்யும் திறன் கூறிற்று. (8)

கா. 9. ப. 7.

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா லேக்கி
னதுநோக்கி வாழு முலகு.

(கா - உ.) எ - து.—கீழ்ச்சொன்ன முறைமையின் பொதுப்பட அணைத்தலேயும் அன்றிப் பின்னும் பிறர் குலமும் ஒழுக்கமும் குணமும் கல்வியும் முதலிய மேம்பாட்டு வேற்றுமையாலும் குறிக்கொண்டு அணைப்பனுயின், மற்று அம்மாபு நோக்கித் தாமும் அங்ஙனம் ஒழுகுவர் உலகத்தோர்; எனவே இதனைப் படிமாபு ஆகக் கொண்டு யாவரும் தம்தம் சுற்றம் ஓம்புவார் எ - று.

பரி. பா - மி. ' வாழ்வார் பலர் '.

(ப - உ.) எ - து.—எல்லோரையும் பொதுவாகப் பாராதே ஒருவனைத் தலைமையாலே அரசன் பார்ப்பானுயின், அத்தலைமையை நோக்கி வாழ்வார் பலர் எ - று.

மக்கள் பலர் உண்டானுல் எல்லாரையும் ஒக்கப் மான் ஒருவனை இளவாசு ஆக்க வேண்டும் என்றது.

பாராது; நீதி

(9)

கா. 10.

ப. 3.

பெருங்கொடையான் பேணன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

(கா - உ.) எ - து.—உலகத்து வேந்தனைவன் இனமும் வரிசையும் அறிந்து அணைத்தலே அன்றி, மற்றும் யாவரும் வந்து தன்னேடு மருவும் பெருங் கொடையானை.....னைப்போலச் சுற்றம் உடையார் மற்று இனி இடம்படு ஞாலத்து யாவரும் இல்லை எ - று.

16. பொச்சாவாமை

65

பேணன் வெகுளி என்பது சினத்தைக் கொண்டிடான் என்பது. மருங்குடையார் என்பது சுற்றம் உடையார் என்றது.

(ப - உ). எ - து.—மிகக் கொடுக்க வல்லனாய்ச் சினத்தையும் விரும்பான் ஆயின், அவனின் மிக்க தூண உடையார் பெரிய உலகின்கண் இல்லை எ - று.

மேற் கூறியவாறு அன்றி இவ்வாறு
செய்யின், தூண உடை
யன் ஆம் என்றது : இது செய்தல் அருமையின்
கூறினர்.

வேறு வகுத்துக்

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் உலகத்துப் பலரையும் தம்
சுற்றம் ஆக மருவும் பண்புடை வேந்தர்க்குப் பலரையும் இகழ்தல் செய்யாமை இயல்பு ஆகலான், மற்று இதன் பின்னரே அதனை அறி விக்கின்றது மேலை அதிகாரம்.

16. பொச்சாவாமை.*

(ப - உ.) பொச்சாவாமை யிர்வது மறவி இன்றி ஒழுகுதல்: அஃது எவ்விடத்து எனின், தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சம் செய்யும் இடங்களினும், பொருள் இன்பங்கள் செய்ய வேண்டும் இடங்களினும் மறத்தல் இன்மை. பொச்சப்பு எனினும், மறவி எனினும், இகழ்ச்சி எனினும் ஒக்கும். மேல் அமாத்தியர் மாட்டும், சுற்றத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறினர்; அதனால் பயன் உண் டாவது தன்னைத் தான் கடைப்பிடித்து ஒழுகின் என்று அதன்பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 7.

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றூங்கு.

(கா - உ.) எ - து.—உலகத்துத் தாம் பிறரை இகழும் இகழ்ச்சியாவது, மற்று அது தம் புகழினைத் தலையழிக்கும்: என்போல எனின், ஒருவாது அறிவுடைமையைச் சிலர் மாட்டு நாள்தோறும் சென்று இரக்கும் இரப்பானது தலையழித்தாற் போல எ - று.

பொச்சாப்பு என்பது இகழ்ச்சி. நிரப்பு என்பது இரப்பு.

(பி - உ.) எ - து.—மறவியாகின்றது புகழைக் கொல்லும்; அற்றைத் தேட்டேண் அறிவைக் கொல்லுமாறு போல எ - று.

புகழ்படவாழுங்கால் தன் அளவை மறந்து கொடுப்பன் ஆயின் தான் கருதின புகழும் முடியச் செல்லாது அளவிலே நின்று சாம்.

* பொய்ச்சாவாமை என்று கலிங்கர் உரை ஏட்டில் உள்ளது.

இயற்கையாகிய அறிவு நல்குரவினால் சாமாறு போல என்றவாறு ஆயிற்று. இது கொடைப்பில் கடைப்பிடித்தல் வேண்டும் என்றது. இவை மூன்றினாலும் பொருளிற் கடைப்பிடித்தல் கூறிற்று. (1)

கா. 2.

ப. 2.

இகழ்ச்சியிற் கெட்டாரை யெண்ணுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறூஉம் போழ்து.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்து வேந்தருள் மூற்காலத்துத் தாம் பிறரை இகழ்ந்து வலி செய்யும் பொழுது .....எ - று.

இதற்குப் பாரதத்தில் நூற்றுவரையும் இராமாயணத்து இராவணனையும் பிறரையும் எண்ணிக் கொள்க. மைந்துறூஉம் போழ்து என்பது வலியினைச் செய்யும் பொழுது என்றது.

(ப - உ.) எ - து.—குறித்து உணரும் உணர்ச்சி இன்மையானே முன்பு கெட்ட அரசரை நினைக்க: தாமும் தம்முடைய மகிழ்ச்சியாலே வலிதாயிருக்கும் பொழுது எ - று.

இதனால் சொல்லியது வலியாரைப் பகைவர் வெல்லுங்கால் அவரைச் சோர்வு பார்த்துக் களவினால் கொல்வார்: ஆதலால் தன் வலியை நினையாத பகை உண்டாகும் என்று நினைத்துக் கோயிலும் அந்தப்புரமும் நீர் விளையாட்டு ஆடும் இடமும் இளமரக்காவும் வேட்டையாடும் காடும் உண்பனவும் பூசுமனவையும் இகழாது சோதித்துக் கொள்க. (2)

கா. 3. ப. 10.

முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

(கா - உ.) எ - து.—யாம் பிறரை அவமதிப்பின், பின்பு எமக்கே பலானும் கேடு வந்து எய்தும் என்று முன் கோவித் தோர்ந்து பரிகரியாது பிறரை அவமதி பண்ணினன் யாவன்: மற்று அவன் தன் பழிபின் எண்ணிறந்த பலவாவதும் செய்து மற்றும் துயர் ஆற்றுது பெரிதும் சோகித்துக் கெட்டுவிடு மென்றவாறு. பின்னூறு என்பது - நாறு வகையால் இரக்கத்தைத் தரும் எ - று.

(ப - உ.) எ - து.—எதிரது ஆகவே பழிவரும் வழியைக் காவாதே அதனை இகழ்ந்து தப்பச் செய்தவன், அத்தப்பினால் வரும் குற்றத்துக்கு இரங்கிவிடும் எ - று.

தன்பழி முன்னுறக் காவாதா னென்று கூட்டுக. மேற்கூறிய வாறு செய்யாதார் முன்பே செய்யப் பெற்றிலேம் என்று இரங்குவர் என்றது. . (3)

16. பொச்சாவாமை

67

கா. 4.

ப. 3.

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லைப் பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(கா - உ.) எ - து.—அச்சம் உடைய அரசர்க்குப் புறத்து எல்லாம் அரண் உடையரே ஆயினும், ஒன்றும் இல்லையானவாறு எவ்வண்ணம்: மற்று அவ்வண்ணமே இல்லை: யாது எனின் பிறரை எளியர் என்று அவமதிப்பினை அகத்துடையார்க்கு நன்மைகள் ஒன்

றும் இல்லை : தீமைகளே எ - று.

(ப - உ.) எ - து.—அச்சம் உடையார்க்கு அவ்வச்சம் தீர்க்க வல்லது ஓர் ஆண் இல்லை : அதுபோலப் பொச்சாப்பு உடையார்க்கு வருவது ஒரு நன்மை இல்லையாம் எ - று.

அச்சம் புகுந்துழி எல்லாம் புகுதும் ஆதலின் அதனைக் காப்பது ஓர் ஆண் இல்லை என்றார்—மறந்தார் செய்வதோர் பொருளில்லை, ஆதலின் நன்மை இல்லை என்றார். இது பொச்சாப்பு உடையார்க்குக் காவல் இல்லை என்றது. (4)

கூ. 5.

ப. 8.

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(கா - உ.) எ - து.—அரசராய் உள்ளார் தமக்கு அடாத வழிச் சினக்கின்ற மிகுசினம் போல மிகவும் தீது என்பது யாதோ எனின், தமது மனச் செருக்கினுலே யாவர் மாட்டும் இன்புற்றாராது மிக்க உவகையைச் சோர விடுக்கின்ற சோர்வு எ - று.

இறந்த வெகுளி என்பது மிகுந்த சினத்தை என்றது.

(ப - உ.) எ - து.—மிக்க வெகுளியுடைய ஞானியும் தீது மிக்க உவகையால் உண்டான மகிழ்ச்சியால் தன்னை மறந்திருத்தல் எ - று.

இது காமத்தின் கண்ணும் வெகுட்சியின் பிடித்தல் கூறிற்று.

கா. 6.

ப. 9.

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை வாயி னதுவொப்ப தில்.

(கா - உ.) எ - து.—உலகத்து மன்னானவர் ஒருவர் மாட்டு ஒருவரை இகழாமையாகிய குணம் உளதாயினும் ஒரு படிப்பட நிற் றல் யாவர்க்கும் அரிது: மறறு இங்ஙனம் வழுவாமை வாய்ப்பின் அதனை ஒப்பதோர் நன்மை உலகத்து யாதும் இல்லை எ - று.

இழுக்காமை என்பது வழுக்காமை: இகழாமை என்றுமாம்.

(ப - உ.) எ - து.—யார் மாட்டும் எல்லா நாளும் தப்புச் செய் யாமை தப்பாமல் வாய்க்குமாயின் அதனை ஒக்க நன்மை பயப்பது பிறிது இல்லை எ - று.

இது முறை செய்யுங்கால் கடைப்பிடித்துச் செய்ய வேண்டும் என்றது.

கா. 7.

ப. 1.

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு லோர்க்குந் துணிவு.

(கா - உ.) எ - து.—தத்தம் கோட்பாட்டால் பெறும் பயன் வேறுபடுத்து அமைக்கும் அறுவகைச் சமயத்தோர்க்கும் அவை கடந்த அப்பாலோர்க்கும் பிறரை அவமதி பண்ணி இகழாது ஆற்றல் உடையராதலே தத்தம் பெறுபயனுக்கு உறுதி நெறி யென்பது, தாம் கற்ற நூல்களில் வேறு பயன் அன்றியும் பிற நூல்களினும் இக் குற்றம் நன்று என்பார் யாரும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—பொச்சாப்பு உடையார்க்குப் புகழுடைமை இல்லையாம்: அஃது உலகத்து வழங்குகின்ற அறுவகைப்பட்ட நூலோர்க்கும் துணிவு எ - று.

இது பொச்சாப்பு ஆகாது என்றது. (7)

கா. 8.

ப. 5.

உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

(கா - உ.) எ - து.—அரசன் தான் கருதிய நன்மையைக் கருதி யாங்குப் பெறுதல் மிகவும எளிது : எப்பொழுது எனின் இவ்வுல கத்து ஒருவரும் தன்னை அவமதி பண்ணுது மதித்தல் வேண்டித் தான் கருதிய..... ருலகத்தார் செய்யும் வினையின், வித்தியது வினைதலோடு ஒக்கும் ஆதலால் பிறர் மாட்டு இகழ்ச்சி..... நன்மை கருதுவார் எ - று.

(ப - உ.) எ - து.—தான் நினைத்த பொருளைப் பெறுதல் எளிது. பின்பும் அதனை மறவாதே நினைக்கக் கூடுமாயின் எ - று.

இனிப் பொருளின்கண் மறவாமை கூறுவார் அதனை மறவாமை வேண்டும் என்றார்.

முற்பட நினைத்

(8) கா. 9.

ப. 4.

புகழ்ந்தவை போற்றிச் செயவேண்டுஞ் செய்யா
. திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

17. செங்கோன்மை 69

(கா - உ.) எ - து.—தொல்கலையும் தொல் சான்றோரும் இவை இவை நல்ல என்று புகழ்ந்தவற்றை நீரும் நூறிக்கொண்டு செய்தலை விரும்புமின் : என்னை எனின் இங்ஙனம் செய்யாது அவற்றை இகழ்ந் தவர்க்கு இம்மை ஆக்கமும் அன்றி மறுமை ஆக்கமும் இல்லை எ - று.

எழுமை என்பது மறுமை.

(ப - உ.) எ - து.—உயர்ந்தோரால். புகழப்பட்டவையிற்றைக் கடைப்பிடித்துச் செய்தல் வேண்டும்: அவற்றைச் செய்யாது இகழ்ந்தவர்களுக்கு எழு பிறப்பினும் நன்மை இல்லையாம் ஆதலான் எ - று.

இஃது அறத்தின்கண் இகழாமை கூறிற்று.

(9)

கா. 10.

ப. 6.

அரியவென் றுகாத வில்லைபொச் சாவாக் கருவியாற் போற்றிச் செயின்.

(கா - உ.) எ - து.—இவை இவை செய்தற்கு அரியன என்று தம்மால் செயற்படாது இருப்பன யாவும் இல்லை: எப்பொழுது எனின் உலகத்து நல்லோரையும் நல்லனவற்றையும் இகழ்ந்து அவமதி பண்ணுமை யாகின்ற இந்தச் சாதனம் ஆகிய உபாயத்தினைக் குறிக் கொண்டு செய்யுங் காலத்து எ - று.

(ப - உ.) எ - து.—செய்தற்கு அரிய என்று செய்தல் ஆகாதன இல்லை: மறவாமையாகிய கருவியாலே பாதுகாத்துச் செய்வ ணையின் எ - று.

இது வினை செய்யுங்கால் மறவாமை வேண்டும் என்றது.

(கா - உ.) இனி மற்று இவ்வாறு அவாவர் குணத் தன்மைக் குத் தக்காங்கு அளிக்க வல்ல அரசர்க்கு அல்லது செங்கோல் ஆகிய நீதி நடாத்தும் நெறியிலக்கணம் நிகழாமையால் மற்று இதன் பின் னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

17. செங்கோன்மை.

(ப - உ.) செங்கோன்மையாவது செவ்விதாகிய முறை செய்த லுடைமை. குற்றமும் குணமும் தூக்கிப் பார்த்தலால் கோல் என்றார். அது கோடாமையால் செங்கோல் ஆயிற்று. மேல் அமாத்தியர் மாட்டும் சுற்றத்தார் மாட்டும் தன் மாட்டும் செய்யும் நிறன் கூறினார். இஃது உலகத்தார் மாட்டுச் செய்யும் நிறன் கூறுகின்றது ஆகலின் அதன்பிற் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1. .

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

(கா - உ.) எ - து.—வேந்தனைவன் தனக்குத் தகுதியும் தகுதியல்லாமையும் ஆராய்ந்து யாவர் மாட்டும் காதல் காரணமாகக் கண்ணோட்டம் செய்யாது நெறியினை விசாரித்து. அதன்கண் தங்கிச் செய்யும் செய்கை யாது மற்று அதுவே செங்கோலாகிய நீதி எ - று.

ஓர்ந்து என்பது ஆராய்ந்து என்றது. புரிந்து என்பது அதன்கண் தங்கி என்றது.

(ப - உ.) எ - து:—ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து கட்டோர் என்று கண்ணோடாது தலைமையைப் பொருந்தி யாவர் மாட்டும் குற்றத்திற்குத் தக்க தண்டத்தை நாளும் நூல் முகத்தான் ஆராய்ந்து செய்வது முறை என்று சொல்லப்படும் எ - று.

யாவர் மாட்டும் என்றது தன் சுற்றம் ஆயினும் எ - று. இறைபுரிதலாவது சுற்றம் என்று கண்ணோடாத அரசனியிருத்தல். இது செங்கோன்மையாவது இத்தன்மைத்து என்று கூறிற்று. (1)

கா. 2.

ப. 6.

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்டிற் பெயலும் விளையுளுந் தொக்கு.

(கா - உ.) எ - து.—சிறிதும் கோடாமல் குறிக்கொண்டு மாபின் கண்ணே செங்கோல் நடாத்தும் வேந்தனது நாட்டிடத்து உள: யாவை எனின் பருவத்து வந்து உதவும் மழையும் பலவளம் ஆகிய விளைச்சலும் என்னும் இவை முழுவதும் குறைவு அறக்கூடி எ - று.

பரி. பா - ம். 'னாட்டுட்'.

(ப - உ.) எ - து.—நூல் சொல் சொன்ன முறையினனே முறைமையை நடத்த வல்ல அரசனது நாட்டாம் மழை பெய்தலும் விளைதலும் கூட எ - று.

மேற் கூறிய முறை செய்ய மழையும் என்றது.

வினைவும் உண்டாம்
(2)

கா. 3.
ப. 7.

அந்தணர் நூற்ற மறத்திற்கு மாதியா
நின்றது மன்னவன் கோல்.

(கா - உ.) எ - து.—உலகத்து அனைத்து நீதியையும் வழுவுஅற உணர்த்துவது மறைநூல் அன்றே: அதனால் அவ்வருமறை பாகிய நூலிற்கும் மற்று அதன் வழி கடைபெற்று வருகின்ற அறம்

அனைத்திற்கும் இவ்வுலகத்து ஆதியாக நிலை பெற்றது யாதோ எனின், வேந்தனவன் மற்று அவ்வற நெறி கோடாமல் பாதுகாக் கின்ற செங்கோல் ஆகிய நீதி எ - று.

மற்று அறநூல் என்றும் நூல் என்றும் இங்ஙனம் ஒன்று சொல்லாது அந்தணர் நூல் என்றது, அரசர் நெறியாகிய செங்கோலும் நால் வருணத்தார் கடையுள் ஒரு கடை ஆகலானும், அவை யாவையும் பிறவும் துறவுமாகிய அனைத்தினையும் பழுதறவுரைப்பது பார்ப்பார் ஓதியும் ஓதுவித்தும் இங்ஙனம் விளங்க நடைபெற்று வருகின்ற வேதம் ஆகலான் என்றவாறு.

(ப - உ.) எ - து.—அந்தணாது ஆகிய வேதத்திற்கும், அதனால் கூறப்பட்ட அறத்திற்கும் முதலாய் நின்றது அரசன் செய்யும்

முறைமை எ - று.

ஓதுவாரும் அறம் செய்வாரும் முறை செய்யும் அரசன் நாட்டகத்து உளராவார்: ஆதலான் முதல் ஆயிற்று. இது கல்வியும் அறமும் வளரும் என்றது. (3)

கா. 4.

ப. 3.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனெடு நேர்.

(கா - உ.) எ - து.—தகுதி ஆராயாது உலகத்துக் கொலைத் தொழிலினால் சாலக் கொடியராய் உள்ளாரை அரசனானவன் தக் காங்கு செறுத்தல் ஆகிய நீதியாதினை ஒக்கும் எனின், பசும்பயிர் பாழ்பட நெருக்குவதாகிய களையினைக் கண்டு பறித்து எறிந்த அதனோடு ஒக்கும் எ - று.

(பு - உ.) எ - து.—கொடுமை செய்தாரைக் கொலையினுனே அரசன் ஒறுத்தல் குற்றம் அன்று: பைங்கூழ் வளர்தற்குக் கவர் களை களைந்ததனோடு ஒக்கும் எ - று.

கொடியாவார்கள் பலர்: ஆறலைப்பார், சூறை கொள்வார் இவர்கள் போல்வார். பிறரைக் கொல்லாதாரைக் கொல்லுதல் நீதி அன்று ஆயினும் கொடியாரைக் கொல்ல வேண்டும் என்றதனை. . (4)

வேலன்று வென்றி தருவது மன்னவன் கோலது கோடா தெனின்.

(கா - உ.) எ - து:—வேந்தர்க்கு வேலே அன்று வெற்றியைக் கொடுப்பது: மற்று மன்னனவன் மாபினைக் கோடாமல் நடத்தும்

கோலானது வென்றியைக் கொடுக்கும்:
கோடாதவாறு நடத்துமாயின் எ - று.
மற்று அது சிறிதும்

(ப - உ.) எ - து.—அரசனுக்கு வென்றி தருவது அவன் கை வேல் அன்று; முறை செய்தல் அதனைக் கோடச் செய்யா தொழி

யின் எ - று.

இ.ஞ ெ ஈங்கோன்மை செய்ய வெற்றி உண்டாம் என்றது. (5) கா 6.

ப. 9.

இறைகாக்கும் வையக மெல்லா மவனை முறைகாக்கு முட்டாச் செயின்.

(கா - உ.) எ - து.—இவ்வையகத்து வாழும் மக்கள் முதலாகிய உயிர்கள் அனைத்தையும் மன்னனெனவன் ஒன்றினை ஒன்று நலியாமல் பாதுகாத்து ஒழுகும்: இனி மற்று அம்மன்னவன்..... .....செங் கோலாகிய நீதியானது நிறையக் காத்து நிற்கும்: மற்று இதனை இடை முறியாமல் பரிகரித்துச் செய்யுமாயின் எ - று.

(ப - உ.) எ - து.—வையகம் எல்லாவற்றையும் அரசன் காக் கும்: அவ்வரசனை அவன் தான் செய்யும் முறைமை காக்கும்: அதனைத் தப்பாமல் செய்யின் எ - று.

இது தனக்குக் காவல் ஆம் என்றது. (6)

கா. 7.

ப. 5.

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன னடிதழீஇ நிற்கு முலகு.

(கா - உ.) எ - து.—தனது கோற்கீழ் வாழும் குடியாகிய குல மக்களைக் குலையாமல் அணைத்துக் கொண்டு செங்கோல் நடாத்தும் பூபாலனைத் தமது ஆக்கத்திற்கு எல்லாம் அடியாக அடைந்து நிலை பெற்று வாழும் அனைத்து உயிர்களும் எ - று.

அடிதழீஇ என்றது தமது ஆக்க நிலைக்கு அவனே முதலாக நிற்க என்றது.

(ப - உ.) எ - து.—குடியைப் பொருந்தி முறைமையைச் செலுத்துகின்ற பெரிய நில மன்னனது அடியைப் பொருந்தி நிற்கும் உலகு எ - று.

இது முறைமை செய்யும்

றது.

அரசன் கண்ணது ஆம் உலகம் என்

கா. 8.
ப. 10.

எண்பதத்தா னுடி முன்றசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

17. செங்கோன்மை 73

(கா - உ.) எ - து.—விசார வழியால் ஆராய்ந்து செங்கோல் நடத்தாத மன்னவன் மற்று இனித் தான் செய்யும் தண்ணிய வழி யாலே தானே கெட்டு விடும் எ - று.

எண்பதத்தான் என்பது எண்ணு நெறியால் என்றது. பதத்தான் என்பது தண்ணிய நெறியினென் என்றது.

தண்

(ப - உ.) எ - து.—எளிய காலத்தோடே நூல் ஆராய்ந்து முறைமை செய்யாத அரசன் தனது தண்பதத்தாலே கெடுப்பார் இன்றியும் தானே கெடும் எ - று.

எண்பதம் ஆவது வந்தவர்கள் தம் குறையைச் சொல்லுதற்கு எளிய காலம். தண்பதம் ஆவது குறையைச் சொல்லுதற்குத் தாழ்க்கும் காலம். இது காலம் தப்பாமல் கேட்டுச் செய்ய வேண்டும் என்பதூஉம் முறை செய்யாக்கால் வரும் குற்றமும் கூறிற்று. (8)

கா. 9. ப. 4.

வானேக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனேக்கி வாழுங் குடி.

(கா - உ.) எ - து.—மழை நமக்கு உளது என்னு அதனைக் குறிக்கொண்டு அஞ்சாது வாழும் உலகமானது: மற்று இது போல மன்னவன் செங்கோல் நமக்கு எளிது என்று அதனைக் குறிக்கொண்டு

அஞ்சாது வாழுமம குடிமகளுமெ எ - று.

(ப - உ.) எ - து.—உலகத்து உயிர் எல்லாம் மழையை நோக்கி இன்புறு நிற்கும்; அதுபோலக் குடிகளும் அரசன் செங்கோன்மையை நோக்கி இன்புறுவர் எ - று.

இது முறை செய்தல் குடி மக்கட்கு இன்றியமையாது என்பது கூறிற்று. (9)

கா. 10.

ப. 2.

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

(கா - உ.) எ - து.—தமது அகம் காவல் குடிகட்கே இயல்பு ஆனது: அதனால் தனது கோல் கீழ் வாழும் குடிமக்களைப் புறம் காவல் காத்து மற்று அப்பாதுகாவற்கு இடையில் சோர்வு வாராமல் செலுத்தும் இடத்துக் குடிமக்கட்குச் சோர்வு முதலிய குற்றம் உளதாயின் அதனைக் கடியுமாறு கடிந்தொழுகுதல் கொடுங்கோன்மை அன்று: அரசர்க்குச் சொல்லுங்கோன்மை முறைமை எ - று.

10

திருக்குறள் - பொருட்பால்

(ப - உ.) எ - து —குடிகளை நலியாமல் காத்து ஓம்புதற்காகக் குற்றம் செய்தாரை ஒறுத்தல் குற்றம் அன்று: அரசனது தொழில் எ - று.

ஓம்ப என்று நிரிக்க. பிறர்க்கு இன்னு செய்தல் அறம் அல்ல என்றார் ஆகலின், ஈண்டுக் கூறுகின்றது அறம் அல்லவாம் பிற என்று ஐயுற்றார்க்கு இது கூறப்பட்டது.

(கா - உ.) இனி இங்குச் சொன்ன இருவாற்றானும் அன்றிப் பிறவாற்றான் அடாததும் அது கொடுங்கோன்மை ஆதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

18. கொடுங்கோன்மை.

(ப - உ.) கொடுங் கோன்மை யாவது கொடுங் கோன்மையால் வரும் குற்றம் கூறுதல். அது முறை செய்யாமையும் பிறர் கலியாம்: காவாமையும், முறைகெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை ஆராயாது செய்தலும், அல்லவை செய்தலும், குடிகளை இரத்தலும் எனப் பலவகைப்படும். இதுமேல் கூறிய செங்கோன்மையின் மாறுபட்டு வருதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 2. நாடோறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடோறு நாடு கெடும்.

(கா - உ.) எ - து.—ஒரு மாத்திரைப் பொழுதும் இடைப்படாமை நாள்தோறும் ஆராய்ந்து செங்கோன்மை செய்து ஒழுகாத மன்னவன் தன் நாடானது நாள்தோறும் கெட்டுச் செல்லும் எ - று.

இனி இவ்வாறு அன்றி அரசனும் நாள்தோறும் கெட்டுச் செல்லும் எ - று.

(ப - உ.) ஏ - து.—குற்றமும் குணமும் நாள்தோறும் ஆராய்ந்து அதற்குத் தக முறை செய்யாத அரசன் நாடு நாள்தோறும் கெடும்

எ - று.

இது நாடு கெடும் என்றது.

(1) கா. 2.

ப. 6.

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்

சூழாது செய்யு மரசு.

(கா - உ.) எ - து.—இவ்வாறும் அன்றிப் பின்னும் தனது நாட்டுள் வாழும் குடிகளையும் அக்குடிகளால் உளதாகும் உணவு பொருள்

18. கொடுங்கோன்மை

களையும் உடனே இழப்பன்: யாவன் எனின் தெரியும் செய்யல்லாதும் தோாது கோல் கோடி மற்று இங்ஙனம் செய்யும் அரசனவன்

எ - று.

(ப - உ.) எ - று —பொருளையும் பொருள் தரும் குடியையும் கூட இழப்பன், முறை கோடி ஆராயாமல் செய்யும் அரசன். இம்மூ ஆராயாது செய்வதனால் வரும் குற்றம் கூறிற்று எ - து. (4)

கா. 3.

ப. 10.

வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங் கோலொடு நின்ரு னிரவு.

(கா - உ.) எ - து.—தான் கைப்பற்றிய மூவிலை வேலொடு நின்ரூன் ஒரு மூர்க்கன் அதனை ஓங்கி வேலே! கடி-நின் கொணர்ந்திடு பலி என்றதனை ஒக்கும்: யாது எனின், தான் கைக்கொண்டு செலுத்துகின்ற கொடுங்கோலோடு நின்ற மூர்க்கனுகிய அரசன் மற்று ஒருவனை நீ! எமக்கு இத்துணைப் பொருள் தாவேண்டு மென்று இரக்கும் இரவானது எ - று.

மற்றும், உலகத்துச் சிலர் தாம் வேறு பலி வேண்டுதலும், இடு பலி அடுதலும் முறைமை யாகலான், அதுபோல அடிசரும், தாம் பெறு கடன் வேண்டுதலும், இடுகடன் இடுதலும் முறைமை யாகலான், இவ்வாறு அன்றி ஒருவன் வந்து வலிந்து அடர்த்தலும், பிறர் அஞ்சி வந்து ஒன்று இடுதலும் போலும் ஆதலில் ஒன்று ஆகிய செங்கோல் நெறி அன்றி அயிதம் கொள்ளும் கொடுங் கோன்மையும் என்பது பொருள் ஆயிற்று என அறிக.

(ப - உ.) எ - து —தனியிடத்தே வேலொடு நின்றவன் நின் னையில் உள்ளன தா என்றாற் போலும் முறை செய்தலை மேற்கொண்டு நின்றவன் குடிகள் மாட்டு இரத்தல் எ - று.

கோலொடு நிற்றல்—செவ்வை செய்வானைப் போன்று நிற்றல். நிச்சயித்த கடமைக்கு மேல் வேண்டு கோளாகக் கொள்ளினும் வழி யில் பறிப்பானோடு ஒக்கும் என்றது. (3)

கா. 4.

ப. 9.

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை.

(கா - உ.) எ - து.—கொடுங்கோல் மன்னன் செய்யும் கொடு வினையால் குடிகள் சாலத் துயரம் உற்று அது பொறுக்க மாட்டாது அழுத கண்ணீர் அதுவே அரசனைவன் அங்ஙனம் ஈட்டிய பெரும் பொருளைத் தேய்க்கும் வழிக்குத் கருவியாகலான் இவ்வினையாளர்கு வேறு ஓர் படைவினை வேண்டா எ - று.

திருக்குறள் - பொருட்பால்

(ப - உ.) எ - து.—நீதி அல்லன செய்தலானே அல்லல் பட்டு அதற்கு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே, அரசன் செல்வத் தைத் தேய்க்கும் படையாவது எ - று.

இஃது அவ்வாசன் தான் கெடும் என்றது. இவை இரண்டும் அல்லனவை செய்ததனாலே இம்மை மறுமை இழப்பர் என்று கூறின. (4)

கா. 5.

ப. 5.

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

(கா - உ.) எ - து.—உலகத்து வேந்தனைவன் நீதி வழுவி நெறி அல்லன் செய்யுமாயின், கொண்டலானது பருவம் கோடி மற்று ஈண்டு மழை பெய்தலைச் செய்யாது எ - று.

முறைகோடி என்பது நீதி வழுவி என்றது. உறை என்பது மழைத்துளி என்றது. ஒல்லாது எனறது அதனைச் செய்யாது என்றது. வானம் என்பது கொண்டல் என்றது.

(ப - உ.) எ - து.—முறைமை கோட மன்னவன் செய்வனையின், மழையானது துளி விடுதலைத் தவிர்ந்து பெய்யா தொழியும் எ - று.

இது முறைமை கோடினுல் வரும் குற்றம் கூறிற்று. (5)

கா. 6.

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

ப. 7.

[கொண்

(கா - உ.) எ - து —அதனைப் பிறர் நோவுக்கு இரங்காது கொலைத்தொழிலை என்றும் கொண்டொழுகும் கொடுவினையாளரினும் சாலக் கொடிதே: யாது எனின், தன்கோல் கீழ் வாழும் குடிகளை அவர்கள் நோவு அறியாது அலைத்தலை என்று கொண்டு முறை அல்லனவற்றைச் செய்து அங்ஙனம் ஒழுகும் வேந்தனைவன் எ - று.

(ப - உ.) எ - து.— .....
(மண்க்குடவருரை) கொலைத்தொழிலை மேற்கொண்டவரினும் கொடிபன் அலைத்தல் தொழிலை மேற்கொண்டு நீதி அல்லாதன செய்து ஒழுகுகின்ற அரசன் எ - று. (6)

கா. 7. ப. 8.

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

(கா - உ.) எ - து.—பருவத்து வந்து பெய்யும் மழையில்லாண்மை இவ்வையகத்துக்குப் பெருமையில்லாதது எத்தன்மைத்து; மற்று

18. கொடுங்கோண்மை 37

அத்தன்மைத்து: யாது எனின், வேந்தனது தண்ணளி இல்லாமையாகிய கொடுங்கோண்மை மற்று ஈண்டு வாழும் உயிர்கட்கு எ - று.

(ப - உ.).....

.....

(ம - உ.) எ - து.—உலகத்திற் பல்லுயிர்க்கும் மழை இல்லையானல் வரும் துன்பம் எத்தன்மைத்து ஆகின்றது அத்தன்மைத்து, அரசன் அருளிலன் ஆதல் அவன் கீழ் வாழும் மக்கட்கு எ - று. (7)

கா. 8.

ப. 1.

மன்னர்க்கு மன்னுதல்செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

(கா - உ.) எ - து.—மன்னரானவர் தமக்குத் தமது ஒளி நிலை பெறுதலாவது செங்கோன்மை நிலை பெறுதல்: மற்று அஃது இல்லெனின் மன்னர்க்கு நிலையாவாம், ஒளிகளானவை எ - று.

மன்னுதல் என்பது நிலை பெறுதல்; மன்னுவாம் என்றது நிலையாவாம் என்றது. ஒளி என்பது குலமும் குணனும் கல்வியும் உணர்வும் மாபும் பிறவும் ஆகிய ஒளிகள் ஆன பெறு பொருள்களென அறிக.

(ப - உ.) எ - து.—அரசர்க்கு ஒளி நிலை பெறுதல் செங்கோன்மையான் ஆம்: அஃது இல்லையாயின் அரசர்க்கு ஒளி நிலையாதாம். முறை செய்யாமையால் வரும் குற்றம் கூறுவார் முற்படப் புகழ் இல்லையாம் என்றார் எ - று. (8)

கா. 9. ப 4.

ஆபயன் குன்று மறுதொழிலோர், நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

(கா - உ.) எ - து.—உலகத்து முன்னிலைப் பசுக்களானவை கறவையும் கன்றுமாகப் பயன்பட்டு வருகிற பயனும் குன்றும்: மற்று அதுவேயுமன்றி அறுவகைத் தொழிலுக்கு உரியர் ஆகிய அந்தணரும் அருமறை ஓதலும் மறந்து விடுவர்: என்னை எனின் வையம் காவலன் ஆகிய மன்னவன் செங்கோல் முறையால் பாது காவாது கொடுங்கோன்மை செய்து ஒழுகின் எ - று.

(ப - உ.) எ - து.—(ம - உ.) பசுக்கள் பால் குறையும்: அந்தணர் வேதம் ஓதார். அரசன் காவானாயின் எ - று.

இது காவாமையால் வரும் குற்றம் கூறிற்று.

(9) கு. 10.

ப. 3.

இன்மையி னின்னு துடைமை முறைசெய்யா மன்னவன் கோற்கீழ்ப் படின்.

(கா - உ). எ - து.—உலகத்தோர்க்கு மிகவும் இன்னாதது யாதோ எனின், இல்லாமை அன்றே: மற்று அதனினும் சால இன்னாதது உடைமை: அது எவ்விடத்து எனின் முறைமை செய்யாத மன்னவன்து கொடுங்கோலிடத் தகப்பட்ட குடிகட்டு எ - று.

(ப - உ.) எ - து.—(ம - உ.) நல்குரவினும் செல்வம் துன்பம் ஆகும். முன்ற செய்யாத அரசனது கொடுங்கோலின் கீழே குடி இருக்கின் எ - று.

இது பொருளுடையாரும் துன்பம் உறுவர் என்றது. இவை மூன்றும் முறை செய்யாமையாலே வரும் குற்றம் கூறின. (10)

(கா - உ.) இனி மற்றுக் கொடுங்கோன்மை குற்றம் என்று கடிந்து ஒழுகும் குணமுடைய வேந்தன் செய்ய வேண்டுவது ஒன்று உண்டு: அது யாதோ எனின், முறை செய்வுழியும் உயிர்கள் அஞ்சத் தக்கன ஆகிய வினை செய்பற்க என்பதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

19. வெருவந்த செய்யாமை.

(ப - உ.) வெருவந்த செய்யாமையாவது பிறர்க்கு அச்சம் செய்யாமையும், தனக்கு அச்சம் செய்யாமையும். தான் முறை செய்வாரைப் போன்றிருந்து, அதனை உலகத்தார் வெருவுமாறு செய்வனையின், அதுவும் கொடுங்கோலொடு ஒக்கும் என்று அதன்பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 5.

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மொல்லைக் கெடும்.

(கா - உ.) எ - து.—அரசன் செங்கோல் நீதி செலுத்தும் இடத்து உயிர்கள் பெரிதும் அஞ்சத் தக்கனவற்றைச் செய்து ஒழுகுமது கொடுங்கோல் போலும் தன்மையது உடைத்து: மற்று அதனால் அவனது பெருஞ்செல்வம் கடிதில் கேடு அழியும்; என்வே ஒருவனைத் தண்டிக்கும் காலத்தும் இதற்குத் தகுதி என்று முன்னோர் சொன்ன முறைநூல் வழியால, மற்றவன் மனம் பொருந்தக் காட்டிய வழக்குடையின் ஆதலே மன்னர்க்கு இயல்பு எ - று.

ஒருவந்தம் என்பது பெருஞ்செல்வம் என்றது.

(ப - உ.) எ - து.—அரசன் அச்சம் வருவன செய்து ஒழுகும் வெங்கோலை உடையனாயின், அவன் ஒருதலையாக விரைந்து கெடுவன் எ - று.

இது நாடும் நகரமும்
என்றது.

பொறுப்பினும் தெய்வத்தினால் கெடுவன்

19. வெருவந்த செய்யாமை

79

கா. 2.

ப. 1.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

(கா - உ.) எ - து.--மற்று இப்படி யாகலான் அவை அவை செய்யத்தக்க பரிசு ஆராய்ந்து மற்று ஒருதலைச் சென்று ஒதுங்காத தன்மையான், ஒன்றினும் எற்றத் தாழ்வு இன்றி ஒத்து நிற்கும் பரிசே ஒறுக்க வேண்டுவதனை ஓர்ந்து ஒறுப்பது வேந்தாவது; எனவே அது செய்யாவிடத்து எல்லாம் நல்லனி செய்தலே அரசர்க்கு அழகு எ - று.

(பி - உ.) எ - து.—குற்றத்துக்குத் தக்கவை யாராய்ந்து ஒருவர் ஒருவர்மேற் செல்லாமை காரணமாக உலகத்தார்க்குப் பொருந்து மாறு ஒறுப்பவன் அரசன் எ - று.

இது செங்கோன்மை யன்றே எனின், ஒக்கும்: முறை செய் யுங்கால் அரசன் வெகுட்சி உடையனுய் உலகத்தார் அஞ்சுமாறு செய்யாது இம்முறை செய்யாக்கால் ஒருவனொருவனை அடர்ப்ப தென்று உலகத்தார் தாமே இசையச் செய்ய வேண்டும் என்றற்கு வேறுபடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு செய்தல் வெருவந்த செய் யாமை என்றது. (2)

கா. 3. ப. 2.

கடிதோக்கி மெல்ல வெறிக நெடிதாக்க நீங்காமை வேண்டு பவர்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு ஆகலான் ஒருவனைத் தண்டம் செய்யும் இடத்து முன்னம் அவர் அஞ்சுமாறு கடிது செய்வார் போல் காட்டிப் பின் மெல்லெனச் செறுத்து விடுக. மற்று யார் எனின், தமது, நெடிய செல்வம் இடையறாது வேண்டும் அரசர் எ - று.

பரி. பா - ம். ' கடிதோச்சி '.

(ப - உ.) எ - து.—கடிது ஆகச் செய்வானைப் போன்று மெல்லிது ஆகச் செய்க: நெடிது ஆகி வருகின்ற ஆக்கம் நீங்காமையை வேண்டுபவர் எ - று.

இது குற்றத்துக்குத் தக்க தண்டத்தினும் குறையச் செய்ய வேண்டும் என்றது. இனி வெருவந்த செய்ததனால் உளதாகும் குற்றம் கூறுகின்றனர். (3)

ப. 7.

கடுஞ்சொல்லன் கண்ணில னுயி னெடுஞ்செல்வு நீடின்றி யாங்கே கெடும்.

80 திருக்குறள் - பொருட்பால்

(கா - உ.) எ - து.—யாவர் மாட்டும் கடிய சொல்லினை யுடை

யனுமாய்க் கண்ணோட்டம் இல்லனும் ஆயின் அவ்வாசற்கு நெடுஞ் செல்வமானது நீட்டித்தலின்றி அவை அவை செய்யும் காலத்தே கெட்டு விடும் எ - று.

கண்ணிலனுயின் என்பது - கண்ணோட்டம் இலன் என்றது.

(ப - உ.) எ - து.—கடிய சொல்லை யுடையனுமாய்க் கண்ணோட்டமும் இலன் ஆயின், அவனது தொன்று தொட்டு வருகின்ற செல்வம் பின்பு நிற்றல் இன்றி அக்காலத்தே கெடும்.

இது குறைதலே அன்றி முழுதும் கெடுவன் என்றது. (4) கா. 5.

ப. 9.

அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்வம் பேய்கண்ட தன்ன துடைத்து.

(கா - உ.) எ - து. — அரசர் முறை செய்யும் இடத்து உலகைச் செவ்வியும் கண்ணோட்டமும் அரியன் ஆகிய இன்ன முகத்தானது பெரிய செல்வமானது எதனை ஒக்கும் எனின், பேயினது கோக்கம் தாக்கிய உருவானது எத்தன்மை உடைத்து மற்று அத்தன்மைத்து ஆம்: எனவே பேய் தாக்கிய உருவு பெண்ணுருவு ஆயினும் ஆண் உருவு ஆயினும் உருவு ஒன்று இருந்து உள் ஒய்ந்து விடும்: அது போல இங்கும் செல்வம் உள்ளது போன்று இருந்து உள் உடைந்து விடும் எ - று.

(ப - உ.) எ - து.—காண்டற்கு அரிய காலத்தினையும் கண்டால் இன்னாத முகத்தினையும் உண்டாயவனது பெரிய செல்வம் பேயைக் கண்டால் ஒக்க அச்சம் தருதல் உடைத்து எ - று.

இது செல்வத்தை வாங்குவார் இன்மையின் படை சோர்வது என்றது. (5)

கா. 6.

ப. 8.

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

(கா - உ.) எ - து.—யாவர் மாட்டும் இன்சொல் வழுக்கம் இன்றி வெஞ்சொல் விடுத்தலும், செய்யும் நீதியைக் கடந்து தண்டம் செய்தலும் இவை இரண்டும் மன்னவன் மாற்றாரைக் கொல்லும் வலியாகிய பொருள்வலி, படைவலி, துணைவலி, மற்று அரண்வலி, தன்வலி முதலிய அனைத்து வலியையும் பொடிபடுத்தே தேய்த்து விடும் ஆம் எ - று.

கை என்பது ஒழுக்கம்: ஆவது நீதி.

19. வெருவந்த செய்யாமை 81

(ப - உ.) எ - து.—கடுஞ்சொல் கூறுதலும், குற்றத்தின் மிக்க தண்டம் செய்தலும் அரசனது ஆகிய பகைவரை வெல்லும் வலியைத் தேய்க்கும் ஆம் எ - று.

இது வலியைக் கெடுக்கும் என்றது.

(6) கா. 7.

ப. 4.

இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த னுறைகடுகி யொல்லைக் கெடும்.

(கா - உ.) எ - து.—மற்று இம்மன்னவன் சாலக் கடியன் என்று மக்கள் யாவரும் சொல்லுகின்ற இன்னாத சொல்லினை யுடைய வேந்தனது நாடும் ஊரும் விரையக் கெட்டுவிடும், முன் சொல்லியவையும் இன்றியும் எ - று.

உறை என்பது உறைவிடம்.

(ப - உ.) எ - து.—தன் கீழ் வாழ்வார் அரசன் கடியன் என்று கூறப்பட்ட இன்னுத சொல்லை யுடைய வேந்தன் அவன் தான் உறையும் இடம் வெகுளப்பட்டு விரைந்து கெடும் எ - று.

இவனை நாடும் நகரமும் பொருது என்றது.

(7) கா. 8.

ப. 3.

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ
லதுவல்ல

தில்லை நிலக்குப் பொறை.

(கா - உ.) எ - து.—கல்லாதார் ஆகிய மூர்க்கரை அரசனானவன் தனது அன்பினுல் பிணித்துக் கொள்ளும் நீதி கேடு யாது? மற்று அது அல்லது இல்லை இந்த நிலத்து வாழ்கின்ற உயிர்கட்குக் கிலேச பாரம்: பிறிது ஒன்றும் இல்லை எனவே மற்று அது உயிர்கட்கு வெருவந்த செய்தலுள் ஒன்று எ - று.

(ப.- உ.) எ - து.—கடுங்கோலன் ஆகிய அரசன் அறிவில்லாதாரை அமைச்சராகக் கூட்டிக் கொள்ளுப் ; அவ்வரசன் அல்லது நிலத்துக்குப் பாரம் வேறு ஒன்று இல்லை எ - று.

அறிவில்லாதார் அமாத்தியர் ஆனல் அவரானே உலகம் அச்சம் உறும் அதற்காகக் கடுங்கோல் அரசன் அவரைக் கூட்ட அவனை நிலம் பொருது என்றது.

கா. 9. ப. 10.

செருவந்த பொழுதிற் சிறைசெய்யா மன்னன்
வெருவந்து வெய்து கெடும்.

11

(கா - உ.) எ - து.—முன்னமே மதிற்சிறை முதலிய வன்சிறை நான்கும் வில்லாணும் வேலாணும் தோலாணும் தூக்க ஆணும் உளவாகிய வியூகச் சிறையும் உடையனோனும் மற்று அச்சிறை நீங்கிச் செருகதொழில் புரியச்சென்ற தேயத்துப் புறத்திறை மன்னரால் போழிவு வந்த காலம் நோக்கிய இடத்து இயையும் சிறை பலவும் செய்து கொள்ளாத மன்னவனனவன் முனையெதிர் நடைபோந்து முற்றிய காலத்து வெருவுதல் கடிதின் கெட்டுவிடும் எ - று.

பரி. பா - மி. ' சிறை செய்யா வேந்தன் '.

(ப - உ.) எ - து.—தனக்குக் காவல் ஆனவற்றை முன்னே அமைத்துச் செய்யாத வேந்தன் செருவந்த காலத்து அச்சம் உற்றுக் கடிது கெடும் எ - று.

இது தனக்கு அச்சம் வருவன செய்யலாகாது என்றது. (9)

கா. 10.

ப. 6.

இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிற்
சீறிற் சிறுகுந் திரு.

(கா - உ.) எ - து.—வேற்றரசோடு வினை செய்யும் இடத்தும், அத்தனையும் முன்கோலித் தன்னெடு எண்ணுதற்கு உரிய இனத் தோடு எண்ணிச் செலுத்தாத மன்னனனவன் சினத்து வழிபற்றிக் கன்றி எழுவனேல் சிறுகும் செல்வம்: எனவே அரசன் உரிமை அழி வன் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—பிறர் செய்த குற்றத்தை தனக்கு இனம் ஆயினரோடு அமைந்து ஆராயாத அரசன் சினத்தின் நெறியானே சீறுவன் ஆயின் செல்வம் குறைபடும் எ - று.

இனம் என்றது மந்திரி புரோகிதரை. இது செல்வம் குறை படும் என்றது. (10)

(கா - உ.) மற்று இக்கொடுங் கோன்மையாகிய நீதி கேடும், மற்று இத்தன்மைத்து ஆகிய வெருவந்த செயலும் என்னும் இரண்டு குற்றமும் இல்லாத குணவேந்தன் கண்ணதே கண்ணோட்டமும் ஆக லான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதி காரம்.

கா - ஏடு. (நன்றாக. வேணுவனேசன் துணை.

வடிவாள் துணை.)

20. கண்ணோட்டம்.

(ப - உ.) கண்ணேட்டமாவது கண்ணுற் காணப்பட்டாரை அருள் செய்தல். குற்றம் செய்தாரை ஒறுக்குங்கால் உலகத்தார் இசைய ஒறுக்க வேண்டும் என்றாயினும், அவ்வாறு செய்து அவ

20. கண்ணேட்டம்

ரைத் தமது கண் முன்னுகக் கண்டால் அதனைப் பொறுத்தலும் வேண்டும் என்று அதன்பிற் கூறப்பட்டது. இது பெரும்பான்மை யும் முன்பு கண்டு பழகினர் மேற்று.

கா. 1.

ப. 1.

கண்ணேட்ட மென்னுங் கழிபெருங் காரிகை

யுண்மையா னுண்டிவ் வுலகு.

(கா - உ.) எ - து.—கண்ணேட்டம் என்று சொல்லப்பட்ட மிகவும் பெரிய நன்மையானது ஆசார் முதலிய பெரியோர் மாட்டு உளதாய் வருதலால் உளது இவ்வுலகத்து உயிர்களின் வாழ்க்கை எ - று.

எனவே மற்று இவர்கள் மாட்டு அஃது இல்லையாயின் உயிர்க்கும் துன்பம் வருவது பொருள் என அறிக.

பல

(ப - உ). எ - து.—கண்ணோட்டம் ஆகிய பெரிய அழகு ஆசன் மாட்டு உண்டானபடியாலே, உலகநடை உண்டாகின்றது. இஃது இல்லையாயின் உலகம் கெடும். ஆதலாற் கண்ணோட்டம் வேண்டும் என்றது. செங்கோன்மை கூறுகின்றவழிக் கண்ணோடாது முறை செய்க என்று கூறி ஈண்டுக் கண்ணோடுக என்று கூறுதல் மாறுபடக் கூறுதலாம் பிற எனில், அற்று அன்று: அது முறை செய்யும் திறன் கூறிற்று. இஃது உலகத்தார் பலர் ஆதலால் குற்றம் செய்வார் மிகுந் திருப்பர். அதற்கு எல்லாம் தண்டம் செய்யின் உலகம் என்பது ஒன்று இல்லையாம்: அதற்காகப் பொறுக்க வேண்டுவன பொறுக்க வேண்டும் என்று கூறிற்று. (1)

கா. 2. ப. 5.

கண்ணோட்டத்துள்ள துலகிய லஃதில்லா ருண்மை நிலக்குப் பொறை.

(கரி - உ.) எ - து.—கீழ்ச் சொன்ன பரிசே கண்ணோட்டத்தின் கண்ணே உள்ளது உலகத்து உயிர்களது நடை: ஆதலான் மற்று அதனைத் தங்கண் இல்லாதோர் உளதாயிருத்தலின் நிலத்துக்குப் பாரம்: எனவே இங்குள்ள உயிர்கட்கு பெரியதோர் இலேச பாரம் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—உலக நடை கண்ணோட்டத்தின் கண்ணது ஆதலான், அஃது இல்லாதார் உளராதல் இந்த நிலத்துக்குப் பாரம்

ஆம எ - று.

இது கண்ணோட்டம் இல்லாதாரை நிலம் பொறுது என்றது. (2)

கா. 3.
ப. 2.

ஒறுத்தாற்றும் பண்பிலர்
கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(கா - உ.) எ - து.—தம்மை ஒருவர் உணர்ந்தும் உணராது ஒரு காலத்து ஒறுத்தாராயினும், அவரவர் மாட்டுத் தாம் கண்ணோட்டம் உடையராய் மற்று அவர் செய்த பிழையினைத் தாம் பொறுத்து மற்று அதனை ஒழுகச் செய்யும் இயல்பே தலைமைப்பாடு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—தம்மை ஒறுத்துச் செய்யும் இயல்பினை உடையார் மாட்டும் கண்ணோடிப் பொறுத்துச் செய்யும் குணமே தலையான குணம் எ - று.

அன்றியும் ஒறுத்துச் செய்ய வேண்டும்
இயல்பினை உடையார்

மாட்டும் என்றும் ஆம். உம்மை சிறப்பும்மை. பிறர்க்குக் குற்றம் செய்தாரையே அன்றித் தமக்குக் குற்றம் செய்தாரையும் பொறுக்க வேண்டும் என்றது. (3)

கா. 4.

ப. 3.

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(கா - உ.) எ - து.—ஒருவர் தமக்கு இன்மையால் கொணர்ந்து இடக் கண்டு வைத்தும் அவரிட்ட நஞ்சினைத் தாம் உண்டு உயிர் வாழ்க்கை சமைத்து விடுவர்: யார் எனின், பெரியோரால் விருப்பத் தக்க உப்பர் உலகினுள் சிறப்புடைய உத்தர குருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந்திருக்க வேண்டும் அவர் எ - று.

பெயக் கண்டு என்பது கொணர்ந்திடக் கண்டும் என்றது.

(ப - உ.) எ - து.— நஞ்சு பெய்தது கண்டும் அதனை மாற்றாது உண்டு அமைவர்: எல்லாராலும் விரும்பத் தக்க நாகரிகத்தை வேண்டி விருப்புவார்கள்

எ - று.

நாகரிகம் - அறம், பொருள், இன்பத்தின் நற்குணங்கள் பலவும் உடைமை. மருமையாற் கண்ணேட்டம் ஆயிற்று. இது பொறுத் தலே அன்றித் தமக்குச் செய்யும் தீமைக்கும் உடன்படுவர் புகழ் வேண்டுபவர் என்றது. (4)

கா. 5.
ப. 9.

கண்ணுக் கணிகலங் கண்ணேட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

(கா - உ.) எ - து.—எல்லா உறுப்பிற்கும் அணிகலம் அணிய லாம்: மற்றுக் கண்ணுக்கு அணிவது ஓர் அணிகலன் இல்லை என்று

இங்ஙனம் கருதற்க: என்னை எனின், கண்ணுக்கு அணியும் கலன் ஆவது கண்ணேட்டம் ஆகலான்: அஃது ஒருவர்க்கு இல்லை எனில் மற்று அது வெறும்புண் என்றே அறிய அடுக்கும் எ - று.

அதனைத் தசை என்னுது புண் என்றது என்னை எனின் ஈரம் புலாத இளம் தசை யாகலான் அவர்க்கு அது நோயறுத புண் எனறவாறு.

(ப - உ.) எ - து.—கண்ணிற்கு அழகு செய்யும் அணிகலன் ஆவது கண்ணேட்டம் உடைமை: அஃது இல்லையாயின் அவையிற் றைப் புண் என்று அறியப்படும் எ - று.

இது கண்ணோட்டம் இல்லாத கண்ணுக்குப்

பெயர் கூறிற்று (5) கா. 6.

ப. 7.

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்
கண்ணோட்ட மில்லாத கண். [ணுங்

(கா - உ.) எ - து.—இலக்கண முறையான் இசை அறியாது மயக்க மாந்தர் தமது இயற்கைச் செவியிறற் கேட்டு மற்று இது மிகவும் இனியது ஓர் பண் என்றூர் ஆயினும், அதனை யாம் பண் என்று சொல்லோம்: என்னையோ எனின், பாடல் தூக்காகிய இசைத் தொடர்பின் கண் தான் வந்து மேவி நின்று அவ்விசை நூல் யாப் பிற்கு இனிது இயைபு இன்றி நிற்குமாயின்; மற்று அதுபோல ஈண்டு நுண்ணுணர் வில்லோர் கண் என்றூராயினும் அதனைக் கண் என்று சொல்லோம், கண்ணோட்டம் இல்லாத கண்ணினை எ - று.

(ப - உ.) எ - து.—பண் என்ன பயன் உடைத்து ஆம்? பாட லொடு பொருந்தாது ஆயின். அதுபோலக் கண் என்ன பயன் உடைத்து ஆம் கண்ணோட்டம் இல்லாத காலத்து? எ - று.

பாடல் ஆவது பாடுதல் தொழில். அஃதாவது மந்தம், உச்சம், சமம், குடிலம் முதலாயின. அதனொடு பொருத்தம் இன்மையாவது எடுத்துக்கொண்ட பண், இவ்விடங்களில் ஒவ்வாது நின்று கேட் டார்க்கு இன்பம் பயவாமை. இது பிறர்க்கு இன்பம் பயவாது என் றது. (6)

கா. 7.

ப. 10.

மண்ணே டியைந்த மரத்தினையர் கண்ணே டியைந்துகண் ணேடா தவர்.

(கா - உ.) எ - து.—வண்ணம் எழுதா வகைத்து உருவாகிய மண்மேல் எழுதிய கற்பகதரு முதலிய முதலிய மாத்தைப் போல் பவர்: யார் எனின், செய்ய வாயும் செவ்வரிக் கண்ணும் கரிய குழ

லும் வெளிய கையும் பிறவும் ஆகிய வகையமை உறுப்பின் வனப்பு வேற்றுமை தகை பெற உடைய தன்மையரேனும் கண்ணுறுப்புக்கு நண்ணுறுப்பு ஆகிய கண்ணேட்டம் இல்லாத கடுவினை யாளர் எ - று.

(ப - உ.) எ - து.—சுதை மண்ணேடு கூடிச் செய்த மாப்பாவை யோடு ஒப்பர்; ஒருவன் கண்ணேடு தம் கண் கலந்த பின்பும் கண் ணேட்டத்தைச் செய்யாதவர் எ - று.

கண் காணுமை பாவைக்கும் ஒக்கும்.

என்றது.

இது மகன் அல்லன்

(7)

கா. 8.

ப. 8.

உளபோன் முகத்தெவன் செய்யு மளவிறற்
கண்ணேட்ட மில்லாத கண்.

(கா - உ.) எ - து.—முகத்து உளபோலத் தோன்றி அங்ஙனம் வரும் பொருட்களைக் கண்டதே யாயினும் அதனல் என்ன பயன்? மற்றவர்க்கு இரங்க வேண்டும் அளவினல் குறிக்கொண்டு கண்ணேடு வது ஓர் கண்ணேட்டம் இல்லாத கண்ணனது எ - று.

(ப - உ.) எ - து.—அவரவர் வாழ்வு காரணமாகக் கண்ணேடு தலைச் செய்யாத கண்கள் முகத்து உளபோன்று தனக்கு என்ன பயனைத் தரும் எ - று.

அளவு என்றது தகுதியை. இது தனக்கும் பயன் படாது என்றது.

(8) கா. 9.

ப. 4.

கருமஞ் சிதையாமற் கண்ணேட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(கா - உ.) எ - து.—தாம் செய் கருமம் வாய்த்தற் பொருட்டாக யாவர் மாட்டும் கண்ணேட வல்லா..... வழிச் செல்லுதல் உடைத்து இவ்வுலகு எ - று.

சிதையாமல் என்பது அழியாதவாறு என்றது.

(ப - உ.) எ - து.—தம் கருமத்திற்கு அழிவு வாராமல் கண் ணோட வல்லவர்களுக்கு இவ்வுலகம் உரிமையாதலை உடைத்து எ - று.

நற்குணமாவது கண்ணோட்டம் ஆயினும் அரசர்க்குப் பொருட் கேடு வாராமல் கண்ணோட வேண்டும் என்று எய்தியது விலக்கிக் கூறிற்று. உரிமை யிருந்ததென்று பாடம் ஆயினும் அமையும். (9)

கா. 10.

ப. 6.

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலார் கண்ணுடை
கண்ணோட்ட மின்மையு மில். [யார்

(கா - உ.) எ - து.—இனிப் பல சொல்லினென்? உலகத்துப் பிறர் மாட்டுக் கண்ணோட்டம் இல்லாதவர் யாவர்? மற்று அவரே கண் இல்லாதோர் ஆவார்: மற்று இனிக் கண்ணுடையர் ஆவார் கண் ணோட்டம் இல்லாமையும் இல்லை எ - று

(ப - உ.) எ - து.—கண்ணோட்டம் இல்லாதார் கண்ணிலரே: கண்ணுடையார் கண்ணோட்டம் இன்மையும் இலர் ஆதலான் எ - று.

உம்மை ஐயத்தின் கண் வந்தது. கண் உண்டாயின் நோக்கு மாயின் வந்து நிலைமையைக் கண்டு கண்ணோடும்: ஆதலான் கண் ணோட்டம் இல்லாதவர் கண்ணிலர் என்று மிகுத்துக் கூறிற்று. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் கண்ணோட்டம் உடைய அரசர்க்குத் தம் கண் எதிர் அணுகாதார்க்கு உள்ள இடர்களும் தேர்ந்து குறிக்கோடலும் அரியல் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

21. ஒற்றுடல்.

(ப - உ.) ஒற்றுடல் ஆவது ஒற்றரை ஆளவேண்டும் என்பதும் அவர் ஒற்றும் திறனும் கூறுதல். பெரியாரைத் துணைக்கோடல் முதலாகக் கண்ணோட்டம் ஈறாகத் தன் அரசிலிருந்து செய்ய வேண்டுவன கூறினர்: இது செய்யுங்கால் அவர் அவர் செய்தியை ஒற்றாலே அறிய வேண்டுதலானும் இனி அவர் பிற நாடு கொள்ளுங்கால் செய்ய வேண்டுவன கூறுகின்றார் ஆதலின் அந்நாட்டு இயல்பும் அறிந்து வினை செய்ய வேண்டுதலானும் இவ்வதிகாரம் வேண்டப்பட்டது. மேலதனோடு இயைபும் அது.

கா. 1. ப. 1.

ஒற்று முரைசான்ற நூலு
மிவையிரண்டுந்
தெற்றெனக மன்னவன் கண்.

(கா - உ.) எ - து.—ஒற்றரைக் கொண்டு ஒற்று ஆடலும் அரசியற்கு உரித்தாகிய உரைசான்ற கலைநூல்களும் என்னும் இவை இரண்டும் சாலத் தெளிவுற்று நிற்க மன்னவனிடத்து எ - று.

தெற்று என்றது தெளிவுற என்றது.

(ப - உ.) எ - து.—ஒற்றினையும் உரை அமைந்த நூலினையும் தெளிய அறிக மன்னவன், இவை இரண்டும் கண்கள் ஆதலான்

எ - று.

மறைந்தவை காணுங்கால் ஒற்றாலுதல், நூலினுதல் காண வேண்டுமாதலின், அதிற்காக இரண்டினையும் தெளிய அறிக. ஐயம் ஆகிய பொருள் உண்மை தோற்றுது என்று ஆயிற்று. ஈண்டு நூல் கூறியது எற்றுக்கு எனில் அரசனுக்குக் கல்வி இன்றியமையாது என் றற்கு. இஃது ஒற்று வேண்டும் என்றது. (1)

கா. 2. ப. 10.

ஒற்றினு ஞெற்றிப் பொருடெரியா மன்னவன் கொற்றங் கொளக்கிடந்த தில்.

(கா - உ.) எ - து.—தனது நாட்டகத்து வாழ்வாரது வன்மை மென்மையும் வேற்றாசர் மாட்டுள்ள வன்மையும் மென்மையும் ஒற்று ளரை உழுவிட்டு மற்று அவர்களான் ஒற்றுவித்துப் பின்னும் அவர் உகுப்பதன் கண் பொருட் கருத்தும் தெரிந்து உணர வல்லாத மன்ன னவன் அரசியல் திறமை கோடற்கு இயைபாவது யாதும் இல்லை

எ - று.

(ப - உ.) எ - து.—ஒற்றாலே ஒற்றிப் பொருளை விசாரியாத மன்னவன் கொள்ளக் கிடந்தது ஒரு வெற்றி இல்லை எ - று.

இஃது ஒற்று இன்மையால் வரும் குற்றம்

கூறிற்று. (2) கா. 3.

ப. 5.

எல்லார்க்கு மெல்லா நிகழ்படவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

(கா - உ.) எ - து.—ஒற்றுமை பெரிதும் குற்றம் ஆகலான் அகத்தோரும் புறத்தோரும் அருகலரும் ஆகிய அனையவர்க்கும் நிகழ்வன ஆகிய நலம் தீங்குகளை நாடோறும் நாடோறும் ஒற்றுவித்து விரைவின் உணர்தல் வேந்தனது செய்தி எ - று.

(ப - உ.) எ - து.—பகைவர் ஆகியும் நட்டோர் ஆகியும் மத்திமராகிய உதாசீனர் ஆகியும் இருக்கின்ற அரசர்க்கும் அவர் சுற்றத்திற்கும் தன் சுற்றத்திற்கும் அறம் பொருள் இன்பங்களைப்பற்றி நிகழ்பவை எல்லாவற்றையும் நாடோறும் பிறர் அறிவதன் முன்னம் தான் அறிதல் வேந்தனது தொழில் எ - று. (3)

கா. 4.

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல்.

ப. 7.

(கா - உ.) எ - து.—இவ்வாறு செய்யும் இடத்து ஒற்றன் ஒற்றிக் கொணர்ந்து உரைத்த உரை பொருட்டன்னையும் அவன் அறிப்பாமல் வேறேயும் ஒரு ஒற்றினால் ஒற்றுவித்து ஒத்தது ஆயின் கொள்க: இல்லை ஆயின் அது செய்யற்க எ - று.

(ப - உ.) எ - து.—ஓர் ஒற்றன் அறிந்து சொன்ன பொருளைப் பின்னையும் ஓர் ஒற்றினாலே ஒற்றி அறிந்து பின்பு அதனது உண்மை கொள்க எ - று.

ஒற்றர் தங்களிலே மாற்றாசர் மாட்டும் பொருள் பெற்று மாறுபடச் சொல்லுவாரும் உளராதலான், அவர் சொன்ன பொருளைப் பின்பும் ஒருவனை விட்டு ஆராய வேண்டும் என்றது. (4)

கா. 5. ப 8.

ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர் சொற்றொக்க தேறப் படும்.

(கா - உ.) எ - து.—இவ்வாறும் இன்றி இன்னமும் ஒற்றோரைக் கொண்டு யாவர் மாட்டும் உள்ள நன்மை தீமைகள் ஒற்றுவிக்கும் இடத்து ஒருவரை ஒருவர் அறியாமல் ஆண்டு அவ்வாறு பலரையும் கொண்டு ஒற்றுவித்த இடத்துத் தனித்தனி தனக்கு உரைத்த மூவர் சொல்லும் ஒக்குமாயின் மற்று அவை அரசன் தெளிய அடுக்கும்; எனவே மூவர் சொல்லிற் குறைபடின், தெளிய அடாது எ - று.

(ப - உ.) எ - து.—ஒற்றரை விடுங்கால், ஒருவரை ஒருவர் அறியாமல் விடுக: மூவர் சொல் உடன் கூடின், அது தெளியப்படும் ஆதலான் எ - று.

இஃது இருவர் சொன்னலும் தெளியப்படாது: மூவர் சொன்னது தெளிவு என்றது. இவை இரண்டும் ஒற்றை ஆளும் திறம் கூறின. (5)

கா. 6. ப. 2.

கடாஅ வுருவோடு கண்ணஞ்சா தியாண்டு
மூகாஅமை வல்லதே யொற்று.

(கா - உ.) எ - து.—அறவோர் வேடமும் துறவோர் வேடமும் வறியோர் வேடமும் பிறவும் ஆகிய நல்லுருவு கொண்டு ஒற்று ஆடுமிடத்து அமைச்சரும் பிறரும் ஆகிய அறிவுடையாளரும் யாவரோனும் தன்னைக் கண்டு ஐயுற்று இவ்விடை வந்து எய்திய நீ யாரோ தான் என்று வினவுதல் செய்யாதபடி உறு வேடத்தோடு நிரிதலும் மற்று இங்ஙனம் திரியும் இடத்தும் ஐயுற்றுக் கைப்பற்றியும் சிறைப்படுத்தியும் வருத்தம் செய்யும் இடத்துச் சிறிது நெஞ்சு அஞ்சாது

12

நிறை உரம் செய்தலும் மற்றுத் தான் வகைந்து உட்கொண்ட மறை பொருளினை வேறு ஓரிடத்தும் சோர விடாமையும் வல்லது யாது?

மற்று அதுவே அரசர்க்கு ஒற்று ஆவது எ - று.

மற்றும் தனது தந்தை தாயார் கட்டோர் சுற்றம் என்னும் இவர் மாட்டும் சோர விடாமை ஒற்றென அறிக.

(ப - உ.) எ - து.—விஞவப்படாத வடிவோடே கூடிக் கண் ணஞ்சுதலும் இன்றி அறிந்த பொருளை எவ்விடத்தினும் சோர்வின் றியே அடக்க வல்லவன் ஒற்றன் ஆவன் எ - று.

விஞவப்படாத வடிவு ஆவது வணிகரும் பார்ப்பாரும் ஆகிய ஒற்றற்குத் தகை எவ்விடத்துஞ் சோர்வு இன்றியே அடக்க வல்ல வன் ஒற்றன் எ - று. (6)

கா. 7.

ப. 3.

துறந்தார் படிவத்தா ராகி யிறந்தாராய்ந் தென்செயினுஞ் சோர்வில தொற்று.

(கா - உ.) எ - து.—துறந்தோர் வேடம் முதலாகப் பல வேடங் களினுலும் ஒற்று ஆராயும் இடத்துப் பிறர் தன்னையும் பற்றி ஆராய்ந்து கட்டுதல் கடுத்தல் எற்றுதல் எறிதல் முதலிய இடரால் இடர்ப்படுத் திக் கடாவினும் தன் தன்மையிற் சிறிதும் சோர்வு படாதது யாது! மற்று அதுவே அரசர்க்கு ஒற்று ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—தவம் செய்வார் வேடத்தார் ஆகி, நாட்டு எல்லையைக் கடந்துபோய், அங்கு உள்ள செய்தியை ஆராய்ந்த இடத்து, அகப்படாமல் துன்பம் ஆயினும் இன்பம் ஆயினும் செய்யி னும் தனது உள்ளகத்தைச் சோர விடாதவன் ஒற்றன் ஆம் எ - று.(7)

கா. 8. ப. 6.

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

(கா - உ.) எ - து.—ஓர் காரியம் செய்வாரையும் அரசனது சுற்றத்தாரையும் பகைவரையும் இங்குச் சொன்ன மூவரையும் மற்றும் உள்ளோரையும் கசடு அற ஆராய வல்லது ஒற்று எ - று.

(ப - உ.) எ - து.—தனக்குக் காரியமானவை பார்த்துச் செய்வாரையும், தனக்குச் சுற்றமாய் இருப்பாரும் தம்மை வேண்டாது ஆகிய அனைவரையும் ஆராய்ந்து அறிவான் ஒற்றன் எ - று.

மேல் எல்லார்க்கும் நிகழ்பவை ஒற்ற வேண்டும் என்றார்: இது தன் காரியத்திற் செய்வார் செய்கின்ற அளவும் தனக்கு நட்பும்

பகையுமாய் இருப்பாரையும் ஒற்ற வேண்டும் என்றது. டும் ஒற்ற வேண்டும் இடம் கூறின.

இவை இரண்

(8)

கா. 9.

ப. 9.

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க

செய்யிற்

புறப்படுத்தா ஞகு மறை.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் அகத்தும் புறத்தும் அருமையும் பெருமையும் நுட்பமும் ஒட்பமும் ஓர்ந்து உணர்ந்த இடத்தும் ஒற்றார்க்கு ஆசர் செய்யும் சிறப்புப் பலவும் உள அன்றே: அவற்றுள் யாதானும் ஒரு சிறப்பினையும் பிறர் அறியுமாறு தாம் செய்யாது ஒழிக: செய்வாரயின் அங்ஙனம் அவரால் தாம் அரிதின் பெற்ற மறையுரையினை அவ்வுரைப் பொருள் ஆகிய வினை முடிவதன் முன் ஓ ரே தாமே புறத்து வெளிப்படுத்தினர் ஆவர் எ - று.

(ப - உ.) எ - து.—ஒற்றார்க்குச் சிறப்புச் செய்யுங்கால் பிறர் அறியாமல் செய்க: பிறர் அறியச் செய்தாஞயின், அவர் ஒற்றி வந்த பொருளைப் புறத்து விட்டாஞம் எ - று.

இஃது ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்கால் செய்ய வேண்டும் என்றது.

பிறர் அறியாமல்

(9) கா. 10.

ப. 4.

மறைந்தவை கேட்கவற் ஞகி

யறிந்தவை

யையப்பா டில்லதே யொற்று.

(கா - உ.) எ - து.—வேந்தரிடத்தும் பிறரிடத்தும் மிகவும் மறை பொருள் ஆகிய வினைச் சூழ்ச்சிகளை விரைவியும் விடுத்தும் கட்பினும் கையினும் பிறவினும் தெரிந்து விளங்கக் கேட்டுணர வல்லனும் ஆகி அங்ஙனம் அறிந்தவை தம்பால் சிறிதும் ஐயப்பாடு இன்றித் தெளிவுற உரைக்கும் திறமை யுள்ளது யாது? மற்று அதுவே அரசர்க்கு ஒற்று ஆவது எ - று.

(ப - உ.) எ - று.—பிறரால் மறைக்கப்பட்ட வற்றைக் கேட்டு அறிய வல்லன் ஆகி அறிந்தவையிற்றை ஐயம் தீர அறிய வல்லன்

ஒற்றன ஆவான எ - று.

இவை மூன்றினும் ஒற்றன் இலக்கணம்

கூறிற்று. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் ஒற்றரைக் கொண்டு உறுதி வினைப்பண்பு உணர்ந்த அரசனெனவன், அவ்வுறுதி வினை வாய்ப்பின் அக்காலம் கழிவதன் முன்னரே கிழ்ச்சொல்லிப் போந்த காலம் அறி

தல், இடன் அறிதல் என்னும் கருத்தினைக் கூறி வழுவாமல் குறிக் கொண்டு மற்று அவ்வினை மாட்டுப் பெரிதும் மேற்செலவு உடைய தாக வேண்டுதலான், மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின் றது மேலை அதிகாரம்.

22. ஊக்கம் உடைமை.

(ப - உ.) ஊக்கம் உடைமை யாவது ஒரு வினை செய்யுங்கால் அதனது அருமையை ஓராது இவ்வாறு செய்யக் கடவேன் என்று கருதும் கருத்து உடைமை. பிறர் நாடு கொள்ளுங்கால் அவ்விடத்து உள்ள செய்தி ஒற்றரான் அறிந்த பின்பு அதனை அறிந்து கொள்ளக் கடவேன் என்று நினைக்கும் கருத்து வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப 1.

உடைய ரெனப்படுவ தூக்கமஃ்

திில்லா

ருடைய துடையரோ மற்று.

(கா - உ.) எ - து.—உலகத்து அரசாளுவோர் எனைத்து வகைப் பட்ட பொருள்களையும் உடையரேனும் அவற்றுள் எல்லாம் பலரா னும் எடுத்துரைக்கப்படுவது சிறந்த ஊக்கம் உடைமையே ஆகலான் அஃ்து இல்லாதார் வேறு தமக்கு உடையதாக வகுத்து எண்ணப் பட்ட உடைமை உடையரேனும் யாதும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—ஒன்றை உடையர் என்று சொல்லப்படுவது ஊக்கம்: அஃ்து இல்லாதார் மற்று உடைமை யாகிய பொருள் எல்லாம உடையராகா எ - று.

இஃ்து ஊக்கம் உடைமை வேண்டும் என்றது.

(1) கா. 2.
ப. 3.

வெள்ளத் தனைய மலர்நீட்ட

மாந்தர்தம்

மூள்ளத் தனைய துயர்வு.

(கா - உ.) எ - து.—குளத்தின்கண் நின்ற வெள்ளம் எத்தன்மைத்து: மற்று அத்தன்மைத்து நீர்ப்பூந் தண்டின் நீளமானது: மற்று அதுபோல மன்னர் தமது நெஞ்சு ஒருப்பாடு எத்தன்மைத்து: மற்று அத்தன்மைத்து ஒருவர்க்கு உரியவாகப் பெரியோரான் உரைக்கப்பட்ட உயர்வு பொருள் அனைத்தும் எ - று.

(ப - உ.) எ - து.—புகுந்த நீரினது அளவினது பூக்களது வளர்ச்சி: அதுபோல மாந்தரது உள்ளத்தின் அளவினது ஆக்கம் எ - று.

ஆக்கம் - அனைய மலர் நீட்டம்: ஆக்கம் என்றது.

இதனானே வரும்

(2)

கா. 3.

ப. 7.

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டேன்றுங் களிறு.

(கா - உ.) எ - து.—நெஞ்சு ஊக்கம் உடைய ஆசான்னவர், தமது விதி வகையான் யாதானும் ஒருவாற்றான் தமது ஆக்கம் அழியுமிடத்துத் தளர்வுறார்: அது என்போல எனின், ஒருவன் எய்த அம்பானது தன் மெய் அழுந்தப்பட்டு வைத்தும் பின்னும் தனது பெருந்தன்மையை உரைத்து நிற்கும் அண்ணல் யானையானது மற்று அது எ - று.

சிதைவு இடத்து என்றது ஆக்கம் அழிவு இடத்து என்றது. ஒல்கார் என்றது தளாரார் என்றது: உரவோர் என்றது அறிவுடையோர் என்றது.

(ப - உ.) எ - து.—தளர்ச்சி வந்த இடத்துத் தளாரார் உள்ளம் மிகுதி உடையார்: மெய் புதைந்த அம்பினுள் பட்டும் பாடு ஆற்றும் களிறுபோல எ - று.

இது உயிர்க் கேடு வரினும் தளரார் என்றது.

(3) கா. 4.

ப. 5.

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

(கா - உ.) எ - து.—அரசர் தாம் செய்வதாகச் சிந்திப்பது எல்லாம் மேம்படு கருமம் சிந்திக்க : மற்று அது பிழைப்பினும் பிழையாத நீர்மை உடைத்து எ - று.

உயர்வுள்ளல் என்றது உயர்வினை உள்ளுக என்றது : தள்ளினும் என்பது பிழைப்பினும் என்பது : தள்ளாமை நீர்த்து என்பது பிழையாத நீர்மை உடைத்து என்றது.

(ப - உ.) எ - து.—நினைப்பன எல்லாம் உயர்வையே நினைக்க : அதனை[illegible]வு முடியாமல் தப்பினும் முயன்று பெற்றதனை[illegible]டு ஒக்கும் று.

இது தப்பினும் பழிக்கப்படாது என்றது.

(4) கா. 5.

ப. 9.

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒரு கருமத்தின் கண்ணும் தமது நெஞ்சு ஊக்கம் இல்லாத அரசரானோர் என்றும் எய்துவதிலர்: யாதினை எனின் இவ்வுலகத்து வாழ்வார் பலரினும் யாம் சாலச் செய்

கருமத்தின்கண் வளவியேம் என்று உள்ள மனச்

செருக்கினை எ - று.

(ப - உ.) எ - து.—உள்ளம் மிகுதி இல்லாதார் உலகின்கண் வண்மை உடையேம் என்னும் களிப்பினைப் பெறார் எ - று.

இஃது ஊக்கம் இல்லாதார்க்கு ஈய மாட்டார் என்றது. (5) கா. 6.

ப. 6.

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்கு உணர்வுடைமை யாவது யாதோ எனின் ஓர்ந்து உற்ற கருமத்தின்கண் பெரிதும் நெஞ்சு ஊக்கம் உடையர் ஆதலே செல்வம்: அஃது இல்லாதார், மாமானது மக்க ளுக்குள் காண்டது எத்தன்மைத்து அத்தன்மைத்து எ - து.

உரம் என்பது அறிவுடைமை. வெறுக்கை என்பது செல்வம் என்றும் வெற்றுப்பு என்றும் சொல்லுவாரும் உளர்.

(ப - உ.) எ - து.—ஒருவனுக்கு அறிவாவது உள்ளம் மிகுதி உடைமை. அஃது இல்லாதாரை மாம் என்று சொல்லப்படும்: மக் கள் வடிவே மாத்தின் வேறுகித் தோற்றுகின்றது எ - று.

அறிவும் இதுதானே என்றது.

(6) கா. 7.

ப. 8.

ஆக்க மிழந்தேமென் றல்லாவா ருக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

(கா - உ.) எ - து.—தம் மாட்டு முன்னமே உளது ஆகிய பெருஞ் செல்வத்தைப் பின்பு ஒருகால் இழந்தோம் என்று கொண்டு அலம் வருதல் இலர்: யார் எனில், பின்னும் ஊக்கம் உடைமை ஆகிய பெருஞ் செல்வத்தைத் தம் இடத்து உடையவர் எ - று.

ஒருவந்தம் பெருஞ் செல்வம் கைத்துடையர் என்பது தம் மிடத்து உடையவர் என்றது.

(ப - உ.) எ - து.—செல்வத்தை இழந்தேம் என்று அலம் வருவார் அல்லர், உள்ளம் மிகுதியை ஒருதலையாகத் தம்மாட்டு உடையார் எ - று.

இது பொருட்கேடு வரினும் தளாரார் என்றது.

(7) 22. ஊக்கம் உடைமை 95

கா. 8.

ப. 2.

உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை நில்லாது நீத்து விடும்.

(கா - உ.) எ - து.—மற்று ஆகலான் ஊக்கம் உடைமையே ஒருவர்க்குச் செல்வம் ஆனது: மற்று இவ்வுலகத்துப் பொருளானது நிலையாது: முன்னை வினை வழியினால் தமக்கு வரும் பொருள் வருதலும் கெடும்பொருள் வருதலும் யாவராலும் ஒழித்தற்கு அரிது ஆகலான், மற்று உணர்வு ஊக்கம் ஆகின்றது அவ்விரண்டினும் சிறந்து ஆகலான் இதனை ஒப்பது ஓர் ஆக்கம் வேறு இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனுக்கு உடைமையாவது அறிவு உடைமை: மற்றப் பொருள் முதலாகிய செல்வம் நில்லாது தன்னை விட்டு நீங்கும் எ - று.

(8)

கா. 9. ப. 10.

பரியது கூர்ங்கோட்ட தாயினும்
யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

(கா - உ.) எ - து.—சாலப் பரியதும் ஆய்க் கூரிய கோட்டினை உடையதும் ஆய் இருந்தே ஆயினும், யானையானது மிகவும் அஞ்சும்: எவ்விடத்து எனின், ஒரு புலி வந்து தன்னெடு பொரத் தாக்குறுவதான இடத்து: மற்று அத்தன்மைத்து மன்னர்க்கும்: பொரும்படை ஆண்மையும் வருபடைத் துணையும் மற்றும் பிறவும் பெரியர் ஆகிய மாற்று அரசர் வந்துற்றனர் ஆயினும், மற்று இவரை நோக்கிச் சிறியரே ஆயினும், நெஞ்சு ஊக்கம் என்னும் நிலைமையே அரசர்க்கு இயல்பு எ - று.

(ப - உ.) எ - து. -- யானை பரிய உடம்பினதாய்க் கூரிய கோட்டையும் உடையதாயினும் புலி பொருமாயின் அதற்கு அஞ்சும் எ - று.

ஊக்கம் இலாதார் பெரியராயினும் கெடுவார் என்றது.

(9) கா. 10.
ப. 4.

ஆக்க மதர்வினைச் செல்லு மசைவிலா

ஆக்க முடையா னுழை.

(கா - உ) எ - து —ஒருவனுக்கு இருமைக்கும் உரிய ஆக்க மானது தானே வழிதேடிச் சென்று எய்தும்: யாவர் மாட்டு எனின், சிறிது அசைவும் இல்லாத நெஞ்சு ஊக்கத்தை உடையார் மாட்டு; ஆகலான் ஊக்கம் உடைமை உளதாயின் அல்லது தமக்குரிய தாளாண்மை உள ஆகா எ - று.

அதர் என்பது வழி எள்றது.

(ப - உ.) எ - து.—அசைவு இல்லாத ஊக்கம் உடையான் மாட்டு ஆக்கம் தானே வழிகேட்டுச் செல்லும் எ - று.

நினைத்ததனானே ஆக்கம் உண்டாமோ என்றூர்க்கு, இது கூறப் பட்டது. (10)

(கா - உ) இனி மற்று இந்நெஞ்சு ஊக்கம் உடையோர்க்கு அல்லது மடியின்மை நிகழாது: ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

23. மடியின்மை.

(ப - உ.) மடியின்மையாவது சோம்பல் இன்மை. செய்யும் காரியம் உயர நினைத்தாலும் அதனைச் செய்து முடிக்குங்கால், சோம்பாமை வேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 10.

மடியில்லா மன்னவ னெய்து மடியளந்தான்
ஞாலய தெல்லா மொருங்கு.

(கா - உ.) எ - து.—தனது நெஞ்சு ஊக்கத்துக்குத் தக்க முயற்சி உடையனாய்த் தனது இடத்து ஒரு நாளும் மடிப்பது ஓர் மடி இல்லாத மன்னவன் யாவன்? அவன் எய்தும்: யாதினை எனின், முன் ஒரு நாள் அசுரேசனிடத்துச் சென்றுற மூவடி வேண்டி அளந்தவன் ஆகிய திருமால் அடியில் தாவிக் கொண்ட அனைத்து உலகினையும் ஒரு வழிப்படப் பெறும் எ - று.

(ப - உ.) எ - து.—மடி இல்லாத மன்னவன் எய்துவன், அடியினன் அளந்தானல் கடக்கப்பட்ட உலகம் எல்லாம் கூட எ - று.

இது மடியின்மையால் வரும் பயன் கூறிற்று. (1)

கா. 2. ப. 4.

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(கா - உ.) எ - து.—தன்கோல் கீழ்வாழும் குடிகளும் தத்தம் வினைச்செயலைச் செய்யாது மடிந்து பின்னும் தமக்கும் குற்றம் பெருகும்: யார்க்கு எனின், மடியின்கண் தங்கியதனலே மாட்சிமை உடைய முயற்சி இல்லா மன்னவர்க்கு எ - று.

குடி மடிந்து என்பது குடிகள் வினைமடிந்து என்றது. குடி மடிந்து என்பதனைச் சுற்றத்தார் மாய்ந்து என்பாரும் உளர். மடி முடிந்து என்பது மடியின் கண்ணே மடிந்து என்றது.

(ப - உ.) எ - து.—குடியும் கெட்டுக் குற்றமும் மிகும்: மடியின் கண்ணே ஒன்றி மாட்சிமைப் பட்ட முயற்சி இல்லாதார்க்கு எ - று.

இது குடி கெடுதலே அன்றிக் குற்றம் உண்டாம் என்றது. (2) கா. 3. ப. 5.

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து மாண்ட வுளுற்றி லவர்.

(கா - உ.) எ - து.—பிறர் இடித்தலைச் செய்து இகழ்ந்து உரைக்கும் சொல்லினைக் கேட்பார்: யார் எனின், மடியின்கண் தங்கி மற்று அதனையே மாட்சிமைப் பட்ட முயற்சி இல்லாத மன்னவர் எ - று.

(ப - உ.) எ - து.—நட்டோரால் கழறுதலையும் பெற்று எதிலார்
இகழ்ந்து சொல்லும் சொல்லையும் கேட்பர், மடியை விரும்பிச் செய்து மாட்சிமைப் பட்ட முயற்சி இல்லாதார் எ - து.

இது பிறரால் இகழப்படுவர் என்றது.

(3) கா. 4.

ப. 6.

மடிமை குடிமைக்கட் டங்கிற்ற னென்னுர்க் கடிமை புகுத்தி விடும்.

(கா - உ.) எ - து.—தனக்கு உரிய ஆசர் வாழ்க்கைக்கு உரியனவற்றை முயலாது மடிந்து ஒழுகும் மடித்தன்மையும், தன்கோல் கீழ்வாழும் குடிகளது குணமும் குற்றமும் ஆராயாமல் மடித்தலும், மற்று.....பருவம் வழுவாமல் ஆங்கு உழவு முதலிய முயற்சியின் மடித்தலும் தனது பகை வேந்தர்க்குத் தான் ஏவல் கேட்டுப் பணிந்து ஒழுகும் அடிமைப் படுத்தி விடும் எ - று.

(ப - உ.) எ - து.—குடிப்பிறந்தார் மாட்டே மடிமை தங்குமாயின் அது தன் பகைவர்க்கு அடிமை யாக்கி விடும் எ - று.

இது கீழ்ப்படுத்தலே அன்றி அடிமையும் ஆக்கும் என்றது. (4) கா. 5.

ப. 2.

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த

* குடிமடியுந் தன்னினு மூந்து.

(கா - உ.) எ - து.—மடித்தல் ஆகிய இதனைத் தன் மாட்டுக் கொண்டு ஒழுகும் மடவோன் ஆகிய மன்னவன் தான் மாய்தலேயும் அன்றித் தன்னினும் முந்துறத் தனது குடி முழுது மாயும் எ - று.

மடி மடிக்கொண்டு ஒழுகும் என்பது மடியாகிய இதனைத் தன் மேல் வைத்துக்கொண்டு என்றது.

(ப - உ.) எ - து.—நெஞ்சத்து மடியினுலே வினையின் கண் மடித்தலைச் செய்து ஒழுகா நின்ற அறிவிலி பிறந்த குடி தனக்கு முன்பே கெடும் எ - று.

மடி உடையார்க்கு உளதாகும் குற்றம் என்னை என்றூர்க்கு இது கூறப்பட்டது. (5)

கா. 6.

ப. 9.

குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன் மடியாண்மை மாற்றக் கெடும்.

(கா - உ.) எ - து.—குடிகளைத் தான் ஆண்டு ஒழுகும் இடத்து அவர்க்கு வந்து எய்திய வடுப்பாடு மற்று அம்மன்னவன் தனக்கு வந்த வடுப்பாடு மற்று இங்ஙனம் வந்த மடி ஆட்சியைத் தவிர்க் கவே கெட்டு விடும் எ - று.

(ப - உ.) எ - து.—குடி ஆள்தலில் உடைமையின் கண் வந்த குற்றமானது, ஒருவன் மடி ஆள்தல் உடைமையைக் கெடுக்கக் கெடும் எ - று.

குற்றம் என்பது குடிக்கு வேண்டுவன செய்யாமை வரும் றம். இது மடி இல்லார்க்குப் போக்கலாம் என்றது.

குற்

(6)

கா. 7.

ப. 1.

மடியை மடியா வொழுகல் குடியைக் குடியாக வேண்டு பவர்.

(கா - உ.) எ - து.—தாம் யாதானும் ஒரு கருமம் செய்யக்

கருதிய காலத்துத் தம் மனத்து ஒரு மடி வந்துற்ற இடத்து அதற் கும் இடம் கொடாது அம்மடியை மடியா ஒழுகல் வல்லவர் மற்று அவரே, தமது நாட்டு வாழும் குடிகளைக் குலம் தழீயாது (?) குடி கெருங்கி வாழ வேண்டும் அரசர் எ - று.

(ப - உ.) எ - து.—மடி செய்தலில் மடித்து குடியை உயர் குடியாக வேண்டுவார் எ - று.

ஒழுகுக : தம்

இது மடியாமை வேண்டும் என்றது.

(7)

கா. 8.

ப. 3.

குடியென்னுங் குன்ரு விளக்க மடியென்னு

மாகூர மாய்ந்து விடும்.

(கா - உ.) எ - து.—அரசர் குலம் என்று எடுத்து உரைக்கப் பட்ட கெடாத விளக்கானது.....வந்து பாக்கவே தனது ஒளி மறைந்து பின்னும் கெட்டு விடும் எ - று.

23. மடியின்மை 99

(ப - உ.) எ - து.—குடி என்னு நின்ற குறைவு இல்லாத ஒளி, மடி என்று சொல்லப்படுகின்ற மாசு மறைக்கத் தோன்ரு து எ - று.

இது முன்பே தோற்றம் உடைத்தாய தது.

குடியும் கெடும் என்

கா. 9.

ப. 7.

படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார் மாண்பய மெய்த லரிது.

(கா - உ.) எ - து.—மண் ஆளும் வேந்தானவர் தம்மினும் வலி உர் வேந்தரைப்பற்றி வாழ்தல் முற்றும் பெற்ற இடத்தும், மடி யுடைய மன்னர் ஆயின் மாட்சிமை உடைய அரசர் வாழ்க்கைப் பயன் எய்தல் அரிது எ - று.

(ப - உ.) எ - து.—நில வேந்தர் பல பொருளினுலும் அமைந்த இடத்தும் மடி உடையாரயின் மாட்சிமைப்பட்ட பொருளைப் பெறு தல் இல்லை எ - று.

இது செல்வம் உண்டாயினும் கெடும் என்றது. (9)

கா. 10.

ப. 8.

நெடுநீர் மறவி மடிதுயி னுன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

(கா - உ.) எ - து.—விரைந்து எழ வேண்டும் கருமத்தை நீள விடுவதோர் நெடுநீர்மையும் குற்றத்தின்கண் பற்றிய மறவியும் அதற்கு உரிய மடிமையும் கருமம் இயற்றக் காமுறுது கண் துயில்தலும் இந் நான்குமே கெடுதல் தன்மையர் ஆகிய அரசர் ஆசைப்பட்டு அணிந்து கொள்ளும் அணிகலம் ஆவது.: மற்று இது அன்றி அரசர்க்கு உரிய நன்கலம் ஆகிய கடகமும் கண்டமாலையும் ஆரமும் கடுக்கும் அணிதல் இலர் எ - து.

(ப - உ.) எ - து.—வினைந்து செய்யும் வினையை நீட்டித்தலும் செய்ய நினைத்ததனை மறத்தலும், அதனைச் செய்தற்குச் சோம்புதலும், அதனைச் செய்யாது உறங்குதலும் இவை நான்கும் கெடும்

தன்மையார் காதலித்து ஏறும் மரக்கலம் எ - று.

தம்மைக் காதலித்து ஏறினரை நடுக்கடலுள் தள்ளும் மரக்கலம் போறலின் கலம் எனப்பட்டது. துயிலும் மறவியும் நெடுநீர்மையும் மடியினோடு ஒத்த இயல்பின ஆகலான் இவ்வும் ஒருவாற்றால் கூற வேண்டுதலின் ஈண்டுக் கூறப்பட்டது. இத்தனையும் மடியினால் வரும் குற்றம் கூறிற்று. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் ஊக்கம் உடைமையும் மடியின்மையும் உடைய வேந்தர்க்கு என்றும் தொழிலுக்கு அடுத்த தாளாண்மை இயல்பு ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

24. ஆள்வினை யுடைமை.

(கா - உ.) ஆள்வினை யுடைமையாவது முயற்சி யுடைமை. செய்யும் காரியம் உயர நினைத்துச் சோம்புதல் இல்லாயிருத்தலும் அதனை முடியுமாறு முயல வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 2.

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(கா - உ.) எ - து.—ஆசாரமோர் தமக்குச் சிறந்த கருமம் செய்யும் இடத்துப் பெரிதும் செய்தற்கு அருமை உடைத்து என்று கண் சோம்பி ஆமையை விரும்ப வேண்டும்: அதனால் அம்முயற்சி யானது மிகவும் பெரிய மேம்பாட்டினைத் தரும் எ - று.

(ப - உ.) எ - து.—ஒரு வினையைச் செய்தல் அருமை உடைத் தென்று முயலாமையைத் தவிர்தல் வேண்டும்: முயற்சி தனக்குப் பெருமையைத் தரும் ஆதலால் எ - று.

இது வினைசெய்து முடித்தல் அருமை உடைத்தென்று தவிர்தல் ஆகாது என்றது. (1)

கா. 2.

ப. 10.

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

(கா - உ.) எ - து.—ஆசர்க்கு ஆள்வினை யுடைமை என்னும் அத்தகுதிப் பாட்டின்கண் தங்கியது: யாது எனின் யாவர்க்கும் உகப்ப வழங்கும் உபகாரம் என்று எடுத்துரைக்கப் பட்ட பெரிய செருக்கு எ - று.

(ப - உ.) எ - து.—முயற்சி யாகிய நன்மையின் கண்ணே இடந் தது : பிறர்க்கு உபகரித்தல் ஆகிய பெருமிதம் எ - று.

இஃது அறம் செய்தலும் இதனானே ஆகும் என்றது. (2)

கா. 3. ப. 1.

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தான்றுந் தூண்.

24. ஆள்வினையுடைமை 101

(க்ர் - உ.) எ - து.—என்றும் தனக்கு ஓர் இன்ப நுகர்ச்சியை விரும்பான் ஆகிக் கருமத்தின்கண் ஆள்வினை யுடைமையையே விரும்பு வான் யாவன் ? மற்று அவனே கேளிர் ஆகிய கட்டோர்க்கும் சுற் றத்தார்க்கும் சான்றோர் முதலிய அனைவோர்க்கும் தாளாண்மை நிலை பெறுத்திக் துன்பத்தைத் துடைத்து வன்றும் தூண் எ - று.

(ப - உ). எ - து.—தன் உடம்பிற்கு இன்பத்தை விரும்பாது வினை செய்தலை விரும்பும் அவன் தன் கேளிர்க்கு உற்ற துன்பத்தை நீக்கி அவர் தளராமல் தாங்குவது ஒரு தூண் ஆவான் எ - று.

ஆகலால் வருத்தம் பாராது முயல வேண்டும் என்றது. (3)

கா. 4.

ப. 3.

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

(கா - உ.) எ - து.—அரசாளுஞர் தமக்குத் தகுவது ஆகிய கருமம் செய்ய முயலும் இடத்து அதற்குப் பழுது வாராமல் பாதுகாத்து.....வினை குறைபாடு நீங்கிய பெரியோர் மாட்டே தெளிவுற நிலை பெற்றது இவ்வுலகம் எ - று.

(ப - உ.) எ - து.—வினைசெய்யும் காலத்து வினை கெடுதலைத் தவிர்க. வினைக்குறையை முடித்தாரினின்றும் உலகம் விடப்பட்டது இல்லை எ - று.

இது தொடங்கின வினையைக் குறைபட விடலாகாது என்
றது.

(4)

கா. 5.

ப. 5.

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

(கா - உ.) எ - து.—தனது ஆண்மைக்கு உரிய முயற்சியினை இல்லாத மன்னவனது கைவண்மை எத்தன்மையதோ எனின், உறையகத்து இருந்த வாளாண்மை போலக் கெடும் எ - று.

இனி மற்று இவ்வாறும் அன்றி, ஆண்மகன் அல்லாத பேடி கைப்பற்றின வாள் ஆட்சிபோல ஆள்வினை முயற்சியும் மாற்றார் மேல் வழக்கும் அன்றிக் கெட்டு நின்றாற் போலப் பொருவில் முயற்சியும் பொலிவுறு வழக்கமும் இன்றிக் கெடும் எ - று.

வேளாண்மை என்பது யாவர்க்கும் வழங்கும் கைவண்மை. பேடிகை என்பது வாளின்கு உறை என்றது. வாளாண்மை என்பது வாள் ஆட்சி என்றது.

(ப - உ.) எ - து.—முயற்சி இல்லாதான் பிறர்க்கு உபகரித்தல் படை கண்டால் அஞ்சும் அவன் கையில் வாள் பிடித்தாற் போலக் கெடும் எ - று.

இஃது அறம் செய்ய மாட்டான் என்றது.

(5) கா. 6.

ப. 4.

மடியுளாண் மாமுகடி யென்ப
மடியிலான்
ருளாளா டாமரையி ளுள்.

(கா - உ.) எ - து.—தனக்கு ஏற்ற கருமத்தின்கண் முயலாது மடிப்பானுடைய மடியானது, மற்று இது அளித்தாள் யார் எனின் வறுமை நெறியில் பெரியள் ஆகிய மூதேவி என்று சொல்லுப் சான்றோர் : மற்ற மடியானது தன்னிடத்து இல்லாதோனது தாளாண்மை இடத்தாள் திருமகள் எ - று.

(ப - உ) எ - து.—வினை செய்யுங்கால் சோம்புவானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவாள் : அதனைச் சோம்பு இன்றி முயலுவான் முயற்சிக் கண்ணே திருமகள் உறைவாள் என்று சொல்லுவார் எ - று.

இது வினையை மடியின்றிச் செய்ய வேண்டும் என்றது. (6)

கா. 7.

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்.

ப. 8.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்து ஒருவர்க்கு விதியினால் சில காலம் ஆக்கம் இலது ஆயினும் இருந்தே ஆயினும் பின்பு குறிக் கொண்டு முயல்வான் ஆயின், அம்முயற்சி தானும் விதியினால் வினைவது ஆகலின், மற்று இதுவும் தம் மெய்வருத்தத்தால் உள்ள பலத்தினை இறுதிக்கண் கொடுக்கும் எ - று.

தெய்வத்தான் என்றது விதியினால் என்றது.

(ப - உ.) எ - து.—புண்ணியம் இன்மையான் ஆக்கம் இன்று ஆயினும் ஒரு வினையின் கண்ணே முயல்வன் ஆயின், முயற்சி தம் உடம்பினன் வருந்திய வருத்தத்து அளவு பயன் கொடுக்கும் எ - று.

இது புண்ணியம் இன்மை ஆயினும் பயன்படும் என்றது. (7)

கா. 8.

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை யின்மை புகுத்தி விடும்.

ப. 6.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் முயல்கின்ற முயற்சியானது செல்வத்தை உளது ஆக்கும்: மற்று அம்முயற்சி இல்லாமையானது அவர்க்கு வறுமையைக் கொடுக்கும் எ - று.

(ப - உ.) ம து.—முயற்சி செல்வத்தினை உண்டாக்கும். ாமை வறுமையை உண்டாக்கி விடும் எ - று.

முய

செல்வமும் நல்குரவும் இதனானே வரும்

என்றது. (8) கா. 9.

ப 7.

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(கா - உ.) எ - து.—தாம் ஒரு கருமத்தை முயலின், அது விதி வழி இடத்தால் தமக்கு ஆக்கம் இல்லாமை மன்னவர்க்கும் மற்று யாவர்க்கும் பழி ஆவது அன்று: மற்று யாதோ பழி ஆவது எனின், தமக்குச் செய்யத் தகுவதாகத் தாம் அறியும் கருமம் யாது அதனையே குறிக்கொண்டு அறிந்து மற்று அதன்கண் முயல்வது ஓர் முயற்சி இல்லாமையே ஒருவர்க்குப் பழி ஆவது எ - று.

பொறி இன்மை என்பது விதி இல்லாமை என்றது.

(ப - உ.) எ - து.—யாவர்க்கும் புண்ணியம் இன்மை குற்றம் ஆகாது. அறிவன அறிந்து முயற்சி இன்மையே குற்றம் ஆவது எ - று.

அறிவு - காரிய அறிவு. புண்ணியம் இல்லாதார் முயன்றால் வருவது உண்டோ என்றார்க்குக் கூறப்பட்டது. (9)

கா. 10.

ப. 9.

ஊழையு முப்பக்கங் காண்ப

ருலைவின்றித்

தாழா துஞற்று பவர்.

(கா - உ.) எ - து.—தமது விதி தன்னையும் புறத்து இடுவர் ாதும்: யாது எனின் தமக்குத் தகுவது ஆகிய கருமம் செய்யும் இடத்துக் காலத்தாழ்வு வாராமல் பருவத்தோடு வினை முயலும் வேந்தர் எ - று'

ஊழையும் உப்பக்கம் காண்பர் என்றது விதி கிடுவர் என்றது.

தன்னையும் புறத்

(ப - உ.) எ - து.—ஒரு வினையை மனத்தில் தளர்வு இன்றியே நீட்டியாமல் முயலுமவர், அது பயன்படாமல் விலக்குகின்ற தீ வினையை முதுகு புறம் காண்பர் எ - று.

இஃது ஊழ் தன்னையும் வெல்வர் என்றது.

(கா - உ.) இனி மற்று இவ்வாறு அரசாளுவோர்க்கு ஆள் வினையுடைமை அமைந்து ஒழுகவும் நெடும் பொருள் இழக்கம் (?) முதலிய இடுக்கண் வந்துழிச் சிறிதும் நெஞ்சு அழிவுறுமை தமக்கு உளதாக வேண்டுதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

25. இடுக்கண் அழியாமை.

(ப - உ.) இடுக்கண் அழியாமையாவது - யாதானும் ஒரு துன்பம் வந்துற்ற காலத்து அதற்கு அழியாமை. வினை செய்யுங்கால் அதனை முடிவு செய்வதன் முன்னம் சில இடையூறு வரும்; வந்தால் அதனைப் பொறுத்துச் செய்கின்ற வினையை முற்ற முயல வேண்டும் என்று அதன்பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1.

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(கா - உ.) எ - து.—உலகத்து அரசாளுவோர் தமக்கு யாதானும் ஒரு வழியால் இடுக்கண் வந்த இடத்துக் கலங்காது மகிழ்ந்திருக்க: என்னை எனின், மற்று இவ்விடுக்கணினை அடர்த்து மேற்பட்டு நின்று

நக வல்லரெயின், இதனை ஒப்பது ஓர் இன்பம்

பிறிது யாதும் இல்லை எ - று.

நகுக என்றது மகிழ்ந்திருக்க என்றது. அதனை அடுத்தூர்வது என்றது அவ்விடுக்கணினை நெருக்கி மீது போய் நிற்க வல்லது என்றது.

(ப - உ.) எ - து.—தனக்குத் துன்பம் வந்த காலத்து அதனை இகழ்ந்து நகுக. அத்துன்பத்தை மேன்மேலும் அடர்க்க வல்லது அந்நகுதல் போல்வது பிறிது இல்லை எ - று.

இஃது இடுக்கணுக்கு அழியாமை வேண்டும் என்றது. (1) கா. 2.

ப. 6.

வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
ருள்ளத்தி னுள்ளக் கெடும்.

(கா - உ.) எ - து.—அளவு பட்டது அன்றிக் கடல் போன்ற இடுக்கண் ஆயினும், அறிவுடையாளர் ஆகிய அரசர் தம் அறிவினால் உள்ளத்து உணர்ந்து யாம் முன்செய்த வினைப்பயனே எய்திய இன்ப மும் இடரும் ஆகலான், இவை இனிப் பகுத்துக் கோடல் பிறர்க்கு அரிது என்று, இங்ஙனம் உண்மை உணரவே எய்திய இடுக்கண் தானே கெட்டு விடும் எ - று.

25. இடுக்கண் அழியாமை

(பு - உ.) எ - து.—வெள்ளம் போன்ற துன்பம் அறிவுடைய வன் கெஞ்சிலுனே வினைப்பயன் என்று நினைக்கக் கெடும் எ - று.

இது பலவாய் ஒருங்கு வரினும் கண் கெடும் என்றது.

அறிவுடையான் உற்ற இடுக்

(2)

கா. 8.

ப. 3.

இடும்பைக் கிடும்பை படுப்ப

நிடும்பைக்

கிடும்பை படாஅ தவர்.

(க்கா - உ.) எ - து.—யாதானும் ஒருவாற்றான் வந்து எய்திய இடும்பைக்குத் தாம் பெரிதும் இடும்பையைச் செய்வார்: யார் என்னின் அங்ஙனம் எய்திய இடும்பைக்கு இங்ஙனம் தெளிந்து தாம் சிறிதும் இடுக்கண் உறுத இகல் வேந்தர் எ - று.

(ப - உ.) எ - து.—துன்பத்துக்குத் துன்பத்தைச் செய்வர்: அத்துன்பத்துக்குத் துன்பம் உறுதவர் எ - று.

இது பொறுக்க வேண்டுப் என்றது.

ஆகக் கூறப்பட்டன.

இவை மூன்றும் பொது

(3) கா. 4.

ப. 9.

இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

(கா - உ.) எ - து.—இன்பம் வந்து எய்திய இடத்து அவ்வின் பத்தை ஒரு பொருளாகக் கொண்டு விரும்பாத வேந்தனைவன், எனைத்துன்பம் வந்து எய்திய இடத்தும் தான் சிறிதும் தயர் உறு தல் இலன் : இவ்விரண்டும் இயல்பு என்னும் திட்பம் உடையவன் எ - று.

(ப - உ.) எ - து.—இன்பம் நுகரும் அதனை விரும்பாதவன், அதனால் வரும் துன்பம் நுகரும் இடத்து வருத்தம் உறுதல் இலன் எ - று.

இன்பம் நுகரும் இடத்து அதனை விரும்பாமையாவது அவ் விடத்துத் தான் அழிந்து நில்லாமை. இது காமத்தால் வரும் துன் பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று. (4)

கா. 5.

ப. 4.

ழுடுத்தவா யெல்லாம் பகடன்னு னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

(கா - உ.) எ - து.—தான் சென்று முகம் மடுத்த இடத்து எங்கும் எறுனது எத்தன்மைத்து, மற்று இத்தன்மைப்பட்ட அஞ்சா

14

106 திருக்குறள் - பொருட்பால்

(மன்ன)வன் தன்னீன் வந்து உற்ற இடுக்கணனது இடர்ப்பாடு உடைத்தாம் இத்துணையாம் எ - று.

தான் பெரிதும்

பகடன்னன் என்பதனைக் களிறு அன்னன் என்று உரைத்தலும் ஒன்று.

(ப - உ.) எ - து.—இடுக்கண் வந்து உற்ற இடத்து எல்லாம் பகடு போலத் தளர்வு இன்றிச் செலுத்த வல்லவனை உற்ற துன்பம் இடர்ப்படுதலை உடைத்து எ - று.

இது தளர்வில்லாதவன் உற்ற துன்பம் கெடும் என்றது. (5) கா. 6.

ப. 5.

அடுக்கி வரினு மழிவில்லா னுற்ற விடுக்க ணிடுக்கட் படும்.

(கா - உ.) எ - து.—நாளும் நாளும் ஒன்று இரண்டு அன்றிப் பல அடுக்கி வரினும் தனது அறிவுடைய நெஞ்சத்தான் அழிவு உறுதல் சிறிதும் இலனாகிய அரசனுவன், தன்னை வந்துற்ற இடுக்கணுனது தான் பெரிதும் இடர்ப்படும்: அது அன்றி அவனை இடர்ப்படுத்தல் எஞ்ஞான்றும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—மேன்மேலே துன்பம் வந்தன ஆயினும் மனன் அழிவு இல்லாதவன் உற்ற இடுக்கண் தான் இடுக்கப் படும் எ - று.

இது மனன் அழிவு இல்லாதான் உற்ற துன்பம் மேமேல் வரினும் கெடும் என்றது.

(6)

கா. 7.

ப. 7.

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக் கையாறுக் கொள்ளாதா மேல்.

(கா - உ.) எ - து.—பற்று இவ்வுடம்பானது என்றும் இடும்பைக்கு இலக்கம் என்று இங்ஙனம் தெளிந்து இது வந்த இடத்து மனம் கலங்குவதோர் கலக்கத்தைத் தமது ஒழுக்க நெறிக்கு உரிய தாகக் கொள்ளார், உணர்வினும் தறுகண்மையினும் பெரிய அசாரா னோர் எ - று.

(ப - உ.) எ - து.—உடம்பு இடும்பைக்கு இலக்கு என்று கருதித் தமக்கு உற்ற துன்பத்தைத் துன்பம் ஆகக் கொள்ளார் கற்று மேல் ஆயினோர் எ - று.

மேல் என்றமையால் தவம் செய்யுங்கால் வரும் துன்பத்திற்கு அழியாதாரைக் கூறிற்று: அதுவும் ஒருவினை ஆதலான். (7)

25. இடுக்கண் அழியாமை 107

குர. 8.

ப. 8.

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென் றேம்புத றேற்ற தவர்.

(கா - உ.) எ - து.—யாம் கைப்பொருள் அற்றேம் என்று கொண்டு அல்லல் படுவார்களோ? படார் அன்றே: யார் எனின் பெரும்பொருள் பெற்றேம் என்று கொண்டு அதனைப் பேணிப் பிடித்தலே அறியாது பலர்க்கு உபகாரம் செய்யும் அரசர் எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் அற்றேம் என்று இரங்கித் துன்பம் உறார்கள்: அதனைப் பெற்றேம் என்று போற்றி வைத்தலே கன்று என்று தெளியாதவர் எ - று.

தெளிவு - துணிவு. இது பொருட்கேட்டினால் இற்கு அழியாதாரைக் கூறிற்று.

வரும் துன்பத்
(8)

கா. 9.

ப. 2.

இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

(கா - உ.) எ - து.---மற்று இவ்வாறும் அன்றி ஓர் இன்பம் வந்த இடத்து அதனை விரும்பானுமாய், இடும்பை வருதல் இயல்பு என்று கருதும் இறைவன் எஞ்ஞான்றும் ஒரு வாற்றானும் துயரம் உறுதல் இலன் எ - று.

பரி. பா - மி. "இன்பம் விழையாது".

(ப - உ.) எ - து.—இன்பது உறுதலே விரும்பாது இடும்பை உறுதலே இயல்பாகக் கொள்ளுமவன் துன்பம் உறுதல் இலன் எ - று. இடுக்கணே இயல்பாகக் கொள்ள வேண்டும் என்றது. (9)

கா. 10. ப. 10.

இன்னுமை யின்ப மெனக்கொளி னுருந்தன் னென்னுர் விழையுஞ் சிறப்பு.

(கா - உ.) எ - து.—தனக்கு ஓர் இன்பம் வந்த இடத்து அதனையும் செய்தியின் வந்த சிற்றின்பம் ஆகலான் இன்னுத் தன்மையது எனை இங்ஙனம் கருதிக் கொள்வான் ஆயின் மற்று அது தெவ்வரும் தன்னை விரும்பும் சிறப்பு உடைத்தாகும் எ - று.

அன்றியும் உலகத்து இனிமை செய்தோர் இனியர் ஆதலும் மற்றும் இன்னுமை செய்தோர் இன்னுதார் ஆகலும் இயல்பு அன்றே: அத்தனன் ஒருவர் தம் கருத்தால் இன்னுமை செய்யினும் அதனை இவர் எமக்கு இதின் (அடுக்கும்) எனக்கருதிக் கொள்வாராயின் தாம்

அவர்க்கு இனியர் ஆம் அத்தனை அல்லது என்பதனையும் கூறியவாறு எ - று.

இன்னுர் ஆதல் இன்று.

(ப - உ.) எ - து.—இன்னுமையை இன்பம் போலக் கொள்வ ராயின். அது பகைவரும் விரும்புவது ஒரு சிறப்பு ஆம் எ - று.

மேற்கூறிய வாற்றல் செய்தலே அன்றித் துன்பதினை இன்பம் போலக் கொள்வா னுயின் பகைவரும் மதிப்பர் என்றது.

(கா - உ.) அரசியற் பொருள் முற்றும்.

(ப - உ) அரசியல் முடிந்தது.

(கா - உ.) இப்படி இயல்நெறி வேந்தர்க்கு இறைமாட்சி முதலாக இடுக்கண் அழியாமை ஈறாக இராச தன்மம் ஆகிய நீதிப்பொருளின் இயல்பு உணர்த்தி, இனி மற்று இதன் பின்னரே அமைச்சியல் பொருள் உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

26. அமைச்சு.

(ப - உ.) அமைச்சாவது அமைச்சர் செய்யும் திறன் கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினர் எனின், அது கூறிய அதிகாரம் பதினொன்றும் முற்பட அமைச்சர்க்கு இன்றியமையாக் குணங்கள் எல்லாம் ஓர் அதிகாரத்தானும், வாத மண்டலத்திலிருந்து செய்ய வேண்டுவன நாலதிகாரத்தானும், புறமண்டலத்தில் போம் தூதர் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும் அவர் செய்யும் திறன் நான்கு அதிகாரத்தானும் கூறினர் என்று கொள்ளப்படும். மேல் ஆசர் செய்யும் திறன் கூறினர், இனி ஒரு வினையைச் செய்து முடிக்குங்கால் அமைச்சர் வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது. அமைச்சாவது - அம்மச்சன் இலக்கணம் கூறுதல்.

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(கா - உ.) எ - து.—வன்கணதாகிய தறுகண்மையும் தன்னி சன் கோல்கீழ் வாழும் குடிகளது வன்மை மென்மை வழுக்கு அறி தலும் காத்தல் ஆகிய நாடு காவலும் காடு காவலும் காடிச் சென்றிது தலும் கற்றறிதல் ஆகிய பொருள்நூல் கற்று உணர்ந்து அறிதலும் ஆள்வினை என்னும் ஆகியல் முயற்சியும் அமைச்சு இயல் முயற்சியும் இவை ஐந்தும் ஒருதலைப்பட ஆராய்ந்தவன் அமைச்சன் ஆவன் எ - று.

(பி - உ.) எ - து.—அஞ்சாமையும் குடிப்பிறத்தலும், இந்திரியங் களைக் காத்தலும், நூல் முகத்தான் அறிதலும், முயற்சியும் என்ற ஐந்தும் கூட மாட்சிமைப் பட்டவன் அமைச்சன் ஆவன் எ - று.

இவை அமைச்சன் ஆவதன் முன்னே வேண்டும் ஆதலின் முன் கூறப்பட்டன. (1)

கா. 2.

ப. உ.

மதிநுட்ப நூலோ டுடையார்க்

கதிரட்டம்

யாவுள் முன்னிற் பவை.

(கா - உ.) எ - து.—தம் பிறவிக்கண்ணே இயற்கையாக வீற்று வீற்று வாய்ந்த மதியின் கூர்மையைப் பின்னும் தெளியக் கற்று வுணர்ந்த செயற்கைத் தன்மை நூலோடு கூட உடையவர் ஆகிய நுண்ணறிவாளர்க்கு மற்று அவை இரண்டு உடன் சிறந்த கூர்மையிற் கூரியன யாவை உளவோ? யாவும் இல்லை அன்றே முன்னிய நெஞ் சிற்கு வேறு முன் நிற்பவை எ - று.

(ப - உ.) எ - து.—மேற்கூறிய நூற் கல்வியோடு கூட நுண் ணிது ஆகிய மதியினையும் உடையார்க்கு அதனினும் நுண்ணிய மாற் றார்ல் எண்ணப்பட்டு எதிர் நிற்கும் வினை யாவை உள? எ - று.

மேற்கூறியவற்றொடு மதியும் வேண்டும் என்றது. (2)

கா. 3.

ப. 5.

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு மருவினையு மாண்ட தமைச்சு.

(கா - உ.) எ - து.—யாது ஒரு காரியங்கள் இயற்றுதற்கு மற்று அதற்கு அடுத்த கருவிகளும், மற்று அவ்வவை செய்தற்கு அடுத்த காலங்களும் தாம் பொருள்களைச் செய்யும் செய்கை வேற்றுமையும் மற்று அத்தொழில் வேற்றுமையால் செய்யும் அரிய கருமங்களும் ஒருவகைப்பட மாட்சிமைபடத் தெளிந்து அமைத்தலே அமைச்சு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—செய்ய வேண்டும் அரிய வினையும் அதற்கு ஆம் கருவியும் அதற்கு ஆம் காலமும் அதனை இடையூறு படாமல் செய்து முடித்தலும் இன்னான்கும் மாட்சிமைப் பட்டவன் அமைச்சன் ஆவான் எ - று.

செய்தற்கு அரிய வினையாவது - மதுமண்டலம் கோடல்: கருவி யாவது - யானை, குதிரை முதலிய படை: காலம் ஆவது நிழலும் வெயிலும் உள்ள காலம். செய்தலாவது முடியின்றிச் செய்தல். (3)

கா. 4.

ப.

7.

செயற்கை யறிந்தக் கடைத்து மூலகத் தியற்கை யறிந்து செயல்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு நூல்வழிச் செய்கைப் பொருள் அனைத்தும் தெளிய அறிந்ததன் பின், உலகத்தோடு ஒத்த நடை ஆகிய இயற்கைப் பொருளினையும் எய்த அறிந்து யாதானும் ஒரு கருமம் செய்க எ - று.

(ப - உ.) எ - து.—செய்யத் தகுவன அறிந்த இடத்தும் அது செய்யுங்கால், உலகத்து நடை அறிந்து செய்க எ - று.

உலக நடையாவது அரசன் சிலமும் பரிவாரத்துள்ளார் நிலைமையும் அறிதல். இவையிற்றை அறியாது செய்யின் குற்றம் என்ற வாறு ஆயிற்று. (4)

கா. 5.

ப. 6.

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

(கா - உ.) எ - து.—தம் அரசர்க்குப் பகை வேந்தாலேர் இருவருள் ஒருவரைப் பிரிக்கவல்.....மற்று அவர் தம்மைப் பிரித்தலும் தம்மாட்டு விரும்பி அணைத்துப் பாதுகாத்தலும், தம் அரசர் மாட்டு நின்றும் பிரிந்தார் உளர் ஆயின், அவர் தம்மையும் யாதானும் ஒரு-வழியால் பொருந்தச் செய்தலும் பின்னும் இவை .....வல்லது யாது அதுவே அமைச்சு ஆவது எ - று.

(ப-உ.) எ - து.—மாற்று அரசரிடத்து உள்ளாரையும் அவர்க்கு நட்பு ஆகிய அரசரையும் அவரிடத்தினின்றும் பிரித்தலும், அவ்வாறு பிரிக்கப்பட்டாரை விரும்பித் தம்மிடத்துக் கோடலும், தம்மிடத்தினின்றும் பிரிந்தாரைக் கூட்டிக்கொள்ளலும் வல்லவன் அமைச்சன் ஆவான் எ - று. (5)

கா. 6. ப. 8.

அரிதோன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(கா - உ.) எ - து.—அரசரானவர் ஒன்றே காரியா காரியங் களைத் தாமே அறியினும்,.....கற்குரியன் ஆகிய அமைச் சன் பெயர்த்தும் ஐயம் அற ஆராய்வது முறைமை: இனி ஒன்று அரசன் இவை அறியானாயின்.....தானே.....உறுதிப் பாட.....ஆராய் எ - று.

26. அமைச்சு

111

அரிது ஒன்றறியான் என்பது ஒன்றே அறியினும் அறியான் ஆயினும் என்றது. உழையிருந்தான் என்பது அரசர் அருகு இருந் தான எனறது.

பரி. பா - மி. "அறிகொன் றறியா னெனினும்".

(ப - உ.) எ - து.—அரசன் அமைச்சன் கூறிய பொருளை அறிக; அவன் ஒன்று அறியான் ஆயினும் அவனுக்கு உறுதியாயினவற்றை அருகு இருந்த அமைச்சன் சொல்லுதல் கடன் எ - று.

அரசன் கேளான் என்று சொல்லாது ஒழிதல் ஆகாது. துணையும் அமைச்சர் இலக்கணம் கூறப்பட்டது.

இத்
(6) கா. 7.

ப. 3.

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

(கா - உ). எ - து.—இராச தன்மத்து இடல்பு அறிந்த அறிவினை உடையனுமாய், அதற்கு ஏற்ற சமைவு என்கிற நிறைவினை உடையனுமாய், மற்று அரசன் விருப்புற்றுக் கேட்குமாறு. அரிய சொல்லாளனுமாய், நாட்டகத்தும் புறவிடத்தும் வாழ்வோர் வினைத் திறம் அனைத்தும் தெறிபட அறிந்து அறிவு நிறைவு ஓர்ப்புக் கடைப் பிடி என்னும் நாற்பெருங் குணனும் நன்குற அமைந்த அமைச்சனே அரசனது கருமத்திற்கு அமைந்த துணை ஆவான் எ - று.

(ப - உ.) எ - து.—அறத்தினையும் அறிந்து நிரம்பி அமைந்த சொல்லியும் உடையனுய் எல்லாக் காலத்தினும் செய்யும் திறன்களையும் அறிய வல்லவன் அமைச்சன் ஆவான் எ - று.

தேர்ச்சித் துணை ஆதலின் தேர்ச்சித் துணை என்று பெயர் இட்டார். எஞ்ஞான்றும் என்றது நிகழ் காலத்தினும் எதிர் காலத்தினும்.

கா. 8.

ப.

10.

பழுதெண் ணுமந்திரியிற் பக்கத்துத் தெவ்வ
ரெழுபது கோடி தலை.

(கா - உ.) எ - து.—இவ்விலக்கணத்தான் அன்றி அரசர்க்கு உரியவனும் பொருள் கருமத்தைப் பழுதுபட எண்ணும் மந்திரியினும் அரசன் பக்கத்தின்கண் பகைவர் பலர் புடை சூழ்ந்திருத்தல் யாது மற்று அதுவே மிகவும் தலையானது; மற்று அது எங்ஙனமோ எனின், பலரே ஆயினும் பகைவர் என்று அறிதலால் பரிகரிக்கவும் கூடுமன்: மற்று உழை இருந்துழி உரைத்தற்கு உரியான் ஒருவன் உணர்வு முதலிய குணம் இலனாயின், மற்று அவன் உரைக்கும் உரை

யினை நம்பி ஒழுகும் அரசனும் கெடும்: அவ்வரசன் கெட்டு விடும் எ - று.

ஆளும் நாடும்

பரி. பா - மி. " கோடி யுறும் ".

(ப - உ.) எ - து.—குற்றப்பட எண்ணும் அமைச்சனில் எழு பது கோடி மடங்கு நல்லர், உட்பகையாய்த் தன் அருகில் இருப்பர்

எ - று.

இவனைப் போல் அவர்கள் செறுக்க மாட்டார் என்றவாறு. இவை இரண்டும் மந்திரிகள் ஆகாதார் இலக்கணம் கூறின. (8)

கா. 9. ப. 9.

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

(கா - உ.) எ - து.—நெறிபடவே எண்ணியும், தாம் எண்ணிய வண்ணமே முடியச் செய்ய மாட்டார்: மற்று யார் எனின், அரசியல் திறப்பாடு அமைவுற அறியும் அறிவிலாத அமைச்சர் எ - று.

(ப - உ.) எ - து.—அடைவு பட எண்ணியும் தம்மால் முடிதல் இல்லாதவற்றைச் செய்யா நிற்பர், வினை செய்யும் திறன் இல்லாதார் எ - று.

இஃது எண்ண வல்லாராய்
என்று கூறிற்று.

வினைசெய்ய மாட்டாதாரும் உளர்
(9)

கா. 10.
ப. 4. தெரிதலும் தேர்ந்து செயலு
மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(கா - உ.) எ - து.—அரசனது காரியமும் வேறுபட்டுத் தெரிதலும், அங்ஙனம் தெரிந்த பின்னும் காரியத்திற் சிறந்ததனை ஓர்ந்து பார்த்துச் செய்தலும் மேற்செய்யும் கருமங்களை ஐயுறாது ஒரு வழிப்பட்ட அரசர்க்குச் சொல்லுதலும் வல்லது அமைச்சு எ - று.

(ப - உ.) எ - து.—ஒரு வினையை நன்றோ தீதோ என்று ஆராய்தலும் அதனைச் செய்ய நினைத்தால் முடியுமாறு எண்ணிச் செய்தலும், ஐயம் ஆகிய வினையைத் துணிந்து சொல்லுதலும் வல்லவன் அமைச்சன் ஆவான் எ - று. (10)

(கா - உ.) இனி, இவ்வரசர்க்குக் கூறிய அமைச்சராலாகாது சொல்வன்மையைத் தோற்றுவிக்கிறது மேலை அதிகாரம்.

27. சொல்வன்மை.

(ப - உ.) சொல் வன்மையாவது வார்த்தை சொல்ல வல்லவன் ஆதல். அரசர்க்குக் கல்வி இன்றியமையாதது போல அமைச்சர்க்கு இஃது இன்றியமையாமையின் அதன்பின் கூறப்பட்டது.

கா. 1.

ப.

3.

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(கா - உ.) எ - து —பலவகைப்பட்ட நூல்களையும் பாடம் ஒதி அவற்றின் பொருள் பயன் தெளியக் கூவரை வழிப்பட்டுக் கேட்ட குற்றம் அற்ற சான்றோரையும் தம் மாட்டுப் பிணித்துக் கொள்ளும் தகுதியை உடையனுமாய்ப் பின்னும் அங்ஙனம் பொருந்தக் கேளாது புலியிடைத் திரியும் புல்லறிவாளரும் யாமும் இவ்வாறு கேட்டு ஒன்று அறிய வேண்டும் என்னும் விருப்பம் உளது ஆகச் சொல்லுமது அமைச்சாது சொல்வன்மை எ - று.

(ப - உ.) எ - து.—விளைவினைப் பிணித்துக்கொள்ளும் தகைமையவாய் விளைவாதாரும் விரும்புமாறு சொல்லுதல் சொல்லாவது எ - று.

கேட்டார் என்பதனைக் கேள்வியுடையார்

எனினும் அமையும்;

சொல்லக் கேட்டார் எனினும் அமையும். கேளாமையும் அவ்வாறே கொள்ளப்படும். இது நயம்படக் கூறவேண்டும் என்றது. (1)

கா. 2.

ப. 4.

வேட்பத்தான் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்

மாட்சியின் மாசற்றார் கோள்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு தாம் விரும்பச் சொல்லுவதும் செய்து மற்று அதுவேயும் அன்றிப் பிறர் சொல்லினது பொருட் பயனும் தேர்ந்து உள்ளத்துக் கோடல் யாது: மற்று அதுவே அறிவு

உடைய அமைச்சாது கோட்பாடு எ - று.

(ப - உ.) எ - து.—தாம் சொல்லுங்கால் பிறர் விரும்புமாறு சொல்லிப் பிறர் சொல்லுங்கால் அதற்கு பயனைத் தெரிந்து கொள்ளுதல் மாட்சியிற் குற்றம் அற்றார் கோட்பாடு எ - று.

இது யெம்படக் கூறுதலே அன்றிப் பிறர் அறிந்து சொல்லவும் வேண்டும் என்றது.

சொல்லும் சொல்

(4)

15

கா . 3.

ப. 2.

விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(கா - உ.) எ - து.—அரசர்க்கு ஆயினும் பிறர்க்கு ஆயினும் அவர் அவர்க்குப் பொருந்த உணர்ந்து செவிக்கு இனிது ஆகச்சொல்லுதல் வல்லர் ஆகிய அமைச்சரை அரசர் பெறுவாராயின், அரசர் ஏவாமல் தானே விரைந்து தொழில் கேட்டு ஒழுகுவர் இவ்வையகத்து

வாழ்வார் எ - று.

(ப - உ.) எ - து.—சொற்களைச் சேர்த்து இனிது ஆகச் சொல்ல வல்லாரைப் பெற்றாராகில், உலகத்தார் தாமே விரைந்து செய்யும் தொழில் யாது என்று கேட்பர் எ - று.

இஃது இனிது ஆகச் சொல்ல வேண்டும் என்றது. (3)

கா. 4.

திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

ப. 9.

(கா - உ.) எ - து.—அரசர்க்கு அமைச்சராவோர் ஒன்று சொல்லுங்காலத்து அமைவு உடையராய்ச் சொல்லும் திறப்பாட்டினை அறிந்து கேட்பச் சொல்லிப் போந்த இல்லறம் முதலிய அறமும் மற்று இங்குச் சொல்லுகின்ற பொருள் நெறியும் மற்று உம்மையான் மேல் சொல்லுவதாகிய இன்ப நெறியும் எல்லாம் அவரவர் மரபின் திறப்பாடு அறிந்து சொல்லுக. இத்தனை அல்லது இதனின் ஊங்குப் பயன் யாதும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—சொல்லைச் சொல்லும் திறன் அறிந்து சொல்லுக: அதனின் மேற்பட்ட அறனும் பொருளும் இல்லை எ - று.

திறன் அறிவதே புறம் கூறுமையும் பயன் இல சொல்லாமையும் பொய் கூறுமையும் உள ஆம்: ஆதலின் அறன் ஆயிற்று: அரசர் மாட்டும் ஏனையோர் மாட்டும் தகுதி அறிந்து சொல்லுதலால் பொருளும் ஆயிற்று: என்னை? அதனானே ஆக்கமும் கேடும் ஆதலான். இஃது அறனும் பொருளும் பயக்கும் என்றது. (4)

கா. 5. ப. 1.

சொல்லுக சொல்லிற் பிறிதோர்சொ
லச்சொல்லை
வெல்லுஞ்சொல் லின்மை யறிந்து.

(கா - உ.) எ - து.—அமைச்சர் ஒன்று சொல்லும் இடத்து மற்று அச்சொல்லினைப் பிறர் ஒருவர் சொல் வெல்லுதல் இன்மையைக் குறிக்கொண்டு சொல்லுக: அல்லாக்காற் சொல்லற்க எ - று.

பரி. பா - மி. "சொல்லுக சொல்லைப்".

27. சொல்வன்மை

115

(ப - உ) எ - து—சொல்லைச் சொல்லுக: தான் சொல்ல

நினைத்த சொல்லைப் பிறிது ஒரு சொல்லாய் வெல்லும் சொல் லாதலை அறிந்த பின்பு எ - று.

இல்லை

சொல் வன்மையாயின பலவற்றுள்ளும் தேர்லாவகை தல் சிறப்புடைத் தாகலின் இது முன் கூறப்பட்டது.

சொல்லு

(5)

கா. 6.

ப. 6.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற சிலசொல்ல றேற்ரு தவர்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு சொல்லுத.....யெவ்வாறு சொன்னால் பொருள் - ஆம் என்னும் கருத்தினால் பலவற்றையும் சொல்ல ஆசைப்படுவார் யார் எனின்.....மற்ற பொருளைச் செலச் சொல்லி அமைதலைத் தெள்.....ள - று.

(ப - உ.) எ - து.—பல சொற்களைச் சொல்லக் காதலியா நிற் பர்: குற்றம் அற்ற சில சொற்களைத் தெளியச் சொல்லுதலை அறிய மாட்டாதார எ - று.

மன்ற - தெளிய. இது சுருங்கச்

சொல்லவேண்டும் என்றது.(6) கா. 7.

ப. 10.

நாநல னென்னு நலனுடைமை

யந்நலம்

யாநலத் துள்ளதூஉ மன்று.

(கா - உ.) எ - து.—ஆசர்க்கு அமைச்சராய் அமைந்தோர்க்குத் தமது நாவில் பிறக்கும் சொல்நலம் ஆகின்ற இந்நலம் உடைமை யாவது: மற்று அது வேறு யாவை சில நன்மையின் கண்ணும் உள்ளது ஒன்று அன்று: எனவே இதற்கு மற்றும் ஒரு நன்மை உவமை யாக எடுத்து உரைத்தல் அரிது என்பது பொருள் எ - து.

(ப - உ.) எ - து.—நாவினது நலம் என்று சொல்லப்படுகின்ற நலம் ஒருவற்கு உடைமையாவது: அந்நலம் எல்லா நலத்துள்ளும் உள்ளது ஒரு நலன் அன்று: மிக்கது என்றவாறு. இஃது எல்லா அழகினும் மிகுந்த அழகு என்றமையான் இன்பமும் பயக்கும் என்றது. 'சொல்வலி வேட்டுவன்' என்னுமாறும் உளர். (7)

கா. 8. ப. 8.

சொலல்வல்லன் சோர்விலன் ஞ்சா னவனை

யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

(கா.- உ.) எ - து.—இங்ஙனம் ஏற்றக்தாழ்வு என்னும் குற்றம் தன்னாமல் சொல்லுதல் வல்லனுமாய்ப் மற்று இங்ஙனம் சொல்லிச்

சொல்லும் இடத்து மறந்தும் ஒரு சொற் சோர்வுபாடு இலனுமாய் அரசனைக் கழற வேண்டும் இடத்துக் கழற்றுரை கூறக் கண்ணஞ் சானுமாய் இருப்போன் யாவன் மற்று அவ்வமைச்சனை மற்று ஒரு வர்க்கு மாறுபடக் கூறி வெல்லுதல் அரிது எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவன் சொல்ல வல்லனுமாய் அதனைச் சோர்விடுதலும் இல்லானுய் அஞ்சாது சொல்லுதலும் உடையவன் ஆயின் அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது எ - று.

இம்மூன்று பகுதியினும் என்பதனல் அவனைச் சொல்லில் வெல் வார் இல்லை எ - று. (8)

கா. 9.

இணரூழ்த்து நாறு மரத்தனைய ரற்ற
துணர விரித்துரையா தார்.

ப. 7.

(கா - உ.) எ - து.—நறுமலர்ப் பூங்கொத்து உடைய ஆகிய சண் பகம் புன்னை முதலிய போலத் தானும் பெரிதும் இணர்கொண்டு மலரப் பெற்று வைத்தும் அவை போல மணம் நாறப் பெறுத பிற மாத்தை ஒப்பர்: யார் எனின், தாம் கற்ற சொல் மலரினைக் கேட்ட ஆசர் முதலானவர்க்கு மற்று அதன் பொருள் கூறும் மணம் தோன்ற விரித்துச் சொல்ல மாட்டாத அமைச்சர் எ - று.

சொல்மலர் எவ்விடத்துப் பெறுதும் எனின் குரவர் முதலான அரசர் சொல் திருவாய்மலர்ந்தார் என்னும் வழக்கத்துள் கண்டு கொள்க. இணர் என்பது பூங்கொத்து. ஊழ்த்தல் என்பது மலர்தல் என்பது.

பரி. பா - மீ. " *நாறு மலரினையர்* ".

(ப - உ.) எ - து.—இணர் ஆக மலர்ந்தும் நாற்றப். இல்லாத பூவை ஒப்பர், கற்றதனைப் பிறிர் அறிய விரித்து உரைத்துச் சொல்ல

மாட்டாதார் எ - று.

இது சுருங்கச் சொல்லுதலே யன்றி வேண்டும் இடத்து விரித்தும் சொல்ல வேண்டும் என்றது. (9)

கா. 10.

ப. 5.

ஆக்கமுங் கேடு மதனல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(கா - உ.) எ - து.—அரசர் வாழ்க்கையாகிய ஆக்கமும் அது வீழ்த்தல் ஆகிய கேடும் அமைச்சாது சொல்லினனே வந்து விளைதலால்

ஆகலான் மற்றைச் சொல்லின்கண் ஒரு சோர்வு படாமல் காத்துச் சொல்லுதற் குரியதனைக் குறிக்கொண்டு சொல்லுக எ - று.

(ப - உ.) எ - து.—ஆக்கமும் கேடும் சொல்லினால் வருதலால் அச்சொல்லின்கண் சோர்வைப் போற்றிக் காக்க எ - று.

இது சோர்வு படாமல் சொல்ல வேண்டும் என்றது. (10)

(கா - உ.) இனி உலகத்தில் யாவரேனும் யாதானும் ஒன்றினை இனிது இயற்றும் இடத்துத் தாம் கருதிய கருத்துரையினும் செயலினும் தூயதாக வேண்டுதலான் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலே அதிகாரம்.

28. வினைத்தூய்மை.

(ப - உ.) வினைத்தூய்மையாவது செய்யும் வினை குற்றம் பயவாமல் செய்தல். மேற்சொல்லுங்கால் சொல்வதையும் பிறர் விரும்புமாறு சொல்ல வேண்டும் என்றார்: அது செய்யும் வினையும் அவ்வாறு செய்ய வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 2.

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு நன்றி பயவா வினை.

(கா - உ.) எ - து.—எஞ்ஞான்றும் குறிக்கொண்டு தவிர்தல் வேண்டும்: யாதினை எனின் புகழுடன் தனக்கு நன்மையைப் பய

வாத கருமத்தை எ - று.

(ப - உ.) எ - து.—எல்லாக் காலமும் தவிர்தல் வேண்டும்: புக ழோடே கூட அறத்தைப் பயவாத வினையை எ - று.

என்றும் என்றது செயல் அற்ற காலமும் என்றது. இது முத லாகக் கடிய வேண்டுவன கூறுகின்றார் ஆதலின் முற்பட அறமும் புகழும் பயவாத வினையைத் தவிர்க என்றது. (1)

கா. 2.

ப. 3.

ஓஒதல் வேண்டு மொளிமாள்குஞ் செய்வினை யாஅது மென்னு மவர்.

(கா - உ.) எ - து.—தூய்மை அல்லாத வினை செய்தார்க்குக் கெடுதி உறுதி ஆகலான் அதனை ஒழிய வேண்டும்: யார் எனின் இரு மைக் கண்ணும் ஆக்கம் பெறக் கடவோம் யாம் என்னும் அறிவினை உடையோர். ஒளிமாள்குஞ் செய்வினை என்றது முன்பு தமக்கு நின்ற ஒளி கெடுமாறு செய்யும் வினை என்றது.

(ப - உ.) எ - து.—தமக்குப் புகழ் கெட செய்தலி லூக்கம் கருதுவார் தவிர்க எ - று.

வரும் வினையச்

ஒழுதல் வேண்டும் என்றது ஒழுக என்னும் பொருட்கண் ஒழுதல் வேண்டும் என ஒருசொல் நீர்மைப்பட வந்தது. இது முன்பு உள்ள புகழ் கெட வரும் வினையையும் தவிர்க என்றது. (2)

கா. 3.

ப.

4.

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன் மற்றன்ன செய்யாமை நன்று.

(கா - உ.) எ - து.—இவை தகாது என்று அஞ்சாது நெஞ்சில் துணிவு கொண்டு பிறர் சோகிக்கத் தகுவன ஆகிய தீயது அல்லாத கருமங்களைச் செய்யாது ஒழிக: இங்ஙனம் இதனைக் குறிக்கொண்டு செய்வான் ஆயினும், செய்யும் கருமம் செய்யும் இடத்தும் பிறர்க்கு இரக்கம் வருதல் செய்யாமையே நன்று எ - று.

குறிப்பு:—எட்டின்கண் "செய்யாமேல்" என மூலத்திலும் "செய்யான் ஆயினும்" என உரையிலும் பாடம் காணப்பட்டது. அது பொருந்துவதன்று.]

(ப - உ.) எ - து.—துணியப்பட்டது என்று பின் இரங்கப்படும் வினையைச் செய்யாது ஒழிக. வினை செய்வான் ஆகில் அதுபோல் வனவும் செய்யாமையே கல்லது எ - று.

இது பின் இரங்கப்படும் வினை செய்யல் ஆகாது என்றது. (3)

கா. 4.

ப. 5.

சான்றோர் பழிக்கும் வினை.

(கா - உ.) எ - து.—சான்ற தாய் முதல் தெய்வம் என்று மறை மொழிதலானும் தன்னை சான்றோர் முன்னம் வணங்கி வழிபடுதல் பாவர்க்கும் கடன் ஆகலானும், மற்று இவள் பசி கண்டு இரங்கா தெஞ்சினன் ஆதல் மிகவும் தீவினை : மற்று அது யாம் கண்டு பொறுத் திருப்பதும் அன்று : அதனால் முழுதும் உணர்ந்த சான்றோர் பழிக் கும் பழிதரு வினைகளைச் செய்தலே மிகவும் தீது எ - று.

(ப - உ.) எ - து.—தன்னைப் பயந்தாள் பசி கண்டான் ஆயினும், சான்றோரால் பழிக்கப்படும் வினையைச் செய்யாது ஒழிக எ - று.

இது கல்லோர் பழிக்கும் வினையைத் தவிர்க என்றது. (4) கா. 5.

ப. 10.

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர் கழிநல் குரவே தலை.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் சான்றோர் பழித்த வினைகளைத் தானும் தகாது என்று உடன்பட்டு மற்று அவற்றினைச் செய்யத் தவிராது மற்று அவர் உரைத்த நீதிக்கு எதிர் மலர்ந்து இயற்றி மற்று அதனால் தான் எய்துவதாகிய செல்வத்தினும், தனக்கு மிக்க வறுமை தானே பெரிதும் தலைப்பாடு உடைத்து எ - று

மலைதல் என்பது மாறுபடுதல்.

(ப - உ.) எ - து.—பழிப்பினாலே மிகுதியாக எய்தற்கிற ஆக்கத்தின், சான்றோர்க்குப் பெருமிடியே தலை எ - று. (5)

கா. 6. ப. 6.

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார் நடுக்கற்ற காட்சி யவர்.

(கா - உ.) எ - து.—இதன் தன்மை இது ஆகலான் தாம் பெரிதும் அங்ஙனம் ஆகிய இடர் உறினும் அதனை உற்று அமைவது அன்றி மற்று அது ஒழித்தல் காரணமாகப் பெரிதும் இளிவந்தன ஆகிய வினையைச் செய்யத் துணியார்; யார் எனின் ஆக்கமும் கேடும் அனுபவித்தல் கடன் என்று கலக்கம் அற்று அமைந்த அறிவினை உடையவர் எ - று.

பரி. பா - மி. "இடுக்கண் வரினும்".

(ப - உ.) எ - து.—தன்பம் வரினும் இழிவு ஆகிய வினைகளைச் செய்யார்கள், தளக்கம் அற்ற தெளிவு உடையார் எ - று.

அவர் வருமது வரும் என்று நினைப்பர்.
படுவன செய்யற்க என்றவாறு ஆயிற்று.
வேண்டுவன கூறப்பட்டது.

கா.

இது பிறரால் இகழப்
இக்குணையும் கடிய

7.

துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய தெல்லா மொருங்கு.

ப. 1.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்குத் துணைவனியாய் உள்ள நன்மையானது அத்துணை நலத்து ஆக்கமே தரும்: அதனை வினைத்தூய்மை ஆகிய இது தாம் விரும்பிய பயன் எல்லாம் ஒரு தன்மைப்படத் தருமை எ - று.

(ப - உ.) எ - து.—துணை நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும்: அவ்வளவே அன்றி வினை நன்மை வேண்டியது எல்லாம் ஒருங்கு கொடுக்கும் எ - று.

துணை நன்மை ஆக்கம் கொடுத்தல் எல்லாராலும் அறியப்படுத லின் சுண்டு எதுவாக வந்தது இது வினைத்தூய்மை வேண்டும் என்ப தூஉம் அதனால் பயனும் கூறிற்று.

(7)

கா. 8.

ப. 9.

சலத்தாற் பொருள்செய்தே மாத்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

(கா - உ.) எ - து.—இது நமக்கு உறுதி அல்ல என்று கருதாது பிறரொடு சலம் பற்றிக் கொண்டு மற்று அதனால் பொருளினைச் செய்து யாம் உடையாம் என்று இறுமாந்திருத்தல் எத்தன்மைத்தோ எனின், மண்ணால் வனைந்துள ஆகிய பசுங்கலத்தின் அகத்து நீரினைப் பெய்து இருத்திய அத்தன்மைத்து எ - று.

(ப - உ.) எ - து.—வஞ்சத்தாலே பொருள் தேடி மகிழ்ந்திருத்தல் பசுமண் கலத்திலே நீரை முகந்து வைத்த தன்மைத்து எ - று.

இது தானும் பொருளும் கூடிக் கெடும்|என்றது. (8)

கா. 9. ப. 8.

அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(கா - உ.) எ - து.—தாம் பிறரைச் செறுத்தும் அவர் நெஞ்சு புழுங்கி அழுமாறு வலியினால் வவ்விக் கொண்ட பொருள் அனைத்தும், தாமும் அவ்வாறு அழும்படி போய்விடும்: இனி இவ்வாறு அன்றி முன்னம் தமக்கு உளது ஆகிய பொருளினை ஒருவாற்றான் இழந்தார் ஆயினும் பின்னும் உளதாய்ச் செல்லும் நற்கூறு ஆகிய வினையினால் இயற்றும் பொருளானவை எ - று.

(ப - உ.) எ - து.—பிறர் கொண்ட பொருள்கள் எல்லாம் தாமும் அழப்போம்: அவ்வாறு அன்றி நற்பகுதியால் கொண்ட பொருளை இழந்தாராயினும் பின்பு பயன்படும் எ - று.

இது தேடின பொருள் கெடும் என்றது. (9)

கா. 10. ப. 7.

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

(கா - உ.) எ - து.—இவை இவை செய்யத்தகாது என்று சான்றோர் கடிந்தன ஆகிய வினைத்தன்மைகளைத் தாமும் கடிந்து நீங்காது செய்வார் யாவர்? மற்று அவர்க்கு அவை தாம் கருதி யாங்கு முடிந்தாலும் பெரிதும் இடரைத் தருவதன்றிப் பெருமை பெறுதல் அரிது எ - று.

கடிந்த என்பது செய்யத் தகாதன என்றது. ஓரார் என்பது நீங்கார் என்றது.

பரி. பா - ம். "கடிந்தோரார் செய்வார்க்கு".

29. வினைத்திட்பம்

121

(ப - உ.) எ - து.—நல்லோரால் கடியப்பட்டவற்றைக் கடிந்து நீக்காது செய்யும் அவர்க்கு, அவ்வினை தான் கருதின வாற்றான் முடிந்த பின்பு பீடையைத் தரும் எ - று.

உம்மையால் முடிவதன் முன்னும் பீடை தரும் என்றது. இது நன்மை அல்லாத வினை செய்யின் அதுவும் தீமை தரும் என்றவாறு. அவை பின்பே காட்டப்படும் என்றார். (10)

(கா - உ.) இனி, மற்று இங்ஙனம் அரசர்க்கு அருப்பொருள் உரைக்கும் சொல் வன்மை உறுதி உடையார் ஆகிய அமைச்சர், மற்று அச்சொல்லினால் அரசர் செய்யும் வினையினது தூய்மையும் ஆராய்ந்த இடத்தும், அவற்றுள் - நல்லனவற்றைப் பின்பு ஐயுறாது செய்ய வேண்டும் ஆதலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

29. வினைத்திட்பம்.

(ப - உ.) வினைத்திட்ப மாவது வினையின்கண் நிண்ணியர் ஆகல்: மேல் வல்வினை செய்யவேண்டும் என்றார்: அது செய்யுங்கால் நிண்ணிய ராகச் செய்ய வேண்டும் ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 6.

கலங்காது கண்ட வினைக்கட்

டுளங்காது

தூக்கங் கடிந்து செயல்.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒரு வினையும் அதன் தூய்மை யும் கலங்காமல் ஆராய்ந்து தெளியக் கண்ட வினையின் இடத்துப் பின்னை இதனைச் செய்வோம் கொல் என்று அசைவது காலத் தாழ்ப் பினையும் கடிந்து கடிதின் செய்க எ - று.

(ப - உ.) எ - து.— கலக்கம் இன்றி ஆராய்ந்து கண்ட வினை இடத்துப் பின்னைத் துளக்கம் இன்றி அதனை நீட்டி யாது செய்க எ - று.

இது வினைக்து செய்ய வேண்டும் என்றது.

(1) கா. 2.

ப. 2.

எனைத்திட்ப மெய்தியக் கண்ணும்
வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

(கா - உ.) எ - து.—மற்று எனைத்து வகைப்பட்ட திண்ணிமை

யும் அரசர்க்கு எய்திய இடத்தும், அமைச்சர் துணிந்து உரைக்கும் வினையின் திண்ணிமையை விரும்பிக் கொள்ளாராயின், அவர்களை விரும்பார் உயர்ந்தோர் எ - று.

16

(ப - உ.) எ - து.—கருவி முதலாயின எல்லாவாற்றானும் திண்மை பெற்ற இடத்தும் வினையினது திண்மையை விரும்பாதாரை உலகத்தார் விரும்பார் எ - று.

பல பொருளும் மிகுதி உடையார்க்கு வினைத்திட்பம் இன்று ஆலல் வரும் குற்றம் என்னை என்றார்க்கு, இது கூறப்பட்டது. (2)

கா. 3.

ப. 7.

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்

னெற்ரு விழுமந் தரும்.

[கொட்பி

(கா - உ) எ - து.—அமைச்சராலேர் திண்ணிது ஆகத் தெரிந்து உரைத்த வினையினைக் கைக்கொண்ட அரசர் கடைபோகச் செய்யத் தக்கதே ஆண்மைப்பாடு ஆவது: இனி இவ்வாறு அன்றி இடை புரிந்து விடின், நெஞ்சினன் எனைத்து ஒன்றும் கருதப் படாத துயரத் தைத் தரும் எ - று.

பரி. பா - மி. " இடைக்கொட்கின் ".

(ப - உ.) எ - து.—ஒரு வினையைத் தொடங்கினல் முடிவிலே சென்று மீளச்செய்வது ஆண்மை ஆவது: இடையிலே மீள்வன் ஆயின் மிகுநியைக் கொடாது, நோயைக் கொடுக்கும் எ - று.

சென்று மீளுதல் சுழல்தல் ஆயிற்று.
வினையை முடியச் செய்ய வேண்டும் என்றது.
இது தொடங்கினை

(3) கா. 4.

ப. 3.

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப மற்றைய வெல்லாம் பிற.

(கா - உ.) எ - து.—வினையின் திட்பம் ஆவது அவ்வினை முடியும் அளவும் உரம் செய்து நிற்றல் ஆகலான் அதனை அங்ஙனம் கோலிக் கொண்ட அரசனது மனத்தின் திட்பமே திட்பம் ஆவது: மற்று ஏனைய எல்லாம் பிறவாய் ஒழியும் செய்வன எல்லாம் வழி அழிந்து கெட்டு விடும் எ - று.

(ப - உ.) எ - து.—வினைத்திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவன் மனத்தின் உண்டான திண்மை. அதனை ஒழிய மற்றைய எல்லாம் திட்பம் என்று சொல்லப்படா எ - று.

மற்றைய என்பது கருவியும் உபாயம் முடித்தலும். வினைத்திட்பம் ஆவது யாது என்றார்க்கு இது கூறப்பட்டது. (4)

கா. 5.

ப. 5.

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(கா - உ.) எ - து.—யாம் வினைத்திட்பம் உடையோம் என்று

இங்ஙனம் சொல்லல் யாவர்க்கும் எளிய: மற்று அச்சொல்லிய வண்ணமே செய்து முடித்தல் அரிய ஆகும்: அதனால் அங்ஙனம் முறை வழி செய்யத் திட்பம் உடையோர் வானவருள் ஒருவர் எ - று.

(ப - உ.) எ - து.—ஒரு வினையை இவ்வாறு செய்தும் என்று சொல்லுதல் யாவர்க்கும் எளிய ஆம்: அதனைச் சொல்லிய ஆற்றால் செய்து முடித்தல் யாவர்க்கும் அரிய ஆம் எ - று.

மேற்கூறிய இருவகையினும், ஊறு ஓராது செயலின் வகை கூறுவார் முற்படச் சொல்லியவாறு செய்ய வேண்டும் என்று கூறினார். (5)

கா. 6.

ப. 4.

ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி னாறென்ப ராய்ந்தவர் கோள்.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒருவினை செய்யும் இடத்து அதற்கு இடையூறு வருவதும் வந்துற்றதுமாய் இருக்கும். அவற்றுள் வருவது ஆகிய இடையூறு முன் கோலிக் கழியும் ஆறு செய்தலும், அது அன்றி ஒன்று உற்றது ஆயின் அதற்கு மனம் தளராமையும் அவ்விரண்டினது நெறி என்று சொல்லுப ஆராய்ந்து அமைந்த அமைச்சரானோர் வினையினது கோட்பாட்டினை எ - று.

(ப - உ.) எ - து.—வினை செய்யுங்கால் உறும் துன்பத்தை ஓரார் ஆதலும், அத்துன்பம் உற்றால் தளரார் ஆதலும் ஆகிய இவ்விரண்டினது நெறி என்று சொல்லுவர்கள் வினையை எண்ணினவர்கள் செய்து முடிக்கும் கோட்பாடு எ - று.

மனத்திட்பம் ஆவது யாது என்றவர்க்கு அஃது இரண்டு வகைப்படும் என்று கூறிற்று. (6)

கா. 7.

ப. 8.

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி யின்பம் பயக்கும் வினை.

(கா - உ.) எ - து.—வினைத்திட்பம் என்பது இத்துணை அருமை உடைத்து ஆகலான் அவ்விடுக்கண் மிகவரினும் அதற்கு அழியாது நின்று நெஞ்சில் துணிவுடைமையை நடாத்தி மேல் இன்பம் விளைப்ப தாகத்தாம் எடுத்துக்கொண்ட வினைகளையே செய்து முடிக்க எ - று.

(ப - உ.) எ - து.—முற்பாடு துன்பம் மிக வரினும் செய்க பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை எ - று.

துணிந்து

இனி உற்ற பின் ஒல்காமையின் பகுதி கூறுவார் முற்பட்டத் துன்பம் உற வரினும் துணிந்து செய்க பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை என்றார். (7)

கா. 8.

ப. 9.

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்
கச்சாணி யன்ன ருடைத்து. [தேர்க்

(கா - உ.) தாம் கருதிய வினையைக் கைக்கொண்டு முடிவு செய்தற்கு உரிய கட்டு ஆண்மை உடையோர் வேண்டுதலான், அவரை உருவினை நோக்கி இகழாது கைக்கொள்ள வேண்டும்: என்னை எனின், ஓடுகின்ற பெரிய தேர்க்கு அச்சு ஆணி போலும் திட்பம் உடையா

ரையும் உடைத்து இவ்வுலகம் எ - று.

(ப - உ.) எ - து.—யாவரையும் வடிவு கண்டு இகழ்தலைத் தவிர்தல் வேண்டும்: உருளா நின்ற பெரிய தேர்க்குக் காலாய் நின்ற உருளைகளைக் கழலாமல் தாங்குகின்ற சிற்றுணியைப் போலத் திண்ணியாரை இவ்வுலகம் உளது ஆகலான் எ - று.

திண்ணியாரை அறியும் ஆறு என்னை என்றார்க்கு, வடிவு கண்டு அறியல் ஆகாது என்பதூஉம் கூறிற்று. (8)

கா. 9.

ப. 1.

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(கா - உ.) எ - து.—இவ்வாறும் அன்றி மற்று இவ்வினையை இவ்வாறு செய்து முடிப்போம் என்று எண்ணியார், அதற்கு ஏற்பதாகாமும் திண்ணியர் ஆகப் பெறின் அவ்வினையானது மேல் வினையது ஆகத் தாம் கருதிய பயன் யாது: அதனை மற்று அக்கருதி யாங்குப் பெறுவார்கள் எ - று.

(ப - உ.) எ - து.—தாம் எண்ணிய கருமங்களை எண்ணிய படியே பெறுவர்: அவ்வாறு எண்ணியவர் வினையைச் செய்து முடிக்கும் திண்மை உடையர் ஆகப் பெறுவாராயின் எ - று.

இது வினையின்கண் திண்மை வேண்டும் என்றது. (9)

கா. 10.

ப. 10. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க ணூறெய்தி னுள்ளப் படும்.

(கா - உ.) எ - து.—வேந்தன் கோலிக் கொண்ட வினைத்திட்பமானது பின்பு ஓர் இடையூறு வந்து எய்தின், அறிவு மாட்சிமை

30. வினைசெயல் வகை

உடைய அமைச்சாளர் அதனை வெல்லும் உபாயத்தை விரும்புற்று விசாரிக்க மற்று அவ்விடையூறானது கெட்டு விடும் எ - று.

பி. பா - மி. "ஊறெய்தி யுள்ளப் படும்".

(ப - உ.) எ - து.—மிகுதி எய்தி மாட்சிமைப் பட்டாராது வினைத் திட்பமானது, அரசன் மாட்டு உறுதலே எய்தலான் எல்லாராலும் வினைக்கப்படும் எ - று.

எய்த என்பது திரிந்தது. இது வினைத்திட்பம் உடையாரை எல்லாரும் விரும்புவார் என்றது. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் ஆராய்ந்து ஓர்ந்து துணிந்திய வினைக்கண் திட்பம் உடையான் பின்பு அது முடித்தல் அன்றே செயற்பாலது: அதனுள் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக் கின்றது மேலை அதிகாரம்.

30. வினைசெயல் வகை.

(ப - உ.) வினைசெயல் வகையாவது வினை செய்யும் ஆறு கூறு தல். மேல் வினை செய்யுங்கால் திண்ணியர் ஆக வேண்டும் என்றார்: அவ்வாறு திண்ணியார் வினை செய்யும் வண்ணம் கூறுகின்றார் ஆக லான் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 1.

பொருள்கருவி காலம் வினையிடனே டைந்து மிருமூ வெண்ணிச் செயல்.

(கா - உ.) எ - து.—எடுத்துக் கொண்ட கருமம் முடிவுகாறும் நடந்த வேண்டும் பொருளும், அஃது இயற்றுதற்கு உரிய கருவிகளும், அது வாய்த்தற்கு அடுத்த காலங்களும், அது செய்தற்கு அமைந்த இடன் ஆகிய நிலன் என்னும் இவை ஐந்தும் இயையும் ஆறு மயக்கம் அற ஆராய்ந்து செய்தலே கடன் ஆவது என்று ஆசசர்க்கு அமைச்சன் வினை செயல்வகை கூறியது இதன் கருத்து எ - று.

(ப - உ.) எ - து.—பொருளும், கருவியும், காலமும், செய்யும் வினையும் பகைவரைப் பொருதற்கு உரிய இடமும் என்னும் ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிப் பின்பு வினை செய்யத் தொடங்குக எ - று.

இஃது ஒவ்வொன்றும் இரண்டு வகைப்படும். பொருள் ஆவது தெடும் பொருளும் பெறும் பொருளும். கருவி தனக்கு உள்ள படையும் மாற்றாசர்க்கு உள்ள படையும்: காலம் தனக்கு ஆம் காலமும் பிறர்க்கு ஆம் காலமும்: வினை தான்செய் வினையும் பகைவர்

செய் வினையும்: இடம் தனக்கு ஆம் இடமும் பிறர்க்கு ஆம் இடமும். இவை செய்யும் வினைக்கு முற்பட வேண்டும் என்று முன் கூறப்பட்டன. (1)

கா. 2.

ப. 3.

வினைபகை யென்றிரண்டி னெச்ச
நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

(கா - உ.) எ - து.—தாம் எடுத்துக் கொண்டது ஓர் கருமம் முடியச் செய்யாது ஒழிவுபட நிற்றலும் தமது பகை தீர்க்கும் இடத்துஞ் தீராது ஒழிவுபட்டு நிற்றலும் என்னும் இவ்விரண்டு ஒழிவுபாடும் ஆராயுங் காலத்து ஒன்றினைக் கொளுவிப் பாத்த தீயினைச் செலவு அறுத்தணியாது சிறிது ஒழிவுபட இகழ்ந்து நீங்கிய வழி மற்று அது யாங்ஙனம் சுட்டு விடுவது போல இவை இரண்டும் பற்றி நிற்பன தாம் மாட்டு ஆகலான் வினை எச்சத்தால் தம் பொருள் கேடும் பகை எச்சத்தால் தமது உயிர்க்கேடும் வரும் எ - து.

(ப - உ.) எ - து.—வினையும் பகையும் என்னும் இரண்டினது ஒழிவும் விசாரிச்சும் காலத்துத் தீயினது ஒழிவு போலக் கெடுக்கும் எ - று.

எச்சம் - சேஷம். அது வினை செய்யுங்கால் சிறிது ஒழிய்யுஞ்.

செய்தேம் என்று விடல் ஆகாது என்றது. ஈண்டுப் பகை கூறியது என்னை எனின், வினை செய்வார் பகைவர் மாட்டு ஆதலான் அவரைச் சிறியர் என்று இகழாமையும் வேண்டும் ஆதலான் ஈண்டுக் கூறப் பட்டது. (2)

கா. 3.

ப. 2.

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க

தூங்காது செய்யும் வினை.

(கா - உ.) எ - து.—இப்படி ஆகலான் தொடங்கிய கருமமானது காலத் தாழ்வு படாது அதனை விரைவொடு செய்து முடிக்க வேண்டும். மற்று அக்காலத் தாழ்வு பட வேண்டும் கருமப் பகுதி உளதேல் அவற்றிற்கு ஏற்ற காலம் வருகாறும் தாழ்க்க கின்று செய்க; எனவே இங்ஙனம் கடிதிற் செய்து முடித்த கருமம் எச்சக் குற்றம் இல்லை: மற்றைக் காலம் பார்த்து கின்ற கருமமும் எச்சக் குற்றம் இல்லை என - று.

(ப - உ.) எ - து.—தாழ்த்துச் செய்ய வேண்டும் வினையைத் தாழ்த்துச் செய்க: தாழாமல் செய்யும் வினையைத் தாழாமல் செய்க என - று.

30. வினைசெயல் வகை

127

இஃது எய்தியது விலக்கிச் செய்யத் தணிந்தாலும் பார்த்துச் செய்ய வேண்டுவன தாழாது செய்க என்றது.

காலம்

கா. 4.
ப. 6.

நட்டார்க்கு நல்ல செயலின்
விரைந்ததே
யொட்டாரை யொட்டிக் கொளல்.

(கா - உ.) எ - து.—தம் ஒரு நட்டார்க்கு நல்லனவற்றைச் செய்தல் மிகவும் வேண்டுவது அனேறே! மறறு அவை செய்தலினும் சால விரைந்ததே: யாது எனின் பகைவராேனை ஒருவாற்றல் பகை தீர்த்து இங்ஙனம் பொருந்திக் கொள்வாராயின் பகை எச்சம் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—தமது சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும் விரைந்து செய்யவேண்டும், பகைவரைப் பொருந்தி நட்பு ஆகக் கொள்ளுதல் எ - று.

இது சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும், விரைந்து செய்ய வேண்டும் அன்ேற: அதனினும்

வேண்டுவன
பகை கொள்

ளாமை விரைந்து செய்தல் வேண்டும் : அவரும்

தம்மோடு ஒத்த வலி உடையர் ஆயின் என்றவாறு.

(4)

கா. 5.

ப. 8:

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்துச் செய் கருமம் தானும், அக்கருமம் தலைக்கொண்டு செய்யும் அவனும், மற்று, அது முடியக் கற்று அதனை நாள்தோறும் செய்து ஒழுகும் முறைமைப்பாடும் என்று சொல்லப்பட்ட இவை மூன்றும் இனி இவற்றின் உள்பாடு அறிந்து நடாத்தும் உபாயம் உடையோனும் என்னும் இவை இத்தனையும் நெஞ்சு கைக்கொண்டு செய்கை வினை செயல்வகை.....து எ - று.

உள்ளறிவான் என்றது என்னை எனின் கடல் ஓடிப் பொருள் வினை செய்யும் வணிகனும் அவனுக்கு அவ்வினை செய்வாருமே அன்றிக் கடல் ஓட்டத்து உள்ளறிவான் ஆகிய மீகாமனும்..... வினை செய்வாரை அன்றி அவ்வினை உள்ளறிந்து ஓட்டும் உபாயம் உடையோரும் வேண்டும் என அறிக.

(ப - உ.) எ - து.—செய்யத் தகும் வினையைச் செய்யும் அவன் செய்யும் முறைமை யாவது, அவ்வினையினது உளப்பாடு அறிவான் உள்ளத்தைக் கூட்டிக் கோடல் எ - று.

உள்ளம் கொளல் என்றது உண்மை..... ...ளர் என்றற்கு இது வினை செய்யுங்கால் அவ்வினையை முன்பு அறியும் அவர்களைக் கொள்ள வேண்டும் என்றது. (5)

கூ. 6.
ப. 9.

வினையான் வினையாக்கிக் கோட
னனைகவுள்
யானையால் யானையார்த் தற்று.

(கா - உ) எ - து — ஒரு கருமத்திற்கு வேண்டும் பொருள் தேர்ந்து நிறைவு செய்து பின் அக்கருமத் தானே வேண்டிய கருமத்தை ஆக்கிக் கோடல் எத்தன்மைத்தோ எனின், மதத்திலுலே நனையும் கபோல நன்மைக்கு உரியது ஓர் அண்ணல் யானையை ஆர்த்தற்கு வேண்டும் பொருள் தேர்ந்தும் பின் மற்று அதனுலே வேறு அடங்கியுள் வாழும் யானை பலவற்றையும் தங்கண் பிணித்துக் கொள்ளுகின்ற அத்தன்மைத்து எ - று.

நனைகவுள் என்பது மதத்தாலே நனையும்
கபோலம் எ - று.

பரி. பா - மீ. "யானையாத் தற்று".

(ப உ.) எ - து.—ஒரு வினையாலே பிறிது ஒரு வினையைச் செய்து கொள்க; அது மதயானையோடே மதயானையைப் பிணைத் தால் போலும் எ - று.

நனைகவுள் என்பதனை இரட்டித்துக் கூட்டி தனக்கு ஒரு பகை தோன்றினால் அவர்க்குப் பகை ஆயிரரை அவரோடு பகைக்குமாறு பண்ணுக: அவர் தம்முள் தாம் பொருது அல்லது தம் பக்கல் வரு வார் இல்லை என்றவாறு ஆயிற்று. (6)

கா. 7.

ப. 7.

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும் படுபயனும் பார்த்துச் செயல்.

(கா - உ.) எ - து.—மற்று இவ்வாறும் அன்றி யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்து அது கடைபோகச் சென்று முடிவது ஓர் முடிவும், அது செய்யும் காலத்து நடுவு வரும் இடையூறும், அது செய்து முற்றுப் பெற்ற இடத்து அதனால் எய்தும் பெரும்பயனும் முன்னுறச் சீர் தூக்கிக் கொண்டு பின்பு செய்க அக்கருமத்தை எ - று.

(ப - உ.) எ - து.—வினை தொடங்கினால் அது முடியும் வண்ண மும் அதற்கு வரும் இடையூறும் முடிந்த இடத்து உண்டாகும் பய னும் முன்பே அறிந்து வினை செய்க எ - று.

முடிவு மேல் கூறிய ஆற்றால் செய்யுங்கால் முடியும் முடியாது என்று அறிதல். இடையூறு பகைவர்க்கு வரும் படைத்துணை. முற்றி

யாங்கு எய்தும் படுபயன் நேரும் இடையூறு சிறியதாய்ப் பெறும் பொருள் பெரியதாயினும் அதன் பின்பு வினையும் வினைவு. இது வெற்றிப்பகை தோற்றுதல். (7)

கா. 8.

ப. 10.

சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு தாழ்ச்சியிற் றங்குத றீது.

(கா - உ.) எ - து.—இவ்வாறு இவ்வினைத்துக் குறையும் நீரத் தேர்ந்து கொண்ட தேர்ச்சியினது சமைவின்கண் தாம் கருதிய வினை செய்யத் துணியும் துணிவு எய்துதல், அங்ஙனம் துணிந்த இடத்து மற்று அத்துணிவு பின்பு காலத்தாழ்வின்கண் படுதல் குற்றம் எ - று.

(ப - உ.) எ - து.—சூழ்ச்சிக்கு எல்லை துணிவு பெறுதல்: அவ்வாறு துணிந்த வினை தாழ்ச்சியின்கண்ணே கிடக்குமாயின் அது தீது ஆம் எ - று.

இது வினைசெயத் துணிந்த காலத்து நீட்டிக்கும் ஆயின் அதனை அறிந்து பகைவர் தம்மைக் காப்பர்: ஆதலால் நீட்டியாது விரைந்து வினை செய்ய வேண்டும் என்றது. (8)

கா. 9.

ப. 4.

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

(கா - உ.) எ - து.—கீழ்ச்சொல்லிப் போந்த வினை செய்யும் கூறு பாடுகள் அங்ஙனம் செய்கை தமக்கு இயலும் ஆயின் அவ்வியலும் வழி எல்லாம் வினை செய்து ஒழுகுதல் சால நல்லது மற்று இவ்வா கற்பினும் (?) அவ்வினைகள் செலவுபடும் வழி எல்லாம் ஓர்ந்து பார்த் தச் செய்து கொள்க எ - று.

(ப : உ.) எ - து.—இயலும் இடம் எல்லாம் வினை செய்தல் ன்று : இயலாத காலத்து அதனை நினைந்து இருந்து இயலும் இடம் பார்த்துச் செய்க எ - று.

மேல் பகை எஞ்சவிடல் ஆகாது என்றார் : அது முடியாத காலத் துச் செய்யும் ஆறு என்னை என்றார்க்கு அதனை இகழாது பின்பு ஆம் காலம் பார்த்துச் செய்க என்றது. (9)

கா. 10. ப. 5.

உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பொரியார்ப் பணிந்து.

(கா - உ.) எ - து.— உலகத்துப் பொருள் வலி முதலிய அனைத் தானும் தம் பகைவரின் சிறியர் யாவர் சிலர் மற்று அவர் பகைவரால்

17

தமக்கு உள் நடுக்கம் வருதலே அஞ்சி மற்று அவரினும் பெரிய் வேந்தர் மாட்டுத் தமது குற்றங்கூறி அவர்களை வணங்கி வழிபட்டுப் படைத் துணையாகக் கொள்வர் எ - று.

(ப - உ.) எ - து —உறையும் இடம் சிறியார் தமது இடன் நடுங்குதற்கும் அதற்கு அஞ்சித் தமது குறைதீரப் பெறின், தம்மின் பெரியாரைத் தாழ்ந்து நட்பாகக் கொள்வர் எ - று.

இது சிறியன் ஆயின் இவ்வாறு செய்ய வேண்டும் என்றது இவை எல்லாம் அரசற்கும் ஒக்கச் செய்ய வேண்டும் ஆயினும் அமைச்சுத் தொழில் ஆதலான் ஈண்டுக் கூறப்பட்டன. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் அரசர் உழையிருந்த அமைச்ச ராகிய ஓர் வினையின் நிட்பமும் வினைசெயல் வகையும் வைப்புறுதியும், பொருந்தா மன்னரைப் பொருந்துவித்தலும் நிறைகோடலும் குறும்பு அறுத்தலும் பிறவும் வேண்டுதல் ஆன தூது சேறலும் அமைச்சர்க் குக் கடன் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

31. தூது.

(ப - உ.) தூது ஆவது மாற்றரசர் மாட்டுச் சந்து செய்யும் அமைச்சியர் இலக்கணம் கூறுதல். இனிப் பகைவர் மாட்டு அமைச்சி யர் செய்யும் திறம் கூறுகின்றார் ஆகலின் அவற்றின் பின் இது கூறப் பட்டது.

கா. 1.

ப. 9.

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற் றக்க தறிவதாந் தூது.

(கா - உ.) எ - து.—இராச நீதிக்கு ஏற்ற நூல்களை இனிது உணாக் கற்றும், இகல்வேந்தர் முன்னர்ச் சென்று உணாக்கும் இடத்தத் தறுகண்மையும் வேண்டுங்கால் உடையனாய், வேண்டாக்கால் அவர் செவிக்கு இனிது சொல்லும் ஆறு சொல்லிச் சொல்லுதற்கு அமைந்த காலத்தையும் கடைப்பிடித்து ஏற்றத்தாழ்வு படாமல் சொல்லத் தக்கதனையே அறிந்து சொல்லுவது யாது மற்று அதுவே ஆம் தூது என்று சொல்லப்படுவது எ - று.

(ப - உ.) எ - து.—தன் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுங்கால், பகை அரசன் வெகுண்டானுயின், அது மாற்றுதற்கு ஆம் உபாயத்தைக் கற்று, அவ்விடத்து அஞ்சுதல் இன்றி வெகுட்சி தீருமாறு இசையச் சொல்லி, காலோடுகூடச் செய்யத் தகுவன அறிந்து செய்ய வல்லவன் தூதன் ஆவான் எ - று.

தக்கது அறிதலாவது சொல்லின வார்த்தையைச் சொல்லாமல் போதலும் வினைசெய்து போதலும். செய்ய வேண்டும் என்றது.

இஃது இவ்விடத்திற்கு ஆவன

கா. 2.

ப. 4.

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றின் செறிவுடையான் செல்க வினைக்கு.

(கா - உ.) எ - து.—முன்னமே தான் இயல்பு ஆக அறிவு உடையன் ஆதலும், மன்னரும் பிறரும் மகிழ்ந்து அணைக்கற்கு உரிய வடிவு உடையன் ஆதலும், கீழ்ச்சொன்ன வாம்பின் அன்றி மற்றும் பல ஆராய்ந்த கல்வி உடையன் ஆதலும் என்னும் இம்மூன்றினையும் உடையனாய் இருக்கின்றான் யாவன்? மற்று அவன் செல்வான் ஆக அரசர் காரியத்துக்கு எ - று.

(ப - உ.) எ - று.—அறிவும் வடிவும் தெளிந்த கல்வியும் இம் மூன்றினது அடக்கம் உள்ளவன் வினைக்குச் செல்லுக எ - று.

அறிவு - இயற்கை அறிவு. உருவு - வடிவு அழகு. ஆராய்ந்த கல்வி - கலைகளை அறிந்து ஆராய்ந்ததனால் ஆட்சியான கல்வி. இவை பிற்றினது அடக்கம் ஆவது - இம்மூன்றினால் வரும் பெருமிதத்தை அடக்கி ஒழுகுதல். (2)

கா. 3. ப. 1.

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(கா - உ.) எ - து.—தன் அரசர் மாட்டு அன்பு பெரிது உடை யனுமாய்த் தான் நல்ல குடியில் பிறந்தானுமாய் வந்து பயிலும் தொறும் வேந்தனுவன் விரும்பும் மாபு உடையனுமாய் இம்மூன்று குணமும உடையான அரசாகுத தூது உரைபபான

எ - று.

(ப - உ.) எ - து.—அரசன் மாட்டு அன்பு உடைமையும் அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்தனல் விரும்பப்படும் குணன் உடைமையும் தூது ஆகிச் சென்று சொல்லுமவனது இயல்பு

எ - று.

வேந்தனல் விரும்பப்படும் குணமாவது அவன் விரும்பும் அவற் றைத் தான் விரும்பாமை. (3)

கா. 4.
ப. 10.

கடனறிந்து காலங் கருதி யிடனறிந் தெண்ணி யுரைப்பதாந் தூது.

(கா - உ.) எ - து.—அரசர் சொல்லும் நிறம்பாடுகள் யாவும் அறிந்து சொல்லுதற்கு ஊரிய காலத்தையும் (கருதிக்)கொண்டு, மற்றுச் சொல்லுதற்கு அமைந்த இடத்தையும் இனிது உணர்ந்து பின்னும் மக்கட்பாடு, உரை தம்மிலும் அப்பொழு.....கற்பன வற்றை நெஞ்சகத்து ஓர்ந்துகொண்டு இங்ஙனம் சொல்ல வல்லதூம் தூது எ - று.

பரி. பா - மி. "எண்ணி யுரைப்பான் றலை."

(ப - உ.) எ - து.—காரியம் நின்ற முறைமையை அறிந்து காலத்தையும் நினைந்து இடமும் அறிந்து தானே எண்ணிச் சொல்ல வல்ல

வன் தலைவன் ஆவான் எ - று.

தலை, இடை, கடை எனை மூன்று வகையவருள் மேற்கூறின எல்லாம் இடையும் கடையும் ஆகிய தூதர் இயல்பு கூறினார்: இது தலையான தூதர் இலக்கணம் கூறிற்று. தலையான தூதன் தானே காரியம் அறிந்து சொல்லும். இடையான தூதன் சொன்ன மாற்றத்தைச் சொல்லும். கடையான தூதன் ஓலை காட்டும். (4)

கா. 5.

ப. 5.

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்

கின்றி யமையாத மூன்று.

(கா - உ.) எ - து.—அரசர் மாட்டு அன்பு பெரிது உடைமையும், இயற்கையானும் தெளிந்த அறிவு உடைமையும், சொல்லும் சொல் எற்றத்தாழ்வு இல்லாத சொல்வன்மையும் என்னும் இம்மூன்றும் அரசர்க்குத் தூது உரைக்கும் அமைவு உடையோர்க்குப் பெரிதும் இன்றி

யமையாது எ - று.

(ப - உ.) எ - து.---அன்பு உடைமையும், அறிவு உடைமையும், தெரிந்த சொல்வன்மை உடைமையும் என்னும் மூன்றும் தூது உரைப் பார்க்கு இன்றியமையாதது எ - று.

ஆராய்ந்த என்றமையால் கல்வி ஆயிற்று. மேற்கூறிய குணங் கள் எல்லாவற்றினும் இவை மூன்றும் இன்றியமையாதன என்று கூறிற்று. இத்துணையும் தூதர் இலக்கணம் கூறிற்று. (5)

கா. 6.

ப. 8.

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி தருவதாந் தூது.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் ஆராய்ந்து தகுவன சொல்லும் இடத்தும் பொருள் பொதிந்த சொல்லினைச் சுருங்கச் சொல்லி, அங் ஙனம் சுருங்கச் சொல்லும் இடத்தும் பயன்படாத சொல்லினை நீக்கி

மற்று அச்சொல்லுவது தன்னையும் கேட்டவர் மகிழ்ந்து முகமலரு மாறு சொல்லிப் பின்னும் இவ்வாறு சொல்லுதலே அன்றி மற்று

அவரால் தன் அரசர்க்கு வேண்டும் நன்மையைத்தா வல்லது ஆம் தூது ஆவது எ - று.

தாவாத நீக்கி என்பது பயன்படாத ஒழித்தல் என்றது.

(ப - உ.) எ - து.—சுருங்கச் சொல்லி விரும்பாத சொற்களை நீக்கி மகிழுமாறு சொல்லித் தன் அரசனுக்கு நன்மையைத் தரும் அவன தாதன ஆவான எ - று.

இது சொல்லுமாறு கூறிற்று.

(6) கா. 7.

ப. 3.

நூலாரி னூல்வல்ல ருகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(கா - உ.) எ - து.—பலவகைப்பட்ட நூல்களையும் கற்று வல்ல சான்றோரிலும் சமையக் கற்று வல்லனாய் இருக்கின்றது யாது மற்று அது வேல் வேந்தர் மாட்டுச் சென்று தன் அரசர்க்கு வென்றிக் கருமம் சொல்லுவானது மாபு எ - று.

எனவே அரசரும் யானையும் மற்றுளோரும் அனைத்தும் அறிந்த தன்மையர் ஆகலான் அவர் மாட்டுச் சென்று உரைக்கும் இடத்துக் கல்வியும் திருத்தம் வேண்டும் என்பது கருதி இவர்க்கு நூல் வன்மை எடுத்து உரைத்தது என அறிக. சூழ்ச்சியாளரில் சூழ்ச்சி பெரிது உடையன் ஆதல் என்றும் ஆம்.

பரி. பா - மி. "நூலார்முன்" "வேலார்முன்".

(ப - உ.) எ - து.—பல நூல்களையும் கற்றுர் முன்னர் அந்நூல் களைத் தானும் சொல்ல வல்லன் ஆதல், வேலுடையார் முன் நின்று தன் அரசனுக்கு வெற்றியாகிய வினையைச் சொல்லுமவன் இயல்பு எ - று. (7)

கா. 8.

ப. 6.

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம் வாய்சோரா வன்க ணவன்.

(கா - உ.) எ - து.—ஒரு வேந்தன் சொல்லிவிடும் மாற்றத்தை வேறு வேந்தர்க்குச் சென்று உரைப்போனவன் யாவன் எனின், தன் அரசன் வேற்றாசனுக்குச் சொல்லிவிடும் மாற்றம் ஆயினும் இனி வேற்றாசன் தன் அரசர்க்குச் சொல்லிவிடும் மாற்றம் ஆயினும் தனித்தனி இராச பாவனைக்கு உரிய மாற்றம் ஆம் அத்துணை அல்லது எளிமைபட நிகழாமை இயல்பு அன்றோ? அதனின் இவை முழுதும்

இவர் இவர்க்குச் சென்று இசைப்பின் தனது இராச காரியம் கெடும் ஆகலான் இருபாலும் சென்றால் வாய்ப்பன கூறி வடு அடுப்பன வழு வியும் புறப்படாமல் செறியப் பிடிக்கும் திறப்பாடு உடையவன் தூது

எ - று.

(ப - உ.) எ - து.—தன் அரசன் சொல்லிவிட்ட மாற்றத்தைப் பகை யரசர்க்குச் சொல்லுமவன், தன்னரசன் சொல்லும் சொற்க ளுக்கு வடுவான சொற்களை மறந்தும் சொல்லாத அஞ்சாமையை

உடையவன் எ - று.

இது முதலாகச் சொல்லும் நிறன் கூறுகின்றது ஆகலின் முற்படச் சொல் சொல்ல வேண்டும் என்றது. (8)

கா. 9.

ப 2.

தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்

வாய்மை வழியுரைப்பான் பண்பு.

(கா - உ.) எ - து.—குலத்தூய்மை குணத்தூய்மை மனத்தூய்மை வாய்மொழித் தூய்மை முதலிய தூய்மையும் இருபாலும் சென்று சொல்லுங்கால், தன் அரசற்கும் அவன் கருமதிகிற்கும் பெரிதும் துணைமைப்பாடு உடையன் ஆதலும் அரசர் முன்னர்ச் சொல்லும் இடத்துக் கலங்காது சொல்லும் துணிவுடைமை இம்மூன்றினுடைய வஞ்சனை அற்ற வாய்மைப்பாடு உடையது யாது மற்று அது தூது நடந்து சொல்லுவான் மாபு ஆவது எ - று.

இனி வழியுரைப்பான் என்றது அரசன் ஏவலின் பின் சென்று உரைப்பான் என்றது.

(ப - உ.) எ - து.—தூய்மை உடைமையும், சுற்றம் உடைமையும், ஒரு பொருளை ஆராய்ந்து துணிதல் உடைமையும் இம்மூன்றின் கண்ணும் மெய் உடைமையும் தூதற்கு இயல்பு எ - று.

தூய்மை - மெய்யும் மனமும் தூயன் ஆதல். இதன் மெய்மை யாவது பிறர்க்கு வேண்டிச் செய்யாது தனக்கு வேண்டிச் செய்தல். சுற்றத்தார் மாட்டும் பொய் கூறுமை பகைவர் மாட்டுப் பொய்கூற வேண்டுதலின் இது பின் கூறப்பட்டது. துணிவு துணிந்த பின்பு ஐயம் தோற்றுமல் துணிதல். வழியுரைப்பார் என்பது அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுதலால். (9)

கா. 10. ப. 7.

இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற் கிறுதி பயப்பதாந் தூது. 32.

மன்னரைச் சேர்ந்தொழுகல் 135

(கா - உ.) எ - து.—தான் சென்று பகை வேந்தர் முன்னர்க் கருமம் சொல்லுங்கால் கண்ணஞ்சாது சொல்ல வேண்டுவனவும் சொல்லி மற்று அதனல் தனக்கு உயிர்க்கு இறுதி பயப்பினும் ஒழிய விடாது தன் இறைவன் ஆகிய அரசனுக்கு வேண்டும் கருமம் உறுதி யைப் பயக்க நிற்பது யாது மற்று அதுவே தூது ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—தன் உயிர்க்கு இறுதி பயக்கும் ஆயினும், சொல்லுதலே ஒழியாதே சொல்லுதலின், தன் அரசனுக்கு உறுதி உண்டாம் சொற்களைக் கூறுமவன் தூதன் ஆவான் எ - று.

இஃது இறுதி பயப்பினும் என்றமையான் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுக என்றது.

(10)

(கா - உ) இனி இங்ஙனம் அரசர்க்கு அமைச்சர் தூதாடி நாடு ஆக்கமும் பிறவும் செய்தமையாதா .....மன்னரைச் சேர்ந்து ஒழுக வேண்டும் அன்றே; அதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

32. மன்னரைச் சேர்ந்தொழுகல்.

(ப - உ) மன்னரைச் சேர்ந்து ஒழுகல் ஆவது - அரசர் மாட்டு அமாத்தியர் ஒழுகும் நிறன் கூறுதல். இது முதலாக அவை யஞ் சாமை ஈறாகக் கூறுகின்றவை தம் அரசர் மாட்டு வேண்டுமாயினும் மாற்றரசர் மாட்டும் வேண்டுதல் இன்றியமையாத சிறப்பு உடைத்தாகலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.
ப. 1.

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில வேண்டுப வேட்பச் சொலல்.

(கா - உ) எ - து — அரசனது உள்ளக் குறிப்பினை ஆராய்ந்து உணர்ந்து தான் சென்று அறிவுரைக்கும் காலத்தையும் கருதிச் சென்று உரைக்கும் இடத்தை அவர்க்கு வெறுப்பு இல்லனவுமாய் அன்றி ஒரு வண்ணம் வேண்டும் அவினவுமாய் இருப்பனவற்றையே அரசர் பெரிதும் விருப்புற்றுக் கேட்குமாறு சொல்லுக மன்னரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர் எ - று.

(ப - உ.) எ - து —அரசன் குறிப்பை அறிந்து காலம் பார்த்து வெறுப்பில்லாதனவாய்ச் சொல்ல வேண்டுவனவற்றை விரும்புமாறு சொல்லுக எ - று.

இது சொல்லும் திறன் கூறிற்று.

(1) 136 திருக்குறள் - பொருட்பால்

கா. 2.

ப. 8.

கொளப்பட்டே மென்றெண்ணிக்
கொள்ளாத செய்
துளக்கற்ற காட்சி யவர்.
[யார்

(கா - உ.) எ - து.—அரசரான் மிகவும் கைக்கொள்ளப் பட்டேம் என்று கருதி இது காரணமாக அரசரால் கைக்கொள்ளத் தகாதனவற்றைச் செய்வதிலர்: யார் எனின் கலக்கம் அற்ற திண்ணிய அறிவினையுடையோர் எ - று. .

(ப - உ.) எ - து —அரசனுலே கைக்கொள்ளப் பட்டேம் என்று நினைத்து அவன் நெஞ்சில் கொள்ளாதன செய்யார்கள் அசைவற்ற தெளிவுடையார் எ - று.

இஃது அரசன் இசைவன செய்ய வேண்டும்

ப. 10.

இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வெளியோ டொழுகப் படும்.

(கா - உ.) எ - து.—இவர் மிகவும் இளையராய் இருந்தார் என்றும், ஒருவாற்றால் நமக்கு இன்ன முறையினர் இவர் என்றும் கருதிக் கொண்டு இகழாராய் மற்று அவ்வாசர்க்கு அவாது குலமரபினுள் உள தாம் நிலைபெற்று வருகின்ற பெரியது ஓர் ஒளி உண்டு அன்றே: மற்று அதனொடு சார்க் குறிக்கொண்டு ஒழுக அடுக்கும் அமைவு உடையோர் எ - று.

(ப - உ.) எ - து —இவர் நமக்கு இளையர் என்றும், இத்தன்மை யாகிய முறை என்றும் இகழாது அவர் பெற்று நின்ற தலைமை யோடோ பொருந்த ஒழுக வேண்டும் எ - று.

முறையார் என்றது இளங்கிழமை முறை. இது காலத்துக்குத் தக்க காட்சி செய்ய வேண்டும் என்றது. இது மூன்றும் பெரும் பான்மையும் தன் அரசனை நோக்கிற்றின. (3)

கா. 4. ப. 9.

பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

(கா - உ.) எ - து.—அரசர்க்கு நாம் பழையர் எனக்கருதி யாதா னும் ஒன்று காரணமாக அரசர் மாட்டுத் தாம் ஒழுகும் பண்பிற்கு உரிய அல்லனவற்றைச் செய்யக் கருதும் கெழுதல் தன்மையானது கேட்டினைத் தரும்: எனவே என்றும் அரசர் மாட்டு அஞ்சி ஒழுகுதல் தடன் என்பது பொருள் ஆயிற்று எ - று.

32. மன்னரைச் சேர்ந்தொழுகல் 137

(ப - உ.) எ - து.—யாம் பழையம் என்று கருதி இயல்பு அல் லாதனவற்றைச் செய்யும் நட்பின் தகைமை தனக்குக் கேட்டைத் தரும எ - று.

இஃது இயற்கை அல்லாதன தவிரல் வேண்டும் என்றது. (4) கா. 5.

ப. 7.

அகலா தணுகாது தீக்காய்வார் போல
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

(கா - உ.) எ - து.—குளிர்க்கு உடைந்து தீக்காய்கின்ற இடத்து மற்றும் அதனை அகல்வதும் செய்யாது அணைவதும் செய்யாது தீக் காய்ந்து இன்புறுகின்றார் யாதொரு படி: அப்படியே அவரைப் போல ஒழுகுவார் யார் எனின் விறல் மன்னரைச் சேர்ந்து ஒழுகும் விதி மாபு உடையோர் எ - று.

பரி. பா - மி. "போல்க".

(ப - உ.) எ - து.—தீக்காய்வாரைப் போல நீங்குதலும் செய்யாது குறுகுதலும் செய்யாது மாறுபாடு இல்லாத வேந்தரைச் சேர்ந்து ஒழுகுக அமாத்தியர் எ - று.

இது சார்ந்து ஒழுகும் திறன் கூறிற்று.

பான்மையும் மாற்றாசரை நோக்கிற்று.

இத்துணையும் பெரும்

(5) கா. 6.

ப. 4.

எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை விட்டகற்றற் கேட்க மறை.

(கா - உ.) எ - து.—எப்பொருளும் ஓரார் என்பது அரசர் மாட்டுப் பிறரால் சில மறை உளதான காலத்து அப்பொருள் சிறிதே ஆயினும் பெரிதே ஆயினும் தாம் அதனைப் பொருட்படுத்திக் குறிக் கொண்டு விரும்பார். தொடரார் என்பது மற்று அவர் அங்கு நின்றும் நீங்கிப் போன இடத்தும் பின்பும் அவரொடு பற்றிக் கொள்ளார்: மற்று அப்பொருள் தான் புறத்து எங்கும் தானே விட்டு வெளிப்பட்ட காலத்தும் வேண்டுகின் கேட்பாராக அம்மறைப் பொருளினை

எ - து.

(ப - உ.) எ - து.—யாது ஒரு பொருளையும் செவி கொடுத்து ஓராது தொடர்ந்து கேளாது அப்பொருளை மறைத்தல் கவிர்த்தால் பின்பு கேட்க எ - று.

இது கேட்டல் விருப்பமும் குற்றம் என்றது.

(6) 138 திருக்குறள் - பொருட்பால்

கா. 7.

ப. 6.

போற்றி னரியவை போற்றல்

கடுத்தபின்

றேற்றுதல் யார்க்கு மரிது.

(கா - உ.) எ - து.—அரசர் மாட்டுக் குறிக்கொண்டு ஒழுக நினைப் பின் கீழ்ச்சொல்லிப் போந்தவையும் பிறவும் ஆகிய அரியனவற்றைக் குறிக்கொண்டு தெறியின் ஒழுகுக: என்னை எனின் அவற்றுள் ஒன்றி னுன் அரசர் முகம் கடுத்தபின் அவரைத் தெளிவித்தல் யாவர்க்கும் அரிது: எனவே உயிர்க்கேடும் பொருள் கேடும் ஆய்விடும் என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—காப்பான் ஆயின் காத்தற்கு அரியனவற் றைக் காக்க: குற்றம் உண்டு என்று ஐயப்பட்ட பின்பு தெளிவித்தல் யாவர்க்கும் அரிது எ - று.

அடுத்து ஒன்று சொல்லாமல் ஒழுகவேண்டும் என்றது. பெரும்பான்மையும் பெண்டிர் மாட்டே வரும்.

அது

(7) கா. 8.

ப. 2.

வேட்பன சொல்லி வினையில

வெஞ்ஞான்றும்

கேட்பினுஞ் சொல்லார் விடல்.

(கா - உ.) எ - து.—அரசரைச் சேர்ந்து ஒழுகும் அருமை இத் தன்மைத்து ஆகலான் அவர் விரும்பிக் கேட்பனவற்றைச் சொல்லி மற்று ஆங்கும் அவ்வுரையினுள் மேல் ஒரு பயன் விளைத்தல் இல்லன வற்றை அரசர் கேட்டாராயினும் தாம் சொல்லாது ஒழிக எ - று.

பரி. பா - மி. "சொல்லா விடல்".

விதி

(ப - உ.) எ - து.—வேந்தனுல் விரும்பப் படுவனவற்றைச் சொல் தமக்குப் பயன்படாதனவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுக எ - று.

சொல்லாது விடல் ஆவது தாதனை நமக்குப் படை எவ்வளவு உண்டு என்று பகை அரசன் வினவினுல், நீ அறியாதது ஒன்றே என்று அளவு கூறுமை. வினையில் என்றமையால் பயன் உண் டாயின் சொல்லுக என்பது கருத்து: தன் அரசன் பெண்டிர் முத லாயினரைக் கேட்டார்க்குச் சொல்லாமை: இவை போல்வன சொல் லாமை வேண்டும் என்றது.

கா. 9.

ப. 3.

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
வான்ற பெரியா ரகத்து.

33. குறிப்பறிதல் 139

(கா - உ.) எ - து.—அரசரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சா னோர் மற்று அவர் தம்மொடு சொல்லும் செவிச்சொல் அன்றிப் பிற சொடு பொறையும் செவிச்சொல்லும், இனி மற்றவரோடு ஆயினும் பிறரோடு ஆயினும் அங்குக் கூடி நகும் நகையும் என்னும் இவை இரண் டும் ஒழிந்து ஒழுகுக: யார் மாட்டு எனின் செல்வம் முதலிய முற் றுப் பெற்ற பெரியோர் ஆகிய அவ்வரசரிடத்து எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவன் செவியுடன் சொல்லுதலும் ஒரு வன் முகம் பார்த்துத் தம்மில் நகுதலும் தவிர்ந்து ஒழுகுக அமைந்த பெரியாரகத்து எ - று.

இது செவிக் கூற்றும் நகையும் ஆகாது என்றது. (9)

கா. 10.

ப. 5.

மன்னர் விழைப விழையாரேன் மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

(கா - உ.) எ - து.—அரசர் விரும்புவன யாவை சில: மற்று அவற்றைத் தாம் சிறிதும் விரும்பாரெனில், விரும்பாமையாகிய இது தான் அம்மன்னரால் நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும் எ - று.

பரி. பா - மீ. " விழையாமை ".

(ப - உ.) எ - து.—எல்லார்க்கும் பொதுவாகக் கருதினவை அன்றி மன்னான் விரும்பப் பட்டவையிற்றை விரும்பாது ஒழிக. அவ்விரும்பாமை அம்மன்னன் தானே நிலையுள்ள செல்வத்தைத்

தரும ஆகலான எ - று.

அவை நுகர்வனவும் ஒப்பனை முதலாயினவும் ஆம். றைத் தவிர்தல் வேண்டும் என்றது.

அவையிற்
(10)

(கா - உ.) இனி இவ்வாறு அமைச்சர் மன்னரைச் சேர்ந்து ஒழுகி நின்ற இடத்து அவர் உட்குறிப்பு அறிந்ததனை முகக் குறிப்பி னான் அறிந்து ஒழுகுதல் கடன் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

33. குறிப்பறிதல்.

(ப - உ.) குறிப்பு அறிதலாவது அரசர் உள்ளக் கருத்தை அமைச்சர் அறிதலும் அமைச்சர் உள்ளக் கருத்தை அரசர் அறித லும். இஃது அமைச்சர் இயல் ஆயினமையின் அமைச்சர் குறிப்பு. அறிதல் கூறியது என்னை எனின், குறிப்பு அறிதல் அரசர்க்கும் வேண்டும்: ஆதலின் இறந்தது காத்தல் என்னும் தந்திர வுத்தியால் கூறப்பட்டது என்க. இது பெரும்பான்மையும் அமைச்சர்க்கு வேண்டுதலின் மன்னரைச் சேர்ந்து ஒழுகுதலின் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 7.

கூழுமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாழுநீர் வையக் கணி.

(கா - உ.) எ - து.—அரசன் சொல்ல வேண்டாமல் அவன் உள்ளம் குறித்ததனை முன்னம் குறிப்பினன் அறிந்து கொள்வான் யாவனோ அமைச்சன் மற்று அவன் எஞ்ஞான்றும் வற்றா நீராகிய கடல் சூழ்ந்த வைப்பிற்கு ஓர் அணிகலம்: எனவே வையத்து வாழ்வோர்க்குப் பெரிதும் ஒளி.....ணயன் என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—அரசன் கூறுவதன் முன்னே அவன் மனநிகழ்ச்சியை நோக்கி அறியுமவன் எல்லா நாளும் மாறுத நீர் சூழ்ந்த வையத்துக்கு அணிகலன் ஆவான் எ - று.

இது மக்களில் சிறப்புடையன் ஆம் என்றது.

(1) கா. 2.

ப. 2.

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

(கா - உ.) எ - து.—தன்னை வந்து அடுக்கத் தோன்றின வண்ணத்தைத் தான் காட்டும் பளிங்கே போல ஒருவன் நெஞ்சமானது குறித்த நீர்மையைக் கைக்கொண்டு நீளக் காட்டுவன முகம்: எனவே ஒருவர் முன்னி அறிதற்குக் கருவி என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—தன்னை அடுத்த வண்ணத்தைக் காட்டுகின்ற பளிங்கைப் போல் நெஞ்சத்து மிக்கதனை முகம் காட்டும் எ - று.

மேல் முகம் அறிவிக்கும் என்றார்: அஃது அறிவிக்குமாறு என்னை என்றார்க்கு வெகுட்சி உண்டாயின் கருகியும், மகிழ்ச்சி உண்டாயின் மலர்ந்தும் காட்டும் என்றது. (2)

கா. 3.

குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

ப. 10.

(கா - உ.) எ - து.—அரசரது முகம் கொண்ட குறிப்பினன் அவர் யாதானும் ஒரு கருமத்தை அவர் உள்ளம் கொண்ட குறிப்பினை அறிவார் யாவர்: மற்று அவர் தம்மை அவ்வாசாரனேர் தாம் படைத்துள வான அவற்றுள் பெரிதும் உறுப்பு உடையவாகச் சிறந்தனவற்றுல் யாதானும் கொடுத்துக் கைக்கொள்க எ - று.

(ப - உ.) எ - து.—முகக் குறிப்பினுலே உள்ளக் கருத்தை அறிபவர்களைத் தன் உறுப்பினுள் வேண்டுவது யாது ஒன்றுயினும் கொடுத்துத் துணையாகக் கூட்டிக்கொள்க எ - று.

உறுப்பினுள் என்பதனைத் தனக்கு அங்கம் ஆயினவற்றுள் எனினும் அமையும். குறிப்பு அறிவாரை அறிதல் குறிப்பறிதல் ஆயிற்று. குறிப்பறிவாரை அரசன் கடியப்படுமோ கூட்டப்படுமோ என்று ஐயமுற்றூர்க்குக் கூறப்பட்டது. இவை இரண்டும் அரசன் மேலன. (3)

கா. 4. ப. 6.

குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

(கா - உ.) எ - து.—ஒருவர் உள்ளம் குறித்தது ஒன்றினை அவர் உரைக்க வேண்டாமல் மற்று அவர் முகக் குறிப்பினல் கைக்கொள்வாருடன் மற்று ஏனை மாந்தார் முகம் கை கால் முதலிய மக்கள் உறுப்பின்கண் ஒரு தன்மையர் ஆதலே உள்ளது; மக்கட்கு அன்பு ஆகிய உணர்வின் பெரிதும் வேறுபாடு உடையார். என்னவே உறுப்பின் அவரோடு ஒருமை: உணர்வின் விலங்கொடு மக்கள் அனையர் என்பது வெளிப்படுத்தியவாறு ஆயிற்று என்பது பொருள் எ - று.

(ப - உ.) ம - து.—நினைந்ததனைச் சொல்லாமைக் கொள்ள வல்லாரோடு மற்றையார் உறுப்பு ஒரு தன்மையர் அல்லது அறிவினுல் வேற்றுமை உடையர் எ - று.

இது குறிப்பறியாதார் அறிவில்லாதார் என்றது. (4)

கா. 5.

ப. 1.

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங் காயினுந் தான்முந் துறும்.

(கா - உ.) எ - து.—மக்களாளேர்க்கு உறுப்பிற் சிறந்தது ஆகிய முகத்தினும் பொறி உடையது ஒன்று உண்டோ? இல்லை அன்றே? என்னை எனின், ஒருவர் உள்ளத்தான் உவப்பினும் காயினும் மற்று அவை அவர் சொல்லானும் செயலானும் வெளிப்படுவதன் முன்னமே குறிப்பினுல் தான் முந்துற்று நிற்கும் எ - று.

(ப - உ.) எ - து.—முகம் போல முதிர்ந்த அறிவு உடையது பிற உண்டோ? உவப்பினும் வெறுப்பினும் தான் முற்படக் காட்டும் எ - று.

குறிப்பு அறியுமாறு என்னை என்றார்க்கு இது முகம் அறிவிக்கும் என்றது. (5)

கா. 6.

ப. 5.

குறிப்பிற் குறிப்புணரா வாயி

னுறுப்பி னு

ளென்ன பயத்தவோ கண்.

(கா - உ.) எ - து —தமது கண்கள் பிறர் நோக்கிய நோக்கிற் குப்பின் உளது ஆகிய குறிப்பினையே உணா மாட்டா ஆயின் உறுப்பி னுள் என்ன பயத்தன கொல்லோ தாம்? எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவன் முகக் குறிப்பினனே அவன் மனக் குறிப்பை அறிய மாட்டாவாயின், தன் உறுப்புக்களுள் கண்கள் மற்று என்ன பயனைத் தருமோ? எ - று.

இது குறிப்பு அறியாதார் குருடோடு ஒப்பர் என்றது. (6) கா. 7.

ப. 4.

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங்
வகைமை யுணர்வார்ப் பெறின். [கண்ணின்

(கா - உ.) எ - து.—ஒருவரோடு ஒருவர்க்கு உள்ளத்தான் உள்ள பகைமையும் கெழுமுதல் தன்மையும் அவர் கண் தானே சொல்லித் தரும்; யார்க்கு எனின், அவை இரண்டையும் பிரித்து உணர்த்து கின்ற கூறுபாட்டை அங்ஙனம் தேர்ந்து உணர்வார்க்கு எ - று.

கண் உரைக்கும் என்றது. *"மது மறைந்து உண்டோர் மகிழ்ச்சி" கண்ணினனே கண்டு கொள்வார் என்பது.

(ப - உ.) எ - து.—ஒருவனோடு உள்ள பகைமையும் நட்பையும் கண்கள் சொல்லும்: கண்களினது வேறு பாட்டை அறிவானைப் பெறின் அ - று.

இது கண் கண்டு குறிப்பு அறிதல் அரிது என்றது.

நுண்ணியார்க்கு அல்லது (7)

கா. 8.

ப. 3.

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற் கண்ணல்ல தில்லை பிற.

(கா - உ.) எ - து.—உலகத்து யாவரினும் யாம் பெரிதும் கூரியேம் என்று இருப்பாரையும் தாம் மற்றுத் தம் குறிப்பினுள் அதை

---

* தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல் இளம்பூரணருரை சூத்திரம் ஈகஉ - வது—"நாற்றமுந் தோற்றமும்" என்பதனுட் காட்டிய மேற்கோட் செய்யுள் ஆகிய "ஏனல் காவ லிவளு மல்லள்" என்பதனுள் இவ்வடி பயின்று வருவது கண்டு கொள்க.

அறிந்து சீர் தூக்கும் கோல் ஆராயும் இடத்து தாமே அல்லது வேறு இல்லை எ - று.

மற்று அவர் கண்

அளக்கும் கோல் என்பது எற்றமும் தாழ்வும் இனிது உணரப் பலகாலும் தட்டியும் அசைத்தும் சீர்தூக்கும் தாசு என்று ஆயிற்று.

(ப - உ.) எ - து.—யாம் நுண்ணிய அறிவு உடையம் என்பார் பிறரை அளக்கும் கோல் ஆவது, விசாரிக்கும் இடத்துக் கண் அல்லது பிற இல்லை: ஆகலான் கண் கண்டு அறிந்து கொள்க எ - று.

நுண்ணியார் முகத்தின் தோற்றம் விடார்: அறிய வேண்டும் என்றது.

அவரைக் கண்டு

(8) கா. 9.

ப. 9.

முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி யுற்ற துணர்வார்ப் பெறின்.

(கா - உ.) எ - து.—தம் கருத்தின் கொண்டது காணும் ஒள்ளியோர் தாம் வறிதே முகத்தை நோக்கி மற்று உட்கொண்டதை உரையாமல் நிற்க அமையும் யார் மாட்டு எனின், அப்பொழுதே தாம் உட்கொண்டதனை. ஓர்ந்து மற்று இவர் உற்ற இன்பமும் துன்பமும் இதுபோலும் எனக் குறிப்பினை அறிவாரைப் பெறின் அவர் மாட்டு எ - று.

(ப - உ.) எ - து.—முகத்தை நோக்கி நிற்க அமையும் தன் அகத்தை நோக்கி அதில் உற்றதனை அறிய வல்லாரைப் பெறின்

எ - று.

எனவே அமாத்தியர் குறிப்பை அரசரும் அறிய வேண்டும் என்றவாறு ஆயிற்று: நிற்கின்ற தொழில் அமாத்தியன் கண்ணது ஆகலான். (9)

கா. 10.

ப. 8.

ஐயப் படாஅ தகத்த துணர்வாரைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(கா - உ.) எ - து.—ஒருவர் தாம் உள்ளத்துக் குறித்த பொருளை அல்ல ஆம் என்று ஐயப்படாதே இதுவே ஆகும் எனும் நல்ல குறிப்பு அறிவாளர் ஆகிய அமைச்சரை அவ்வாசர் தெய்வத்தோடு ஒப்பக் கொண்டு ஒழுக எ - று.

எனவே கருதி அறிவார் கடவுளர் ஆகலான் மற்று இவர் மக்கள் யாக்கையின் வந்தனராயினும் வானத் கடவுளோடு ஒப்பர் எ - று.

(ப - உ.) எ - து.—பிறர் நினைத்ததனை ஐயப்படுதல் இன்றித் துணிந்து அறிய வல்லாரைத் தேவரோடு ஒப்பக் கொள்க எ - று.

அவரும் பிறர் நினைவு அறிவர்: இவரும் அவ்வாறு அறிதலான் இவரைத் தேவராக மதிக்கப்படும் என்றது. இவை இரண்டும் குறிப்பு அறிந்தார்க்கு உளதாகும் நன்மை கூறின. (10)

(கா - உ) இனி அமைச்சராவோர் அரசன் குறிப்பு அறிந்து ஒழுகுதலே அன்றி அரசர் மாட்டு இருக்கும் அவையினது அறி அறிந்து ஒழுக வேண்டுதலான் மற்று இதன் பின்னரே மாபு அதனை விக்கின்றது மேலை அதிகாரம்.

34. அவை அறிதல்.

(ப - உ.) அவை அறிதலாவது இருந்த அவையத்தாரை அறிந்து அதற்குத் தக்க சொல்லுதல். அரசன் குறிப்பு அறிந்தாலும் அவை அறிந்து சொல்ல வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

கூ. 1.

ப. 1.

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
மெய்கையறிந்த தூய்மை யவர்.

(கா - உ.) எ - து.—அரசர் மாட்டு இருக்கும் அவையினது மாபினை அறிந்து அவ்விடத்தில் சொல்லுதற்குத் தகுவனவற்றை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுக; யார் எனின்,.....க் குறை யில்லாத் தொகுதிப் பாட்டினை அறிந்த தூய்மையினை உடைய அமைச்

சர் எ - று.

(ப - உ.) எ - து.—இருந்த அவையத்தாரை அறிந்து அதற்குத் தக்க சொல்லும் திறனை ஆராய்ந்து சொல்லுக சொல்லின் தொகையை அறிந்த தூய்மையை உடையர் எ - று.

தொகையறிதல் - திறன் அறிதல்.

மாறு கூறிற்று.

இஃது ஆராய்ந்து சொல்லு

(1)

கா. 2.

ப. 9.

அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர்
வகையறியார் வல்லதூஉ மில். [சொல்லின்

(கா - உ.) எ - து.—இவ்வாறு அவையினது மாபினை அறிந்து ஆராயாது வறிதே சொல்லுதலை ஒருப்பட்டு நடாத்துவார் யாவர்; மற்று அவர் சொல்லின் தகுதியும் மற்று அல்லதும் ஆகிய கூறுபாட்டினையும் அறியார்: மற்று யாதானும் தாம் வல்லதும் இல்லையாய்விடும்; சொல்லின்கண் சோர்வு படுதலான் எ - று.

34. அவை அறிதல்

(ப - உ.) எ - து.—அவையினது அளவை அறியாது ஒன்றைச் சொல்லுதலே மேற்கொள்பவர் சொல்லின் வகையும் அறியார் ஆவர்: அன்றி வேறு வல்லதும் இலர் ஆவர் எ - று.

வகை - சில சொல். இது பிறான் மதிக்கப்படார் என்றது. (2)

கா. 3. ப. 10.

ஒளியார்முன் ஒள்ளியா ராதல் வெளியார்முன் வான்சுதை வண்ணங் கொளல்.

(கா - உ) எ - து.—ஒள்ளிய அறிவாளர் அவை முன்னர்க்கு எந்தத் தாமும் ஒள்ளிய அறிவாளர் ஆதல் உடையர் எனின் அவ் அறிவு இல்லாப் பேதையார் ஆகிய வெள்ளறிவாளர் முன்னர் வரின், அங்குந்தானையும் வெண்மை நிறமே தனக்கு இயல்பு ஆகிய சுதை போலும் வெள்ளை வண்ணத்தைத் தம் கண் உள்ளது ஆகக் கொண்டு கழிதல் எ - று.

ஒளியார் என்பது ஒள்ளிய அறிவு உடையார் எ - று. வெளியர் என்பது வெள்ளியார், அறிவு கேடர் எ - று. வான் சுதை வண்ணம் கொளல் என்பது - இதில் வாலிமை - வெண்மை: சுதை என்பது மணலும் நீறும் கூடிய சுண்ணம்பு.

(ப - உ.) எ - து.—ஒள்ளிய அறிவை உடையார் முன்னர் தாமும் ஒள்ளிய அறிவை உடையராய் இருத்தலும், வெள்ளறிவினர் முன்னர் வாலிய சுதை வண்ணம் போன்ற வெண்மையைக் கொண் டிருத்தலும் அவை அறிதலாவது எ - று.

மேல் அவை அறிந்து ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்றார்: அவற்றுள் அவை அறிதலாவது இது என்று கூறியது. (3)

கா. 4.

ப. 6.

உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன் பாத்தியு ணீர்சொரிந் தற்று.

(கா - உ.) எ - து.—ஒள்ளிய அறிவினை

உடையோர் அவை

முன்னர் தாமும் தமது ஒள்ளிய அறிவு புலப்படச் சொல்லுதல் எத்தன்மைத்தோ எனின், தானே இனிது வளர்வது ஓர் பயிருக்குக் கட்டிய பாத்தியுள் பருவக் குறை வாராமல் நீர் கோலிச் சொரிந்த

அத்தன்மைத்து எ - று.

(ப - உ.) எ - து.—யாதானும் ஒன்றைச் சொல்லுங்கால் அதனைத் தெரிந்து உணரும் அறிவை உடையார் முன்பு சொல்லுக: அது வளர்வது ஒன்று நின்ற பாத்தியின் கண்ணே நீர் சொரிந்தால் போலும் எ - று.

உணர்வது - அறிவது. மேல் சொல் அறிவார் முன் சொல்லுக என்றார்: அப்பொருள் அறிவார் முன்னர்ச் சொல்லுக என்பதூஉம், அச்சொல்லினாலே தம் கல்வி வளரும் என்பதூஉம் கூறிற்று :... ..(4)

கூ. 5.

ப. 8.

அங்கணத்து ளுக்க வமிழ்தற்ரு றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(கா - உ). எ - து.—பொல்லாத நீர் உகுத்தற்கு உரியது ஓர் அங்கணத்துள் கொண்டு சென்று உகுத்த பாலும் தேனும் முதலிய அமுதம் எத்தன்மைத்து: மற்று அத்தன்மைத்து: யாது எனின் தம்மோடு சிறந்த நல்லறிவினர் 'அல்லார் கூட்டத்து முன்னர் தமது கல்வி விழைதம் கொண்டு ஒழுகல் எ - று.

(ப - உ.) எ - து.—அங்கணத்தின் உக்க அமிழ்தம் போல இகழப் படுவர்: தம்முடைய இனம் அல்லாதார் முன் சொல்லுவார் ஆயின் எ - று.

'கல்வி உடையார் புல்லவையுள் சொன்னல் உளது ஆகும் குற்றம் என்னை என்றூர்க்கு இஃது இகழப்படுவர் என்றது. (5)

கா. 6. ப. 5.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக
நடைதெரிந்த நன்மை யவர். [சொல்லின்

(கா - உ.) எ - து.—எய்தி யிருந்த அவையிடம் அறிந்தும் பெரி தும் நன்மையைக் குறிக்கொள்வது அறிந்தும், பின் ஒன்று சொல் லுக. யார் எனின், சொல் ஒழுங்கினை நூன்முறை யான் அறிந்து

நன்மையினை உடையவர் எ - று.

(ப - உ.) எ - து.—[N. B. இது சுவடியில் எழுதாமல் விடு

பட்டுள்ளது] சொனனல் அதற்கு வரும் குற்றத்தை ஆராய்ந்து நன்மை ஆம் அவற்றை அறிந்து சொல்லுக: சொல்லினது வழக்கு ஆராய்ந்த நன்மை உடையார். இஃது ஆராய்ந்து சொல்லுமாறு கூறிற்று. (6)

கா. 7.

ப. 3.

நன்றென்ப வற்றுள்ளும் நன்றே முதுவருண்
முந்து மொழியாச் செறிவு.

(கா - உ.) எ - து.—இது நன்று என்று சான்றோர் தெரிந்து கைக்கொண்டவற்றுள் எல்லாம் சால நன்றே: யாது எனின், தம்மினும் முந்திற்ற அறிவினை உடைய முதறிவாளர் முன்னர் அவர்

54. அவை அறிதல்

குறிப்பு அறிந்து அன்றித் தாம் ஒன்றினை
வாணமயாகி நின்ற அரணிப்பு எ - று.

முந்து உற்றுச் சொல்

அரணிப்பு ஆவது - நாவை மிகவும் ஒடுக்கிக் கொண்டு இருத்தல்

என்பது.

(ப - உ.) எ - து.—நன்று என்று சொல்லப்பட்ட எல்லாவற்றுள்ளும் மிக நன்று தம்மின் முதிர்ந்தார் முந்து உற்றுச் சொல்லாத அடக்கம் எ - று.

முதுவீர் - தவத்தானும் குலத்தானும் முதிர்ந்தார். இம்மூன்று அவையின் கண் முந்து உற்றுச் சொல்லல் ஆகாது என்றது. இவை மூன்றும் ஆராய்ந்து சொல்லுமாறு கூறினை. (7)

ஈ. 8.

ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன நிழுக்கு.

(கா - உ.) எ - து.—ஒன்று தொட்டுத் தாம் ஒழுகி வருகின்ற ஒழுக்க நிலையின், தவறியது எத்தன்மைத்து: அவ்வளவு அன்றி அதனினும் சாலக் குற்றம் உடைத்து: யாது எனின் தம் கல்வியில் பாத்த அறிவினைத் தாம் ஒன்று சொல்லத் தொடங்கும் போது எதிர் ஏற்று அறிவோர் கூட்டத்து அவை முன்னர் தமது சொல்லின் சொல் இழுக்கம் எ - று.

ஊற்றின் நிலை தளர்ந்து அற்று என்றது - தாம் ஒழுகி வருகின்ற ஒழுக்கின் நிலையின் தவறிய அத்தன்மைத்து என்றது. வியன் புலம் என்பது உயர்ந்த அறிவு என்றது. ஏற்று உணர்வார் என்பது உரை. கலப்பதன் முன்னமே யாது எனக் கருதி இதனை எதிர் ஏற்று அறிவோர் எ - று.

இழுக்கம் என்பது.....

(ப - உ.) எ - து.—ஒரு நெறியின்கண் நின்றார் அந்நிலைமை குலைந்தாற் போல இகழப்படும்: அதன்ற கல்வியைக் கேட்டு அறிய வல்லார் முன்னர்த் தப்புதல் எ - று.

ஏற்று என்பது கேள்வியின் கண் வருதலின் கேள்வி ஆயிற்று மேல் தப்பு வாராமல் சொல்ல வேண்டும் என்றார்: அதனால் வரும் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது. (8)

கா. 9. ப. 7.

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

(கா - உ.) எ - து.—தாம் புல்லறிவாளர் குழாத்துப் புக்கால் தமது சிறந்த சொல்லினை மறந்தும் சொல்லற்க: யார் எனின், நல்லன அறியும் நல்லறிவாளர் அவையின்கண் தமது நன்கு அமைந்த சொல் அவர் செவிக்குச் சொல்லுமாறு சொல்ல வல்ல தூய அமைச்சர் எ - று.

பொச்சாந்து - மறந்து.

(ப - உ.) எ - து.—புல்லியார் இருந்த அவையின்கண் மறந்தும் சொல்லாது ஒழிக: நல்லார் இருந்த அவையின்கண் நல்லதனை இசையச் சொல்ல வல்லார் எ - று.

இது வெளியார் முன் வெள்ளையா சொல்லாது இருத்தல் என்றது.

யிருத்தலால் அவர் முன்பு

கா. 10.

கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிய வல்லா ரகத்து.

ப. 4.

(கா - உ.) எ - து.—பல நூல்களையும் திருந்தக் கற்று அமைச்ச அமைச்சாது கல்வியானது விளங்காநிற்கும்: எவ்விடத்து எனின், தமது சொல்லினை ஒருகா.....எ - று.

(ப - உ.) எ - து.—நூல்களைக் கற்று அவற்றின் பயனும் அறிந்தவர்களது கல்வி விளங்காநிற்கும்: குற்றம் அறச் சொல்லி ஆராய வல்லார் முன்னர்ச் சொல்லின் எ - று

கல்வியின் விழுப்பம் கற்றோர்க்கு அல்லது அறிதல் அரிது ஆகலான் அவர் முன்பு சொல்லுக: அதனானே அக்கல்வி விளங்கும் என்றது. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் அரசானோர் அமைச்சர் தொகையை குறிக்கொண்டு அறிந்த பின், மற்று அவை முன் இருந்து காரியம் பொருள் உறுதி உசைக்க வேண்டும்: ஆதலான் மற்று அதன் பின்னரே அவைக்கண் அஞ்சாமை யதனை அறிவிக்கின்றது மேலை

அதிகாரம்

35. அவை அஞ்சாமை.

(ப - உ.) அவை அஞ்சாமை யாவது அவையின் கண் அஞ்சாது சொல்லுதல். அவை அறிந்தாலும் அஞ்சாது சொல்ல வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

குறள் 1.

ப. 6.

பகையகத்துப் பேடிகை யொள்வா
ளவையகத்

தஞ்சு மவன்கற்ற நூல்.

(கா - உ.) எ - து.—ஒருவன் தான் பகை நடுவுள் புக்க இடத்தும் உறையகத்து ஒடுங்கிய கூரிய தெளிந்த வாளினை ஒக்கும்: யாதெனின், ஒருவன் அவையில் சென்று புக்க இடத்தத் தனது கல்வியால் தெளிந்த கூரிய அறிவு புலப்படாமை அஞ்சி இருப்போன் கற்ற

நூலானது எ - று.

(ப - உ.) எ - து.—பகையின்கண் அஞ்சுமவன் பிடித்த கூர்வாள் போலும்: அவையின்கண் அஞ்சுமவன் கற்ற நூலும் எ - று.

மேல் பயன் இல்லை என்றார்:

டிற்று.

இது பயன் இல்லாதவாறு காட்டிற்று.

(1)

கா. 2.
ப. 8.

உளரெனினு மில்லாரோ டொப்பர்
களனஞ்சிக்

கற்ற செலச்சொல்லா தார்.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்து உயிர் வாழ்க்கை உடையே னும், இறந்தாரோடு ஒப்பர்: யார் எனின், தாம் எய்திய அவைக் களத்தை அஞ்சித் தாம் கற்றனவற்றை அவர் செவிக்கு ஏற்கு மாறு சொல்லுதல் கல்லாதார் எ - று.

(ப - உ.) எ - து.—உளர் ஆயினும் செத்தாரோடு ஒப்பர்: அவைக் களத்து அஞ்சித் தாம் கற்றதனை அவர்க்கு இசையச் சொல்ல மாட்டாதார் எ - று.

இவை ஐந்தும் அவை அஞ்சுதலான் வரும் குற்றம் கூறின (2) கா. 3.
ப. 1.

பகையகத்துச் சாவா ரெளிய ராரிய
ரவையகத் தஞ்சா தவர்.

(கா - உ.) எ - து.—பகை நடுவுள் சென்று புக்க இடத்துத் தமது உயிர் ஒப்பாது மானம் ஒம்பிச் சாகத் துணிவார் உலகத்துள் எளியர் ஆகவும் கூடும்: அவையின் நடுவுள் சென்று புக்க இடத்துச் சிறிதும் அஞ்சாது தெளிந்து அறிவுறுத்தும் அமைவு உடையோர் பெரிதும் அரியர்: எனவே ஆண்மைக்கு அவரும் அறிவுக்கு இவரும் சாலச் சிறந்தார் எ - று.

(ப - உ.) எ - து.—பகையின்கண் அஞ்சாது நின்று சாவார் பெறுதற்கு எளியர்: அவையின்கண் அஞ்சாது சொல்ல வல்லார் பெறுதற்கு அரியர் எ - று.

இஃது அவை அஞ்சாமை அரிது என்பது.

(3) கா. 4.

ப. 2.

கற்றூர்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற மிக்காருண் மிக்க கொளல்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு அறிவு பெரிது உடைய அமைச்சர் ஏதிலார் யாது செயற்பாலது எனின், பலவற்றையும் கற்று வல்ல சான்றோர் கூட்டத்து அவை முன்னர்த் தாம் கற்றனவற்றை அவர் செல்லுமாறு சொல்லுதலும் செய்து மற்று அதுவேயும் அன்றி அவ்விடத்துத் தாம் கற்றனவற்றின் மிக்கார் உளர் எனின் மிக்கனவற்றை இகழாது பெரிதும் குறிக்கொள்க எ - று.

(ப - உ.) எ - து.—தாம் கற்றதனைக் கற்றவர்கண் முன்பே இசையச் சொல்லித் தாம் கற்றதனினும் மிகக் கற்றார் மாட்டு அவர் மிகுதியாகக் கற்ற பொருளைக் கேட்டுக் கொள்ளுதல் அவை அஞ்சாமை ஆவது எ - று.

கேட்டல் காணுமையால் வருதலின் அஞ்சாமை ஆயிற்று. மேல் அரிது என்று கூறிய அவை அஞ்சாமை எத்தன்மைத்து என்றற்கு இத்தன்மைத்து என்று கூறப்பட்டது.

(4) கா. 5.

ப. 3.

கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(கா - உ.) எ - து.—உலகத்துக் கற்றவர் பலருள்ளும் இவர் பெரிதும் கற்றார் என்று அக்கற்றவர் தம்மாலே முன் எடுத்து உரைக்கப்படுவார்: யார் எனின் கற்றோர் முன்னர்த் தாம் கற்றனவற்றை ஏற்கச் சொல்ல வல்லோர் எ - று.

(ப - உ.) எ - து.—கற்றார் எல்லாரினும் கற்றார் என்று சொல்லப்படுவார் தாம் கற்றதனைக் கற்றார் முன்பே அவர்க்கு ஏற்கச் சொல்ல வல்லார் எ - று.

இது கற்றார் என்பதூஉம் அவை அஞ்சாதவரையே என்று கூறப்பட்டது. (5)

கா. 6. ப. 5.

வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

(கா - உ.) எ - து.—பலநாளும் தாம் வாளொடு பயின்று போந்தாரேனும் என்ன பயன்? பகை வந்து உற்ற இடத்து அவ்வாளினால் பணி கொள்ளும் தறுகண்மை உடையர் அல்லாதார்க்கு: மற்று

அப்படியே சிலர் பல நாளும் நூலொடு பயின்று போந்தாரேனும் என்ன பயன்? அந்நூலைத் தாம எதிர் விடுத்து இன்பு உறாது கல்விக்கு உரிய சான்றோர் குழாத்தை அஞ்சுமவர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.—வானிலுல் பயன் என்னை வன்கண்ணர் அல்லாதார்க்கு? அதுபோல நூலிலுல் பயன் என்னை நுண்ணிய அவையின்கண் அஞ்சுபவர்க்கு? எ - று.

இது பிறர்க்குப் பயன் படாமை அன்றித் படாது என்றது.

தமக்கும் பயன்

(6)

கா. 7.

ப. 7.

கல்லா தவரிற் கடையெனப
கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(கா - உ.) எ - து.—மற்று இவ்வாறு அன்றிக் கற்று அறிவு இல்லாத மூடரினும் சாலக் கடை என்று சொல்லுப சான்றோர்: யாரை எனின், கற்க வேண்டுவன கற்று அவற்றின் கருத்து அறிந்து வைத்துப் பின்னும் கல்வியால் பெரிதும் நல்லோரது குழாத்தைக் கண்ட இடத்து அஞ்சுமவர்களை எ - று.

(ப - உ.) எ - து.—கல்லாதவரினும் கடை என்று சொல்லுவார் உலகத்தார்: கற்று அறிந்து வைத்தும் நல்லோர் இருந்த அவையின்கண் சொல்லுதல் அஞ்சுவாரை எ - று.

இது கல்லாதவரினும் இகழப்படுவர் என்றது. (7)

கா. 8.
ப. 10.

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

(கா - உ.) எ - து.—இக்குற்றம் தங்குதல் இன்றி அவை முன்னர்ச் சென்ற இடத்துத் தாம் கற்று வல்லவை சொல்லும் கூறுபாடு அறிவதும் செய்து மற்றும் அவைக்கு உரித்து அல்லதனை மறந்தும் அவர்வயின் சோர விடுவது இலர்: யார் எனின் கல்வி மிகுதியால் சொல்லின் தொகை அனைத்தும் தூசு அற உணர்ந்த தூய்மையினை உடையோர் எ - று.

(ப - உ.) எ - து.—தப்பிலல் வரும் குற்றத்தை வகை அறிந்து கற்று வல்ல அவையின்கண் அச்சத்தினால் சோர்வுபடச் சொல்லார்: சொற்களின் தொகுதியை அறிந்த தூய்மையை உடையவர் எ - று.

மேல்கூறிய வாற்றால் கற்றவர்கள் தப்பச் சொல்லார் என்று கற்கல்வியால் பயன் கூறிற்று.

கா. 9.
ப. 4.

பல்லவை கற்றும் பயனிலரே
நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

(கா - உ.) எ - து.—பலவற்றுள் கற்று உணர்க்தும் அவற்றுள் ஒரு பயனும் இலர்: யார் எனின் நல்லறிவாளர் குழாத்துச் சென்ற இடத்தும் கல்வி நன்மை அலர் செவிக்கு எற்குமாறு சொல்லுதற்கு அல்லாதார் எ - று.

(ப - உ). எ - து.—பல நூல்களைக் கற்றாலும் ஒரு பயன் உடையர் அல்லர்: நல்லவையின்கண் கன்றுக அவர்க்கு எற்கச் சொல்ல மாட்டாதார் எ - று.

இஃது அவை
என்றது.

அஞ்சுவார் கற்ற கல்வி பிறர்க்குப் பயன் படாதது

(9)

கா. 10.

ப. 9.

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(கா - உ.) எ - து.—அரசர்க்கு அமைச்சாய் உள்ளார் முன்னமே தாம் கற்கும் இடத்துக் கல்வி நெறியின் அளவு அறிந்து கற்பார் ஆக: என்னை எனின், பின்பு தாம் சென்று எய்திய அவையினை அஞ்சாது மற்று அவர் கேட்டவற்றிற்கு மாற்றம் வண்மையின் வழங்குதல் பொருட்டு ஆக எ - று.

இதனால் என் சொல்லியவாறோ எனின், அரச நீதியும் அமைச்ச நீதியும் அறநெறிக்கு உரியவும் புரவியும் களிறும் பொருந்துவ குறிப்பவும் பிறவும் ஆகிய வரம்புக்கு ஏற்பன கற்க என்று இங்குச் சொல்லிய அன்றிப் புல்லிய கற்பின் அவை அரசர்க்கும் அவைக்கும் அடாதன எ - று.

(ப - உ.) எ - து.—அவை அஞ்சாது மறு மாற்றம் சொல்லுதற்காக நெறியானே அளவுகூறு நூல்களை அறிந்து கற்க எ - று.

அளவு - ப்ரமாணம். அது கூறும் நூல்கள் ஆவன: மீமாம்ஸை முதலான நூல்கள். கல்வியாவது மெய் ஆராய்ச்சியான நூல்களைக் கற்றலும் வேதவேதாந்தம் கற்றலும், உழவும் வாணிகமும் கற்றலும், படை வழங்கல் ஆகிய தண்ட நீதி கற்றலும் என நால் வகைப்படும் என்பது களடிஸ்ரீ மதம். அந்த நான்கினும் பின் கூறிய இரண்டும் சொல்லாண்மை யன்மையானும், வேதம் கேட்டல் சொல்லாதே அமைதலானும், அவையிற்றைக் கூறாது தர்க்கம் கற்றாற்கு அல்லது

36. (கா.)

நாடு.—(பரி.) பொருளியல் 156

மறுமாற்றம் சொல்லுதல் அரிது ஆதலின்
என்று இது கூறப்பட்டது.

அதனைக்கற்க வேண்டும்
. . . (10)

(கா - உ.) இனி மற்று இந்நீதி அரசரும் அமைச்சரும் கூடி வாழினும், தாமே பரிந்து கொள்ளும் நாடு அன்றி இயல்பிலது.....
.....நாடு இவ்வாறே வேண்டும் என்பதனால் மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

36. (கா.) நாடு.—(பரி.) பொருளியல்.

(ப - உ.) பொருள் இயல் ஆவது: பொருளின் பகுதி கூறுதல். அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்படப் பொருள் ஆகுதற்கு இடம் ஆகிய நாட்டு இயல்பு ஓர் அதிகாரத்தானும், அந்நாட்டிற்கு ஏமம் ஆகிய அரண் இயல்பு ஓர் அதிகாரத்தானும், அவ்விடங்களில் ஆக்கப்பட்ட பொருள் இயல்பு ஓர் அதிகாரத்தானும், பொருளினால் உண்டாக்கப் பட்ட படை இயல் இரண்டு அதிகாரத்தானும் கூறப் பட்டது. இம்மூ அமைச்சர் செய்யப்படுதலின் அதன்பின் கூறப் பட்டது: அவற்றுள் நாடு ஆவது - நாட்டு இலக்கணம் கூறுதல்.

கா. 1. ப. 1.

வருபுனலும் வாய்ந்த மலையும்

மிருபுனலும்

வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(கா - உ.) வருபுனல் என்றது கூடிக்கூடிப் பல இடத்தும் மலை முதலாக்கக் கடல் சூறு ஆக வழித் தொடர்பு அறுது வரு புனலுடைய ஆறுகளும்: வாய்ந்த மலை என்றது வாய்ப்புடை மலைகளும்: இரு புனலும் என்றது சிறிது கல்லிய இடத்துக் கீழ் நீரும் மேல் தெளியும் குளநீரும்: வல் அரணும் என்றது பல இடத்தும் தனக்கும் தன் படைத்தலைவர்க்கும் தனது நாட்டுக் குடிகளுக்கும் சென்ற இடத்துப் பிறர் நலியாது சேர்ந்து நீங்குதற்கு உரிய அரண்களும்: இனி நாட்டு எல்லைக்கண் மாற்றூர் வருதற்கு அரிய புலியும் எண்கும் மாவும் பயிலும் அடர் பெருங்காடும்: மிடை தரும் கான்யாறும் இங்குச் சொன்ன இவை அனைத்தும் மாசு அறச் சிறப்பது நாடு எ - று.

(ப - உ.) எ - து.—ஆற்று நீரும் வாய்ந்த மலையும் நிலைநீரும் ஊற்று நீரும் வலிய அரணும் நாட்டிற்கு அங்கம் எ - று.

நாடு ஆக்கும் இடத்து யாறு ஒழுகும் இடத்தினையும், பயன் படும் மலையினையும், எரி ஆக்கும் நீர் நிறுத்தல் ஆம் இடத்தினையும், குன்று கல்லி நீர் உண்டாக்கல் ஆம் இடத்தினையும், அரண் ஆக்கும் இடத்தினையும் கண்டு அவ்விடத்தை நாடு ஆக்குக: அவை நாட்டிற்கு

உறுப்பு ஆகல்லான் என்றவாறு ஆயிற்று. இவ்வைந்து உறுப்பும் குறையாமல் வேண்டும் என்றது. (1)

கா. 2. ப. 9.

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்

சேரா தியல்வது நாடு.

(கா - உ.) எ - து.—மிக்க பசியும், நிலத்து இயல்பால் உளது ஆகிய நீங்காப் பிணியும், தம்மைச் செறுக்கும் பகையும் சோராது நன்கு கடைப்பது நாடு எ - று.

(ப - உ.) எ - து.—மிக்க பசியும், இடையறாத பிணியும், ஒறுக்கும் பகையும் சோராது இயன்றது நாடு எ - று.

இது சேர்தல் ஆகாதன இவை என்று கூறிற்று. (2)

கா. 3.

ப. 8.

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா நாடென்ப நாட்டிற் றலை.

(கா - உ.) எ - து.—வேற்று அரசரால் கேடு அறியாது யாதானும் ஒருவாற்றால் கெட்ட இடத்தும் பின்னும் விளைவளம் குறைபடாதது ஆகிய நாடு யாது? மற்று அது நாடுகளில் பெரிதும் தலைமைப் பாடு உடையது எ - று.

(ப - உ.) எ - து.—கெடுதல் அறியாதாய்க் கெட்டது ஆயினும் பயன் குன்றாத நாட்டினையே எல்லா நாடுகளினும் தலையான நாடு என்று சொல்லுவர் எ - று.

மேல் கூறிய விட்டில் முதலாயினவற்றுல் கெட்டது ஆயினும், பின்பும் ஒருவாற்றுல் பயன்படுதல் ஆவது தலையான நாடு என்றது.(3)

கா. 4.

:

ப. 4.

தள்ளா வினையுளுந் தக்கோருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு.

(கா - உ.) எ - து.—மாருது விளையும் விளைச்சலும், தகுதியால் சிறந்த கல்வியும் ஞானமும் உடைய சான்ருேரும், நாளும் யாவர்க்கும் சயக் குறைபடாத செல்வம் உடையோரும் செறிந்து இயல்வது

நாடு எ - று.

(ப - உ.) எ - து.—தப்பாமல் விளையும் நிலங்களும், தகுதி உடையாரும், தாழ்வு இல்லாத செல்வரும் சேர்வது நாடு எ - று.

தள்ளா வினையுள் - மழை இல்லாத காலத்திலும் சாவி போகாத நிலம். தக்கார் - குலத்தாலும் குணத்தாலும் அமைந்தார். தாழ்வு

இல்லாத செல்வர் - பிறரால் இகழப்படாத செல்வர்: பிறர்க்கும் பயன்படும் செல்வர் என்றது. இம்மூன்றும் எல்லா உயிர்க்கும் ஆகின் சேரவேண்டும் என்று கூறப்பட்டது. (4)

கா. 5.

ப. 3.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளத்தரு நாடு.

(கா - உ.) எ - து —நாடு என்று சொல்லுவர் பெரியோர்: யாதினை எனின் புறத்து ஒன்று போய்த் தேட வேண்டாத பல வகைப் பட்ட விளைவளம் சிறந்த நாடுகள்: மற்று அல்லவை யாது எனின் நிலத்து விளையும் வளம் புறத்துப் போய்த் தேடுமாறு விளையும் நாடு எ - று.

(ப - உ.) எ - து.—நாடு என்று சொல்லுவர் தேட வேண்டாத வளத்தினை உடைய நாட்டை; நாடு அல்ல என்று சொல்லுவர் தேடினால் வளம் தருகின்ற நாட்டை எ - று.

இஃது எல்லா நிலத்திலும் உள்ள பண்டம் கலத்தினால் ஆதல் காலினால் ஆதல் தன்னிடத்தே உடைத்தாதலும், தன் நிலத்தில் உள்ள பண்டத்தை மிகுதியாக உடைத்தாதலும் வேண்டும் என்றது. (5)

கா. 6.

ப. 7.

பெரும்பொருளாற் பெட்டக்கதாகி யருங்கேட்டா லாற்ற விளைவது நாடு.

(கா - உ.) எ - து.—அவ்விடத்து வாழ்வார் பலரும் பெரும் பொருள் செல்வருமாய்ப் பிறநாட்டு உள்ளோரும் தம்மை நாள்தோ றும் விரும்பத் தக்கதுமாய்த் தம் அரசாலும் பிறவாற்றாலும் எந் ஞான்றும் கேடு அறியாதுமாய் அளவு இறந்த விளைச்சலை உடையது யாது அதுவே நாடு ஆவது எ - று.

பெட்டக்க என்றது விரும்பத்தக்க என்றது. அருங்கேட்டால் என்றது கேடு அரிய என்றது.

(ப - உ.) எ - து.—பெரும்பொருளாலே விரும்பத்தக்கது ஆகிக் கேடு அரிது ஆகலோடே மிகவும் விளைவது நாடு எ - று.

விரும்பத் தக்கது என்றமையால் பெரும் பொருள் ஆவது - நெல்லும். கேடு ஆவது விட்டில், கிளி, கால்வாய், பெரும்புயல். இது மேல் சொல்லையும் சொல்லாதனவும் தொகுத்துக் கூறிற்று. (6)

கா. 7.

ப. 6.

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

(கா - உ.) எ - து.—மறப்படை மாக்கள் பெருகக் கூடும் கூட்டமும், செல்வம் உடையோர் தம் செல்வத்தைத் தேய்க்கும் உட்பகையும், நாடுபற்றி வாழும் பெருகெறி வேந்தனைக் காடுபற்றி நிற்கச் செய்யும் கொல்லினைக் குறும்பும் இல்லது யாது? மற்று அதுவே நாடு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—பலவாய்த் திரளும் திரட்சியும், பாழ் ஆக்கும் உட்பகையும், வேந்தனை அலைக்கின்ற தொழிலை உடைய குறும்பரும் இல்லாதது நாடு.

பாழ் ஆக்கும் உட்பகை ஆவது - நாட்டுத் தலைவராயினும் அதிகாரியாயினும் நாட்டைக் கெடுக்குமவர்கள். இவை ஆராய்ந்து கடிய வேண்டுதலின் இது கூறப்பட்டது. (7)

கா. 8.
ப. 9.

பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவர்க்
கிறையொருங்கு நேர்வது நாடு.

(கா - உ.) எ - து.—கோல் கீழ்வாழும் குடிகள் ஆயினும் யாதானும் ஒரு காரணத்தான் முன் இறுக்கும் ஆறு அன்றிப் பெரும் பொருள் பாரம் தங்கள் மேல் வாவேண்டும் காலத்தும் அதனைப் பொறுத்தும், அரசனைப் பாதுகாத்துப் பின்னும் அரசற்கு ஆறில் ஒன்று ஆக என்றும் இறுத்தற்கு உரிய இறையினையும் ஒன்றும் குறைபடாமல் ஒருங்கு உடன் தொகுத்து இயல்வது யாது? மறறு அதுவே நாடு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—குடிமை செய்தல் பல காலத்திலே பலவரினும் அதனைப் பொறுத்து நிச்சயித்த கடமையை அரசனுக்கு

ஒருங்கு கொடுக்க வல்லது நாடு எ - று.

தளர்ச்சியைச் செய்தலின் பொறை ஆயிற்று. குடிமை ஆவது கடமை ஒழிய வரும் அவை. இதனானே குடிமக்கள் பண்பு உடையராக வேண்டும் என்பது கூறிற்று. (8)

கா. 9.

ப. 2.

பிணியின்மை செல்வம் விளைவின்ப

மேமம

மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(கா - உ.) எ - து.—நிலனும் நீரும் சோறும் முதலியவற்றின் இனிமைகளானே பிணி பெரிது இன்மையும், பலர் வழிச் செல்வம்

பெரிது உடைமையும், வேட்பன எல்லாம் விளைந்து செல்கின்ற விளைநுகர் பொருளினும், நுண்ணறிவு இன்பம் ஆகிய இன்பமும் ஒரு காள்போல் எந்நாளும் அரச.....ரோமமும் என்னும் இவை ஐந்தும் நாட்டிற்கு அணி எ - று.

(ப - உ.) எ - து.—நோய் இன்மையும், செல்வம் உடைமையும், விளைவு உடைமையும், காவல் உடைமையும், என்று சொல்லப்பட்ட இவை ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று சொல்லுவர் எ - று.

செல்வம் - பொன்னும் பசுவும் பலவாயின மிகுதல்; விளைவு ஆவது - பல தானியங்களும் பொலிவு உடைமை; இன்பம் ஆவது - கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் இன்பு உறப்படும் பொருள்களை உடைமை; காவல் ஆவது மாற்றாசனுலும் தன் அரசனுலும் கலிவு இன்மை. மேல் நாட்டிற்கு அங்கம் ஆவன கூறினர்: இஃது அழகு ஆவன கூறிற்று. (9)

கா. 10. ப. 10.

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(கா - உ.) எ - து.—அவ்வண்ணமே மேற்சொல்லி வந்த நன்மைகள் எல்லாம் முற்றுப் பெற்ற இடத்தும் யாதானும் ஒரு பயன் இலதே: யாது எனின் கொற்றவன் காவல் முற்றுப் பெறுதல் இல்லாத நாடானது எ - று.

(ப - உ.) எ - து.—மேல் கூறிய வாற்றுன் எல்லாம் சேர்ந்தது ஆயினும் பயன் இல்லையாம்: வேந்தனது அமைதியை உடைத்து அல்லாத நாடு எ - று.

இது நாட்டிற்கு அரசனும் பண்பு என்றது.

உடையன் ஆகவேண்டும்

(10)

(கா - உ.) இங்ஙனம் பொது வகையான் நாட்டு அரண் கூறிப் பின் மன்னர்பதி அரண் கூறலும் இயல்பு ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

37. அரண்.

(ப - உ.) அரண் ஆவது - அரண் இலக்கணம் கூறுதல்.

மேல் நாட்டு இலக்கணம் கூறினார் நகர் இலக்கணம் அதன் பின் இது கூறப்பட்டது.

கூறுகின்றார் ஆகலின்

கா. 1.

ப. 6.

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(கா - உ) எ - து.—பகை வேந்தர் முற்றி இருந்தும் கொளற்கு அரிது ஆய், அகத்தோர் நெடி-து ஆண்டு இருப்பினும் உணற்கு எளிது ஆகப் பெரிதும் ஈட்டிக் கொண்ட நெல் அரிசி கொள்ளுப்பயிர் முதலிய உணவு பொருள்களையும் உடைத்து ஆய், நாற்பெருஞ் சேனையும் விட்டு உலாவுதற்கு வேண்டும் வீதியும் பூவும் சாந்தும் நீரும் நிழலும் பொதுவியர்க்கு உரிய மகளிரும் பிறவும் உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

(ப - உ.) எ - து.— பகைவரால் கொள்ளுதற்கு அரிது ஆய்த் தன் அகத்தே அமைக்கப்பட்ட உணவையும் உடைத்து ஆய், அகத்து உறைவார்க்கு நிற்றற்கு எளிது ஆகும் நீரையும் உடைத்து ஆய் இருப்பது அரண் ஆவது எ - று.

எனவே புறத்தார்க்கு நிற்றற்கு அரிய நீரை உடைத்து ஆக வேண்டும் என்றவாறு ஆயிற்று. அஃதாவது அரணுக்கு நீங்குகிற்பது ஓர் ஆற்றினின்றும் பிறர்க்குத் தோற்றுமல் சுருங்கையாகப் படுத்து உள்ளே நீர் புகுதலும், மதிலை முற்றினோர்க்கு அரிய நீர் இன்மையும், இன்னும் அதனை வெற்றிலையும் பூவும் உள்ளே உண்டாக்குதலும் பிறவும் ஆம். (1)

கா. 2. ப. 8.

முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

(கா - உ.) எ - து.—கொற்ற வேந்தர் புறம் கோலிக்கொண்டும், அங்ஙனம் கோலிக்கொண்டு இராது புறத்து நின்று பொருதும், சென்று குத்தியும், அமைறப்படுத்தும் அதனைப் பற்றுவேம் என்று முயன்றாலும் பற்றுதற்கு அரியது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

(ப - உ.) எ - து —சூழ விட்டும், சூழ விடாதே ஒரு பக்கம் முறிய எறிந்தும், அரண் உள்ளாரைக் கீழ் அறுத்தும் இம்மூன்றினாலும் கொள்ளுதற்கு அரியது அரண் ஆவது எ - று.

அரண் கொள்வார்க்கு உபாயம் இம்மூன்று அல்லது இம்மூன்றினாலும் கொள்ளப்படாமை வேண்டும் என்றது.

இல்லை:

(2) கா. 3.

ப. 9.

முற்றூற்றி முற்றி யவரையும் பற்றூற்றிப் பற்றியார் வெல்வ தரண்.

(கா - உ.) எ - து.—முற்றும் வெற்றி அரசர் அவ்வரண் யாம் கொள்வேம் என்று அதன் புறத்து வந்து சூழ்ந்து கொண்ட அவரை

யும், முன் கடையவர் வேய்வர, வரத்து ஆற்றி எவ்வாற்றானும் தன்னைப் பதியாகப் பற்றி வாழ்வோர் பற்றலரை வெல்லுமாறு இருப்பது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—சூழ விடுதலைச் செய்து மதிலைச் சூழ்ந்து பொருவாரையும் அரணையும் பற்றுதலைச் செய்து மதில் தலையைப் பற்றியார் வெல்வது அரண் ஆவது எ - று.

இஃது அரண் இல்லாமையே அன்றி என்றது.

வெல்லவும் வேண்டும்

(3)

கா. 4.

ப. 4.

மூனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறெய்தி மாண்ட தரண்.

(கா - உ.) எ - து.—புறத்து அரசன் கடைப் புறத்துப் போர் தொடங்கிய அளவிலே தலை சாய்ந்து ஓடுமாறு அகத்தோர்* இயந்திரம் முதலிய கல்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும் வில் பொறியும் வேலும் வெந்தீவட்டும் காய்ச்சிய மணலும் கவவு இருப்பு உலக்கையும் வீச்சுறு தூண்டிலும் விசைத்தெறி கவணும் ஆகிய வினைத்தொழில் உடைய மாட்சிமைப் பட்டது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

முனை முகத்து என்றது கடைப் புறத்து வந்து போர் தொடங்கிய என்றது. வினைமுகத்து என்பது—போர்த் தொழில் இடத்து என்றது. வீறு எய்தி என்றது விருப்பம் உற்று என்றது.

(ப - உ.) எ - து.—முந்து உற்ற முகத்தினை உடைய பகைவர் கெடும்படியாக வினை செய்யும் இடத்து வெற்றி எய்தி மாட்சிமைப்

பட்டது அரண் ஆவது எ - று.

அஃது ஆவது அட்டாலகமும் மதில் பொறியும் முதலாயின மதில் தலையில் அமைத்தல். இது மதில் தலையில் கருவிகள் அமைக்க வேண்டும் என்றது. (4)

கா. 5.

ப. 1.

ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற் போற்று பவர்க்கும் பொருள்.

(கா - உ.) எ - து.—சோர மன்னரைப் போர் ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் ஆதலால் அதனை இகழ்தல் ஆகாது: இனி இங்ஙனம் போர் ஆற்றாது அஞ்சி அகம்புக்குத் தம்மைப் பேணிக் கொள்பவர்க்கும் அரண் பொருள் எ - று.

---

* சிலப்பதிகாரம் அடைக்கலக் காதை உ0எ-உ0க வரி ஒப்புமை காண்க.

(ப - உ.) எ - து.—வலி ஆற்றுவார்க்கும் அரண் பொருள் ஆம்: வலிவு இன்மை யான் அஞ்சித் தம்மைக் காப்பார்க்கும் அரண் பொருள்: ஆதலால் அதனைச் செய்ய வேண்டும் எ - று.

வலி உடையோர்க்கும் ஒரு காலத்தே வேண்டுதலின் வேண்டும் என்றார்: இஃது அரண் செய்ய வேண்டும் என்றது. (5)

கா. 6. ப. 10.

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி

யில்லார்க ணில்லா தரண்.

(கா - உ.) எ - து.—கீழ்ச் சொன்னவும் பிறவும் ஆகிய எனைத்து வகைப்பட்ட மாட்சிமை உடைத்தாகிய இடத்தும், புறத்தவர் திறத்துப் பொழுது தோறும் வேறுபடச் செய்யும் வினையினது மாட்சிமை இல்லாதார் மாட்டு நில்லாது அரண்: எனவே அவ்வினைகள் ஆங்கு ஆங்குச் செய்து தெவ்வரை ஓட்டும் திறன் இல்லாதார்கண் உளதே னும் அழிந்து விடும் எ - று.

(ப - உ.) எ - து.—சொல்லப் பட்ட எல்லா மாட்சிமையும் உடைத்து ஆயினும் வினையின்கண் மாட்சிமை இல்லாதார் மாட்டு அரணால் பயன் இல்லை எ - று.

இது வினை செய்ய வல்லாரும் வேண்டும் என்றது. (6)

பரி. பா - மி. "னில்ல தரண்".

கா. 7.
ப. 5.

சிறுகாப்பிற் போரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

(கா - உ.) எ - து.—சிறு படையால் காக்கும் காப்பு அமைவு உடைத்துமாய், அகத்து வாழ்வோர்க்குப் பெரிதும் இடப்பாடு உடைத்துமாய்ப் புறத்துப் பகையினது உள்ளக் கோட்பாட்டினை ஒருங்கு அழிப்பது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—காக்க வேண்டும் இடம் சிறிது ஆய் மதில் அகலம் பெரிய இடத்தை உடைத்தாய் மதிலை உற்ற பகைவரது மிகுதியைக் கெடுப்பது அரண் ஆவது எ - று.

சிறுகாவல் ஆவது - ஒரு பக்கம் மலை ஆயினும் காடு ஆயினும் நீர் ஆயினும் உடைத்து ஆதல். இஃது இடம் பெரிது ஆகவும் காவல் சிறிது ஆகவும் வேண்டும் என்றது. (7)

கா. 8. ப. 3.

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர னென்றுரைக்கு நூல்.

37. அரண் 161

(கா - உ.) எ - து.—நோக்குதற்கு அரிய உயர்வு உடைமையும் அதற்கு அரிய அகலம் உடைமையும் குத்துதற்கு அரிய திட்பம் உடைமையும் எ.....மை வினையான் அருமை உடைமையும் என்னும் இந்நான்கினது முற்றுப்பேறு உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—உயர்ச்சியும் அகலமும் திண்மையும் கிட்டு

தற்கு அருமையும் என்னும் நான்கின் அமைதியை உடையது மதில்

என்று சொல்லும் இலக்கணம் எ - று.

அருமை ஆவது - முதலியும் கிடங்கும்* அடியொட்டியும் முதலாயினவற்றால் கிட்டுதற்கு அருமை. அமைவு என்றது இதனின் மேல் செய்யப்படாது என்னும் அளவு உடைத்து ஆதல். திண்மை என்றது கல்லும் இட்டிகையும் இட்டுச் செய்தல். இஃது அரண் செய்யும் ஆறு கூறிற்று.

(8)

கா. 9.

ப. 2.

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற் காடு முடைய தரண்.

(கா - உ.) எ - து.—மணி நீரும் என்றது பளிங்கு போலத் தெளிந்து ஆழும் உடைமையும் வற்றாமையும்: மண்ணும் என்றது நாற்பெருஞ் சேனையும் அகத்து அடி இடுதற்கு அரிய இடமும்; மலையும் என்றது மறவு அதன் புறத்து முற்றி ஓங்கித் தலை மயக்குறுத்து ஆங்கு அதன் புறம் சூழ்ந்து ஓங்கிப் பாய்ந்த தூங்கு இருள் காடும் வகை அறப்பெற்ற இவை நான்கினையும் உடையதே அரண் ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—தெளிந்த நீர் ஆயினும் நிழலும் நீரும் இல்லாத வெறுநிலம் ஆயினும் மலை ஆயினும் அழகிய நிழலினை உடைய காடு ஆயினும் உடைய இடம் அரணம் எ - று.

மலை அரண் என்றும் காடு அரண் என்றும் கூறுப. சேற்று

அரண் என்பதும் ஒன்று உண்டு. அதுவும் இவற்றினுள் அடங்கும். இஃது அரண் செய்யும் இடம் கூறிற்று. (9)

கா. 10.

ப. 7.

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு

நல்லா ளுடைய தரண்.

(கா - உ.) எ - து.—கீழ்ச்சொல்லிப் போந்த பரிசே அரண்

இயல் பொருளும் அகத் ய அமை பொருளும் பிறவும் ஆகிய எல்லாப் பொருளகளும் இனிது அமைவு உடைத்தாய்ப் புறத்து அகல்

* சீவகசிந்தாமணி 2768-ம் செய்யுளுரை காண்க.

சேனைத் தொத்து அறிவினைக்குச் சினத்து இடன் உதவும் திருந்திய வீரரையும் உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—எல்லாப் பொருள்களையும் உடைத்தாய், உற்ற இடத்து உதவ வல்ல நல்ல வீரரையும் உடையது அரண் எ - று.

இது நல்ல வீரரும் வேண்டும் என்றது. எல்லாப் ஆவது நுகர வேண்டுவனவும படைக் கலங்களும்.

பொருளும்

(10)

(கா - உ.) இனி இவ்வாறு இருவகை.....மினிது வாழ்ந் தார் ஆக்கல் ஆவது நெறி வழுவாமல் பொருள் செய்து கொண்டிருப் பின் அன்றே: அதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக் கின்றது மேலை அதிகாரம்.

38. பொருள் செயல்வகை.

(ப - உ.) பொருள் செயல்வகை யாவது பொருள் தேடும் ஆறும், அதனால் பயன் கொள்ளும் ஆறும் கூறுதல். இது நாடும் நகரமும் உடையார்க்கு உளது ஆவது என்னூர் ஆகலின் அதன் பின் கூறப் பட்டது.

கா. 1.

ப. 3.

அறனீனு மின்பமு மீனுந்
திறனறித்து

தீதின்றி வந்த பொருள்.

(கா - உ.) எ - து.—அறத்தையும் தரும்: அறத்தினால் வழுவாத இன்பத்தையும் தரும்: யாது எனின்? நெறியினால் ஈட்டி வேறு ஒரு குற்றம் இன்றி வரல் உற்ற பொருள் ஆனது எ - று.

(ப - உ.) எ - து.—அறத்தையும் பயக்கும்: இன்பத்தையும் பயக்கும்: திறன் அறிந்து பிறர்க்குத் தீமை பயத்தல் இன்றி வந்த பொருள் எ - று.

பொருளால் பயன் அறம் செய்தலும் இன்பம் நுகர்தலும் அன்றே? அவ்விரண்டினையும் பயப்பது நியாயம் ஆகத் தேடின பொருள் ஆதலின் பொருள் தேடுங்கால் நியாயத்தோடு தேட வேண்டும் என்றது. (1)

கா. 2.

ப. 9.

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(கா - உ.) எ - து.—நெறியினால் ஈட்டிய பொருள் என்று சொல்லப்படுகின்ற கெடாத விளக்கானது பிறவியில் இனிய மறுமை உலகமும் பிறவி நீங்கிய முத்தியும் தாம் கருதிய வண்ணம் பெறல் ஆவதும்

38. பொருள் செயல்வகை

செய்து கொலை, களவு, கள், காமம், பொய், சினம், சூது முதலிய வற்றில் செல்லுகின்ற அறியாமை ஆகிய இருளை நீக்கி நன்மை பயக் கும் எண்ணிய தேயத்து எய்துமாறு எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் ஆகிய மெய்யான ஒளி எண்ணப் பட்ட தேயம் எல்லாவற்றினும் சென்று இருள் அறுக்கும் எ - று.

இருள் ஆவது ஒளி இல்லாத இடம். பொருள் உண்டாகப் புகழ் உண்டாம்: புகழ் உண்டாக ஒளி எங்கும் பரக்கும் என்றது. அரசன் பொருள் உடையன் ஆயின் தான் கருதின தேயம் எல்லா வற்றினும் தன் ஆணை நடக்கும் என்றும் ஆம். (2)

கா. 3.

ப. 7.

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு.

(கா - உ.) எ - து.—இவ்வருள் என்று சான்றோரால் சொல்லப் படுகின்ற அனைத்து உயிர்க்கும் ஒத்தது ஓர் அன்பு ஈன் குழவியா னது பின்பு பொருள் என்று சொல்லப்படுகின்ற செல்வம் யாது: மற்று அந்தச் செவிலித்தாயால் உளது ஆம் எ - று.

(ப - உ.) எ - து.—அறம் செய்தற்குக் காரணம் ஆகிய அன்பி னின்றும் தோற்றின அருள் ஆகிய குழவி பொருள் ஆகிய கல்ல செவிலித்தாய் வளர்த்தலாலே உண்டாம் எ - று.

மேல் பொருள் உடையாற்கு அறம் எளிது என்றார்: இது பெறும் ஆறு என்னை என்றார்க்கு அன்பும் அருளும் இயல்பு ஆக உடையர் ஆயினும் பொருள் இலர் ஆயின் அவற்றால் பயன் இல்லை ஆம்: ஆதலால் பொருள் உடையாற்கே அறம் செய்யல் ஆவது என்று கூறப்பட்டது. (3)

அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

(கா - உ.) எ - து.—இப்படி நெஞ்சத்து அன்போடும் நல்ல அருளோடும் மருவி வாராத பொருளினது ஆக்கத்தை எஞ்ஞான்றும் பொருந்தாராய் நழுவ விட எ - று.

(ப - உ.) எ - து.—அருளோடும் அன்போடும் வாராத பொருளான் வரும் ஆக்கத்தைப் பொருந்தாது போக விடுக எ - று.

எனவே பொருள் ஈட்டுங்கால் பிறர் வருத்தத்துக்குப் பரியாதும் பயின்றூர் மாட்டுக் காதல் அழியவும் பொருள் தேடுதலைத் தவிர்க என்றவாறு ஆயிற்று. (4)

கா. 5.

ப. 6.

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

(கா - உ.) எ - து.—முறையின் வருவது ஆகிய பொருளினை முதிர் சுட்டினவர்க்கு முன்பு கூறிய அறமும் இன்பமும் என்று சொல்லப்பட்ட எனைய இரண்டும் ஒரு தன்மைப்பட எய்தும் எ - று.

(ப - உ.) எ - து.—ஒள்ளிய பொருளை முற்ற உண்டாக்கிறற்கு ஒழிந்த அவ்வறமும் காமமும் ஆகிய பொருள் இரண்டும் எளிய பொருள் ஆக எய்தல் ஆகும் எ - று.

மேல் சில பொருள் உடையார்க்குப் பொருள் எய்துதல் வருந் தாமை வரும் என்றார்: அஃது அறமும் இன்பமும் வந்தால் எய்தல் ஆம் என்று கூறிற்று. (5)

கூ. 6.

ப. 5.

குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்
றுண்டாகச் செய்வான் வினை. [தொன்

(கா - உ.) எ - து.—தான் குன்றின் மீது ஏறிப்போய் இனிது இருந்து நிலத்துப் பொருகின்ற யானைப் போரினை அஞ்சாது கண்டு இன்பு உறூஉம் அதுதன்மைத்து: யாது எனின், தன் மாட்டு ஒரு பொருள் உளது ஆகச் செய்து கொள்பவனது வினையும் எ - று.

எனவே பாவமும் பகையும் தன்னை நணுகாமல் பரிகரித்து இனிது வாழும் பொருள் உடையோன் என்பது பொருள் ஆயிற்று

என அறிக.

(ப - உ.) எ - து.—குன்றின் மேலே இருந்து யானைப் போர் கண் டால் போலும்; தன் கையகத்து ஒரு பொருள் உண்டாகக் கொண்டு செய்யத் தொடங்கினவன் செய்யும் வினை எ - று.

பொருள் உடையார்க்குத் தாம் வருத்தம் உறுமல் பிறரை யினை செய்வார் ஆகவே கண்டு இருக்கலாம் என்றது. (6)

கா. 7.

ப. 10.

இல்லாரை எல்லாரு மெள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(கா - உ.) எ - து.— கைப்பொருள் இல்லாதாரை யாவரும் இகழ்வர்: கைப்பொருள் உடையோரை யாவரும் இன்பம் உற்றுச் சிறப்புச் செய்வார்கள் எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் இல்லாதாரை எல்லாரும் இகழ்வர். பொருள் உடையாரை எல்லாரும் சிறப்புச் செய்வர் எ - து.

சிறப்பு எய்துதலும் இதனானே வரும் என்றது.

(7)

கா. 8.

ப. 1.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு மெஃகதனிற் கூரிய தில்.

(கா - உ.) எ - து.—நெறியிலல் இயற்றி ஈட்டுக பொருளை: என்னை எனின் வேந்தர் ஆயினும் பகைவரை வெல்லும் கருவியானது இதனின் கூரியது பிறிது இல்லை: அதனால் பொருள் வழங்கச் செறுநர் சினம் தணிந்து பெரிதும் இனியர் ஆவர் எ - று.

(ப - உ.) எ - து.—பொருளை உண்டாக்குக: பகைவரது பெருமிதத்தை அறுக்கல் ஆம் கருவி அப்பொருள் போலக் கூரியது பிறிது இல்லை எ - று.

இது பொருள் ஈட்ட வேண்டும் என்றது. (8)

கா. 9.

ப. 8. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்.

(கா - உ.) எ - து.— சுற்றத்தாருக்களையும் மித்தருக்களையும் தமக்கு உறுதி பண்ணிக் கொடுக்கும் பொருள் ஆனது இது அன்றிப், பொருள் ஆக மதிக்கல் ஆவது ஒன்றும் இல்லை எ - று.

இனி இவ்வாறு அன்றிக் குலத்தில் இழிவு ஆகியாரையும், உறுதி இல்லாதாரையும் யாவரும் மதிக்கப் பண்ணும் என்று உரைப்பினும் ஆம்.

(ப - உ.) எ - து.—ஒரு பொருள் ஆக மதிக்கப் படாதாரையும் பொருள் ஆக மதிக்கப் பண்ணுகின்ற பொருளை அல்லது வேறு பொருள் என்று சொல்லல் ஆவது இல்லை எ - று.

மேல் இன்பம் எளிது ஆக வரும் என்றார். அஃது எளிது ஆக வரும் ஆறு என்னை? வடிவு இல்லாதாரைப் பெண்டிர் இகழ்வர் ஆதலின், நன்னன்றி உற்றார்க்குப் பொருள் உடையாரை யாவரும் கன்கு மதிப்பர் என்று கூறப்பட்டது. (9)

கா. 10. ப. 4.

உறுபொருளு மூல்கு பொருளுந்தன் னெண்ணித் தெறுபொருளும் வேந்தன் பொருள்.

(கா - உ.) எ - து.—நாடு இறுக்கும் முறைமையின் பெறும் பொருளும், நீரினும் நிலத்தினும் வருவனவற்றுள் தனக்கு உள ஆம் சுங்கப் பொருளும், தன் பகைவரைத் திறை வாங்கிக் கொள்ளும் பொருளும் எல்லாம் வேந்தனுக்கு நெறியின் வரும் பொருள் எ - று.

(ப - உ.) எ - து. —தானே வந்து உற்ற பொருளும், ஆய வற்கத்தால் வரும் பொருளும் பகைவரை அடர்த்துக் கொண்ட பொருளும் அரசனுக்குப் பொருள் ஆம் எ - று.

உறுபொருள் - கால் அற்ற பொருள். மேல் நியாயம் ஆகத் தேட வேண்டும் என்றார்: இவை நியாயமோ என்று ஐயுற்றார்க்கு அரசற்கு நியாயம் என்று கூறப்பட்டது (10)

(கா - உ) இனி அரசர்க்குப் பொருள் ஈட்டம் உண்டாய இடத்தும் படை இடம் இல்லை ஆயின் பகைவரை வெல்லற்கு அரிது ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

39. படைமாட்சி.

(ப - உ.) படைமாட்சி ஆவது படையினது நன்மை கூறுதல். இது மேல் கூறிய பொருளின் உண்டாம் ஆதலானும் அதனை ஈட்டுதற்கும் காத்தற்கும் படைவேண்டும் என்பதனாலும் அதன் பின் கூறபபட்டது.

கா. 1.

ப. 2.

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

(கா - உ.) எ - து.—எதிர்ப்பட்ட முகத்து நெஞ்சு அழிவு இன்றித் தன் கோமானை வஞ்சித்துக் கீழ் போகாதது ஆகி வழி வருகின்ற தறுகண்மையை உடையது யாது? மற்று அதுவே படையாவது எ - று.

(ப - உ.) எ - து.—கெடுதல் இன்றிக் கீழ் போகாதது ஆகிக் குலத்தின் வழிவந்த அஞ்சாமையை உடையது படையாவது எ - று.

வழிவருதல் வீரன் மகன் வீரன் ஆதல். தன்மை கூறிற்று.

இது படையினது

(1)

கா. 2.

ப. 3.

மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மென நான்கே யேமம் படைக்கு.

39. படைமாட்சி

167

(கா - உ.) எ - து.—தன் நெஞ்சிற்கு இயல்பு ஆயது ஓர் மறமும், சேவகத் தாழ்ச்சிக்கு மானிப்பது ஓர் வாசிப்பாடும், மாட்சிமைப்பட்ட வழிச்செலவு என்னும் அரசர்க்கு எவல் வழி பிழையாது செல்லலும், எதிர் கண்ட விடத்துத் தடுத்து எறி நிற்கும் திறமையும் என்றும் இந்நான்குமே படைக்குச் சேம உறுதிப்பாடு எ - று.

(ப - உ.) எ - து.—மறமும் மானமும் நல்வழிச் சேறலும் தெளிவு உடைமையும் என்னும் நான்கும் படைக்கு அரண் ஆம் எ - று.

நல்வழிச் சேறல் ஆவது மறம் செய்யும் கால் அறத்தின் வழிச் செய்யும் தெளிவு கலக்கம் இன்மை. மேல் கெடாமை வேண்டும் என்றார் : இது கெடாமைக்குக் காரணம் கூறிற்று. (2)

கா. 3.

ப. 7.

சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

(கா - உ.) எ - து.—படைச் சிறுமையும் நீங்காத கோபமும் படையினது வறுமையும் என்னும் இக்குற்றம் மூன்றும் இலது ஆயின் எதிர்ப்படையை எவ்வாற்றானும் வெல்லும் படை எ - று.

(ப - உ.) எ - து.—சிறுமை உறுதலும் போகாத் துன்பம் உறு தலும் வறுமையும் இல்லை ஆயின் படை வெல்லும் எ - று.

சிறுமை உறுதல் ஆவது இழிந்தார் பெற்ற சிறப்பு உயர்ந்தார் பெறுமை. போகாத் துன்பம் ஆவது பெண்டிரைக் கைக்கொள்ளுதலும் இளிவாவு செய்தலும் போல்வன. வறுமை யாவது கொடாமை.

இது படைக்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று.

(3)

கா. 4.

ப. 1.

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(கா - உ.) எ - து.—பாதாகிகேசம் ஆக ஓர் ஆள் என்றதற்குத் தக, உறுப்பினுல் மூற்றுப் பெற்றுக் கூண கருவி முதலியவற்றுன் வந்து உற்ற வடுப்பாட்டிற்கும் சிறிதும் கண்ணஞ்சாத வீரப்படையானது அரசன் படைத்த செல்வத்துள் எல்லாம் பெரிதும் தலைமைப் பாடு உடைத்து எ - று.

(ப - உ.) எ - து.—யானை, குதிரை கருவிகள் ஆகிய உறுப்புக்களால் அமைந்து இடுக்கண் உற்றுழி அதற்கு அச்சம் இன்றி வெற்றி உடைய படை அரசன் தேடின பொருள் எல்லாவற்றினும் தலையான பொருள் எ - று.

ஆதலால் படை வேண்டும் என்றது.

கா. 5.

ப..10.

நிலைமக்கள் சால வுடைத்தெனி னுந் தானை
தலைமக்க ளில்வழி யில்.

(கா - உ.) எ - து.—எதிர்ப்படை கண்டால் பிறர் காதலிக்க நிலை யாது தெளிந்து நிற்கும் நிலைப்பாட்டினை உடைய வீரரைச் சால உடைத்தேனும் சேனையானது சேனைத் தலைவராகிய தலைமக்கள் இல் லாத இடத்துச் செய்வது ஓர் சேவகம் இல்லை எ - று.

(ப - உ) எ - து.—நிலை உடைய வீரரைப் பெரிதும் உடைத்து ஆயினும் படையானது தனக்குத் தலைவனை இல்லாத இடத்து வெற்றி இல்லை ஆம் எ - று.

இது படை அமைந்தாலும் படைத்தலைவன் அமைக்க வேண்டும் என்றது. இவை இரண்டும் படை ஆளும் நிறன் கூறின. (5)

கா. 6.

ப. 8.

அடற்றகையு மாற்றலு மில்லெனி னுந்
தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

(கா - உ.) எ - து.—எதிர்ந்தோரை எறிந்து கொள்ளும் தகைமையும் அதற்கு உரிய ஆண்மைத் திறப்பாடும் இல்லை ஆயினும், சேனையானது கைக்கொண்டு நிற்கும் இடத்து விட்டு விலங்கிப் பயின்று உள்ளது ஆகிய விறல் கருவிகளால் பொலிவுடன் நிற்றல் சாலப் பெருமை பெறும் எ - று.

(ப - உ.) எ - து.—பகைவரைக் கொல்லும் தகுதியும் அவர்மேல் வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லை ஆயினும் சேனையானது படை யழகினாலே பெருமை பெறும் எ - று.

படையழகு என்றது அலங்காரமும் கொடியும் குடையும் மூரசும் காகளமும் முதலாயினவற்றால் அழகு பெறுதல். இதுவும் அரசன் அமைக்க வேண்டும் என்றது. (6)

கா. 7. ப. 9.

ஒலித்தக்கா லென்னை மூவரி
யெலிப்படைக
நாக முயிர்ப்பக் கெடும்.

(கா - உ.) எ - து.—எலிப்படை அனைத்தும் கூடிக்கொண்டு கடல் போல ஆர்த்து வரினும் பயன் இல்லை: என்னை எனின் அவை அத்தனைக்கும் ஒரு நாகமானது வந்து பூத்தென மூச்சு எறியக் கெட்டு விடும் எ - று.

39. படைமாட்சி

(ப - உ.) எ - து.—கடல் போல் ஒலித்தக்காலும் எலியினது மாறுபாட்டினல் வரும் தீமை என் உளது ஆம்? அவ்வொலி நாகம் உயிர்த்த அளவிலே கெடும் எ - று.

இது படை மிக்கது வெல்லும் என்று தெளிந்து ஆளவேண்டும் என்றது.

கருதாது வீரரைத்
(7)

கா. 8.
ப. 4.

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து

(கா - உ.) எ - து.—எதிர்ப்படை வந்து தலைப்பட்ட காலத்து

இவ்வாறு பொருவேம் என்று எண்ணிக் கலங்காது மற்று அதனைப் பொறுத்து அடர்த்துச் சென்று நெருக்க வல்லது யாது? மற்று அதுவே தூசி எனப்படுவது எ - று.

(ப - உ.) எ - து.—முன் வந்த படையைப் பொறுத்து மேற் செல்ல வல்லது படையாவது :

அவ்விடத்துற்ற போரினைத் தடுக்கும் இயல்பு அறிந்து எ - று.

இது முந்திச் செல்ல வேண்டும் என்பதூஉம் செல்லுங்கால் இடம் அறிந்து செல்ல வேண்டும் என்பதூஉம் கூறிற்று. (8) கா. 9.

ப. 6. உலவிடத் தூறஞ்சா வன்கண் டொலவிடத்துத்

தொல்படைக் கல்லா லரிது.

(கா - உ.) எ - து.—தன் படை கெடும் இடத்தும் தன்மேல்

வந்துற்ற கருவி வடுப்பாட்டிற்கும் சிறிதும் கண்ணஞ்சாத தறுகண்மையானது பண்டு படைத்தலை வீரைக் கண்ணுற்றுப் புறத்து எறியாது முன் எறிந்து முன் ஏற்றுக் கொண்டு விழுந்தித்து அழி படை தாங்குதல் பழம் படைக்கு அல்லால் அரிது எ - று.

(ப - உ.) எ - து.—அரசு கெடும் இடத்து வழிவந்த படைக்கு அல்லது போர்க்களத்து அழிவு வந்த இடத்து உயிர்க்கு வரும் ஊறு அஞ்சா வன்கண்மை இல்லை எ - று.

தொலைவிடம் என்பதனை முன்னே கூட்டுக. மேல் வழிவந்த படை வேண்டும் என்றார்: அதனால் பயன் என்னை என்றார்க்கு அவர் தமக்கு முன்பு உள்ளார் செயலை நினைப்பார்: ஆதலான் அவர்க்கு அல்லது படை கெட்டால் நிற்றல் அரிது என்றவாறு ஆயிற்று. (9)

கா. 10.

ப. 5.

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி
யெதிர்நிற்கு
மாற்றலதுவே படை.

22

(கா - உ.) எ - து.—எல்லைக் காலத்துக் கூற்றம் கனன்று மேல் வந்து பொரி.....து தானும் எதிர்த்து அடர்த்து நிற்கும் திறமைப் பாட்டது யாது? மற்று அதுவே படை எனப்படுவது எ - று.

(ப - உ.) எ - து.—கூற்றமானது வெகுண்டு மேல்வரினும் சிதறுதல் இன்றி எதிர் நிற்க வல்ல வலிமையை உடையது படையாவது எ - று.

இது
றது.

மாற்றார் மேல் வந்தால் நின்று பொறுக்க வேண்டும் என்

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் படைமாட்சி.....தற் பின்.....செருக்கு உணர்த்த வேண்டுதலான் மற்று இதன் பின் னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

40. படைச்செருக்கு..

(ப - உ.) படைச் செருக்கு ஆவது படையினது வீரியம் கூறு தல். இது படைக்கு இன்றியமையாதது ஆயினமையின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1.

உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

(கா - உ.) எ - து —எதிர்ப்படை தம்மேல் வந்து தாக்கும் அள வின்கண் தமது உயிர் பேணக்கருதி அஞ்சாது அவ்விடத்து உயிர் வழங்கக் கருதும் வீரர் தம்மை ஆண்ட அரசரானேர் ஒரு காலம் உற்றுச் செறினும், தமது சேவகத் தறுகண்மையின் சிறிதும் குறை படுதல் இலர் எ - று.

(ப - உ.) எ - து.—ஒன்று உற்ற காலத்து உயிர்ப் பொரு அஞ்சாத மறவர் தம் அரசனல் செறுக்கப் பட்டார் ஆயினும் தமது தன்மை குன்றுதல் இலர் எ - று.

மேல் அதிகாரத்துச் சிறுமை முதலாயின செய்யின் படை வெல்
லாது என்றார் ஆயினும், இயல்பு ஆக அஞ்சாமை உடையர் வீரியம் செய்யும் இடத்துக் குறைய நில்லாமை வேண்டும் என்றது. (1)

கா. 2.

ப. 2.

பேராண்மை யென்ப தறுகணென்
றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு.

40. படைச்செருக்கு 171

(கா - உ.) எ - து. - படை மக்கள் தமக்கு எப்பொழுதும் இயல்பு ஆகிய மிகவும் பெரிய ஆண்மை என்று சொல்லுவர் உலகோர்: யாதினை எனின், பகை வந்து உறற இடத்துப் பண்டை
ஆண்மையை மிகவும் கூர்க்கப் பிடித்து அடர்த்து
எதிர் நடத்தல் கூர்மையாவது எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனுக்குப் பெரிய ஆண்மை என்று சொல்லுவார், ஒன்று உற்றக்கால் அஞ்சான் ஆதலே: அவ்வாண்மைக்குப் படைக்கலம் என்று சொல்லுவர் உலகு இயல் அறிந்து செய்தலே

எ - று.

உலகியல் அறிதல் - தனக்கு எளியார் மேல் செல்லாமை: இது வீரம் செய்யுங்கால் எளியாரை அடாமை வேண்டும் என்றது. (2)

கா. 3.

ப. 4.

என்னைமுன் னில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

(கா - உ.) எ - து.---வந்தே என்முன் வந்து நில்லன்மின் தெவ்வீர்காள்: என்னை எனின் முற்பட மதியாது எனது முன்வந்து நின்று நின்று பிற்படக்கல் உருபு ஆகி நின்றார் அளவு இறந்த பலர் ஆகலான் எ - று.

(ப - உ.) எ - து.—என்னுடைய அரசன் முன்னர்ப் பகைவீர்! நில்லாது ஓழிமின்: முன் நாள் இவன் முன்னே நின்று கல் எழுதப் பட்டு நின்றார் பலர் ஆதலான் எ - று.

இஃது எளியானைப் போகச் சொல்லி எதிர்ப்பாரோடு பொர வேண்டும் என்றது.

(3)

கா. 4.

ப. 6.

விழித்தகண் வேல்கொண் டெறிய

விழித்திமைப்பி

னேட்டன்றே வன்க ணவர்க்கு.

(கா - உ.) எ - து.—தாம் கூர்க்க நோக்கிய இடத்தே மற்றை எதிர்ந்தோர் தம் கைக்கொண்ட வேலினைத் தம்மீது எறியப் பெற்று வைத்து மற்று அதனைத் தலை அழித்து அப்பொழுது இமைப்பர் ஆயின், இமைத்தவர்க்கு முன் சொன்ன தறுகண்மையானது யாதும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—மாற்றாரோடு எதிர்த்துச் சிவந்து நோக்கின கண்ணிலே ஒருவன் வேலினனே எறிய அதற்கு மீண்டும் இமைப்பர் ஆயின், இது கெட்டதனோடு ஒக்கும், அஞ்சாதார்க்கு எ - று.

விழித்தகண் - மாற்றாரை நோக்கி இமையாத கண் எனினும் அமையும். புண்பட்டால் ஆற்றார் ஆயின் கெட்டதனோடு ஒக்கும் என்றது. (4)

கா. 5. ப. 5.

கைவேல் களிற்றொடும் போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

(கா - உ.) எ - து.—தனது கைவேலினை எதிர் வந்த களிற்றொடும் போக்கி மீண்டு வருகின்ற வீரனவன் தன் மெய்க்கண் வேறு ஒருவன் எறிந்த வேலினைப் பறித்துக் கைக்கொண்டு நின்று சிரிக்கும் எ - று.

நகும் என்றது வெறுங் கையாளனை எறிந்தவன் என்ன வீரனே என்று ஒரு நகையும், வெறுங் கைக்கு அம்மா! ஒரு வேல் வந்தது என்று ஒரு நகையும் என அறிக.

(ப - உ.) எ - து.—தன் கையில் வேலை ஒரு களிற்றொடே போக்கி அதன் பின் கருவி தேடிச் செல்லும் அவன் தன் மெய்யின் மேல்பட்ட வேலைப் பறித்துக் கருவி பெற்றேம் என்று மகிழும் எ - று.

வீரர் செயல் இத்தன்மை யாதலால் புண்பட்டால் அதற்கு ஆற்றிப் பின்னும் போரின்கண் காதல் செல்ல வேண்டும் என்றது. (5)

கா. 6. ப. 3.

கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

(கா - உ.) எ - து.—ஒருவன் காட்டிடத்து முயலினைப் பட்டுக் கழியுமாறு எய்த அப்பினின் போர்க்களத்து ஒருவன் ஒரு களிற்று யானையைக் குறித்து எறிந்த இலக்குப் பிழைத்த வேலினை எடுத்து ஏந்திக் கொண்டல் பெரிதும் இனிது எ - று.

(ப - உ.) எ - து.—காட்டகத்து முயலெப்பட எய்த அம்பினும் யானையைப் பிழைக்க எறிந்த வேலை ஏந்துதல் இனிது வீரற்கு எ - று.

இது மேலதற்குக் காரணமாகக் கூறப்பட்டது. (6)

கா. 7. ப. 7.

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாள யெடுத்து.

(கா - உ.) எ - து.—போர்க் களத்துச் சென்று புக்கார் புறத்துப் படுதல் இன்றி முகத்தினும் தோளினும் மார்பினும் விழுமிய புண் ஆகிய வீரத் தழும்புபட்டப் பெறுத நாட்களும் உள அன்றோ: அவை

40. படைச்செருக்கு

173

எல்லாம் தனக்கு உளவாகக் கருதாது தன்னை வழுக்கிக் கழிந்தன வற்றுள் சிலவை ஆக அந்நாட்களை வேறே நீக்கி வைக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—தனது வாழ்நாள் ஆகிய நாளை எண்ணி, அவற்றுள் விழுமிய புண்படாத நாள் எல்லாவற்றையும் தப்பின நாள் ஆக எண்ணி வைக்கும் வீரன் எ - று.

இது போரின்கண் முகத்தினும் மார்பினும் புண்பட வேண்டும் என்பதூஉம் முதுகுபுறம் கொடாமையும் வேண்டும் என்றது. (7)

கா. 8.

ப. 8.

சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார் கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

(கா - உ.) எ - து.-- இன்னர் இன்ன போர்க் களத்து இன்ன விறல் தொழில் செய்தார் என்று மற்று எண். திசையும் பரந்து திரியும் புகழினையே விரும்பி மற்று இது காரணத்தால் சிறிதும் விரும்பா உயிரினை உடையாயவர் தம் காலில் டாத்த வீரக் கழல் யாப்பானது பெரிதும் ஆண்மைக் கட்டவிப்பாடு உடைத்து மற்றையார் கட்டிய கழல் யாதுக்கோ என்று அறியேம் யாம் எ - று.

காலில்

(ப - உ.) எ - து.—பரக்கும் புகழை விரும்பி உயிரை விரும்பா தவர் கழல் கட்டுதல் அழகு உடைத்து எ - று.

இது புகழ் வரின் பட வேண்டும் என்றது.

(8) கா. 9.

ப. 9.

இழைத்த தகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

(கா - உ.) எ - து —போர்க்களத்து எதிர் நின்ற வீரரை நோக்கி

நுமக்கு யாம் இவை செய்வேம் என்று எண்ணி முன் கூறியது யாது? மற்று அவ்வெண்ணத்தைக் கடவாமை காரணமாகச் சென்று பொருது தம் உயிர் செருக்கும் திறல் உடையோரை இவ்வுலகத்து யாரே தானை..... .. ...பிழைத்தாரென்று சொல்லி முன் நின்று ஒறுக்க வல்லவர் எ - று.

(ப - உ.) எ - து.—முன் கூறிய வஞ்சினம் தப்பாமல் தைத் தப்பினர் என்று பழிக்க வல்லவர் யார் எ - று.

சாவா

இது வஞ்சினம் தப்பின் பட வேண்டும் என்றது.

(9) கா. 10.

ப. 10.

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(கா - உ.) எ - து.—தம்மைப் பெரிதும் தலையளித்து ஓம்பு..... .....தனேர் இவரை யாம் இழந்தோம்: என்ன பாவம் என்று இரங்கிக் கண்ணீர் சொரியுமாறு அமரில் புக்குச் சாக வல்லர் ஆயின், அதுவே சாக்காடு என்பது: மற்று அது இரந்து கொள்ளும் தகுதியினை உடைத்து எ - று.

பரி. பா - மி. "சாகிற்பிற்,".

(ப - உ.) எ - து.—தம்மை ஆண்டவரது கண்ணீர் மல்குமாறு சாவக் கடவராயின் அச்சாக்காடு எல்லாராலும் வேண்டிக் கொள்ளும் தகுதி உடைத்து எ - று.

இஃது ஆண்டவனுக்குக் கேடு வரின் என்றது.

படவேண்டும்

(10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் படைமாட்சி, படைச் செருக்கால் எதிர் மலைவு காட்டி மற்று இதன் பின்பு இனிது மேவி கட்புப் புரிந்து ஒழுக வேண்டி மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

41. நட்பு.

(ப - உ.) நட்பு இயலாவது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றின் கண்ணும் நின்று நன்னெறிக் கண் உய்க்கும் ஆகலின் அதன் இலக்கணம் கூறுதல். அரசன் தானும் திருந்திச் திருந்தினரையும் கூட்டிக்கொண்டு நாடு முதலான பொருளையும் பெற்று அதனை அழியாமல் காக்கும் படையை உடையனாயினும், காமத்தான் ஆதல் மயக்கத்தான் ஆகல் பிறழ ஒழுகுவனாயின் இவை எல்லாப் பொருளையும் கெடுத்துத் தானும் கெடுவன் என்று அவ்வாறு ஒழுகுங்கால் தன்னில் பெரியர் ஆகிய மந்திரி புரோகிதரை ஒளித்தும் தன் ஏவல் வழி வரும் அமாத்தியரையும் கேளாதும் ஒழுகுவன் ஆதலின், அவ்விடத்து உடன்பட்டு நின்று பாதுகாப்பர் வேண்டும் என்று இப்பொருள் கூறப்பட்டது. அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்பட நட்பு இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், அவரை ஆராயும் ஆறு ஓர் அதிகாரத்தானும், நட்கப்படாதார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், மனத்திலுல் நட்பு இன்றி நட்டார் போன்று ஒழுகுவார் திறன் ஓர் அதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள் நட்பு ஆவது நட்டோர் மாட்டுச் செய்யும் திறன் கூறுதல்.

கா. 1. ப. 5.

அழிவி னவைநீக்கி யாறுய்த்
தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

(கா - உ.) எ - து.—தம்மொடு நட்டார்க்கு ஓர் இடுக்கண் வந்த இடத்துக் குற்றத்தை நீக்கி மற்று இவர்க்கு நல்வழியைச் செலுத்திப் பின்னும் வருகிற அழிவின்கண் தாமும் கூட நின்று அவ்வல்லல் அனுபவிப்பதே நட்பு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—அழிவு வந்த இடத்துத் துன்பத்தை நீக்கி இன்ப நெறியின் கண் நிறுத்திச் செயலற்ற அழிவு வந்த இடத்து அவரோடு கூட அல்லல் படுவது நட்பு எ - று.

இது துன்பம் கெடுக்க மாட்டாக்கால் வேண்டும் என்றது.

தானும் துன்பம் உற

(2)

கா. 2.

ப. 4.

உடுக்கை யிழந்தவன் கைபோல

வாங்கே

யிடுக்கண் களைவதா நட்பு.

(கா - உ.) எ - து.—உடை நழுவினவன் தனது கை கடிது பற்றித் தாங்கிக் கொண்டாற் போல அப்பொழுதே அவ்விடுக்கண் கூவுவது யாது? மற்று அதுவே நட்பு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—உடை இழுந்தவன் கை குறிப்பு இன்றித் தானே சென்று மறைக்குமாறு போல இடுக்கண் உற்ற அப்பொழுதே அதனைப் போக்க வல்லது நட்பு எ - று.

இது கழுறுதலே அன்றித் துன்பம் துடைக்கவும் வேண்டும் என்றது.

(2) கா. 3.

ப. 10.

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர்மை பேதையார் நட்பு.

(கா - உ.) எ - து.—பிறை உருபு நாள்தொறும் நிறைந்து செல்லும் தன்மையது போலும் நீர்மை உடையார் கெழுமுதல் தன்மை மற்று இனிப் பிறை நிறை மதியது பின் நாள் தொடங்கித் தேய்ந்து செல்லும் நீர்மையது உடைத்து அறிவு கேடர் செய்யும் நட்பு ஆனது எ - று.

(ப - உ.) எ - து.—பிறை நிறையும் நீர்மை போல ஒரு நாளுக்கு ஒரு நாள் வளரும் அறிவுடையாரொடு கொண்ட நட்பு: மதியின் பின் நீர்மை போலத் தேயும் பேதையாரோடு கொண்ட நட்பு எ - று.

இஃது அறிவு உடையார் நட்பு வளரும் என்பதூஉம் அறியாதார் நட்புத்தேயும் என்பதூஉம் கூறிற்று. பின் நட்பு ஆராய்தல் கூறுகின்றார் ஆகலின் இது பின் கூறப்பட்டது.

பரி. பா - மீ. "பின்னீர".

கா. 4.
ப. 7.

இனைய ரிவர்நமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென் னும நட்பு.

(கா - உ.) எ - து.—வேறு ஒருவர் வந்து தம்மொடு இவர் நமக்கு யாவர் என்று வினவினால், இவர் நமக்கு இன்ன தன்மையர்: யாம் இவர்க்கு இன்ன தன்மையேம்: என்று இங்ஙனம் தம் கெழு முதல் புனைந்து உரைப்பினும் பொலிவு அழியும் நட்பு: எனவே பேதையார் நட்பின் பிழையினைப் பெரிதும் கடிந்தவாறு ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - று.—இவர் நமக்கு இத்தன்மையர்: யாமும் இவர்க்கு இத்தன்மையேம் என்று பேணிச் சொல்லினும் நட்பு வாடும்: ஆகலான் தன்னை நினைக்குமாறு போல நினைக்குதல் எ - று.

இது மேல் கூறியவாறு செய்தலே அன்றித் தான் அவன் என்றும் வேற்றுமை இன்றி ஒழுக வேண்டும் என்றது. இத்துணையும் நட்பின் இலக்கணம் கூறப்பட்டது. (4)

கா. 5.

ப. 2.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்

தகநக நட்பது நட்பு.

(கா - உ.) எ - து.—புறத்து உறுப்பு ஆகிய முகநகை மாத்திரம் செய்து நட்புக் கொள்ளும் நட்பது நட்பு அன்று: இனி அகத்து உறுப்பு ஆகிய நெஞ்சானது உள் மகிழ்வு உற நிற்கும் நட்பே நட்பானது எ - று.

(ப - உ.) எ - து.—முகத்தொடு முகம் மகிழக் கொள்ளும் நட்பு நட்பு அன்று: மனத்தொடு மனம் மகிழக் கொள்ளும் நட்பே நட்பு எ - று.

மேல் நட்பு அரிது என்றார்: உலகத்துப் பலரும் தம்மில் கலந்தது காரணம் நின்றேயும். அஃது அரிது ஆயினவாறு என்றார்க்குக் கூறப்பட்டது. (5)

கா. 6.

ப. 3.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்

மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(கா - உ.) எ - து.—ஒருவரோடு ஒருவர் நட்டல் யாது புறமே நகை செய்தல் பொருட்டு அன்று: மற்று யாதிற்கோ எனின், அவர் கடக்கும் முறைமைக்கும் இங்கு அமையாது ஆகியது ஓர் குற்றம்

கண்டால் அப்பொழுதே அவர் தம்மைப் பெரிதும் அடர்த்துக் கழறுதல் பொருட்டு: எனவே அவர் கேடு தம் கேடு எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனோடு ஒருவன் நட்புப் பண்ணுதல் நகுதல் பொருட்டு அன்று: மிகையாயின செய்யும் இடத்துக் கழறுதல் பொருட்டு ஈ - று.

இது மனம் மகிழ நட்டலே அன்றித் கழறவும் வேண்டும் என்றது.

தீக்கருமம் கண்டால்

(6)

க1. 7.

ப.

9.

புணர்ச்சி பழகுதல் வேண்டா

வுணர்ச்சிதா

ணட்பாங் கிழமை தரும்.

(கா - உ.) எ - து.—ஒருவரோடு ஒருவர் கலப்பு நெடுங்காலம் பழகுதல் வேண்டா: மற்று என்னே எனின் அவர் நல்லர் என்று தாம் ஒருக்குற்று உணர்ந்த உணர்ச்சி தானே நட்பு ஆகிய வேற்றுமை அற்ற உரிமையைத் தரும் எ - று.

ஈண்டுக் கிழமை என்பது உரிமை.

(ப - உ.) எ - து.—நட்பு ஆதற்குப் பலநாள் பழகுதல் வேண்டா: ஒரு நாள் கண்டாராயினும் உணர்வு உடையார்க்கு அவ்வுணர்வு உடைமை தானே நட்பு ஆகும் உரிமையைத் தரும் எ - று.

மேல் குணவான் கண்ட அறிவு உண்டாக்கும் என்றார்: இஃது ஒத்த அறிவு உடையார்க்கும் அவ்வறிவு உடைமை தானே நட்பு ஆக்கும் என்று கூறப்பட்டது. (7)

கா. 8.

ப.

1. செயற்கரிய யாவுள நட்பினதுபோல் வினைக்குரிய யாவுள காப்பு.

(கா - உ.) எ - து. —நட்பினைப் போல ஒருவால் செய்து கோடற்கு அரியன மற்று யா உள? எனவே யாவும் இல்லை; இனி நட்பினது போல வினைக்கு அரிய யா உள காப்பு எனவே தாம் செய்து கொண்ட பொருள் முதலிய வர்க்கங்களைப் புரைபடாமல்

காக்கின்ற காப்பு மற்று இங்கட்புக்குப் பழுதுபடாமல் காப்பது ஓர் காவல் வினைபோல வினைக்கு அரியன யாவும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—நட்புப் போல் உண்டாக்குதற்கு அரியன யாவை உள? அவ்வாறு உண்டாக்கப் பட்ட நட்புப் போல பிற கல் வினை செய்தற்கு அரிது ஆகக் காக்கும் காவல் யாவை உள? எ - று,

இ ஞ நட்புத் தேடல் அரிது என்றது.

(8)

23

178 திருக்குறள்:- பொருட்பால்

கா. 9.

ப. 6.

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி யொல்லும்வா யூன்று நிலை.

(கா - உ.) எ - து.—தாம் இவ்வாறு நட்ட நட்பிற்குப் பின் ஒரு குறை இன்றி இனிது வீற்றிருக்கை யாதோ எனின், அவர்க்கு உதவ வேண்டும் இடத்து எங்கும் புரிவு இன்றித் தமக்கு இயலும் வழி எல் லாம் உதவி உரைத்து நிற்கும் நிலையை எ - று.

கொட்பு இன்றி என்றது புரிதல் இன்றி என்றது.

(ப - உ.) எ - து.—நட்புக்குச் சுழல்வு இன்றி இனிது இருக்கல் ஆவது யாது என்னில், அதுவும் இடத்து ஊன்றியாகி நிற்றல் எ - று.

கொட்பு இன்றி வீற்றிருத்தல் எனக் கூட்டுக. இதனால் சொல்லியது நட்புத் திரிவு இன்றி இருத்தலாவது நட்டார்க்குத் தளர்ச்சி வந்தால் தாங்குதல் என்றவாறு ஆயிற்று. மேல் கூறின எல்லாம் ஒத்தார் மாட்டும் மிக்கார் மாட்டும் செய்யும் திறன் கூறிற்றின. இது செல்வக் குறைபாட்டினால் தம்மில் தாழ்ந்தார் மாட்டும் செய்யும் திறன் கூறிற்று. (9)

கா. 10. ப. 8.

நவிறலு நானயம் போலும் பயிறலும்

பண்புடை யாளர் தொடர்பு.

(கா - உ.) எ - து.—கற்கும் தொறும் கற்கும் தொறும் கற்பவர்க்கு நூல் நயம் செய்யும் இனிமை போலும்: பயிலும் தொறும் பயிலும் தொறும் பண்புடையாளர் நட்பு எ - று.

(ப - உ.) எ - து.—படிக்கும் தொறும் நூல் நயம்போல அறிவு தரும்: பழகும் தொறும் பண்புடையாளது நட்பு எ - று.

மேல் பொதுவாக நட்டோர் செய்யும் திறன் கூறினர்: இது குணவாலேடு நட்புக் கொள்ளின் அறிவு உண்டாம் என்று கூறியது.

(10) (கா - உ.) இனி இவ்வாறு நட்பு வடு

இன்றி வளர்ந்து செல்
லும் இடத்துத் தகுதி ஆராய்ந்து நடக்க வேண்டுதலான் இதன் பின் னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

42. நட்பு ஆராய்தல்.

(ப - உ.) நட்பு ஆராய்தலாவது நட்டற்கு ஆவாரை ஆராய்ந்து கொள்ளுமாறு கூறுதல். இது நட்குங்கால் ஆய்ந்து நட்க வேண்டுத லின் இதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 4.

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(கா - உ.) எ - து.—நட்பானவன் இங்ஙனம் காரியமானது நிகழுமாறு சொல்லியும் நெறி அல்லது செய்யும் இடத்து நெருக்கியும் செய்யத் தகும் முறைமை இது என்று அறிதலும் இம்மூன்று நெறி யும் வல்லவர் யாவர் சிலர் கல்லறிவாளர் அவாது நட்பினை ஆராய்ந்து கொள்க நட்கும் இடத்து எ - று.

(ப - உ.) எ - து.—குற்றம் கண்டால் அழுமாறு சொல்லி நெறி அல்லாதனவற்றிற்குக் கழறி, உலக வழக்கு அறிய வல்லாது நட்பை ஆராய்ந்து கொள்க எ - று.

இது மந்திரிகளின் நட்பு ஆவாரைக் கூறிற்று. அரசர் அல்லாதார்க்குத் தம்மில் உயர்ந்தாரை நட்பு ஆக வேண்டும் என்று கொள்ளப்படும். (1)

கா. 2.

ப. 1.

நாடாத்து நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் ஆராய்ந்து கடிது நட்டலின் மேற்பட்ட கேடும் இல்லை: ஒருவாற்றான் நட்ட பினபு விடுதியும் இல்லை: யார்க்கு எனின், நட்பு அறிந்து ஆளும் அவர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.—ஆராயாது நட்புப் பண்ணுதல் போலக் கெடுதல் வருதல் இல்லை: நட்ட பின்பு அவர்க்கு விடுதல் இல்லை ஆதலால் எ - று.

இஃது ஆராய் வேண்டும் என்றது.

(2) கா. 3.

ப. 10.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான்
கேண்மை கடை
தான்சாந் துயரந் தரும்.

[முறை

(கா - உ.) எ - து.— ஒருவனோடு முதல் முறை நட்புச் செய்யும் இடத்து அவர் குணம் குற்றங்களைப் பலபடியும் தெரிந்து ஆய்ந்து கொள்ளாதான் செய்யும் நட்பானது பின் முறையே தனது உயிர்க்கு இறுதியாவது ஓர் உறு துயரத்தைச் செய்யும் எ - று.

(ப - உ.) எ - து.—குற்றம் ஆய்ந்து கொள்ளாதான் கொண்ட நட்புப் பிற்காலத்துத் தான் சாதற்கு ஏதுவான துன்பத்தைத் தரும் எ - து.

இஃது ஆராயாமையால் வரும் குற்றம் கூறிற்று.

(3)

கா. 4.

ப. 6.

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார் கேண்மை யொரீஇ விடல்.

(கா - உ.) எ - து.— உலகத்து உணர்வுடை ஒருவனுக்குப் பெரும் பேறு என்று எடுத்து உரைக்கப்படுவது யாதோ எனின், அறிவு கேடாது கெழுமுதலைச் செய்யாது தப்பிப் போதல் எ - று.

ஒரீஇ என்பது நீங்கி யொழிதல் என்பது.

(ப - உ.) எ - து.—ஒருவற்கு இலாபம் சோடு நட்பு ஆகுதலே நீங்கி விடுதல் எ - று.

ஆவது அறிவிலாதா

இது பேதையார் நட்புத் தவிர்க என்றது.

(4) கா. 5.

ப. 7.

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுப

கொள்ளற்க

வல்லற்க ணுற்றறுப்பார் நட்பு.

(கா - உ.) எ - து.—சிறுமை உள்ளனவற்றை எஞ்ஞான்றும் உள்ளம் கருதற்க: அல்லல் உற்ற இடத்துக் கீழ் அறுப்பாரது நட்பினையும் கொள்ளற்க எ - று.

(ப - உ.) எ - து.—தான் சிறுகும் அவற்றை உள்ளத்தால் நினையாது ஒழிக: அதுபோல அல்லல் வந்த இடத்து வலியறுப்பாரது நட்பைக கொள்ளாது ஒழிக எ - று.

இஃது இழிகுணத்தார் நட்புத் தவிர்க என்றது.

(5)

கா. 6.

ப. 8.

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

(கா - உ.) எ - து.--- வாழும் காலத்து உடன்கூடி நட்புச் செய்து கெடும் காலத்துக் கைவிடுவாரது நட்புக் கூற்றுவன் வந்து ஆடும் காலத்து நினைப்பினும் உள்ளம் சுடும் எ - று.

(ப - உ.) எ - து.—கெடும் பொழுது கைவிடுவார்து நட்பைத் தன்னைப் பிறர் கொல்லும் காலத்து நினைப்பினும் நினைத்த மனத்தினை அந்நட்புச் சுடும் அவர் சொல்லுதலினும் எ - று.

இது கேட்டிற்கு உதவாதார் நட்பைத் தவிர்க என்றது. (6) கா. 7.

ப. 5.

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பில்லார் நட்பு.

(கா - உ.) எ - து. — மனம் மாசு அற்றார் கேண்மையை மருவுக : தமக்குச் சிறந்தது யாதானும் ஒன்று கொடுத்தும் தமது நீர்மைக்கு ஒவ்வாதாரது நட்பினைக் கொள்ளாது நீங்குக எ - று.

(ப - உ.) எ - து.—குற்றம் அற்றூர் நட்பைக் கொள்க: ஒரு பொருளைக் கொடுத்தாயினும் தனக்கு நிகரில்லாதார் நட்பினின்றும் நீங்குக எ - று.

இது குற்றம் அற்றூர் நட்பைக் கொள்ள வேண்டும் என்பதூஉம் நிகர் அல்லாதார் நட்புத் தவிர வேண்டும் என்பதூஉம் கூறிற்று. (7)

கா. 8.

ப. 3.

குடிப்பிறந்து தன்கட் பழிநா ணுவ ரானைக் கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(கா - உ.) எ - து.—ஒழுக்கம் குன்றாக் குலத்துப் பிறந்து தன் மாட்டு ஒரு பழி நாணுவானைச் சிறந்தன கொடுத்தும் நட்புக்கொள வேண்டும் எ - று.

(ப - உ.) எ - து.—மேல் கூறியவற்றுள் உயர்குடிப் பிறந்து பிறர் சொல்லும் பழிக்கு அஞ்சும் அவனை அவன் வேண்டியது ஒன்று கொடுத்து நட்பு ஆகக் கொள்க எ - று.

கொடுத்தும் கொளல் வேண்டும்
ஆவாரைக் கூறிற்று.

என்றமையால் ஆசன் நட்பு

.கா. 9.

ப.. 2.

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றி னினனு மறிந்தியாக்க நட்பு.

(கா - உ.) எ - து.—குடிப்பண்பும், ஒழுக்கக் குறைபாடு இல்லாச் சுற்றமும் குணமும் குற்றமும் இவை கான்கும் ஒருவனைச் சீர்தூக்கி அறிந்து மற்று அவனோடு செறிக நட்பினை எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனுடைய குணனும் குடிப்பிறப்பும் குற்றமும் குறை இல்லாத சுற்றமும் முன்பே ஆராய்ந்து பின்பு அவனை நட்பு ஆகப் பிணிக்க எ - று.

இவை எல்லாம் ஒத்தன ஆயின் உறவு நாள் செல்லும். ஆராய வேண்டுவன கூறிற்று.

இஃது (9) கா. 10.

ப. 9.

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்கு வறுமை முதலிய கேடு வந்து உற்ற இடத்துத் தளர்ச்சி அல்லது ஓர் உறுதி இன்று அன்றே: மற்று அக்கேட்டின்.....ருறுதிப்பாடு அஃது அய..... வெனின் இவர் எமக்கு இனிய துணையவர் என்று இங்ஙனம் தமக்குச் சிறந்த கிளைஞரைக் காலம் நெடுக விட்டு அளப்பது ஓர் கோல் எ - று.

(ப - உ.) எ - து.—கேடு வந்த இடத்தினும் ஒரு பயன் உண்டாம்: அக்கேடு நட்டாரது தன்மையை அளந்து அறிதற்கு ஒரு கோல் ஆம் ஆதலால் எ - று.

மேல் நெடுங்காலக் கைவிடுவாரை விட வேண்டும் என்றார்: அவரை அறியுமாறு என்னை என்றார்க்குக் கேட்டால் அல்லது அறிதல் அரிது என்று கூறிற்று. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம்.....நட்பு என்றார் ஆகலின் நீட்டி மற்று இதன் பின்னரே பழமையை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

43. பழமை.

(ப - உ.) பழமையாவது நட்டோரது உரிமை கூறுதல்: இஃது அவர் உரிமையால் செய்வனவற்றிற்குப் பொறுக்க வேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 9.

விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(கா - உ.) எ - து.—விரும்பா மனத்தாராலும் விரும்பப்படுவர்: யார் எனின் கட்பில் தமக்குப் பழையராய் உள்ளவர் மாட்டு மாபில்

தலைப்பிரியா மாட்சிமையோர் எ - று.

(ப - உ). எ - து.—விரும்பாதாராலும் விரும்பப்படுவர்: பழைய கட்டோர் மாட்டுக் குணத்தினின்று நீங்காதார் எ - று.

இது பகைவரும் விரும்புவர் என்றது.

(1) கா. 2.

ப.

2.

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

(கா - உ.) எ - து.—ஒருவரோடு ஒருவர் கட்டால் அக்கட்பிற் குச் சிறந்தது யாது எனின், என்றும் ஒருபடி படக் கெழுமிய கெழு

தகைமை ஆகிய பழமைக்கு என்றும் இனியர் ஆதல் சான்றோர் கடன எ - று.

உப்பு என்பது இனிமை.

(ப - உ.) எ - து.—கட்பிற்கு அங்கம் ஆவது உரிவை: அவ் வுரிமையால் செய்யும் அதற்கு உடம்படுதல் சான்றோர்க்கு இயல்பு எ - று.

பல காயமும் அமைந்தாலும் உப்பு இன்றுயின் இனிமை உண் டாகாதது போல, உடன்படாராயின் இனிமை இன்றும் ஆதலான் உடம்பட வேண்டும் என்றது. (2)

கா. 3.

ப. 8.

கெடாஅர் வழிவந்த கேண்மையார் கேண்மை

விடாஅர் விழையு முலகு.

(கா - உ.) எ - து.—ஒரு பொழுதும் இடைவிடாது ஒரு வழிப் பட வந்த கேளின் தன்மையோர் நட்பினை ஒருகால் ஒழியாதே விரும்பி நிற்பர் உயர்ந்தோர் எ - று.

(ப - உ.) எ - து.—குற்றம் உண்டான இடத்தும் நட்பினில் கெடாராய்க் குலத்தின் வழிவந்த நட்பு உடையாரது நட்பை விடுதல் இன்றி உலகத்தார் விரும்புவர் எ - று.

இது பழமையைக் கொண்டாடுவாரை உலகத்தார் தாமும் நட்பு ஆடுதற்கு விரும்புவர் என்றது. (3)

கா. 4.

ப. 3.

விழைதகையார் வேண்டி யிருப்பர் கெழுதகையார் கேளாது நட்டார் செயின்.

(கா - உ.) எ - து.—நட்டாராஞர் யாம் இப்பொருள் கைக் கொள்வோம் என்று கொண்டவரைக் கேட்டுக் கொள்ளாது அவருடன் தமக்கு உள்ள பழமை மிகுதியாலே யாதானும் ஒன்று செய்யின் அவருடன் நட்பின்கண் விழை தகையாராஞர், அவர் அங்ஙனம் கேளாது செய்கின்ற உரிமையை மேன்மேலும் வேண்டி யிருப்பர்: என் எனின், தாம் அவர் என்னும் வேற்றுமை இலர் ஆகலான் எ - று.

பரி. பா - மி. "விழைதகையான்".

(ப - உ.) எ - து.—நட்டோர் தமது உரிமையாலே கேளாது இசைவு இல்லாதவற்றைச் செய்வார் ஆயின் அதற்கு முனியாது அதனையும் தாமே விரும்பும் தன்மையோடு கூட விரும்பி இருப்பர் மிக்கார் எ - று. (4)

கா. 5.

ப. 5.

அழிவந்த செய்பினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(கா - உ.) எ - து.—தாம் அழிய வந்தனவற்றைச் செய்தாராயினும் அன்பு விடார்: அன்பினுலே வழிவந்த கேண்மையை உடையோர் எ - று.

(ப - உ.) எ - து.—தமக்கு அழிவு வரும் காரியத்தைப் பழைய நட்டோர் செய்தாராயினும் அவரோடு உள்ள அன்பு விடார்: முற்காலத்து அன்பின் வழியாக வந்த நட்பை உடையவர்கள் எ - று.

இது கேடு வருவன செய்யினும் அமைய வேண்டும் என்றது (5) கா. 6.

ப. 4.

கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் பெயின்.

(கா - உ.) எ - து.—இவ்வாறு நல்லவும் தீயவும் அவரைக் கேளாது செய்தற்கு உரிய கெழுதகைமை வல்லார் ஆகிய கிளைமையோர்க்கு அவருடன் நட்டார் பின்னும் நட்பிடைக் குற்றம் செயின் அற்றை நாள் தமது வாணுள் வரையுள் இழுந்த நாள் ஆகும் எ - று.

கேள் இழுக்கம் என்பது நட்பில் குற்றம் என்றது.

(ப - உ.) எ - து.—நட்டாரது தப்பைப் பிறர் சொல்லுங்கால் கேளாத உரிமை அறிய வல்லார்க்கு நட்டோர் தப்புச் செய்யில் அந்த நாள் நல்ல நாள் ஆம் எ - று.

இது கேளாது செய்தலே அன்றித் தப்புச் செய்யினும் அமைய வேண்டும் என்றது. (6)

கா. 7.

ப. 10.

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை செய்தாங் கமையாக் கடை.

(கா - உ.) எ - து.—அவரொடும் நெடுங்காலம் பழகிய நட்பு எல்லாம் என் செய்யும்: யாதும் இல்லை: எவ்விடத்து எனின் கீழ்ச் சொன்னபடியே அவர் தமக்கு வேண்டும் கெழுதகைமை செய்து அமையா இடத்து எ - று.

(ப - உ.) எ - து.—பழகிய நட்பால் பெறும் பயன் என்னை? உள் உரிமையால் ஒருவன் பிழை செய்த காலத்து அரசன் தான் அமையாத இடத்து எ - று. (7)

கா. 8.

ப. 6.

பேதமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(கா - உ.) எ - து.—தம்மோடு நட்டார் இவ்வாறு அன்றித் தாம் பெரிதும் நோவத் தக்கனவற்றைச் செய்வாராயின் ஒன்றே அவர் அறியாமை என்று உணர்க: இனி ஒன்றே அவர்க்குத் தம்மோடு வேற்றுமை அற நின்ற பெரியது ஓர் உரிமை என்று அறிக எ - று.

(ப - உ.) எ - து.—தாம் நோவத் தக்கனவற்றை நட்டோர் செய்தாராயின் அதற்கு முனியாது ஒன்றில் அறியாமையாலே செய்தார் என்று கொள்க: ஒன்றில் பெரிய உரிமையாலே செய்தார் என்று கொள்க எ - று. (8)

கா. 9. ப. 1.

பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

(கா - உ.) எ - து.—ஒருவரோடு ஒருவர்க்கு உள்ள காலப்பழமை யென்று எடுத்து உரைக்கப்படுவது யாதோ எனின் தம் பொருட்கண் அவர் செய்யும் யாதானும் உரிமையை வேறிடாது விரும்பும் நட்பு எ - று.

(ப - உ.) எ - து.—பழமை என்று சொல்லப்படுகின்றது யாது எனின் யாது ஒன்றினையும் உரிமை அறுத்தல் இல்லாத நட்பு எ - று.

இது பழமையாவது இது என்று கூறிற்று.

(9) கா. 10.

ப. 7.

எல்லைக்க ணின்றூர் துறவார் தொலைவிடத்துந் தொல்லைக்க ணின்றூர் தொடர்பு.

(கா - உ.) எ - து.—தம்மொடு நட்பிலுல் பழமைக்கண் நிலை நின்றூர் தொலையும் இடத்தும் அப்படிப் பழமை வரம்பின்கண் நின்றூர் யாவர்? மற்று இவர் இவரோடு உண்டாகிய தொடர்பினை என்றும் கைவிடார் எ - று.

(ப - உ.) எ - து.—பழமையின் கண்ணே, நின்றூரது நட்பை அவரானே தமக்கு அழிவு வந்த இடத்தும் விடார்கள் ஒழுக்கத்தின் கண்ணே நின்றூர் எ - று.

எல்லையாவது வரம்பு. அஃது ஒழுக்கம் ஆயிற்று. மேல் கூறிய ஆற்றான் அமைந்து விடுதல் அன்றி நட்பு விடுதல் உயர்ந்தோர் செய்யார் என்றது. (10)

(கா - உ.) இவ்வாறு அன்றிக் கெழுமிக் கை விடுவாரது நீங்கு உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

44. தீ நட்பு.

(ப - உ.) தீநட்பு ஆவது தீய குணத்தர் ஆகிய மாந்தரோடு நட்டதனால் வரும் குற்றம் கூறுதல். மேல் நட்பு ஆராய்தல் கூறுகின்றுழி நட்கப்படாதாரைக் கூறி ஈண்டும் கூறுதல்.....பிற எனில்

அற்று அன்று : அதனுள் நட்கப்படாதாரைக்

கூறினார் : இதனுள்

அவரால் பயன் இன்மை கூறினார் ஆதலின் வேறு படுத்துக் கூறப்பட்டது என்க. மேல் நட்பினால் வரும் பயனும் அவரோடு ஒழுகும் திறனும் கூறினார். இது நட்பினால் வரும் பயன் கூறுகின்றது ஆக ஆகலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 4.

பருகுவார் போலினும் பண்பிலார்

கேண்மை

பெருகலிற் குன்ற லினிது.

(கா - உ.) எ - து.—காணும் தொறும் கண்ணினால் பருகிக் கொள்வார் போன்று இருப்பினும் நல் ஒழுக்கம் இல்லாத கேண்மை பெருகி வருதலின் தம் கருமம் குறை படுதல் சால இனிது எ - று.

(ப - உ.) எ - து.—கண்ணினால் பருகுவாரைப் போலத் தனக்கு அன்பு உடையராய் இருப்பினும் குணம் இல்லாதார் நட்புப் பெருகுமதனினும் குறைதல் நன்று எ - று.

இது குணம் இல்லாதார் நட்புத் தீது என்றது.

(1) கா. 2.

ப. 10.

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும்.

(கா - உ.) எ - து.—இவர் நகையர் ஆகி நட்டு ஒழுகலின் இவர் மாட்டு ஓர் அயிர்ப்பு இல்லை: அதனல் பலகோடி படைவரினும் அவை புறத்தினின்று வருவன ஆகலான் அதனிடை ஓர் உபாயம் சிந்தித்து உய்யவும் கூடும். மற்று இவர் கூட நின்றே குடி முழுதும் கெடுப்பர் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—நகையின் பகுதியார் செய்த நட்பினும் பகைவாலே பத்துக் கோடி மடங்கு தன்மை மிகும் எ - று.

நகை வகையார் நட்பு ஆகிய அதனினும் பகைவர் ஆதல் தன்மை பயக்கும் என்று பொருள் உரைக்கினும் அமையும். நகை வகை

44. தீ நட்பு

187

யார் - காமுகரும் வேழப்பரும் முதலாயினர்: இவர்கள் நட்புத் தீது என்றது. பின் கூடா நட்புக் கூறுவார் ஆதலின் இவர்களும் அதற் குரியர் என்பதற்கு ஈண்டுரைத்த தென்க. (2)

கா. 3.

ப. 7.

கனவிலு மின்றது மன்றே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

(கா - உ) எ - து.—நனவின்கண் அன்றியே கனவின்கண்ணும் இன்றாகது: எங்ஙனம் எனின் தொழில் ஒன்றாய்ச் சொல் ஒன்றாய் வேறுபட்டு இருப்பார் நட்பு எ - று.

(ப - உ.) எ - து.—பயன்படும் நனவின்கண்ணே அன்றிக் கனவின்கண்ணும் இன்றது ஆம், செய்யும் தொழில் வேறு ஆகச் சொல்லும் கூற்று வேறு ஆக ஒழுகுவாரது நட்பு எ - று.

இது பொய் கூறுவார் நட்புத் தீது என்றது.

(3) கா. 4.

ப. 1.

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை.

(கா - உ.) எ - து.—போர் செய்யும் இடத்து இடது சாரியும், வலது சாரியும், குறுக்கு அறுத்தலும், நெடுகப் பாய்தலும், மற்றும் பலவும் கற்று அறியா மா ஆனது தனியே நடாத்துவான் ஆற்றலை அறுக்குமாப் போல அன்னர் ஆகிய தமரின் தனிமையே மிகவும் தலை எ - று.

(ப - உ.) எ - து. -- தெருவின்கண் நெறிப்பட நடந்து அமரின்

கண் ஏறினவன் வலியைக் கெடுக்கும் அறிவு இல்லாத குதிரையைப் போல்வார் தமர் ஆவதின் தனியன் ஆதல் நன்று எ - று.

தனிமை தீது என்பது முன்பே அமைந்து கிடந்தது. இங்கட்

பின் கொடுமை யதுவும் நன்று ஆயிற்று. தீமைக்கு அளவு இன்மையின் இவ்வாறு கூறினர். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும். இது கயவர் நட்புத் தீமை பயக்கும என்றது. (4)

கா. 5.

ப. 8.

உறினட் டறிஞெருஉ மொப்பில்லார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் தமக்கு உறுவது பெறும் காலத்து மிகவும் கட்டும் தமக்கு உறுதி அறும் இடத்து நீங்கும் இயல்பினர் ஆகிய இந்த ஒத்த நெறி இல்லாதார் கேண்மை பெறின் அதனால்

வரும் இன்பம் யாது? இழப்பின் அதனால் வரும் சேதம் யாது? மற்று ஒன்றும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—செல்வம் மிக்க காலத்து

நட்டு அஃது

அற்ற காலத்து நீங்குகின்ற நிகர் அல்லாதார் நட்பைப் பெற்ற அதனல் வரும் நன்மை யாது? இழந்த அதனல் வரும் தீமை யாது?

எ - று.

மக்களுள் இவரோடு ஒத்த இழிவு உடையார் இன்மையான் ஒப்பு இலாதார் எ - று.

அன்றியும் தன்னேடு பொருத்தம் இல்லாதார் என்றும் ஆம். இது கால புருடர் நட்புத் தீது என்றது. (5) கா. 6.

ப. 1).

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது கொள்வாருங் கள்வரு நேர்.

(கா - உ.) எ - து.—தமக்கு உறுவது பார்த்து வந்து சார்ந்த நட்டாரும், பெறுவது கொள்ளும் பொது மகளிரும், பொருள் சோர்வு பார்க்கும் கள்வரும், இம்மூவர்க்கும் வஞ்சனே தன்னில் ஒக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—நட்டோர்க்கும் தமக்கும் வரும் நன்மை தீமையை ஒக்கப் பார்த்துத் தமக்கு நன்மை ஆகும் அதனைச் சீர்மை தூக்கும் நட்டோரும், பெற்றது கொள்ளும் கணிகையரும், கள்வரும் மேற் கூறியவர்களோடு ஒப்பர் எ - று.

இம்மூவர் நட்பையும் ஆசாயின் அவர்களும் தீமை தருவர் என்றது. (6)

கா. 7.

ப. 2.

செய்தேமஞ் சாராச் சிறியவர்

கேண்மை

யெய்தலி னெய்தாமை நன்று.

(கா - உ.) எ - து —பலநாளும் தமக்கு ஒருவர் பேருதவி செய்தவர்க்கும் தாம சிறிதும் உறுதி சாராத புல்லியர் ஆகிய நீசர் நட்புப் பெறுதலின் பெறாமையே மிகவும் நன்று எ - று.

(ப - உ.) எ - து.—நட்புச் செய்து தனக்கு பாதுகாவல் ஆகாத புல்லியாரது புல்லிய நட்பைப் பெறுவதினும் பெறாமை நன்று எ - று.

இது சிறியார் நட்புத் தீமை பயக்கும் என்றது. சூதர், வேட்டைக்காரர், பெண்டிர் போல்வார்.

கா. 8.

ப. 5.

ஒல்லுங் கருமம் முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

(கா - உ). எ - து.—தமக்கு இயலும் கருமத்தையும் இயற்றுது கெடுபவர் கேண்மையை நாவினலும் உரையாடாராய்க் கழிய விடுக எ - று.

உடற்றுபவர் என்றது கெடுப்பவர் என்றது.

(ப - உ.) எ - து.—தம்மால் இயலும் கருமத்தை முடியாது வருத்துமவர் நட்பை நட்பு என்று சொல்லுமதும் செய்யாராய் விழ விடுக எ - று.

இஃது அழுக்காறு உடையார் நட்புத் தீது என்றது. (8) கா. 9.

ப. 6.

எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

(கா - உ.) எ - து.—எவ்வாற்றானும் சென்று அடைதலைப் பரிகரிக்க: யாதினை எனின் மனையிடத்துக் கெழுமி வைத்து மன்றின் கண் சென்றே பழித்து உரைப்பாரது நட்பினை எ - று.

(ப - உ.) எ - து.—சிறிதும் செறிதலைத்

தவிர்க : மனையின்கண் நட்டோராய்ப் இருந்து தவிர்க எ - று.

மன்றின்கண் குற்றம் கூறுவாரது நட்பைத்

இது குற்றம் கூறுவார் நட்புத் தீது என்றது.

(9) கா. 10.

ப. 3.

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

(கா - உ.) எ - து.—அறிவிலாதான் ஒருவன் கெழுமுதல் செய்து நட்பைச் செலுத்துவதினும்

வந்து பெருங்
அறிவுடையார்

பகைமை கோடி உறும் எ - று.

(ப - உ.) எ - து.—அறிவு இல்லாதார் மிகவும் கெழுமிய நட்பு ஆகும் அதனினும் அறிவுடையார் பகைமை கோடி மடங்கு மிக்க நன்மை உண்டாம எ - று.

இது பேதையார் நட்புத் தீமை பயக்கும் என்றது.

(கா - உ.) இனி, இங்ஙனம் உறின் நட்டு அறின் ஒரூஉம் தீ நட்பினும் கொடிது கூடாதார் நட்பே: அதனுல் மற்று இதன் பின் னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

45. கூடா நட்பு.

(ப - உ.) கூடா நட்பு ஆவது சுற்றத்தார் ஆயினும் பிறர் ஆயி னும் மனத்தினுல் நள்ளாது நட்டாரைப் போல ஒழுகுவார் இயல்பும் அவர் மாட்டு ஒழுகும் திறனும் கூறுதல். அவர் தாம் இருவகையர்: தமக்கு இனம் அன்றிக் கருமம் காரணம் ஆக நட்பாரும், பகைவராய் நட்பாரும் என: அவ்விரு வகையாரேலேயும் தீய நட்புப்போலக் கடிய வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 8.

தீர்விடங் காணி னெறிதற்குப் பட்டடை நேரா நிரந்தவர் நட்பு.

(கா - உ.) எ - து.—தமக்கு ஏறத் திருந்தின இடம் காணின் அவ ரைத் தாம் கொல்லுதற்குப் பட்டடை: யாது எனின், தமது அகத்து ஒவ்வாராய்ப் புறத்து ஒருவரோடு ஒத்தார் போன்று உள்ளவர் நட்பு

எ - று.

(ப - உ.) எ - து.— முடியும் இடம் காணின் மற்று ஒருவன் எறிதற்குப் பட்டடையாம்: மனத்தினுல் நோாது புறம் ஒத்தார் போல ஒழுகுவாரது நட்பு எ - று.

பட்டடையாவது தான் தாங்குவது போல நின்று வெட்டுவார்க்கு உதவி செய்வது. இது கூடா நட்பினுல் வரும் குற்றம் கூறிற்று. (1)

ப. 4.

கா. 2.

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

(கா - உ.) எ - து.—தாமும் சிலரோடு நட்டார் போல் நடித்துச் செவிக்கு இனியனவே சொல்லினும் அகத்து ஓர் ஒட்டு இல்லாதார் சொல்லும் அச்சொல்தானும் விரைய ஆராய்ந்து கொள்ள அடுக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—நட்டார்போல நல்லவை ஆராய்ந்து சொல்லினும் மனத்தினுல் பொருந்தாதார் சொல்லை இதுவும் ஒரு வினை உடைத்து என்று விரைய ஆராயப்படும் எ - று.

இது காரியமானவற்றைச் சொல்லினும் தேறல் அரிது என்றது. (2)

கா. 3.

ப. 5.

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணுர்க் கரிது.

(கா - உ) எ - து.—நல்ல நூல்கள் பலவற்றையும் பழுது அறக் கற்ற இடத்தும் அக்கல்விச் சிறப்பால் தன் நெஞ்சு இனியர் ஆகுதல் உள் தூய்மை இல்லாதார்க்கு அரிது எ - று.

(ப - உ.) எ - து.—நல்ல ஆகிய பல நூல்களைக் கற்ற இடத்தும் மனன் நல்லர் ஆகுதல் மாட்சிமை இல்லாதார்க்கு அரிது எ - று.

மனம் நன்மையாவது செம்மை: அஃது இவ்விடத்து இன்மை யால் மன நன்மை இல்லாதார் ஆயினர். இது கல்வியான் அறிதல் அரிது என்றது. (3)

கா. 4.

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

ப. 1.

(கா - உ.) எ - து.—புறத்து ஒருவரோடு ஒத்தார் போன்று இருந்து அகத்து அவ்வினம் இல்லாதார் நடிக்கும் நடிப்பு மகளிர் தமது உள்ளம் போல் இடம் காணின் வேறுபட்டு விடும் எ - று.

பொது மகளிர் என்னுது மகளிர் எனப் பொது வகையால் கூறி யது குலமகளிரும் குணம் கெடுதல் கூடும் என்பது குறிப்பு என்று

அறிக எ - று.

(ப - உ.) எ - து.—நட்டோர் போன்று மனத்தினுன் நட்பு இல்லாதார் நட்புப் பெண் மனம் போல வேறுபடும் ஆகலான் அவர் உள்ளக் கருத்து அறிந்து கொள்க எ - று.

இது நட்பாய் ஒழுகுவாரது உள்ளக் கருத்து அறிய வேண்டும் என்றது. (4)

கா. 5.

ப. 6.

சொல்வணக்க மொன்னுர்கட் கொள்ளற்க
தீங்கு குறித்தமை யான். [வில்வணக்கந்

(கா - உ.) எ - து.—முன்னரே வந்து சொல்லும் சொல் வணக்கத்தை அகம் பொருந்தாதார் மாட்டு என்றும் கைக் கொள்ளாது ஒழிக: என் எனின், வில் வளைந்த வணக்கம் எத்துணை உண்டு: அத் துணையும் கொலைக் குறித்து நின்றமையால் அது நினைக்க வேண்டும் எ - று.

(ப - உ.) எ - து.—தாழச் சொல்லும் சொல் வல்ல பகைவர் மாட்டு நன்று சொன்னுர் என்று கொள்ளாது ஒழிக: வில்லினது

வணக்கம் தீமையைக் குறித்தமை எதுவாக எ - று.

இது காழச் சொல்லினும் தேறப்படாது என்றது. (5)

கா. 6.

ப. 7.

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னு
ரழுதகண் ணீரு மனைத்து.

(கா - உ.) எ - து.—உள்ளம் பொருந்தாதார் புறமே தொழுத கையினைக் கண்டால் குறிக்கொண்மின்: அதுதானே கொலைக் கருவி அறிந்து ஒடுங்கக் கொண்மின்: மற்றவர் என்று உற்ற இடத்து அழுத கண்ணீரும் அத்தன்மைத்து எனவே அதுவும் உயிர்க்கு இறுதி செய்தற்கு அடிக் கொண்டதோர் கருவி எ - று.

இங்ஙனம் தொழுதலும் அழுதலும் அன்றி அவர் நகுதலும் அன்னது என்பதனை அறிவிக்கின்றது "முகத்தி னினிய நகாஅ ...." [கீழ்வரும் குறள் காண்க].

(ப - உ.) எ - து.—தொழுத கையுள்ளும் கொலைக் கருவி ஒடுங்கும்: பகைவர் அழுத கண்ணீரும் அவ்வாறு கொள்க எ - று.

இது மெல்லியர் ஆகத் தொழுத காலத்தினும் அழுத காலத்தினும் தேறப்படார் என்பது. இத்துணையும் கூடா நட்பினது இயல்பு கூறப்பட்டது. (6)

கா. 7.

ப. 2.

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு
வஞ்சரை யஞ்சப் படும்.

(கா - உ.) எ - து.—முகத்தினால் இனிய ஆக மகிழ்ந்து நகுத லும் செய்து மனத்தின்கண் இன்னாத வஞ்சரைக் காணின் அஞ்சப் படும் எ - று.

(ப - உ.) எ - து.—முகத்தான் இனிய ஆகச் சிரித்து மனத்திலே பொல்லாங்கு நினைக்கும் வஞ்சரை அஞ்ச வேண்டும் எ - று.

மேல் நட்பாய ஒழுகுவாரது உள்ளக் கருத்து அறிய வேணும் என்றார்: இஃது அறியுங்கால் குறிப்பினாதல், சொல்லினாதல் அறிய வேண்டும் அன்றே: அவை எல்லாவற்றானும் அறிதல் அரிது என் பார் முற்படக் குறிப்பினான் அறிதல் அரிது என்பதூஉம் கூறப் பட்டது. (7)

45. கூடா நட்பு

193

கா. 8.

ப. 10.

பகைநட்பாங் காலம் வருங்கான் முகனட்
டகனட் பொரீஇ விடல்.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் பகை நட்பு ஆம் காலம் வருங் கால் இது ஒன்று உடைத்து எனக் கருதிக் குறிக்கொண்டு தாமும் புறமே முகத்தினால் நட்புச் செய்து அகத்தான் இவரை நம்பி நள் ளாது ஒழித்து விடுக எ - று.

(ப - உ.) எ - து.—பகைவர் நட்பின் நட்பு ஆம் காலம் வந்த இடத்து முகத்தால் நட்பினைச் செய்து அகத்தால் நட்பினை நீங்கி விடுக எ - று.

இது பகைவோராய நட்டோர் மாட்டு கூறிற்று.

ஒழுகும் நிறன்
(8)

கா. 9.

ப. 9.

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(கா - உ.) எ - து.—கீழ்ச்சொன்ன அவையே அன்றிப் பின்னும் மிகப் பல செய்தே தம்மை உள்ளத்தால் பெரிதும் இகழ்ந்திருப்பாரை ஓர்ந்து, தாம் புறமே முகத்தான் நகச்செய்தே அவரொடு நட்பினுள் உள்ளுறச் செறியும் பகுதியினை உடைத்து அன்று எ - று.

நட்பினுள் சாப்புல்லற் பாற்று என்பது தாம் அவரொடு நட்பின்

கண் சாவப் புல்லுதல் என்றது. உள் புல்லற் பாற்று அன்று தாம் அவரொடு உள்ளுற அணைக்கும் பகுதியினை உடைத்து அன்று எ - று.

(ப - உ) எ - து.—நட்டாரைப் போலச் செய்யும் அவற்றை மிகச் செய்து மனத்தினுள் தம்மை இகழும் அவர்களைத் தாமும் மகிழுமாறு செய்து நட்பின்கண் நட்புச் சாவ நட்க எ - று.

இது கருமம் காரணம் ஆகி நட்டாரோடு கூறிற்று.

ஒழுகும் திறன்

(9)

கா. 10.

ப. 3.

மனத்தி னமையா தவரை யினைத்தொன்றுஞ் சொல்லிறற் றேறற்பாற் றன்று.

(கா - உ.) எ - து.—இவ்வாறு நெஞ்சினுள் நட்பு

தாரை அவர் சொல் பகுதியால் யாதானும் ஒன்று கட்குதல் பகுதியினை உடைத்து அன்று: எனவே ஒன்றும் குறிக்கொண்டு தம்மை ஒம்பிக்கொள்க என்பது பொருள் ஆயிற்று எ - று.

25

194 திருக்குறள் - பொருட்பால்

(ப - உ.) எ - து.—மனத்தால் பொருத்தம் இல்லாதாரை யாது ஒன்றின் கண்ணும் அவர் சொல்லிறுல் தெளியற் பாற்று அன்று

எ - று.

இது சொல்லிறுல்

த்து.

அறிதல் அரிது என்றது - நட்பியல் முடிந்
(10)

(கா - உ.) இனி இவற்றினும் தீது பேதைமை என்பதனுன் இவற்றின் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

46. (கா.) பேதைமை.—(பரி.)

துன்பவியல்.

(ப - உ.) துன்ப இயலாவது கேட்டிற்குக் காரணம் ஆகிய்வற்றது இயல்பு கூறுதல். இறைமாட்சி முதல் ஆகக் கூட்டாட்சி ஈறு ஆகப் பொருள் பகுதி ஆகிய அரசர்க்குரிய அமைச்சும், நாடும், அரணும், பொருளும், படையும் நட்பும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்பும் கூறினர்: இனி அவ்வாசர்க்கும் அவரால் ஆக்கப்பட்ட பொருட்கும் கேடுவரும் நெறியை அறிந்து காக்கும் ஆறு கூற வேண்டுதல் ஆதலின் இது கூறப்பட்டது. மேலதனோடு இயைபும் இது. அஃது யாங்ஙனம் கூறினர் எனின், அது கூறிய அதிகாரம் பன்னிரண்டினும், இதன் முதல் ஆகப் பெரியாரைப் பிழையாமை ஈறு ஆகப் பிறரால் கேடு வரும திறனும் அதனைக் காக்கும் ஆறும், தன்னுன் வரும் துன்பப் பகுதி ஐந்து அதிகாரத்தானும் கூறப்பட்டது.

கா. 1. ப. 4.

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்.

(கா - உ.) எ - து —செய்யத் தகாதன செய்தால் பிறர் சிரிப்பர் என்று நாணம் இல்லாமையும், நன்மையும் தீமையும் ஆராயாமையும், யாவர் மாட்டும் தன் நெஞ்சத்தொடு நட்பும் நயமும் இல்லாமையும், தவமும் ஞானமும் கல்வியும் முதலிய பெரும் பேறுகளின் யாதானும் ஒன்று தனக்கு வேண்டும் என்று பேணிக் கொள்ளாமையும் இப்படிச் சொல்லப்பட்டவை எல்லாம் மதிமயக்கை உடையது யாது? மற்று அதுவே பேதை தன் தொழில் எ - று.

(ப - உ.) எ - து.—நாணம் இன்மையும், தெரிந்து உணராமை யும், ஈரம் இன்மையும், யாது ஒரு பொருளையும் போற்றுமையும் பேதைடார் தொழில் எ - று.

இது பேதையார் தொழில் கூறிற்று.

பேதையார் இலக்கணம் கூறியவாறு.

இவை நான்கினனும்

(1)

46. (கா.) பேதைமை.—(பரி.) துன்பவியல்

195

கா. 2.

ப. 10.

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றூற் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்.

(கா - உ.) எ - து.—ஒருவன் மாசு அறக் கழுவாத காலைத் தூவெண் துகில் விரித்த சிறந்த படுக்கை மேல் சென்று வைத்த அத் தன்மைத்து: கல்வியால் மாசு அற விளங்கிய மனத்தூய்மை உடைய சான்றோர் அவையுள் நெஞ்சு அழுக்கு உடைய

பேதை சென்று புகுதல் எ - று.

(ப - உ.) எ - து.—கழுவாத காலைப் பள்ளியின்கண் வைத்தாற் போலும்: சான்றோர் அவையினகண் பேதை புகுந்து கூடி இருத்தல் எ - று.

இது பேதை இருந்த அவையும் இகழப்படும் என்றது. (2)

கா. 3.

ப. 5.

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

(கா - உ.) எ - து.—தான் பெற்று நின்ற ஒரு பிறவிக் கண்ணே செய்து கோடலே வல்லன் பேதையானவன்: யாதினையோ எனின், இனி வரும் பிறப்பின்கண் எஞ்ஞான்றும் ஒரு கரையேற்றம் இல்லாத வண்ணம் தான புக்கு அழுந்தும் கும்பி நரகத்தை எ - று.

(ப - உ.) எ - து.—பேதை ஒரு பிறப்பின்கண் .செய்யும் செயலானே செய்ய வல்லன் ஆம்: எழு பிறப்பினும் தான் புக்கு அழுந்தும் நரகத்தை எ - று.

எனவே அதற்குக் காரணம் ஆயின செய்யும் என்றவாறு ஆயிற்று. எழுபிறப்பினும் என்றது ஒருகால் அதன் அகத்திலே பிறந்தால் அவ்வுடம்பு நீங்கினாலும் பின்னும் அதன் உள்ளே பிறந்து அகலாது உறப் பேதை அறம் செய்யுமாறு கூறிற்று. (3)

கா. 4.

ப. 6.

மைய லொருவன் களித்தற்றூற் பேதைதன்
கையொன் றுடைடமை பெறின்.

(கா - உ.) எ - து.—முன்னமே பித்து எறினன் ஒருவன் பின்னும் கள் உண்டு களித்த அத்தன்மைத்து: யாதோ எனின், தான் முன்னமே யாதும் அறியாப் பேதையும் ஆய்ப் பின்னும் அதன் மேலே தன் கையகத்து ஓர் உடைமையும்.....செய்யும் முறைமை செய்யான் ஆம் எ - று.

(ப - உ.) எ - து.—முன்னே பித்தாய் மயங்கிய ஒருவன் மது உண்டு களித்தால் போலச் செய்வது அறியான் ஆம் பேதையான வன் கையகத்தே ஒரு பொருள் உடையன் ஆகப் பெற்றான் ஆயின்

எ - று.

இது பொருள் பெற்றால் ஒழுகும் திறன் கூறிற்று.

(4) கா. 5.

ப. 2.

பேதைமையு ளெல்லாம் பேதைமை
காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

(கா - உ.) எ - து.—அறியாமைகள் எல்லாவற்றினும் மிக்க அறியாமை யாவது யாதோ எனின், செய்யும் முறை அல்லவற்றின்கண் காதன்மை செய்தலே கீழ்ச் சொன்ன நாகாதிகட்குக் காரணம் ஆகிய பாவங்கள் எல்லாப் பிணைக்கும் இவன் காதன்மை என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—அறியாமை எல்லாவற்றுள்ளும் அறியாமை ஆம்: தனக்குக் கை வாராத பொருளின்கண் காதன்மை செய்தல் எ - று.

இது வருந்திஞதும் பெறுததுக்குக் காதல் செய்ததும் பேதைமை என்றது. (5)

கா. 6.

ப. 7.

பொய்படு மொன்றே புணைபூணுங் கையறியாப் பேதை வினைமேற் கொளின்.

(கா - உ.) எ - து.—அவ்வினை செய்யத் தகும் ஒழுக்கம் அறியாப் பேதையானவன் ஒரு வினை செய்ய ஒருப்படும் ஆயின் அது பொய்யாய் விடும் ஒன்றே: அன்றி இனி ஒன்றே மேல் விளைவது அறியாது பிறர்க்குத் தான் புணை ஆதலைத் தன் மேலே எறட்டுக் கொள்ளும் எ - று.

(ப - உ.) எ - து.—பயன் அறியாப் பேதை ஒரு வினையை மேற் கொளவன் ஆயின் அஃது ஒன்றில் தப்பும்: ஒன்றில் செய்ய வல்லாரைத் தேடும்: அல்லது தான் செய்து முடிக்க மாட்டான் எ - று.

இது பொருள் செய்யும் திறன் கூறிற்று.

(6) கா. 7.

ப. 8.

ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

46. (கா.) பேதைமை—(பரி.)

துன்பவியல் 197

(கா - உ.) எ - து.—அயலார் பலரும் உண்டு இனிது இருப்பத் தனக்கு இன்றியமையாத சுற்றத்தார் பலரும் பசியொடு வாழ்வர் அக்குடிப்பிறந்த பேதையானவன் விதியினால் ஒரு பெருஞ் செல்வம் உற்ற இடத்து எ - று.

(ப - உ.) எ - து.—அசலார் உண்ண உற்றூர் பசித்திருப்பர் பேதையானவன் பெரிய செல்வத்தை உற்ற இடத்து எ - று.

இது பேதை பொருள் பெற்றால் வழங்கும் திறன் கூறிற்று. (7) கா. 8.

ப. 9.

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(கா - உ.) எ - து. – மிகவும் இனிது இப்பேதையார் நட்பு: என்னை காரணம் எனில், அவர் பிரிந்த பிரிவின் இடத்து நெஞ்சுக்கு ஒரு துயரம் தருவது யாது ஒன்றும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—மக்கட்குப் பேதையாரது நட்பு மிகவும் இனிது: பிரிந்த இடத்து வருவது ஒரு துன்பம் இல்லையாதலான் எ - று.

இது காமம் துய்க்குமாறு கூறிற்று.

(8) கா. 9.

ப. 1.

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்
தீதியம் போக விடல். [கொண்

(கா - உ.) எ - து.—அறியாமை என்று சொல்லப்படுவது யாது எனின் குற்றம் ஆகிய செயலைக் கொண்டு உறுதி ஆகிய செயலைச் செய்யாதே விடுதல் எ - று.

அல்லதூஉம் பேதைமை என்று சொல்லப்படுவது ஆகிய தீக் குணம் ஒன்று உண்டு அஃது யாதோ எனின் பிறர் குற்றம் முழுவ தும் கைக்கொண்டு மற்று அவர் தமது நற்குணம் அனைத்தும் கழிய விடுதல் எ - று.

(ப - உ.) எ - து.—அறியாமை என்று சொல்லப்படுவது யாது எனின் குற்றம் பயப்பனவற்றைக் கைக்கொண்டு நன்மை பயப்பனவற்றை விடுதல் எ - று.

பேதைதமையின் இலக்கணம் கூறுவார் அறியாமை என்று கூறினர்.

முற்படத் தன் கருமம்
(9) 198

திருக்குறள் - பொருட்பால்

கா. 10.

ப. 3.

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தாமடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(கா - உ.) எ - து.—கற்கக்கடவ நூல்கள் அனைத்தையும் கற்றும் அவற்றின் பொருள் முழுவதும் உணர்ந்தும் மற்று அவை பிறர்க்கு இவ்வண்ணமே உரைத்தும் பின்னும் தான் அமைவு உடையன் ஆகா தான் யாவன் ஒருவனைப் போலப் பேதைமை உடையார் உலகத்து யாவரும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—நூல்களைக் கற்று அறிந்தும் அதனைப் பிறர்க்கு இசையச் சொல்லியும் தாம் அடங்குதலைச் செய்யாத பேதையைப் போலப் பேதையார் உலகத்து இல்லை எ - று.

கல்வி உடையாரை அறிவு உடையார் என்று உலகத்தார் கூறுவர் ஆதலின் அதனை மறுத்துக் கூறுர் ஆயினும் அடக்கம் இல்லை ஆயின் பேதையர் என்று கூறப்பட்டது. (10)

(கா - உ.) இனித் தமக்கு உள்ள மதிகொண்டு பழுதுடன் சில கற்றும் கல்லாதும் போறிவு உடையர் ஆகப் பாவித்திருக்கும் புல்லறிவாளர் அறிவும் பேதைமையின்கண் ஓர் பிரிபு உரு ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

47. புல்லறிவாண்மை.

(ப - உ.) புல்லறிவாண்மை யாவது சிற்றறிவின் இயல்பும் அதனால் வரும் குற்றமும் கூறுதல். இதுவும் பேதைமையோடு ஒத்த இயல்பிற்று ஆதலான் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 8.

அறிவின்மை யின்மையு ளின்மை
பிறிதின்மை

யின்மையா வையா துலகு.

(கா - உ.) எ - து. —கற்கப்படு நூல்கள் பலவற்றையும் கசடு அறக் கற்று மனத்து இருள் நீங்கி நுணுகிப் பார்த்த அறிவு ஒருவர்க்கு இல்லாமையே இல்லாமை ஆவது: அதனால் அவ்வறிவின் வேறு பட்டு உள்ள இல்லாமை ஒன்றையும் இல்லாமையாக வைத்து எண் ணுர் உயர்ந்தோர் எ - று.

(ப - உ.) எ - து.—நல்குரவினுள் நல்குரவு ஆவது அறிவு இன்மை; ஒருவருள் இன்மையை நல்குரவு ஆக எண்ணுர் உலகத்தார்: [redacted]ணியும் செய்தார் மாட்டே சேரும் ஆக்கம் எ - று.

47. புல்லறிவாண்மை 199

அறிவு புண்ணியம் செய்தாற்கு உளது ஆமோ எனின், அது முயற்சியானும் வரும் ஆதலின் வேறு பகுத்துக் கூறினர். இனி அறிவின்மை யான் வரும் குற்றமும் கூறுவார் முற்பட இதனின் மிக்க நல்குரவு இவ்லை என்றார்.

(1)

கா. 2. ப. 10.

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை செறுவார்க்குஞ் செய்த லரிது.

(கா - உ.) எ - து.—புல்லறிவாளர் ஆகிய அறிவு கேடர் தாமே தம்மைத் துயர் உறுக்கும் துயரம் சொன்ன வறுமையே அன்றித் தம்மைப் பெரிதும் செறுக்கும் பகைவர்க்கும் செய்தல் அரிது எ - று.

(ப - உ.) எ - து.—அறிவு இலாதார் தாமே தம்மை இடர்ப்படுத் தமது பகைவர்க்கும் செய்தல் அரிது எ - று.

இது மேல் கூறிய அதனை வலியுறுத்திற்று. இதனானே பிழை கூறுகின்ற துன்பத்தை உண்டாக்கும் அவற்றுக்குக் காரணம் ஆம் என்பதூஉம் கண்டு கொள்க. (2)

கா. 3.

ப. 5.

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்

குறற மறையாக கடை.

(கா - உ.) எ - து.—தமக்குப் பொருள் அற்றம் தீர்த்தல் சாலப் புல்லறிவு என்றது. தமக்கு வறுமையை நீக்குவதாகக் குற்றம் செய்தலே புல்லறிவு என்று ஆயிற்று: எனவே ஒருவர் விரைந்து மறைத்திற்கு முயல்வது இவ்வற்றம் அல்லது பொருள் அற்றம் மறைத்தல் அன்று என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—தம்மாட்டு உள்ள குற்றத்தைப் பிறர் அறியாமை மறைத்த காலத்துப் பிறர் காணுமல் முறைக்க வேண்டும் உறுப்பை உடையான் மறைத்தல் புல்லறிவு எ - று.

எனவே அதுவும் மறையான் ஆயின் குற்றம் காடுவார் இல்லை என்றவாறு ஆயிற்று. இது குற்றம் மறையாமை புல்லறிவு என்றது. (3)

கா. 4.

அறிவிலார் நெஞ்சுவந் தீதல் பிறிதுயாது
மில்லை பெறுவான் றவம்.

ப. 7.

(கா - உ.) எ - து.—புல்லறிவாளன் ஆகிய அறிவு கேடன் தன் மனம் மகிழ்ந்து ஒருவர்க்குப் பொருள் கொடுத்தல் என்கின்ற இது பிறிது யாதானும் ஒன்றும் இல்லை. இஃது அன்றி [redacted]தோ

எனில் அவன் வயின் பெறுகின்ற வளம் முன் முன்செய்த நல்வினைப் பயனே யன்றி யாது ஒன்றும் இல்லை காரணம் எ - று.

பரி. பா - மி. " அறிவிலா னெஞ்சுவந்து ".

(ப - உ.) எ - து.—அறிவு இலாதான் மகிழ்ந்து கொடுத்தற்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை : அப்பொருளைப் பெறுகின்றவன் நல்

வினைப்பயன் எ - று.

இது கொடுத்தான் ஆயினும் வரிசை அறியாது கொடுக்கும் ஆகலின் புல்லறிவு ஆயிற்று. இத்தனையும் புல்லறிவின் இயல்பு கூறப்பட்டது. (4)

கா. 5.

ப. 2.

கல்லாத மேற்கொண் டொழுகல்
கசடற
வல்லதூஉ மையந் தரும்.

(கா - உ.) எ - து.—தான் கல்லாதவற்றையும் கற்றுணுகத் தன் மேல் ஏறட்டுக் கொண்டு நடத்தல் யாது? அது மற்றுத் தான் கசடு அறக் கற்று வல்லதூஉம் ஐயப்படுதலிலச் செய்யுமாறு எ - று.

(ப - உ.) எ - து.—தான் முடியக் கல்லாதவற்றைக் கற்றுணுக எறிட்டுக் கொள்ளுதல் குற்றம் தீரக் கற்றதனையும் ஐயம் ஆக்கும் எ - று.

இது கல்லாததனை மேற்கொள்ளுதல் புல்லறிவு என்றது. (5)

கா. 6.
ப. 4.

காணுதாற் காட்டுவான் றுன்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

(கா - உ.) எ - து.—தான் கற்றது ஒன்றின் மெய்ப் பொருளைக் காண அறியாத புல்லறிவாளன் தான் கண்ட ஆற்றையே குறித்து ஒன்றைக் கசடு அறக் காட்டக் கருதுவான் யாவன்? அவன் தானும் மற்று அன்னனே ஆம்: என்னை எனின், தான் காட்டும் மெய்ப் பொருள் காணுதான் ஆகிய புல்லறிவாளன் தான் கண்டவற்றையே கண்டானுய் விடும் இத்தனை அல்ல: ஓர்ந்து கைக்கொள்ளும் கருத்தினன் அல்லன் எ - று.

(ப - உ.) எ - து.—அறியாதானே அறிவிக்கப் புகுவான் தான் அறியான் ஆகும்: அவ்வறியாதவன் அறிந்தபடியே அறிந்திருக்கும் ஆதலான் எ - று.

இது கேண்டது விடாமை புல்லறிவு என்றது.

(6) 47. புல்லறிவாண்மை 201

கா. 7.

ப. 6.

ஏவவுஞ் செய்கலான் ரூன்றோ ரனவ்வுயிர்
போழ மளவுமோர் நோய்.

(கா - உ.) எ - து.—தானும் அறியான் பிறர் சொல்லவும் செய்யான் ஆகிய புல்லறிவாளன் யாவன்? அவன் உயிர் நீங்கும் அளவும் விடாது அனுபவிப்பது ஓர் நோயாம் இக்குணை எ - று.

(ப - உ.) எ - து.— அறிவுடையார் சொல்லவும் தான் செய்யான்: அத்தன்மையன் ஆகிய சீவன் போம் அளவும் உலகத்தார்க்கு ஒரு நோயைப் போல்வன் எ - று.

ஏவுதல் - தான் தெரிய என்று ஏவுதல் தெளிதல் - பொருள் யாதென்று தெளிதல். இம்மூன்று சட்டினை பொருளைக் கொடுத்தலும் தூய்த்தலும் செய்யாமை புல்லறிவு என்றது. வேறு செப்பும் வினைக்கும் ஒக்கும்.

(7)

அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(கா - உ.) எ - து —இவர் எமக்கு இனியர் என்று கருதிப் பிறர்க்கு உரைத்தற்கு அரியது ஓர் மறையினை ஒருவர் சொனலும் அதனை அடக்குவது ஓர் அமைவு இன்றிப் பின்பு அவ்விடத்திலே சோரவிடும் புல்லறிவாளன் மற்று அவன் தானே தனக்குப் பிறிது ஒன்றாலும் நோத பெரிய துக்கத்தைச் செய்து அனுபவிக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—அறிவு இல்லாதான் தான் அரிது ஆக எண்ணின மறைப்பொருள் சோரவிடும்: அதுவே அன்றித் தனக்குத் தானே பெரிய துன்பத்தினையும் செய்து கொள்ளும் எ - று.

சோரவிடுதல் - பிறர்க்குச் சொல்லுதல். இது பொருள் கேடும் உயிர்க்கேடும் தானே செய்யும் என்றது. (8)

கா. 9.

ப. 1.

வெண்மை யெனப்படுவ தியாதெனி
லொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

(கா - உ.) எ - து — பலராலும் இது வெள்ளறிவு என்று பழித்து உரைக்கப்படுவது யாதோ எனின் எல்லாரினும் யாம் சால நுண் ணறிவு உடையோம்

என்று இருக்கும் பெருமிதம் எ - று.

வெள்ளறிவு: ஆவது புல்லறிவு ஆவது.

26

(ப - உ.) எ - து.—புல்லறிவு என்று சொல்லப்படுவது யாது எனின் யாம் அறிவு உடையேம் என்று தம்மைத் தாம் மதிக்கும் களிப்பு எ - று.

வெண்மை - காழ்ப்பு இன்மை: முற்றுதல் இன்மையின் வெண்மை எனப்பட்டது. புல்லறிவு ஆவது இத்தன்மைத்து என்று கூறுவார் முற்பட அறிவு இல்லாதவன் அறியேன் என்னாது அறிவுடையோன் ஆகத் தன்னை மதித்தல் புல்லறிவு என்றது. (9)

கா. 10.

ப. 3.

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்

தலகையாய் வைக்கப் படும்.

(கா - உ.) எ - து.—திருந்திய கேள்வியின் உயர்ந்தோர் தெரிந்து உண்டு என்னும் மெய்ப்பொருளை அஃது இல்லை என்று கழறுவான் யாவன் ஒரு புல்லறிவாளன், அவனை ஈண்டு ஒரு மகன் என்று கருத அடாது : பின்னை என் எனின் பேய்களுடன் இவனும் ஒரு பேயாக வைத்து எண்ண அடுக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—உலகத்து அறிவு உடையார் பலரும் உண்டு என்பது ஒரு பொருளை இல்லை என்று சொல்லுமவன் இவ்வுலகின் கண்ணே ஒரு பேய் என்று எண்ணப்படும்.

இஃது உயர்ந்தோர் உண்டு என்பதனை இல்லை என்றல் புல்லறிவு என்றது. (10)

(கா - உ.) இத்தன்மையர் ஆகிய புல்லறிவாளருடன் கெழுமல் ஆகாமை உணர்த்தி மற்று அதன் பின்னரே ஒருவரோடும் இகல் கோடலும் ஆகாது என்பதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

48. இகல்.

(ப - உ.) இகல் ஆவது பிறரோடு மாறுபாடு கொண்டார்க்கு வரும் குற்றம் கூறுதல். இஃது அறியாதார்க்கு உளது ஆம் ஆதலின் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 7.

இகலானு மின்னுத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு.

(கா - உ.) எ - து.—யாவரோடு ஆயினும் தான் கொள்ளும் மாறுபாட்டானே உள ஆம்: யாவை என்னின் பெரிதும் இனனு தன அணைத்தும்: மற்று இனி யாவரோடு ஆயினும் முகமலர்ந்து

இனிது ஒழுகுவரேல் அதனல் ஆம் நல்ல ஆசாரம் என்று சொல்லப் படுகின்ற யாவரும் மகிழும் மகிழ்ச்சி எ - று.

(ப - உ.) எ - து.—மாறுபாட்டினனே

துன்பங்கள் எல்லாம்

உள ஆம்: உடன்பட்டு நகுதலானே நன்னயம் களிப்பு உண்டாம் எ - று.

ஆகிய உள்ளக்

மேல் கூறிய குற்றம் எல்லாம் பயத்தலின், தனக்கும் பிறர்க்கும் மகிழ்ச்சி உண்டாம் என்றது.

அதனைத் தவிரத்

(1)

கா. 2.

ப. 8.

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற்

றவலில்லாத்

தாவில் விளக்கந் தரும்.

(கா - உ.) எ - து.—இகல் என்று சொல்லப்படும் தயர் விளைக்கும் நோயை ஒழிப்பின் பின் கெடுதலும் இன்றி மற்றும் தமக்கு ஓர் விளக்கத்தையும் தரும் எ - று.

எவ்வம் என்பது துக்கம்: கா என்பது வருத்தம்.

(ப - உ.) எ - து.—மாறுபடுதல் ஆகிய இன்னாத நோயை நீக்குவான் ஆயின் அந்நீக்குதல் கேடு இல்லாத குறை அற்ற ஒளியினைத் தரும எ - று.

இது தோற்றம் உண்டாக்கும் என்றது.

(2) கா. 3.

ப. 5.

இகலின் மிகலினி தென்பவன்

வாழ்க்கை

தவலுங் கெடலு நணித்து.

(கா - உ.) எ - து.—இது நமக்குத் தகாது என்று மீட்சி இன்றிப் பிறரோடு இகலின்கண்ணே மிகுதலே.....பவரது வாழ்க்கை குறைபடுதலும் கெட்டுவிடுதலும் நணித்து எ - று.

தவல் என்பது குறைதல்.

(ப - உ.) எ - து—பிறருடன் மாறுபாட்டின்கண் மிகுதல் இனிது என்று கருதுமவனும், அவன் மனை வாழ்க்கையும் சாதலும் கெடுதலும் அணித்து எ - று.

நிரனிறை - இது சாயான் ஆயின் உயிர்க்கேடும் பொருள் கேடும் உண்டாம் என்றது. (3)

கா. 4.

ப. 4.

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

(கா - உ.) எ - து.—தம்மொடு பிறர் வந்து இகலின் அவ்விகல் எதிர் மலையாது தலை சாய்ந்து ஒழுக வல்லாரை மற்று யாரேதான் அவர் மேம்பாட்டைத் தள்ளும் தன்மை யவர்? எ - று.

மிகல் என்பது மேம்பாடு. ஊக்குதல் என்பது

கள்ளுதல்.

(ப - உ.) எ - து.— இகலின் எதிர் சாய்ந்து ஒழுக வெல்ல நினைக்கும் தன்மையவர் யாவர் தான்? எ - து. வல்லானை

மேல் இகலின்கண் சாய்ந்து ஒழுக வேண்டும் என்றார்: அது தோல்வி ஆகாதோ என்றார்க்கு அவனை வெல்வார் இல்லை என்றது.(4)

கா. 5.

ப. 3.

இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை மிகலூக்கி னூக்குமாங் கேடு.

(கா - உ.) எ - து.— தப்முடன் பிறர் இகலும் இகலில் தான் எதிர் தலை சாய்ந்து ஒழுகுதல் யாவது? அது தமது ஆக்கத்தைக் கொணர்ந்து ஊக்கும்: இனி அங்ஙனம் தலை சாய்ந்து ஒழுகக் கரு தாது மற்று அதனை இகலின் கண்ணே நெஞ்சு ஊக்கின் ஆங்கு அது கொணர்ந்து ஊக்குமாம் கேடு என்பதனை எ - று.

(ப - உ.) எ - து.— மாறுபாட்டிற்குச் சாய்ந்து ஒழுகல் ஆக்கம் 'ஆம் : அதனை மிகுதலை நினைக்கின் கெடும் எ - று.

இது மாறுபாட்டிற்குச் சாய்க்க வேண்டும் என்றது. (5)

கா. 6.

ப. 9.

இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(கா - உ.) எ - து. —இன்பத்துள் மிக்க இன்பத்தைத் தரும் : இகல் என்னும் துன்பத்துள் மிக்க துன்பம் கெடின் எ - று.

(ப - உ.) எ - து.— இன்பத்தின் மிக்க இன்பத்தை எய்தும் : மாறுபாடு ஆகிய துன்பத்தின் மிக்க துன்பம் போம் ஆயின் எ - று.

எல்லா இன்பத்தினும் மிக்க வீடு என்றது.

பேற்று இன்பமும் எய்தும்
(6)

கா. 7.

ப. 1.

இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

(கா - உ.) எ - து —காம் பிறரொடு மாறுபட்டு ஒழுகும் மாறுபாடு என்று சொல்லுப சான்றோர் : எவ்வுயிர்க்கும் இனிது மேவி

ஒழுகாது வேறுபடுதல் என்னும் இப்பண்பு இன்மையைப் பரப்பும் நோய் எ - று.

பகல் என்பது பகுதல் என்றது. பாரித்தல் என்பது பரப்புதல்.

(ப - உ.) எ - து.—எல்லா உயிர்க்கும் வேறு படுதல் ஆகிய குணம் இன்மையைப் பரப்பும் துன்பத்தை இகல் என்று சொல்லுவர் அறிவோர் எ - று.

இஃது இகலாவது இது என்று கூறிற்று.

(7) கா. 8.

ப. 2.

இகல்காணு னுக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு வரற்கு.

(கா - உ.) எ - து.—தான் பிறரோடு இகலுதலைக் காணன்: தனக்கு ஓர் ஆக்கம் வாக்கடவதான காலத்து: இனி மற்று அதனை மேல் மேலும் மிகுதலை காணும் தனக்குக் கேடு வருவதற்கு உரிய காலத்து எ - று.

(ப - உ.) எ - து —மாறுபடுதற்குக் காரணம்

உண்டாயினும்,

ஆக்கம் வரும் காலத்து மாறுபாடு காணான் : அதனை மிகுதலை காணும் கேடு வரும் காலத்து எ - று.

இம்மாறுபாடு நல்வினை உடையார்க்குத் தோற்றுது என்றது.(8)

கா. 9.

ப. 6.

மிகன்மேவு மெய்ப்பொருள் காணு ரிகன்மேவு
மின்னு வறிவி னவர்.

(கா - உ.) எ - து.—தன்னின் பெரியது பிறிது இன்றித் தானே பெருமை மேவுதல் பண்பிற்றுப் என்றும் யாது ஒருபடி படு நிற்பது ஆகிய இம்மெய்ப் பொருளைக் காணமாட்டார் யாரோ எனின் சில சமய வேற்றுமை பற்றி நின்று அதன் மேவுதல் பண்பிற்று ஆகிய இப்பெரியது ஓர் இன்னுக அறிவினார் எ - று.

மிகன்மேவு என்பது பெருமை.

(ப - உ.) எ - து.—மிகுதலைப் பொருந்துகின்ற உண்மைப் பொருளைக் காணமாட்டார்: மாறுபாட்டினைப் பொருந்தின இன்னுத அறிவு உடையார எ - று.

மெய்ப்பொருள் காணர் என்றமையால் கல்வியின்கண் தருக்கத் தினால் மாறுபடுவாரை நோக்கிற்று. இது மாறுபடுவார்க்கு மெய்ப் பொருள் தோன்றுது என்றது. (9)

கா. 10.
ப. 10.

பகல்கருதிப் பற்றூ செயினு மிகல்கருதி யின்னுசெய் யாமை தலை.

(கா - உ.) எ - து.—தம்மொடு சிறிதும் பற்று இல்லாதார் வந்து கருதிக்கொண்டு மாறுபடுதலைச் செய்யினும் தாம் அவரொடு மிகல் கருதிகொண்டு மற்று அவர்க்கு இன்னுதவற்றைச் செய்யாமையே தமக்குத் தலைமைப்பாடு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—தம்மொடு பற்று இல்லாதார் வேறுபடுதலைக் கருதித் தீயவற்றைச் செய்தார் ஆயினும் அவரொடு மாறுபடுதலைக் கருதித் தாமும் அவர்க்கு இன்னுதவற்றைச் செய்யாமை நன்று எ - று.

மேல் கூறிய குற்றமும் குணமும் பயக்கும் ஆதலின் மாறுபடு தற்குக் காரணம் உள்வழியும் தவிர்தல் வேண்டும் என்றது. (10)

(கா - உ.) ஓர் ஆசர்க்குப் பகை விளைக்க வேண்டிய வழி மற்று அதனால் அவர்க்கு ஓர் அழிவு வாராது மாட்சிமைப்பட ஆராய் தலும் அமைச்சர்க்குக் கடன் ஆகிய ஆற்றூன் முன்னம் மிகைத்து இகல் செய்யல் ஆகாது என்பதனை. அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

49. பகைமாட்சி.

(ப - உ.) பகை மாட்சி ஆவது பகை கொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல். மேல் பகைகோடல் ஆகாது என்றார்: இது பகை கொள்ளுங்கால் நன்மை பயக்கும் ஆகின் கொள்க என்றமையால் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 6.

துணைநிலையுக் குற்றம் பலவாயின் மாற்றார்க் கினனிலை மேமாப் புடைத்து.

(கா - உ.) எ - து.—தன் வயின் குணம் என்பது ஒன்றும் இலையுக் குற்றம் பல உடையனாய் இருப்பின் அவனொடு மாறுபாடு கொள்ளக் கருதுகின்ற மாற்றார்க்கு இணை இல்லாதது ஓர் சேம உறுதியைப் பெரிதும் உடைத்து எ - று.

இனன் இலன் என்றது இணை இலன் என்றது.

(ப - உ.) எ - து.—குணங்கள் யாதும் இலையுக் குற்றங்கள் பல உடையனாயின் அவன் துணை இலன் ஆம்: அது மாற்றார்க்கு

ஏமம் ஆதலை உடைத்து ஆம் எ - று.

அன்றியும் மாற்றார்க்கு இவன் துணை இலன் என்று மனத்தின் கண் கொள்ளும் வலி உடைத்தாம் என்றும் ஆம். மேல் பகைவர் மாட்டுக் குற்றம் பெருகின், அவனை வெல்லலாம் என்றார்: இக் குற்றம் தம் மாட்டும் உளதாயின் வெல்ல ஒண்ணாது என்று இது பொதுவாகக் கூறப்பட்டது. குற்ற வகை மேல் கூறப்படுகின்றன. (1)

கா. 2. ப. 1.

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா மெலியார்மேன் மேக பகை.

(கா - உ.) எ - து.—ஆள்வலி, தோள்வலி, பொருள்வலி, துணை வலி முதலிய இவற்றால் தம்மின் வலியார்க்குத் தாம் மாறுபாடு ஏற்றலைப் பரிகரிக்க: மற்று யார் மாட்டு எனின் தம் வன்மையும் மென்மையும் சீர்தூக்கித் தம் வலியைப் பரிகரிக்க: வல்லாத மெலியார் மாட்டு மேவுக பகைமை எ - று.

மேக பகை என்றது மேவுக பகைமை என்றது.

(ப - உ.) எ - து.—தம்மின் வலியார்க்குப் பகையாய் எதிர் கலைத் தவிர்க. தம்மைப் போற்றுத எளியார் மாட்டுப் பகை கோடலை மேவுக எ - று.

இது தனக்கு எளியாரோடு பகை கோடல் ஆம் என்றது. (2)

கா. 3.

ப. 2.

கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானே யொல்லா தொளி.

(கா - உ.) எ - து.—சிறந்த நூல்களைக் கல்லாதானும் ஆய்க் கண்டாரோடு எல்லாம் வெகுளுவானும் ஆய் எஞ்ஞான்றும் இழி பொருள் விரும்பு.....ப்பானே மேவ மாட்டாது புகழ் எ - று.

சிறு பொருள் என்பது இழிவு பொருள். ஒளி என்பது புகழ்.

(ப - உ.) எ - து.—கல்லாதானும் ஆய் வெகுட்சியும் உடையனும் ஆய்ச் சிறு பொருளனும் ஆகிய பகைவனை எல்லா காலும் ஒளி பொருந்தாது எ - று.

மேல் தம்மைப் பாதுகாவாத எளியாரைப் பகை கொள்ளலாம்

என்றார்: அவர் எத்தன்மையர் என்றார்க்கு அவாது இலக்கணம் கூறுவார் முற்பட இவை மூன்றும் உடையார்க்கு விளக்கம் உண்டாகாது ஆகலின் அவரொடு பகை கொள்ளலாம் என்றார். (3)

கா. 4.

ப. 3.

செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(கா - உ.) எ - து.—வந்து அடர்க்க நினைவார்க்குத் தம்மைச் சேண் நீங்கா இன்பம் ஆனவை: எவ்விடத்து எனின்,.....ங்கு தெரிந்து அறிவு இல்லாதவரும் ஆவோர் எதிர் காணின் உள் நடுக்கம் உடைய பகைவரைப் பெறின் அவ்விடத்து எ - று.

சேண் இகவா இன்பம் என்பது நீங்கா இன்பம் என்றது.

(ப - உ.) எ - து.—அறிவு இல்லாத அச்சம் உடைய பகைவரைப் பெறின் அவரைச் செறுவார்க்கு இன்பம் தூரப் போகாது: அணித்து ஆக வரும் எ - று.

அறிவு - காரிய அறிவு. இவை இரண்டும் ஒருங்கு உடையார் வெல்ல மாட்டார் ஆதலால் பகை கொள்ளலாம் என்று கூறப் பட்டது.

(4)

கா. 5.

ப. 4.

காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும்.

(கா - உ.) எ - து.—ஈண்டு இதுக்குத் தகாது என்று நோக்

காது செய்யும் சினத்தை உடையோனும் ஆய் நெறிபட்டு வருவன ஒழியப் பேணுமை ஆகிய நெறி கெட வருஉம் தனம் முதலியவற்றைக் காமித்துச் செல்வோனும் ஆய் இதனல் பகையை விரும்பிக் கைக்கொள்ளப்படும் எ - று.

(ப - உ.) எ - து.—மீண்டு பாராச் சினத்தனும் ஆய் மிகப் பெரிய காமத்தனும் ஆகியவன் பகையை விரும்பப்படும் எ - று.

கான்றச்சினம் என்றது மேல் கூறிய வெகுட்சியின் மிகுதியை. இவை உடையார் நட்டோர் இலர் ஆவர் ஆதலால் பகை கோடல் ஆம் என்றது.

(5) கா. 6.

ப. 10.

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்
பண்பிலன் பற்றார்க் கினிது. [கான்

(கா - உ.) எ - து.—நூல்நெறி ஆராய்ந்து பாரானும் ஆய் மற்று அதனுலே வாய்ப்பு உடைக் கருமங்கள் செய்யானும் ஆய் மற்று இவை செய்தார் பிறர் பழிக்கும் பழித்தரை பாரானும் ஆய்

மற்று உலக வழக்கம் ஆகிய மாபு இலனும் பகைவர்க்குச் சால இனியது ஒன்று எ - று.

ஆயின் அவன் பகை

(ப - உ.) எ - து.—ஒருவினை செய்யத் தொடங்குங்கால் பின் வருவன பாரான்: பயன் படுவனவற்றைச் செய்யான்: அதனால் உறும் பழியைப் பாரான்: குணமும் இலன்: இவன் பகைமை பகைவர்க்கு இனிது ஆம் எ - று.

இவன் பகைமையால் பகைவர்க்கு இனிமை உண்டாகும் என்றது. இவை-ஐந்தினையும் தான் திருந்த வேண்டும் என்று கூறப் பட்டது.

(6)

கா. 7.

ப. 9.

நீங்கான் வெகுளி நிறைவில
னெஞ்ஞான்றும்
யாங்கணு மயார்க்கு மெளிது.

(கா - உ.) எ - து.—பெரிதும் சினம் தணியாதும் ஆய்த் தன்னை நிரப்பத்தை வைக்கும் நிறைவு இலனும் ஆயின், மற்று அவனொடு பகைமை எல்லாக் காலமும் எவ்விடத்தானும், யாவர்க்கு ஆயினும் எளிது எ - று.

(ப - உ.) எ - து.—வெகுளியினின்றும் நீங்காஞ்ய், நிறை உடைமையும் இலன் ஆயின், அவனை வெல்லுதில் எக்காலத்தும் எவ்விடத்தும் யாவர்க்கும் எளிது எ - று.

இவை இரண்டும் உடையவன் எல்லார்க்கும்
தோற்கும். (7)

கா. 8.
ப. 5.

கொடுத்துங் கொளல்வேண்டு
மன்ற வடுத்திருந்து
மாணுத செய்வான் பகை.

(கா - உ.) எ - து.—தமக்குச் சிறந்தது யாதானும் கொடுத்தும் கோடல் வேண்டும்: என்றது யாதினை எனின்.....மண்டித்திருந்து தானே தனக்கு இன்னுதவற்றைச் செய்வானது பகையினை எ - று.

(ப - உ.) எ - து.—பகையை உற்றிருந்தும் மாட்சிமை இல்லாதன செய்யுமவன் பகையினை ஒன்றனைக் கொடுத்தும் கொளல் வேண்டும் துணிந்து எ - று.

மாணுத செய்தல் ஆவது பகைக்கு ஆவன செய்யாது பிறிது செய்தல். இவன் வினை செய்யமாட்டான் ஆதலால் பகை கோடல் ஆம் என்றது.

கா. 9.

ப. 8.

அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

(கா - உ.) எ - து.—ஒருவன் தனக்கு எதிர் காணின் அஞ்சுவது செய்யும: பின்னும் உறற வினைச்கண் கட்டும் கழறியும் அறிவது செய்யான்: அன்றியும் தன்னைச் சமைத்துக் கொள்வது ஓர் நிறைவும் இலன்: இதன் மேலும் கொடைக் கடன் அறிந்து தணிப்பதும் செய்யான் யாவன்? அவன் பிறர்க்கு மிகவும் எளியன் பகைமைக்கு எ - று.

தஞ்சம் எளியன் என்றது மிகவும் எளியன் என்றது.

(ப - உ.) எ - து —அஞ்ச வேண்டாதவற்றிற்கு அஞ்சுமவன், பகைவன் வலிமை அறியான், அமைதியிலன், ஈயமாட்டான், இப் பெற்றிப் பட்டவன் பகைவர்க்கு மிகவும் எளியவன் எ - று.

இவை நான்கும் உடையவன் தோற்கும்
என்றது. (9) கா. 10.

ப. 7.

அன்பில னன்ற துணையிலன் றுன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

(கா - உ.) எ - து.—பகை கொளின் அல்லது யாவர் மாட்டும் அன்பிலன்: மற்றும் தனக்கு அமைந்த துணையிலன்: பின்னும் தான் ஒன்றுக்கு ஓர் துப்பிலாதான் யாவன்? அவன் என்பினையும் அரியும் எதிலான் கைக் கருவி எ - று.

எதிலான் துப்பு என்பது பகைவன்
படைக்கலம்.

(ப - உ.) எ - து.—சுற்றத்தார் மாட்டு அன்பு உறுதலும் இலன்: வேற்று அரசா ஆகிய துணையும் இலன்: தான் வலியும் இலன்: இப்பெற்றிப் பட்டவன் பகைவனது வலியை யாங்ஙனம் அறுக்கும்? எ - று.

என்பரியும் என்பது இகழ்ச்சிக் குறிப்பு.
தவன் வெல்ல மட்டான் என்றது.
இம்மூன்றும் இல்லா
(10)

(கா - உ.) இனி மற்று இதன் பின்னரே ஒருவர்க்குப் பகைமை நாட வேண்டிற்று ஆயின் அப்பகைத் திறம் தெரிந்து தமக்கு வாய்ப்பச் செய்ய வேண்டும் அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

50. பகைத்திறம் தெரிதல்.

(ப - உ.) பகைத்திறம் தெரிதல் ஆவது பகையின்கண் செய்யும் திறன் ஆராய்தல். மேல் பகை கொண்டால் வெல்வாரையும் தேற்

பாரையும் கூறினார்: இனி அப்பகைவர் மாட்டுச் செய்யும் எண்ணிச் செய்ய வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது. திறன்

கா. 1.

ப. 10.

வகையறிந்து தற்செய்து தற்காக்க மாயும்

பகைவர்க்கட் பட்ட செருக்கு.

(கா - உ.) எ - து.—தன்னோடு எதிர்வதன் கூறுபாட்டை அறிந்து மற்று அதற்குத் தக்காங்கு அதனின் மிகத் தன்னைச் சமைத்துக் கொண்டு இங்ஙனம் தன்னைப் பேணிக் கொள்ளவே

கெடும்: யாதோ எனின் பகைவர் மாட்டு உளதாகிய

மனச் செருக்கு எ - று.

வகை என்பது தன்னெடு மலைந்து எழும் பகைக்குத் தகாது எனின் மிகைப்பட்ட தன்னைச் சமைத்துக் கொண்டு என்றது.

(ப - உ.) எ - து.—வினை செய்யும் வகையை அறிந்து தன்னைப் பெருக்கித் தன்னைக் காக்கப் பகைவர் மாட்டு உண்டான பெருமிதம் கெடும் எ - று.

இது பகையை வெல்லும் திறன் கூறிற்று.

(1) கா. 2.

ப. 9.

இளைதாக முண்மரங் கொல்க களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(கா - உ.) எ - து.—களைய வேண்டின் எத்துணையும் சால இளைது ஆகவே முள்ளுடை மரத்தினைக் களைக: என் எனின் களையு நாது கையினை வாதிக்கும்: மற்று அது முற்றிய இடத்து: எனவே பற்றார் திறமும் அப்படி என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—முள் மரத்தை இளைது ஆகவே களைக: முற்றின இடத்துத் தன்னைக் களைய நினைத்தார் கையைக் கொல்லும் ஆகலான் எ - று.

இது பகைவர் வலியர் ஆகும் முன்னே களைய வேண்டும் என்றது.

(2)

கா. 3.

ப. 3.

வில்லே ருழுவர் பகைகொளினுங்
கொள்ளற்க
சொல்லே ருழுவர் பகை.

(கா - உ.) எ - து.—நட்புக் கொள்ளாது வில் வேந்தருடன் ஒருவர் பகை கொளினும் கொள்ளற்க : யாது எனின், கற்று உணர்ந்த சான்ரோடு பகை எ - று.

வில்லேருழுவர் என்றது வில் வேந்தர் என்றது. வர் என்பது கற்று உணர்ந்த சான்ரோர் என்பது.

சொல்லேருழ

(ப - உ.) எ - து.—வில்லை ஏர் ஆக உடைய உழவரோடு பகை கொள்ளினும் சொல்லை ஏர் ஆக உடைய உழவரோடு பகை கொள்

ளாது ஒழிய எ - று.

இஃது அரசனோடு பகை கொளினும் கொள்ளல் ஆகாது என்றது.

(3) கா. 4.

ப. 4.

தன்றுணை யின்றூற் பகையிரண்டாற் றூவெருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னென்று.

(கா - உ.) எ - து.—தன்னெடு நட்பு ஆகிய துணை என்பது ஒன்று இலது ஆயின், தனக்குப் பகை இரண்டு ஆயின், அன்னன் ஆகிய ஒருவன் தான் இனி யாதோ செயற்பாலது எனின் அப்பகை இரண்டின் ஒன்றை யாதானும் ஒரு வாற்றான் தனக்கு இனிய துணை ஆகப் பிரித்துக் கொள்க எ - று.

(ப - உ) எ - து.—பகை இரண்டு ஆய்த் தான் ஒருவன் ஆய்த் தன்க்குத் துணையும் இல்லாதான் பகை இரண்டினுள் ஒன்றை இனிய துணை ஆகச் செய்து கொள்க எ - று.

இஃது இருவரொடு பகை கொள்ளத் தகாது என்றது.

(4) கா. 5.

ப. 5.

ஏமுற் றவரினு மேழை தமியனெய்ப்

பல்லார் பகைகொள் பவன்

(கா - உ.) எ - து.—பேய் கொண்டவரினும் சாலப் பித்தன்: யாவன் எனின் இங்ஙனம் தான் ஒருவனுய் இருந்து மற்று இது நமக்கு வாயாது என்று கருதாது பலரொடும் தான் பகை கொள்ளக் கருதுபவன எ - று.

எழுற்றவன் என்றது மதிமயக்கு உற்றவன் என்றது.

(ப - உ.) எ - து.—பித்து உற்றவரினும் அறிவு இலன்: தனியன் ஆய் இருந்து பலரோடும் கை கொள்ளும் அவன் எ - று.

இருவரோடு பகை கொள்ளுதல் நீதி அன்று ஆகப் பலரோடு பகை கொண்டவன் பித்தரோடு ஒக்கும் என்றவாறு ஆயிற்று. இது பலரோடு பகை கோடல் ஆகாது என்றது. (5)

50. பகைத்திறம் தெரிதல் 213

கா. 6.

ப. 2.

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற

செயிர்ப்பவர்

செம்மல் சிதைக்க லாதார்.

(கா - உ.) எ - து.—தம்மை வருத்தம் செய்பவர் ஆகிய பகைவர் தம் எதிர் வந்து சினத்து ஒரு மூச்சு எறிய அத்தனைக்கு உளர் அல்லர் மன்ற: யார் எனின், மற்று அவரது பெருமையைத் தலையழிக்க மாட்டாதார் எ - று.

(ப - உ.) எ - து.—பகைவரது தலைமையைக் கெடுக்க மாட்டார் தார் பகைவர் உயிர்க்கும் மரத்தைத்தாலே அறுதியாகச் சாவார் எ - று.

இது பகை கொள்ளுங்கால் வலியாரோடு பகை கோடல் ஆகாது என்றது. (6)

கா. 7.

ப. 8.

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க மென்மை பகைவ ரகத்து.

(கா - உ.) எ - து.—உறுதுயர் கண்டு தாம் பெரிதும் நொந்தால் மற்று அந்நொந்ததனை இவர் எம் பொருட்டு இது செய்தார் என்பதனை மதியாதார்க்கு நோவற்க: அன்றியும் பகைவரிடத்து என்றும் தாம் வன்மையோடு இயைய நிற்கும் அத்துணை அல்லது அவரொடு தாம் மென்மையோடு இயைய நினையற்க எ - று.

தம் துயர்க்கு ஒருவர் நொந்தது மதியாதாரும் பகைவரின் ஒரு கூற்றரே வேறு அல்லர் என்பதனால் இதனை எடுத்து ஓதினர் என அறிக: என்னை, காஞ்சிரம் பிஞ்சும் காஞ்சிர மாமும் இத்துணை அல்லது பிறிது ஒன்று ஆகாதாற் போல.

(ப - உ.) எ - து.—தாம் வருத்தம் உற்றதனை அறியாதார்க்கு வருத்தம் உற்றுச் சொல்லாது ஒழிக: அதுபோலப் பகைவரிடத்துத் தமது மென்மையைத் தோற்றுவிக்கலை விரும்பாது ஒழிக எ - று.

இது பகைவர் மாட்டுத் தமது மென்மை தோற்றுவியாது ஒழிக என்றது. (7)

கா. 8.
ப. 7.

பகைநட்பாக் கொண்டொழுகும்
பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.

(கா - உ.) எ - து.—பகைதானே வந்து மென்மை செய்யுங் காலத்து இகங்கிப் பின் தான் ஒருவன் பகையை செய்யாது நட்பு ஆகக் கொண்டு ஒழுகும் மாபுடையாளன் யாவன்? மற்று அவனது நெறிமைக் கண்ணே நிலை நின்றது ஒழுக்கம் எ - று.

உலகம் என்பது ஒழுக்கம்.

(ப - உ.) எ - து.—பகைவரை நட்புப் போலக் கொண்டு ஒழுக வல்ல பண்புடையவன் பெருமையின் கீழே உலகம் தங்;தும் எ - று.

இது பகை கொள்ளாமையால் வரும் பயன் கூறிற்று. (8) கா. 9.
ப. 1.

பகையென்னும் பண்பி லதனை
யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

(கா - உ.) எ - து.—பகைமை என்று சொல்லப்படும் தெறி இல் லதனை ஒரு மக்கட் பண்புடையோன் தான் ஒருவரோடு நகையாடி யும் செய்ய வேண்டற்பாலது அன்று: எனவே என்றும் குறிக் கொண்டு இது செய்யற்க என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—பகை என்று சொல்லப்படுகின்ற குணம் இல்லாததனை ஒருவன் விளையாட்டின் கண்ணும் விரும்பற்பால தன்று எ - று.

இஃது எவ்விடத்தும் பகை ஆகாது என்றது. என்றமையால் எண்ணம் ஆயிற்று.

பகை ஆகாது

(9) கா. 10.

ப. 6.

தேறினுந் தேரு விடினு மழிவின்கட்
டேரு ன் பகா அன் விடல்.

(கா - உ.) எ - து.—பகை என்று தேறினும் தேரு விடினும் ஒருவர் இடரின்கண் பெரிதும் தேறும் பண்பு இலனும் ஆகித் தம்மை விட நீங்காதானும் ஆயின், மற்று அவன் நிறம் தெரிந்து அவனைக் கைவிடுக: எனவே இவனும் ஒருவர்க்கு உள்ளுறு பகை என்பது பொருள் ஆயிற்று எ - று.

அழிவின்கண் தேரு ன் என்பது தமக்கு ஓர் அழிவு வந்த இடத் துப் பெரிதும் தேறத் தகான் ஆகி எ - று.

பகான் என்பது நீங்கான் என்றது. விடல் என்பது விடுக என்றது.

(ப - உ.) எ - து.—பகைவனை ஆக்கம் உள்ள காலத்து நட்டோன் என்று தெளியலும் ஆம்: பகைவன் என்று ஐயப்படலும்

ஆம் அழிவு வந்த இடத்துத் தெளிவதும்
செய்யாது ஒழுகுக எ - று.

செய்யாத் நீக்குவதும்

இது பகைவர் ஆயினர்
இயல்பு கூறிற்று.

மாட்டு அழிவின்கண் செய்வது ஓர்

(10)

(கா - உ.) இனி, மற்று இங்ஙனம் புறத்தது ஆகிய பகைத் திறம் தெரிந்த பின்னரே உள்ளுறு பகை எழுச்சி உணர்த்தி மற்று இதன் பின்னரே அதன் முதிர்பு ஆகிய உட்பகை உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

51. உட்பகை.

(ப - உ.) உட்பகை ஆவது உடனே வாழும் பகைவர் செய்யும் இறன் கூறுதல். அஃதாவது புறம்பே நட்டோர் போன்றும் சுற்றத் தார் ஆகியும் ஒழுகி மனத்தினால் பகைத்திருப்பார் செய்யும் இறன் கூறுதல். இதுவும் ஆராய்ந்து காக்க வேண்டும் ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 3.

எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

(கா - உ.) எ - து ---எள்ளில் பிளந்த சிறுமை உடைத்து ஆயி னும் உட்பகையுடனே வாழும் பகையின் கண்ணது ஒருவர்க்குக் கேடு எ - று

(ப - உ.) எ - து.—எள்ளின் பிளவே போன்ற சிறுமைத்தே ஆயினும், உடன் வாழும பகையினால் உளது ஆகும் ஒருவர்க்குக் கேடு எ - று.

இது உட்பகை சிறிது என்று இகழற்க என்றது. (1) கா. 2.

ப. 6.

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங்

கூடாதே

யுட்பகை யுற்ற குடி.

(கா - உ.) எ - து.--செப்பு உருபு பொருந்தும் காலத்து முத லும் மூடியும் ஒரு பழுது அற ஓர் உருபு என்னும் ஆறு இறுக மூறு கப் பொருந்த நிறகும் அன்றே: அது போலத் தம்முள் ஒரு வேற் றுமை அறப் பொருந்தி நின்று ஓர் எல்லைக்கண் பின்னும் அச்செப் பின் புணர்ச்சி போல் சிறிதும் கூடாது பக்கு விடுமே: யாது எனின், உட்பகை உற்றவரது குடி முழுதும் எ - று.

(ப - உ.) எ - து.—செப்பினது புணர்ச்சி போலப் புறத்து வேற்றுமை தெரியாமல் கூடினர் ஆயினும் பொருத்தம் இல்லாதவர் ஆவர்: உட்பகையும் அஃது உட்பட்ட குடியும் எ - று.

செப்பும் மூடியும் ஒன்று பட்டால் போல இருந்து செப்பு அகத்து உட்பொருள் வாங்குவார்க்கு மூடி துணையாய்க் கழன்று நிற்கும் அதுபோல அகன்று நிற்பர் எ - று.

செப்பிற்கு உவமை குடி: மூடிக்கு உவமை உட்பகை. (2) கா. 3. ப. 2.

உட்பகை யுஞ்சித்தற் காக்க வுலைவிடத்து

மட்பகையின் மாணத் தெறும்.

(கா - உ.) எ - து.—உட்பகை சிறிதும் உறுவழிப் பெரிதும்

அஞ்சித் தன்னைப் பரிகரித்துக் கொள்க: என் எனின் தனக்கு ஓர் தளர்ச்சி வந்த இடத்தே கரைபடக் கட்டிய மண் உறுதிக்கு ஒரு தளர்ச்சி வந்த இடத்து மற்று அதனை முழுவதும் முரித்து எறியும் வெள்ளம்போல் இதுவும் தன் குடி முழுதும் குலைத்து எறிந்து விடும் எ - று.

உலைதல் என்பது தளர்தல். மண்பகை என்றது நீர் வெள்ளம் என்றது.

(ப - உ.) எ - து.—உடனே வாழும் பகைவரைத் தான் அஞ்சித் தன்னைக் காக்க: தனக்குத் தளர்ச்சி வந்த இடத்துக் குயவன் வனைகலத்தை அறுக்கும் கருவிபோலத் தப்பாமல் கெடுக்கும் ஆதலான் எ - று.

மண்பகை தான் அறுக்குங்கால் பிறர் அறியாமை நின்று அறுக்கும். இது தன்னைக் காக்க வேண்டும் என்றது. இவை இரண்டினும் அஞ்ச வேண்டும் என்பது, காக்க வேண்டும் என்பதும் கூறப்பட்டன. (3)

கா. 4.

ப. 8.

மனமாணு வுட்பகை தோன்றி

னினமாணு

வேதம் பலவுந் தரும்.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்கு தம் மனம் மாட்சி இல்லாதது ஓர் உட்பகை வந்து தோன்றும் ஆயின் தம் குடி மாட்சிமை இல்லாத ஆறு உள்ள குற்றம் பலவற்றையும் தரும் எ - று.

(ப - உ.) எ - து.—மனம் நன்று ஆகாத உட்பகை தோன்றும் ஆயின் தனக்கு இனம் ஆயினர் கல்லர் ஆகார்: அற்று அன்றிப் பல குற்றங்களும் உண்டு ஆம் எ - று.

81. உட்பகை

217

இஃது இனம் பொருந்தாமல் கூடநின்று பகைப்பிக்கும் என்றது. இவை தான்கினனும் அவர் செய்யும் திறன் கூறப்பட்டது.(4)

கா. 5.

ப. 4.

நிழனீரு மின்னுத வின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்.

(கா - உ.) எ - து —உலகத்துப் பொது வகையாக நிழலும் நீரும் இனிய எனினும், சில நச்சு மரமும் நச்சுப் பொய்கையும் என் பன உள அன்றே: மற்று அவை ஏனை நிழலும் நீரும் போன்று இருந்தும், இருந்தோரும் அருந்தினோரும் இறந்துபடும் திறம் வினை யும்: அதனால் மற்று ஆங்குத் தமர் ஆக நட்டோரது நீர்மை, நீர்மை போன்று இருந்து பெரிதும் இன்னா ஆம்: இன்னாதன வற்றைச் செய்யும் இட்டத்து எ - று.

(ப - உ.) எ - து.—நிழல் அகத்து நீரும் இனிதே ஆயினும் அவற்றுள் இன்னாங்கு செய்யின் இன்னாது ஆகும். அதுபோலச் சுற்றத்தார் தன்மையும் இனிது ஆயினும் அவர் இன்னாதவற்றைச் செய்வார் ஆயின் இன்னாது ஆகவே விடும் எ - று.

இது சுற்றம் என்று இகழற்க என்றது. இவை இரண்டினும் இகழாமை கூறப்பட்டது. (5)

கா. 6.

ப. 1.

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு.

(கா - உ.) எ - து.—வாள்போலக் கடியர் ஆகிய புறப் பகை வரை அஞ்சாது ஒழியினும் ஒழிக: மற்று உள் புக்கு கேள் போன்று கேள் ஆகாப் பகைவரது நட்பினை அதினினும் குறிக் கொண்டு அஞ்சுக எ - று.

(ப - உ.) எ - து.—வாளைப் போலக் கொல்லும் திறத்தினை உடைய கொடிய பகைவரை அஞ்சாது ஒழிக: முகம் நட்டாரைப் போன்று மனத்தினுல் பகைத்து இருப்பார் தொடர்வு அஞ்சுக எ - று.

பகைவரை அஞ்சுவதினினும் மிக அஞ்ச வேண்டும் என்னவாறு

ஆயிற்று உட்பகையாவது இது என்பதூஉம், அதற்கு அஞ்ச வேண்டும் என்பதூஉம கூறிற்று. (6)

கா. 7.

ப. 7. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்

பாம்போ டுடனுறைந் தற்று. 218

28

திருக்குறள் - பொருட்பால்

(கா - உ.) எ - து.—உள்ளத்துள்.....டிலாதவரோடு கூடி வாழும் வாழ்க்கை எத்தன்மைத்தோ எனின் பெரும் பேழை அகத்து உறையும் பாம்போடு தாழும் ஆண்டுக் கூடி உறையும் அத் தன்மைத்து ஆகலான் எ - று.

(ப - உ.) எ - து.—மனத்தினுல் பொருத்தம் இல்லாதோரோடு ஒத்து வாழும் வாழ்க்கை ஒரு குடில் அகத்தே பாம்போடு கூட வாழ்ந்தால் போலும் எ - று.

பாம்பு எய்த வத்தால் கடிக்கும்: அதுபோல இடம் வந்தால் கொல்வார் என்றது. (7)

கா. 8.

ப. 10.

ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றுமை யொன்ற லரிது.

(கா - உ.) எ - து.—தம்மோடு நட்டார் மாட்டும் உட்பகை உளது ஆம் ஆயின் மற்று ஒன்று கூடியும் அதனல் தான் எஞ்சாமை கூடுதல் அரிது எ - று.

(ப - உ.) எ - து.—தன்னோடு ஒன்றூர் மாட்டு ஒன்றுமை உளது ஆயின் எல்லா நாளினும் சாவாமையைக் கூடுதல் அரிது எ - று.

இது நட்டார் ஆகிய உட்பகையினல் வரும் தீமை கூறிற்று. (8) கா. 9.

ப. 9.

உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவும் தரும்.

(கா - உ.) எ - து.—தம்மோடு வந்து உறுதல் பண்பிலான் யாவன் மாட்டு உட்பகை தோன்றுவது ஆயின் அதனான் இறுதல் பண்பிலான் வரும் குற்றம் ஒன்று இரண்டு அல்ல பலவும் விளையும் எ - று.

உறல் என்றது தம்மோடு வந்து உறுதல் என்பது. முறைமை என்பது மாபு. இறல் என்பது உயிர்க்கு இறுதி, பொருட்கு இறுதி வருதல் என்றது.

(ப - உ.) எ - து.—உறவின் முறையோடே உட்பகை தோன்றும் ஆயின் அது கெடுதல் முறைமையோடே கூடப் பல தன்பத்தினையும் தரும் எ - று.

உறவு - உறுதல் ஆயிற்று.
யினால் வரும் நிலை கூறிற்று.

இது சுற்றத்தால் ஆகிய உட்பகை

(9)

52. (கா.) பெரியாரைப்பிழையாமை

ப. 5.

அரம்பொருத பொன்போலத் தேயு
முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

(கா - உ.) எ - து.—அராவுகின்ற அரம் சென்று பொருத கார் இரும்பு போலத் தமது உரம் முழுவதும் ஒழுகத் தேய்ந்து விடும்: யாதோ எனின் உட்பகை உற்ற குடி முழுவதும் மற்று அவனுல் பொரப்பட்டு எ - று.

பொன் என்றது இரும்பு.

(ப - உ.) எ - து.—உட்பகையானது உட்பட்ட குடி அரத்தி னுல் தேய்க்கப்பட்ட பொன்போல அவால் பொரப்பட்டுத் தன் வலி தேயும் எ - று.

இஃது உட்பகை அழகு செய்வது என்றது.

போல வலியை அறுக்கும்

(கா - உ.) அதனால் இதனின் நீங்கிப் பெரியோரோடு கெழீஇய நட்பின் பிழையாமையே உறுதி என்பதனை உணர்த்துதற்கு மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

52.

(கா.) பெரியார்ப்பிழையாமை—(பரி.) பெரியாரைப் பிழையாமை.

(ப - உ.) பெரியாரைப் பிழையாமை ஆவது தம்மில் பெரிய அரசரையும் முனிவரையும் அறிஞரையும் பிழைத்து ஒழுகாமை. மேல் பகையின்கண் செய்யும் திறமும் கூறினார்: இது தம்மில் பெரியார் தம்மைப் பகையாகக் கொள்ளார் ஆயினும் தமது இகழ்ச்சியாலே அவரால் தீமை பயக்கும் ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 10.

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

(கா - உ.) எ - து.—உலகத்துத் தவ நெறியாளர் ஆகிய பெரியோரது தவநெறி ஒழுக்கத்தைத் தாம் இகழாமை ஆகிய தலைமையாது? அது குறிக்கொள்வார் தம் குறிக்கோளுள் எல்லாம் சாலத் தலைமை எ - று.

எனவே அவரைப் பிழைப்பின் தாம் கெடுவர்

என்பது பொருள்.

(ப - உ.) எ - து.—தவத்தினுலும் வலியினுலும் பெரியாரது வலிமையை இகழாது ஒழிக: அது தம்மைக் காப்பார்க்குப் போற் றிக் கொண்டிருக்கப் பட்டவை எல்லாவற்றுள்ளும் தலையாம் எ - று

இகல் முதல் ஆகப் பெரியாரைப் பிழையாமை ஈறு ஆகப் பிற ரால் வரும் துன்பப் பகுதி ஆயினவாறு கண்டு கொள்க. (1)

கா. 2.

ப. 7.

இறந்தமைந்த சார்புடைய ராயினு மூய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

(கா - உ.) எ - து.—சீர்மைப் பாட்டினை உடையார் யாவர்? மற்று அவர் குணம், கல்வி, கேள்வி, குறி உடைமை முதலியவற் றுன் மிக்கு அமைந்த சார்பினை உடையர் ஆயினும் உய்ந்து கரை ஏறுர்: தவமும் ஞானமும் முதலியவற்றுன் மிக்கு அமைந்த சீர் மைப் பாட்டினை உடையார் தம்மைச் செறின்: எனவே யி..... பெரியோரை என்றும் பிழையற்க என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—மிகவும் அமைந்த துணை உடையர் ஆயினும் கெடுவர்: மிகவும் அமைந்த சீர்மையை உடையார் செறுவார் ஆயின் எ - து.

இது துணை உடையார் ஆயினும் உயிர்க்கேடு

வரும் என்பது (2) கா. 3.

ப. 8.

ஏந்திய கொள்கையார் சீறி
னிடைமூரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(கா - உ.) எ - து.—சொன்ன தவமும் ஞானமும் முதலியவற்
றால் மிக்க கோட்பாட்டை உடைய பெரியோர் சீறுவர் ஆயின் அர
சனும் தனது வாழ்க்கை இடையே முரிந்து கெட்டுவிடும் எ - று.

வேந்தனும் என்ற உம்மை சிறப்பும்மை ஆகலான்.....
நாடும் பொருளும் பெரும் படையும் உடையவர்.....கெட்டு
விடும் எ - று.

ஏந்துதல் - மிகுதல்.

(ப - உ.) எ - து.—உயர்ந்த கோட்பாட்டை உடையார் வெகுள்
வர் ஆயின் இந்திரனும் இடையிலே இற்றுத் தன் அரசு இழக்கும்
எ - று.

*"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"
இது பொருள் கேடு வரும் என்றது.
என்றூர் பிறரும்.

(3) கா. 4.

ப. 6.

எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியோர்ப் பிழைத்தொழுகு வார்.

---

*தொல். பொருள் - அகம் சூ. 5.

---

52. (கா.) பெரியார்ப்பிழையாமை

221

(கா - உ.) எ - து.—தீயினல் சுடப்படினும் யாதானும் ஒரு வாற்றல் பிழைப்பு உண்டாகவும் கூடும்: பிழையார் பெரியோரைப் பிழைத்து ஒழுகும் அவர் எ - று.

(ப - உ.) எ - து.—தீயினல் சுடப்படினும் உய்தல் உண்டு ஆம்: பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார் உய்யார் எ - று.

இது முனிவரைப் பிழைத்ததனல் வரும் குற்றம் கூறிற்று: முற்பட உயிர்க்கேடு வரும் என்று கூறினர். (4)

கா. 5.

ப. 4.

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு
தகைமாண்ட சீரார் செறின். [மென்னுந்

(கா - உ.) எ - து.—நூல் வகுத்த வகை அனைத்தும் மாட்சி மைப்பட்ட இல்வாழ்க்கையும் அதற்குச் சிறந்த பொருளும் உடைத்து ஆயினும் என் ஆம்? தவமும் ஞானமும் ஒழுக்க நெறியும் உடைய சீரார் செறின் எ - று.

(ப - உ.) எ - து.—எல்லா வகைகளும் மாட்சிமைப்பட்ட வாழ்க் கையும் மிக்க பொருளும் என்ன பயன் உடைத்து ஆம்? பெருமை யான் மிக்க தகுதியை உடையார் செறுவார் ஆயின் எ - று.

எல்லாவகையும் ஆவன - சுற்றமும், நட்டோரும், குற்றேவோ ரும், இல்லும், நிலனும் முதல் ஆயின. வான் பொருள் - சட்டி வைத்த பொருள்கள் எல்லாம் அழியும் என்றது. (5)

கா. 6. ப. 3.

கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க் காற்ரு தா ரின்ன செயல்.

(கா - உ.) எ - து.—தமக்கு மிகவே வேதனை வருதலே யாரும் வேண்டார் அன்றே? மற்று அதற்கு உரிய கூற்றத்தை இங்கே வா என்று தாமே தம் கைகாட்டி அழைத்த அத்தன்மைத்து: யாது எனின் தவ நெறியாளர் ஆகிய பெரியோர்க்கு மற்று அஃது இல்லார் ஆகிய சிறியோர் இன்னுதனவற்றைச் செய்தல் எ - று.

(ப - உ.) எ - து.—வலி உடையார்க்கு வலி இல்லாதார் இன்னாத செய்தல் தம்மைக் கொல்லும் கூற்றைக் கைகாட்டி அழைத்தால் போலும் எ - று.

மேல் கூறிய மூவரினும் அரசரைப் பிழைத்தலால் வரும் குற்றம் கூறுவார் முற்பட உயிர்க்குக் கேடு வரும் என்றார். (6)

கா. 7.

ப. 5.

யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின் வேந்து செறப்பட் டவர்.

(கா - உ.) எ - து.—எவ்விடத்தில் சென்றும் எக்காலத்திலும் உளர் ஆக உய்ய மாட்டார்: மற்று யார் எனின் உலகத்து எல்லோராலும் விரும்பத் தக்க வலிக்கு ஒரு சக்கரவர்த்தியாகிய அரசரால் செறப்பட்டவர் எ - று.

ஈண்டு வெம்மை என்றது விருப்பம் என்றது. துப்பு என்றது வலி என்றது.

(ப - உ.) எ - து.—எவ்விடத்துச் செல்லினும் எவ்விடத்தும் உளர் ஆகார் வெய்ய வலி உடைய வேந்தனால் செறப்பட்டவர்

எ - று.

இது கெட்டுப் போனதும் இருக்கல் ஆவது என்றது.

ஓர் ஆண் இல்லை

(7)

கா. 8.

ப. 9.

குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

(கா - உ.) எ - து.—தவம் முதலியவற்றால் பெரியோர் ஆகிய மலைபோலச் சிறிதும் சலியாதோரைக் குறைபட நினைப்பின் இவ்வுலகத்துச் சிறந்த குடிப்பிறப்போடு நின்று வைத்தே மற்று அத்தன்மையாரும் அதனால் ஓர் ஆக்கம் இன்றி நசிப்பர் எ - று.

(ப - உ.) எ - து.—மலைபோலப் பெரியாரைக் குறைய மதிப்பார் ஆயின் உலகத்தின்கண்ணே நின்றால் போலத் தோன்றுபவர் குடியோடே கூட மாய்வர் எ - று.

நின்றால்போல என்றது நிலையாமை குறித்தது. குன்ற மதித்தல் - அவமதித்தல். இது மந்திரி புரோகிதரைப் பிழைத்த ஒழுகினால் அவர் அவமதிப்பர் ஆயின் தாமும் தம் கீழ்வாழும் குடியும் மாய்வர் என்று கூறிற்று.

(8)

கா. 9. ப. 2.

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற் பேணா விடும்பை தரும்.

(கா - உ.) எ - து.—அங்ஙனம் பெரியோரை நெஞ்சினால் விரும்பாது ஒழுகின் அப்பெரியார் தம்மாலும் பேணிக் கோடற்கு அரிது ஆகிய பேரிடும்பையைத் தரும் எ - று.

53. பெண்வழிச் சேறல் 223

பேரிடும்பை என்பது பேணிக்கொள்ள என்றது.

ஒண்ணாத இடும்பை

(ப - உ.) எ - து.—பெரியாரைப் போற்றாது ஒழுகுவான் ஆயின் அவன் ஒழுக்கம் அவரானே எல்லாராலும் இகழப்படும் துன்பத்தைத் தரும் எ - று.

இது முனிவரைப் போற்றாது ஒழுகின் குற்றம் பயக்கும் என்றது. இவை இரண்டும் பிழையாமை வேண்டும் என்று கூறப்பட்டது. (9)

கா. 10.

ப. 1.

கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி னாற்று பவர்க ணிழுக்கு.

(கா - உ.) எ - து.—தான் கெட வேண்டினன் ஆயின் நல்ல அறிவு உடையாரோடு ஆராயாது ஒரு காரியத்தைச் செய்வான் ஆக: மற்றுத் தன்னைக் கொல்ல வேண்டுவான் ஆயின் வலி உடைய பெரியோர் மாட்டுக் குற்றத்தைச் செய்க எ - று.

(ப - உ.) எ - து.—தான் கெடுதல் வேண்டுவன் ஆயின் பெரியாரைக் கேளாதே ஒரு வினையினைச் செய்க. தன்னைக் கொல்ல வேண்டுவன் ஆயின் வலி உடையார் மாட்டே தப்புச் செய்க எ - று.

கேளாது செய்தல் என்பதனை மந்திரி புரோகிதரைக் கேளாது செய்தல் என்று கொள்ளப்படும். அவ்வாறு செய்தால் அவரை அவமதித்தல் ஆம் ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டது. அறிவாரைக் கேளாது செய்ததலும் வலியார்க்குத் தப்புச் செய்ததலும் குற்றம் என்றது. (10)

(கா - உ.) இனி மற்று இவர்கண் இழுக்கு என்னும் இக்குற்றம் கடந்ததன் பின்னரே இது பெண்மை அஞ்சுவான் யாவன்? மற்று அவன் பெரிதும் அஞ்சும் யாதினை எனின், எஞ்ஞான்றும் உலகத்து நல்லோர் ஆகிய சான்றோர்க்குக் கூட வழக்கு இயல்பு அல்லாதது ஓர் இழுக்கு ஆகலான் இதுவும் பரிகரிக்க வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

53. பெண்வழிச் சேறல்.

(ப - உ.) இனித் தன்னல் வரும் துன்பப்பகுதி ஆவது: இன்பம் காரணம் ஆக மனையாள் வழி ஒழுகுதலும், கணிகையரோடு கூடுதலும், கறவு உண்டு களித்தலும், சூது ஆடலும், தீய உண்டி மிக உண்டலும் என ஐந்து வகைப்படும். இவை எல்லாம் இறுதியில் துன்பம் பயத்தலின் துன்பப் பகுதி ஆயிற்று. அவற்றுள் பெண்

வழிச்சேறல் ஆவது மனைவியர் வழி ஒழுகினால் வரும் குற்றம் கூறுதல். இது மூன்று வகைப்படும், மனையாளை அஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அறத்தினும் பொருளினும் சாராத காதலினும் மிக்க காதலும் என.

கா. 1.

ப. 2.

இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

(கா - உ.) எ - து.—தன் மனையாளை அஞ்சுவான் யாவன்? மற்று அவன் பெரிதும் அஞ்சும்: யாதினை எனின் எஞ்ஞான்றும் உலகத்து நல்லோர் ஆகிய சான்றோர்க்குக் கூட நல்லனவற்றைச் செய்தலை எ - று.

(ப - உ.) எ - து.—மனையாளை அஞ்சுவான் எஞ்ஞான்றும் லார்க்கு நல்லன செய்தலை அஞ்சும் எ - று.

இஃது அறம் செய்ய மாட்டான் என்றது.

(1) கா. 2.

ப. 1.

இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(கா - உ.) எ - து.—நுகர்ச்சிக்கண் ஒருமறு இன்றி வாழ்வார் அமார் அன்றே: மற்று அவர்போல வாழினும் பெருமை இலரே: யாவர் எனின் அமை வளம் நிறைந்த தோளினள் ஆகிய மனையாளை

அஞ்சும் பண்பு இல்லார் எ - று.

(ப - உ.) எ - து.—தேவரைப்போல இன்பு உற்று வாழினும் பெருமை இலர் ஆவர்: மனையாளது வேய்போலும் தோளை அஞ்சு

பவர் எ - று.

இது செல்வம் உடையர் ஆயினும்
யால் பிறரால் மதிக்கப்படார் என்றது.

அவரால் பயன் இல்லாமை

கா. 3.

ப. 7.

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வான்க ணில்.

(கா - உ.) எ - து.—அறமும், பொருளும், இன்பமும் பெண் ஏவல் செய்து ஒழுகுவார்க்கு இல்லை எ - று.

பிறவினை என்றது இன்பம் என்றது.

53. பெண்வழிச் சேறல் 225

(ப - உ.) எ - து.—அறம் செய்தலும், அமைந்த பொருள் செய்தலும், ஒழிந்த காமம் நுகர்தலும் பெண் ஏவல் செய்து ஒழுகுவான் மாட்டு இல்லை ஆம் எ - று.

அச்சம் இலர் ஆயினும் சொன்னது செய்வர் ஆயின் இம் மூன்று பொருளும் எய்தார் என்றது; என்னை தலைமை அவள் கண்ணது ஆதலான். இவை மூன்றினும் ஏவல் செய்தார்க்கு உளது ஆகும் குற்றம் கூறப்பட்டது. (3)

கா. 4. ப. 6.

நட்டார் குறைமுடியார் நன்குற்றார்

நன்னுதலாட்

பெட்டாங் கொழுகு பவர்.

(கா - உ.) எ - து.—தனக்குச் சிறந்த நட்டார்க்கு ஒரு குற்ற வந்த இடத்து அதனைத் தீர்க்க மாட்டார். இனி அதுவேயும் அன்றிக் கல்வியும் கேள்வியும் முதலிய கன்கு செய்தலும் மாட்டார்: என் எனின் தன் மனையாளை விரும்பியது ஆண்மைக்குத் ககுதி அன்று ஏன நாணுது மற்று ஆங்கே உள் அழுங்கி ஒழுகும் அவன் எ - று.

(ப - உ.) எ - து.—தம்மோடு நட்டார் குறை தீர்க்க மாட்டார்: அவர்க்கு நல்லது செய்யவும் மாட்டார்: நல்ல நுதலினை உடையாள் விரும்பியவாறு செய்து ஒழுகுவார் எ - று.

குறை தீர்த்தல் ஆவது - உற்ற துன்பம் தீர்த்தல். நன்று ஆற்றல் - சிறந்தன செய்தல். இவையும் அவள் சொல்ல வேண்டுதலின் செய்ய மாட்டார் என்றது.

(4) கா. 5.

ப. 3.

மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

(கா - உ.) எ - து.—தன் மனையாளைத் தான் அஞ்சி ஒழுகுகின்ற அம்மறுமைப்பயன் இழந்தோனது வினை ஆட்சி ஒரு கன்மை பெறுதல் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—மனையாளை அஞ்சுகின்ற மறுமைப் பயன் எய்தாதவன் ஒரு வினையை ஆளும் தன்மை பெருமை எய்துதல் இல்லை எ - று.

இது பொருள் செய்ய மாட்டான் என்றது.

(5) கா. 6.

ப. 9.

பேணுது பெண்விழைவா னுக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும்.

29

(கா - உ.) எ - து.—தான் ஒழுகும் தகுதியைப் பொருள் ஆக விரும்பாது பனையாளைப் பொருள் ஆக விரும்புவானது பொருள் முதலிய ஆக்கம், ஒருவன் உள் அஞ்சி நாணத் தகும்: அவற்றுள் எல்லாம் பெரியது ஓர் நாணம் ஆம் மற்று அங்ஙனம் நீது ஆகிய நாணுதலைத் தரும் எ - று.

பேணுது என்றது தன் தகுதியை விரும்பாது என்றது.

(ப - உ). எ - து.—அறத்தினையும் பொருளினையும் பேணுது பனையாளைக் காதலிப்பானது செல்வம் பெரியது ஓர் நாணம், உள் சுத்தே நிற்கும்படியாகத் தனக்கு நாணினைத் தரும் எ - று.

அவன் செல்வத்திற்குப் பயன் நாணம் ஆய் முடியும். என்னே அச்செல்வம் அற்றால் பின்பு என்ன செய்வேம் என்று நாணுவன் ஆதலின். பெரியது ஓர் நாணுதல் ஆவது இவன் காமத்தால் கெட்டான் என்று உலகத்தார் அறிய நிறபது ஓர் காணம் உண்டாதல் - சச்சந்தன் நிறம் காண்க. (6)

கா. 7.

ப. 4. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று நல்லாரு ணாணுத் தரும்.

(கா - உ.) எ - து.—மனையாள் மாட்டு உள் அழுந்திச் செல்கின்ற மயபு கேடு ஆனது மற்று எஞ்ஞான்றும் தனக்குப் பல சான்றோர் இருந்த இடத்து எல்லாம் பெரியது ஓர் கூச்சம் ஆன நாணத்தைத தரும எ - று.

(ப - உ.) எ - து.—மனையாள் மாட்டுத் தாழ்ந்து ஒழுகும் இயல்பு கேடு எல்லா நாளும் நல்லார் இடத்து நாணுதலைத் தரும் எ - று.

மனையாளை அஞ்சித் தாழ்ந்து ஒழுகுவன் ஆயின் அவனைக் கடியும் தன்மை இலன் ஆவன்: அதனானே நல்லார் முன்பு நாணி நிற்கும்: ஆதலால் காம நுகர்ச்சியும் பெறான் என்றது. இவை நான்கினும் அஞ்சி ஒழுகுவார்க்கு வரும் குற்றம் கூறப்பட்டது. (7)

கா. 8. ப. 8.

மனைவிழைவார் மாண்பய மெய்தார்
வினைவிழைவார்

வேண்டாப் பொருளு மது.

(கா - உ.) எ - து. –மனையாளைச் சால விரும்புவார் யாவர்? மற்று அவர் மாட்சிமை உடைய மறுமைப் பயனும் எய்துதல் இலர்
ஆக எயும் தம் கருமம் விரும்பிச் செல்வார் யாவரும் பொருளும் அவ்விழுப்பம் தானே எ - று.
வேண்டாப்

53. பெண்வழிச் சேறல்

227

(ப - உ.) எ - து.—மனையாளைக் காதலித்து ஒழுகுவார் கற்பய னைப் பெரூர்: யாதானும் ஒரு வினையைச் செய்து முடிக்க வேண்டு வேண்டுவார் விரும்பாத பொருளும் அவரை விழையாமையே எ - று.

இம்து அறத்தினும் பொருளினும் காதல் இன்றி அவர் தம் மையே காதலித்து ஒழுகுவார்க்கு அறனும் பொரும் இல்லை ஆம் என்றது. (8)

ப. 5.

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி
பெண்ணே பெருமை தரும். [ஞ ணுடைப்

(கா - உ.) எ - து.—மனையாள் ஏவல் கேட்டு அது செய்து ஒழுகும் ஆண்மை ஒருவர்க்குச் சிறுமை தரும் அல்லது பெருமை உடைத்து அன்று: அதனல் அவ்வாண்மை படைப்பதில் ஆண் மகற்கு உள் அஞ்சும் நாணத்தை யுடைய நன்னெறிப் பெண்ணே அவர்க்கு மிக்க பெருமையைக் கொடுக்கும் எ - று.

(ப - உ.) எ - து.—பெண்டிர் எனின தொழிலைச் செய்து ஒழு கும் ஆண்மையின் நாண் உடைத்தாகிய பெண்மையே தலைமை உடைத்து ஆம் எ - று.

இது பிறரால் மதிக்கப்படார் என்றது.

(9) கா. 10.

ப. 10.

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்
பெண்சேர்ந்தாம் பேதமை யில். [ஞான்றும்

(கா - உ.) எ - து.—அறம், பொருள், இன்பம், வீடு என நான் கின் நிறம் தெரிந்து எண்ணும் எண் சேர்ந்த நெஞ்சத்தின் இடம் பாடு உடையார் யாவர்? மற்று அவர்க்கு எஞ்ஞான்றும் பெண் வழிச்சென்று சேர்ந்து ஏவல் கேட்டு ஒழுகும் பேதமை சிறிதும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—எண்ணம் சேர்ந்த மனத்தின் விரிவு உடையார்க்கு எல்லா நாளும் பெண்ணைச் சார்ந்து ஆம் அறிவு இன்மை இல்லை ஆம் எ - று.

எண் சேர்தல் ஆவது - இதனால் வரும் குற்றத்தைத் தெரிந்து உணர்தல். இதனை உடையார் அறிவு உடையார் என்றது. (10)

(கா - உ.) இனி, மற்று இவ்வாறு யாவர்க்கும் தாம் வரைந்து கொண்ட வரைவு மகளிர் மாட்டேயும் மனைவாழ்க்கை மாபு ஒழிய பிழைத்து வாழ்தல் மாபு அன்று என்பதனை உணர்த்தி மற்று அதன் பின்னரே வரைவில் மகளிர் ஆகிய பரத்தையர் மாட்டு மருவுதல் மாபு அன்று என்பதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

54. வரைவின் மகளிர்.

(ப - உ.) வரைவில் மகளிர் ஆவது கணிகையரொடு கலந்தால் வரும் குற்றம் கூறுதல். முயக்கத்தின் வரைவு இன்மையால் வரைவு இல் மகளிர் என்று கூறப்பட்டது. மேல் மனைவியர் மாட்டு மிக்க காதலினால் வரும் குற்றம் கூறினார்: இது கணிகையர் காமத்தினால் வரும் குற்றம் கூறுதலின் பின் கூறப்பட்டது.

கா. 1.

பொருட்பெண்டிர் பொய்மை முயக்க
னேதில் பிணந்தழீஇ யற்று.

ப. 3.

மிருட்டறையி

(கா - உ.) எ - து.—தாமே தமக்குப் பொருள் வரைந்து ஒழுகும் பெண்டிர் தமது பொருள் வரல் ஆற்றிற்கு வேண்டும் ஆடவர் உயர்ந்தோர் இழிந்தோர் யாவரே யாவரே ஆயினும் வரைவு இன்றிப் பொய்மை முயக்கம் முயங்கும் மகளிரது முயக்கம் பெரிதும் இருள் உடைய அறையுள் புக்கவர் அப்பிணம் தழீஇ உறையும் அத்தன்மைத்து எ - று.

(ப - உ.) எ - து.—பொருளேயே கருதும் பெண்டிர் ஒருவனோடு பொய்யே முயங்கும் முயக்கம் இருட்டு அறையின் உள்ளே கிடந்தது ஒரு வேற்றுப் பிணத்தைக் கூலிக்குத் தழுவியது போலும் எ - று.

கேடு வரினும் இன்பம் தரும் ஆயின் புணர்ச்சியான் வரும் குற்றம் என்னை என்றூர்க்கு, அவர் இவ்வாறு வருந்துவர் ஆகலான் இன்பம் இல்லை என்று கூறப்பட்டது. இவை இரண்டினாலும் கணிகையர் கூட்டத்தினான் வரும் குற்றம் கூறப்பட்டது. (1)

கா. 2.

ப. 7.

ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்பர்
மாய மகளிர் முயக்கு.

(கா - உ.) எ - து.—இவர் இப்படிப் பட்டவர் என்று ஆராயும் அறிவு இல்லாதார்க்குத் தெய்வத் தன்மை உடைத்து என்பர் வஞ்சனையால் பொருள் வரையும் மாயப் பொதுமகளிர் முயக்கு எ - று.

(ப - உ.) எ - து.—யாதானும் ஒரு பொருளை உள்ள ஆறு ஆராய்ந்து காணும் அறிவு இல்லாதார்கு வருத்தம் ஆம் என்று சொல்லுவர் மாயத்தை வல்ல மகளிர் முயக்கம் எ - று.

இவரை அறிவு இல்லாதார் சார்வர் என்றது.

(2) 54. - வரைவின் மகளிர் 229

கா. 3.

ப. 4.

பொருட்பொருளார் புன்னலந் தோயா
ளாயு மறிவி னவர்.

ரருட்பொரு

(கா - உ.) எ - து.—ஆடவரது பெருமையும் சிறுமையும் விரும் பாது பொருள் பொருள் என்று விரும்பி இருப்பவர் புல்லிய நலத் தைப் பொருந்தார்: யார் எனின் அருளைத் தமக்குப் பொருள் ஆகத் தெரிந்து உணரும் அறிவினை உடையோர் எ - று.

எனவே இவ்வஞ்ச மகளிர்க்குக் கொடுக்கும் பொருளை வறி யோர்க்கு ஈதலே வாய்ப்பதே தமக்கு என்று ஆயும் அறிவினர்

கருத்து என அறிக எ - று.

(ப - உ.) எ - து.--பொருளைப் பொருள் ஆகக் கொள்வாரது புல்லிய நலத்தைத் தோயார்: அருளைப் பொருள் ஆக ஆராயும் அறிவு உடையார் எ - று.

அருள் உடையார் ஆம் அறிவு என்றமையால் இவரை அறன் அறிவார் சாரார் என்றது. என்னை? அறத்தைக் கெடுப்பர் ஆதலின். (3)

கா. 4.

ப. 9.

நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

(கா - உ.) எ - து.—தமது நற்குணம் நிறைவு உடைய நெஞ்சம் இல்லாதார் முயங்குவர்: பிறவற்றை நெஞ்சின்கண் பேணிப் புணரும் பொது மகளிர் தோளை எ - று.

பிற என்ற பன்மை பொன்னும் ஆடையும் பூவும் ஆயின என அறிக.

சாந்தும் முத

(ப - உ.) எ - து.—நிறை உடைய நெஞ்சு

இல்லாதவர் தோய்

வர் : இன்பம் அல்லாத பிற ஆகிய பொருளை வெஞ்சினலே விரும்பி வைத்து அன்பு உற்றார் போலப் புணருமவர் தோளினை எ - று.

இது நிறை இல்லாதார் சேர்வர் என்றது.

(4) கா. 5.

ப. 6.

தன்னலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

(கா - உ.) எ - து.—தமது நன்மையை மேன்மேலும் விரித்துக்கொண்டு ஒழுகும் தகைமையர் யாவர்? அவர் என்றும் தோயார்: 230

திருக்குறள் - பொருட்பால்

யாதினை எனின் எப்பொழுதும் பொருள் வரும் தகைமையைத் தருக்கி மற்று இது காரணம் ஆக வஞ்சினை ஆகிய புல்லிய ஆசை யைப் பாரித்து நடிக்கும் பொது மகளிர் தம் தோளினை எ - று.

(ப - உ.) எ - து.—தம்முடைய நலத்தினை உலகின்கண் பரப்பு வார் சோரார்: வனப்பினல் களிப்பு உற்றுத் தமது புல்லிய நலத்தை

வல்லார் மாட்டும் பரப்புவார் தோளினை எ - று.

புல்லிய நலன் என்றார் வனப்பு உடையர் ஆயினும் இழிந்தார் மாட்டும் பரப்புதலின் தம் நலம் பாரிப்பர் என்றமையால் இன்பம் நுகர வல்லார் சோரார் என்றார் பின்னர் இன்பம் அது ஆகாமையின். இவை மூன்றும் அறம், பொருள், இன்பம் வேண்டுவார் சோரார் என்று

கூறப்பட்டது.

(5)

கா. 6.

ப. 2.

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்கந் தரும்.

(கா - உ.) எ - து.—ஆடவரை எஞ்ஞான்றும் நெஞ்சத்து அன்பினன் விரும்பாராய்ப் பொருளையே விரும்பிச் செல்லும் ஆய் தொடிப் பாத்தையர் சொல்லிக் காட்டும் இன்சொல்லும் இழுக் கத்தைத் தரும இத்தனை அல்லது விழுப்பம் தாராது ஆம் ஆசாயின் எ - று.

(ப - உ.) எ - து.— அன்பால் கலத்தல் இன்றிப் பொருளால் கலக்கும் ஆய் தொடியார் சொல்லும் இன்சொல் பின்பு கேட்டினைத் தரும் எ - று.

இது கணிகையர் கூட்டத்தினல் வரும் குற்றம் என்னை என்றார்க் குக் கூறப்பட்டது. (6)

கா. 7.

ப. I.

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளார் விடல்.

(கா - உ.) எ - து.—தாம் கருதிய பொருள் தமக்குப் பயன் படும் உபாயமே சீர்தூக்கிப் புறமே நெறிப்பட உரைக்கும் நெறியில் மகளிர் செய்யும் நசையை இது வெறும் பொய் நசை என்று சீர் தூக்கி மற்று இவரோடு நட்புச் செய்யாது ஒழிக எ - று.

(ப - உ.) எ - து.—தமக்கு உள்ளது ஆம் பயனை நோக்கிக்

குணம் இல்லாத மகளிர் இன்பத்தை
சாராது ஒழிக எ - று.

ஆராய்ந்து பார்த்து அவரைச்

54. வரைவின் மகளிர்

இதனையே கணிகையர் இலக்கணம் எல்லாம் தொகுத்துக் கூறினர். இது கணிகையர் கலவியைத் தவிர்க என்றது. (7)

கா. 8.

ப. 10.

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங் திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(கா - உ.) எ - து.—.....

இம்மூவகைப் பொருள் அனைத்தும் காமே தம்வயின் நீக்கல் ஆற்றாது மனத் தொடர்ச்சி எ - று.

"இம்மையே தவஞ்செ யார்கை யிருந்தி யகற்றல் வேண்டி
நம்மையுங் கள்ளுஞ் சூது நான்முகன் படைத்து விட்டான்"

என்றார் பிறரும் என அறிக எ - று.

(ப - உ.) எ - து.—கவர்த்த மனத்தை உடைய பெண்டிரும் கள்ளும் கவறும் திருமகளால் கடியப் பட்டாரது நட்பு எ - று.

இது நல்குரவு இலார் சாரார் என்றது. பின்பு கள்ளும் கவறும் கூறுகின்றார் ஆதலின், அவை மூன்றும் ஒத்த இயல்பின என்று அறிதற்குப் பின் கூறப்பட்டது. இவை நான்கினையும் அவரைச் சார்வார்.....கூறப்பட்டது. (8)

கா. 9.

ப. 9.

வரைவிலா மாணிழையார் மென்றோள்

புரைவிலாப்

பூரியர்க ளாழு மளறு.

(கா - உ.) எ - து.—வரைவில் மகளிர் ஆகிய பாத்தையாது மென்றோள் அவ்வுருவிற்று ஆயினும் அது அன்று: மற்று என்னை எனின் அறிவு மேம்பாடு இல்லாத கீழ்மக்கள் புக்கு அழுந்தும் கும்பி

நரகம் எ - று.

புரைவு - உயர்வு. பூரியர்கள் - கீழ் மக்கள்.

(ப - உ.) எ - து.—முயக்கத்தில் வரைவு இல்லாத மாண் இழை யாது மெல்லிய தோள் ஆவது, உயர்வு இல்லாத கயவர் அழுந்தும்

நரகம் எ - று.

கயவர் அழுந்துவது நரகின்கண் ஆதலின்
இஃது இழிந்தார் சார்வர் என்றது.
நரகு எனப்பட்டது.

கா. 10.
ப. 5.

பொதுநலத்தார் புன்னலந் தோயார்
மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

(கா - உ.) எ - து.—யாவர் மாட்டும் பொதுப்பட வரும் பொருள் காரணம் ஆக நடிக்கும் பொது நலத்தார் ஆகிய பொது மக னிர் காட்டுப் புல்லிய நலத்தைப் பொருந்தார்; யார் எனின், தம்மதித் தூய்மையால் பெரிதும் மாட்சிமைப் பட்ட அறிவினை உடையோர் எ - று.

(ப - உ.) எ - து.—எல்லார்க்கும் பொது ஆகிய நலத்தினை உடையவாது புல்லிய நலத்தைச் சேரார் மதி நலத்தாலே மாட்சி மைப்பட்ட அறிவு உடையார் எ - று.

புத்திமான்கள் சேரார் என்றமையால், பொருளை கருதுவார் சேரார் என்றார் பொருளைக் கெடுப்பர் ஆதலின். (10)

(கா - உ.) இங்ஙனம பொது மகளிர் முயக்கம் பொருள் அன்று என்பதனை உணர்த்தி மறறு அதன் பின்னரே இதனைடு பொருளும் கள் உண்டலும் உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

55. கள்ளுண்ணாமை.

(ப - உ.) கள் உண்ணாமை ஆவது கள் உண்டலைத் தவிர்தல் வேண்டும் என்று கூறுதல். இது கணிகையர் கூட்டத்தினால் வரும் ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1. உண்ணற்க கள்ளை யுணினுண்க சான்றோரா

லெண்ணப் படவேண்டா தார்.

(கா - உ.) எ - து.—எஞ்ஞான்றும் உண்ணுது ஒழிக கள்ளினை எனின் மற்று உண்ணினும் உண்க: யார் எனின், சான்றோரால் மற்று இவரும் எம்மில் ஒருவர் என்று உடன் எண்ணப்படுதலே வேண் டாதவர் எ - று.

(ப - உ.) எ - து.—கள்ளினை உண்ணுது ஒழிக: உண்ண வேண் டின் சான்றோரால் மதிக்கப்படுதலே வேண்டாதார் உண்க எ - று.

இது கள் உண்டலைத் தவிர வேண்டும் என்றது.

(1)

கா. 2.
ப. 9.

உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ
ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(கா - உ). எ - து.—தனித்தனி நெஞ்சினால் அயிர்த்து ஆராய்ந்து தாம் வாழும் ஊரின் மக்களானே எஞ்ஞான்றும் சிரிக்கப்படுவார் யார் எனின், கள் உள்ள வழி ஒற்றிச் சென்று மற்று ஆங்கே தம் கண்ணோடித் திரிபவர் எ - று.

உள் ஊற்றி என்பது நெஞ்சினுல் அயிர்த்து ஆராய்ந்து கள் ஒற்றி என்பது கள் உளவழி ஆராய்ந்து என்றது. கண் சாய்ப்பர் என்பது

கண்ணேறிடித் திரிபவர் என்றது.

(ப - உ.) எ - து.—தங்கள் ஒழுக்கத்தை

உள்புக்கு அறிந்து

உள்ளூராலே இகழப்படுவர்: எல்லா நாளும் கள் உள்ள நாடி. அதன் கண்ணே வாழும் அவர் எ - று.

இடத்தை

உண்ணுமது அறிவார் இல்லை என்பார்க்கு டது.

இது கூறப்பட்

(3)

கா. 3.
ப. 7.

களித்தானைக் காரணங் காட்டுதல்

நினீர்க்

குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

(கா - உ.) எ - து.—கள் உண்டான் ஒருவனைக் குறித்துச் சான்றோர் பல நூல் வகையாலும் இது தகாது என்று எடுத்து உரைத்துக் காட்டுதல் அவது எத்தன்மைத்தோ எனின், நீருள் மூழ்கி நின்றான் ஒருவனைத் தீயினால் சென்று தருவிப் பிடித்த அத் தன்மைத்து எ - று

பரி. பா - டீ. "நீர்கீழ்க்".

(ப - உ.) எ - து.—கள் உண்டு களித்தவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல் நீர்கீழ் மூழ்கினானைத் தீயினால் அறிகுற்றது போலும் எ - று.

தருவதல் - நிசைச்சொல். இது பிறர் சொல்லவும் கேளார் என்றது. இத்துணையும் கள் உண்பார்க்கு உளது ஆகும் குற்றம் கூறப்பட்டது. (3)

கா. 4.
ப. 3.

நாணென்னு நல்லாள்
புறங்கொடுக்குங் கள்
பேணைப் பெருங்குற்றத் தார்க்கு.
[ளென்னும்

(கா - உ.) எ - து.—நாண் என்னும் கன்னெறியாட்டி இவனின் நீங்கிப் புறத்து எகும்: இவ்வாறு புறம் மாறிப் போவது யார்க்கு எனின், கள் என்று எடுத்து உரைக்கப்படும் சிறிது உணர்வு உடையோர் யாவராலும் விரும்பப் படாது அஃது இத்தப் பெரிய

குற்றத்தை உடையோர்க்கு ஈ - து.

(ப - உ.) எ - து.—நாணம் என்று சொல்லப்படுகின்ற கன் மடந்தை பின் காட்டிப் போம்: கள் உண்டல் ஆகிய பிறரால் விரும் பப்படாத பெரிய குற்றத்தினை உடையார்க்கு எ - று.

இது நாணம் போம் என்றது.

30

(4)

கா. 5.
ப 2.

ஈன்றாண் முகத்தேயு மின்னாதா
லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(கா - உ.) எ - து — பெற்ற தாய்க்குப் புகல்வர் செய்யும் பிழை யும் கூட இனிது அனேறு? மறறு அவள் முன்னரும் இன்னாதால்: இனி என்னை வேறு சான்றோர் முன்னர்க் களி எ - று.

(ப - உ.) எ - து.—தன்னைப் இன்னாது: ஆகலால் சான்றோர் பயந்தாள் முன்னும் களித்தல்

முன்பு களித்தல் மற்று யாது
ஆகும் எ - று.

எல்லார் முன்னும் இன்னையையே பயப்பது என்றவாறு ஆயிற்று. கள் உண்டல் இனிமை தரும் அன்றே: இதனால் வரும் குறைம் என்னை என்றார்க்கு அதனால் வரும் குற்றம் கூறுவார் முற்பட இன்னை பயக்கும் என்று கூறப்பட்டது. (5)

கா. 6.

ப. 4.

உட்கப் படாஅது ரொளியிழுப்ப
ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

(கா - உ.) எ - து.—பிறரால் இவர் பெரியோர் என்று மதிக்கப்
படார்: பற்று ஒளியினையும் இழப்பர்: யார் எனின் எஞ்ஞான்றும் கள்ளின் மாட்டுக் காதல் கொண்டு ஒழுகு கடுவினையாளர் எ - று.

(ப - உ.) எ - து.—பிறரால் மதிக்கப்படார்: தோற்றமும் இழப்பர்: எல்லா நாளும் கள்ளினைக் காதல் செய்து ஒழுகுவார் எ - று.

இது மதிக்கவுப் படார்: புகழும் இலர் என்றது. (6) கா. 7.

ப. 6.

கள்ளுண்ணப் போதிற் களித்தானைக் காணுங்கா
லுள்ளன்கொ லுண்டவன் சோர்வு.

(கா - உ.) எ - து.—ஒருவன் ஒரு பொழுது கள் உண்டான் ஆயினும், பின ஒரு பொழுது அது செய்பாதும இருக்தும் அன்றே: மறறு அபபொழுதின் கண்ணை கள பருகிக் தன்னை அறியாது கலங்கி வருவானையும் தான் கண்டிருக்கும் அனறே: அங்ஙனம் கண்ட இடத்து ஆயினும் கருதி நோக்காதே அக்கள்ளினைப் பருகு வானது சோர்வினை எ - று.

எனவே அவன் உணர்ச்சிச் சோர்வும், கண் சோர்வும், உடல் சோர்வும், உடைச் சோர்வும் கண்டு யாழும் அங்ஙனம கெடுவேம் தாதே எனறு உள்ளும் உபாயம் அறியாது மற்று இதுவே சோர்வு எனறு அறிக எ - று.

பரி. பா - ம். "உள்ளான்கொ லுண்டதன் சோர்வு".

55.

கள்ளுண்ணாமை

235

(ப - உ.) எ - து.—தான் கள் உண்ணாத பொழுது கள் உண்டு களித்தவனைக் கண்ட இடத்து நினையான் போலும் தான் கள் உண்ட பொழுது தனக்கு ஆயின் தவிரும் எ - று.

உள்ளது ஆகும் சோர்வினை: நினைப்பன்

இது தமக்கு உளது ஆகும் குற்றம் காணும் என்றது.

ப. 8.

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

(கா - உ.) எ - து.—ஒருவன் கள்ளின் களித்தும் மற்று அதனுல் யான் அறியேன் என்பதனைக் கைவிடுவான் ஆக: மற்று அக் களவினையும் களளிலுல் களித்த காலத்துப் பித்தனைப் போலப் பிறர் அறிய விட்டுப் பேசும் எ - று.

(ப - உ.) எ - து.—கள் உண்டால் களித்து அறியேன் என்பதனைக் கைவிடுக: மனத்தின்கண் கரந்ததூஉம் அப்பொழுதே வாய் சோர்ந்து புலப்படும்: அது கள்ளுக்கு இயல்பு எ - று.

இது மயங்கேம் என்பார்க்குக் கூறப்பட்டது.

(8) கா. 9.

ப. 10.

கையறி யாமை யுடைத்தே விலைகொடுத்து
மெய்யறி யாமை கொளல்.

(கா - உ.) எ - து.—இதன் பயன் அது ஆகலான் பெரிதும் தான் ஓர் ஒழுக்கம் அறியாமை என்னும் குற்றத்தை உடைத்து: அஃது யாது எனின் ஒருவன் பித்து எறல் இன்றி வேண்டும் விலை கொடுத்தும் தான் மெய் மறந்து ஒழுகுவது ஓர் மெய் அறியாமையைக் கோடல் எ - று.

ஈண்டுக் கை என்பது ஒழுக்கம்.

(ப - உ.) எ - து.—பயன் அறியாமை உடைத்தப் பொருள் கொடுத்துத் தம்மை அறியாமையைச் செய்யும் கள்ளினைக் கோடல்

எ - று.

மெய் என்பது தாம் என்பதும், ஒன்று என்பதும், அறத்துப்

பாலில் கூறப்பட்டது: அன்றியும் பொருளில் உண்மை அறியாமை என்றும் ஆம். இது மேல் கூறிய குற்றம் எல்லாம் பயத்தலின் இதனை அறிவு உடையார் செய்யார் என்பது கருத்து. (9)

கா. 10.

ப. 5.

துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று

நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(கா - உ.) எ - து.—உலகத்து ஒவ்வாது துஞ்சினார் என்றும் செத்தார் என்றும் வருவதன் பொருள் கருதின் இறந்து பட்டார் என்பதே தர வல்லது துஞ்சினார் என்றது: வேறு ஒன்றும் அல்ல: கள் உண்பவரும் நஞ்சு உண்பாரின் வேறு அல்லர் எ - று.

(ப - உ.) எ - து.—உறங்கினார் செத்தாரோடு ஒப்பர்: அறிவு இழத்தலான்; அதுபோல எல்லா நாளும் கள் உண்பவர் நஞ்சு உண்பவரை ஒப்பர்: மயங்குதலான் எ - று.

இஃது அறிவு இழப்பர் என்றது.

(10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் கள்ளும், சூதும், களவும் என்பன கண்டகத் தொழில் ஆகலால் மற்று இதன் பின்னரே சூதினை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

56. சூது.

(ப - உ.) சூது ஆவது சூது ஆடினால் வரும் குற்றம் கூறுதல். மேல் கூறியவற்றோடு ஒத்த இயல்பிற்று ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 2.

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு

முகடியான மூடபட டாா.

(கா - உ.) எ - து.—பிறிது ஓர் செல்வம் அடையாமையே அன்றித் தன் வயிறு ஆர உண்டு சேறலும் இலர்: இன்னும் மற்று இதுவேயும் அன்றிப் பெருந்துயரும் உறுவர்: யார் எனின் சூது என்று எடுத்து உரைக்கப்படுகின்ற இம்மூதேவியால் சூழ்ந்து கொள்

னப்பட்டவர் எ - று.

(ப - உ.) எ - து.—தமக்கு உளது ஆகிய இந்திரியங்களும் மனமும் இன்புற்று நிறையப் பெறார்: அதுவே அன்றி அல்லல் படுவதும் செய்வர்: சூது ஆகிய மூதேவியால் மறைக்கப் பட்டார் எ - று.

மறைத்தல் - நற்குணங்கள் தோற்றுமை மறைத்தல். மேல் சூது ஆடல் ஆகாது என்றார்: அதனால் குற்றம் என்னை என்றார்க்கு இவை இரண்டு குற்றமும் உள ஆம் என்று கூறப்பட்டது. (1)

ப. 9.

கா. 2.

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

(கா - உ.) எ - து.—தனக்குக் கீழ்மைகள் பலவற்றையும் செய்வதாய் இங்ஙனம் மேன்மை ஆகிய சீர்மைப் பாட்டினைச் சிலையழிக்

கும் சூதின் மேற்பட ஒருவர்க்கு வறுமையைத் தரவல்லது மற்று ஒன்றும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—துன்பம் ஆயின பலவற்றையும் செய்து கீழ்மையை அழிக்கும் சூதுபோல் வறுமை தருவது பிறிது ஒன்று இல்லை எ - று.

மேல் கூறிய எல்லாவற்றையும்
கூறப்பட்டது.

கா. 3.
ப. 6.

பொருள்கெடுத்துப் பொய்மேற்
கொளீஇ யருள்
தல்ல லுழப்பிக்கும் சூது.
[கெடுத்

(கா - உ.) எ - து.—ஒருவர்க்கு முன் நின்ற பொருளையும் கெடுத்துப் பொய்மையும் அவன்பால் கொளுவி வறியோர்க்கு ஒன்று ஈதல் மாபு ஒன்று உள்ள அருளினையும் கெடுத்துப் பின்னும் தமக்கு ஆற்ற ஒண்ணா அருந்துயர் உறுவிக்கும் சூது ஆனது எ - று.

(ப - உ.) எ - து.—முற்படப் பொருளைக் கெடுத்து அதன் பின் பொய்மையை மேற் கொள்ளுவிக்கும்: பின் அருளைக் கெடுத்து அதன்பின் அல்லல் படுத்துவிக்கும் சூது எ - று.

சூது ஆடினர் அல்லல் உழப்பர் என்றார்: பொருள் கேடு வருவது அல்லது அருள் கெடுவது உண்டோ என்றார்க்கு அத்துணை வருமாறு இது என்று கூறப்பட்டது.

(3)

கா. 4. ப. 5.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

(கா - உ) எ - து.—தம் குலத்தொடு பழகி வருகின்ற செல்வத்தையும் கெடுத்துத் தாம் ஒழுகி வருகின்ற மாபினையும் கெடுத்து விடும்: தாம் என்செயின், காலையே தாம் செய்யும் கருமக் கடன் ஒழிந்து சூது ஆடு களரிக்கண் சென்று புகுஉம் செய்தி ஆயின் எ - று.

(ப - உ.) எ - து.—தோன்றின நாள் தொட்டு வருகின்ற செல்வத்தினையும் தமது இயல்பு ஆகிய குணத்தினையும் கெடுக்கும் சூது கழகத்தின்கண்ணே காலைப் பொழுது புகுவன் ஆயின் அப்புகல் எ - று.

மேல் கூறிய இன்புறுதல் வாயிலா ஆயினும், தோன்றின நாள் தொட்டு வருகின்ற செல்வம் உடையார்க்கும் பண்பு உடையார்க்கும்

உளது ஆகுமே என்றூர்க்கு அவை இரண்டும்
பட்டது.

போம் என்று கூறப்

கா. 5.

ப. 10.

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

(கா - உ.) எ - து.—கவறு ஆடலும் அக்கவறு ஆடு களத்தில் சென்று புகுதலும் பிறிது ஒன்றினும் கைவைக்கும் கருமம் இன்றி அக்கவறு ஆடும் ஒழுக்கமே ஒழுக்கம் ஆதலும் இவையே நெருங்கப் பயின்று மற்று இது அல்லது பிறர்க்கு ஒன்று ஈயாது இறுகி நிற்கும் உலோபம் உடையார் யாவர்? மற்று அவரே இருமை ஆக்கமும் இலர் ஆகியோர் எ - று.

கழகம் என்பது சூது ஆடுகளம். கை என்பது இதற்கு ஏற்ற ஒழுக்கம். தருக்குதல் என்பது செருக்குதல். இவறல் என்பது உலோபம்.

(ப - உ.) எ - து.—கவற்றினையும் கழகத்தினையும் கைத்தொழி லினையும் விரும்பி விடாதவர்கள் முன் காலத்தினும் வறியர் ஆனர் எ - று.

கவறு - *செத்தம். கழகம் - உருண்டை உருட்டும் இடம். கைத் தொழில் - கவடி பிடித்தல். சூது ஆவது இம்மூன்று வகைத்து என்பதூஉம், இதனானே வறுமை உறுமென்றார் அஃது யாங்ஙனம் அறிதும் என்பார்க்கு முன்பு சூது ஆடிக் கெட்ட அரசாலே அறிய லாம் என்பதூஉம் கூறப்பட்டது.

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

(கா - உ.) எ - து.—சூதைப்பற்றி நின்று ஒரு பொருள் எய்திப் பல பொருள் இழக்கும் சூது ஆடுவார்க்கும் உளது ஆமோ? ஆகாது: * யாது எனின் ஒருவாற்றானும் தமக்கு ஓரிடத்தும் ஒரு நன்மை பெற்று வாழ்வது ஓர் நெறி எ - று.

(ப - உ.) எ - து.—ஒரு பொருளின்கண் ஒரு பொருளினை எய்தி அவ்வாசையாலே மற்று ஒரு பொருளின்கண் நூறு பொருளை இழப்பிக்கும் சூதாடிகளுக்கு நன்று எய்தி வாழ்வது ஒரு நெறி உண்டாமோ? எ - று.

---

* கலித்தொகை 94-வது பாடல் உரை "வல்லுப் பலகை" நெத்தப் பலகை என்பது ஒப்புக் காண்க. 56. சூது

239

இது தாண்டிலில் பொன் மீன் விழுங்கினால் போலும் என்றார். அதற்குக் காரணம் ஆகவும் இராக்கம் இல்லை என்பதாகவும் கூறிற்று.(6)

கா. 7.

ப. 4.

உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போழப்பு புறமே படும்.

(கா - உ.) எ - து.—வாய்மையும் வழக்கும் கல்வியும் முதலிய தன் நாவினால் கூறும் நயம் இன்றி என்றும் கவறு பூட்சியில் தோன்றும் தாயப் பெயர்களையே ஒழியாது கூறித் திரட்டிய பொருள் தொகை அனைத்தும் தம் இடத்தினின்றும் போய்க் கெட்டு விடும் எ - று.

உருள்தல் என்பது புரளுதல். ஆயம் என்பது கவறு பூட்சியின் தாயம். பொருள் ஆயம் என்பது பொருள் கூட்டம் என்றது, படும் என்றது கெடும் என்றது.

(ப - உ.) எ - து.—புரளும் கவற்றை இடைவிடாது எக்காலத்தும் கூறுவான் ஆயின் பொருள் வரவு தன்னை விட்டுப் போய்ப் பிறர்பால் செல்லும எ - று.

மேல் கூறிய ஐந்தும் அடையாமைக்குக் காரணம் என்னை என்றார்க்கு முயற்சி இன்மையான் இவற்றை உண்டாக்கற்குக் காரணம் ஆகிய வருவாய் இல்லை ஆம் என்று அதற்குக் காரணம் ஆகக் கூறப் பட்டது.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(கா - உ.) எ - து.—சூது ஆடலைத் தாம் வென்றிடினும் விரும் பற்க: என் எனின் அங்ஙனம் வென்று உளது ஆய அப்பொருள் தானும் ஒருவன் கொலை கருதித் தூண்டிலிற் செறித்த பொன்னி னைக் கண்ட மீனைது நமக்கு இனிது என்று கருதி விழுங்கிய அத் தன்மைத்து எ - று.

(ப - உ.) எ - து.—வெல்லும் ஆயினும் சூதினை விரும்பாது ஒழிக: வென்று பெற்ற பொருளும் தூண்டிலின்கண் உண்டாகிய பொன்னை மீன் விழுங்கினுற் போலும் எ - று.

பொன் என்பது இரும்பு ஆம். பின் ; கேடு பயக்கும் என்ற வாறாயிற்று. உம்மையான் வெல்லான் என்பது தணிபு. இது சூது ஆடலைத் தவிர்க என்றது. (8)

கா. 9. ப. 8.

இழத்தொறுங் காதலிக்கும் சூதேபோற் றுன்ப
முழத்தொறுங் காதற் றுயிர்.

(கா - உ.) எ - து.—கற்றல் கேட்டல் கடன் அறிந்து ஒழுகு தல் என்னும் இவை காதலியாது சூதினல் தன் கைப்பொருள் இழத்தல் கண்டு வைத்தும் அங்ஙனம் இழத்தொறும் இயற்றல் காத லிக்கும் சூதே போலும் பெரிதும் துன்பம் உழத்தொறும் உழத் தொறும் காதல் உடைத்தாவது இச்சூது ஆடும் உணர்வில : என்னை பாவம்! எ - று

காதற்று என்பது காதலை உடைத்து என்றது. உயிர் என்பது இவனை ஒரு மகன் என்று கூறுதற்கு தாணி உயிர் என்றது.

(ப - உ.) எ - து.—பொருளை இழக்கும் தோறும் பொருளைக் காதலிக்கும் சூது போலத் தன்பம் உழக்கும் தோறும் இன்பத்திலே காதல் உடைத்து உயிர்: இவை இரண்டினுக்கும் அஃது இயல்பு எ - று.

ஈண்டு உயிர்க்கு அஃது ஆதல் கூறியது எற்றுக்கு எனின் இவை இரண்டையும் ஒன்றை ஒன்றாகக் கூறின் அல்லது பிறிது உவமிக்கப்படும் பொருள் இல்லை என்றற்கு எனக்கொள்க. மேல் ஒன்று எய்தி நூறு இழக்கும் என்றார். அஃது என்னை? ஒருகால் தோற்றவன் பின்பு தனியாளை என்றற்கு இது கூறப்பட்டது. (9)

கா. 10.

உடைசெல்வ மூணெளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

ப. 3.

(கா - உ.) எ - து.—உடுப்பனவும், உடைய பல செல்வமும், உண்பனவும், வென்று தோற்றமும், கல்விகளும் என்று இவ்வைந்தும் இவனை அணுகா ஆம்: சூதின் கருவி இருந்து நின்று ஆயம் கைவிடாட்டாமல் கைக்கொண்டு ஒழுகப் பெறுவோர்க்கு எ - று.

ஆயம் கொளின் என்பது கவற்றினது ஆயம் என்றது.

(ப - உ.) எ - து.—உணவும் ஆடையும் செல்வமும் புகழும் கல்வியும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருளும் சேரா ஆம்: கவற்றைக் கையகத்துக் கொளின் எ - று.

செல்வம் - பொன்னும் மனையும் பூமியும் அடியாரும் முதலாயின. மேல் சூது ஆடினர் இன்பு உற்று நிறைவு பெறார் என்றார். அதற்குக் காரணம் என்னை என்றாற்கு இன்பத்திற்குக் காரணம் ஆகிய இவை ஐந்தும் அடையார் என்று காரணம் கூறிற்று. (10)

57. மருந்து

241

(கா - உ.) இவ்வாறு நட்பின்கண் சூதும், கள்ளும் மருவற்க என்பது உணர்த்தி மற்று அனைவர்க்கும் முந்து உற மருவுதற்கு இனிய யாக்கை உறுதிக்கு வாய்ப்பு உடைமை மருந்து ஆகலான் மற்று அவற்றின் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

57. மருந்து.

(ப - உ.) மருந்து ஆவது யாக்கை நோய் உறுமல் செய்யும் திறன் கூறுதல். மேல் கடிய வேண்டுவன கூறினார்: இனிக் கடியப்படாத உணவும் தன் அளவின் மிகும் ஆயின் துன்பம் பயக்கும் ஆதலான் அதுவும் அளவு அறிந்து நுகர வேண்டும் என்று அதன் பின் கூறப்பட்டது.

கா. 1. ப. 2,

அற்ற ளவறிந் துண்க வஃதுடம்பு

பெற்ரு னெடிதுய்க்கு மாறு.

(கா - உ.) எ - து.—ஒருவன் தான் முன்னம் உண்டது வெந்து அற்ரூல் அவ்வறவு தான் பொய்ப்பசியோ மெய்ப்பசியோ என்று சிறிது தாழ்க்க நின்று ஓர்ந்து தெளிந்த பின்னர் உண்க: அங்ஙனம் உண்ணவே அது கொண்டு தன் உடம்பு நிலை தளராமல் உறுதிக்கண் நெடிது கொண்டு செலுத்துவது ஓர் நெறியினைப் பெறலாம் எ - று.

(ப - உ.) எ - து.—முன்பு உண்டது அற்ரூல் பின்பு உண்ணுங் கால் இத்துணை அறும் என்பதூஉம் தான் அறிந்து உண்க: அஃது உடம்பு பெற்றவன் அதனை நெடுங்காலம் செலுத்துதற்கு உரிய வழி அது ஆம எ - று.

மேல் அற்றது போற்றி உண்க என்ரூர்: இது போற்றுதல் ஆவது அளவு அறிந்து உண்டல் என்று கூறப்பட்டது. (1) கா. 2. ப. 4.

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி னூறுபா டில்லை யுயிர்க்கு.

(கா - உ.) எ - து.—கைப்புப் புளிப்புத் திக்திப்புக் காழ்ப்புக் கூர்ப்புத் துவர்ப்பு என்று சொன்ன அறுவகைச் சுவையும் இப்படி மாறுபட வகுத்த உண்ணுது ஒருபடியே உண்ணும் சில்சுவை உண்டியை ஒழித்து மருத்து நூல் கூறியாங்கு உண்ணப்பெறின் ஓர் இடையூறு படுதல் இல்லை மக்கட்கு எ - று.

(ப - உ.) சுவையும்
நீக்கி உண்பான் ஆயின்
வீரியமும் மாறுபாடு இல்லாத உணவை
தன் உயிர்க்கு வரும் இடையூறு இல்லை
எ - று.

31

மேல் மாறுபடாத உணவை உண்ண என்றார்: இதனுளே எவ் விடத்தும் மாறு ஆகாமை வருதலின் அஃது எய்தியது விலக்கிச் சுவையும் வீரியமும் மாறுபட்டன நுகர வேண்டும் என்றது. அஃதா வது பலாப்பழம் நின்றால் சுக்குத் தின்றல். (2)

கா. 3. ப. 6.

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

(கா - உ.) இவ்வாறு மாறுபாடு வருத்த உண்பது: அது தானும் அளவின்கண் மிகினும் குறையினும் மருத்து நூல் வல்லோர் ஆகிய மருத்துவர் அனைத்து நோய்க்கும் அடியுரம் ஆக நூல் நெறி யின் சூழ்ந்த வாதம் முதலிய மூன்று நோயினையும் செய்யும் எ - று.

நூலோர் என்பது - மருத்துவர் என்பது. வளி என்பது வாதம்.

(ப - உ.) எ - து.—உணவும், உறக்கமும், இனை விழைச்சும் தன் உடம்பின் அளவிற்கு மிகினும் குறையினும் நூலோரான் எண்ணப்பட்ட வாதமும் பித்தமும் ஐஷ்மும் ஆகிய மூன்றும் நோயைச்

செய்யும் எ - று.

மேல் உணவு மிகின் நோய் செய்யும் என்றார்: அதுவே அன்றி மற்று உள்ளவை மிகினும் இவை மூன்றும் குறையினும் நோய் ஆகும் என்றது. (3)

கா. 4.

ப. 5.

இழிபறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்.

(கா - உ.) எ - து.—அளவின்கண் இழிவது ஆகிய இழிவு அறிந்து உண்போன் யாவன், அவன் மாட்டு இன்பம் போல இனிது நிற்கும்: யாவர் மாட்டு யாது எனின், அங்கு அளவு அறியாத மிகு பேர் இரையன் இடத்து நோய் ஆனது எ - று.

(ப - உ) எ - து —அறும் அளவு அறிந்து உண்பவன்கண் இன்பம் போல உண்டாம்: மிக உண்பான் கண் நோய் எ - று.

மேல் கூறியவாற்றான் உண்ணுதற்கு என்றது.

கா. 5.

தீயள வன்றித் தெரியான் பொருதுண்ணி
னேயள வின்றிப் படும்.

ப. 10.

57. மருந்து

248

(கா - உ.) எ - து.—இவ்வாறு தனது அங்கிக்குத் தக்க அளவு என்பது ஒன்று இன்றிப் பின்னும் அவ்வுண்பதனை மற்று இது உண்டிக்குத் தகும் தகாது என்று தெரிந்து உணரானும் ஆய் முன் கூறியாங்குக் கழிபேர் இரையாகப் பெரிது உண்ணும் ஆயின் அவன் கண் வரும் நோய் ஓர் அளவு இன்றி உளது ஆம் எ - று.

(ப - உ.) எ - து.—வயிற்றில் தீயினது அளவு அன்றி ஆரா யாதே மிக உண்பான் ஆயின் மிக நோய் உண்டாம் எ - று.

இது நோய் தீர்ந்தாலும் தீ அளவு அறியாது உண்பான் ஆயின் மீண்டும் நோய் வரும் ஆதலான் அளவு அறிந்து உண்ண வேண்டும் என்றது. பொரிக் கஞ்சிக்கூழ்.....(5)

கா. 6.

ப. 3.

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க துவரப் பசித்து.

(கா - உ.) எ - து.—தான் முன் காலத்து உண்டது அற்றது

அறிந்து பின்னும் தான் உண்ணும் முறைமைக்கு மாறு அல்லவற்றை முதிரப் பசித்தும் அறநி அறவே உண்க எ - று.

(ப - உ.) எ - து.—முன்பு உண்ட உணவு அற்றதனை அறிந்து

பின்பு அறும் அளவும் கடைப்பிடித்து உண்ணுங்கால் ஒன்றினோடு ஒன்று மாறு கொள்ளாத உணவினை மிகவும் பசித்து உண்க எ - று.

மாறுகோடல் ஆவது *நெய்யும் தேனும் இனிய ஆயினும் தம்மில் அளவு ஒக்கும் ஆயின் கொல்லும் : அதுபோல்வன.

இஃது உண்ணுங்கால் அளவு அறிந்து உண்ணலே அன்றி மாறு அற்ற உணவை உண்ண வேண்டும் என்றது. (6) கா. 7.

ப. 1.

மருந்தென வேண்டாதாம் யாக்கைக் கருந்திய தற்றமை போற்றி யுணின்.

(கா - உ.) எ - து.—தாம் அங்ஙனம் உண்பது இங்ஙனம் அற்

றமை குறிக்கொண்டு ஒழுகப் பெறின் உறுவது ஓர் நோய் இன்மை தமது யாக்கைக்கு இனி வேறு மருந்து ஒன்று காணினும் சொல்லும் வேண்டாது ஆய்விடும் எ - று.

பரி. பா - மி. "வேண்டாவாம்" "அற்றது".

---

*"தேனெய் கூட்டி யுண்டிறந்தோ ரெருவ ரிலகினில்வந் திது தீதென் றுரைத்தல் ஒக்கும்"—சிவஞான சித்தியார் சௌத் - மதமறுதலை - செய் 3.

(ப - உ.) எ - து.—மருந்து ஒன்றும் வேண்டா ஆம உடம பிற்கு: முன் காலத்து அருந்திய உணவு அற்றமை அறிந்து நுகர் வது பாதுகாத்து நுகர்வான் ஆயின் எ - று.

இவ்வாறு செய்வன் ஆயின் மருந்து தேட வேண்டா என் றது.

(7)

ப. 7.

கர. 8.

நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(கா - உ.) எ - து.—இவன் உற்ற நோய் இது என்று மருத்து நூல் முறையினுல் ஆராய்ந்தும் இவற்கு இந்நோய் வருதற்குக் காரணம் யாது என்று இங்ஙனம் தெரிந்து நோக்கிப் பின்னும் அந் நோயினை இனிது ஆகத் தணிக்கும் திறம் அறிந்தும் அவர் இடங் களில் செயல் விழையாமல் வாய்ப்பச் செய்க எ - று.

(ப - உ.) எ - து.—நோயினையும் ஆராய்ந்து நோய் வருதற்குக் காரணமும் ஆராய்ந்து உறும் நோய் தீர்க்கும் நெறியும் ஆராய்ந்து தப்பாமல் செய்க எ - று.

இது நோய் தீர்க்கும் ஆறு கூறிற்று. (8)

பா. 8.

கா. 9.

உற்ற னளவும் பிணியளவுங் காலமுங் கற்றன் கருதிச் செயல்.

(கா - உ.) எ - து.—நோய் உற்றவனது வன்மையும், மென்மை யும், அவனுக்குச் சென்ற வயது அளவு ஆம் பிறவும், அவன் உற்ற நோய் ஆவது அவன் அனுபவத்திற்கு வந்து அடிக்கொண்ட முகமோ என்றும், இடம் கொண்ட நோய் தலைசாய்ந்த முகமோ என்றும், இந்நோய் நிலை அளவு அறிந்தும், காலம் காரோ, கூதிர், முன்பனி, பின்பனி, சீரிள வேனில், வேனில் என்னும் அறுவகைப் பருவத்துள்ளும் இப்பருவத்து இந்நோய்க்கு இம்மருந்து செய்தால் தீரும், விகற்பிக்கும் என அறிதலும் யாரோ எனில், வாகடம் முத லிய மருத்து நூல்களை பாசு அறக் கற்றவரே: இத்துணையும் குறிக் கொண்டு மற்று இதன் பின்னரே மருந்தினைச் செய்வான் ஆக எ - று.

(ப - உ.) எ - து.—நோய் உற்றவன் அளவும், நோயின் அள வும், அது பற்றிய காலமும் அறிந்து அதற்குத் தக்க ஆறு மருந்து செய்க ஆயுரு வேதம் வல்லார் எ - று.

மேல் வாய்ப்பச் செய் என்றார் இது வாய்ப்பச் செய்யும் ஆறு கூறிற்று. (9)

58.

(கா.) குழுமை—(பரி.) குழுயியல் - குடிமை 245

கா. 10.

ப. 9.

உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பாலுற் கூற்றே மருந்து.

(கா - உ.) எ - து.—நோயினை உற்றோன் தானும், இந்நோயான் இடர் உறக்கடவோம் அல்லேம் என்று மற்று இது தீரும் அளவு முயற்சியும் உணவும் குறியும் முதலிய இவ்வாறு மொழிவேம் என்னும் அறிவு உடையோன் தானேயும், ஒரு மருந்து ஆகும் இது அல்லது மருந்து ஆவது ஒரு நோய்க்குப் பல மருந்து உள ஆயினும் உற்றோன் அளவும் பின் அளவும் காலமும் நோக்கினல் இவற்றுடன் பொருந்தினது யாது மற்று அதுவும், தனி மருந்து ஆகும் இது அல்லது உழைச் செல்வான் அவனது தாயினும் இனிய தன்மையன் ஆகிய உற்ற இடத்து உதவும் பெற்றியோன் யாவன் மற்று அவன் தானும், ஒரு மருந்து ஆகும் எனவே இந்நான்கு பகுதியும் உடையது யாது மற்று அதுவே மருந்து என்று இயம்படுவது. ஆதலால் இந்நான்கினுள் ஒன்று உதவான் ஆயின் மற்று அதுவே கூற்றம் எ - று.

(ப - உ.) எ - து.—நோய் உற்றவனும், நோய் தீர்க்கும் அவனும், அதற்குத் தக்க மருந்தும் அதனைக் காலம் தப்பாமல் இயற்றுவானும் என்று இவ்வகைப்பட்ட நான்கு திறத்தது மருந்து எ - று.

எனவே இந்நான்கினும் ஒன்று தப்பும் ஆயின் நோய் தீராது என்றவாறு ஆயிற்று. இது மருந்தின் பகுதி கூறிற்று. (10)

(பரி.) துன்ப இயல் முடிந்தது.

(கா - உ.) இனி, மற்று இவ்வாறு கல்லோரோடும் கல்லவற்றோடும் மருவுதலும், தீயாரோடும் தீயவற்றோடும் மருவாமையும் பெரும்பாலும் குடிப்பிறந்தோர்க்கு அல்லது வாராமையான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

58. (கா.) குடிமை—(பரி.) குடிமையியல் - குடிமை.

(ப - உ.) குடி இயல் ஆவது அரசரும் அமைச்சரும் வீரரும் அல்லாத மக்களது இயல்பு கூறுதல். இஃது யாங்ஙனம் கூறினர் எனின், அது கூறிய அதிகாரம் பதின் மூன்றினும் முற்படக் குடிப்பிறந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், மானம் உடையார் இயல்பும் சான்றோர் இயல்பும் நான்கு அதிகாரத்தானும், பண்பு இன்றிப் பொருள் ஈட்டினர்க்கு உளது ஆகும் குற்றம் கூறுதலும்,

அந்தக் குற்றத்துக்கு அஞ்சி ஒழுகுதல் ஆகிய நாண் உடைமையும், அந்நாண் உடையார் தம் குடும்பத்தை நோக்கும் ஆறும், அவர் குடும்பத்தை நோக்குதற்குப் பொருள் வருமெறி பலவற்றுள்ளும் சிறப்பு உடைத்து ஆகிய உழவினது இயல்பும் நான்கு அதிகாரத்தானும், பொருள் இல்லாத மக்களது இயல்பும், அவர் பொருள் தேடும் ஆறும் மூன்று அதிகாரத்தானும், மக்களில் இழிந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும் கூறப்பட்டது.

மேல் ஆசர்க்கு முதலான பொருளும் பொருள் தேடும் கூறி இனி நிலத்து மக்களது இயல்பும் கூறுகின்றார் ஆதலின் அவற்றின் பின் கூறப்பட்டது.

குடிமை.

குடிமை ஆவது உயர்குடிப் பிறந்தாரது இயல்பு கூறுதல். மக்கள் உடைத்து ஆகிய கணங்கள் எல்லாவற்றினும் உயர்குடிப் பிறத்தல் சிறப்பு உடைத்து ஆதலின் இது முன் கூறப்பட்டது.

கா. 1.

ப. 2.

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(கா - உ.) எ - து.—நாம் கீழ் விரித்துச் சொன்ன நடுவு நிலைமையும் மேல் விளங்கக் காட்டி விடுவது ஆகிய நாண் உடைமையும் இவை இரண்டும் ஒருங்கு உள ஆதல் குடிப்பிறந்தார் மாட்டு அல்லது பிறர் மாட்டு இல்லை எ - று.

(ப - உ.) உயர்குடிப் பிறந்தார் மாட்டு அல்லது நடுவு நிலைமையும் பழி காணுதலும் இயல்பு ஆக ஒருங்கு உண்டாகா எ - று.

இஃது இற்பிறந்தார் இவ்வீரண்டும் இயல்பு என்றது.

ஆக உடையார்

(1)

கா. 2.

ப. 5.

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார் குன்றுவ செய்வ திலர்.

(கா - உ.) எ - து.—ஒன்று இரண்டு அன்றிப் பிறபல அடுக்கிய கோடி பொருள் பெறினும் குடிப்பிறந்தோர் இந்நாணமும் நடுவும் குன்ற வருவன என்றும் கடிவது அல்லது செய்வது இலர் எ - று.

(ப - உ.) எ - து.—பலகோடிப் பொருளைப் பெறினும் உயர் குடிப்பிறந்தார் தம் குடிக்குத் தாழ்வு ஆயின செய்யார் எ - று.

இது மானம் விடார் என்றது.

(2)

கா. 3.

ப. 7.

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

(கா - உ.) எ - து.—தமது இல்லின்கண் வழங்கிவரு பொருள் இனி மற்று யாதும் இல் என மாய்ந்தக் கண்ணும் நெடுநாள் பழகி வருகின்ற குடிப்பிறந்தோர் என்றும் தமது மாபின்கண் தலை அழிதல் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—வழங்கும் பொருள் தம் அளவிற்குக் குன்றிச் சுருங்கிய இடத்தும் பழைய மாபு வழுவாத குடிப்பிறந்தார் தமது இயல்பினின்றும் நீங்குதல் இலர் எ - று.

இது பொருள் இல்லாத காலத்தும் இயல்பு குறையார் என்றமையின், ஒப்புரவு செய்தலும் தவிரார் என்றவாறு ஆயிற்று. இது பண்பு உடைமை விடார் என்றது. இவை எழும் குடிப்பிறந்தார் இலக்கணம் கூறின. (3)

கா. 4.

ப. 10.

நலத்தின்க ணூரின்மை தோன்றி னவரைக்
குலத்தின்க ணையப் படல்.

(கா - உ.) எ - து.—நல்லொழுக்கத்தின்கண் தமக்குச் சிறிதும் கிருபை இல்லாமை தோன்றின் மற்று அவரைப் பிறந்த குலத்தின்கண் ஐயப்படுதல்: எனவே அவர் ஒக்கழுத்தின்கண் நலம் இல்லாமையால் அவர் மாட்டு அஞ்சத்தகும் எ - று.

பரி. பா - மி. "ஐயப் படும்".

(ப - உ.) எ - து.—ஒருவன் குடி நலத்தின்கண் நீர்மை இன்மை தோன்றும் ஆயின், அவனைக் குலத்தின்கண் தப்பினவன் என்று ஐயப்படுக எ - று.

இதனையும் குடிப்பிறந்தார் நீர் அல்ல
மதித்தவாறு ஆயிற்று.
செய்யார் என்று நன்கு

கா. 5.

ப. 6.

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

(கா - உ.) எ - து.—பிறரோடு நெஞ்சினுல் சலம்பற்றி நின்று தமது தகுதிக்கு அமைவு இல்லன எஞ்ஞான்றும் செய்யார்: யார் எனின் குற்றம் அற்ற தம் குடிப்பண்பினைச் சலியாமல் இறுகப் பற்றிக்கொண்டு நின்று யாம் வாழும் உயிர் வாழ்க்கையை இங்ஙனம் வாழ்தும் என்னும் இயல்பினர் எ - று.

(ப - உ.) எ - து.—பொய்யைச் சார்ந்து அமைவு இல்லாதவற்றைச் செய்யார்: குற்றம் அற்ற குலத்தைச் சார்ந்து வாழ்வேம் என்று கருதுவார் எ - து.

இது சான்றாண்மை விடார் என்றது.

(5) கா. 6.

ப. 9.

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

(கா - உ.) ஒழுக்க நலத்திற்கு உரிய குடிப்பிறந்தோர் மாட்டும் ஒரு குற்றம் உளதாம் ஆயின், மற்று அது வானின் திகழும் மதியிடத்து உண்டாகிய மறுப்போல் உயர்ந்து விளங்கும் எ - று.

(ப - உ.) எ - து.—உயர் குடிப்பிறந்தார் மாட்டுக் குற்றம் உள தாயின், அது வானத்து மதியின்கண் உள்ள மறுப்போல உயர்ந்து விளங்கும்: ஆதலால் குற்றப்பட ஒழுகற்க எ - று.

இது குற்றம் செய்தலைத் தவிர வேண்டும் என்றது. (6)

கா. 7.

ப. 8.

நலம்வேண்டி னுண்ணுடைமை வேண்டுங் குலம்
வேண்டுக யார்க்கும் பணிவு. [வேண்டின்

(கா - உ.) எ - து.—தமது நல்லொழுக்கம் குன்றாமை வேண்டின், நம்மாட்டு ஒரு குறைவரின் என்னை என்னும் இந்நாண் உடைமையை வேண்டும்: இனி நீர்நும் குலனுக்கு வேண்டினது யாவர்க்கும் இனிது இயலும் பணிவு உடைமையை வேண்டும் எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவர் தமக்கு நலம் வேண்டுவார் ஆயின், நாண் உடைமையை விரும்புக: அவ்வண்ணமே குலத்தை விரும்புவார் ஆயின், யாவர் மாட்டும் தாழ்ந்து ஒழுகுதலை விரும்புக எ - று.

இது பணிந்து ஒழுக வேண்டும் என்றது. (7)

கா. 8.

ப. 3.

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(கா - உ.) எ - து.— கீழ்ச்சொல்லிப் போந்த ஒழுக்கம் உடைமையும் வாய்மை நிகழ்ச்சியும் அங்குத் தோற்றம் செய்த நாணம் உடைமையும் என்னும் இம்மூன்றும் சிறிதும் வழுவகில்லார்; யார் எனின் குடிப்பிறந்தார் எ - று.

58.

(கா.) குடிமை—(பரி.) குடியியல் - குடிமை

249

(ப - உ.) எ - து.—ஒழுக்கம் உடைமையும், மெய்ம்மை கூறுதலும், அற்றம் மறைத்தல் ஆகிய நாணம் உடைமையும் இம்மூன்றினையும் தப்பார் குடிப்பிறந்தார் எ - று.

இவை மூன்றினையும் தப்பி ஒழுகார் என்றது.

(8) கா. 9.

ப. 4.

நிலத்திற் கிடந்தது கால்காட்டுங் காட்டுங் குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

(கா - உ.) எ - து.—முன்னம் புலப்படாது நிலத்தின்கண் ஒரு விதை கிடந்தால் கிடந்தமையை முதல் தோன்றிய தழைத்த தண்டே காட்டிக் கொடுக்கும்: அது போலக் குலத்தில் பிறந்தாரையும் காட்டிக் கொடுக்கும்: யாது எனின், வாய்ப்பிறக்கும் சொல் தானே எ-று.

(ப - உ.) வித்து நிலத்தின்கண் மறைந்து கிடப்பினும், அது மறைந்து கிடவாமையை அதன் முளை அறிவிக்கும்: அது போல உயர் குடிப்பிறந்தாரை அவர் வாயில் சொல் அறிவிக்கும் எ - று.

இதனானே குடிப்பிறந்தார் இன்னதை சொல்லார் என்றவாறு ஆயிற்று. (9)

கா. 10.

ப. 1.

நகையீகை யின்சொ லிகழாமை நான்கின் வகையென்ப வாய்மைக் குடிக்கு.

(கா - உ.) யாவர் மாட்டும் முகமலர்ச்சி உடையர் ஆகையும், வறியவர் யாவர்க்கும் யாதானும் ஒன்றைக் கொடுத்தலும், யாவர் மாட்டும் முகம் மலர்ந்து இனியவை கூறலும், ஒருவரை நெஞ்சினால் இகழ்ந்திராமையும் இந்நான்கும் குடிப்பிறந்தார்க்கு வாய்ப்பு உடைமை என்று சொல்லுப சான்றோர் எ - று.

(ப - உ.) எ - து.—முகமலர்ச்சியும், கொடையும், இனியவை கூறுதலும், பிறரை இகழாமையும் ஆகிய நான்கினையும் குலத்தின் உள்ளார்க்கு அங்கம் என்று சொல்லுவார் எ - று.

தொகை என்பது பிண்டத்தின் பெயர் ஆதலின் வகை என்பது உறுப்பிற்குப் பெயர் ஆயிற்று. மெய்ம்மைக் குடி என்றதனானே எஞ்ஞான்றும் தப்பு இல்லாக் குடி என்று கொள்ளப்படும்: இனை நான்கினையும் தமக்கு உறுப்பு ஆக உடையார் என்றும் கூறிற்று. (10)

(கா - உ.) இங்குச் சொன்ன குணங்களில் சிறிது குன்றினும் குடிக்கு வடு என்று மானிக்கு மானம் உடைமையும் அக்குடிப் பிறந்தோர்க்கே குணம் ஆகலான் மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

59. மானம்.

(ப - உ.) மானம் ஆவது எல்லாக் காலத்தினும் தமது நிலைமையின் திரியாமை. இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாமையின், அதன்பின் கூறப்பட்டது. இது மூவகைப்படும், தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார் மாட்டுச் செல்லாமையும், இனி வாவு பொறுமையும் என.

கா. 1. **ப. 10.**

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங் குன்ற வருவ விடல்.

(கா - உ.) எ - து.—இதனை இன்றி இது அமையாது எனினும் பெரும் சிறப்பினை உடையவன் ஆயினும் தன் குடிப்பண்பு குன்ற வருவனவற்றைக் கைவிடுக எ - று.

(ப - உ.) எ - து.—இன்றியமையாத சிறப்பு உடையன ஆயினும் தனது தன்மை குறைய வரும் பொருளையும் இன்பத்தையும்

விடுக எ - று.

இது பொருளும்

யற்க எ - று.

இன்பமும் மிகினும் தன்மை குறைவன செய்

(1)

கா. 2.

ப. 2.

பெருக்கத்து வேண்டும் பணிதல்

சிறிய

சுருக்கத்து வேண்டு முயர்வு.

(கா - உ.) எ - து.—குடிப் பிறந்தோர்க்கு என்றும் செல்வச் சிறப்பின்கண் வேண்டும் அச்செல்வம் செருக்கின இடத்தும் அதற்கு மறுதலை ஆகிய பணிவு உடையவர் ஆதல். இனி அச்செல்வம் நீங்கிய மிக்க வறுமைக்கண் வேண்டும் அவ்வறுமையால் பிறர்க்குத் தாம் குறை கூற மானித்து ஒழுகும் மேம்பாடு எ - று.

(ப - உ.) எ - து.—செல்வம் பெருகிய காலத்து எல்லார்க்கும் பணிந்து ஒழுகுதல் வேண்டும்: செல்வம் மிகவும் சுருங்கின காலத்துத் தமது தன்மை குறைவு படாமல் ஒழுக வேண்டும் எ - று.

இது திரு உடையார் பணிவு புகழப்படும்: திரு இலாதார் பணிதல் இகழப்படும்: ஆதலான் நல்கூர்ந்த காலத்தும் தன்மை குறைவன செய்யற்க என்றது. (2)

கா. 3.

ப. 8.

மருந்தோமற் றூணெம்பும் வாழ்க்கை பெருந்
தீடழிய வந்த விடத்து. [தகைமை

(கா - உ.) எ - து.—குடிப் பிறந்தோர்க்குத் தம் குடிப்பண்பு ஆகிய பெருந்தகைமை அழியவந்த இடத்து மானித்து ஒழியாது பின்னும் இருந்து ஊன் ஓம்பும் செய்கை மருந்தோ? எனவே சாவா மூவாப் பதம் தரும் செய்கையோ அச்செய்கை? எ - று.

மருந்து என்றது அமுதம்.

(ப - உ.) எ - து.—தனது பெரிய தகைமை வலி அழிய வந்த இடத்துச் சாவாதே இருந்து உயிர் ஓம்பி வாழும் வாழ்க்கை பின்பும் ஒருகாலம் சாவாமைக்கு மருந்து ஆமோ? எ - று.

பெருந்தகைமை அழிய வந்த இடத்து என்று கூட்டுக. இஃது அதற்கு அழிவு வாவு உளது ஆயின் சாவமேவண்டும் என்றது. (3)

கா. 4.

. ப. 7.

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

(கா - உ.) எ - து.—குடிமாபாளன் தனக்கு மானக்கேடு ஆம் மற்று இன்னதார் பின் சென்று உயிர் வாழ்தலின் அப்பொழுதே மானித்து இறந்து பட்டான் என்று பலாலும் எடுத்து உரைக்கப் படுதல் சால இனிது: மற்று அதுதான் வந்து எய்தும் ஆயின் எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவன் தன்னை இகழ்வார் பின் சென்று வாழும் அவ்வாழ்க்கையின் அவர்பால் செல்லாத அந்நிலையிலே நின்று கெட்டான் என்று பிறரால் சொல்லப்படுதல் நன்று எ - று.

மேல் இம்மை மறுமையில் பயன்படாது

என்றார் : அஃது எற்
றுக்குப் பொருள் பயக்குமே என்றார்க்குக் கூறப்பட்டது. இரண்டும் இகழ்வார்பால் சேறல் ஆகாது என்பது கூறிற்று. இனை

(4) கா. 5.

ப. 4.

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்கு எல்லா உறுப்பினும் தலைமைப் பாடு உடையது தலை ஆதலால் மற்று அதினின்று இழிந்த மயிரா னது பின்பு அத்தலைமைப்பாடு பெறுதல் இல்லை: மற்று அதனை

ஒப்பர் குல மேம்பாடு உடைய மாந்தர் தம் நிலையினின்றும இழிந்த இடத்து எ - று.

(ப - உ.) எ - து.—தலையினின்றும் நீங்கின மயிரைப் போல இக ழப்படுவர் மாந்தர் தமது நிலைமையினின்றும் நீங்கித் தாழ ஒழுகின

இடத்து எ - று.

மேல் தலைமக்கள் செய்யார் என்றதனால் குற்றம் என்னை என் றார்க்குக் கூறப்பட்டது. (5)

கா. 6.

ப.

3.

சீரினுஞ் சீர்ல்ல செய்யாரே சீரொடு

பேராண்மை வேண்டு பவர்.

(கா - உ.) எ - து.— சீரிய செல்வம் பெரிது உய்ப்பினும் சீர் அல்லனவற்றைச் செய்யக் கருதாரே : யார் எனின் தம் குடிமை ஆகிய சீர்மைப் பாட்டோடு பெரிய ஆண்மைப் பாடும் விரும்புவார் எ - று:

(ப - உ.) எ - து.—தமக்குப் பொருள் மிகுதி உண்ட்டாயினும் நிகர் அல்லாதன செய்யார்கள் தலைமையோட கூடப் பெரிய ஆண்மை விரும்புவார் எ - று.

இது நல்கூர்ந்த காலத்துச் செல்வம் உளதாயின் தமது தன்மை குறைந்து குடிசெய்தல் வேண்டாவோ என்றூற்குத் தலை மக்கள் செய்யார் என்று கூறப்பட்டது. (6)

கா. 7.

ப. 9.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்.

(கா - உ.) எ - து.—தனக்கு அலங்காரம் ஆகிய மயிர்க்கற்றை யின் ஒரு மயிர் போகின் மானித்துப் பின் உயிர்வாழாது அம்மயிர் துவக்கு உண்ட இடத்து நின்று வற்றிவிடுஉம் கவரி மா அன்னர் கடப்பாடு உடையார் தம் குடிமையின் சிறிது நீங்கி மானிப்பது ஓர் மானம் வந்து உறின் அப்பொழுதே தம் உயிர் துறப்பர் எ - று.

(ப - உ.) எ - து.—ஒரு மயிர் நீங்கின் உயிர் வாழாத கவரி மானைப் போன்ற மானம் உடையார் அம்மானம் அழியவரின்

உயிரை விடுவார் எ - று.

மேல் சாவ வேண்டும் என்றார்: அது செய்யல் ஆகுமோ என் றார்க்கு மானம் உடையார் சாவார் என்றது. (7)

கா. 8.

ப. 10.

இளிவரின் வாழாத மான முடையா ரொளிதொழு தேத்து முலகு.

(கா - உ.) எ - து.—.....
.....இவாது பெருமை விட்டு விளங்கும் தோற் றம் குறிக்கொண்டு உள்ளத்தால் புகழ்ந்து உரைப்பர் உலகத்தோர் எ - று.

(ப - உ.) எ - து.—இளிவரவு உண்டானால் உயிர் வாழாத மானம் உடையாரது புகழைத் தொழுது துதிக்கும் உலகு எ - று.

மேல் சாவார் என்றதனால் பயன் என்னை

கூறப்பட்டது.

என்றாற்கு இது

(8)

கா. 9.

ப. 6.

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

(கா - உ.) எ - து —இங்ஙனம் குடிப் பிறந்தோர்க்கு இம்மைக் கண் பெரியது ஓர் இகழ்ச்சி அல்லது புகழ்ச்சி இல்லை: ஆயின் மறுமைக்கண் வான் உலகு உய்க்கும் வாய்ப்பு இல்லை: ஆதலால் இனி மற்று என்னை கொல்லோ தம்மை இகழ்வார் பின்னரே தாம் சென்று நிற்கும் நிலை எனவே மானக்கேடு அல்லது மற்று ஒரு பயன் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—இம்மைப் பயன் ஆகிய புகழைத் தாராது ஆயின், மறுமைப் பயன் ஆகிய சுவர்க்கத்துப் புகுதல் இல்லை ஆயின், பின்னை என்ன பயனைக் கருதித்தான் தன்னை இகழ்ந்து உரைப்பார் பின்னே சென்று ஒருவன் நிற்கின்றது? எ - று.

இது தன்னை இகழ்வார் மாட்டுச் சென்று நிற்றலைத் தவிர்க என்றது.

(9)

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

(கா - உ.) எ - து.—குன்றினை ஒத்த பெருமையோரும் குன்றுவர் : தமது மானம் குன்றுவன ஆகிய சிறுமை ஒரு குன்றி அனைய் செய்யினும் எ - று.

(ப - உ.) எ - து.—மலைபோலப் பெரிய உயர்வு உடையாரும் தமது தன்மை குறைவர் : குறைவு வருவன குன்றி அளவு ஆயினும் செய்வார் ஆயின் எ - று.

இது மிக்கார் ஆயினும் இகழப்படுவர் என்றது. இத்துணையும் தன்மை குறைய ஒழுகல் ஆகாது என்று கூறப்பட்டது. (10)

(கா - உ.) ஆதலான் மற்று இதன் பின்னரே பெருமையின் மிகுதியை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

(ப - உ.) பெருமை ஆவது மேன்மை. அஃது ஆவது சிறியர் செய்வன செய்யாமை. அது பின்பு காணப்படும். இது மானம் உடையார்க்கு உளது ஆவது ஒன்று ஆதலின் அதன்பின் கூறப்பட்டது. அன்றியும் குடிப்பிறந்தார்க்கு உளது ஆகும் நற்குணம் எனினும் அமையும். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும். குணங்கள் பலவும் சேரக் கூறுகின்றார் ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

கா. 1.

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

ப. 10.

(கா - உ.) எ - து.--உலகத்து என்றும் யாவர்க்கும் தண்ணளி கொண்டு தாழ்ந்து ஒழுகுவது ஆம் பெருமை: இனிச் சிறுமை தன்னைத் தானே மதித்துச் சாலத் தன் திறம் அலங்கரித்து ஒழுகும் எ - று.

(ப - உ.) எ - து.—செல்வமும் கல்வியும் தனக்கு உள்ளது ஆகும் காலத்துத் தாம் பணிந்து ஒழுகுவர் எந்நாளும் பெருமைக் குணம் உடையார்: சிறுமைக் குணம் உடையார் அவை உளது ஆம் காலம் தொடங்கித் தம்மை வியந்துகொண்டு அணிவர் எ - று.

இது பணிந்து ஒழுகுதலும் பெருமை

என்றது. (1)

கா. 2. ப. 1.

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(கா - உ.) எ - து.—மக்கள் ஆகிய அனைவர்க்கும் பிறப்பின் கண் ஒரு வேற்றுமை இல்லை. அம்மக்கட்குச் சிறப்பு ஒவ்வாது என்பது என்னையோ எனில் இயல்பு நீங்கிய இழிவு தொழில் ஒருவர்க்கு உளது ஆயின் இவர் சாலச் சிறியர் என்றும் தமக்கு

இயல்பு ஆகிய பேரொழுக்கத்தின்கண் பிழையாது ஒழுகின் இவர் சாலப் பெரியார் என்றும் இங்ஙனம் வழங்கி வருதலால் யாவர்க்கும் சிறப்பு ஒவ்வாது என்பதனைத் தெரிந்து கொள்ளப்படும் எ - று.

சிறப்பு என்பது பெருமை.

(ப - உ.) எ - து —எல்லா உயிர்க்கும் பிறப்பால் ஒரு வேறுபாடு இல்லை: ஆயினும் தத்தம் செய்தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினாலே பெருமை ஒவ்வாது எ - று.

என்வே பெருமை ஆவது குலத்தினன் அறியப்படாது தானும் அதற்குக் காரணமும் கூறிற்று.

கா. 3. ப. 5.

அற்ற மறைக்குஞ் சிறுமை பெருமைதான்
குற்றமாக் கொண்டு விடும்.

(கா - உ.) எ - து.—சிறுமையானது என்றும் தான் செய்யும் நெறி அற்றங்களைக் அடக்கிக் கொண்டு ஒழுகும்: மற்றுப் பெருமை யானதுதான் அதனைக் குற்றம் ஆகக் கொண்டு விடும்: எனவே அதனை ஒருபொழுதும் தன்கண் நடக்க நிலை இல்லை என்பது பொருள் ஆயிற்று எ - று.

இவ்வாறு அன்றி

" அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்துவிடும் "

என்பது பாடம் ஆயின், தன்கண் ஓர் நெறி அற்றம் ஆகிய குற்றம் வந்து உளது ஆம் ஆயின் அதனை அப்பொழுதே மாய்த்து விடும் பெருமையானது: மற்று இனிச் சிறுமைதான் தன் நட்பின் இனிய நிலையாகக் கொண்டு ஒழுகும் எ - று.

இன்னும் பிறவாறு பாடம் ஓதுவாரும் உளர் என்னின் அதற்கு எற்கும் ஆறு அறிந்து உரைக்க.

பரி. பா - ம்.

" அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்."

(ப - உ.) எ - து.—பிறருடைய குறையை மறைத்துச் சொல்லும் பெருமை: சிறுமை அவர்க்கு உள்ள நன்மையைச் சொல்லுதலைத் தவிர்த்து குற்றத்தையே சொல்லி விடும் எ - று.

எனவே புறம் கூறுமை பெருமை என்று

கூறப்பட்டது. (3) 256

திருக்குறள் - பொருட்பால்

ப. 3.

கா. 4.

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீர்ல் லவர்கட் படின்.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்குச் செல்வச் சிறப்பு உளது ஆயின் அதுவும் பெருமைக்குக் காரணம் அன்றே? அங்ஙனம் சிறந்த செல்வச் சிறப்பும் சீர் அல்லாதவர் மாட்டது ஆம் ஆயின், மற்று அதுதானே முறையின் நீங்கிய மிகையே புரிந்த தொழிலினை உடைத்து ஆகும் அவர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.—செல்வம் ஆனது தனக்கு நிகர் இல்லாத இடத்தே நிற்கும் ஆயின், நிதியை இழத்தலிலே பொருந்திய தொழிலை உடைத்து ஆம் எ - று.

சீர் அல்லவர் - பெரியவர் அல்லவர். மேல் கூறிய வற்றிற்குக் காரணம் கூறிற்று. (4)

ப. 2.

கா. 5.

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

(கா - உ.) எ - து.—மனையும் மாடும் பொருளும் பூமியும் முதலியவற்றுள் மேல் ஆயினரும் தம் குலமும் ஒழுக்கமும் குணமும் ஞானமு முதலியவற்றுள் மேம்பாடு உடையர் அல்லாதார் யாவர்? அவர் எஞ்ஞான்றும் சாலச் சிறியரே: இனி மற்று அம்மனையும் மாடும் முதலியவற்றுல் கீழ்ப்பட்டிருந்தும் அக்குலமும் ஒழுக்கமும் முதலியவற்றுல் சிறிதும் கீழ்மைப்பாடு உடையர் அல்லாதார் யாவர்? மற்று அவர் எஞ்ஞான்றும் கீழ் அல்லர்: எனவே அவரே சாலப் பெருமையர் என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—மேலான இடத்தில் இருந்தாலும் மேன்மை இல்லாதார் மேன்மக்கள் ஆகார்: கீழான இடத்து இருந்தாலும் கீழ்மை இல்லாதார் கீழ்மக்கள் ஆகார் எ - று.

இடம் என்றது செல்வத்தினுல் இருக்கும் இடம். இது செல்வத்தினுல் பெரியாரையும் பெரியார் என்று கொள்ளப்படாது என்றது. (5)

கா. 6.

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடும்.

(கா - உ.) எ - து.—பெரியோர்க்குத் தம் பெருமையாவது தம் சூறிப்பான் ஒரு பெருந்தன்மை பாவியாமை : மற்றுச் சிறுமை

60. பெருமை

யானது தன் சிறுமைக்குப் பெரிதும் கூசி மற்று அது மறைத்தற் காகப் பிற பெருந்தன்மை மேல்கொண்டு விடும் எ - று :

எனவே பெரியோர் பெருமையைத் தம்மேல் ஏறட்டுக்கொண்டு தாமும் பெரியோர் ஆகப் பாவித்து நடப்பர் ஒரு பயன் இல்லை ஆயி னும் : என்னே பாபம் ! எ - று.

(ப - உ.) எ - து.—பெருமையாவது செருக்கு இன்மை : சிறுமை செருக்கினை மேல்கொண்டு ஒழுகும் ஆதலான் எ - று.

மேல் குலத்தினையும் செல்வத்தினையும் பெரியாரைப் பெரியார் என்று கொள்ளப்படாது என்றார் : இனிப் பெருமை இலக்கணம் கூறுவார் மூற்படச் செருக்கு இல்லாமையே பெருமை என்று கூறப் பட்டது. (6)

கா. 7.

ப. 9.

சிறியா ருணர்ச்சியி லில்லை
பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

(கா - உ.) எ - து. - சிறியவர் உணரும் உணர்ச்சியுள் இல்லை : யாது எனின், பெரியோரைப் பொருள் எனக் கருதி நமக்கு இது வேண்டும் என்று விரும்பிக் கைக்கொள்வோம் என்னும் விசாரம் எ - று.

(ப - உ.) எ - து.--சிறுமை உடையார் உணர்வின்கண் இல்லை பெருமை உடையாரைப் போற்றித் துணையாய்க் கொள்வோம் என்னும் கருத்து எ - று.

எனவே பெருமை உடையார் மாட்டு உண்டு என்றவாறு ஆயிற்று.

பட்டது.

இது பெரியாரைப் பேணுதலும் பெருமை என்று கூறப்

(7)

கா. 8.

ப. 8.

பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி னருமை யுடைய செயல்.

(கா - உ.) எ - து.—தம் குடிமையால் பெருமை உடையவர் சால வல்லவர் : யாதினை எனின், நூல் நெறிப்பொருள் பலவற்றினும் வைத்துப் பலராலும் செய்தற்கு அருமை உடையவற்றைச் செய்து கோடல் எ - று.

(ப - உ.) எ - து.—பெருமை உடையவர் நெறியினுனே செய்ய வல்லவர் ஆவர் : செய்தற்கு அருமை உடைய செயல்களை எ - று.

இது செய்தற்கு அரிய செய்வார் பெரியர் என்று கூறப் பட்டது.

(8)

கா. 9.

ப. 6.

ஒளியொருவர்க் குள்ள வெறுக்கை யிளியொருவர்க் கஃதிறந்து வாழ்து மெனல்.

(கா - உ.) எ - து.—தமது உள்ளம் என்றும் பெருமைக்கண் சேறலே ஒருவர்க்கு இவர் பெரியர் எனறு பேர் விளங்தும் தோற்றம் ஆவது: அதனால் அஃது ஒழிந்து உயிர் வாழ்தும் என்று கருதுதல் தமக்குப் பெரிதும் இன்பாவு ஆம் எ - று.

பரி. பா - மி. "ஒளியொருவற்கு."—"யிளியொருவற்கு"—"வாழு மெனல்".

(ப - உ.) எ - து —ஒருவனுக்கு மனப்பெருமை புகழ் ஆம்: அதனை நீங்கி வாழும் என்று பிறர் சொல்லுதல் இளிவு ஆம் ஒருவனுக்கு ஆகலான் எ - று.

இது மிகக் கொடுக்க வல்லாரைப் பெரியர் என்று கூறிற்று.

(9) கா. 10.

ப. 7.

ஒருமை மகளிரே போலப் பெருமையுந் தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

(கா - உ.) எ - து.—பிற மதில் காவலும் மக்கள் காவலும் அன்றித் தாமே தமக்குக் காவல் ஆகிய நெஞ்சு ஒருமைப்பாட்டால் கொண்டானைப் பிழையாத மகளிரைப் போலக் குடிப்பிறந்தானது பெருமையும் அக்குடிப் பிறப்பிற் பிழையா வண்ணம் தன்னைத் தானே அமைத்துக் கொண்டு ஒழுகின் உண்டு எ - று.

(ப - உ) எ - து.—'தன்னைப் பிறர் விரும்பும் காலத்தினும், தன் உள்ளம் பிறரை விரும்பும் காலத்தினும் வேண்டியவாறு ஒழுகாத கற்பு உடைய மகளிரைப் போலப் பாதுகாத்து ஒருவன் ஒழுகுவன் ஆயின் பெருமை உண்டு ஆம்: அல்லது இல்லை ஆம் எ - று.

இது பெருமை ஆவது நிறை உடைமை என்று கூறப்பட்டது. (10)

(கா - உ) இனி மற்று இங்ஙனம் தாம் தம்மைப் பிழைவழிச் செல்லாது அமைத்துக் கொண்டு ஒழுகுதலை ஆளும் ஆட்சி சான்றாண்மைக்கு ஒரு தோற்றுவாய் ஆகலான மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

61. சான்றாண்மை.

(ப - உ.) சான்றாண்மை யாவது நற்குணங்கள் பலவற்றானும் அமைந்தார் இலக்கணம் கூறுதல். இது பெருமையான்மையும் அறத்தினால் தலையளிசெய்து ஒழுகுவாரை நோக்கிற்று.

கா. 1.

ப

10.

சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
றாங்கல மன்னோ பொறை.

(கா - உ) எ - து.—சான்றவர் தமது சான்றாண்மை சிறிது குன்றினை, இப்பெரு நிலம்தான் தாங்குதல் உடைய அல்ல பாரம்: எனவே இவர் சிலரி... .. ..ாயின்

ஆற்ற வல்லாது இப்பூமி என்பது பொருள் எ - று.

பரி. பா - மி., "தாங்காது".

(ப - உ) எ - து.—சான்றார் தமது தன்மை குறைவர் ஆயின் பெரிய நிலமானது உயிர் முதல் ஆகிய பாரத்தைத் தாங்குதல் கழியும் எ - று

அவர்களும் தானும் ஆய்ப் பொறுக்கின்றதனைத் தனிப் பொறுக்கல் ஆகாது என்று ஆயிற்று. மேல் ஊழி பெயரினும் சான்றோர் நிலை குலையார் என்றார்: இது சான்றோர் நிலை குலையின் ஊழி பெயரும் எனறது. (1)

கா. 2. ப. 9.

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக் கழி யெனப்படு வார்.

(கா - உ.) எ - து.—அயன் ஊழி ஆகிய கற்ப காலம் பெயரும் காலத்து அவன் படைப்பு ஆகிய உலகு போந்து அழியும் அன்றே: அவ்வாறு அயன் ஊழி பெயரினும் தாம் தமது "சான்றாண்மையின் பெயரார்: யாவர் எனின்" இவர் சான்றாண்மைகது ஒரு தனிச் சாகாம் என்று பல நூலினும் எடுத்து உரைக்கப்படும் பண்

பினர் எ - று.

(ப - உ.) எ - து.—சான்றாண்மைக்கு ஒரு கடல் என்று பிற சால் சொல்லப்படும் அவர்கள் காலம் தனது தன்மை குலையினும் நின்ற நிலை குலையார் எ - று.

இது சான்றோர் நின்ற நிலை குலையார் என்றது.

(2) கா. 3.

ப. 1.

இன்மை யொருவர்க் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(கா - உ) எ - து —ஒருவரை எளிமைப் படுத்தமது வறுமை ஆயினும் அவ்வறுமையும் ஒருவர்க்கு இளிவாவது அன்று: தம்மாட்

சால்பு என்று நூல்கள் எடுத்து உரைக்கும் திட்பம்
உளதாகப் பெறின் எ - று.

பரி. பா - மீ. "யொருவற் கிளிவன்று".

(ப - உ.) எ - து.—ஒருவனுக்குச் சால்பு ஆகிய நிலைமை உண்டாகப் பெறின் பொருள் இன்மை இளிவு ஆகாது எ - று.

இஃது
கூறிற்று.

அமைவு உடையர் ஆதல் பெறுதற்கு அரிது

என்று
(3)

கா. 4.

குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

ப. 4.

(கா - உ.) எ - து.—சான்றோர் நலம் யாதோ எனின், தமது உள்ளத்து அமைவு உடையர் என்னும் இந்நலமே ஆகலான், இவ் வமைவு தான் வேறு யாவை சில நன்மையினும் உள்ளது ஒன்று அன்று : எனவே எல்லா நன்மையினும் இவர்க்குச் சிறந்தது அதுவே என்பது பொருள் எ - று.

குணம் என்பது உள்ளத்து அமைவு உடைமை.

(ப - உ.) எ - து.—சான்றோர்க்கு நலம் ஆவது குணம் நல்லர் ஆகுதல் : அக்குண நலம் பிற நலம் ஆகிய எல்லா நலத்தினும் உள் ளது ஒரு நலம் அன்று எ - று.

இது குண நலம் சால்பிற்கு அழகு என்றது.

(4)

கா. 5.

ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றுரை யாற்றும் படை.

ப. 5.

(கா - உ.) எ - து.—ஐம்புலன்களின் வேகத்தை ஆற்றுவாரது ஆற்றலாவது யாதோ எனின், தாம் யாவர் பாட்டும் பணிவு உடை யர் ஆதல் : மற்று அது அச்சான்றோர் தம்மொடு மாறுபடும் பகை வரை எதிர் ஆற்றும் கருவி எ - று.

(ப - உ.) எ - து.—பெரியாரது பெருமை ஆவது எல்லார்க்கும் தாழ்ந்து ஒழுகுதல்: அதுவே சான்றவர் மாறுபட்டவரை வெல்லும் கருவி எ - று.

இது சான்றவர்க்கு வலியாவது தாழ்ந்து ஒழுகுதல் என்ற (5)
வாறு.

கா. 6.

ப. 6.

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றேர்வி
தலையல்லார் கண்ணுங் கொளல்.

(கா - உ.) எ - து.—சான்றோர் சால்பிற்கு உறுதிப்பாடு ஆவது யாதோ எனின், தம்மொடு ஒப்பச் சீர்தூக்கும் தலைமை இல்லார் மாட்டும் தம் தேர்வி கொண்டு ஒழுகுதல் எ - று.

(ப - உ.) எ - து.—சால்பிற்கு அளவு யாது எனின், தேர்வியைத் தனக்கு நிகர் அல்லாதார் மாட்டும் கொள்ளுதல் எ - று.

இஃது எல்லார்க்கும் இனிமை செய்ய வேண்டும்
என்றது. (6) கா. 7.

ப. 7.

இன்னாசெய் தார்க்கு மினியவே
செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

(கா - உ.) எ - து.—இன்னாங்கு செய்து ஒழுகுவார்க்கும் தாம் எப்பொழுதும் இனியவையே செய்யாத இடத்து மற்று என்னே பயன் உடையதோ உலகத்துச் சான்றோர் தம் சால்புடைமையது

எ - று.

(ப - உ.) எ - து.—தமக்கு இன்னாத செய்தவர்கட்கும் இனிய வற்றைச் செய்யாத காலத்துச் சால்புடைமையால் பயன் யாதோ

எ - று.

இஃது இன்னாதார்க்கும் இனிமை செய்ய வேண்டும் என்றது.(7) கா. 8.

ப.

8.

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(கா - உ.) எ - து.—நமக்குக் கடன் இஃது என்று இருந்து சான்றாண்மையைக் கைவிடாது தம்மாட்டுக் கைக்கொண்டு ஒழுகும் அவர் யாவர்? மற்று அவர்க்கு இச்சான்றாண்மை அடியாக மற்றும் இதுபோலும் கல்லவை எல்லாம் கைக்கொண்டு ஒழுகுதல் கடன் என்று சொல்லுப யாவரும் எ - று.

(ப - உ.) எ - து.—உலகு இயற்கை அறிந்து சான்றாண்மையை மேலிட்டுக் கொள்ளும் அவர்களுக்கு கல்ல ஆயின எல்லாம் இயல்பு என்று சொல்லுவர் அறிவோர் எ - று.

இது மேல் கூறியவாறே அன்றி நற்குணங்கள் எல்லாம் வேண்டும் என்றது. (8)

கா. 9.

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை

ப. 2.

சொல்லா நலத்தது சால்பு.

(கா - உ.) எ - து —யாதானும் ஒன்றினையும் தான் கொல்லாமை ஆகிய விரதம் கொண்ட இந்த நலத்தின் கண்ணதே நோன்பின் நன்மை ஆவது: மற்று இது போலத் தம் மாட்டு ஆயினும் பிறர் செய்தது ஓர் தீங்கினை இவர் இது செய்தனர் என்று எடுத்து உரையாத நன்மைக் கூறு உடையது யாது மற்று அதன் கண்ணதே சால்பு உடைமையும் எ - று.

(ப - உ.) எ - து.—தவத்திற்கு உறுப்பு ஆன சிலங்கள் பல உள ஆயினும் கொல்லாத நலத்தை உடையது தவம்: அதுபோலச் சான்றாண்மைக் குணங்கள் பல ஆயினும் பிறரது பழியைச் சொல்லாத நலத்தை உடையது சால்பு எ - று.

மேல் கூறிய சால்பிற்கு இலக்கணம் கூறுவார் முற்படப் புறஞ் சொல்லாமை எல்லாக் குணத்தினும் இன்றியமையாதாக வேண்டும் என்று கூறினர். (9)

கா. 10. ப. 3.

அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்.

(கா - உ.) எ - து.—அன்பு முதலாக வாய்மையோடு எடுத்து எண்ணித் தொகுத்த ஐந்தும் சான்றோரது சால்பு தளராமல் ஊன்றி நிற்கின்ற தூண்: எனவே ஒருவர் சால்பின் நன்மையாவது இவை அனைத்தும் இனிது ஒழுக எனபது பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து —அன்பு உடைமையும், பழி நாணுதலும், ஒப்புரவு உடைமையும், கண்ணோட்டமும், மெய்யுரையும் என்று சொல்லப்பட்ட ஐந்தும் சால்பினைத் தாங்கும் தூண் ஆ - று.

இவை ஐந்தும் சால்பிற்கு அங்கம் என்றது. (10)

(கா - உ.) இனி மற்று இக்குணம் உடையோர்க்கே மக்கட் பண்பு ஆகிய மரபு உள்ளது பிறர் மக்கள் உருபினரேனும் மக்கட் பண்பு எதும் இலார் என்று இங்ஙனம் இம்மரபு தெரிந்த உணர்த்தல் வேண்டி மற்று இதன் பின்னரே அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

(ப - உ.) பண்பு உடைமை ஆவது யாவர் மாட்டும் அவரோடு ஒத்த அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவர் அவர் வருத்தத் திற்குப் பரிதலும், பகுத்து உண்டலும், பழி காணலும் முதலான நற்

62. பண்புடைமை

263

குணங்கள் பலவும் உடைமை. இது பெரும்பான்மையும் பொருள் லல் தகுயளி செய்வாரை நோக்கிற்று ஆதலான் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 5.

பண்புடையார்ப் பட்டுண் டுலக
மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

(கா - உ.) எ - து.—மக்கள் பண்பு உண்டாகிய

மரபுடையாள

ரைப் பெற்று உண்டாயிற்று ஒழுக்கம் என்று மறைநூலும் பிறவும் வருத்து உரைக்கின்ற அனைத்து ஒழுக்கத்திற்கும் காரணம் ஆகிய அம்மக்கள் பண்பு என்பது ஈண்டு இல்லை ஆயின் பிறந்தார் யாவரும் பெரும் பாலிகளே ஆனர் ஆதலால் அந்தப் பூமிக்கும் பெரும் பாரமே ஆதும் இதனைத் தரிக்க மாட்டாது எ - று.

(ப - உ.) எ - து.—பண்பு உடையாளைத் தோற்றி உலகம் ஆகிய பலவகை உயிரும் உண்டாயிற்று: அத்தோற்றம் இல்லை ஆனல் அவ்வுயிர்கள் எல்லாம் மண்ணின்கண் புக்கு மாய்வது நிலை எ - று.

இது பண்பு உடையார் பிறத்தலானே வருகின்றது என்றது.

உலக நடை தப்பாமல்

(1)

கா. 2.

ப. 10.

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்

மக்கட்பண் பில்லா தவர்.

(கா - உ.) எ - து.—அம்போலுர் யாதானும் ஒரு பொருளை வருத்து உளபுக்கு அறியும் அறிவின் கூர்மையை உடையர் ஆயினும் யாதும் அறியாத திண்ணிய உருபினது ஆகிய மரம் அனையர்: யார் எனின் பக்கல வடிவினராய் வைத்தும் அம்மக்கள் பண்பு ஆகிய மாபு இல்லாதவர்கள் எ - று.

(ப - உ.) எ - து.—அதத்தை ஒத்த கூர்மையை உடையர் ஆயினும் மக்கள பண்பு இல்லாத மாந்தர் மரத்தை ஒப்பர் எ - று.

அரம் போலும் தனக்கு உள்ள கூர்மை பிறர் மாட்டு மடியாமையும், தான் பிறரைக் கூரியர் ஆக்குதலும் ஆம். இஃது உணர்வு உடையார் ஆயினும் உணர்வு இல்லாத மரத்தை ஒப்பார் என்றது; எனை? உணர்வால் பயன் இன்மையின். (3)

கா. 3. ப. 4.

நயனுடு நன்றி புரிந்த பயனுடையார் பண்புபா ராட்டு முலகு. 264

திருக்குறள் - பொருட்பால்

(கா - உ.) எ - து.—ஒழுக்கத்துடனே கல்லறமும் தங்கிய வழி இருமைப் பயனும் உளது அன்றே! அதனால் இப்பயன் உடையார் பண்பினையே கொண்டாடும் இவ்வுலகு: எனவே உலகின் உள்ளோர் யாவரும் கொண்டாடுவர் எ - று.

(ப - உ.) எ - து.—பிறரால் விரும்பப்படுதலோடே கூட நன்னெறியின் கண்ணே பொருந்தின பொருள் உடையாரது குணத்தினை உலகம் கொண்டாடும் எ - று.

இவை எல்லாரும் புகழ்வர் என்றது.

(3) கா. 4.

ப. 8.

நண்பாற்று ராகி நயமில
செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

(கா - உ.) எ - து.—உலகத்து மக்கள் பண்பு உடையோர் தம் மொடு கட்புச் செய்தற்கு ஒல்லாரும் ஆகி ஒழுக்கக் கேடே செய்து ஒழுகுவார்க்கும் தாம் தமக்கு இயல்பு ஆகிய மாபினைச் செய்யார் ஆதல் சாலக் கடை : எனவே ஈண்டும் தம் பண்பினர் ஆதலே தலை என்பது பொருள் ஆயிற்று எ - று.

(ப.- உ). எ - து.—நண்பு செய்ய மாட்டார் ஆய் விருப்பம் இல்லாதவற்றைச் செய்வார்க்கும் குணம் ஆயின செய்யார் ஆதல் குணம் உடையார்க்கு இழிவு எ - று-

குணம் செய்யாமை இன்னு செய்தல் ஆம். ஆதலால் பிறர் வருத்தத்திற்குப் பரியாமையால் வரும் குற்றம் கூறிற்று. (4)

கா. 5.

ப. 6.

நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(கா - உ.) எ - து.—யாவர் மாட்டும் கன்றிச் சேறல் மரபு அன்று என்று கருதி எஞ்ஞான்றும் இனிது ஒழுகுதல் மாட்டாதார் யாவர்? மற்று அவர் தமக்கு மிகவும் பெரிய உலகமானது பகலுங் கூட இருளின்பாற் பட்டது ஆம்: எனவே மக்கள் பண்பு இல்லாதவர்க்கு இவ்வுலக நீதி யாதும் தெரியாது இருண்டே கிடக்கும் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—எல்லாரோடும் கூடி இருந்து நகுதலைச் செய்ய மாட்டாதார்க்குப் பெரிய உலகம் பகல் பொழுதும் இருளின்பாற் பட்டது எ - று.

எனவே இவனும் அறிவான்: அறிவிப்பாரும் இல்லை என்றவாறு ஆயிற்று. இது கலந்து ஒழுகாமையால் வரும் குற்றம் கூறிற்று. (5)

62. பண்புடைமை

265

கா. 6.

ப. 9.

உறுப்பொத்தன் மக்களொப் பன்மை வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

(கா - உ.) எ - து.—கை, கால், கண், மூக்குச் செவி முதலிய உறுப்பு ஒத்தல் மக்கள் ஆதற்கு ஒப்பு அன்று: மற்று யாதோ ஒப்பு எனின், ஒருவர்க்குப் பெருமை பொருள் எனத் தக்க பண்பு ஒத்தல் யாது! மற்று அது அகத்து உறுப்பு ஆகிய நெறிக்குறிப்பு என்றே மற்று அதனைச் சிலரொடு சிலர் ஒப்பதே ஒப்பு ஆவது எ - று.

(ப - உ.) எ - து.—மக்கள் ஒப்பு ஆவது உறுப்பு ஒத்தல் அன்று: செறியத்தக்க குணங்களை ஒத்தல் அதனை ஒப்பதே ஒப்பு ஆவது எ - று.

செறியத்தக்க குணங்கள் உள ஆதலின் செறியத்தக்க குணம் என்றார். பண்பு இல்லாதார் மக்கள் அன்று என்றது. (6)

கா. 7.

ப. 7.

பண்பில்லான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால் கலந்தீமை யாற்றிரிந் தற்று.

(கா - உ.) எ - து.—உலகத்துப் பண்பு கேடன் ஆனவன் பெற்றது ஓர் பெருஞ் செல்வம் ஆனது எத்தன்மைத்தோ எனின், மூன்றின்பாலினும் நன்பால் ஆவது ஆன்பால் அன்றே? மற்று அதுதான் ஒரு கலத்தினது குற்றத்தினால் தன் உருபு திரிந்த அத் தன்மைத்து: எனவே இவன் ஈட்டிய பொருளும் யாதும் ஒரு நன்மை இன்றிக் கெட்டு விடும் எ - று.

(ப - உ.) எ - து.—குணம் இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம் நல்ல பால் கலத்தின் தீமையால் கெட்டாற் போலத் தனக்கும் பிறர்க்கும் இன்பம் பயவாது கெடும் எ - று.

இது பகுத்து உண்ணாமையால் வரும் குற்றம் கூறிற்று. (7)

கா. 8.

ப. 1.

அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும் பண்புடைமை யென்னும் வழக்கு.

(கா - உ.) எ - து.—யாவர் மாட்டும் பரிவு உடைமையும் தெறி அமைந்த தம் குடிப்பிறப்பு என்னும் இவை இரண்டும் ஒருவர்க்கு உளது ஆயின் பண்புடைமை என்னும் முறைமை ஆம் எ - று.

(ப - உ.) எ - து.—யாவர் மாட்டும் அன்புடைமையும் அமைந்த குடியின்கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்று உலகத்தார் வழங்கப்படுகின்றது எ - று.

அன்பு உடையன் ஆகப் பிறர் வருத்தத்திற்குப் பரிதலும் கலந்து ஒழுகுதலும் கொடுத்தலும் முதல் ஆயின உள ஆம். குடிப் பிறப்பினனே பழிப்படுவ செய்யாமையும் புறங்கூறாமையும் முதல் ஆயின உள ஆம்: ஆதலான் இவ்விரண்டினையும் உடைமை பண்பு உடைமை என்று கூறப்பட்டது. (8)

கா. 9.

நகையுள்ளு மின்னு திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

ப. 3.

(கா - உ.) எ - து.—தாம் சிலரோடு இளமை கொண்டு நகை நகையாடும் இடத்தும் இகழ்ந்து உரை கூறி நகையாடும் இகழ்ச்சிப் பாடு இன்னாது: அதுவும் இன்றி இனி ஒருவரோடு, பகை பூணுங் காலும் (மாவு மிகவுளவா யிருக்குமெது முயிர்க்கிறுதி முதலிய வின்றி)? யாவர் மாட்டும் தாம் இனியராய் விடுதல் யாவர் மாட்டு உளது ஆவது எனின், தாம் செய்யத் தகுவது ஆகிய நெறிப்பாடு அறிந்து ஒழுகுவார் மாட்டே உள ஆம் எ - று.

(ப - உ.) எ - து.—அறிவார் மாட்டு நகையாடுதலின் கண் ணும் இகழ்ச்சி தோற்றும் ஆயின் இன்னாது ஆம்: பகை ஆகும் இடத்துப் பண்பு தோற்றம் ஆயின் பெருமை உளது ஆம் எ - று.

எனவே அறியாதார் மாட்டு இவை இரண்டும் இல்லை ஆம் என்ற வாறு ஆயிற்று. இகழ்ச்சி என்றது பண்பு இன்மை: இஃது அறி வுடையார் மாட்டு ஒருதலையாகக் கொண்டு ஒழுக வேண்டும் என் றது.

கா. 10.

ப. 2.

எண்பதத்தா னெய்த லெளிதுமன் யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(கா - உ.) எ - து.—போகச் சிறப்பினன் எண்ணத் தக்க சுவர்க்க பதத்தின்கண் சென்று எய்துதல் மிகவும் எளிது: என்னை எனின், கீழ்ச்சொன்ன முறையானே தமக்கு இனியோரும் இன்னோரும் ஆகிய யார் மாட்டும் தனக்கு அடுத்த பண்புடைமை என்னும் இம்முறை முற்றிய இடத்து எ - று.

(ப - உ.) எ - து.—யாவர் மாட்டும் எளிய காலத்தை உடையவன் எய்துதல் எளிது என்று சொல்லுவர் பண்புடைமை என்று வழங்கப்படுகின்ற இதனை எ - று.

எளிய காலம் ஆவது - எல்லாரும் தத்தம் குறை சொல்லுதற்கு எளிய செவ்வி. அஃது உடையார்க்குப் பண்பு உண்டாம் என்றது.

இது பெரும்பான்மையும் ஆசரை நோக்கிற்று. மேல் கூறிய வகையே அன்றி இதனையும் பண்பு உண்டு ஆம் என்று கூறப்பட்டது. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் கூறிய பண்பு இல்லாதான் செல்வம் கொண்டு ஒரு பயன் தனக்கு இல்லாமையின் அதன் பின்னரே இதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

63. நன்றியில் செல்வம்.

(ப - உ.) நன்றியில் செல்வம் ஆவது அறத்தையும் இன்பத்தையும் பயவாத செல்வத்து இயல்பு கூறுதல். இது பண்பு இல்லார்க்கு உளது ஆவது ஒன்று ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

ப. 0.

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய வொண்பொருள் கொள்வார் பிறர்.

(கா - உ.) எ - து.—ஒருவன் தானும் உண்டு இனிது வாழாது தன்னையும் செறுத்து மற்றுமு வறியார் மாட்டு ஓர் இரக்கம் இன்றி அதனால் அறனையும் செய்யக் கருதாது தான் தொகுத்து வைத்த ஒள்ளிய பொருள் இனிக் கைக்கொள்வார் பிறர்: எனவே தான் தன் பயன் இழந்தான் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் தேடுங்கால் பிறர் மாட்டு அன்பு செய்தலை நீக்கி அது தேடினன் நுகர்தலும் இன்றி அறத்தையும் செய்யாது தொகுத்த ஒள்ளிய பொருளைக் கொள்வார் பிறர் எ - று.

இது நன்றியில் செல்வம் ஆவது இத்தன்மையது என்பதூஉம் அது பிறர் கொள்வர் என்பதூஉம் கூறிற்று. பிறர் என்றது தன் வழியில் உளராரை அல்லாதாரை. (1)

ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர் தோற்ற நிலக்குப் பொறை.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் பொருள் ஈட்டம் காரணம் ஆக உலோபித்துப் புண்ணியதானம் புகழினை விரும்பாத மக்கட் பெரும் பாவியர் ஆனவர் இவ்விடத்து வந்து உதிக்கின்றது எல்லாம் இப் பூமிக்கு ஒரு பாரம் ஆம் இத்துணை எ - று.

(ப - உ.) எ - து.—பொருள் ஈட்டுதலை விரும்பிப் புகழை விரும் பாத மாந்தர் பிறத்தல், நிலத்துக்குப் பாரம் ஆகும் எ - று.

இத்தன்மையார் பிறப்பதனினும் பிறவாமை நன்று என்றது.(2)

கா. 3.

ப. 10.

நச்சப் படாதவன் செல்வ நடுவூரு ணெச்சு மரம்பழுத் தற்று.

(கா - உ.) எ - து.—தன் மாட்டு வந்து எமக்கு இது வேண்டும் என்று யாவராலும் விரும்பப்படாத அரும்பாவி பெற்ற பெருக்கிரு ஆனது எத்தன்மைத்தோ எனின், ஊர் நடு ஆகிய மன்றினுள் ஒரு மரம் பழுத்தால் மற்று அஃது யாவர்க்கும் பொது அன்றே: அங் ஙனம் பொதுப்பட நுகர்தற்கு உரிய மன்றினுள் நச்சு மரம் ஆகிய காஞ்சிரை பெரிதும் பழுத்து நின்ற அத்தன்மைத்து எ - று.

(ப - உ.) பிறரால் நச்சப்படாதவன் செல்வம் ஊர் நடுவுள் பருத்து நிற்பது ஓர் நச்சு மரம் பழுத்த தன்மைத்து எ - று.

தமது ஆசையால் தின்பார் உண்டு ஆயின் இது கொல்லும் என்றவாறு ஆயிற்று. (3)

ப. 5.

கா. 4.

எச்சமென் றென்னெண் ணுங் கொல்லோ
னச்சப் படாஅ தவன். [வொருவரா

(கா - உ.) எ - து.—இங்ஙனம் யாவராலும் யாது ஒன்றும் நச்சப்படாதவன் இடத்துக் குலமும் உருபும் குணமும் ஒழுக்கமும் புதல்வரும் பொருளும் பூமியும் என்னும் எவ்வெச்சமும் இவனிடத்து இவை எல்லாம் உளவேனும் ஒன்றும் உளது என்று கருதார். உலகத்தோர் ஒரு பயன் இல்லாமையினென் எ - று.

குலம், உருபு, குணம், ஒழுக்கம், புதல்வர், பொருள், பூமி என்னும் எச்சத்தினுள்ளும் இவன் கண் உள்ளது ஆம் எச்சம் இது என்று என் எண்ணுங்கொல்லோ இவ்வுலகம்: எனவே யாது ஒன்றும் உளது ஆக எண்ணுது எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவராலும் நச்சப்படாத செல்வம் உடையான் தனக்குப் பின்பு நிற்கும் என்று யாதனை எண்ணுமோ? எ - று.

இது புகழ் இல்லை ஆம் என்றது. (4)

கா. 5. ப. 8.

ஏதமீ பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்
றீத லியல்பிலா தான். [கொன்

(க்கா - உ.) எ - து.--தானும் உண்ணுன் ஆகித் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பும் இல்லாதான் இடத்து உள்ள பெருஞ் செல்வம் ஆனது பெரும்பாவத் தால் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—தானும் துவ்வாது தக்கார்க்கும் ஒன்று ஈயாத இயல்பினை உடையான் பெற்ற பெருஞ் செல்வம் குற்றம் ஆம் எ - று.

இஃது இறுதி பயக்கும் என்றது.

(5) கா. 6.

ப. 6.

பொருளாரு மெல்லாமென் றீயா திவறு
மருளாரு மாணைப் பிறப்பு.

(கா - உ.) எ - து.—நாம் படைத்த பொருளானே உள ஆம் நமக்கு எல்லா நன்மையும் என்று இங்ஙனம் கருதிப் பிறர்க்கு ஈயாது உலோபிக்கும் மதி மருட்சியானே உளது ஆம் மாட்சி இல்லாத பிறப்பு: எனவே இதனுன் நாக யோனியும் திருக்கும் பிறவும் ஆகிய கடையான பிறப்பு உளது ஆம் இவர் ஈட்டிய பொருள் வெறும் பாவப் படைப்பு ஆகலான் எ - று.

(ப - உ.) எ - து.—பொருளினுலே எல்லாச் சிறப்பும் எய்தல் ஆம் என்று ஈயாதே உலோபுகின்ற மயக்கத்தினுலே மாட்சிமை இல்லாத பிறப்பு உண்டு ஆம் எ - று.

இது தீக்கதியுள் உய்க்கும் என்றது.

(6) கா. 7.

ப. 7.

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ
மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.

(கா - உ.) எ - து.—ஒருவர் பொருள் பெற்றதனல் பயன் பாதோ எனின், நாள்தோறும் பிறர்க்கு உபகரித்தலும் தாம் உண்டு இன்பம் உறுதலும் அன்றே? அதனல் அவை இரண்டும் இல்லாத அரும் பாவிக்கு அளவு இறந்த கோடி பொருள் உண்டு ஆயினும் யாதும் இல்லை என்பதே துணிவு எ - று.

(ப - உ.) எ - து.—பிறர்க்குக் கொடுத்தலும் தாம் அநுபவித்தலும் இல்லாதார்க்குப் பல கோடி பொருள் உண்டு ஆயினும் இன்மையோடு ஒக்கும் எ - று.

இது கல்கூர்ந்தாரோடு ஒப்பர் என்றது. (7)

கா. 8.

ப. 4:

அற்றூர்க்கொன் றூற்றூதான் செல்வ மிகநலம்
பெற்றூ டமியண்மூத் தற்று.

(கா - உ). எ - து.—தம்மாட்டு ஒன்று அற்றூர் ஆகிய வறியோர்க்கு ஒன்று உதவாதான் பெற்ற பெருஞ்செல்வம் ஆனது மிக

நலம் பெற்றூள் கணவனொடு கலந்து இன்பு உறுதற்கு வீறு இலள் ஆகித் தானே தனியள் ஆய் மூத்து இருந்த அத்தன்மைத்து: எனவே செல்வம் இருந்தும் இருந்திலன் என்பது பொருள் ஆயிற்று.

எ - று.

(ப - உ.) எ - து.—வறியவர்க்கு ஒன்றைக் கொடுக்க மாட்டாதான் பெற்ற பெரிய செல்வம். மிக அழகினைப் பெற்ற ஒருத்தி கொழுநனை இன்றி மூத்துத் தமியள் ஆய்க் கழிந்தது போலும் எ-று.

தமியள் மூத்தல் - தன்னைப் பிறர்க்கு ஈவார் இன்றித் தமியள் ஆகி மூத்தல். இது செல்வம் தானும் ஒரு பயன் பெறாது என்றது. (8)

கா. 9.

ப. 3.

வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்
செத்தான் செயக்கிடந்த தில். [ணுன்

(கா - உ.) எ - து.—வாய்ப்பு அமைந்த பெரும்பொருள் ஈட்டி வைத்தான் யாவன்? அவன் அதுகொண்டு அனுபவியான் ஆகில், அவன் செத்தவனே என்பதனால் அவன் வேறு நடைப் பிணமே: என் எனில் பிணமும் தான் அறிந்து ஒன்று செய்யப்படுவது ஓர் செய்தி இல்லை: இவனும் அன்னன் ஆகலான் இவன் தன் குறிப்பி னால் ஒரு செய்தி செயக் கிடந்தது இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—இடன் நிறைந்த பெரும்பொருளை ஈட்டி வைத்தான் ஒருவன் அதனை நுகாானைச் செத்தான்: அவன் பின்பு செய்யக் கிடந்தது யாதும் இல்லை எ - று.

இஃது ஈட்டினன் ஆயினும் தான் ஒரு பயன் பெறான் என். றது. (9)

கா. 10.
ப. 9.

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(கா - உ.) எ - து.—அருளும் அன்பும் குறியும் முதலிய சீர் மைப் பாட்டினை உடைய செல்வர் பிறர் மாட்டுத் தம்மால் யாவரும் வெறுத்தக்க சிறு துனி ஆகிய வறுமை வரின், அஃது எனைத்தோ எனின், உலகு இன்புறுதற்கு உரித்து ஆகிய மழை வறம் கூர்ந்தாற் போல அதனை உடைத்து: எனவே பின்னும் பின்னும் தமக்கு உள வழி எல்லாம் பிறர்க்கு உபகரித்தலே அவர்க்குக் கடன் எ - று.

(ப - உ.) எ - து.—சீர்மையை உடைய செல்வர் சிறிது துனித லால் ஈயாது ஒழிதல், மாரி பெய்யாமை மிக்காற் போலும் எ - று.

மேல் கூறிய நன்றியில் செல்வம் உடையார் அன்றி நற்செல்வம் உடையாரும் பிறர்க்கு ஈயார் ஆயின், மழை பெய்யாக்கால் உலகம் துன்பு உறும் ஆறு போலத் துன்பு உறும் என்றது. (10)

(கா - உ.) உலகத்துச் சீர்மை உடையோர் தாம் பிறர்க்குச் செய்வன செய்தற்கு இயையாக்கால் பெரிதும் நாணுவார்: ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

64. நாணுடைமை.

(ப - உ.) நாண் உடைமை ஆவது அறம் பொருள் இன்பங்களில் பிறர் பழியாமல் ஒழுகுதல். இது பண்பு உடைமையின் பின் கூறற்பாலது: பண்பு இன்மையும் சேரச் சொல்ல வேண்டுதலின் பண்பு இன்மை ஆகிய நன்றியில் செல்வத்தைக் கூறி அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1.

உளனுடை யச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(கா - உ.) எ - து.—உணவின் உடையது அச்சம் உலகத்து உயிர்கட்கு எல்லாம் வேறுபாடு உடைய அல்ல: எனவே உணவின் குறைபாட்டுக்கு அஞ்சுவது ஓர் அச்சம் எவ்வுயிர்க்கும் ஒக்கும்: மற்று யாதோ மக்கள் வேற்றுமை எனின் தமது முறைமைக் குறைபாட்டிற்கு உள் அஞ்சி நாணுவது ஓர் நாணம் உடைமையே மக்கட் பிறந்தார்க்குச் சிறந்தது எ - று.

பரி. பா - மி. "ஊணுடை யெச்சம்".

(ப - உ.) எ - து.—ஊணும் உடையும் ஒழிந்தனவும் பன்மக்கள் எல்லார்க்கும் வேண்டும்: தலைமை மக்களுக்கு விசேடம் ஆக வேண்டும் அது நாண் உடைமை எ - று.

இது நாணம் வேண்டும் என்றது.

(1)

கா. 2.

ப. 2.

ஊணைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

(கா - உ.) எ - து.—தத்தம் உடம்பை வளர்த்தல் பொருட்டு ஊணை நத்தி எழும் உயிர் அவை: அது போல மக்கள் பிறப்புத் தன்னினும் உணர்வு இலராகிய மக்கள் எல்லாம் ஒழுகுப: இனி அவ்வாறு அன்றி மற்றுத் தம்முறைமைக்கு ஒரு குறை வருதலை நாணுவது ஓர் நாண் என்று உரைக்கப்படும் நன்மையை வளர்த்தலைக் குறித்து ஒழுகுவர் உலகத்துச் சால்புடை மக்கள் எ - று.

(ப - உ.) எ - து.—மேல் கூறிய எல்லாவற்றினும் உண்டியைக் கருதிற்றுப் பலவகை உயிரும்: அதுபோல நாணல் ஆகிய நன்மையைக் கருதிற்றுச் சால்பு எ - று.

இது சான்றோர்க்கு நற்குணங்கள் பலவும் வேண்டும் ஆயினும் ஈது இன்றியமையாது என்றது. (2)

கா. 3.

ப.

6. பிறர்நாணத் தக்கது தானுணை னுயி
னற்நாணத் தக்க துடைத்து.

(கா - உ.) எ - து.—தான் செய்த குற்றங்களைச் சான்றோர் கண்டு நாணி அஞ்சுமாப் போலத் தான் நாணுன் ஆயின், தன்னை அறம் நாணத் தக்கது உடைத்து: எனவே அறம் முதல் ஆகிய நாற்பெரும் பொருளுள் அறம் என்னும் பெரும் பொருளும் தன்னை அணுகா எ - று.

(ப - உ.) எ - து.—உயர்ந்தார் பலரும் நாணத் தகுவது ஒன்ற னைத் தான் நாணுது செய்வன் ஆயின், அவனை அறம் நாணி அடை யாது ஒழியும் தகுதி உடைத்து ஆம் எ - று.

இது நாணம் இல்லாதாரை அறம் சாராது என்றது. (3)

கா. 4.

கருமத்தா னுணுத னுணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

ப. 9.

(கா - உ.) எ - து.—என்றும் தான் தீய கருமம் காணம் ஆக நாணுதலே நாண் ஆவது: மற்று எனைய எல்லாம் மகளிர் நாணும் நாண் ஆம்: எங்ஙனம் என்னில், ஆண் மகன் ஆகியும் தகுவதற்கு ஒதுங்கினவனேடு பெண்ணேடு வாசி இல்லை என்பர் பலரும்: அதனால் அதற்கு நாணுதல் ஆண்மைப் பாடு என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—தாம் செய்யும் வினையிலே நாணுதல் நாணம் ஆம்: அஃது அல்லாத நாணம் அழகிய நுதலினுலே கல்லார் ஆகிய கணிகையர் நாணத்தோடு ஒக்கும் என்றது மேல் கூறிய நாணம் எத்தன்மைத்து என்றார்க்கு இது கூறப்பட்டது. (4)

கா. 5. ப. 8.

நாணைகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு னுயிர்மருட்டி யற்று.

(கா - உ.) எ - து —தமக்குத் தகுவதனைச் செய்யாமைக்கும், தகாததனைச் செய்கைக்கும் நாணுவது அன்றே ஒருவர்க்கு நாணம்

ஆவது: மற்று அது தம் உள்ளத்து இல்லாதார் உளர்போல இயங்கித் திரிகின்ற இயக்கம் எத்தன்மைத்தோ எனின், மரத்தினுல் மக்களைப் போலும் வடிவு பாவித்த பாவையானது ஊடு சென்று இயக்கும் கயிற்று வலியான் உயிருடை உருபு என்று தன்னையும் பிறர் மதிக்கும் ஆறு அவர் மதியினை மருட்டிய அத்தன்மைத்து: எனவே இவரும் ஊழ் வலியினுல் ஒரு மக்கள் உருபு போல இயங்கித் திரியும் இத்தனை அல்லது அகத்து ஓர் உணர்வு இன்று என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—மனத்தின்கண் நாணம் இல்லாதார் இயங்கும் அது, மாப்பாவை கயிற்றினால் இயங்கி உயிர் உள்ளது போல மயக்கும் அதனை ஒக்கும் எ - று.

இது நாணம் இல்லாதார் மக்கள் அல்லர் என்றது. (5) கா. 6.

ப. 5.

அணியன்றே நாணுடைமை சான்றோர்க்
பிணியன்றே பீடு நடை. [கஃகிலரேற்

(கா - உ.) எ - து.—நாண் உடைமை ஆகின்ற இது சான்றோர்க்கு அணிகலம் போல்வது ஓர் அலங்காரப் பண்பிற்று: அதனால் அஃது ஒருவர்க்கு இல் எனின் அவர் நடிக்கும் பெருமையும் ஒழுக்கமும் பெருந்துயரை விளைக்கும் பிணி ஆம் எ - று.

(ப - உ.) எ - து. சான்றோர்க்கு நாண் உடைமை அழகு அன்றே? அஃது இல்லை ஆயின் பெரிய நடை நோய் அன்றே? எ - று.

இது சான்றோர்க்கு அழகு ஆவது நாண் உடைமை என்றது.(6) கா. 7.

ப. 10.

பிறர்பழியுந் தம்பழியு நாணுவா ருணுக்
குறைபதி யென்னு முலகு.

(கா - உ.) எ - து.—பிறர் மாட்டு ஒரு பழி காணினும் தான் பெரிதும் கூசித் தன் மாட்டு ஒரு பழி உறினும் தான் பெரிதும் நாணிக் கழிவான் யாவன்? மற்று அவனை நாணுக்கு எல்லாம் நன்று ஆக உறையும் ஆசு என்று எடுத்து உரைப்பார் உலகத்தோர் எ - று.

பரி. பா - மி. "நாணுவார் நாணுக்".

(ப - உ.) எ - து.—பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் அஞ்சி நாணும் அவர்களை நாணுக்கு அஃது இருப்பிடம் என்று சொல்லுவர் உலகத்தார் எ - று.

இது தம் பழிக்கு நாணுதலை அன்றிப் பிறர் பழிக்கும் வேண்டும் என்றது.

கா. 8.

நாணு வுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணுண்டுறவார் நாணுள் பவர்.

ப. 3.

(கா - உ) எ - து.—தமக்கு ஒருவாற்றான் ஒரு நாணக் கேடும் உளது ஆயின் அது காரணம் ஆகத் தம் உயிரினையும் துறப்பது அல்லது உயிர் பேணுதல் பொருட்டு ஆக நாணத்தை விடுத்து ஒன்றினை இயற்றார்: யார் எனின் நாணுதல் அறிந்து எப்பொழுதும் ஆண்டு வருகின்ற அறிவினர் எ - று.

(ப - உ.) எ - து.—நாண் பொருட்டு ஆக உயிரைத் துறப்பர்: உயிர்ப் பொருட்டு ஆக நாணைத் துறவார்: நாணம் வேண்டுவார் எ - று.

இது நாணம் உயிரினும் சிறந்தது என்றது.

(8)

கா. 9.

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னிலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

ப. 7.

(கா - உ.) எ - து.—தம் குலப் பண்பினைச் சுட்டு விடும் அக் குலத்துக்கு ஏற்ற கோட்பாட்டைத் தாம் பிழைப்பர் ஆயின்; அது போல எல்லா நன்மையும் சுட்டு விடும் ஒருவர் உள்ளத்து நாணம் இல்லாமை நின்ற இடத்து எ - று.

(ப - உ.) எ - து.—ஒழுக்கம் தப்பும் ஆயின் அத்தப்புதல் குலத் தினைச் சுடும்: அதுபோல நாண் இன்மை நிற்கும் ஆயின் தமது நலத்தினைச் சுடும் எ - று.

இது நலம் இல்லை ஆம் என்றது.

(9) கா. 10.

ப. 4.

நாண்வேலி கொள்ளாது மன்னோ
வியன்ஞாலம் பேணலர் மேலா மவர்.

(கா - உ.) எ - து.—தமது மேன்மைக்கு வாம்பு ஆகிய நாணினை வேலி ஆகக் கொள்ளாது மற்று இப்பாந்த ஞாலம் முழுதும் பேரி னும் நாணம் இழப்ப வரினும் வியன் ஞாலம் விரும்பலர் மேலா யவர் எ - று.

பரி, பா - மி, "மேலாயவர்",

(ப - உ.) எ - து.—நாண் ஆகிய வேலியை அமைத்துக் கொள்வார்கள் அல்லது பெரிய உலகத்தினைப் பெறுதற்கு விரும்பார்கள் மேன்மக்கள் எ - று.

இது நாணம் அழிய வரும் பொருள் கொள்ளார் என்றது. இது பொருளினும் நாணம் சிறந்தது என்றது. (10)

(கா - உ.) இனி மற்று இவ்வாறு, நாணுச் சிறப்பு உடையம் எனமக்கள் தாம் பிறந்த குடி முழுதும் பேணுதல் செய்யும் கூறு பாட்டினை உடையர் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

65. குடி செயல்வகை.

(ப - உ.) குடி செயல்வகை ஆவது தம் குடியை ஓம்புதல் வேண்டும் என்று கூறுதல். இது நாணம் உடையார் செய்தல் ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 8.

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

(கா - உ.) எ - து.—தம் குடி தளராமல் பேணுதலைச் செய்வல் என்னும் அவ்வொப்பு இறந்தோர்க்குத் தெய்வந்தானே மடியானதனைத் தாறு அறக் களைந்து மற்று அவன் உளந்தின்கண் தான் வந்து முன் நிற்றலைச் செய்யும் எ - று.

மடி தற்று - என்பது மடியினைப் போக்கி என்றது.

(ப - உ.) எ - து.—குடியை ஓம்புவேன் என்று கருதி முயலும் அவனுக்குத் தெய்வம் மடி தற்று தான் முற்பட்டு முயலும் எ - று.

மடி தற்றுதல் - தொழில் செய்வார் ஆடை உடுப்பது ஓர் திறன். மேல் சுற்றத்தார் நல்லினை இலர் ஆயின் ஓம்பும் ஆறு என்னை என்னுர்க்குத் தெய்வம் அருள் செய்யும் என்று கூறப்பட்டது. இத் துணையும் குடி ஓம்புதல் வேண்டும் என்று கூறிற்று. (1)

கா. 2.

ப. 10.

இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று நல்லாளில் லாத குடி.

(கா - உ.) எ - து.—வந்து உற்ற இடுக்கண் ஆனது முன் நின்ற நிலையை அழித்திட வீழ்ந்து அறும்: யாது எனின் அவ்விடுக்கண் வந்த இடத்துத் தளராமல் முகம் வைத்து உறுதி செய்யும் நல் ஆண் மகன் இல்லாத குடி ஆனது எ - று.

(ப - உ.) எ - து.—இடும்பை ஆகிய நடியம் அடித்தூரை வெட்டுதலானே வீழும்: பக்கத்திலே மடுத்து ஊன்றுகின்ற முட்டுக்கால் போலத் தாங்க வல்ல நல்ல ஆண் மகன் இல்லாத குடி ஆகிய மரம் எ - று.

இது குடி ஓம்புவார் இல்லாக் கால் கூறப்பட்டது.

அக்குடி கெடும் என்று

(2)

கா. 8.

ப. 5.

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக் குற்ற மறைப்பா னுடம்பு.

(கா - உ.) எ - து.—தன் குடி ஆகிய குடும்பத்தை வந்து உற்ற குற்றத்தை மாய்த்துப் பாதுகாப்பவனது உடம்பு ஆனது எஞ்ஞான்றும் வருத்தத்திற்கே கொள்கலம் கொல்லோ: எனவே தம் குடி தாங்குதல் பொருட்டு வருந்துகின்றவனே ஆண் மகன் ஆவான் என்று அவனை வியந்து உரைத்தல் கருத்து எ - று.

(ப - உ.) எ - து.—சுற்றத்தார் மாட்டு உளது ஆகிய குறையை மறைக்கக் கருதுவான் உடம்பு துன்பத்துக்குக் கொள்கலம் ஆம் எ - று.

மேல் ஒழியாது கருமம் செய்தல் பெருமை என்றார்: அது துன்பம் ஆக்கும் என்றார்க்குத் துன்பத்திற்கு நாணல் ஆகாது: அதனல் புகழ் ஆதலான் என்று கூறப்பட்டது. (3)

கா. 4.

ப. 2.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து

மாற்றுவார் மேற்றே பொறை.

(கா - உ.) எ - து.—'ஆர்த்தார் எல்லாம் போருக்கு உரியர் அல்லர்' என்னும் பழமொழி வழக்கினல் அமர் இடத்து அஞ்சாது நின்று எறிந்து ஆசு அழியாமல் தாங்கும் தறுகண்ணனைப் போலத் தமர் இடத்தும் ஒன்று உற்ற இடத்துத் தள்ளாமல் பற்றித் தாங்க வல்லவர் யாவர்: மற்று அவர் மேலதே ஆகும் குடிப்பாரம் அனைத்தும் எ - று.

(ப - உ.) எ - து.—போர்க் களத்துச் செல்வார் பலர் உளர் ஆயினும் போர் தாங்குதல் வன்கண்ணர் மாட்டே உளது ஆனல் போல, ஒரு குடிப்பிறந்தார் பலர் உளர் ஆயினும் குடி ஓம்ப வல்ல வன்கண்ணதே குடி ஆகிய பாரத்தைப் பொறுத்தல் எ - று.

இஃது ஒரு குடிப்பிறந்தார் பலர் உளர் ஆயினல் அவருள் முத்தவருக்குக் கடனே எல்லார்க்கும் கடனே என்று ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது. (4)

கா. 5.

ப. 1.

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த

வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(கா - உ.) எ - து.—நல் ஆண்மைப்பாடு என்று சிறப்பித்து உரைக்கப்படுவது ஒருவனுக்கு யாதோ எனின், தான் பிறந்த குடியினைத் தளரா நெறியினை ஆண்டு ஒழுகும் மாட்சிமையை நாளும் அழியாமல் ஆக்கிக் கொண்டு ஒழுகுதல் எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனுக்கு மிக்க ஆண்மை என்று சொல்லப்படுவது தான் பிறந்த குடியை ஆளுதல் உடைமையை மனத்தின் கண் பெருக்கிக் கோடல் எ - று.

ஆளுதல் உடைமை - குடி ஒம்புதலே எப்பொழுதும் சிந்தித்தல் : எனவே இது குடி ஒம்புதல் வேண்டும் என்றது. (5)

கா. 6.

ப. 4.

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும் பெருமையிற் பீடுடைய தில்.

(கா - உ.) எ - து.—ஒருவன் தன் குடிகள் ஆம்படி எப்பொழுதும் அதற்கு ஏற்ற கருமம் செய்ய வேண்டிப் பிறிது ஒன்றிற்கு அக்கை உதவேன் என்னும் இப்பெருமை போலப் பெருமை உடையது யாதும் இல்லை எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவன் கை கருமம் செய்தலினாலே உண்டிலேன் என்று சொல்லுகின்ற பெருமை போலப் பெருமை உடையது பிறிது இல்லை எ - று.

மேல் எப்பொழுதும் இடைவிடாமல் வினை

செய்யவேண்டும்
என்றார்: அது பெரியோரால் செய்யல் ஆகுமோ
னின் மிகுத்தது ஓர் பெருமை இல்லை என்றது.
என்றார்க்கு இது
(6)

கா. 7.

ப. 6.

குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

(கா - உ.) எ - து.—இவ்வுலகத்துப் பயிர் செய்வார்க்குப் பருவம் வேண்டினல் போலக் குடி செய்வார்க்கு ஒரு பருவம் பார்த்து இருக்க வேண்டுவது இல்லை: எனவே எஞ்ஞான்றும் இனிய பருவம் என இதனை இங்ஙனம் பெற்று வைத்து இயற்றுது மடிப்பதும் செய்து மற்று இக்குடி தாங்குதற்கு யான் இக்கருமம் செய்வது என்னை என்று மானிக்கும் மானம் தான் கருதவே கெட்டு விடும் அக்குடி எ - று.

(ப - உ.) எ - து.—குடி ஓம்புவார்க்கு நன்மைப் பருவம் இல்லை ஆம்: தத்தம் குடும்பத்தின் குறையை நினைத்து, மடி செய்தலினல் உளது ஆகும் குற்றத்தை நினைக்கக் கெடும் ஆதலான் எ - று.

மேல் துன்பத்திற்குக் கொள்கலம் ஆக வேண்டும் என்றார்: அவ்வாறு துன்பு உற்று ஒழுதல் ஆகுமோ என்றார்க்குக் குடி செய்வார் இன்ப துகர்ச்சியை விரும்பார் என்று கூறப்பட்டது. (7)

கர். 8.

ப. 7.

சூழாது தானே முடிவெய்துந் தங்குடியைத் தாழா துளுற்று பவர்க்கு.

(கா - உ.) எ - து.—வருந்தித் தாம் ஒன்று சிந்திக்க வேண்டாமல் தானே வந்து முடிவு பெறும்: யாதோ எனின், தம் குடி செயல் வகையை இதற்கு ஒரு குறை வால் ஆகாது என்று நாளும் விரைந்து இயற்றும் அவர்க்கு அக்குடி செயல் வகை எ - று.

பரி. பா - ம். "சூழாமற் றானே".

(ப - உ) எ - து—தம் குடியைத் தாழச் செய்யாதே உயரச் செய்யக் கருதுவார்க்கு அவ்வுயர்ச்சி எண்ணமல் முடிவு பெறும் எ - று.

யாதானும் ஒரு வினையை முடியும் ஆறு எண்ணி அதன் பின் முயன்று முடிக்க வேண்டும் அன்றே: இஃது அவ்வாறு அன்றி இவன் கருதின அளவிலே அவரது நல்வினை தானே முடிக்கும்: இவன் அதனை மேற்கோடலே வேண்டுவது என்றவாறு ஆயிற்று.(9)

கா. 9. ப. 3.

ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி னீள்வினையா னீளுங் குடி.

(கா - உ.) எ - து.—குடிசெயல் வகைக்கு வேண்டும் ஆண்மைத் தொழிலும் அதற்கு அமைந்த அறிவு உடைமையும் என உரைத்த இரண்டினது நெடுமுயற்சியால் நெடிது வாழும் தன் குடி [redacted]தும் எ - று.

[redacted] - உ.) எ - து.—முயற்சியும் நிரம்பின அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினாலும் வளருகின்ற வினையினாலே குடி உயரும் எ - று.

இஃது ஒரு வினையைச் செய்யுங்கால் நல்லதும் தீயதும் அறிய வேண்டுதலின் அறிவு வேண்டும் என்று கூறப்பட்டது. வளருகின்ற வினையாவது ஒரு வினையைச் செய்து முடித்தால் அவ்வளவிலே

நின்று அமையாது பின்னும் ஒரு வினையைத் தொடங்குதல். மேல் குடி ஓம்ப வேண்டும் என்றார்: அஃது ஓம்பும் ஆறு என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது. (9)

கா. 10.

ப. 9.

குற்ற மிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாய்ச் சுற்று முலகு.

(கா - உ.) எ - து.—பிறர் இவன் குடி ஓம்பாக் குணம் இலன் என்று உரைக்கும் குற்றம் இலன் ஆய், மற்று என்றும் குடி வாழ்தலைச் செய்து வாழ்வானையே சுற்றம் ஆகச் சூழ்ந்து வாழும் இவ்வுலகு: எனவே தன் குடி தாங்கலே அன்றித் தன்னை அடைந்தோர் அனைவரையும் தாங்கும் தன்மையவன் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—குற்றம் பட ஒழுகுதல் இலன் ஆகித் தன் குடியை ஓம்பி வாழும் அவனை உலகத்தார் எல்லாரும் தமக்குச் சுற்றம் ஆக நினைத்துச் சூழ்ந்து நிற்பர் எ - று.

இது குடி ஓம்புவார்க்குப் பயன் கூறிற்று. (10)

(கா - உ.) இங்ஙனம் குடிசெயல் வகை கூறி வாழ்வினையில் ஒரு பக்கமே உழவு ஆம் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

66. உழவு.

(ப - உ.) உழவு ஆவது உழவின் திறனும் அதனால் பயனும் கூறுதல். இது குடி செய்வார்க்கு இன்றியமையாமையின் அதன் பின் கூறப்பட்டது.

உழவு, தொழில், வரைவு, வாணிகம், சிற்பம், வித்தை என்று சொல்லப்பட்ட அறுவகைத் தொழிலும் குடி செய்வார்க்கு வேண்டும் அன்றே? அவை எல்லாவற்றின் இயல்பும் கூறுதார், உழவு ஒன்றும் கூறியது எற்றுக்கு எனின், அவற்றுள் கல்வி பொருள் தரும் என்பது முன்பே கூறப்பட்டது. தொழில் ஆவது ஒருவன் எவ்வி செய்தல். அரசர் ஏவலால் அமைச்சர் செய்யும் தொழில் அவ செய்யுள் கூறப்பட்டது. ஏனையோர் செய்யும் தொழிலும் வ வாணிகமும் சிற்பமும் மேலை அதிகாரத்தின் 'ஆள் வினையும் இன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி' என்றதனுலே சொன்னார் ஆம்: என்னை அவை எல்லாம் முயற்சியாலும் அறிவாலும் வருதலின்; ஆயின் உழவும் அதனுள் அடங்காதோ எனின் அடங்கும்: அஃது ஈண்டுத் தொழிலை நோக்கிக் கூறப்பட்டது அன்று. மூன்று பொருள் ஈட்டினர் எல்லாரும் குடி ஓம்புங்கால்,

தானியத்தால் ஓம்ப வேண்டுதலின் அதனை உண்டாக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

உழுவா ருலகத்திற் காணியஃ தாற்றூர்
தொழுவாரே யெல்லாம் பொறுத்து.

(கா - உ.) எ - து.—உழுது வினைத்துக் குடிமை செய்வார் யாவர்? மற்று அவரே உலகின் கட்டளை குலையாமைக்கு ஓர் அச்சு ஆணி ஆவர்: அதனால் மற்று அதின் முயலாதார் யாவரும் பிறரை வழிபட்டுத் தாழ்ந்து ஒழுகுவாரே: உணவு காரணம் ஆக அவர் அவர் செய்வன எல்லாம் பொறுத்து எ - று.

(ப - உ.) எ - து.—உலகம் ஆகிய தேருக்கு அச்சு ஆணிபோல் வார் உழவரே: அதனைச் செய்யாதவர் பிறர் பெருமிதத்தினால் செய்வன எல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பர் எ - று.

இஃது உழுவார் தம்மையும் அரசனையும் பெரியர் ஆக்குதல் அன்றி உலகத்தையும் தாங்குவர் என்று கூறிற்று. (1)

கா. 2.
ப. 1.

சுழன்று மேர்ப்பின்ன துலக மதனை
யுழந்து முழுவே தலை.

(கா - உ.) எ - து.—கடல் ஓடியும் மலை ஏறியும் காடு மண்டியும் நாடு பாய்ந்தும் ஓடித் திரிதலே அன்றியும் உண்பான் பொருட்டு இதனைப் பிற பிற முயன்று அலம் வந்தும் அதனால் ஒரு பயனும் இல்லை: ஆதலால் ஏர் கொண்டு வாழ்வார் தமது வழிச்சேறலே பயன் உள்ள வாழ்வு ஆம்: மற்று அது எங்ஙனம் எனில் உழுகை பொருட்டு ஆக உழு கருவிக்குக் காடு புக்கு மரம் தடிதலும் கனவிய கொழுவும் அதற்கு ஏற்ற பல கருவியும், வன்புலம் மென்புல வடிவத்து இயற்றலும், படைக்கால் அமைத்தலும் முதலிய பலவகைப் பயிர்கள் வளம் மூற்றியவை அவை அனைத்தும் உழந்தும் உழவு இயற்றலே தலைமைப்பாடு ஆவது எ - று.

(ப - உ.) எ - று.—உழவு ஒழிந்த எல்லா தெறிகளினும் சுழன்று திரிந்தாலும் எரின் வழியே வருவர் உலகத்தார்: ஆதலான் வருந்தியும் உழுதலே தலைமை உடைத்து எ - று.

இஃது உழவு வேண்டும் என்றது.

(2)

கா. 3.
ப. 7.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றல்லாதார்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(கா - உ.) எ - து.—அரசரும் அன்னரோ எனில் அவரும் இவர் இடு பொருளை நத்திடும் இயல்பு அல்லது தாம் அவர்க்கு இடுவது இல்லை ஆதலால் உழுது உண்டு வாழ்கின்றாரே வாழ்கின்றார் என்று சொல்லப்படுவார்: மற்றையார் அனைவரும் பிறர் ஏவல் செய்து தொழுது உண்டு பின் செல்கின்றவர் எ - று.

பரி. பா - பி. "மற்றெல்லாந்".

(ப - உ.) எ - து.—உலகின்கண் வாழ்வார் உழுது உண்டு வாழ்வாரே: மற்று வாழ்வார் எல்லாம் பிறரைத் தொழுது உண்டு அவர் ஏவல் செய்கின்றவர் எ - று.

இது செல்வம் ஆவது உழவினால் வரும்

செல்வம் என்றது. (3) கா. 4.

ப. 6.

உழவினுர் கைம்மடங்கி னில்லே விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலே.

(கா - உ.) எ - து.—உழவு தொழிலினுர் தமது ஒழுக்கம் ஆகிய குடிமை செய்வார் ஈண்டு உரைத்த பெரியோரைப் போலத் தாமும் இவ்வொழுக்கம் தணிவர் ஆயின், இப்பெரியோர்க்கும் அந்நிலேமை இல்லே ஆம்: என்பதனல் அவர்க்கும் அவ்வுடல் முடியும் அளவும் உண்ணுமை நிலே பெறுதல் அரிது எ - று.

கை என்பது ஒழுக்கம்: விழைவதூஉம் விட்டேம் என்பார்க் கும் என்றது விரும்பத் தகுவது விட்டொழிந்தோம் என்போர்களுக் கும எனறது.

(ப - உ.) எ - து.—உழவை உடையவர்கள் அத்தொழிலேச் செய்யாது கை மடங்குவர் ஆயின் யாது ஒரு பொருளின் கண்ணும் விரும்புவதனேயும் விட்டோம் என்பார்க்கு அந்நிலேயின்கண் நிற்றல் இல்லே எ - று.

எனவே துறவு அறத்தின் நிற்பாரை
ணது என்றது. விழைவது - ஆசை.

நிறுத்தல் உழுவார் கண்

(4)

கா. 5. ப. 5.

இரவா ரிரப்பார்க் கொன்றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(கா - உ.) எ - து.—பிறர்மாட்டுத் தாம் ஒன்று இரப்பதும் செய்யார்: தம்மாட்டு இரப்போர்க்கு உள்ளது ஒன்று ஈவதும் செய்வர்: யாவர்? மற்று அவர் தமது கைக்கொண்டு இனிய தொழில் செய்யும் இடத்தும் காவார்: தம்மாட்டு இரப்போர்க்கு ஒன்று ஈயும்

இடத்தும் காவார்: மற்று

இவ்வாழ்வினைத் தமக்கு இயல்பு ஆக

உடையவர் எ - று.

(ப - உ.) எ - து.—பிறரை இரவார்: தம்மை இரப்பார்க்குக் காதல் இன்றி யாது ஒன்று ஆயினும் ஈவர்: கையினாலே உழவு தொழிலைச் செய்து உண்ணும் இயல்பினை உடையார் எ - று.

உழவினுல் பயன் கூறுவார் முற்பட இல்லறம் செய்வது இவர் கண்ணது என்று கூறினர். (5)

கா. 6.

இலமென் றசைஇ யிரப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

ப. 10.

(கா - உ.) எ - து.—வறுமையால் கால் தளர்ந்து ஒருவர்பால் சென்று பெரிதும் இல்லா ஆளரேம் என்று இங்ஙனம் தம் நாவினல் இளி வந்த சொல்லி இரப்பாரைக் காணும் அளவில் நில மடந்தை என்னும் இத் தாயவள் நகுவள்: எனவே தாம் வேண்டுவ வினைத் துக் கொண்டு இனிது இவர் அலவுறுவதே என்று இவர்க்கு இரங்கிச் சிரிக்கும் என்பது பொருள் எ - று.

பரி. பா - மி. "யிருப்பாரை".

(ப - உ.) எ - து.—பொருள் இலேம் என்று தனர்ந்து இருப் பாரைக் கண்டால் நிலம் ஆகிய நல்லாள் இகழ்ந்து நகும் எ - று.

இது நிலம் மடி இல்லாதார்க்கு வேண்டியது கொடுக்கும் என் (6)
றது.

கா. 7. ப. 2.

தொடிப்புழுதி கைசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

(கா - உ.) எ - து.—முன்னம் தான் நீர் பதம் கொண்டு உழுத ஈரப் புழுதி எண் கழஞ்சும் இருகழஞ்சு ஆகக் கீழ்ப்புழுதி களர்த்து மேற்பட்டு உணங்குமாறு பின்னும் பின்னும் பெயர்த்து இனிது உணக்கப் பெறின், பிடித்து ஒரு பிடி எருவும் கூட வேண்டா ஆறு அங்ஙனம் முழுது காய்ந்த புழுதிச் சுவடு தானே தன் வேர் ஊறு சுவை ஆக மிகவும் விளையும் எ - று.

தொடி என்றது ஒரு பலம் என்றது. கைசா என்றது கால் பலம் ஆக என்றது. சாலப் படும் என்றது மிகவும் விளையும் என்றது.

(ப - உ.) எ - து.—ஒரு பலப் புழுதியைக் கைசா உணக்குவன் ஆயின் ஒரு கையால் பிடித்த எருவும் இடாமல் அமைவு படும் எ - று.

66. உழவு

289

மேல் கூறிய உழவு செய்யும் திறன் கூறுவார் முற்பட்டுப் புழுதி உணக்க வேண்டும் என்றார். (7)

கா. 8.

ப. 3.

எரிணு நன்று லெருவிடுதல் கட்டபி
னீரிணு நன்றதன் காப்பு.

(கா - உ.) எ - து.—கூறிய புழுதி உழவு ஆயினும் சேற்று உழவு ஆயினும் உழுசால் எப்பற்றும் ஒழியாமல் செல்லும் எர் மிகுதியிலும் மிக நன்று : மற்று அதனினும் நன்று அந்த நிலத் திற்கு எற்ற எருக் கொணர்ந்து இடுதல் : இனி அதனினும் நன்று ஆண்டு எழு பைங்கூழ் அருகு எழு களை கட்டல் : அங்ஙனம் களை தனிர் நன்மையே அன்றிப் பின்னும் சால நன்று நீர் முறை பிழை யாமை நீர் பெய்தல் : மற்று அதனினும் சால நன்று அங்ஙனம் சிறந்த பயிர்ப் பயன் பழுது படாமல் முன்னுறக் கொண்டே கடிந்து காப்பது ஓர் காப்பு எ - று.

(ப - உ.) எ - து.—உழுகின்றதனினும் நன்று ஆம் எரு இடு தல் : களை கட்ட பின்பு நீர் விடுதலினும் நன்று ஆம் அழியாமல் காத்தல் எ - று.

இது பல கால் உழ வேண்டும் என்பதூஉம், எரு இட வேண்டும் என்பதூஉம் களை பறிக்க வேண்டும் என்பதூஉம், பசுப் புகுதாமல் காக்க வேண்டும் என்பதூஉம் கூறிற்று. (8)

கா. 9.

ப. 8.

பலகுடை நீழலுந் தங்கொடைக் கீழ்க்காண்ப ரலகுடை நீழ லவர்.

(கா - உ.) எ - து.—கொற்றக் குடைமுதல் ஆகிய அளவு இறந்த குடைநிழல் கீழ் வாழ்வாரையும் அவர் அவர்க்குத் தாம் கொடுக்கும் கொடை வழி வருதலை காணும் காணும் கொண்டு ஒழுகு பவர் : இவ்வுலகு இயல்பு உடையார் யார் எனின் தமக்கு உழவைத் தரும் கலப்பைத் தன் நிழலினை உடையவர் எ - று.

அலகு என்பது கலப்பை.

பரி. பா - ம். " தங்குடைக் கீழ் ".

(ப - உ.) எ - து.—பல அரசர் குடை நிழலையும் தம் அரசன் குடைநிழல் கீழே வரக் காண்பர்: குடை அல்லாத நிழலை உடை யவர் எ - று.

குடை அல்லாத நிழல் ஆவது பைங்கூழ் நிழல்: இது தாம் வாழ்தலே அன்றித் தம் அரசனையும் வாழ்விப்பர் என்றது. (9)

கா. 10.

செல்லான் கிழவ னிருப்பி னிலமடந்தை புல்லாள் புரள விடும்.

ப. 4.

(கா - உ.) எ - து.—தன் நிலக் கிழத்தியைப் பயிர் முகத்தைத் தான் சென்று பல காலும் விழி ஓட்டிப் பாரான் ஆகில், அந்நில மடந்தை அவனை என்றும் மேவாள் ஆகித் தனக்கு அலங்காரம் ஆகிய பயிர்க் கோலம் அழிந்து தன்னோடு பொருந்தி வாழாள் ஆகிப் புலத்து இவன் வாழ்க்கையைப் புரள விடும் எ - று.

"நிலம் புலந்து இல்லாளின் ஊடி விடும்" என்பாரும் உளர்: கற்பு உடை மகளிரை ஊடி விடும் என்பது பொருள் அல்ல. கிழவன் என்றது அந்நிலத்துக்கு உரியன் என்றது.

பரி. பா - மி. "நிலம்புலந் தில்லாளி னூடி விடும்".

(ப - உ.) எ - து.—நிலத்திற்கு உரியன் நாள்தோறும் அந்நிலத் தின்பால் செல்லாது மனையகத்து இருப்பான் ஆயின், அதுதான் செல்லாமையினால் புலந்த இல்லாளைப் போலப் புலர்ந்து விடும் எ - று.

இது நாள்தோறும் சென்று பார்க்க வேண்டும் என்பதூஉம், பாராக்கால் பயன் குன்றும் என்பதூம் கூறிற்று. இவை மூன்றி னும் உழும் திறன் கூறிற்று. (10)

(கா - உ.) இனி மற்று இங்ஙனம் உழுது குடி செய்து இனிது வாழ்வார்க்கும் அதனை அவ்வாறு இயற்றாது இகழ்ந்து இருப்பின், இல்வாழ்க்கை புரளும் என்பதனால் வறுமை வந்து எய்தும் குறிப்பு உணர்த்தியமையான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின் றது மேலை அதிகாரம்.

67. நல்குரவு.

(ப - உ.) நல்குரவு ஆவது [பொருள் இல்லாதார்க்கு உளது ஆகும் குற்றம் கூறப்பட்டது. இஃது உழவு இல்லாதார்க்கு உளது ஆவது ஒன்று ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

ப. 4.

கா. 1.

நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

(கா - உ.) எ - து.—மிக நன்று ஆகிய பொருளினைத் தமது நல்ல அறிவினுல் நன்கு தெரிந்து சொல்லினும் அச் சொல்லு கின்றவர் வறியோர் ஆயின், அங்ஙனம் சொல்லுகின்றவர் சொல்

67. நல்குரவு

285

பொருள் செவி எற்றுக் கொள்ளாது உக்கு விடும்
கைப்பொருள் உடையார் இடத்து எ - று.

(ப - உ.) எ - து —நல்ல பொருளை மிகவும் ஆராய்ந்து சொல் லினும் நல்கூர்ந்தார் சொல்லும் பொருள் சோர்வு படும் எ - று.

எற்றுக் கொள்ளார் என்றவாறு ஆயிற்று.
என்றது.

இது கல்வி கெடும்

(1)

கா. 2.
ப. 8.

இற்பிறந்தார் கண்ணேயு மின்மை
யிளிவந்த

சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(கா - உ.) எ - து.—குடிப் பிறந்தார் மாட்டேயும் வறுமை வந்த இடத்து மற்று அஃது யாது செய்யுமோ? எனில் அவர் தங்கு தெரிந்து உரைக்கும் நாவுக்கும் பெரிதும் இளி வந்த சொல் பிறப்பது ஆகிய உரை சோர்வுபாட்டினைக் கொடுக்கும்: அது அன்றி மற்றும் இரப்புரை வந்து வீழும் எ - று.

(ப - உ.) எ - து.—நல்குரவு குடிப் பிறந்தார் மாட்டேயும் இளிவரவான சொற்கள் பிறக்கும் சோர்வினை உண்டாக்கும் எ - று.

இது குடிப்பழி உண்டாக்கும் என்றது.

(2) கா. 3.

ப. 9.

நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

(கா - உ.) எ - து.—வறுமை என்று சொல்லப்படுகின்ற இத் துன்பத்தின் கண்ணே மற்றும் பல தன்மை ஆகிய துயரம் ஆவது தான் இனிது உண்ணப் பெறுத துயரமும், தன் சுற்றம் ஓம்பப் பெறுத துயரமும், சான்றோர்க்கு உதவப் பெறுத துயரமும், வருவிருந்து ஓம்பப் பெறுத துயரமும் பிறவும் சென்று சேரும்; எனவே வறுமைத் துயர் உற்றோன் மற்று உறுத் துயர் ஒன்றும் இல்லை. எல்லாத் துயரும் உறுவன் என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—நல்குரவு ஆகிய துன்பத்தின் உள்ளே துன்பங்களும் சென்று சேர்ற்றும் எ - று.

பல

குரை - ஆசை : மேல் கூறியவே
உண்டாம் என்பது.

அன்றி எல்லாத் துன்பமும்
(3)

கா. 4.
ப. 6.

நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

(கா - உ.) எ - து.—யாதானும் ஒருவாற்றான் நெருப்பினுள் கிடந்து கண்துஞ்சலும் இனிது ஆய்இருக்கும் : எனினும் அங்ஙனம் புற நெருப்பு அன்றி அகம் சுடும் வெவ்வழல் ஆகிய வறுமைத் தீயினுள் அது கணிக்கும் மருந்து பிறிது இன்மையான் யாதானும் ஒருவாற்றானும் கண்துஞ்சல் வறியோர்க்கு அரிது எ - று.

(ப - உ.) எ - து.—நெருப்பினுள்ளே கிடந்து உறங்கலும் ஆகும் : நிரப்பு இடும்பையுள் உறங்குதல் யாதொரு காலத்திலும் அரிது எ - று.

இஃது உறங்க ஒட்டாது என்றது. (4)

கா. 5.
ப. 10.

துப்பிர வில்லார் துவரத் துறவாமை

யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(கா - உ.) எ - து.—தமக்கு உணவுக்கு உரம் ஆகிய கைப் பொருள் இல்லாதார் முதிரத் துறவாமை முன்னம் தாம் யாவர் மாட்டும் இனிது ஒழுகும் இணிமைக்கும் தமது நடு நிலைமைக்கும் ஒரு கூற்று: எனவே அஃது இவற்றைக் கொல்லும் என்பது பொருள்

எ - று.

இதில் உப்பு என்பது இனிமை. காடி என்பது நடுவு நிலைமை.

அஃது ஆவது சிறு மக்கள் பலர் கண் புதைத்து நகையாடும் இடத்து அவருள் ஒருவனே இவன் காடிச்சால் என்று நடு இருத்துவர். நடு நிலை ஆக வழக்கு என்பது அறிக துப்புரவு இல்லாதார் என்பது உண்டிக்கு உரம் ஆகிய கைப்பொருள் இல்லாதார் என்றது. துவர்த்

துறவாமை என்றது முற்றத் துறவாமை.

(ப - உ.) எ - து.—நுகரும் பொருள் இல்லாதார் அப்பொரு ளின்மேல் பற்று அறத் துறவாது வருந்துதல் உப்பிற்கும் காடிக்கும்

கேடு ஆக வேண்டி எ - று.

துறப்பார் ஆயின் நன்று என்றது நல்கூர்ந்தார்க்குத் துன்பம் உறுதல் இன்றி இன்பம் நுகரும் நெறியும் உளவோ? என்பார்க்குத் துறப்பார் ஆயின் இன்பு உறல் ஆம் என்று கூறப்பட்டது. (5)

கா. 6.

ப. 3.

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக

நல்குர வென்னு நசை.

(கா - உ.) எ - து --தமக்கு அறனு முதல் ஆக வருகின்ற குடி வாலாற்று ஒழுக்கத்தையும் தமது வலியினையும் எல்லாம் ஒக்கக் கெடுக்கும் : யாதோ எனின் நல்குரவு என்று சொல்லப்படுகின்ற

67. நல்குரவு

287

பிறர் மாட்டு ஒன்றை நச்சுதல் என்னும் புல்லிமை ஆகிய நசை உரு எ - று.

தொல் வரவு என்பது தொன்று தொட்டு வருகின்ற லாறு. தோல் என்பது வலி என்றது.
குடி வா

(ப - உ.) எ - து.—தொன்று தொட்டு வருகின்ற குடிப் பிறப் பினையும் வடிவழகினையும் ஒருங்கு கெடுக்கும் நல்குரவு என்று சொல் லப்படுகின்ற ஆசைப்பாடு எ - று.

நல்குரவு ஆசையைப் பண்ணுதலினால் ஆசை ஆயிற்று. தோல் - ஆகு பெயர். இது குலத்தினையும் அழகினையும் கெடுக்கும் என் றது.

கா. 7.

ப. 5.

அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

(கா - உ.) எ - து.—பிறர்க்கு உதவி ஆகிய அறத்தோடு தனக்கு ஓர் இயைபு இல்லாத நல்குரவு ஆகின்ற இது பின்னும் யாது செய்யுமோ எனில், மற்று நல்கூர்ந்தாளைப் பெற்ற தாயானும் உட்படப் பிறன் ஒருவனைப் போலக் காணப்படும்: எனவே இவனுல் என்னை? இனி இதுவும் யாம் முன் செய்த பாவத்தில் ஒன்று என்று இகழப்படும் எ - று.

(ப - உ.) எ - து—அறத்தைப் பொருந்தாத நல்குரவாளன் தன்னைப் பெற்ற தாய் ஆயினும் எதிலாளைப் போல நோக்கப் படுவான் எ - று.

அறம் சாரா நல்குரவு ஆவது பொருளும் இன்பமும் நல்கூருதல். இது சுற்றத்தாரும் கைவிடுவர் என்றது.

சிந்தித்து

(7) கா. 8.

ப. 1.

இன்மையி னின்னுத தியாதெனி
னின்மையி
னின்மையே யின்னு தது.

(கா - உ.) எ - து.—ஒருவர்க்கு இல்லாமையிற் காட்டின் பொல்லாதது யாதோ எனின் இல்லாமையின் பொல்லாதது பின்னும் அவ் வில்லாமையே : பிறிது ஒன்றும் இல்லை : இதனைப் பற்ற இன் னுங்கு உடையது எ - று.

(ப - உ.) எ - து.—நல்குரவு போல இன்னாதது யாது நல்குரவு போல இன்னாதது தானே எ - று.

எனின்

இது தன்னை ஒத்த இன்னாதது பிறிது இல்லை என்றது. (8)

கா. 9.

ப. 2.

இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

(கா - உ.) எ - து.—இல்லாமை என்று எடுத்து உரைக்கப்பட்ட

இனை இறந்த பாவி யாது ஒருவர் மாட்டு வரும் பொழுதே இம்மை ஆக்கமும் மறுமை ஆக்கமும் என்பன யாவும் இன்றித் தானே வந்து கைக்கொண்டு நிற்கும் எ - று.

பரி. பா - ரி. "மின்றி விடும்".

(ப - உ.) எ - து.—நல்தாய் என்று கூறப்படுகின்ற நிகர் இல் லாத பாவத்தை உடையவன் இம்மையின் கண்ணும் மறுமையின் கண்ணும் நகர்ச்சி இன்றி விடும் எ - று.

தானம் பண்ணுமையால் மறுமையினும் நகர்ச்சி ஆயிற்று. இஃது இன்பம் இல்லை ஆக்கும் என்றது.

இல்லை

(9)

கா. 10.

ப. 7.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலு நிரப்பு.

(கா - உ.) எ - து.—இன்றும் என்னை வந்து ஒறுப்பது கொல்லோ? நெருநலும் வந்து கொன்றது போல உயிரையும் உடலையும் செறுத்தும் ஒறுத்தும் அடர்த்தும் வருகின்ற வறுமைத்

தொழில் ஈ - று.

(ப - உ.) ஈ - து.—இன்றும் வரும் போலும்: என்னைக் கொன்றது போலும் நிரப்பு இடும்பை ஈ - று. நெருநலும்

இது நாள்தோறும் அச்சம் உறுத்தும் என்று கூறியவாறு. (10)

(கா - உ.) இனி மற்று இவ்வாறு வறுமை கூர்ந்தவர்க்கு இரவுத் தொழில் அல்லது பிறிது தொழில் இன்மையான் இதன் பின்னரே இதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

68. இரவு.

(ப - உ.) இரவு ஆவது பிறர் மாட்டுச் சென்று இரந்து கோடல். இது கல்கூர்ந்தார் செய்தல் ஆதலான் அதன் பின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1.

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.

(கா - உ.) எ - து.—இங்ஙனம் வறியோர் மாட்டு இரக்கம் உடையாரைக் கண்ட இடத்துத் தாம் ஒன்று இரக்க வேண்டின் இரந்து

கொள்க: மற்று அவர் கரக்க நினைப்பின் அஃது அவர் பழியாம்: இத்துணை அல்லது வேறு தம்பழி என்பது ஒன்று அன்று எ - று.

(ப - உ.) எ - து.—தமக்கு இல்லாத இடத்து இரக்கத் தக்காரைக் காணில் இரந்து கொள்க. அவர் இல்லை என்பர் ஆயின் அஃது அவர்க்கு அப்பழி ஆம்: தமக்குப் பழி ஆகாது எ - று.

ஈண்டுக் கூறுகின்ற இரத்தல் எல்லார் மாட்டும் செய்யல் ஆகாது என்பதூஉம், தக்கார் மாட்டு இரக்கல் ஆம் என்பதூஉம் கூறிற்று. (1)

கா. 2.

ப.

6.

இரத்தலு மிதலே போலுங் கரத்தல்
கனவினுந் தேற்றாதார் மாட்டு.

(கா - உ.) எ - து.—இரத்தலும் ஈதலே போலும் இனிமையை உடைத்து: அஃது எவ்விடத்து எனில், இல்லை என்னும் சொலலினைக்

கணவிலும் அறியாதவர் இடத்து; எனவே இரவு பகல் பொழுது வரைவு நின்றி எப்பொழுதும் பிறர் மாட்டு

என்னும்
இரக்கம்

உடைய இயல்பினர் இடத்து எ - று.

(ப - உ.) எ - து. — கற்புக்கு கனவின் கண்ணும் அறியாதார் மாட்டு இரந்து சென்று கொடுப்பது தீது ஒக்கும் எ - று.

காதல் போலும் என்றது இரந்தோர் என்று சிறுமை உறுதல் இன்றி உயர்ந்தாரைப் போலப் பெருமிதத்தர் ஆவர் என்றது. மேல் இகழாது எவர் மாட்டு இரக்கல் ஆம் என்றார். அவர் மூவகையர் ஆதலின் முற்பட உதவுவர் பாட்டு இரக்கல் ஆம் என்று கூறப் பட்டது. காதல் கனவிலும் தேறார் என்றமையால் உதவுவார் என்று கொள்ளப்படும். (2)

கா. 3.
ப. 7.

கரப்பிடுப்பை யில்லாரைக் காணி
னிரப்பிடும்பை
யில்லா முழுதுங் கெடும்.

(கா - உ.) எ - று.—தப்பால் வந்து இரப்பார்க்குத் தாம் இல்லை என்னும் இவ்விடும்பை இல்லாதார் யாவரும் அவரைக் கண்ட இடத்துப் பிறர் இரப்பு என்கின்ற இடும்பையானது எல்லாம் ஒன்று ஒழியாமையே கெட்டு விடும்: எனவே தாம் உடைய செல்வச் சிறப்பினர் ஈயும் காலத்தும் பிறர் பாட்டுச் சென்று இனி ஒரு குறை கூறி இரக்க வேண்டாதவாறு ஈவாரும் உலகத்து உளர் எ - று

(ப - உ.) எ - று.—தரப்பும் இடும்பையும் இல்லாதாரைக் காண் பார் அயின் நிரப்பினுள் ஆய இடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் எ - று.

37

இவை இரண்டும் இல்லாதார் என்றமையால் இச் செல்வராயினர் மாட்டு இரக்கலாம் என்றது.

(3) கா. 4.

ப. 4.

இன்ப மொருவர்க் கிரத்த லிரந்தவர்
துன்ப முறுஅ வரின்.

(கா - உ.) எ - று.—பின் எஞ்ஞான்றும் இரப்பு என்னும்

துன்பம் உரூர் ஆயின், ஒருவர் டால் சென்று ஒருவா இரத்தல் பெரி
தும் துன்பம் அன்றே : அதுவும் ஒருவர்க்கு இன்பம் தரும். எப்
பொழுது எனில் அங்ஙனம் ஒருவர் மாட்டு இரந்தவர் பின்பு எஞ்
ஞான்றும் ஒரு வறுமைத் துயர் உருவாறு வாய்ப்பப் பெற்று வரு

வார் ஆயின் எ - று.

பரி. பா - மீ. " இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
".

(ப - உ.) எ - து —இரத்தல் ஒருவற்கு இன்பம் ஆம் : இரக்கப் பட்ட பொருள்கள் தாம் வருத்தம் உருவகை எய்தும் ஆயின் எ - று.

பழிக்கப் படாது ஆயினும் துன்பம் ஆகுமே என்றார்க்கு, வேண்டின பொருள் பெறின் துன்பம் ஆகாது என்று கூறப்பட்டது. இவை மூன்றினானும் இரவு தீது என்பாரை மறுத்தவாறு ஆயிற்று. (4)

கா. 5.

ப. 9.

கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணி னிரப்பவர் மேற் கொள்வது.

(கா - உ.) எ - து —ஏற்பவர்க்கு இங்ஙனம் இல்லை என்பது இல்லா அன்புடையாளரும் இவ்வுலகத்துச் சிலர் உளர் ஆகலான் இது காரணம் ஆக இவ்விரவு தொழிலைத் தம்பால் என்றும் 'மேற் கொள்வது எ - று.

பரி. பா - மீ. " கண்ணின் றிரப்பவர் ".

ப - உ.) எ - து.—கரப்பு இல்லாதார் உலகத்து உண்டு ஆக லானே ஒருவன் முன்னே நின்று இரத்தலை இரப்பார் மேற்கொள்

வது எ - று.

மேல் காவலாளர் மாட்டு இரக்க என்னும் : அஃது உலகத்துப் பெறுதல் அரிது என்னும்க்கு இது கூறப்பட்டது. (5) கா. 6.

ப. 5.

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள முள்ளு ளுவப்ப துடைத்து.

68. இரவு 291

(கா - உ.) எ - து.—தம்மாட்டு ஒருவர் இரந்து வந்த இடத்துத் தாம் அவரை அலுதரித்து அவமதி பண்ணுது அகம் மகிழ்ந்து ஈவாரைக் காணப் பெறின், அவ் விரப்போர் உள்ளம் பெரிதும் மகிழ்ந்து மற்று அவர் உபகார வளத்தை உள்ளுதொறும் உள்ளு தொறும் சால உள்ளுள்ளே உவப்பதனை உடைத்து எ - து.

(ப - உ.) எ - து.—இரப்பாரைக் கண்டால் உதாசனித்தலும் இன்றி அவர் சொன்ன மாற்றத்தை இகழ்ந்து உரைத்தலும் செய்யாது வேண்டப் பட்டதனைக் கொடுப்பாரைக் காணில் இரந்து சென்றவர் மனம் மகிழ்ந்து நின்று உள்ளுள்ளே இன்புறும் தன்மை உடைத்து ஆம் எ - று.

மேல் இரக்கத் தக்கார் ஆவார் எத்தன்மையார் என்னும்க்கு இது கூறப்பட்டது. (6)

கா. 7.

ப. 8.

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்

றிரப்புமோ ரேர ருடைத்து.

(கா - உ.) எ - து.—இரவலர்க்கு என்றும் இலர் என்பது இலரும் ஆய் நெஞ்சிலுல் ஈதல் கடப்பாட்டின் படனும் அறிவார் யாவர்? மற்று அவர் முன் நின்று பிறர் ஒன்று இரக்கும் இரப்புத் தானும் இங்கு ஓர் அழகு உடைத்து எ - று.

(ப - உ.) எ - து.—கரப்பு இல்லா நெஞ்சினை உடைய ஒப்புரவு அறிவார் முன்பே நின்று இரத்தலும் ஓர் அழகு உடைத்து எ - று.

ஏர் - யாரும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று இஃது ஒப்புரவு அறிவார் மாட்டு இரக்கல் ஆம் என்றது.

கருதுதல்.

(7) கா. 8.

ப. 3.

ஈவார்கண் ணென் னுண்டாந் தோற்ற மிரந்து

மேவா ரிலாஅக் கடை.

[கோண்

(கா - உ.) எ - து.—ஈவார் மாட்டு என் உளது ஆம்? யாவர் மாட்டும் தம் பெயர் தோன்ற நிற்பது ஓர் தோற்றம் தம்பால் சிலர் தம்மைப் பெருமை கூறி இரந்து கொள்ளும் தொழிலைப் பொருந்துவார் ஆகிய அறிகுனர் இவ்வுலகத்து இல்லாக்கால் எ - று.

மேவார் என்றது பொருந்துவார் என்றது.

(ப - உ.) எ - து.—இரந்து கோடலைப் பொருந்துவார் இல்லாத இடத்து ஈயக் கருதி இருப்பார் மாட்டுப் புகழ் யாதான். உண்டு ஆம் ? எ - று.

292 திருக்குறள் - பொருட்பால்

இரந்து கோடல் இழிபு அல்ல ஆயினும் பழிக்கப்படும் என்றார்க்குப் பழிக்கப்படும் ஆயின், உலகத்து இரப்பார் இல்லை ஆம்: அவர் இல்லார் ஆகப் புகழ் உடையார் இலர் ஆம்: ஆதலால் பழிக்கப் படாது என்று கூறப்பட்டது. (8)

கா. 9.

ப. 2.

இரப்பாரை யில்லாயி னீன்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.

(கா - உ.) எ - து.—இனிது இடம் உடைத்து ஆகிய பெரிய உலகமானது இரப்போரை இலது ஆயின், இனிது அறம் இயற்றும் இயல்பு உடையோர் யாரையும் இலது இவ்வுலகு

என்பது ஆம்:

அதனால் மற்று ஈண்டு வாழும் மக்கள் உருபு அனைத்தும் மாத்திரை மக்கள் உருபு ஆக இயற்றிய மரப்பாவையானது போயும் வந்தும் நிரிகின்ற அத்தன்மைத்து; எனவே இருமைப் பெறுதியும் அறியா உருபின ஆம் என்பது பொருள் ஆயிற்று. ஈன்கண் மாஞாலம் என்பது இடம் மிகவும் பெரிய உலகம் என்பது.

பரி. பா - மீ. "நீர்ங்கண் மாஞாலம்".

(ப - உ.) எ - து.—குளிர்ந்த இடத்தை உடைய பெரிய உலகம் இரக்கும் அவர்களை உடைத்து அல்ல ஆயின், இதனின் உள்ள மக்களது இயக்கம், மரப்பாவை இயங்கினாற் போலும் எ - று.

மேல் கூறிய இரத்தல் இழிந்தது என்று அன்றே: இதனைச் செய்க என்று விதித்தது என்னை என்றார்க்கு இரத்தலும் ஈதலும் உலகு இயல் ஆதலான் இழிபு என்று கொள்ளப்படாது என்றது. (9)

கா. 10.

ப. 10.

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

(கா - உ.) எ - து.—இரப்பு என்னும் இளிவு நோய் கொண்டவன் யாவன்: அவன் பின்னும் ஒருவரோடு வெகுளாமை வேண்டும்: என்னை காரணம் என்னில், முன்னும் பிறர் மாட்டு இரந்து

வெகுளி கொலை முதலிய கொடுவினை செய்து தனக்கு இக்குற்றம் புகுந்ததனால் தான் இக்காலத்து அனுபவிக்கின்ற இரப்பு என்னும் பேர் இடும்பை தானேயும் அமையும் இதற்குச் சான்று எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவனை இரந்தால் அவன் ஈய்ந்திலன் என்று தான் வெகுளாது ஒழிதல் வேண்டும். பொருள் அரிது என்பதற்குத் தன்னுடைய நிரப்பு இடும்பை தானேயும் அமையும் சான்று எ - று.

69. இரவச்சம் 293

வெகுளாமைக்குக் காரணம் பிறிது கூறவேண்டா என்றது. இஃது இரப்பாற்கு வேண்டுவது ஓர் இயல்பு கூறிற்று. (10)

(கா - உ.) இனி மற்று இரப்பு என்பது இக்குற்றம் எல்லாம் உடைத்து ஆகலான் இது பெரிதும் அஞ்சத் தகுவது ஒன்று என்பதனன் மற்று அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

69. இரவச்சம்.

(ப - உ.) இரவு அச்சம் ஆவது இரத்தலைத் தவிர்தல் வேண்டும் என்பது கூறுதல். மேல் நல்கூர்ந்தார் ஈவார் மாட்டே இரத்தல் அமையும் என்று பொதுப்படக் கூறினர் ஆயினும் மேலாயினர்க்கு இது தகுதி அன்று என்பது குறித்து இவ்வதிகாரம் கூறப்பட்டது. மேலதனோடு இயைபும் இது.

கரவா துவந்தீயுங் கண்ணன்னர் கண்ணு மிரவாமை கோடி யுறும்.

(கா - உ.) எ - து.—தாம் கருதிச் சென்றது ஒன்றைக் காத்தல் இல்லாத செறிந்த அன்பினை உடையர் ஆகிய கண் போலும் கேளிர் மாட்டும் ஒன்று இரத்தல் என்பது பெரிதும் இனி வாவு அன்றே: அதனால் அது செய்யாமை தானே கோடி பொருளினைப் பெறும் எ - று.

அல்லது காவாது வந்தீயும் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

(ப - உ.) எ - து.—இல்லை என்னது மனம் மகிழ்ந்து கொடுக்கும் கண் போல்வார் பாட்டும் ஒரு பொருளை இரந்து செல்லாமை இரந்து பெற்ற பொருளினும் கோடி மடங்கு மிகுதி உடைத்து எ - று.

இன்னது ஈவார் மாட்டும் இரக்கல் ஆகாது என்றது. (1) **கா. 2.**

ப. 10.

இடனெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடனில்லாக் காலு மிரவொல்லாச் சால்பு.

(கா - உ.) எ - து.—உலகு இடம் எங்கும் சென்று பூரித்தும் பின்னும் புறம் போகும் தன்மையும் உடைத்தே : யாதோ எனின் ? தமக்கு ஒன்றிற்கும் ஒரு நிறவு இல்லாத இடத்தும் இரந்த கோடல் இல்லாமை என்கிற இந்தப் பெரிய சால்பு உடைமை எ - று.

பரி. பா - மி. " இடமெல்லாங் கொள்ளா ".

(ப - உ.) எ - து.—தன் சுற்றத்து அளவு உணவுக்கு வருவாய்

அகல இல்லாத காலத்திலும் பிறரை இரக்கற்கு இசையாத சால்பு என்பது அகன்ற உலகம் எல்லாம் கொள்ளாத பெருமை உடைத்து எ - று.

இஃது இரவாதார் பெரியர் என்றது. இவை இரண்டினாலும் இரவாமையால் வரும் நன்மை கூறப்பட்டது. (2)

கா. 3.

ப. 5.

இரவென்னு மேமாப்பி ரோணி
கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

(கா - உ.) எ - து.—இரவு என்று யாவராலும் இனித்து உரைக்கப்படுகின்ற இந்தச் சேமச் செறிவு இன்றிப் பெரிதும் நொய்து ஆகிய தோணி ஒருவர் இல்லை: போகு: என்னும் மிக்க பார் தாக்கவே உடைந்து விடும்; எனவே வறுமைக் கடல் நீந்துவதற்கு இரப்பு என்பது ஓர் கைத்தோணி என்று கருதுவது தம் அறியாமை எ - று.

(ப - உ.) எ - து.—ஒருவன் வறுமை ஆகிய கடலை நீந்தி ஏறுவது ஆக அமைத்துக் கொண்ட இரத்தல் ஆகிய ஆண் இல்லாத தோணி இரக்கப் பட்டார் மாட்டுக் கரத்தல் ஆகிய கல்லோடே தாக்கப் பிரிந்து விடும் எ - று.

இது கல்லாவு தோணைக்குக் காரணம் கூறிற்று. டிணையும் இரவினால் பயன் இன்மை கூறப்பட்டது.

இவை இரண்

(3)

கா. 4.

ப. 6.

இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

(கா - உ.) எ - து.—அறிவு உடையோர்க்கு இரவு என்பது தம் குடிமைக்கு ஒரு வடு என்று இங்ஙனம் கருதுப அன்றே? அதனல் அவ்வின்னு இரவினை உள்ளவே தமது உள்ளம் சால்பு உடைமையும் இனி நாம் ஒருவர் பால் இரந்து சென்றால் அவர் இல்லே: போகு: எனின் எனை என்றதனையும் தாம் உள்ளவே பின்னைப் பண்டு உள்ள தாஉம் இன்றிக் கெடும் எ - று.

(ப - உ.) எ - து.—இப்பேம் என்று நினைக்க உள்ளம் கரையும்
இரக்கப்பட்டவர் கூக்கும் அதனை நினைக்கக் கரைந்து மாய்ந்து கெடும் எ - று.
நின்ற உள்ளம்

இஃது இரப்பார்க்கு ஊக்கம் இல்லே ஆம் என்றது.
(4)

- 69. இரவச்சம்

295

கா. 5.
ப. 8.

இரந்து முயிர்வாழ வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(கா - உ.) எ - து.—குடிப் பண்பினர்க்குத் தமக்கு ஒன்று ஈரத்தல் இனி வரவு என்று ஒழியாது புறத்து ஈவாரைத் தேடி எங்கும் பரந்து சிறிது இரந்து கொண்டும் தமது உயிர் வாழ வேண்டுவது ஆயின், இவ்வுலகினைப் படைத்தோன் தான் உயிர் வாழாது பரந்து கெட்டு விடுக; என்பதனால் உலகத்துச் சிலரை உயர்ந்தோர் ஆகப் படைக்கும் விதாதா ஆகியும் பின்னும் அவர்கள் இயல்பு ஆவது ஆயின் அவரும் இழந்தோரே ஆகலின் பெரிதும் வஞ்சனை உடைத்து

இவன் படைப்பு எ - று.

பரி. பா - மி. "உயிர் வாழ்தல்".

(ப - உ.) எ - து.—துப்புரவு இல்லாக்கால் இறந்து படாதே

பிறர் மாட்டு இரந்து கொண்டும் உயிர் வாழ்தல் வேண்டும் ஆயின் உலக நடையை இவ்வாற்றால் கற்பித்த முதல்வன் மிகக் கெடுவான் ஆக வேண்டும் எ - று.

இரக்கும் அதனின் இறக்க அமையும் என்றது. இவை மூன்றினும் இரவினால் வரும் குற்றம் கூறப்பட்டது. (5)

கா. 6.

ப. 7.

கரப்பவர்க் கியாங்கொளிக்குங்
கொல்லே விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

(கா - உ.) எ - து.—அவர் போல் அன்றித் தாம் கைப் பொருள் உடையர் ஆகியும் கரப்பவர் ஆகிய கடுவினை யாளர்க்கு அவர் உயிர் அவாதுடலில் யாங்குக் கரந்து நிற்குமோதான்? இது அறிகின்றிலோம்: இது சால விபப்புடைத்து; எனவே இரப்பவர் உயர்குடி மாபிலேர்க்கு அவ்விரவு என்னும் உரையாடவே உக்கு விடும் எ - று.

(ப - உ.) எ - து.—எமக்கு யாதும் இல்லை: சிறிது ஈய வேண்டும் என்று சொல்லுவார்க்கு, அக் குறித்தவர்கள் இல்லை என்று சொன்ன அளவிலே உயிர்போய்ப் பிணம்போல நிற்பர்கள். உடைய ராய் வைத்து அவர் சொன்ன இல்லை என்னும் சொல்லையே சொல்லி ஈயாதார்க்கு உயிர் எவ்விடத்து ஒழித்து நிற்கின்றதோ? எ - று.

இது பிணத்தை ஒப்பர் என்றது.

(6)

கா. 7.

ப. 9.

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணெலி ஞாங்கினிய தில்.

(கா - உ.) எ - து.—அடுபுற்கை தன்னினும் பசைபடு புற்கை அன்றி வெறுந் தெளி நீர்ப்புற்கை ஆயினும் அது தமது காளாண்மையால் தாப்பட்டது ஆயின் அதனைத் தாம் உண்டு இன்புறுதலின் மேற்பட்ட இனிமை உடையது யாதும் இல்லை எனவே பிறர்பால் சென்று இரந்து பெறுவது அமுதமே ஆயினும் இனிது அன்று என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து. - மோரினும் காடியினும் அடப்பெறுது தெளிந்த நீரிலே அடப்பட்ட பற்கை ஆயினும் தனது தாளாண்மையால் வந்ததனை உண்டலின் மிக இனிது அஃ இருப்பது பிறிது இல்லை எ - று.

இரந்து கொண்டு அக்காம் பாலோடு
றல் இனிது என்றது.
அயிறலின் புற்கை அயி

கா. 8.

ப. 4.

இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(கா - உ.) எ - து.—வறுமை என்கின்ற வல்லிடும்பையைப் பிறர்பால் சென்று இரந்து கொண்டு

தீர்க்கக் கடவோம் யாம் என்று

கருதும் இவ்வன்கண்மையைக் காட்டில் வன்மைப் பாடு உடையது பிறிது யாது ஒன்றும் இல்லை குடிப் பிறந்தோர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.—வறுமையால் உற்ற துன்பத்தைப் பிறர் மாட்டு இரந்து பெற்ற பொருளினானே தீர்ப்பேம் என்று கருதுகின்ற வன்மை போல வன்பாய் இருப்பது பிறிது இல்லை எ - று

இஃது இரந்தாலும் நல்குரவு தீராது என்றது.

(8) கா. 9.

ப. 1.

இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

(கா - உ.) எ - து.—பிறர்பால் காணாது சென்று இரப்பாரை எல்லாம் யானும் ஒன்று இரப்பல்; அஃது யாதோ எனின் அங் ஙனம் இரந்து உயிர் வாழக் கருதுகின்ற அவ்விரப்பான் கண்ணும் அது கொண்டு உயிர்நிலை பெறுது பின்னும் கரப்பார்கண் அவ்விளி வரவு ஆகிய இரத்தலைச் செய்யன்மின் எனவே: இந்த எளிமை பட்டும் இரக்க வேண்டின் இரவாது இறத்தல் இனிது என்பது பொருள் எ - று.

(ப - உ.) எ - து.—பிறர் மாட்டு இரந்து செல்வார் எல்லாரையும் யான் இரந்து கொள்ளா நின்றேன்: இரக்கும் இடத்து இல்லை என்பார் மாட்டு இரவாது ஒழியுங்கோள் என்று எ - று.

யாவர் மாட்டும் இரத்தல் ஆகாது என்று கூறுவார் முற்பட ஈயாதார் மாட்டு இரக்கல் ஆகாது என்றது. (9)

கா. 10.

ப. 3.

ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

(கா - உ.) எ - து.—தமக்கும் தம் கிளைக்கும் இரத்தல் இன்றி ஒரு பசுவிற்கு இத்துணை நீர் வேண்டும் என்று பிறர்பால் சென்று இரப்பது தகுமேயும் அன்றே ? மற்று அது சொல்லி இரப்பினும் அதுவும் அவ்விரவினுட் படுதலின், குடிமாடாளர் தமது நாவிற்கு இரத்தலின் மேற்பட்ட இளிவாவு உடையது பிறிது ஒன்றும் இல்லை

எ - று.

(ப - உ.) எ - து.—இப்பசுவிற்குத் தண்ணீர் தருமின் என்று பிறரை இரப்பினும் நாவிற்கு இரத்தல் போல இளிவாவு தருவது பிறிது இல்லை எ

- று.

இஃது அறத்துக்காக இரக்கலும் ஆகாது என்றது. இவை மூன்றினனும் இரத்தலைத் தவிர வேண்டும் என்று கூறப்பட்டது.(10)

(கா - உ) இனி மற்று இரப்பு முதல் ஆகிய இளிவு தொழிற் குச் சாகாமை குடிக்கு இளிபு ஆகிய கயமையாம் ஆதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

70. கயமை.

(ப - உ.) கயமை ஆவது இழி குணத்தர் ஆகிய மாந்தரது இயல்பு கூறுதல். இவர் மேற் கூறப்பட்டார் எல்லாரினும் இழிந் தார் ஆதலின் இறுதியின் கூறப்பட்டது.

கா. 1.

ப. 1.

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

(கா - உ.) எ - து.—கை கால் முதலிய புறத்து உறுப்பு எல் லாம் கண்ட இடத்து விலங்கு ஒத்தல் அன்றி மக்கள் ஒப்பு உடையர் இக்கயவரும் : ஆனல் மற்று அம்மக்கள் பண்பு

38

உடையோர் தமது

பண்பு ஒப்புமை சிறிதும் அக்கயவர்பால் யாம் கண்டது இல்லை : இது என்ன வியப்போ எ - று.

(ப - உ.) எ - து.—கயவர் மக்களில் ஒப்பவர் : அம்மக்களை ஒக்குமாறு போல ஒப்பது ஒன்றமேனும் மற்று ஒன்று உவமை கூறப் படும் அவற்றில் யாம் கண்டு அறிவது இல்லை எ - று.

உறுப்பு ஒத்தக் குணம் ஒவ்வாமையால் கயவர் மக்கள் அல்லர் ஆயினர் : உறுப்பு ஒத்தலால் உவமிக்கப்பட்டார்: இது குணம் இலர் என்றது.

(1) கா. 2.

ப. 2.

தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

(கா - உ.) எ - து.—குடிமை என்னும் பண்பு உடைய மக்க ளைக் கயவர் ஒவ்வார் ஆதலால், மற்று யாரையும் ஒப்பாரோ ? எனில், ஈசன் முதல் ஆம் தேவரை ஒப்பர் கயவர் : என்னை காரணம் என்னின் அவரும் பிறரால் இடித்துரை பெற்று அஞ்சி கடைத்தல் இன்றித் தாம் வேண்டுவன செய்யும் தகுதியர் ஆதலால் அவர் போல் மற்று இக்கயவரும் இருபெருங்குவரும் சான்றோரும் பிறரும் தம்மின் பெரியோர் என்று அஞ்சிக்கை இன்றி அவர் இடித்துரைக்கும் இடத்து இடித்துரைக் கைக்கொண்டு ஒழுகும் இயல்பினர் அன்றித் தாம் வேண்டியன செய்து ஒழுகலான் எ - று.

(ப - உ.) எ - து.—கயவர் தேவரை ஒப்பவர் : அத்தேவரும் இக்கயவரைப் போலத் தாம் வேண்டியன செய்து ஒழுகுவர் ஆதலான் எ - று.

இது கயவர் வேண்டிற்றுச் செய்வார் என்றது.

(2) கா. 3.

ப. 4.

அச்சமே கீழ்கள தாசார மெச்ச

மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

(கா - உ.) எ - து.—கீழ்கள் ஆகியவாது ஆசாரம் அவர்க்கு இயல்பின் உளது ஆவது அன்று: மற்று என்னை எனின், பிறர் தம் மைச் செறுத்தும் சிறை செய்தும் தெருக்கின் என்னை என்று இங்ஙனம் அஞ்சும் அச்சமே அதற்குக் காரணம்: அஃது ஒழிந்த இடத்து உண்டு எனின் அவர் சில செய்வர் எமக்கு என்னும் அவா உளது 70. கயமை

ஆயின் அது பெறும் வழி உள ஆயின் சிறிதும் அவ்வாசாரம் உண்ண உகவும் கூடும்: என்னேவ கயவர்க்கு ஆசாரம் இயல்பு அல்ல என்றும் உண்டு எனின் அது கள்ளம் என்றும் பொருள் ஆயிற்று எ - று.

(ப - உ.) எ - து.—கயவர் ஆசாரம்

உடையர் ஆகற்குக் காரணம் அச்சமே : அஃது ஒழிய ஒரு பொருண்மேல் ஆசை உடையர் ஆயின் அது காரணம் ஆகவும் சிறிது ஒழுக்கம் உண்டாம் எ - று.

இஃது இயல்பான் ஒழுக்கம் இலர் என்றது.

(3) கா. 4.

ப. 7.

ஈர்ங்கை விதிரார் கயவர்
கொடிறுடைக்குங்
கூர்ங்கைய ரல்லா தவர்க்கு.

(கா - உ.) எ - து.—பிறர் தம்பால் இரந்து கொள்ளும் இடத்து ஈரக் கை விதிர்த்தலும் இலர் கயவர் ஆனவர் : கொடிறு போல இடுக்கிப் பிடித்து உடம்பை உடைக்கும் திறமையால் கூரிய கையினை உடையோர் அல்லாத குணம் உடையவர்க்கு எ - று.

(ப - உ.) எ - து.—தப் கதுப்பினை ஒடிக்கும் வலிய கையினை உடையர் அல்லாதார்க்கு ஈரக் கையும் தெறியார்கள் கயவர் எ - று.

ஈரக் கை - உண்டு கழுவின் கை. கூன் கை

என்று பாடம் ஓதினும் அமையும். இஃது இரப்பார்க்குக் கொடார் என்றது. (4) கா. 5.

ப. 9.

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(கா - உ.) எ - து.—ஒருவர் வந்து தம் குறை சொல்ல அமையும் : மற்று இவ்வளவிலே பயன்படுவர் சால்பினை உடையோர். இனி மற்று இவ்வாறு அன்றித் தரித்தும் நெரித்தும் அடர்த்தும் சாறு கொள்ளும் கரும்பு போலப் பெரிதும் கொல்லக் கொல்லப் பயன்படுவர் அத்துணைக் கீழான கயவர் எ - று.

(ப - உ.) எ - து.—பிறர் தம் குறையைச் சொல்ல அதற்கு இரங்கிப் பயன்படுவர் மேன்மக்கள். அவ்வாறு அன்றிக் கரும்பு பயன்படுமாறு போலத் தம்மை நெருக்கினால் பயன்படுவர் கீழ் மக்கள் எ - று.

இஃது ஒறுப்பார்க்குக் கொடுப்பர் என்றது. (5)

கா. 6.
ப. 6.

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ். .

(கா - உ.) எ - து.—முன் நின்ற நிலையினும் மேற்பட உடுக் கும் ஆடையும் உண்ணும் சோறும் சிறிது மிகுதக் காணின் மற்று அப்பொழுதே பிறரைக் கெடுப்பது ஓர் வடுக்காண வற்று ஆகும் கீழ்

எ - று.

(ப - உ.) எ - து.—பிறர் உடுப்பதனையும் உண்பதனையும் காண் பார் ஆயின் அவர் மாட்டு உள்ள குற்றங்களை ஆராய வல்லர் ஆவர் கயவர் எ - று.

இஃது அழுக்காறு உடையர் என்றது.

(6)

கா. 7.

அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்

ப. 5.

மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

(கா - உ.) எ - து.—மனையினின்றும் புறப்பட்டாற் பட்டி புக்

குப் பயிர் அழிக்கும் பட்டி மாட்டினை ஒத்தார் சிலரைத் தான் காணின், இதற்கு இவரினும் பெரியேன் ஆக வேண்டும் யான் என்று மற்று அவரது பட்டிமையினும் மிகப்பட்டு இறுமாக்கும் கீழ் ஆனது: எனவே தானும் நெறி கெட ஒழுகும்: பிற நெறி கேடரைக் காணினும் நமக்குத் துணையும் உண்டு என்று பெரிதும் இறுமாக்கும் கீழ் என்பது பொருள். அகப்பட்டி என்பது மனையுள் வாழும் பட்டி மாடு என்றது.

(ப - உ.) எ - து.—மனையகத்து இருந்து பறட்டை யாம் பெண் டிரைக் காணில் அவரினும் மிகப் பறட்டை ஆயினதனைப் பெற்றேம் என்று இறுமாப்பர் கயவர் எ - று.

இது நிறை இலர் என்றது.

(7). கா. 8.

ப. 3.

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

(கா - உ.) எ - து.—நன்னெறி அறியும் சான்றோரினும் கயவர் சால கலம் பெரிது உடையர்: தமது உள்ளத்து யாதும் ஓர் இடர்

நெஞ்சம் என்னில் நன்னெறி ஆகிய கல்வியும், அறிவும், குலமும், தருமமும், தவமும், பிறவும் குறைப்படாமல் நிறைந்து மேற்பட வேண்டும் என்றும் குறைபடும் ஆயின் ஒரு மைக்கு அது வடு எனறும் இங்ஙனம் நெஞ்சம் அஞ்சி அவலிக்கும் அவலம் எஞ்ஞான்றும் இலர் எ - று.

(ப - உ.) எ - து.— நன்னெறி அறிவாரினும் கயவர் திரு உடை பர்: இம்மை மறுமைக்கு உறுதி ஆவன செய்யப் பெறுகின்றிலோம் னேனும் கவற்சி நெஞ்சின்கண் உறுதல் இலர் ஆதலான் ம - று.

இஃது அறம் அறியார் என்றது.

கா. 9.

(8)

ப 8.

அறைபறை யன்னார் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

(கா - உ.) எ - து.—ஒருவன் தான் வாய்க்கொண்டு ஒக்கடிக்க உணர்ந்த தாளப் பதுதியைப் பிறர்க்கு அவ்வாறு உரைவழி புலப் படாமைக் குறிக்கொண்டு தன் கைகொண்டு அதன்கண் உற வைத்த இடத்து மற்று அஃது அதனை யாவர்க்கும் புலப்படச் சாற்றும் பறைக் கருவியை ஒப்பர் : என் எனில், ஒருவர் தம்மை நம்பி ஒறையை ஒப்பு என்று உரைப்ப மற்று அந்த மறையினை அடக்கல்

ஆற்றாது அப்பொழுதே பிறர்க்குச் சென்று செவிக்குச் செல்லு மாறு அதனை விளங்கச் செலவு படுத்து உரைக்கும் தீமை உடை யார் எ - று.

(ப - உ) எ - து.— கயவர்
அறையும் பறை போல்வர் : தாம்
கேட்ட மறைகளைப்
[illegible]று.
பிறர்க்குக் கொண்டு சென்று அறிவித்தலான்

இஃது அடக்கம் இலர் என்றது.

(9)

கா. 10.

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்

ப. 10.

விற்றற் குரியார் விரைந்து.

(கா - உ.) எ - து.—கயவராய் உள்ளார் வந்து மருவினால் ஒரு நாக்கு இடுக்கண் வந்து உற்ற இடத்து மற்று அதுவே பட்டடை உயிர்க்கு ஈறு, பொருட்கு இறுதி வருமாறு விரைந்து எற்றுதற்கு

உரியார்: அஃது இயையாது எனின் உற்ற இடுக்கண் உதவாது விரைந்து நீங்குதற்கு உரியார்: ஆதலால் எவ்வாற்றானும் கயவரொடு குடிப்பண்பு உடையோர் மருவாது ஒழிக என்பது பொருள் ஆயிற்று எ - று.

எற்றிற்கு என்பது எற்றுதற்கு என்பதன்: விற்ற என்பது வேறுபட்டு நீங்குதற்கு என்றது. வீற்றற்று எனற்பாலது விற்றற்று எனக் குறுகி நின்றது:

(கா - உ.) பொருட்பாலினுள் வகுத்துக்கொண்ட பொருள் பகுதி ஆவது :—

"ஆசிய லுலையங் கமைச்சிய லீரைந்
திருவியல் வல்லாண மொன்றென் - றிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதி
னென்)மூன்
றெண்பொரு ளேழ்பா னவை"

எனை இங்ஙனம் கண்டு கொள்க.

பொருட்பால் முற்றும்.

(ப - உ.) எ - து.—கயவர் யாதினுக்கு வல்லவர் எனில் தமக்கு ஒரு தன்பம் உற்றால் விரைந்து தம்மை விற்க வல்லர் எ - று.

இது நிலைமை இலர் என்றது.

போருட்பால் முடிந்தது.

எழுதினது உதிரமாலை செட்டியார் குமாரன்
அரிஹரபுத்திரன்.

செய்யுள் அகராதி.

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
செய்யுள்	பக்கம்		
அகடாரார்	236	அழிவங்க	
அகப்பட்டி	300	அழிவின்	
அகலாது	137	அழிவின்	
அங்கணத்து	146	அளவறிந்து	
அச்சம்	67	அளவளா	
அச்சமே	29	அற்றதறிந்து	

அஞ்சாமை 3
அஞ்சாமை 49
அஞ்சும் 210
அஞ்சுவது 21
அடற்றகை 168
அடுக்கி 106
அடுக்கிய 246
அடுத்தது 140
அணியன்றே 273
அந்தணர் 70
அமரகத்து 187
அமர+த்து 276
அமைந்து 42
அரங்கின்றி 11
அரம்பொருத 219
அரம்போலும் 263
அற்றமறைக்கு
அற்றமறைதலோ
அற்றூர்க்கொன்று
அற்றூரை
அற்றூல்
அற்றேமென்
அறஞ்சாரா
அறம்பொருள்
அறவினையும்
அறனறிந்து
அறனறிந்து
அறணிழுககா
அறனீனும்
அறிதாற்றி
அறிவற்றம்
அறிவிலார்தாம்

அரிதென்று 110
அரியகற்று 55
அரியவற்றுள் 27
அரியவென்று 69
அருஞ்செல்வி 80
அருமறை 201
அருமை 100
அருவினை 43
அருள் 16?
அருளொடும் 163
அல்லற்பட்டு 75
அவையறி 144
அவையறியார் 144
அழகெகாண்ட 120
அழச்சொல்லி 179
அழிவதூஉம் 35
அறிவிலார்நெஞ்சு
அறிவின்மை
அறிவுடையார்
அறிவுடையார்
அறிவுரு
அறைபறை
அன்பறி
அன்பறிவு
அன்பிலன்
அன்பின்
அன்புடைமை
அன்புடைமை
அன்பு நாண்
அன்பொரீஇ
ஆககம் கருதி
ஆக்கம்

184	ஆக்கம்	95
166	ஆக்கமும்	116
174	ஆசாறாள	42
40	ஆங்கமை	157
62	ஆபயன்	77
243	ஆய்ந்தாய்ந்து	179
255	ஆயுமறிவினர்	228
199	ஆவிற்கு	297
269	ஆள்வினை	278
53	ஆற்றுருரும்	48

241	ஆற்றின்	39
107	ஆற்றின்	43
287	ஆற்றின்	147
51	ஆற்றின்	152
224	ஆற்றுபவர்	159
28	ஆற்றுவார்	219
111	ஆற்றுவார்	260
5	இகலாணும்	202
162	இகலில்	204
58	இகலின்	203
22	இகலெதிர்	203

199	இகலென்ப	204
199	இகலென்னும	203
198	இகல்காண	205
19	இகழ்ச்சியில்	66
21	இகழ்ந்தெள்ளா	290
130	இடனெல்லாம்	293
301	இடிக்கும்	29
132	இடிப்பாரை	29
58	இடிபுரிந்து	97
210	இடுக்கண்	104
230	இடுக்கண்படி	119

131	இடுக்கண்கால்	275
265	இடும்பை	105
262	இடும்பைக்கே	276
267	இடைதெரிந்து	146
38	இணைநுழ்த்து	116
94	இதனையிதனால்	57

செய்யுள்	பக்கம்	செய்யுள்
இமையாரின்	224	இன்மையின்
இயல்புளி	70	இன்மையின்
இயற்றலும்	3	இன்மையென
இரக்க	288	இன்மையொரு

இரத்தலும் 289
இரந்தும் 295
இரப்பன் 296
இரப்பாரை 292
இரப்பான் 292
இரவார் 281
இரவுள்ள 294
இரவென்னு 294
இருமன 231
இல்லாரை 164
இல்லாள் 226
இல்லாளை 224
இலக்கம் 106
இலமென் 282
இவறலும் 24
இன்றியமை
இன்றும்
இன்னு
இன்னுமை
இனத்தாற்றி
இனமபோன்று
இனையர்
இனையரிகர்
ாட்டம்
ார்ங்கை
ாகார்
ன்றுள் பசி
ன்றுள்
ட்கப்படா
ட்பகை

இழத்தொறு	240	உடம்பாடு
இழிபறிந்து	242	உடுகைக
இழுககல்	16	உடுப்பது
இழுக்காமை	67	உடைசெல்வம
இழைத்த	173	உடைததம
இளிவரின்	253	உடையர்
இளைதாக	211	உடையார்
இளையரின	136	உணணற்க
இற்பிறந்தார்	246	உணர்வது
இற்பிறந்தார்	285	உயர்வகலம
இறந்த	67	உயிர்ப்ப
இறந்தமை	220	உரம் ஒருவர்
இறப்பே	256	உருவு கண்டு
இறுதி	131	உருளாயம்
இறைகடி	81	உலகததார

இறைகாக்கு	72	உலகந்தழீஇ	
இன்சொலால்	5	உலவிடத்து	
இன்பத்து	105	உவப்ப	
இன்பத்துள்	204	உழவினர்	
இன்பம்	100	உழுதுண்டு	
இன்பம் விழை	107	உழுவார்	
இன்பம்	290	உழைப்பிரிந்து	
இன்மை	296	உள்ளமிலா	

செய்யுள்

பக்கம்		பக்கம்
77	உள்ளமுடை	95
287	உள்ளற்க	180
288	உள்ளிய	68

259	உள்ளுவது	93
250	உள்ளொற்றி	232
288	உளபோல்	86
261	உளவரை	41
107	உளாள் என்னு	13
82	உளொளினு	149
191	உற்றநோய்	51
136	உற்றவன்	245
176	உற்றுணள	244
267	உறன்முறை	218
299	உறினட்	187
291	உறினுயிர்	170

118	உறுப்பமை	167
234	உறுப்பொத்	265
234	உறுபசி	154
216	உறுபொருளு	165
217	உறுவது	188
175	உறைசிறி	129
300	ஊக்கம்	45
240	ஊஞ்ஞை	271
40	ஊதியம்	180
92	ஊழிபெயரி	259
8	ஊழையும்	163
232	ஊனிறைதால்	123

115	எச்சமென்	268
150	எண்ணென்ப	9
213	எண்சேர்ந்த	227
94	எண் பகுத்தான்	72
124	எண் பதுத்தான்	266
239	எண்ணிய	124
202	எண்ணியார்	50
19	எண்ணித்	36
169	எண்பொருள	21
10	எதிரதா	22
281	எப்பொருள்	20
280	எப்பொருளும்	137
280	எய்தற்கரி	44

63 எளியாற் 220
93 எல்லாப்பொரு 161.

செய்யுள்	பக்கம்	செய்யுள்
எல்லார்க்கும்	88	ஓர்ந்து
எல்லைக்கண்	185	கடலோடா
எவ்வது	20	கடனறிந்து
எட்பகவன்ன	215	கடனென்ப
எள்ளாத	37	கடாஅ
எற்றிற்குரி	301	கடிதோக்கி
எற்றென்று	118	கடிந்த
என்றும்	117	கடுஞ்சொல்
என்னெனுமன்	171	கடுமொழி

எனைத்தானும் 18
எனைத்திட்பம் 121
எனைத்தும் 189
எனைமாட்சி 160
எனைவகை 59
எதம் 268
எதிலார் 196
எந்திய 220
எழுற்ற 212
எறிணும் 283
எஃகும் 201
ஏயப்படா 143
ஒட்டார் 251
ஒண்பொருள் 164
ஒருமை 195
ஒருமைகள் 7
கடைக்கொட்க
கண்ணுக்
கணையுடைய
கண்மேற்பட்டமில்
கண்மேற்பட்டமை
கண்மேற்பட்டக
காப்பவர்
காப்பிடும்பை
காப்பிலார்
காப்பிலாஞ்
காவாது
கருமம்
கருமஞ்செய
கருமத்தா
கருவியும
களவா ஒரு

ஒருமை மகளிர் 258 கல்லாதவர்
ஒல்லுங்கரு 189 கல்லாதான்
ஒல்லும்வாய 129 கல்லாதான்
ஒல்வது 40 கல்லாத
ஒலித்தகைகால் 168 கல்லாதவரின்
ஒழுக்கமும் 248 கல்லார்
ஒளியார் 145 கல்லான்
ஒளியொருவ 258 கலங்காது
ஒற்றிஞன் 88 கவறும்
ஒற்றுமுறை 87 கழாஅக்
ஒற்றுறுற்றி 88 கள்ளுண்
ஒற்றுறுற்று 89 களித்தறி
ஒறுத்தாற்று 84 களித்தானை
ஒன்றுமை 218 கற்க
ஒன்றெய்தி 238 கற்கிலன்
ஒதல் 117 கற்றறிந்தார்

பக்கம்	செய்யுள்	பக்கம்
70	கற்றூருள்	150
50	கற்றுக்கண்	130
131	கனவிலும்	187
261	காக்கை	63
89	காட்சிக்	4
79	காணைச்சின	208
120	காணைதான்	200
79	காதல	25
80	காத்தன்மை	54
122	காலம்	44

84	காலாழ்	50
8	கான	1, 2
87	குடியாண்மை	98
83	குடியென்	98
83	குடிசெய்வல்	275
295	குடிசெய்வா	277
289	குடிதழீஇ	72
290	குடிப்பிறந்	248
291	குடிப்பிறந்து	55
293	குடிப்பிறந்து	181
86	குடிபுறம்	73

277	குடிமடிந்து	96
272	குணனும்	181
109	குணனில	206
14	குணநல	260
13	குணநாடி	54
12	குலந்சுதும்	274
14	குற்றம்	279
200	குற்றமே	26
151	குறித்தது	141
81	குறிப்பறிந்து	135
207	குறிப்பிற்	140

121	குறிப்பிற்	142
238	குன்றன்னோர்	222
195	குன்றினனே	253
234	குன்றேறி	164
235	கூழும்	74
233	கூற்றத்தை	221
9	கூற்றுடன்று	169
15	கூற்றுமை	140
143	கெடாஅழிவண்	223
150	கெடாஅர்	183

செய்யுள்	பக்கம்	செய்யுள்
கெடுங்காலை	180	செய்தக்க
கேட்டார்	113	செய்தேமஞ்
கேட்டினும்	181	செய்வானை
கேட்பினும்	16	செய்வினை
கேடறியா	154	செயற்கரி
கேடில்	11	செயற்கை
கேளிழுக்கம்	184	செயற்பால
கையறியா	235	செருக்கும்
கைவேல்	172	செருவந்த
கொக்கொக்க	46	செல்லான்

கொடுத்தலும் 61
கொடுத்தும் 209
கொடுப்பதும் 269
கொடையளி 6
கொல்லா 262
கொலையில் 71
கொலைமேற் 76
கொளப்பட் 136
கொளற்கரி 157
சலத்தால் 120
சலம்பற்றி 247
சால்பிற்கு 261
சான்றவா 259
சிதைவிட 93
சிற்றின 31
செல்வத்துள் 209
செவியிற் 269
செவிக்குண 6
செவியுண 262
செவிகைப்ப 71
செவிச்சொல் 76
செறுநரை 136
செறுவார் 157
சென்றுவிடத் 120
சொல்வணைக் 247
சொல்லப் 261
சொல்லுக 259
சொல்லுதல் 93
சொலல்வல் 31
ஞாலம்

சிறப்பறிய 91 தக்காங்கு
சிறியார் 257 தக்கார்
சிறுகாப்பி 160 தம்மில்பெரி
சிறுபடை 47 தமராகி
சிறுமையு 167 தலையினிழி
சிறுமை பல 236 தள்ளா
சிறைநலனு 48 தன்குற்றம்
சீரினும் 252 தன்றுணை
சீருடைச் 270 தன்னலம்
சுழலும் 173 நாமின்புறு
சுழன்றும் 280 தார்தாங்கி
சுற்றத்தா 61 தாளாண்மை
சூழ்ச்சி 129 தாளாண்மை
சூழ்வார் 28 நிறனறிந்து
சூழாது 278 நினைத்துணை

செப்பின் 215 தீயளவன்றி
செய்க 165 தீர்விடம்

அகராதி

பக்கம்	செய்யுள்	பக்கம்
36	துஞ்சினர்	235
188	துணைநலம்	119
57	துப்புரவு	286
127	துளியின்மை	76
177	துறந்தார்	90
110	துன்பம்	123
25	தூங்காமை	4

23	தூங்குக	126
81	தூய்மை	134
284	தெண்ணீர	295
16	தெய்வத்தான்	102
17	தெரிதலும்	112
18	தெரிந்தவின	37
18	தெளிவில்ல	38
6	தோன்	52
138	தோன்தெளி	55
45	தேவாஅ	98
208	தேறற்க	53
23	தேறினும்	214

191 தொகைச்சொல் 132
299 தொட்டனை 8
11- தொடங்கற்க 50
122 தொழிப்புழுதி 282
115 தொல்வரவு 286
46 தொழுதகை 192
79 நகல்வல்லார் 264
30 நகுதல் 176
29 நகையீகை 249
62 நகையுள்ளு 266
251 நகைவகை 186
154 நச்சப்படா 268

26	நட்டார்க்கு	127
212	நட்டார்குறை	225
229	நட்டார்போ	190
10	நட்பில்	182
169	நட்பிற்கு	178
100	நண்பாற்றூ	264
101	நயனெடு	263
114	நல்குரவு	285
26	நல்லாண்மை	277
242	நல்லார்கண்	13
190	நல்வினைத்	34

செய்யுள்	பக்கம்	செய்யுள்
நலத்தின்	247	பகைநட்
நலம்வேண்	248	படியுடை
நவிறொறு	178	படைகுடி
நற்பொருள்	284	பண்ணெண்
நன்மையு	56	பண்பிலலா
நன்றறிவா	300	பண்புடையா
நன்றாற்ற	38	பணியுமா
நன்றென்	146	பயன்றூக்
நாடாது	179	பரியது
நாடென்ப	155	பருகுவா
நாடோறு	59	பருவதோ
நாடோறு	74	பல்லவை

நாண்வேலி	274	பல்லார்
நாணகத்	372	பல்குழு
நாணென்னு	233	பலகுடை
நாணாமை	194	பலசொல்ல
நாணாலுயி	274	பலநல்ல
நாநலன்	115	பழகியசெல்
நிலத்திற்	249	பழகிய
நிலத்தியல	34	பழமை
நிலைமக்கள்	168	பழிமலை
நிழனீரு	217	பழுதெண
நிறைநீர	175	பழைய
நிறைநெஞ்சம	229	பற்றற்ற
நீங்கான்	209	பற்றுள்ள
நுண்ணிய	143	பிணியின்மை
நுண்மாண்	12	பிரிதகலும்

நுணங்கிய	17	பிழைத்துணர்ந்
நுனிக்கொம்	41	பிறப்பொக்கும்
நூலாரி	1[illegible]3	பிறர்நாண
நெடுநீர்	99	பிறர்பழியு
நெடும்புனலு	49	பீலிபெய
நெருப்பினு	285	புகழ்ந்தவை
நோய்நாடி	244	புகழின்றால்
நோவற்க	213	புணர்ச்சி
பகல்கருதி	206	புரந்தார்
பகல்வெல்லு	47	புல்லவையுள்
பகைமையு	143	பெண்ணேவல்
பகையக	149	பெயக்கண்டு
பகையகத்	149	பெரிதினிது
பகையென்	214	பெரியாரை
பகைநட்	193	பெருக்கத்து

பக்கம் செய்யுள் பக்கம்

213 பெருங்கொடை 64

99 பெரும்பொருள் 155

2 பெருமையுடை 257

85 பெருமைக்கு 53

265 பெருமைபெருமித 256

263 பேணாது 225

254 பேதைமை 185

230 பேதை 189

95 பேதைமை 197

186 பேதைமையு 196

44 பொறாண்மை 170

152 பொச்சாப்பார் 68

30	பொச்சாப்பு	65
156	பொது நலத்தார்	231
283	பொது நோக்கா	64
115	பொய்படும	196
191	பொருளல்ல	165
237	பொருளென்	162
184	பொருள்கருவி	125
185	பொருட்பெண்	228
118	பொருட்பொரு	229
111	பொருளானா	269
136	பொருள் கொடு	237
62	பொள்ளென	46
24	பொறியின்மை	103

156	பொறையொரு	156
110	போற்றின்	138
17	மக்களே	297
254	மழைமழை	97
272	மழைமை	97
273	மழையில்லை	96
42	மழையுளா	102
68	மழையை	98
253	மறந்தவாய்	105
177	மன்னேணெடு	85
173	மனிசீரும்	161
147	மறிநுட்ப	109

227	மயிர்நீப்பின்	252
84	மருந்தென	243
197	மருந்தோ	251
222	மருவுக	180
250	மறமானம்	166

செய்யுள்	பக்கம்	செய்யுள்
மறைந்தவை	91	முறைகோடி
மன்னர்	139	முறைசெய்து
மன்னர்க்கு	77	முறைப்பட
மனத்தானே	33	முன்னுற

மனத்தின் 193
மனத்துள 34
மனந்தூய்ப 32
மனந்தூயா 32
மனநலத் 32
மனநல 33
மனநலமன் 33
மனமாணை 216
மனையாளை 225
மனைவிழை 226
மாறுபாடு 241
மிகச்செய்து 193
மிகன்மேவும் 205
மிகினும் 242
முகத்தினி 192
முகத்தின்முது 141
முனைமுகத் 34
மேலிருந்து 32
மேற்பிறந்தார் 32
மையல் 32
யாண்டுச்செ 33
யாதானு 33
வகைமாணட 216
வகையறிந்து 225
வகையறிந் 226
வகையறச்சூ 241
வருபுனலு 193
வருமுன் 205
வரைவிலா 242
வலியார்க் 192
வழங்குவ 141
வழிநோக்கா

முகநக 176
முகநோக்கி 143
முடிவும் 128
முதலிலார் 30
முயற்சி 102
முரண்சேர் 48
முற்முற்றி 158
முற்றியு 158
வண்கண் 176
வாரிபெருக்கி 143
வாள்போல் 128
வாளொடென் 30
வாழ்க்கை 102
விடுமாற்ற 48
வியவற்க 158
விருப்பறு 158

செய்யுள்

76 விரைந்து 114
5 வில்லேர் 211

112	விலங்கொடு	15
66	விழித்தகண்	171
159	விழுப்புண்	172
256	விழைதகைகயா	182
14	விழையார்	183
195	வினைக்கண்	60
222	வினைக்கண்	101
10	வினைக்குரி	57
221	வினைசெய்	90
211	வினைத்திட்	122
151	வினைபகை	126
36	வினையான்	128
153	வினைவலி	39

25	வீறெய்தி	124
231	வெண்மை	201
207	வெரூஉந்த	78
247	வெள்ளத்-இ	102
208	வெள்ளத்-ம	49
108	வேட்பது	113
59	வேட்பன	138
217	வேண்டற்க	239
150	வேறன்று	71
73	வேலொடு	75
133	வைத்தான்	270
27		
61		

—:o:—

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
5	3	வல்லார்கசு	வல்லாற்கு
9	27	கற்கக்	கற்க
11	17	(சேர்க்க) பரி. பா - ம்.	"யொருவற்கு"
17	1	கல்லாமை	கேள்வி
24	23	சொல்லுதல	
25	18	தம்பால்	
25	27	யுய்க்கற்பின்	
26	19	இவவள	
28	33	(சேர்க்க) பரி. பா -	
31	19	பொதுபட	
34	33	துணையில்லைக்	
36	3	துணிந்தபின்	

39	2	வரும்.
40	33	தோன்று
41	26	எற்றூர்
50	32	களரியி
52	22	உளதாம
56	8	காம
58	5	செய்கற்பாற்
65	35	கலிங்கர்
77	24	முன்னிலை
78	5	குடிகட்டு
78	13	யாதேர்

செல்லுதல்

தன்பால்
யுய்க்கிற்பின்
இவ்வள
ப். "கேண்மை திறன்"
பொதுவ்படை
துணையில்லை
துணிந்தபி
வரும்
தோன்றுக்
எறினர்



85	21	என்றாராயினும்	என்றாராயினும்
85	35	முதலிய	(நீக்குக)
89	3	அறிப்பாமல்	அறியாமல்
95	8	(கெடும்பொருள்)வருதலும்	கெடுதலும்
95	36	என்றது	என்றது
97	17	டங்கிற்ற	டங்கிற்றன்
103	27	பாலும்	போலும்

106	7	வல்லவினை	வல்லவினை
106	21	மேமேல்	மேன்மேல்
109	15	(சேர்க்க) பரி. பா - ம். " அதிஞட்பம் "	
112	23	காரியமும்	காரியம்
112	26	பட்ட	பட
115	30	(சேர்க்க) (உளர்) புறம் 252-செய்யுள்.	

பக்கம்.	வரி.	பிழை.
136	15	வெளியோ
136	24	யோடோ
151	3	தாம
154	4	ப. 9
156	17	யிறைவர்க்

162	18	திறனறித்து
164	3	ெணபொரு
164	8	உண்டாககிறற்கு
170	26	ொருரு...
174	27	பாதுகாப்பர்
184	14	பெயின்
185	3	பேதமை
196	26	எறட்டு
198	3	தாமடங்கா
198	11	தாம்
199	31	பிறிதுயாது
201	29	லொண்மை
206	7	கருதிகொண்டு
218	6	இல்லாதோரோடு

225	15	கதுதி
227	3	வேண்டு
228	8	பொய்மை
228	13	ஷை
228	14	புக்கவர் அப்பினம்
230	25	கூறப்பட்டது
236	21	தன்
239	30	விரும்பரது
241	4	மகுந்து
244	12	நெரிந்து
245	15	இயம்படுவது
250	6	இனிமைவு
263	23	உளபுக்கு
263	28	மக்கள

266	10	ருகை
267	12	ப. 0
267	26	ப. 0
273	15	சான்ரோர்க்
273	16	கம்திலோற்
281	12	தூப்பிர
282	19	சுனர்ந்து

திருத்தம்.

திருத்தம்.

வொளியோ
யோடே
தாம்
ப. 5
யிறைவற்
திறனறிந்து
கெண்பொரு
உண்டாக்கினார்க்கு
பொருட்டு
பாதுகாப்பார்

செயின்
பேதைமை
ஏறட்டு
தானங்கா
தான்
பிறிதியாது
ஒன்மை
கருதிக்கொண்டு

இல்லாதாரோடு
தகுதி
(நீக்குக)
பொய்ம்மை
ஷை
புக்கு அவலப்பிணம்
கூறப்பட்டது
சம்

விரும்பாது

மருந்து

தெரிந்து

இயம்பப்படுவது

இனிமை

உள்புக்கு

மக்கள்

(நீக்குக)

ப. 1

ப. 2

சான்றோர்க்கஃ

திலரேற்

துப்புர

தனர்க்து